வாழ்க்கைச் சுவடுகள்



வல்லிக்கண்ணன்

வாழ்க்கைச் சுவடுகள்

வல்லிக்கண்ணன்

வாழ்க்கைச் சுவடுகள்

வல்லிக்கண்ணன்

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குத்தெரு,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி 4943074

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	**வாழ்க்கைச் சுவடுகள்**
ஆசிரியர்	:	வல்லிக்கண்ணன்
வெளியிட்டோர்	:	**பூங்கொடி பதிப்பகம்** 14, சித்திரைக்குளம் மேற்குத்தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.
பதிப்பு ஆண்டு	:	ஆகஸ்டு 2001
பதிப்பு விவரம்	:	முதல் பதிப்பு
உரிமை	:	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	:	வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	டெமி 1/8
பக்கம்	:	289
அச்சு எழுத்து அளவு	:	11 புள்ளி
நூலின் விலை	:	ரூ. 100.00
பொருள்	:	சுயசரிதை
அச்சிட்டோர்	:	**அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்,** 9, அய்யா முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.

அணிந்துரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் தன்வரலாற்று நூல்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குவன. படைப்பாளியின் பட்டறிவு, சமகாலச் சமூகச்சூழல், சமுதாய மானிட உறவு எனப் பல்வேறு வகையான பரிமாணங்களைத் தன்வரலாற்று நூல்கள் பெற்றுள்ளன. இலக்கியப் படைப்பாளர்களின் ஒவ்வொரு படைப்பிலும் இலைமறை காயாக அவர்களுடைய வாழ்வு அனுபவங்கள் பதிவாகிவிடுகின்றன. ஒரு சிறு கவிதையிலும்கூட அவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரலாற்று நிகழ்வுக் குறிப்புகளை நயமாகக் குறிப்பிட்டுவிடுகின்றனர். ஔவையாரின் சங்கப் பாடல்களால் அவருக்கும், அரசருக்கும், சமூகத்திற்கும் இடையேயுள்ள வாழ்வியல் பின்னணிகள் தெரிய வருகின்றன. அகப்பாடல்களிலும், புறப்பாடல்களிலும் இத்தகைய குறிப்புகள் மிகுதியாக இருந்தாலும் படைப்பாளியின் நோக்கம் வரலாற்று நூல்கள் எழுதுவதன்று. ஆனால் இயல்பாகவே அவர்தம் படைப்புகளில் இத்தகைய வாழ்வுக் குறிப்புகள் அமைந்துவிடுகின்றன.

தன்வரலாற்று நூல் எழுதுவோர் இத்தகைய குறிப்புகளை நேராகவே குறிப்பிட்டுவிடுகின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களும் அவர்கள் மனிதர்களோடு கொண்டிருந்த உறவும் நேயமும் இத்தகைய நூல்களால் நன்கு புலனாகின்றன. தாம் வாழ்ந்த நெடிய வாழ்க்கையில் தொடக்கம் முதல் இன்றுவரை தம்வாழ்வு நிகழ்வுகளை நினைவிற்கொண்டு பிறருக்குப் பயன்படும் வண்ணம் எழுதுவது என்பது எளிமையானதன்று. ஒருவகையில் தன்வரலாற்று நூலினை எழுதுவது என்பது தன்னையே ஆத்ம பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்வது போன்றதுதான்.

தமிழிலக்கிய வரலாற்றிலும் பிறமொழி இலக்கியவரலாற்றிலும் இத்தகைய தன்வரலாற்று இலக்கியங்கள் பல உள. ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள், வ.உ.சி.யின் வரலாறு, பாரதியின் சுயசரிதை, உ.வே.சா. அவர்களின் 'என் சரித்திரம்', திரு.வி.க. அவர்களின் 'வாழ்க்கைக் குறிப்புகள்', நாமக்கல் கவிஞரின் 'என் கதை', கோவை அய்யாமுத்துவின் 'எனது நினைவுகள்' போல்வன குறிப்பிடத்தக்க தன்வரலாற்று நூல்கள்

ஆகும். பிறமொழிகளில் அண்ணல் காந்தியடிகள், பண்டிதநேரு, இராசேந்திரபிரசாத், ஏ.கே. கோபாலன், வீரேசலிங்கம்பந்துலு, தாகூர், புத்ததேவ் பாசு, காகா கலேல்கர், மாஸ்தி வெங்கடேச அய்யங்கார், சிவராமகரந்த், தகழி சிவசங்கரம்பிள்ளை ஆகியோரின் தன்வரலாற்று நூல்கள் குறிப்பிடத்தக்கன.

புகழ்பெற்ற எழுத்தாளரும், குறிக்கோள் வாழ்க்கை உடையவருமான எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் தம் வாழ்வனுபவத்தை மிகச் சுவையாகவும் எளிய நடையிலும் 'வாழ்க்கைச் சுவடுகள்' என்னும் தலைப்பில் நமக்கு அரிய நூலாக ஆக்கித் தந்திருக்கின்றார். வாழ்க்கை விதவிதமான அனுபவங்களைப் பெற்று விளங்குவது. விதம்விதமான மனிதர்களை அறிமுகம் செய்து வைப்பது. ஒரு கண நேரம் நாம் நம் வாழ்க்கையில் நடந்து வந்த பாதையைத் திரும்பி நோக்கினால் நாம் திகைத்து நிற்போம். இவ்வளவு பேரையா நாம் சந்தித்து வந்திருக்கின்றோம்? இவ்வளவு அனுபவங்கள் நம்முடைய வாழ்வில் நிகழ்ந்தேறியுள்ளனவா? என்று வியந்து நிற்போம்.

எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் தம் வாழ்க்கைச் சுவடுகளை இந்நூலில் பதிந்து வைத்துள்ளதைக் காணும்போது அவர்தம் மெல்லிய உடலில் மறைந்து விளங்கும் உள்ளத்திண்மையும், உறுதியான முயற்சிகளும் புலனாகின்றன. வாழ்வில் ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும்போதும் எழுத்தாளராய் அரிய படைப்புகளைப் படைக்கும் இலக்கிய நெஞ்சத்தினராய் வாழ வேண்டும் என்னும் குறிக்கோளை அவர் கொண்டிருந்தது புலனாகின்றது. 'வேடிக்கை மனிதரைப் போலே - நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ'? என்னும் மகாகவி பாரதியாரின் பாடல் வரிகள் அவருடைய வாழ்வின் உந்து சக்தியாய் விளங்கின. 'எனது இளம்பிராயத்தில் இருந்தே என்னுள் மந்திரம் போல் ஒலித்துக் கொண்டிருந்தன இவ்வரிகள். நாட்களை வீணாக்காமல் உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உள் உந்துதல் என்னை இயக்கியது' என்கின்றார் வல்லிக்கண்ணன். எனவே குறிக்கோளோடு வாழ்ந்த அவர் திண்ணிய நெஞ்சத்தை அவர்தம் வாழ்வு முழுவதும் காணமுடிகின்றது.

தனிமையும், நூல்கள் படிப்பதும் அவருக்கு விருப்பமானவை. கதைகளிடையேயும், புத்தகங்களிடையேயும் இன்னும் வாழ்ந்து வருகின்றவர் வல்லிக்கண்ணன். அவர்தம் இல்லச்சூழல் இயல்பாகவே அவர்தம் நூல் ஆர்வத்திற்குத் துணை நின்றது.

ஏறத்தாழ அறுபது வருடங்களாக எழுதிவரும் எண்பது வயது இளைஞர் திரு வல்லிக்கண்ணன் அவர்கள். எழுபத்திரண்டு நூல்களுக்கும் மேல் எழுதிய எழுத்தாளர்! ஆம். அவருக்கு எழுத்தும் எழுதுகோலும்தான் தெய்வம் போலும்! தமிழ்நாட்டின் இதழியல் வரலாற்றைத் தொகுத்து

எழுதினால் இந்திய விடுதலைக்கு முன்பும் பின்பும் தோன்றிய இதழ்கள் அனைத்திலும் பெரும்பாலும் இவர் எழுத்து இடம் பெற்று விளங்குவதைக் காணமுடியும். எழுத்தின்மேல் இவர் கொண்ட தாகம் இன்றும் தணியவில்லை என்றே கூறலாம். எழுத்தாளர் வல்லிக்கண்ணனின் வாழ்க்கைச் சுவடுகள் நூலால் தமிழ்நாட்டின் இலக்கிய, மொழி, சமுதாய, வரலாற்றுச் செய்திகள் தெளிவாகின்றன. இதழியல் நடத்துவதில் ஏற்பட்ட இன்னல்கள், அவ்வின்னல்களையே இன்பமாக நினைந்து வாழ்ந்த எழுத்தாளர்கள், இதழாசிரியர்கள் ஆகியோரின் வாழ்க்கைச் சுவடுகளும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறுகதையாசிரியராக, நாவலாசிரியராக, கட்டுரையாளராக, திறனாய்வாளராக, மொழிபெயர்ப்பாளராக வல்லிக்கண்ணன் விளங்குகின்றார். எழுத்தாளர்களுள் பலரும் அவரை ஏற்றிப் போற்றுவதை அண்மையில் வெளியாகிய 'சிறிய செந்தியாதான்' என்னும் நூல் காட்டும். அவர் இன்றும் மிகமிக எளிமையாக வாழ்ந்து வரும் ஞானியாகக் காட்சியளிக்கின்றார். எழுத்திற்கே முதன்மைதந்து ஏனைய அனைத்தையும் புறந்தள்ளிய ஆன்மிகவாதியாக வலம் வருகின்றார் வல்லிக்கண்ணன். அரசுப்பணி எழுத்துப்பணிக்குத் தடையாயிருப்பதை எண்ணி அரசுப்பணியையே உதறியவர். அந்நிகழ்ச்சி குறித்து அவர் எழுதுவது அவருடைய உறுதியான உள்ளப் பாங்கைக் காட்டும்.

> நான் அப்படி வேலையை விட்டு உதறிவந்தது என் உறவினர்களுக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாக எனக்கு வேலை வாங்கித் தந்த பெரியவர் என் போக்கை வெறுத்தார். சொந்தக்காரர் ஒருவர் உபதேசம் புரிந்தார். நீ வேலையை விட்டது தப்பு. நீ எல்லாம் எழுதி முன்னுக்கு வர முடியாது; ஒரு வேலையில் இருந்து கொண்டு உன் மனத் திருப்திக்காக எழுதலாம். ஆபீஸ் வேலை பிடிக்கவில்லை என்றால் சின்னதாக ஒரு கடை வைத்துக் கொண்டு பிழைக்க வழிதேடு. கூட உன் விருப்பம் போல் எழுது. பத்திரிகை ஆபீசில் சேர்ந்து முன்னேறிவிடலாம் என நினைப்பது வெறும் கனவுதான். நம்மைப் போன்றவங்களாலே சொந்தமாகப் பத்திரிகை நடத்தி உயரவும் முடியாது. அதுக்கு நிறையப் பணம் வேணும் என்று நீண்ட நேரம் பேசினார்.

இந்நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட பின்னர் வல்லிக்கண்ணன் இறுதியில் குறிப்பிடுவார்: 'எவருடைய நல்லுரையையும் கேட்கும் நிலையில் நான் இருக்கவில்லை. என் உள்ளத்தில் ஒரு உறுதிபடந்திருந்தது. நான் எப்படியும் எழுத்தாளனாக வளர்ந்தே தீர்வேன் என்று'. ஆம். அவருடைய உள்ள உறுதி நிலைத்தது. வாழ்வில் எதை எண்ணி, எதைநோக்கி

இராஜவல்லிபுரத்திலிருந்து புறப்பட்டாரோ அதனை அவர் இறுதியில் தம் கடும் உழைப்பால் அடைந்து வெற்றி பெற்றார். ஆனால் அதை அவர் பெறுவதற்கு இடையே பல நிலைகளைக் கடந்து வர வேண்டியிருந்தது. அப் படிநிலைகளையெல்லாம் உறுதியாக நின்று வெற்றிகண்டார் வல்லிக்கண்ணன்.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் (611)

என்னும் குறள் மொழிக்கேற்ப முயற்சியாலும் கடுமையான உழைப்பாலும் பெருமை பெற்றவர் வல்லிக்கண்ணன்.

'வாழ்க்கைச் சுவடுகள்' என்னும் இந்நூலில் வல்லிக்கண்ணன் அவர்கள் அக்காலத்தில் நிகழ்ந்த பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளையும் பதிவு செய்துள்ளார். காசித்தேவன் என்ற கொள்ளைக்காரன், ராபின்ஹீட் என்னும் ஆங்கிலேய கொள்ளைக்காரன் போல் வாழ்ந்து, பெருமை பெற்ற செய்தியையும் போலீசாரால் கைவிலங்கு மாட்டப் பெற்ற நிலையில் அவனைத் தாம் பார்த்தபோது மிலிந்த அவனுடைய தோற்றம் தமக்கு ஏமாற்றம் தந்ததையும சுவையாகக் குறிப்பிடுகின்றார். அதுபோலவே 'கோட்டைப் பிள்ளைமார்' பெண்கள் பற்றிய விவரமும் அக்காலத்திய சமூகச் சூழலை வெளிப்படுத்தும்.

புகழ்பெற்ற மணிக்கொடி எழுத்தாளர்களின் கதைகளோடு (புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, க.நா. சுப்ரமணியம்) அவருடைய கதைகளும் இதழ்களில் வெளியானது கண்டு தம் மகிழ்வைப் புலப்படுத்துவார். நையாண்டிபாரதி, கோரநாதன், மிவாஸ்கி, சொனாமுனா, பிள்ளையார் எனப் பல்வேறு புனைபெயர்களில் எழுதியவர் வல்லிக்கண்ணன்.

தாமும் தம் நண்பர்களும் கொண்டிருந்த தமிழ்ப்பற்றையும் வல்லிக்கண்ணன் தம் எழுத்தில் நினைவுகூர்கிறார். சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை (இவரும் வல்லிக்கண்ணன் பிறந்த ஊரைச் சார்ந்தவரே) 1941 ஆம் ஆண்டில் நெல்லையில் நடந்த விழாவில் பங்கேற்றார். அழைப்பிதழில் 'பேச்செல்லாம் தமிழினிலே பேசுங்கள்; ஏச் செல்லாம் தமிழினிலே ஏசுங்கள்' என்று குறிப்பிட்டிருந்ததைச் சொல்லின் செல்வர் மகிழ்ந்து பாராட்டியதைக் குறிப்பிடுவார். அக்காலத்திய தமிழ்ப்பற்றும் மொழிச் சூழலும் இதனால் புலனாகும்.

பாரதியார், பாரதிதாசன், புதுமைப்பித்தன் ஆகியோர் வல்லிக்கண்ணனின் படைப்பு ஆளுமைத்திறத்திற்கு உந்துதலாக விளங்கியது போலவே பிறநாட்டு அறிஞர்களின் படைப்புகளும் இவர்தம் எழுத்திற்குப் பொலிவூட்டின. எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்கும்

வல்லிக்கண்ணன் அவர்கள் ஷெல்லி, டிக்கன்ஸ், பெர்னாட்ஷா, ரஸ்ஸல், மாப்பசான், விக்டர்ஹியுகோ, எமிலிஜோலா, டால்ஸ்டாய், மார்க்சிம் கார்க்கி, செகாவ், ஹெமிங்வே ஆகியோர்தம் எழுத்துகளில் மனத்தைப் பறிகொடுத்துப் படித்துக் கொண்டே இருந்தவர். 'வாழ்க்கைச் சுவடுகள்' என்னும் நூலில் இவர் படித்த நூல்களின் பட்டியலைப் பார்க்கும்போது படிப்பின்மேல் இவருக்கு இருந்த வெறியும் தாகமும் நம்மை வியக்க வைக்கின்றன.

'வாழ்க்கைச் சுவடுகள்' என்னும் இந்நூல் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள் மட்டுமன்று. அவர்காலத்திய சமுதாய வாழ்வின் சுவடுகளாகவும், மக்களின் பண்பாட்டுச் சுவடுகளாகவும் விளங்குவன. அவருடைய எழுத்தின் வரலாறு மட்டும் இங்குப் பதிவு செய்யப்படவில்லை. அவர்காலத்திய பிற எழுத்தாளர்களின் எழுத்துவரலாறும் பதிவு செய்யப்பட்டுள்ளது; மானுடநேயத்தின் வரலாறாகவும் விளங்குகின்றது. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்பது போல 'நெல்லை முதல் சென்னை வரை' பல இலக்கிய, பண்பாட்டு, சமூக வரலாற்று நிகழ்வுகள் பதிவு செய்யப் பெற்றுள்ளன.

வரலாற்று ஆய்வு அறிஞரான டாக்டர் மா. இராசமாணிக்கனார் பெயரில் அமைந்துள்ள 'ஆய்வுவட்டம்' இவ்வரிய நூலை முதல் வெளியீடாகக் கொண்டுவருவதில் மகிழ்ச்சி கொள்கிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் பெறுமிடத்தை அவர்தம் 'வாழ்க்கைச் சுவடுகள்' நன்கு புலப்படுத்துகின்றன. பல்துறை வித்தகராகப் பொலியும் எழுத்தாளர் வல்லிக்கண்ணனின் பன்முக ஆளுமை இந்நூலால் தெளிவுறுகின்றது. ஆய்வு வட்டத்தின் முதன்மைநோக்கம் நாட்டிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் உழைத்துவரும் சான்றோர்களின் வரலாற்றை எதிர்வரும் தலைமுறையினருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே. இவ்வகையில் இவ்வரிய நூலை வெளியிடுவதற்கு வாய்ப்பு நல்கிய எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கட்கும், நூலை வெளியிட்டுதவிய பூங்கொடி பதிப்பகத்தார்க்கும், இப் பணிக்குத் துணைநின்ற பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன் அவர்களுக்கும், நன்முறையில் அச்சிட்டு உதவிய அலமு அச்சகத்தாருக்கும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆய்வு வட்டத்தாருக்கும் குறிப்பாக, இப்பணிகளில் பெருந்துணைபுரியும் பேராசிரியர் மா.ரா. அரசு அவர்கட்கும் நன்றி உரியது.

இ. சுந்தரமூர்த்தி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
ஆய்வு வட்டம்
சென்னை-600 102

பதிப்புரை

- ஒரு காலகட்டத்தின் வரலாறு இதோ உங்கள் கரங்களில் .... ஆம். பெரியவர் வல்லிக்கண்ணன் அவர்களுடைய தன்வரலாற்றை அப்படித்தான் சொல்லமுடியும்; சொல்லவேண்டும்.

- எண்பதைக் கடந்து இன்றும் நம்மோடு வாழ்ந்து வருபவரும்– தம்முடைய வாழும் முறையாலும் பண்புகளாலும் நமக்கெல்லாம் மௌன வழிகாட்டியாக விளங்குபவருமான பெரியவர் வல்லிக்கண்ணன் அவர்களுடைய தன்வரலாறு ஓர் அரிய வரலாற்று ஆவணமாகும்.

- நாற்பதுகள் தொடங்கி இன்று வரையிலுமான அறுபது ஆண்டுகள் என்னும் நெடிய காலப் பரப்பின் – ஒரு கால கட்டத்து வரலாற்று நிகழ்வுகளின் வெளிப்பாடாகவும்

- தமக்கென்று ஓர் இலட்சியத்தை உருவாக்கிக் கொண்டு அந்த இலட்சியத்தை நோக்கி நடந்தபோது, தாம் சந்திக்க நேர்ந்த தனிமனித அனுபவங்களின் தொகுப்பாகவும்

- அந்த அனுபவங்களில் இருந்து தாம்பெற்ற தெளிவின் பிழிவாகவும் விளங்கும் வல்லிக்கண்ணன் அவர்களுடைய இந்தத் தன்வரலாற்று நூல், வாழ்க்கை வரலாற்று இலக்கியத் துறையில் தனித்தன்மையோடு நிலைத்து நிற்கக்கூடிய தகுதிப்பாடுடையதாகும்.

- பதிப்புரையின் இந்தப் பகுதியை, ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு 'துக்ளக்' இதழில் திருமிகு த. ஜெயகாந்தன் அவர்கள் எழுதிய வாசகத்தோடு நிறைவு செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

> வல்லிக்கண்ணன் போன்ற அறிஞர்கள் புதிதாக ஒன்றும் எழுதக்கூடவேண்டாம் தாங்கள் எழுத வந்த நாள்தொட்டு தமிழ்க்கலை–இலக்கிய உலகம் சம்பந்தப்பட்ட தமது அனுபவங்களை எழுதினால், புதிய தமிழ் இலக்கியத்தின் சரித்திரத்தை அல்லது அதன் தலையெழுத்தைத் தமிழர்கள் நன்கு புரிந்துகொள்ளமுடியும்.
>
> (சிறியன சிந்தியாதான் வல்லிக்கண்ணன், ப.17)

திருமிகு த. ஜெயகாந்தனின் அன்றைய பெருவிருப்பு இன்று இந்தத் தன்வரலாற்று நூலில் நிறைவேறி இருப்பதை இதைப் படிப்பவர்கள் உணரமுடியும்.

- கடந்த ஆண்டுகளில் எங்கள் பூங்கொடி பதிப்பகம், வல்லிக்கண்ணன் அவர்களுடைய மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளது.

- என்றாலும், இவருடைய தன்வரலாற்று நூலை வெளியிடும் அரிய வாய்ப்பு டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆய்வு வட்டத்தின் மூலமே கிடைத்தது. இந்த அமைப்பே வல்லிக்கண்ணன் அவர்களை அணுகி, தன்வரலாற்று நூலை எழுதும்படி வேண்டி, அவரைச் சம்மதிக்க வைத்துத் தனித்தன்மை வாய்ந்த இந்த வரலாற்று ஆவணம் உருவாகக் காரணமாக அமைந்தது. இந்த அமைப்பைச் சேர்ந்தவர்களின் சலியாத உழைப்பின் காரணமாகவே இந்நூல் முழுவடிவம் பெற்று இன்று உங்கள் கரங்களில் தவழ்கிறது.

- காலங்களைக் கடந்து வாழக்கூடிய வல்லமை பெற்ற வல்லிக்கண்ணன் போன்ற பெரியவர்களின் தன்வரலாற்றின் உருவாக்கத்திற்கும் எங்கள் பதிப்பகத்தின் மூலம் அது நூலாக வெளிவருவதற்கும் காரணமானவர்களான, தன்வரலாற்று நூல்களையும் வாழ்க்கை வரலாற்று நூல்களையும் உருவாக்கி வெளிக்கொணர்வதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டு இயங்கும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆய்வு வட்டத்தின் தலைவர், பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி (பேராசிரியர் - தலைவர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் செயலாளர் பேராசிரியர் மா.ரா.அரசு அவர்களுக்கும் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

முன்னுரை

எனக்கு எழுபது வயது நிறைவுற்றதும் நான் எனது சுயசரிதையை எழுதவேண்டும் என்று நண்பர்கள் விருப்பம் தெரிவித்தார்கள்.

அதற்கு முன்பிருந்தே கவிஞர் சுரதா என்னைக் காணநேர்ந்த போதெல்லாம் நான் தன்வரலாற்று நூல் எழுத வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்.

அப்போதெல்லாம் நான் ஏதாவது பதில் சொன்னேனே தவிர, என்னுடைய சுயசரிதையை எழுத வேண்டும் என்பதில் நான் ஆர்வம் கொண்டதில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் நண்பர் மு. பரமசிவம் எனது வாழ்க்கை வரலாற்றை விரிவாகவும் சிறப்பான முறையிலும் எழுதி முடித்தார். அதை மதிப்புக்கு உரிய நண்பர் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் 'எழுத்துச்செல்வர் வல்லிக்கண்ணன்' என்ற பெயரில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியீடாகப் பிரசுரம் செய்தார்.

என் வரலாறு பற்றி என்னிடம் குறிப்பிட்ட நண்பர்கள் பலருக்கும் அதுதான் புத்தகமாக வந்துவிட்டதே என்று சொல்லலானேன்.

மு. பரமசிவம் உங்கள் வரலாற்றைச் சிறப்பாகவே எழுதியிருக்கிறார்; ஆனாலும் உங்கள் வரலாற்றை நீங்களே எழுதுவது இன்னும் சிறப்பாக அமையும்; அது பயனுள்ளதாகவும் இருக்கக்கூடும்; இப்பொழுதே எழுதத் தொடங்கிவிடுங்கள் என்று நண்பர்கள் விடாது கூறிவந்தார்கள்.

தன்வரலாறு எழுதப்பட வேண்டிய அளவுக்கு நான் பிரமாதமாக எதுவும் செய்துவிடவில்லை. நான் ஒரு சாதாரணன்; எனது வாழ்க்கை விசேஷ நிகழ்வுகள் இல்லாத சகஜமான வாழ்க்கைதான்; புத்தகமாக எழுதுவதற்குச் சுவாரசியமான சமாச்சாரங்கள் எவையும் என் வரலாற்றில் இரா என்று நான் குறிப்பிடுவது வழக்கம்.

அனைத்துத் தரப்பினரும் வியந்து போற்றக்கூடிய ஒரு சாகச நாயகனாக நான் வாழ்ந்து வளரவில்லை. பலரையும் வசீகரிக்கக் கூடிய வாழ்க்கை அனுபவங்கள் எனக்கு எதிர்ப்பட்டதுமில்லை. வாழ்க்கைப் பெருவெள்ளத்தில் கலந்து, வகைவகையான நிகழ்வுகளை எதிர்கொண்டு, சுவையாக விவரிப்பதற்கு ஏற்ற பல்வேறு அனுபவங்களை நான் சுவைத்ததுமில்லை. வாழ்க்கை நதியின் ஓரத்தில் ஒதுங்கி நின்று அனைத்தையும் அனைவரையும் சும்மா வேடிக்கையாகப் பார்த்துத் திருப்தி அடைந்த அப்பாவி நான். இந்நிலையில் ஏன் நான் என் கதையை எழுத வேண்டும் என்று எண்ணினேன்.

நீங்கள் அப்படிப் பார்த்த வாழ்க்கை ஏற்படுத்திய மனப்பதிவுகளை எழுதுங்கள். உங்களுடைய வாழ்க்கை சாதாரணமானது என்று நீங்கள் கூறினாலும் நீங்கள் ஏற்று வாழ்ந்த வாழ்க்கை முறையைச் சாதாரணமாகப் பலரும் ஏற்று நடக்க இயலாது என்றே தோன்றுகிறது. நீங்கள் நடந்துவந்த பாதையைப்பற்றி, வழியில் நீங்கள் கண்டறிந்தவற்றைப் பற்றி எழுதுங்கள். அவை அவசியம் எழுதப்பட வேண்டியவை என்று முக்கியமானவர்கள் அழுத்தமாகச் சொல்லிவந்தார்கள்.

பார்க்கலாம், எழுதலாம் என்று சொல்லிச் சொல்லியே காலத்தை ஓட்டினேன் நான்.

எனது எண்பதாவது வயது தொடங்கியது. சேலம் நண்பர் கவிஞர் சந்திரசேகரன் அகால மரணமடைந்த தன் மகன் நினைவாக, 'அசோக்குமார் சிந்தனையாளர் மன்றம்' அமைத்து, ஓர் அறக்கட்டளை நிறுவினார். தமிழ்ப்பணி புரிந்தோர்க்கு விருது வழங்கிப் பொற்கிழியும் அளிப்பது என்று அவர் தீர்மானித்தார். அத்திட்டத்தைச் செயல்படுத்த முனைந்ததும் முதன் முதலாக வல்லிக்கண்ணனுக்கு விருது வழங்கிக் கவுரவிப்பது என முடிவு செய்தார். அதற்காக 1999இல் ஒரு விழா ஏற்பாடு செய்தார்.

சேலத்தில் நடைபெற்ற அந்த விழாவுக்கு அமுதசுரபி ஆசிரியர் நண்பர் விக்கிரமன் தலைமை தாங்கினார். அவர் உரை நிகழ்த்தியபோது, எண்பது வயதை எட்டியுள்ள வல்லிக்கண்ணன் அவருடைய சுயசரிதையை எழுத வேண்டும்; அதை நான் மாதம்தோறும் அமுதசுரபியில் தொடர்ந்து வெளியிடத் தயாராக இருக்கிறேன். அவர் எழுதக்கூடிய சுயசரிதை அவருடைய வரலாறாக மட்டும் இராது; தமிழகத்தின் வரலாறு சம்பந்தப்பட்ட, தமிழ் இலக்கியத்தின் அறுபது எழுபது வருட வரலாறு சார்ந்த முக்கிய தகவல்களைக் கொண்டதாகவும் இருக்கும். அதனால் அவர் மறுக்காமல் இந்தப் பணியைச் செய்ய இசைவு தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

என்னைப் பாராட்டியும் வாழ்த்தியும் பேசிய கவிஞர் எழுஞாயிறும் நான் சுயசரிதை எழுத வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொன்னார்.

நான் ஏற்புரையில் சுயசரிதை எழுதும்படி பலரும் கூறிவந்ததைக் குறிப்பிட்டுவிட்டு, இதுவரை நான் எழுதவிருப்பம் இல்லாமலே இருந்தேன்; இப்போது நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று, சுயசரிதம் எழுத இசைவு தெரிவிக்கிறேன்; அதை அமுதசுரபிக்கே அளிப்பேன் என்று அறிவித்தேன். அரங்கம் முழுவதும் கைதட்டி அதை வரவேற்றது. தினமணி நாளிதழ் அதை எடுப்பாக வெளியிட்டது.

அச்செய்தியைப் படித்த அன்பர்கள் பல இடங்களில் இருந்தும் கடிதங்கள் எழுதி வாழ்த்துத் தெரிவித்தார்கள். ஏற்கெனவே பலமுறை என்னை எழுதும்படி தூண்டிவந்த மணலி அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பெ. இளவரசு மிகுந்த மகிழ்ச்சியோடு கடிதம் எழுதினார். நீங்கள் எழுதத் தொடங்கிவிடுங்கள்; அதைப் பிரதி எடுப்பது போன்ற வேலைகளில் நான் உங்களுக்கு உதவ வருவேன் என்று.

இப்படி எண்ணற்றோர் எதிர்பார்த்த இனிய பணியை நான் உடனடியாகத் தொடங்கிவிடவில்லை. தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். அந்நிலையில்தான் பேராசிரியர் மா.ரா. அரசு எனக்கு உதவ முன்வந்தார்.

நீங்கள் உங்கள் சுயசரிதையை எழுதி எங்களுக்குக் கொடுங்கள்; டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆய்வு வட்டம் அதை நூலாக வெளியிடும் என்றார். ஆய்வு வட்டத்தின் செயலர் அவர்; தலைவர் பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி, பொருளாளர் பூங்கொடி வே. சுப்பையா ஆகியோரும் இதை விரும்புகிறார்கள் என்று கூறினார்.

நான் எனது சுயசரிதத்தை அமுதசுரபி மாத இதழில் தொடராக வெளியிடுவதற்குத் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேனே என்று கூறினேன்.

மாதப் பத்திரிகையில் இதழ்தோறும் நான்கு அல்லது ஐந்து பக்கங்களில் சுயசரிதம் வெளிவருவதைவிட, மொத்தமாகப் புத்தக வடிவத்தில் பிரசுரம் பெறுவதே நல்லது; அதிகப் பயன் அளிக்கக் கூடியது என்று நண்பர் மா.ரா.அரசு விளக்கினார்.

நானும் யோசித்து அந்த முடிவுக்கே வந்தேன்.

இந்தத் தன்வரலாறு எழுதப்படுவதற்கு உந்துதலாக இருந்த நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி உரியது. அதை நூல் வடிவில் கொண்டு வருவதில் முனைப்பாக இருந்த பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி, நண்பர் மா.ரா.அரசு, பூங்கொடி வே. சுப்பையா மூவருக்கும் மிகுந்த நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆவலுடன் என் சுயசரிதையை எதிர்பார்க்கும் அன்பர்கள் அனைவருக்கும் இது முழுத்திருப்தி அளிக்குமா என்று என்னால் தீர்மானிக்க இயலவில்லை. எனது காலத்தைப்பற்றியும் காலமும் நாட்டின் நிலைமைகளும்

என்னுள் ஏற்படுத்திய பாதிப்புகள் குறித்தும் நான் இன்னும் அதிகம் எழுதியிருக்க வேண்டும்; குறைவான பக்கங்களே எழுதப்பட்டிருக்கின்றன என்று வாசகர்கள் கருதக்கூடும் என்றோர் உணர்வு எனக்கு ஏற்படுகிறது.

கூடியவரை, இயன்றஅளவு என் மனப்பதிவுகள் இவ்வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றன என்றே எண்ணுகிறேன்.

தமிழில் தன்வரலாற்று நூல்கள் மிகக் குறைவாகவே எழுதப்பட்டிருக்கின்றன. அனுபவமும் ஆற்றலும் மிகுந்தவர்கள் குறிப்பிடத் தகுந்த சுயவரலாறு ஆக்கியிருக்கிறார்கள்.

அரசியல் தீவிரவாதியாகச் செயலாற்றிக் கீர்த்தி பெற்ற வ..உ. சிதம்பரனார் தன் வரலாற்றைச் செய்யுள் வடிவில் யாத்துள்ளார். அறிஞரும் செயல்வீரருமான திரு.வி. கலியாணசுந்தரனாரும் தன்வரலாற்றைப் படைத்திருக்கிறார். தமிழ் மொழியின் வளத்துக்காக அரும்பெரும் தொண்டாற்றிய தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதய்யர் மிகச் சிறப்பாகத் தன் வரலாற்றைப் படைத்திருக்கிறார். தன்வரலாற்று நூல்களிலேயே அரியதோர் எடுத்துக்காட்டாக அது விளங்குகிறது. கவிஞர் கண்ணதாசன் கவர்ச்சிகரமாகவும் தனித்தன்மையோடும் தனது வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறார். கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் எழுதியுள்ள 'என் கதை'யும் விசேஷமானதே.

இப்படி இன்னும் ஒரு சில வந்திருக்கலாம்.

இப்போது நானும் என் தன்வரலாற்றை என் இயல்புப்படி எழுதியிருக்கிறேன். அவ்வளவுதான்!

வல்லிக்கண்ணன்

. . . அவரது (வல்லிக்கண்ணன்) இலக்கிய வாழ்க்கை வணங்கத்தக்கதும் வழிபடத்தக்கதுமாகும். அவரைச் சுற்றி வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் நேரினும் அந்த மாற்றங்களை அறிவாலும் சிந்தனையாலும் ஆக்கப்பூர்வமாய் வெளியிடும் திறனாலும் தவிர, தன்அளவில் எத்தகைய பாதிப்புகளுக்கும் ஆளாகாத ஓர் ஆத்மயோகி அவர்.

– த. ஜெயகாந்தன்
'அவர் ஓர் ஆத்மயோகி'(கட்டுரை)
சிறியன சிந்தியாதான் வல்லிக்கண்ணன்
பக். 228–229

வாழ்க்கைச் சுவடுகள்

12 நவம்பர் 2000 . . .

எனக்கு எண்பது வயது நிறைந்து எண்பத்தோராவது வயது ஆரம்பமான நாள்.

எண்பது வருடங்கள் என்பது எல்லையற்ற காலப் பரப்பில் மிகச் சிறிய அளவேயாகும். ஆயினும், தனிமனித வாழ்க்கையில் அது பெரியதொரு காலகட்டம் தான்.

எத்தனை எத்தனையோ விதமான அனுபவங்களுக்குத் தளம் அமைத்துத்தரும் காலப்பரப்பு. விதம்விதமான மனிதர்களை அறிந்துகொள்ள உதவுகிற காலக்களம். வியக்கவும் ரசிக்கவும் அனுபவ ஞானம் பெறவும் துணைபுரிகிற அரங்கமாகவும் அது அமைகிறது.

பொதுவாக, 'வாழ்க்கை அர்த்தமற்றது' என்று சீரிய சிந்தனையாளர்களால் மதிக்கப்படுகிறது. உண்மையில், வாழ்க்கையை அர்த்தம் உள்ளதாகவும் மாண்பு நிறைந்ததாகவும் ஆக்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் ஒவ்வொரு மனிதரிடமும் உள்ளது.

தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி — மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து — நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

இது மகாகவி பாரதியாரின் இதயஒலியாகவும் உந்துசக்தியாகவும் இருந்தது.

இத்தகைய உள்ளக் குறுகுறுப்புப் பெறுகிறவர்கள் பயனுள்ள காரியங்கள் செய்து வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்ற முனைகிறார்கள்.

எனது இளம் பிராயத்தில் இருந்தே என்னுள் மந்திரம் போல் ஒலித்துக் கொண்டிருந்தன இவ்வரிகள். நாட்களை வீணாக்காமல் உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற உள்உந்துதல் என்னை இயக்கியது.

பிறப்பு முதலே நான் பலவீனனாக, நோஞ்சானாக இருந்தேன். வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி இல்லை. பார்ப்பதற்குச் சின்னப்பையன் போலவே தோற்றம் கொண்டிருந்தேன். அதனால் பெரியவர்கள் என்னைச் சிறியவன் என்றே எப்போதும் ஒதுக்கிவைத்தார்கள். சின்னஞ்சிறுவர்களோ, தம்மை விடப் பெரியவன், அவர்களோடு சேர்ந்து விளையாடத் தகுதியற்றவன் என்று கருதி விலக்கினார்கள்.

ஆகவே நான் தனியன் ஆகவே இருந்தேன். அதிகமான கூச்ச சுபாவம் பெற்றவனாகவும் இருந்தேன். எனக்குப் புத்தகங்கள் துணை சேர்ந்தன. சதா படிப்பதில் தனி இன்பம் கண்டேன்.

நான் நான்காம் வகுப்புப் படித்த காலத்தில் இருந்தே, பாடப் புத்தகங்களுக்கும் மேலாக இதர, பல கதைப்புத்தகங்கள் படித்து மகிழ்வதில் ஆர்வம் கொண்டேன்.

கதைகள் என்னை வசீகரித்தன. கதைசொல்லிகளின் நடுவிலே வளர்ந்தேன் நான்.

என் அம்மா ராசா ராணி கதைகள், மாயதந்திரக் கதைகள், மோகினிக் கதைகள் எனப் பலரகமான கதைகளையும் தற்காலத்தில் தொன்மக் கதைகள் என்று மதிப்பிடப் பெறுகிற பலவிதமான கதைகளையும் சுவாரசியமாகச் சொல்வது வழக்கம். அண்டை அயலார்கள் பேய் பிசாசுகள் திருடர்கள் உலாவும் கதைகள் சொன்னார்கள். என் அப்பா அரசுப் பணியாளர். கலால் வரி வசூல் செய்யும் இலாகாவில் 'இன்ஸ்பெக்டர்' பதவி, உப்பளத் துணை ஆய்வாளராகவும் இருந்தார். அவருடைய அனுபவங்களோடு, விக்கிரமாதித்தன் கதைகள், மதனகாமராஜன் கதைகள் போன்றவற்றையும் அப்பா சுவையாகச் சொல்வது உண்டு.

தந்தையின் கீழ்ப் பணிபுரிந்த காவலர்களில் பாலகிருஷ்ணநாயுடு என்று ஒருவர் இருந்தார். அவர் புராணக் கதைகள், கடவுளர் திருவிளையாடல்கள் போன்ற கதைகள் சொல்வார். நான்காம் வகுப்பு உபாத்தியாயர் இராமசாமி பிள்ளை, பாடங்களோடு சேர்த்து இலட்சிய மனிதர்களின் கதைகளைக் கூறினார்.

இவை எல்லாம் நானும் கதைசொல்லி ஆக வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் வளர்த்தன. பள்ளிப் படிப்போடு, நூல் நிலையப் புத்தகங்களை எடுத்துப் படிப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தேன். ஆங்கிலக் கதைப் புத்தகங்கள் அதிகம் கிடைத்தன.

உயர்நிலை வகுப்புகளுக்கு வந்தபோது, படிப்பதற்கு அக்காலத்தியப் பத்திரிகைகள் கிடைத்தன. அன்று, இன்று இருப்பது போல் மிக அதிகமான சஞ்சிகைகள் இருந்ததில்லை. அவை குறித்து உரிய இடத்தில் கவனிக்கலாம்.

இவற்றால் எல்லாம், நானும் கதைகள் எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எழுதி எழுதிப் பழகலானேன்.

நான் எழுத்தாளன் ஆக வேண்டும் என்று விரும்பி, முயற்சிகள் மேற் கொண்டதற்கு என்ன காரணம்? எங்கள் குடும்பத்தில் - என் முன்னோர்களில் யாராவது எழுத்துத் துறையில் ஈடுபட்டிருந்தார்களா? இப்படிப் பிற்காலத்தில் என்னிடம் கேள்விகள் கேட்கப்பட்டது உண்டு.

அப்படி யாரும் இருந்ததில்லை; அதற்கான சூழ்நிலையும் அப்போது இருக்கவில்லை.

2

1920 நவம்பர் 12 - நான் பிறந்த தேதியாகும்.

எனது ஊர், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராஜவல்லிபுரம் கிராமம். திருநெல்வேலி நகரிலிருந்து கிழக்கே ஆறு மைல் தள்ளி அமைந்துள்ளது. தாழையூத்து அதற்கான ரயில் நிலையம்.

ராஜவல்லிபுரம் ஒரு காலத்தில் வெகு அழகான ஊராகத்தான் திகழ்ந்தது. ஊருக்குள் போகிற வழி ஓரத்தில் பெரிய குளம். அதன் கரையாக அமைந்த சாலையில் அடர்ந்து ஓங்கி வளர்ந்த ஆலமரங்கள் குளுகுளு நிழல் பரப்பி நின்றன 1950கள் வரை. காலப்போக்கில் அம்மரங்கள் வெட்டப்பட்டு, வெறிச்சிட்டுக் கிடக்கும் ரஸ்தா மட்டும் இருக்கிறது.

தாழையூத்து ஊர் பெரும் வளர்ச்சி பெற்றுவிட்டது. 'இந்தியா சிமிண்ட்' ஆலை தோன்றி, பெரிய அளவில் வளர்ந்து, காடாகக் கிடந்த சூழ்நிலையையும் ஊரையும் முற்றிலும் மாற்றி விட்டது. இப்போது அது சங்கர்நகர் 'டவுன் ஷிப்'. பல நெசவு மில்களும் அங்கு இடம் பெற்றுள்ளன. பரபரப்பான கடைவீதி வந்துவிட்டது. பஸ்கள் போக்குவரத்து அதிகம். மேல்நிலைப் பள்ளி, 'பாலிடெக்னிக்' எல்லாம் தோன்றி வளர்ச்சி பெற்றுவிட்டன.

இராஜவல்லிபுரம் அவ்விதம் மாறுதல் எதுவும் பெறவில்லை. 'அன்று கண்ட மேனி அழியாமல் அப்படியே இருக்கிறது' என்பார்களே,

அத்தன்மையில் தான் அச்சிற்றூர் உள்ளது. பஸ்கள் போய் வருகின்றன. நல்ல மளிகைக் கடையோ, பல பொருள் அங்காடியோ கிடையாது. வசதியான சிற்றுண்டிச் சாலையோ, சுத்தமான 'டீக் கடை'யோ கூட இல்லாத ஊர். சுமாரான நடுநிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. சரியாக இயங்கும் ஆஸ்பத்திரி இல்லை.

ஊர்ப் பிள்ளைகள் இரண்டு மைலுக்கு அப்பால் உள்ள சங்கர்நகர் மேல்நிலைப் பள்ளிக்குப் போய்த் தான் படித்து வருகிறார்கள். 1950 களில், ஆற்றங்கரை ஓரம் உள்ள அருவன் குளம் என்கிற நாரணம்மாள்புரம் போய் அங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்தார்கள். அந்தப் பள்ளி ஏற்படுவதற்கு முந்திய காலத்தில் திருநெல்வேலிக்கும், பாளையங்கோட்டைக்கும் போய்ப் படிக்க வேண்டிய நிலை இருந்தது.

சைவ வேளாளர்களில் கார்காத்தார் என்ற பிரிவைச் சேர்ந்த வேளாளர்கள் முன் காலத்தில் அவ்வூரில் வளமாக வாழ்ந்தார்கள். அந்தக் காலத்தில் பெரிது பெரிதாக அவர்கள் கட்டி வைத்த வீடுகள் ஊருக்குத் தனித் தோற்றமும் மதிப்பும் அளித்தவாறு நிற்கின்றன. பிந்தைய தலைமுறையினர் பூர்வீக வீடுகளுக்கு, வருடம் தோறும் வெள்ளை அடிக்கக் கூட முடியாத நிலையில் வீடுகளை வைத்திருந்தார்கள். பிறகு பெரிய வீடுகளை, இதர சாதி மக்களுக்கு 'வந்த விலைக்கு' விற்று விட்டுப், பிழைப்புத் தேடி வெளி ஊர்களுக்குப் போய்விட்டார்கள்.

அவ்வூரில் அந்தக் காலத்தில் வளமும், வசதிகளும் பெற்றிருந்த ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என் தந்தை ரா.மு. சுப்பிரமணியபிள்ளை. தாய் மகமாயி அம்மாள்.

என் உடன்பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்களும் ஒரு தம்பியும். எங்கள் அப்பா அரசுப்பணியில் இருந்ததால், வெளி ஊர்களிலேயே வசிக்க நேரிட்டது. ராஜவல்லிபுரத்தில் வயல்களும், பெரிய வீடும் இருந்தன. அவற்றைப் பெரியப்பா 'மேற்பார்த்து' வந்தார்.

எங்கள் அப்பா கடலோரக் கிராமமான உவரியின் உப்பளங்களைக் கவனிக்க வேண்டிய 'சால்ட் சப் இன்ஸ்பெக்டராக' திசையன்விளை ஊரில் வசித்தபோது நான் பிறந்தேன். அங்கிருந்து தூத்துக்குடிக்கு மாறுதல். இரண்டு, மூன்றாவது வயதில் ஓட்டப்பிடாரம்; அதன் பிறகு கோவில்பட்டி வாசம்.

திசையன்விளை, தூத்துக்குடி காலம் பற்றி எல்லாம் அம்மா சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி காலம் முதல் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

கோவில்பட்டியில் ஒரு 'திண்ணைப் பள்ளிக்கூட'த்தில்தான் எனக்குக் கல்விப் பயிற்சி தொடங்கிவைக்கப்பட்டது என் ஐந்தாவது வயதில். அப்போதெல்லாம் 'வித்யா ஆரம்பம்' ஒரு விழாபோல் செய்து வைக்கப்படும்.

சரஸ்வதி பூஜைக்கு மறுநாள், கொட்டு மேளத்துடன், பள்ளிக்கு இட்டுச் சென்று, 'அண்ணாவி' க்கு உரிய மரியாதைகள் செய்து எழுதக் கற்றுக் கொடுக்கப்படும்.

ஒரு குடிசை. தரையை விட உயரமாகக் கட்டப்பட்ட திண்ணை. அதன் மீது மணல் பரப்பப்பட்டிருக்கும். உரிய பூஜைகள் முடித்து, 'அண்ணாவி' பையனின் கையைப் பிடித்து விரலால் மணலில் அ, ஆ- முதலிய எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுப்பார். இதற்கு 'அட்சராப்பியாசம்' என்று பெயர். மணலில் தான் எழுதிப் பழக வேண்டும். 'கற்பலகை' திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பழக்கமில்லை. ஏடும் எழுத்தாணியும் தான்.

சில மாதங்கள் 'அண்ணாவி பள்ளிக்கூடத்தில்' எழுத்து கற்றுக்கொண்ட பிறகு, வேறொரு பெரியபள்ளியில் நான் சேர்க்கப்பட்டேன். இங்கு ஸ்லேட்டு குச்சி, புத்தகம் எல்லாம் உண்டு.

1926இல் மீண்டும் இடமாற்றம் ஏற்பட்டது. ஸ்ரீவைகுண்டம் அருகில் உள்ள பெருங்குளம் ஊர் போய்ச்சேர்ந்தோம். அங்குள்ள பள்ளிக் கூடத்தில் இரண்டு, மூன்றாம் வகுப்புகளில் நான் படித்தேன்.

இந்தப் பெருங்குளம் தான் 'பத்மாவதி சரித்திரம்', 'சத்யானந்தன்' 'கிளாரிந்தா' முதலிய நாவல்களும், 'குசிகர் குட்டிக் கதைக'ளும் எழுதிய அ. மாதவய்யாவின் ஊர். இத் தகவலை நான் பிற்காலத்தில்தான் தெரிந்துகொள்ள முடிந்தது.

'இந்த ஊர் மாதவய்யா என்பவரும் சால்ட் அன்ட் எக்ஸைஸ் சப் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தவர் தான். பிறகு அவர் கதைப் புத்தகங்கள் எழுதிப் பெயர் பெற்றிருக்கிறார்' என்று என் அப்பா சொன்னது உண்டு. 'குசிகர் குட்டிக் கதைகள்' பழைய பிரதி ஒன்று எங்கள் வீட்டில் ரொம்ப காலம் இருந்தது. மாதவய்யாவின் 'பஞ்சாமிர்தம்' பத்திரிகையின் ஒன்றிரண்டு இதழ்களும் இருந்தன. பிறகு அவை அழிந்து போயின.

1928 நடுவில் அப்பாவுக்கு மீண்டும் இடமாற்றம் ஏற்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி என்ற ஊருக்கு. தொலைவில் உள்ள அந்த ஊருக்கு எங்களை எல்லாம் கூட்டிச் சென்று வசிக்க வசதிப்படாது என்று அப்பா கருதியதால், நாங்கள் திருநெல்வேலியில் குடிபுகுந்தோம். அப்பா மட்டும் தொண்டிக்கு உத்தியோகம் பார்க்கச் சென்றார்.

திருநெல்வேலி மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் நான் நான்காம் வகுப்பு படித்தேன்.

தொண்டிக்குப் போன அப்பாவுக்கு அந்த ஊர் ஒத்துக் கொள்ளவில்லை. உடம்பில் கட்டிகள் ஏற்பட்டன. பெரும் 'பிளவை' ஒன்று உண்டாயிற்று. உணவுக் கஷ்டமும், உடல் நோய் சிரமமும் அதிகரிக்கவே அப்பா 'விடுப்பு'

எடுத்துக் கொண்டு திருநெல்வேலி வந்து சேர்ந்தார். பின்னர் வேலை வேண்டாம் என்று ஓய்வு பெற்றுக் கொண்டார்.

இனிமேலாவது பிள்ளைகளின் படிப்பு ஒரே இடத்தில் சீராக நடைபெற வேண்டும் என்று தீர்மானித்து, அப்பா பாளையங்கோட்டையில் வசிக்கத் திட்டமிட்டார். அதன்படி, நானும் என் சகோதரர்களும் பாளையங்கோட்டை அர்ச். சவேரியார் உயர்நிலைப் பள்ளியில் ((செயின்ட் சேவியர்ஸ் ஹைஸ்கூல்)) சேர்க்கப்பட்டோம்.

நான் ஐந்தாம் வகுப்பு முதல் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) முடிய (1929 - 1936) அந்தப் பள்ளியில் தான் பயின்றேன்.

நான் ஆறாம் வகுப்பு (I ஃபார்ம்) படித்துக் கொண்டிருந்த போது (1930) என் அப்பா இறந்து போனார். அப்போது எனக்கு வயது பத்து.

அந்நாட்களில் 'ஆறாம் வகுப்பு' என்று சொல்லப்பட்டதில்லை. I ஃபார்ம், II ஃபார்ம், III ஃபார்ம் என்றே கணக்கிடப்பட்டன. பத்தாம் வகுப்பு V ஃபார்ம் என்றும் எஸ்.எஸ்.எல்.சி வகுப்பு VI ஃபார்ம் என்றும் பெயர் பெற்றிருந்தன. தமிழ் தவிர இதர பாடங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் கற்பிக்கப்பட்டன. சரித்திரம் இந்திய சரித்திரம், பிரிட்டிஷ் சரித்திரம் என இரண்டு பிரிவுகளில் பெரிய புத்தகங்கள் படித்தாக வேண்டும்.

அப்போதெல்லாம் மாணவர்களின் படிப்பை எளிமைப்படுத்தும் விதத்தில் 'கைட்' (Guide) என்றும் 'நோட்ஸ்' என்றும் சொல்லப்படுகிற துணை நூல்கள் இருந்ததில்லை. நான் ஐந்தாவது ஃபாரம் படித்த வருடத்தில் தான் தமிழ்ப் பாடத்துக்கு முதன் முதலாகக் 'கோனார் நோட்ஸ்' வெளியிடப்பட்டது. நான் 'நோட்ஸ்' துணையை நாடியதில்லை.

என் அப்பா இறந்த பிறகு, எங்கள் அம்மாதான் பொறுப்புடன் எங்களை நன்கு வளர்த்துப் படிக்க வைத்தார். அதற்காக எவ்வளவோ சிரமங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

என் பெரிய அண்ணா கலியாணசுந்தரம் எட்டாம் வகுப்புடன் படிப்பை முடித்துக் கொண்டார். அண்ணா கோமதிநாயகம் 'எஸ்.எஸ்.எல்.சி தேர்வை 1934இல் எழுதி வெற்றி பெற்றார். 1936இல் நான் எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதி முடித்த உடனேயே மார்ச் மாதம் இனி பாளையங்கோட்டையில் வசிக்க வேண்டாம்; செலவு அதிகமாகிறது; ராஜவல்லிபுரம் போய் அங்கேயே தங்கலாம் என்று முடிவாயிற்று. என் தம்பி முருகேசன் ஆறாம் வகுப்பு படிக்க வேண்டும், ஊரில் இருந்து திருநெல்வேலி ஜங்ஷன் வந்து இந்து உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்கட்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாளையங்கோட்டையில் நாங்கள் வாடகை வீட்டில்தான் குடியிருந்தோம். ராஜவல்லிபுரத்தில் சொந்த வீடு இருந்தது. வயல்களும் இருந்தன. ஆகவே செலவுகள் குறையும் என்று கணக்கிடப் பெற்றது.

3

என் சொந்த ஊர் ராஜவல்லிபுரம் என்று நான் சொல்லிக் கொண்ட போதிலும் அந்த ஊரில் நான் தொடர்ந்து நீண்ட நாட்கள் வசித்ததில்லை; மொத்தத்தில் அதிக காலம் அங்கே வாழ்ந்ததும் இல்லை.

என் தந்தை கூடப் பிறந்தவர்கள் ஏழு ஆண்களும், மூன்று பெண்களும். எல்லோரும் உள்ளூரிலேயே வசதியாக வாழ்ந்தார்கள். என் அப்பாதான் உத்தியோக நிமித்தம் வெளியூர் சென்று ஊர் ஊராகச் சஞ்சரித்து அனுபவம் பெற்றார்.

அப்பா நல்ல உயரமும், மிடுக்கான தோற்றமும், எடுப்பான மீசையும் கொண்டு கம்பீரமாக இருந்தார். அவர் பார்த்த வேலை 'எக்ஸைஸ் சப் இன்ஸ்பெக்டர்' உத்தியோகம் தான். ஆயினும் ஊர்மக்கள் 'இன்ஸ்பெக்டர் பிள்ளை' என்று அவரிடம் பயமும், மதிப்பும் காட்டி வந்தார்கள். அப்பாவும் அதிகாரத் தோரணைகளோடு ஆக்கினைகள் செய்து வைத்தார். ஊரில் திருட்டு நடந்தால், வைக்கோல் படப்பில் தீ வைக்கப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் இன்ஸ்பெக்டர் பிள்ளையிடம் முறையிடத் தவறியதில்லை. அப்பாவும் அதிகாரத்தை உபயோகித்து, ஆட்களைப் பிடித்து வரச் செய்து, அடித்து உதைத்து உண்மை வெளிவரும்படி செய்து, சரியான குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவினார். அவருடைய அதிகாரம் உள்ளூரில் மட்டுமின்றி அவர் வேலை பார்த்த இதர ஊர்களிலும் அவருக்குச் செல்வாக்கும், சிறப்பும் பெற்றுத் தந்தது. பொதுவாக, எந்த சர்க்கார் அதிகாரிக்கும் மக்கள் வெகுவாகப் பயந்து கொண்டிருந்த காலம் அது.

அப்பா ஒட்டப்பிடாரத்தில் பணி புரிந்த காலத்தில் தான் எனக்கு முதன்முதலாக ராஜவல்லிபுரம் அறிமுகம் ஏற்பட்டது. அம்மாவும் சகோதரர்களும் நானும் ஊருக்கு வந்து சில மாதங்கள் தங்கினோம். பிறகு அப்பா விடுப்பு எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார். வீட்டில் மேலும் சில பகுதிகள் அதிகமாகக் கட்டப்பட்டன.

பெருங்குளம் ஊரில் வசித்த போதும், ராஜவல்லிபுரம் வந்து தங்கிச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அப்பாவுக்கு உத்தியோக ரீதியில் ஊர்மாற்றம் கிட்டியதும் சில மாதங்கள் ஊரில் தங்கும்படி எங்களைக் கொண்டு வந்து சேர்த்திருந்தார். அந்நாட்கள் ஊரில் மனோகரமாகக் கழிந்தன.

ராஜவல்லிபுரம் ஊருக்குத் தெற்கே ஒரு மைல் தள்ளி தாமிரவர்ணி ஆறு ஓடுகிறது. அதன் கரை மீது செப்பறை என்ற திருத்தலம் இருக்கிறது. நடராஜர் கோயில். செப்புச்சிலை மிக நேர்த்தியானது. 'காட்டுக் கோயில்' என்று பக்தர்கள் தினசரி அதிகம் வருவதில்லை. பனைமரங்களும், உடை கருவேல் போன்ற முள் மரங்களும் நிறைந்த சூழ்நிலை. தினம் காலையிலும்

அந்திநேரத்திலும் பூஜை செய்வதற்காகப் பட்டர்கள் ராஜவல்லிபுரத்தில் இருந்து வந்து செல்வார்கள். மார்கழி மாதம் திருவாதிரையின்போது தான் கூட்டம் கூடும். திருநெல்வேலி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வந்து குழுமுவார்கள்.

ஆறும் தனித்து, ஆள் நடமாட்டம் அதிகமின்றியே காட்சி தரும். அழகும், அமைதியும் நிறைந்த சூழல். அதனாலேயே எனக்கு மிகப் பிடித்த இடம் அது. பின்காலத்தில் ஆற்றில் நீராடிக் களிக்கும் இனிமையை அனுபவிப்பதற்காகவே நான் ஒவ்வொரு வருடமும் ராஜவல்லிபுரம் சேர்ந்து இரண்டு மூன்று மாதங்கள் தங்குவதை வழக்கமாக்கிக் கொண்டேன். எனவே, விக்கிரமாதித்த ராஜன் 'நாடாறு மாதம் காடாறு மாதம்' வாழ்ந்தது போல வல்லிக்கண்ணன் பட்டணத்தில் பல மாதங்களும் பட்டிக்காட்டில் சில மாதங்களும் வசிப்பதை வழக்கமாக்கியிருக்கிறார் என்று என்னை அறிந்தவர்கள் சொல்வது இயல்பாயிற்று.

1936இல் பள்ளிப்படிப்பை முடித்து விட்டு ஊர் சேர்ந்த சந்தர்ப்பத்தில்தான் நான் தொடர்ந்து இருபது மாதங்கள் ராஜல்லிபுரத்தில் வசிக்க நேர்ந்தது.

'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் ஊரும் ராஜவல்லிபுரம் தான். அவர் அந்த ஊரில் வசித்ததில்லை. அடிக்கடி அவர் அவ்வூருக்கு வந்ததும் இல்லை. ஆயினும் ஊர்வாசிகளுக்கு அவர் பெயரைச் சொல்வதில் தனிப்பெருமை இருந்தது. நான் ரா.பி. சேதுப்பிள்ளையை 1941இல் எனது 21ஆவது வயதில் தான் காண நேரிட்டது 'நெல்லை வாலிபர் சங்கம்' ஆண்டு விழாக் கூட்டத்தின் போது. அதற்கு முன்னர் அவர் எழுதிய புத்தகங்கள் சிலவற்றைப் படித்திருந்தேன்.

ராஜவல்லிபுரத்தில் அகிலாண்டம் என்ற பெயர் உடையவர்கள் அதிகம் உண்டு. அவ்வூர் சிவன் கோயிலின் அம்மன் பெயர் அது. சுவாமி பெயர் அக்கினீஸ்வரர். அகிலாண்டம் என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான பெயராக வழக்கத்தில் இருந்தது.

ஊருக்கு வடக்கே காளி அம்மன் கோயில் தனித்திருந்தது. சக்தி உள்ள தெய்வம் என்று மக்கள் நம்பி வழிபட்டு வந்தனர். வலதி அம்மன் என்பார்கள், வலபூதி அம்மன் என்று எழுத்தில் குறிக்கப்படுவது வழக்கம். தேவர், கோனார் மற்றும் உள்ள இனத்தினர் தங்கள் குடும்பத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் 'வலதி' என்று பெயரிட்டு மகிழ்ந்தார்கள்.

ஊரில் அதிக எண்ணிக்கையில் வசித்த கார்காத்த வேளாளர்களிடையே கோபால கிருஷ்ணன் என்ற பெயர் தலைமுறை தலைமுறையாக அதிகம் சூட்டப்பட்டு வந்தது. எனவே அங்கு கோபால கிருஷ்ணன்கள் அதிகம் காணப்பட்டார்கள். எனக்குக் கூட கோபாலகிருஷ்ணன் என்று தான் பெயர்

வைக்கப்பட்டிருந்தது. ஆனால் என்னைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தபோது என் அப்பா என் பெயரைக் கிருஷ்ணசுவாமி என்று பதிவு செய்தார்.

சைவ சமயத்தில் தீவிரமான பற்றுடைய கார்காத்த குலத்தைச் சேர்ந்தவர்கள் வைஷ்ணவப் பெயரை வைத்துக் கொள்வதில் ஏன் மோகம் கொண்டார்கள் என்று சில பேர் கேட்பது உண்டு. அதற்கு அடிப்படையாக சுவாரசியமான வரலாறு ஒன்று இருக்கிறது.

சுமார் இருநூறு-இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் கார்காத்த வேளாளரில் சில குடும்பத்தினர் வடக்கே பந்தல்குடி என்ற ஊரிலிருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கி வந்தார்கள். வழியில் ஒரு ஆற்றின் கரை மீது தோப்பில் தங்கினார்கள். காலை நேரம். எழு ஞாயிற்றின் பொன்கதிர்கள் பட்ட மாமரம் ஒன்றின் கிளையில் பளபள என்று ஒரு ஒளி தென்பட்டது. ஒருவர் கவனித்து நோக்கியதில் குரங்கு ஒன்று ஒரு செம்பை வைத்திருப்பது தெரிந்தது. அது தங்கம் போல் மிளிர்ந்தது. அவர் சிறு சிறு கற்களை எடுத்து, குரங்கின் மீது வீசினார். குரங்கு மிரட்சி அடைந்து செம்பைக் கீழே விட்டெறிந்து விட்டு, அடர்ந்த கிளைகளுக்குள் பதுங்கியது.

அவர் செம்பை எடுத்துப் பார்த்தார். பொன்முலாம் பூசப்பெற்ற அழகிய சிறு பாத்திரம். அதில் நேர்த்தியாகத் தெய்வ உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அது கோபால கிருஷ்ணன் திருஉருவம் என்று கண்டுகொண்டார் செம்பைக் கைப் பற்றியவர். அது புனிதமானது என்று அவர் மனசுக்குப்பட்டது. அதைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் ஏற்பட்டது.

அன்று இரவு உறங்கிய போது அவருக்கு ஒரு கனவு வந்தது. தவக்கோலம் பூண்ட ஒரு முனிவர் கனவில் தோன்றினார். 'உனக்குக் கிடைத்திருப்பது சும்மா பால் கறக்க உபயோகப்படுகிற சாதாரணச் செம்பு இல்லை. கோபாலகிருஷ்ணன் 'விக்ரகம்' மாதிரி அது. பூஜையில் வைத்து அதை நான் தினம் வழிபட்டு வந்தேன். நான் நீராடச் சென்றிருந்த போது குரங்கு வந்து அதை எடுத்துச் சென்றுவிட்டது. உன் புண்ணியத்தின் நற்பலனாக அது உன் கைக்கு வந்திருக்கிறது. நாள்தோறும் பக்தியோடு அதை வழிபட்டு வா. உனக்கு நல்லதே நிகழும். உன் குலம் தழைத்துச் செழிக்கும்' என்று கூறி ஆசி வழங்கிவிட்டு அவர் மறைந்தார்.

அது சொப்பனமாகத் தோன்றவில்லை செம்பை வைத்திருந்தவருக்கு. முனிவரே நேரில் நின்று அருளுரை புகன்றது போல்தான் இருந்தது அவருக்கு. உளப்பூர்வமாக அவர் நம்பினார். அப்போதிருந்தே பக்தியுடன் செம்பைக் கும்பிட்டுப் பூஜை பண்ணலானார்.

தெற்கே வந்தவர்களில் ஒரு குழுவினர் ராஜவல்லிபுரத்தில் வசிக்க முடிவு செய்தார்கள். அவர்களுக்குக் கோபாலகிருஷ்ணன் குலதெய்வம்

ஆனார். தெய்வ உருவம் பொறிக்கப்பட்ட செம்பு பயபக்தியுடன் வணங்குவதற்கு உரிய புனிதப் பொருள் ஆகிவிட்டது.

அவர்கள் வளம்பெற்று வாழலாயினர். அந்தச் செம்பு இன்னும் பூஜிக்கப்பட்டு வருகிறது. கோபாலசுவாமி என்று போற்றி வணங்கப்படுகிறது.

1936-1937 ஆம் வருடங்களில் நான் ராஜவல்லிபுரத்தில் தங்கியிருந்த காலத்தில் என் உறவினர் ஒருவர் பழைய பத்திரிகைகளும், புதிய புத்தகங்களும் கொண்டு வந்தார், நானும், என் அண்ணா கோமதிநாயகமும் படித்து மகிழ்வதற்காக. ராஜகோபாலகிருஷ்ணன் என்பது அவர் பெயர்.

4

பத்திரிகைகளுடன் எனக்கு அறிமுகம் சிறுவயதிலேயே ஆரம்பித்து விட்டது.

நான் நான்காம் வகுப்பு படிக்கும் போது, பரலி சு. நெல்லையப்பரின் லோகோபகாரி இதழை அறிய நேர்ந்தது. நாங்கள் வசித்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரருக்குத் தபாலில் லோகோபகாரி வந்து கொண்டிருந்தது. நெல்லையப்பர் அவருக்கு உறவினராக இருந்திருக்கலாம். அவர் சந்தா கட்டி பத்திரிகை வரவழைத்தார். அந்த இதழில் வந்த முக்கிய விஷயங்கள் பற்றி அவர் சொல்வது உண்டு. பரலி நெல்லையப்பர் நம்ம ஊர்க்காரர், நம்ம ஆளு என்றும் அவர் பெருமையாகச் சொல்வார்.

'நம்ம ஊரு, நம்ம ஆளு' என்ற பற்றுதலுடன், 'ஒற்றுமை' என்ற மாத இதழை எதிர்வீட்டுக்காரர் ஒருவர் பரப்பிக் கொண்டிருந்தார். வீரபாகு பிள்ளை என்பவர் சென்னை தியாகராயநகரில் இருந்து வெளியிட்டு வந்த இதழ் அது. புத்தக வடிவத்தில், படங்களோடிருந்த, பல்சுவை ஏடு. அதில் ரா.பி. சேதுப்பிள்ளை கட்டுரைகளும் பிரசுரம் பெற்றன.

நாங்கள் பாளையங்கோட்டையில் வசிக்க ஆரம்பித்த போது, 'தமிழ்நாடு' நாளிதழை அப்பா வாங்கலானார். அதற்கு முன்னரும் அந்தப் பத்திரிகை வீட்டில் வாங்கப்பட்டிருந்திருக்கலாம். அது என் நினைவில் பதியவில்லை. நான் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது தான் 'தமிழ்நாடு' என் கவனத்தில் பதிவாயிற்று, சில நாட்களில் என் அண்ணா கோமதிநாயகம், அப்பாவுக்காகச், செய்திகளை உரக்க வாசிப்பது உண்டு. செய்தித் தலைப்புகளும், விளம்பரங்களில் காணப்பட்ட படங்களும் என் கவனத்தை ஈர்த்தன. சேலம் வரதராஜநாயுடு நடத்திய பத்திரிகை அது.

1930களில் விறுவிறுப்பும், வேகமும் நிறைந்த எழுத்துக்களைக் கொண்ட பத்திரிகைகள் தோன்றலாயின. அவை குறைந்த விலையில் விற்கப்பட்டன. இந்திய விடுதலைப் போர் முக்கியமான ஒரு கட்டத்தை அடைந்திருந்த காலம் அது. நாட்டு மக்களுக்குத் தேசபக்தி ஊட்டவும், சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளை எடுத்துச் சொல்லவும், தலைவர்களின் வீரப் பேச்சுகளை எங்கும் பரப்பவும் இந்தியா நெடுகிலும் பல்வேறு மொழிகளிலும் பத்திரிகைகள் தோன்றி வளர்ந்தன.

தமிழிலும் 'சுதந்திரச் சங்கு', 'காந்தி', 'மணிக்கொடி', 'ஜெயபாரதி' என்று பல பத்திரிகைகள் வரலாயின. அவை காலணா, அரை அணா விலையில் விற்கப்பட்டன.

'சுதந்திரச் சங்கு' உணர்ச்சி செறிந்த வேகமான நடையில் விஷயங்களை எடுத்துக் கூறியது. மாணவர்கள் பலர் சங்குவை வாங்கிப் படிப்பதில் மகிழ்ச்சி அடைந்தார்கள். என் சகோதரர்களும் அவ் இதழை வாங்கினார்கள். சங்கு சுப்பிரமணியன் இதழாசிரியர். டி.எஸ். சொக்கலிங்கம் 'காந்தி' இதழை நடத்தினார். இரண்டையும் நாங்கள் விரும்பிப் படித்தோம். 'ஜெயபாரதி'யைச் சில சமயம் வாங்குவது உண்டு. 'மணிக்கொடி' வார இதழை அந்நாட்களில் நான் அறிந்ததில்லை. அதன் தனிச் சிறப்பைப் பிற்காலத்தில்தான் நான் தெரிந்து கொள்ள முடிந்தது.

நாங்கள் வீட்டிலிருந்து பள்ளிக் கூடத்துக்கு ஒரு மைலுக்கும் அதிகமான தூரம் நடந்து போய் வந்து கொண்டிருந்தோம். காலையில் 9 மணிக்கு புறப்பட்டுப் போவோம். மத்தியானம் உணவுக்கு வீட்டுக்கு வந்துவிட்டு, 1-30 மணிக்கு மீண்டும் செல்வோம். பிறகு மாலை வேளையில் பள்ளி முடிந்து திரும்பி வருவோம். பல பையன்களாகச் சேர்ந்து பேசிக் கொண்டு போய் வருவதால் எங்களுக்குத் தூரம் ஒரு பொருட்டாக இருந்ததில்லை. எங்கள் வீட்டுக்கு அப்பால் சற்றுத் தொலைவில் உள்ள தெருக்களிலிருந்தும் பையன்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்ட பயணத்தின்போது முக்கிய கடைவீதி வழியே போக வேண்டிய அவசியம் இருந்தது. துணிக்கடை மறியல், அந்நியத் துணி எரிப்பு என்று 'சத்தியாக்கிரகப் போராட்ட'த்தில் காங்கிரஸ் தொண்டர்கள் ஈடுபட்டிருந்த காலத்தில், கடைகள்முன் அவர்கள் மறியல் செய்வதும், போலீசார் வந்து அவர்களைப் பிடித்துச் செல்வதும் எங்கள் கவனத்தைக் கவரும்.

கோபாலசுவாமி கோவில் முன்புறத்தில் உள்ள திறந்தவெளியில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். சத்தியமூர்த்தி, சோமயாஜலு, திரிகூடசுந்தரம் பிள்ளை போன்ற தலைவர்கள் பேசுவார்கள். அக் கூட்டங்களை வேடிக்கை பார்க்கப் போய், தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதில் நான் ஈடுபாடு கொண்டதும் உண்டு.

ஊர்வலங்களிலும், கூட்டங்கள் ஆரம்பத்திலும் பாரதியார் பாடல்களை உணர்ச்சிகரமாகப் பாடுவார்கள் தொண்டர்கள். பத்திரிகைகளும், பாரதி பாடல்களை அச்சிட்டு வந்தன. இந்த விதமாக, பாரதி பாடல்களில் எனக்கு ஈர்ப்பு ஏற்பட்டது.

நாட்டுப் பற்று உண்டாக்குவதற்காகத் தேசீயத் தலைவர்கள் வரலாறு, போராட்ட வீரர்கள் சரிதை முதலியவற்றைச் சிறு சிறு வெளியீடுகளாக அச்சிட்டு ஓரணா விலையில் விற்றார்கள். பெரும்பாலானவை எம்.எஸ். சுப்பிரமணிய ஐயரால் எழுதப்பட்டவை. உணர்ச்சி செறிந்த நடையில், விறு விறுப்பான முறையில் அவற்றை அவர் எழுதினார். மாணவர்களிடையே அவற்றுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

இவற்றால் எல்லாம் உந்தப்பெற்று, சில மாணவர்கள் போராட்டத்தில் குதித்து விடுவதும் நடந்தது. என் அண்ணனுடன் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன்-நடராஜன் என்று பெயர்-திடீரென்று ஒருநாள் காணாமல் போனான். மூன்று நாள்களுக்குப் பிறகு வந்து சேர்ந்தான். தன் அனுபவங்களைக் கதை போல் சொன்னான்.

துணிக்கடை மறியலைக் கண்டு கண்டு உணர்ச்சி பெற்ற அவன் நாமும் ஏன் மறியலில் ஈடுபடக் கூடாது என்று எண்ணினான். வேகத்தோடு இறங்கிவிட்டான். தொண்டர் குழுவில் சேர்ந்து அவனும் மறியல் செய்தான். போலீஸார் எல்லோரையும் பிடித்து லாரியில் ஏற்றிச் சென்றார்கள். வெகு தூரம் எடுத்துச் சென்று எங்கோ ஒரு காட்டுப் பிரதேசத்தில் தொண்டர்களை இறக்கி விட்டுவிட்டார்கள். அவர்களுக்குத் தடிஅடியும் கிடைத்தது. அப்படி விடப்பட்ட தொண்டர்கள் பசியோடு, பட்டினி கிடந்து நடந்து நடந்து ஊர் வந்து சேர்ந்தார்கள். நடராஜனும் அவ்வாறே வந்தான். தன் உடம்பில் பட்ட காயங்களைக் காட்டினான்.

இத்தகைய நிகழ்வுகள் என் உள்ளத்தில் நன்கு பதிவாகின. பிற்காலத்தில், இந்திய விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 'வீடும் வெளியும்' என்ற நாவலை நான் எழுதுவதற்கு இவை பெரிதும் பயன்பட்டன.

பக்கத்து வீட்டில் வசித்த ரங்கூன் பிள்ளை என்பவர் 'ஆனந்த விகடன்' இதழ்களை ஆரம்பம் முதல் வருடவாரியாகப் 'பைண்ட்' செய்து வைத்திருந்தார். அவற்றை எங்களுக்குப் படிக்கத் தந்தார். தொடர்ந்து வந்த புதிய இதழ்களை என் அண்ணனின் சக மாணவன் ஒருவன் தந்து உதவினான்.

படிப்பதற்குக் கதைப் புத்தகங்களும் பள்ளி நாட்களிலேயே கிடைத்தன. அந்நாட்களில் வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், வை.மு. கோதைநாயகி அம்மாள், ஜே.ஆர். ரங்கராஜு ஆகியோரின் நாவல்கள் வாசகர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தன. நகரங்களிலும், கிராமங்களிலும் இருந்த படித்தவர்கள் இந்நாவல்களை விரும்பி வாசித்தார்கள்.

நான் எட்டாவது வகுப்பு படித்து வந்த நாளிலிருந்தே எனக்கும் இந் நாவல்களை வாசிக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. என் அண்ணன்களின் நண்பர்கள் பெரியவர்கள், என் பெரிய அண்ணா கல்யாணசுந்தரம் எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டு வீட்டில் இருந்தார். உயர்நிலை வகுப்பு மாணவர்கள் சிலர்-நாங்கள் வசித்த தெருவிலும், பக்கத்துத் தெருக்களிலும் இருந்தவர்கள்,-அண்ணாவின் நண்பர்கள். அவர்கள் உற்சாகமானவர்கள். உல்லாசமாய்ப் பொழுது போக்குவதில் ஆர்வம் உடையவர்கள். சீட்டாடுவது, வம்புப் பேச்சு பேசுவது போன்ற பொழுது போக்குகளுடன் நாவல்கள் படிப்பதிலும் அவர்கள் நாட்டம் கொண்டிருந்தார்கள்.

முனிசிபல் ஆபீசில் வேலை பார்த்த ஒருவரும் அந்நண்பர் குழாமில் இருந்தார். பாளையங்கோட்டை முனிசிபல் ஆபீஸ் லைபிரரியில் நிறையப் புத்தகங்கள் இருந்தன. அவர் அங்கிருந்து நாவல்களை எடுத்து வந்தார். அதிகப் புத்தகங்கள் படிக்க வேண்டும், சீக்கிரமாக ஒவ்வொரு நாவலையும் முடித்துவிட வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

அதனால் ராத்திரி நேரத்திலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், அவர்கள் கூடியிருந்து நாவல் படிப்பார்கள். சீக்கிரம் படித்து முடிக்க வேண்டும் என்பதற்காக, ஒருவர் உட்கார்ந்து நாவலை உரக்கப் படிப்பார். மற்றவர்கள் சுவரில் சாய்ந்து கொண்டும், படுத்தவாறும் நாவலைக் கேட்டு ரசிப்பார்கள். சற்று நேரம் சென்றதும், இன்னொருவர் வாசிப்பார். இப்படி முறை வைத்துப் படித்தும் புத்தகத்தை முடித்து விடுவார்கள். நானும் அவர்கள் படித்தபோது கேட்டு ரசிக்க முடிந்தது. அவர்கள் படிக்காத பொழுதுகளில் புத்தகம் சும்மா கிடக்கும். அதை எடுத்துப் படிக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

நாவல் படிக்கிற விஷயத்தில் சுவாரசியமான சங்கதி ஒன்றும் உண்டு. இரவு நேரங்களில் படிக்க விளக்கு வேண்டும். அதற்கு அதிகப்படி மண்ணெண்ணெய் தேவைப்படுமே. அதனால் குற்றாலம் என்கிற மாணவர் ஒரு வழி கண்டுபிடித்தார். இவர் 'ஜாலி பிரதர்'. இவரை மற்றவர்கள் குற்றாலம் பிள்ளை என்று தான் அழைத்தார்கள்.

அந்நாட்களில் தெருக்களில் முனிசிபல் லாந்தர்கள் விடிய விடிய எரியும். கல் தூண் மீது, சதுரமாய்க் கண்ணாடிச் சுவர்கள் கொண்ட கூண்டினுள் விளக்கு இருக்கும். முனிசிபாலிட்டி ஆள் காலையில் வந்து விளக்குகளை எடுத்துப் போவான். ஆபீசில் அவை துடைக்கப்பெற்று, தேவையான அளவு மண்ணெண்ணெய் நிரப்பப்படும். மாலையில் ஒரு ஆள் விளக்குகளைச் கொண்டு வந்து, ஒவ்வொரு கம்பத்தின் மீதுள்ள கூண்டுக்குள் வைத்து விளக்கை ஏற்றிவிட்டுப் போவான்.

இரவு ஒன்பது மணிக்கெல்லாம் தெருக்களில் ஆள் நடமாட்டம் இராது. குற்றாலம் தெருவிளக்கை வீட்டுக்கு எடுத்து வந்து விடுவார். அதன் வெளிச்சத்தில் நண்பர்கள் நாவல் படிப்பார்கள். படிப்பு முடிந்ததும் விளக்கை உரிய இடத்தில் கொண்டு போய் வைத்து விடுவார்கள்.

'நீதிபதியாகப் பதவி வகித்த முத்துசாமி ஐயர் மாணவப் பருவத்தில், வறுமை காரணமாக, தெரு விளக்கின் கீழ் அமர்ந்து பள்ளிப் பாடங்களைப் படிப்பது வழக்கம். அப்படிப் படித்து அவர் உயர்நிலை அடைந்தார் என்று நாம் படித்திருக்கிறோம் அல்லவா? நாமும் தெருவிளக்கில் படிக்கிறோம், நாமும் உயர்ந்தவர்களாவோம். ஐயர் தெருவில் விளக்குக் கம்பத்தின் கீழே இருந்து படித்தார். நாம் தெருவிளக்கை வீட்டில் வைத்துக் கொண்டு படிக்கிறோம். அவ்வளவு தான் வித்தியாசம்!' என்று குற்றாலம் பிள்ளை விரிவுரை ஆற்றுவார்.

எல்லோரும் எப்போதும் எங்கள் வீட்டில் தான் கூடிப் பொழுது போக்குவார்கள். நாங்கள் வசித்த வீட்டின் மாடி பெரிதாய், விசாலமானதாக இருந்தது அவர்களுக்கு வசதியாயிற்று.

இரண்டு வருடங்களில் ஏகப்பட்ட நாவல்களை இவ்வாறு படித்து முடிப்பது சாத்தியமாயிற்று. பிறகு ராஜவல்லிபுரத்தில் வசிக்க வந்தபோதும் பல நாவல்கள் கிடைத்தன.

ராஜகோபாலகிருஷ்ண பிள்ளையின் அண்ணாச்சி ஆறுமுகம் பிள்ளையும் படிப்பில் ஆர்வம் கொண்டிருந்தார். பலவகையான நாவல்களும், பத்திரிகைகளும் வாங்கிப்படித்தார்.

அவரிடம் விசித்திரமான பழக்கம் ஒன்று இருந்தது. ஒரு புத்தகம் அல்லது பத்திரிகையைப் படித்து முடித்ததும், முற்றிற்று என்று கடைசிப் பக்கத்தில் மையினால் எழுதிக் கையெழுத்திட்டு வைப்பார். இப்படிச் செய்யாவிட்டால், பின்னொரு நாளில் இந்தப் புத்தகத்தைப் படித்தோமா இல்லையா? என்ற சந்தேகம் வந்து விடும்; படித்ததையே திரும்பவும் படிக்க நேர்ந்து விடும். அதைத் தவிர்க்கத்தான் இம்முறை என்று அவர் விளக்கம் தருவார்.

ஜே.ஆர். ரங்கராஜு எழுதிய 'ராஜாம்பாள்' 'மோகனசுந்தரம்' மற்றும் எஸ்.எஸ். அருணகிரிநாதர் நாவல்கள், தனசிங் என்பவர் எழுதிய 'கருங்குயில் குன்றத்துக் கொலை'. மற்றும் 'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வசிந்தாமணி' முதலிய நாவல்கள் அவர் மூலம் படிக்கக் கிடைத்தன.

அவர் 'பிரசண்ட விகடன்' மாதம் இருமுறை இதழையும் வாங்கி வாசித்தார். அதில் நாரணதுரைக்கண்ணன், 'ஜீவா' என்ற பெயரில் எழுதிய

தொடர்கதைகள் 'யான் ஏன் பெண்ணாய் பிறந்தேன்'? 'இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்', 'சீமாட்டி கார்த்தியாயினி' முதலியன வாசகர்களை அதிகம் ஈர்த்தன.

பள்ளிப் படிப்புக் காலத்தில் ஆங்கிலப் பத்திரிகைகளும் படிப்பதற்கும் கிடைத்தன. விநாயகம் என்பவர் ஆசிரியராக இருந்து நடத்திய 'மை மேகசின்' சிறந்து விளங்கியது. அதில் நல்ல கதைகள், கட்டுரைகள், நகைச்சுவை விஷயங்கள் சுவாரசியமாக வந்தன. அவற்றுடன் சுவாமி சிவானந்தா எழுதிய ஆன்மீகச் சிந்தனைகள் (ஸ்பிரிச்சுவல் லெஸன்ஸ்) முக்கியத்துவம் பெற்றிருந்தன.

'மை மேகசின்' வெற்றிகரமாக நடப்பதைப் பார்த்து, 'ஆனந்த விகடன்', எஸ்.எஸ். வாசன் 'மெரிமேகசின்' என்றொரு இதழை ஆரம்பித்து நடத்தினார். அச்சு அமைப்பிலும் கதைகளுக்கான சித்திரங்களிலும் இது எடுப்பாகத் திகழ்ந்தது. புகழ் பெற்ற நகைச்சுவை எழுத்தாளர் எஸ்.வி. வி. இதில் தொடர்ந்து எழுதினார். 'பாலா தி பேட் உமன்',' தேவி தி டான்ஸர்' Bala The Bad Woman. Devi The Dancer என்ற தொடர்கதைகள் கவர்ச்சிகரமான படங்களுடன் பிரசுரம் பெற்றன.

ஆனாலும், 'மெரி மேகசின்' ரொம்ப காலம் நடை பெறவில்லை. 'மை மேகசின்' நீண்டகாலம் வாழ்ந்தது.

ஆங்கில நூல்களும் எனக்குப் படிக்கக் கிடைத்து வந்தன. ஐந்தாம் வகுப்பு முதல், அநேக வருடங்கள், 'நன்மாணாக்கன்' என்பதற்கான பரிசு எனக்கு அளிக்கப்பட்டது. எட்டாம் வகுப்பிலிருந்து தமிழ்ப் பாடத்துக்கான முதல் பரிசை நான் பெற்று வந்தேன். சில வருடங்களில் ஆங்கிலத்துக்கான பரிசும் பெற்றேன். அனைத்துப் பரிசுகளும் நல்ல நல்ல புத்தகங்களாகவே வழங்கப்பட்டன. பள்ளி நூலகத்திலிருந்தும் வாரம் தோறும் தவறாது புத்தகம் எடுத்துப் படித்துக் கொண்டிருந்தேன். எக்காலத்திலும் புத்தகங்கள் படிப்பதில் தணியாத ஆர்வம் உடையவனாகவே இருந்தேன்.

5

கால ஓட்டத்தினூடே எங்கும் மாறுதல்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. தனி நபர்களின் வாழ்விலும் சமூகம், ஊர், நாடு முதலியவற்றிலும் பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தவாறு இருக்கின்றன. சில மெதுமெதுவாகவும், அநேகம் வேகமாகவும் ஏற்படுகின்றன.

விடுதலைப் போராட்ட இயக்கங்கள் விளைவித்து வந்த மாறுதல்களோடு இதர பல மாறுதல்களும் புதுமைகளும் தோன்றிக் கொண்டிருந்தன. நான். பள்ளியில் படித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில்; 1930 களில். பாளையங்கோட்டை, திருநெல்வேலிக்கு அப்போது தான்

மின்விளக்குகள் வந்தன. 'திருநெல்வேலி தூத்துக்குடி எலெக்ட்ரிக் சப்ளையிங் கார்ப்பொரேஷன்' எனும் தனியார் நிறுவனம் அப்பணியை ஏற்றுச் செயல்புரிந்தது. தெருக்கள்தோறும் நின்ற கல்தூண் விளக்குகள் போய், மின்விளக்குக் கம்பங்கள் காட்சி அளித்தன. கடைகள், வசதியுள்ளவர் வீடுகளில் மின் விளக்குகள் ஒளிவீசத் தொடங்கின.

நான் எப்பவும் போல் குத்துவிளக்கு, அரிக்கன் லாந்தர் ஒளியில்தான் படித்துக் கொண்டிருந்தேன் வெகுகாலம் வரை.

அந் நாட்களில் ஆண்களும், தலைமுடியை நீளமாக வளர்ப்பது இயல்பாக இருந்தது. பெரியவர்களும், பையன்களும் குஞ்சி அழகுடன் காட்சி அளித்தார்கள். பெரியவர்கள் கொண்டை முடிந்து கொள்வதும், சிறுவர்களுக்குத் தாய்மார்கள் தலை சீவிப் பின்னிவிடுவதும் சகஜமாக விளங்கியது. புனித சவேரியார் உயர்நிலைப் பள்ளியில் கிறிஸ்தவர் அல்லாத ஆசிரியர்கள் பெரும்பான்மையினர் நீண்ட தலைமுடியைக் கொண்டை போட்டுக் கொண்டு வந்தார்கள். 1932க்குப் பிறகு ஒவ்வொருவராக, தலைமுடியை வெட்டி 'க்ராப்' வைக்கலானார்கள். முதலில் ஒரு ஆசிரியர் துணிந்து வழி காட்டினார். அதன்பிறகு ஒவ்வொருவராக க்ராப் தலையினராக மாறினார்கள். 1936இல் குடுமி வைத்த ஆசிரியர் எவருமிலர் என்ற நிலை வந்தது.

நானும் எட்டாம் வகுப்பு வரை நீண்ட தலைமுடியுடன்தான் காணப்பட்டேன். எட்டாம் வகுப்பு இறுதியில் -1933இல் என் தலைமுடியும் குறுகத்தறிக்கப்பட்டது.

அக்காலத்தில் நாடகம் தான் முக்கியத்துவம் பெற்றிருந்தது. திருநெல்வேலியில் இரண்டு நாடக அரங்குகள் இருந்தன. அடிக்கடி நாடகக் கம்பெனிகள் அங்கு முகாமிட்டு நாடகங்கள் நடத்துவது வழக்கம். அனைத்து நாடகக் குழுக்களும் நீளம் நீளமான பெயரை வைத்துக் கொள்வதோடு முன்னால் 'மதுரை' என்று இணைத்துக் கொள்வதும் ஒரு மரபாக இருந்தது. மதுரை மீனலோசனி தத்துவ வித்தக சங்கீத நாடக சபை, மதுரை ஸ்ரீ தேவி பால வினோத சங்கீத நாடக சபை என்பது போல.

அந்நாட்களில் தமிழ்நாட்டில் கன்னையா கம்பெனி என்று பெயர் பெற்றிருந்த நாடக சபை கீர்த்தி வாய்ந்து விளங்கியது. கம்பெனி உரிமையாளர் கன்னையா பக்திமான். தெய்வபக்தி நிறைந்த நாடகங்களையே நடத்தினார். பெரிய நாடகங்கள், வசீகரிக்கும் காட்சி ஜோடனைகள், திடீர் திடீரென மாறும் காட்சி அமைப்புகள் (டர்னிங் ஸீன்ஸ்), மின்னொளி விந்தைகள் எல்லாம் அவர் நாடகங்களில் இடம் பெறும். ஒரு புதிய நாடகத்தை மேடை ஏற்றினால், சென்னையில் அதைப் பல மாதங்கள் நடத்திக் காட்டிய பிறகு, கன்னையா கம்பெனி தமிழ்நாடு நெடுகிலும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும். ஒவ்வொரு

முக்கிய நகரத்திலும் நாடகங்கள் நடத்தி விட்டு, கடைசியாகத் திருநெல்வேலிக்கு வந்து சேரும். மாதக்கணக்கில் நாடகங்கள் நடித்துக் காட்டப்படும். திருநெல்வேலி, பாளையங்கோட்டை மற்றும் அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்தெல்லாம் நாடக அபிமானிகள் வந்து குழுமுவர்.

கன்னையா சொந்தமாக ஜெனரேட்டர் வைத்து, தனக்குத் தேவையான மின்சத்தியைப் பெற்று மின்விளக்கு அலங்காரங்களும் காட்சி அலங்கரிப்புகளும் செய்து மக்களின் கவனத்தைக் கவர்ந்து பாராட்டுதல்கள் பெற்றார். மேடையில் அற்புதங்களும் மாயாஜாலங்களும் செய்து காட்டுவதில் திறமைசாலியாக இருந்தார் அவர். 'தசாவதாரம்' நாடகத்தில் வைகுண்டம் சீன் மிகப் பிரசித்தி பெற்றது.

கோயில் கதவுகள் போன்று இரண்டு நெடிய பெரிய கதவுகள் காட்சி தரும். அவற்றின் சதுரம் சதுரமான கட்ட அமைப்புகளில், மின்விளக்குகள் பதிக்கப்பட்டிருக்கும். கதவுகள் பொன்வர்ணம் பூசப்பட்டு மினுமினுப்பாக விளங்கும். திடீரென ஒரு வெடி ஓசை எழும். கதவுகளில் உள்ள எண்ணற்ற மணிகள் ஒலி எழுப்ப, விளக்குகள் பிரகாசிக்க, இரு பெரும் கதவுகளும் விரிந்து திறக்க, உள்ளே பாம்பணையில் பள்ளி கொண்ட விஷ்ணு வர்ண விளக்குகளின் பேரொளியில் தகத்தகாயமாகக் காட்சி அளிப்பார். நாடக ரசிகர்களிடையே பக்திப் பரவசம் ஏற்படவே செய்யும்.

கன்னையா 'பகவத் கீதை' நாடகத்தை மேடை ஏற்றிய போது மேடை மீது ரதங்களை அணிவகுத்து நிற்கச் செய்தார். எடுப்பான ஒரு ரதத்தில் அர்ஜுனனும் சாரதியாகக் கண்ணனும் வீற்றிருந்து உரையாடுவார்கள்.

இப்படிப் பெரும் அளவில் காட்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்தார் கன்னையா. அவருக்குப் பின்வந்த நாடகக்கலைஞர்களும் அவ் உத்திகளைத் தங்களால் இயன்ற அளவுக்குக் கையாள்வதும் நடைமுறை ஆயிற்று.

பாளையங்கோட்டைக்கு மூன்று நான்கு வருடங்களுக்கு ஒரு முறை சர்க்கஸ் கம்பெனி வந்து 'டேரா போடும்'. 1930 களில் 'டேவாள் சர்க்கஸ்' 'ஓயிட்வே சர்க்கஸ்' என்று இரண்டு கம்பெனிகள் வெவ்வேறு வருடங்களில் வந்தன. அதிகமான மிருகங்களைக் கொண்டிருந்தன அவை. சிறந்த முறையில் வித்தைகள் காட்டிப் பெயர் பெற்றன. கால ஓட்டத்தில் அவை தாக்குப் பிடிக்க முடியாமல் கலைந்து போயின.

பஸ் போக்குவரத்து, நகரங்களுக்கிடையே மட்டும் தான் நிகழ்ந்து வந்தது. திருநெல்வேலி, பாளையங்கோட்டைக்கு இடையே இரண்டே இரண்டு பஸ்கள் தான் போய் வந்துகொண்டிருந்தன அந்நாட்களில்.

விமானப் போக்குவரத்து நாட்டிலேயே மிக அபூர்வமாகத்தான் இருந்தது. தெற்கத்தி ஊர்களில் வானத்தில் விமானம் பறந்து போவதைக்

காணவே முடியாத காலம் அது. அந்நிலையில்-1932இல் பாளையங்கோட்டைக்கு ஆகாய விமானம் ஒன்று வந்தது. பழங்கால மாடல் விமானம். நகரத்துக்குக் கிழக்கே இருந்த ஹைகிரவுண்ட் எனப் பெயர் பெற்ற திறந்த வெளி மேட்டு நிலத்தில் வந்து நின்றது அது. அதைக் கண்டு களிப்பதற்காக மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். தேர்த் திருவிழா பார்க்கப் போவது போல் அண்டை அயல் கிராமங்களில் இருந்தெல்லாம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் திரண்டு வந்து வேடிக்கை பார்த்தார்கள்.

கூடுகின்ற கூட்டத்தைப் பார்த்து சம்பந்தப்பட்டவர்கள் காசு வசூலிப்பதில் கருத்தாகிவிட்டார்கள். விமானம் நின்ற இடத்தில் ஒரு சதுரத்துக்குக் கம்பி வேலி அமைத்தார்கள். கூட்டம் வெளியே நின்று பார்க்கலாம். உள்ளே போய், விமானத்தை மிக அருகில் நின்றும், தொட்டும் பார்ப்பதற்கு ஒரு ரூபாய் கட்டணம் தர வேண்டும் என்று வசூலித்தார்கள். ஐந்து ரூபாய் கொடுத்தால், விமானத்தில் உள்ளே ஏறிப் பார்த்து, உட்கார்ந்து ரசிக்கலாம். பத்து ரூபாய் கட்டணம் செலுத்துகிறவர்கள் விமான சவாரி செய்யலாம். பாளையங்கோட்டை ஹைகிரவுண்டிலிருந்து மேற்கே பேட்டை வரை வானில் பறந்து திரும்பலாம். ஆண்களும், பெண்களுமாக அதிகம் பேர் அப்படி அனுபவித்து மகிழ்வதில் ஆர்வம் காட்டினார்கள். அந்த விமானம் ஒரு வார காலம் அங்கே தங்கியிருந்தது. ஊர் மக்களுக்கு நல்ல பொழுது போக்காகவும், விமானக்காரனுக்குக் கணிசமான பண வருவாய் பெற்றுத் தருவதாகவும் அது அமைந்தது.

அக் காலத்தில் ரேடியோ வந்திருக்கவில்லை. எங்கும் கிராமபோன்தான் ஆட்சி புரிந்தது. ஆரம்ப காலத்தில் அது 'போனகிராப்' எனப் பெயர் பெற்றிருந்தது. கிராமங்களில் மக்கள் 'பூனக்கிராப் பெட்டி' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஊமத்தம்பூ வடிவப் பெரியகுழாய் பொருத்தப்பெற்ற கிராமபோன் பெட்டிகள் அந்தஸ்தின் சின்னமாக விளங்கிக் கொண்டிருந்த காலம். நவயுக மாடல் பெட்டிகள் பின்னர் தான் வந்தன.

பாளையங்கோட்டை தெற்கு பஜாரில் கிராமபோன் விற்பனைக் கடை ஒன்று இருந்தது. அங்கு எப்போதும் இசைத் தட்டுகளைப் பாட விட்டு விளம்பரப்படுத்துவது வழக்கம். நாங்கள் பள்ளிக்கூடம் போகிற போதும் வருகிற போதும் சற்று நின்று பாட்டு கேட்பது உண்டு.

சினிமா அக்காலத்தில்தான் பரவத் தொடங்கியது. திருநெல்வேலியில் முதன்முதலில் ஒரு ரைஸ்மில் கட்டிடம் சினிமா தியேட்டராக மாற்றி அமைக்கப்பட்டது. அங்குப் 'பேசாப் படங்கள்' காட்டப் பெற்றன.

மக்கள் மத்தியில் 'ஊமைப் படங்கள்' என்று அவை குறிப்பிடப்பட்டன. இங்கிலீஷ் படங்களும், பின்னர் இந்திப் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. பார்க்கிறவர்களுக்குப் படம் புரிய வேண்டும் என்பதற்காக, கதையையும்

உரையாடலையும் உரத்த குரலில் தமிழில் ஒரு ஆள் விளக்கிக் கூறிக் கொண்டிருப்பார். அப்படிக் கதை சொல்கிறவர் அவர் இஷ்டத்துக்கு 'அடித்து விளாசி' மக்களை ரசிக்க வைப்பார். பேசும் படங்களும் தமிழ்ப் படங்களும் வரத் தொடங்கியதும் விவரித்துச் சொல்லும் 'கதைசொல்லி' காணாமல் போனார்.

6

எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோதே. நானும் கதைகள் எழுத வேண்டும் என்ற நினைப்பு என்னுள் கிளர்ந்தெழுந்தது. ஆயினும் பள்ளிப் பருவத்தில் நான் எழுதத் தொடங்கவில்லை. படித்த புத்தகங்களும் பத்திரிகைகளும் அந்த எண்ணத்தைத் தூண்டி வளர்த்துவந்தன.

பள்ளிப்படிப்பை முடித்து விட்டு ராஜவல்லிபுரம் சேர்ந்த பிறகும் அண்ணாவின் நண்பனிடமிருந்து ஆனந்த விகடன், மைமேகலின் இதழ்களை இரவல் வாங்கி வாசித்து வந்தோம். அவற்றைப் பெறுவதற்கென்றே பத்து நாட்களுக்கு ஒரு முறை பாளையங்கோட்டைக்குச் சென்று வந்தோம். போக நான்கு மைல்கள், வர நான்கு மைல்கள், ஆக எட்டு மைல்கள் நடை. அது சிரமமாகத் தோன்றியதில்லை. இனிய பொழுதுபோக்காகவே அமைந்திருந்தது.

சிறிது காலத்தில் நண்பன் வீட்டில் தகராறுகளும், இடைஞ்சல்களும் ஏற்பட்டதால், எங்களுக்குப் பத்திரிகைகள் தர அவன் தயங்கினான். அவன் நிலைமையைப் புரிந்துகொண்டு அப்புறம் நாங்கள் அவன் வீட்டுக்குப் போகவில்லை. நாமே விகடன் வாங்கலாம் என்று தீர்மானித்தோம். அதற்காக வாரம்தோறும் சனிக்கிழமை பிற்பகலில் திருநெல்வேலி ஜங்ஷன் போய் வந்தோம்.

ஆற்றங்கரைப் பாதை. மூன்று மைல் தூரம். போக வர ஆறு மைல்கள். சனிக்கிழமை பிற்பகல் ஒன்றரை மணி சுமாருக்கு ரயிலில் ஏஜண்டுக்கு விகடன் பார்சல் வந்து சேரும். இரண்டு மணி வாக்கில் அவர் கடையில் விகடன் இதழ் வாங்கிக் கொண்டு, மெதுவாக நடந்து வந்து, செப்பறை ஆற்றை (ராஜவல்லிபுரம் ஊரை அடுத்துள்ள பகுதி) அடைந்ததும் புல்தரையில் அமர்ந்து முக்கிய விஷயங்களைப் படித்து மகிழ்வோம்.

அந்நாட்களில் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தியின் சிறப்பான சிறுகதைகள் விகடனில் வெளிவந்து கொண்டிருந்தன. மயிலைக் காளை, பவானி பி.ஏ.பி.எல், திருவழுந்தூர் சிவக்கொழுந்து போன்ற சுவாரசியமான கதைகள். 'கள்வனின் காதலி' தொடர் கதை வந்தது. மற்றும் சிலர் எழுதிய நல்ல கதைகளும் இருக்கும். பி.ஸ்ரீ. 'கம்ப சித்திரங்கள்' என்ற தலைப்பில், கம்பராமாயணம் பற்றிய கட்டுரைகளை இலக்கிய நயத்தோடு எழுதி வந்தார் வருடக்கணக்கில். சேகர் Fu\ J® V¬u £j§WeLs @ ZÏ úNojR] . (இராமாயணக்

கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்ததால், 'கம்ப சித்திரங்கள்' முடிவு பெற்ற சிறிது காலத்திலேயே பி.ஸ்ரீ. 'சித்திர ராமாயணம்' என்ற தலைப்பில் 'ராமாயணக் காட்சிகளை விரிவாக எழுதலானார். அவற்றுக்கு, 'சித்ரலேகா' என்ற ஓவியர் தனிரகமான சித்திரங்கள் வரைந்து வந்தார்.) விகடன் அட்டையைப், பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்களுக்கு வசீகரமான ஓவியங்களாகத் தீட்டப்பெற்ற வர்ணப்படங்கள் அலங்கரித்தன. பி.ஸ்ரீ .நயமான சித்திர விளக்கக் கட்டுரைகள் எழுதினார். இவை எல்லாம் இலக்கியப் பயிற்சிக்கு உதவின.

பெங்களூர் சுந்தரம் என்பவர் 'ஆனந்த ரகசியம்' என்ற தலைப்பில் யோகாசனங்கள் பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினார். ஆசனப் பயிற்சிக்கு வழிகாட்டும் கட்டுரைகளைத் தனிச் சுவையுடன் எழுதிவந்தார் அவர். ஆசனங்களை அறிமுகப்படுத்திய பிறகு உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்ற ஆலோசனைகளை 'ஆரோக்கிய ரகசியம்' எனும் தலைப்பில் எழுதினார். அனைத்தும் பயனுள்ள கட்டுரைகள்.

விகடன் மூலம் யோகாசனம் பற்றித் தெரிந்து கொண்டு அவற்றைப் பயின்று பயன்பெற்றவர்கள் பலராவர். நாங்கள் மூன்று பேர் - அண்ணா, நான், சக்திசங்கர் என்ற நண்பர் (உறவினரும் கூட) - தினசரி மாலை நேரத்தில் ஆற்று மணலில் யோகாசனங்கள் செய்து பழகினோம். நான் ராஜவல்லிபுரத்தை விட்டு வெளியூர் போகிற நாள் வரை -சுமார் ஒன்றரை வருட காலம்-ஆசனப்பயிற்சியை விடாது செய்து வந்தேன்.

சக்திசங்கர் - சங்கர நாராயணன் என்பது அவரது பெயர். சிறிது காலம் அவர் சத்தி வழிபாட்டில் ஆர்வம் கொண்டிருந்தார். அதனால் சக்தி சங்கர் ஆனார் - 'மணிக்கொடி' இதழ்களை பைண்டு வால்யூம்களாக வைத்திருந்தார். அவற்றை அவர் எங்களிடம் தந்துவிட்டார்.

மணிக்கொடியில் இருந்த புதுமைப்பித்தன் கதைகள், 'யாத்ரா மார்க்கம்' பகுதியில் வந்த இலக்கிய சர்ச்சைகள், ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன். பி.எஸ். ராமையா, மௌனி முதலியவர்களின் கதைகள் என்னைப் பெரிதும் ஈர்த்தன. இத்தகைய சிறுகதைகளை நான் எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

எழுதலானேன். எழுதுவதற்கு அவசியம் உண்டாக்கிக் கொள்வதற்காக 'இதய ஒலி' என்ற கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினேன். ஒவ்வொரு மாதமும் இதழைக் கொண்டு வரவேண்டும் என்ற கட்டாயம் இருந்ததால், அதில் அதிகம் எழுதினேன். நானே கதை, கட்டுரை, கவிதை என்று பலவற்றையும் எழுதினேன். சித்திரங்களும் வரைந்தேன்.

என் அண்ணா, சக்தி சங்கர், மற்றும் ஓரிருவர் இதயஒலியின் வாசகர்களானார்கள், நான் எழுதியவற்றை எல்லாம் படித்துப் பாராட்டினார்கள்.

சீவலப்பேரி, மடத்துப்பட்டி என்ற ஊர்களில் இருந்து இரண்டு பேர் அடிக்கடி ராஜவல்லிபுரம் வந்து போவார்கள். அவர்கள், எல்லோராலும் எழுதிவிட முடியாது என்று எண்ணம் கொண்டிருந்தனர். 'எழுதுவதெல்லாம் லேசிலே வந்து விடாது. இப்ப எழுதுகிறபோது எல்லாமே நல்லா இருக்கிற மாதிரித்தான் தோணும். இப்ப எழுதினதை அப்படியே வைத்துவிட்டுச் சில மாதங்கள் சென்ற பிறகு எடுத்துப் படித்துப் பார்த்தால், இவை பிரயோசனமில்லை, சாரம் இல்லாதவை என்று நமக்கே தோன்றும்' என்று சொல்வார்கள்.

'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது மாதிரி எழுதி எழுதிப் பழகினால் எழுதுவதிலும் தேர்ச்சி பெற முடியும் என்று நான் நம்பினேன். எழுதிக் கொண்டேயிருந்தேன்.

அச்சமயத்தில் கவி தேசிகவிநாயகம் பிள்ளையின் 'ஊன்றி உணர்தற்குரிய உண்மைகள்' என்ற பாடல்கள் பத்திரிகையில் வெளிவந்தன. நான்கு பகுதிகளைக் கொண்ட அவற்றில்,

உள்ளம் தேறிச் செய்வினையில்
ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர் மேடாகாதோ
பாறை பொடியாய்ப் போகாதோ?

என்பதும் ஒன்று.

இவ்வரிகள் என் உள்ளத்தில் ஆழப் பதிந்தன, உந்து சக்தியாக ஊக்கின. மந்திரம் போல் இவ் வரிகளை எந்நாளும் உச்சரிக்கலானேன்.

சுவாமி விவேகானந்தர் கூற்று ஒன்றும் என்னுள் சுடர்ப் பொறியாய்க் கனன்றது: எழு, விழி, இலட்சியசித்தி அடையும் வரை ஓய்ந்து நிற்காதே! (அரைஸ், அவேக், ஸ்டாப் நாட் டில் தி கோல் இஸ் ரீச்ட்)

நல்ல எழுத்தாளன் ஆகியே தீர்வேன் என உள்ளத்தில் உறுதி பூண்டேன். படிப்பதும் எழுதுவதுமே எனது வாழ்க்கை நியதிகள் ஆயின.

7

கிடைத்ததை எல்லாம் உற்சாகத்தோடு படித்தேன்.
படிப்பதற்கு நிறையவே கிடைத்தன எந்நாளும்.

1936 ஆம் வருட ஆனந்த விகடன் தீபாவளி மலர் சிறப்பான கதைகளைக் கொண்டிருந்தது. தினமணி 1935இலும் 1936இலும் 'பாரதி மலர்' என்று நீளவடிவத்தில் (தினமணி நாளிதழை இரண்டாக மடித்து அளவில்) சிறப்பு மலர்கள் வெளியிட்டிருந்தது. ஒரு மலரில் புதுமைப்பித்தனின் சிறந்த கதைகளில் ஒன்றான 'புதிய கூண்டு' இடம்பெற்றிருந்தது. மற்றும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் நல்ல இலக்கிய விருந்தாக அமைந்திருந்தன.

1937 ஆம் வருட மலர் (தினமணி ஆண்டு மலர்) வழக்கமான சிறப்பு மலர் வடிவத்தில் கச்சிதமாக இருந்தது. உள்ளடக்கம் மிகச் சிறப்பாக விளங்கியது. புதுமைப்பித்தனின் 'நினைவுப்பாதை', மௌனியின் 'எங்கிருந்தோ வந்தான்'. போன்ற சிறுகதைகள், இளங்கோவனின் 'சாவே வா' என்ற அருமையான கட்டுரை, ந. பிச்சமூர்த்தியின் (பிக்ஷு) 'கிளிக்கூண்டு' கவிதை - இப்படி எவ்வளவோ. திரும்பத் திரும்பப் படித்தேன்.

தமிழில் புதிய புத்தகங்கள் அதிகம் வரத் தொடங்கிய காலம் அது. நல்ல நூல்களைக் குறைந்த விலையில் தரவேண்டும்; பலவிதமான புத்தகங்களையும் எட்டணா விலையில் விற்பனை செய்வது என்ற நோக்குடன் நவயுகப் பிரசுராலயம் லிமிட்டெட் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அதன் முதல் வெளியீடு ஆக ஏ.என். சிவராமன் எழுதிய 'மாகாண சுயாட்சி' வந்தது. ராஜகோபாலகிருஷ்ணன் அதை வாங்கி வந்து படித்துவிட்டு, எங்களுக்குத் தந்தார். ஜெயப் பிரகாஷ் நாராயணன் நூல்களையும் அவர் வாங்கினார். 'ஜவகர்லால் நேரு சுயசரிதம்' வ.ரா. தமிழாக்கம் - படிக்கக் கிடைத்தது.

சுதந்திரப் போராட்ட வீரர்-உணர்ச்சிகரமான மேடைப் பிரசங்கி - நா. சோமயாஜலு சங்கரன்கோயிலில் இருக்கிறார்; அவரைப் பார்த்துவிட்டு வரலாம் என்று ராஜகோபாலகிருஷ்ணன் என் அண்ணனை அழைத்துப் போனார் ஒருநாள். அண்ணா திரும்பி வந்தபோது அரிய சிற்றிதழ்கள் பலவற்றைக் கொண்டுவந்தார். இவற்றை எல்லாம் சோமயாஜலு தந்தார் என்றார்.

காரைக்குடியில் இருந்து வெளிவந்த 'ஊழியன்' பத்திரிகை இதழ்கள் பல. இதில் ஒருசமயம் புதுமைப்பித்தன் பணியாற்றினார். அவருக்கும் ஊழியன் துணை ஆசிரியரான இ. சிவம் என்பவருக்கும் ஒத்துப்போகாததால், பு.பி. வேலையை விட்டுவிட்டுச் சென்னைக்கே போய்விட்டார். அண்ணா கொண்டு வந்த ஊழியன் இதழ்கள் பிற்காலத்தவை. ஆசிரியர் ராய. சொக்கலிங்கம் எழுத்துக்களுடன், இ. சிவம் எழுதியவை மிக அதிகமாகவே காணப்பட்டன.

வ.வெ.சு. ஐயர் நடத்திய 'பாலபாரதி' இதழ்கள் சில. பாரதிதாசன் புதுச்சேரியில் இருந்து வெளியிட்ட 'சுப்பிர மணிய பாரதி கவிதா மண்டலம்' சில இதழ்கள். காஞ்சிபுரம் 'குமார விகடன்' சில. இதில் இளங்கோவன் (ம.க. தணிகாசலம்) கதைகள், கட்டுரைகள் காணப்பட்டன.

மணிக்கொடி சிறுகதைப் பத்திரிகையும் காலப்போக்கில் நின்றுவிட நேர்ந்தது. 1937இல் க. நா. சுப்ரமண்யம் 'சூறாவளி' என்ற பெயரில் இலக்கிய வார இதழ் ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். மணிக்கொடியில் எழுதிக் கொண்டிருந்த எழுத்தாளர்களில் முக்கியமானவர்கள் இந்த இதழில் எழுதுவதில் உற்சாகம் காட்டினார்கள். வசனகவிதை பற்றிய ஒரு சர்ச்சை முதன்முதலாக, சூறாவளியில் நடைபெற்றது. வேகமும் புதுமையும்

நிறைந்திருந்த இந்த இதழ் வெகு காலம் நீடிக்கவில்லை. 18 இதழ்களோடு ஓய்ந்துபோனது.

இவ்வாறாகப் பத்திரிகை, புத்தகங்களுடனான எனது அறிமுகம் வளர்ந்து வந்தது. இதயஒலியில் (எனது கையெழுத்துப் பத்திரிகையில்) நான் எழுதிக்கொண்டிருந்தேன். அவற்றில் எதையும் எந்தப் பத்திரிகைக்கும் அனுப்பவில்லை. பிறகு, அனுப்பிப் பார்க்கலாமே என்று பிரசண்ட விகடன் இதழுக்கு அனுப்பினேன்.

பிரசண்ட விகடன் இதழ் நடத்திய நா. முனுசாமி முதலியார்தான் 'ஆனந்த போதினி' என்கிற இலக்கிய மாத இதழையும் நடத்தினார். ஆனந்த போதினியில் கம்பராமாயணம், திருக்குறள் பற்றிய கட்டுரைகள், ஓரிரு கதைகள், தொடர்கதை முதலியன வந்தன. ஆனந்த விகடன் பத்திரிகையைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு முன்னர், எஸ்.எஸ். வாசன் ஆனந்த போதினியில் கதைகள், தொடர்கதைகள் எழுதியுள்ளார். ரா.பி. சேதுப்பிள்ளை, தூத்துக்குடி பால் நாடார் போன்றவர்களின் கம்ப ராமாயணக் கட்டுரைகள் இவ்இதழுக்கு மதிப்பு சேர்த்தன. நாரண துரைக்கண்ணன் தான் பிரசண்ட விகடன், ஆனந்த போதினி ஆகிய இரண்டு இதழ்களுக்கும் ஆசிரியர் ஆவார்.

பிரசண்ட விகடன் இளைய எழுத்தாளர்களின் எழுத்துக்களை வரவேற்றுப் பிரசுரித்தது. பிற்காலத்தில் வளர்ந்து புகழ்பெற்ற அநேகப் படைப்பாளிகளின் சிறுகதைகள் முதன் முதலாகப் பிரசண்ட விகடனில் தான் பிரசுரம் பெற்றன. எனது கதை 'சந்திரகாந்தக் கல்' என்பதும் அதில்தான் வெளிவந்தது. அதீதமான கற்பனை கொண்ட சுமாரான கதை அது. 1939இல் அது வெளியாயிற்று.

இதற்கிடையில் நான் அரசு பணியாளனாக ராஜவல்லிபுரம் ஊரை விட்டு வெளியேறியிருந்தேன்.

8

என் அப்பா இறந்த பின்னர் எங்கள் குடும்பப் பொருளாதாரம் சரிவுப்பாதையில் சென்று கொண்டிருந்தது.

அப்பா நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்ததால், மருத்துவ சிகிச்சை செலவு அதிகமாயிற்று. அப்பா இறந்ததும், அதன் பின்னரும், சமூகக் கட்டுப்படி சாவுச்சடங்குகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அம்மா ஏராளமாகவே செலவுகள் செய்தார். மாதம்தோறும் 'மாசியம்' என்று மாதத் திதி; மூன்று இலைகள் படைத்து சகல பொருள்களுடனும் பச்சரிசி தாராளமாகவே ஐயர்களுக்கு வழங்குதல் ; ஆண்டு முடிவில் 'ஆட்டத் திதி' என்று முதல் வருடத் திவசம் பெரும் பணச் செலவில் நிறைவேற்றுதல் போன்ற சடங்குகள். இவற்றுடன் எங்கள் நால்வரின் படிப்புச் செலவுகள்.

வயல்கள் போதுமான அளவு இருந்தன. அவை கட்டுக்குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. இரு போக நிலம் தான். ஆயினும் தொடர்ந்து வருடம் தோறும் இருமுறையும் நெல் விளைச்சல் இருந்ததில்லை. ஒரு முறை விளைந்தால், அடுத்த பூ விளைச்சல் இராது. இதனால் எல்லாம் கடன்கள் ஏற்பட்டன. கடன்களை அடைக்க வயல்களை ஒவ்வொன்றாய் விற்க நேர்ந்தது. இரண்டு கோட்டை விதைப்பாடு நிலம் முதலில் இருந்தது. நாங்கள் ஊரோடு வந்தபோது அரைக் கோட்டை விதைப்பாடு நிலம்தான் எஞ்சியிருந்தது.

சிக்கனமான முறையில் பெரும் சிரமங்கள் இல்லாமல் வாழ முடிந்தது. அந்நாட்களில் விலைவாசிகள் உயர்ந்திருக்கவில்லை. பொருள்கள் எல்லாம் மலிவான விலையில் கிடைத்தன. வளம் குன்றாத வாழ்வு என்றே சொல்லலாம்.

உள்நாட்டில் விளைச்சல் இல்லாது போகிற காலங்களில் அரசு பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய வகைபண்ணியது. பர்மா அரிசி ஒரு ரூபாய்க்குப் பத்துப்படி, பன்னிரண்டுபடி என்று விற்கப்பட்டது. நயமான வெள்ளை அரிசி.

வீட்டு வாடகைப் பிரச்சினை இல்லை. வயலில் நெல் விளைந்த காலங்களில் அரிசிக்குக் கவலை இல்லை. மற்றப் பொருள்கள் எல்லாம் - என் பெரிய அண்ணா அடிக்கடி சொல்வது போல் 'உப்பு தொடுத்து கற்பூரம் வரை' - பணம் கொடுத்துத் தான் வாங்க வேண்டும்.

பணவரவுக்கு வழி செய்யும் விதத்தில் நாங்கள் ஏதாவது வேலைக்குப் போயாக வேண்டும் என்ற நிலைமை. அந்நாட்களிலும் வேலை எளிதில் கிடைக்காது எனும் நிலைதான்.

எனது பள்ளிப்படிப்பு நிறைவுற்று ஒரு வருடம் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு எனக்கு ஒரு வேலை கிடைத்தது. எங்கள் ஊரைச் சேர்ந்த உறவினர் ஒருவர் சர்க்கார் விவசாய இலாகாவில் உயர் பதவியில் இருந்தார். இவர் முயற்சிசெய்து அத்துறையில், ஒரு விவசாய ஆபீசில் எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்தார். குமாஸ்தா வேலை.

அந்த வேலை, இராமநாதபுரம் ஜில்லா (மாவட்டம் என்ற பெயர் அப்போது ஏற்பட்டிருக்க வில்லை) பரமக்குடியில் கிடைத்தது. அந்த ஊரில் புதிதாக விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் ஆபீஸ் திறக்கப்பட்டிருந்தது. அதற்குப் புதிதாகக் கிளார்க் நியமனம் ஆயிற்று. அந்தப் பதவிக்கு ஸ்டோர் கீப்பர் என்று பெயர்.

சொந்த ஊரை விட்டு ரொம்ப தூரத்தில் உள்ள ஒரு இடத்துக்குப் போய், சின்னப் பையனான நான் தனியாக இருந்து வேலை பார்ப்பேனா என்ற சந்தேகம் என் அம்மாவுக்கும் உறவுக்காரர்களுக்கும் இருந்தது. வேறென்ன செய்வது? இருந்து பழகவேண்டியது தான். போகப்போக எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணி என்னை ரயிலேற்றி அனுப்பி வைத்தார்கள் 1937 நவம்பர் முதல் வாரத்தில்.

ஊருக்கு வடக்கே பதினெட்டு மைல் தூரத்தில் இருந்த மணியாச்சிக்கு அப்பால் நான் பயணம் போனதில்லை. இப்போது மதுரைபோய், பாதை மாறித் தொலைவில் உள்ள பரமக்குடி போய்ச் சேர வேண்டும். என்னால் தனியாகச் சமாளிக்க முடியாது என்று என் அண்ணா கோமதி நாயகம் துணைக்கு வந்தார்.

எனக்கு வேலை வாங்கித் தந்த உறவினர் மதுரையில் தான் பணிபுரிந்து கொண்டிருந்தார். நாங்கள் அவர் வீட்டில் ஒரு நாள் தங்கினோம். முதன்முதலாக மதுரை நகரைக் கண்டு களித்தோம். மறுநாள் பரமக்குடி சேர்ந்தோம்.

அண்ணா என்னுடன் நான்கு நாட்கள் இருந்தார். பிறகு ராஜவல்லிபுரம் திரும்பிவிட்டார். எனது தனிமை வாழ்வு இனிது தொடங்கியது.

ஆபீசுக்கு அடுத்த கட்டிடத்தில் ஒரு ஓட்டல் இருந்தது. கிருஷ்ணய்யர் என்பவர், கல்லிடைக்குறிச்சிக்காரர், அதை நடத்தி வந்தார். அதில் மாதச் சாப்பாட்டுக்கு எனக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மாதம் ஒன்பது ரூபாய் தான். காலையில் இரண்டு இட்டிலி, ஒரு பெரிய தோசை, காப்பி. மதியம் சாப்பாடு, இரவிலும் சாப்பாடு. ருசிகரமாக இருந்தன எல்லாம்.

சில மாதங்கள் ஆபீசிலேயே தங்கினேன். ஓட்டல் மாடியில் 'ராயல் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்' என ஒன்று இருந்தது. பலர் வந்து டைப் அடிக்கக் கற்றுக் கொண்டார்கள். ராமாநாதபுரத்தைச் சேர்ந்த நித்தியானந்தம் என்பவர் அதை நிர்வகித்தார்.

நானும் டைப் கற்கச் சேர்ந்தேன். நித்தியானந்தம் நண்பரானார். ஆபீசில் தங்க வேண்டாம்; தன்னுடன் இன்ஸ்டிடியூட் மாடியிலேயே தங்கிக் கொள்ளலாம் என்று அவர் என்னை அழைத்துக் கொண்டார்.

ஆபீசுக்குப் பின்பக்கத்தில் சற்று தள்ளி வைகை ஆறு. நவம்பர், டிசம்பர் மாதங்களில் தண்ணீர் நிறையவே ஓடியது. ஆகவே, வசதியான ஆற்றுக்குளிப்பு கிட்டியது.

புதிதாக அமைக்கப்பட்ட ஆபீஸ். மேஜைகள், நாற்காலிகள், பெஞ்சு எல்லாம் புதியனவாக இருந்தன. கட்டிடமும் புது மெருகுடன் தான் காணப்பட்டது. மனோகரமான சூழ்நிலை.

அங்கு 'அக்ரிகல்சுரல் டிமான்ஸ்ட்ரேட்டர்' ஆகப் பணியாற்றியவர் ஒரு சுகவாசி.. வருடத்தில் பெரும் பகுதி நாட்கள் அவர் விடுப்பில் திருமங்கலம் போய்விடுவார். அங்கே தான் அவருடைய குடும்பத்தினர் வசித்தார்கள். கேஷூவல் லீவ், பிரிவிலேஜ் லீவ், லீவ் ஆன் மெடிகல் சர்டிபிகேட், லீவ் ஆன் ஆவரேஜ் பே என்று விடுப்புக்கான சலுகைகள் அனைத்தையும் அவர் பயன்படுத்திக் கொண்டார்.

மேஸ்திரி என்றும் மெசஞ்சர் என்றும் இரண்டு பணியாளர்கள் உண்டு. மாதத்தில் இருபது நாட்கள் அவர்கள் வெவ்வேறு ஊர்களுக்குப் போய்

விவசாயி மக்களிடையே பணிபுரிய வேண்டும். ஆகவே, அலுவலகத்தில் நான் மட்டும் தான். வேலையும் அதிகம் கிடையாது. அதனால் படிப்பதற்கும், எழுதுவதற்கும் மிக வசதியாக இருந்தது.

பல மாதங்களுக்குப் பிறகு அந்த அதிகாரி இடம் மாறுதல் பெற்று திருமங்கலத்துக்கே போய் விட்டார். புதிதாக வந்தவர் இளைஞர், நல்லவராக இருந்தார். ஆறேழு மாதங்களில் அவரும் வேறு ஊருக்கு மாற்றப்பட்டார். அடுத்து வந்தவர் ஒரு மலையாளி. அவரும் நல்ல மனிதர் தான்.

பரமக்குடியில் நான் இரண்டு வருடங்கள் பணி புரிந்தேன். மனோகரமாகக் காலம் கழிந்தது.

ஆற்றில் தண்ணீர் ஓட்டம் இல்லாத காலங்களில், மணலில் 'ஓடுகால்' என்று பள்ளங்கள் தோண்டிக் குளிப்பதற்கு வசதி செய்திருப்பார்கள். மூன்று பெரிய குழிகள் தள்ளித் தள்ளி வெட்டப்பட்டிருக்கும். இடையே 'கால்கள்' வெட்டப்பட்டு அவை இணைக்கப் பெற்றிருக்கும். குழிகளில் ஊற்றுப் பெருக்கினால் தண்ணீர் நிறைந்து கிடக்கும்.

முதல் பள்ளத்தில் துணி அலசுதல் முதலிய அலுவல்களை முடிக்க வேண்டும். இரண்டாவது பள்ளத்தில் உட்கார்ந்து நீராடுதல். அழுக்குத் தேய்த்துக் குளிப்பதெல்லாம் இங்கு தான். அடுத்து மூன்றாவது பள்ளத்தில் கிடக்கும் சுத்தமான நீரில் இரண்டு முங்கு போட்டு விட்டுக் கரையேறி விட வேண்டும்.

பரோபகார குணம் உடைய பெரியவர்கள், பள்ளங்கள் அழுக்குப் படியாதவாறு கவனித்துக் கொள்வார்கள். அவ்வப்போது, கிடங்குகளில் இருந்து தண்ணீரை இறைத்து வெளியே ஊற்றிப் புதுநீர் ஊறும்படி செய்வார்கள். இரண்டாவது பள்ளத்தில் துணிகளைத் தோய்க்காதவாறும், மூன்றாவது குழியில் அதிக நேரம் குளித்துத் தண்ணீரைக் களங்கப்படுத்தாதவாறும் கண்காணித்துக் கொள்வார்கள்.

இந்தப் பொதுநலப் பணிக்காக, ஓடுகாலைப் பயன்படுத்துகிறவர்கள் காலணா, அரையணா வழங்குவதும் உண்டு. கரை மீது அதற்கென அமைக்கப்பட்ட இடத்தில் அவர்களாகவே காசுகளைப் போட்டு விட்டுப் போவார்கள். கட்டாயம் காசு தர வேண்டும் என்ற கண்டிப்பு எதுவும் இருந்ததில்லை. (ஒரு ரூபாய்க்கு 16 அணாக்கள். ஒரு அணாவுக்கு 12பைசா. ஒரு பைசா தம்பிடி என்றும் கூறப்பட்டது. 2 அணாவுக்கு 'அரைக்கால் ரூபா' என்ற சிறிய வட்ட வடிவ வெள்ளிக்காசும் உண்டு.)

மாலை நேரங்களில் நான் ஆற்று மணலில் மேற்கு நோக்கி இரண்டு மைலுக்கும் அதிகமாகவே நடந்து சென்று திரும்புவேன். பரந்த மணல் வெளி. பனை மரங்கள் செறிந்த பிரதேசம். சில சமயம் நரிகள் ஒன்றிரண்டு

அங்குமிங்கும் ஓடும். அமைதியான அச் சூழலில் நடந்து செல்வது இனிய பொழுதுபோக்கு. ஆள் நடமாட்டமே இராது. மணலில் யோகாசனம் செய்வதற்கும் வசதியாக இருந்தது.

வேலையில் சேர்ந்து ஒரு மாதம் போனதும், முதல் சம்பளம் பத்தொன்பது ரூபாய் வரப்பெற்றதும் எனது மகிழ்ச்சி அதிகரித்தது. சாப்பாட்டுக்காக ஓட்டலுக்கு ஒன்பது ரூபாய் கொடுத்தேன். ஊருக்கு அம்மாவுக்கு ஐந்து ரூபாய் மணியார்டரில் அனுப்பினேன். மீதம் இருந்த ஐந்து ரூபாயை என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தேன்!

அந்தச் சமயத்தில் தான் கல்கியின் கதைகள் தொகுக்கப்பெற்றுக் 'கணையாழியின் கனவு' என்ற புத்தகமாக வெளி வந்திருந்தது. ஆனந்த விகடன் ஏஜண்டிடம் கிடைக்கும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அவ்வூர் விகடன் ஏஜண்ட் யார் என விசாரித்ததில் அவரை சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பார்க்கலாம் என்றார்கள். அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த ஒருவரே பத்திரிகை விற்பனைப் பொறுப்பையும் ஏற்றுச் செயலாற்றினார் என்று தெரிந்தது.

அவரைச் சந்தித்து, கணையாழியின் கனவு வாங்கினேன். மூன்று ரூபாய்க்குள் தான் இருந்தது அதன் விலை. தொடர்ந்து வாரம் தோறும் விகடன் இதழ் கொண்டு தருவதற்கும் ஏற்பாடு செய்தேன். பின்னர், அவருக்கு விற்பனைக்கு வரும் பதிய புத்தகங்களில் ஒவ்வொரு பிரதியை வாங்கக் கூடிய வாடிக்கையாளராக அவர் என்னை ஆக்கிக்கொண்டார்.

ராயல் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் நித்தியானந்தம் அவரது இருப்பிடத்தை வேறு தெருவில் உள்ள ஒரு பெரிய கட்டிடத்துக்கு மாற்றினார். பல அறைகளையும் மாடியையும் கொண்ட விசாலமான இடம். தங்குவதற்கு மிக வசதியாக இருந்தது. எப்பவும் கலகலப்பாக இருக்கும்.

தட்டச்சு கற்க வருகிறவர்கள், மனுக்கள் முதலியன டைப் செய்து வாங்கிப்போக வருவோர், படித்துவிட்டு வேலையில்லாமல் சும்மா இருந்து வம்பளந்து பொழுது போக்கக் கூடும் வாலிபர்கள், என்னைத் தவிர மேலும் இரண்டு பேர் தங்குமிடமாகக் கொள்ளவும் வசதி இருந்தது அங்கே. ஒருவர் பள்ளி ஆசிரியர். இன்னொருவர் பொதுப்பணித்துறை (P.W.D.) அலுவலகக் குமாஸ்தா. சந்தோஷமாகப் பேசிப் பொழுது போக்குவதற்காகப் பலதுறைகளைச் சேர்ந்த அன்பர்கள் சிலர் அங்கே கூடுவது வழக்கமாயிற்று. அண்டை அயல் கனவான்கள்- டாக்டர், வக்கீல் முதலிய பிரமுகர்கள் அந்த இடத்தைப் 'பிரமச்சாரிகள் குகை' (Bachelor's Den) என்று குறிப்பிடும் தகுதியை அது பெற்றுவிட்டது.

நான் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவந்தேன். விறுவிறுப்பான, உணர்ச்சி ஊட்டும், விஷயங்களைக்

கொண்ட பத்திரிகைகள் அநேகம் வந்து கொண்டிருந்தன. நவசக்தி, லோகசக்தி, பாரத சக்தி என்றெல்லாம் பெயர் கொண்டவை. அவை என் எழுத்துக்களை விரும்பி வரவேற்றன. அப்போதுதான் (1939இல்) நான் வல்லிக்கண்ணன் என்ற புனைபெயரைச் சூட்டிக்கொண்டேன்.

பரமக்குடியில் இருந்த காலத்தில், டைப் ரைட்டிங் கற்றேன். 'லோயர்' பரீட்சை எழுதித் தேர்ந்தேன். இந்தி மொழியும் படித்தேன். 'மத்யமா தேர்வு' எழுதி வெற்றி பெற்றேன். இந்தி மொழிப் புத்தகங்களைப் படிக்க முடிந்தது.

நல்ல நூல்கள் மிகுதியாகவே படிக்கக் கிடைத்தன. மறைமலை அடிகள் நூல்கள் பலவற்றை ஒரு நண்பர் படிக்கத் தந்தார். ஆங்கிலத்தில் கே.எஸ். வேங்கடரமணியின் நூல்கள் அநேகம் கிடைத்தன. 'பேப்பர் போட்ஸ்', 'ஆன் தி ஸேன்ட் ட்யூன்ஸ்', 'தி நெக்ஸ்ட் ரங் ஆஃப் தி லேடர்' முதலிய நூல்களைப் படித்துப் பயனடைந்தேன்.

இக்காலகட்டத்தில் தான் ஆன்மீக நூல்களை அதிகம் படிக்க வாய்ப்பு கிட்டியது. 'இவ்வூரில் சுந்தரம் என்று ஒருவர் இருக்கிறார். நல்ல மனிதர். இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் பக்தி கொண்டவர். தனியாகச் சிறுவர் பள்ளி நடத்துகிறார்' என்று கூறி, நண்பர் ஒருவர் என்னை அவரிடம் அழைத்துப் போய் அறிமுகம் செய்து வைத்தார்.

பிரமச்சாரியாக வாழ்ந்த சுந்தரம் ஆன்மீக விஷயங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். தியானம், பூஜை என்று பயின்று வந்தார். அவர் ஆன்மீக நூல்களை எனக்குப் படிக்கத் தந்தார். ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ரமண மகரிஷி, சுவாமி ராமதீர்த்தர் போன்ற ஞானிகளின் நூல்களும். 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' பத்திரிகையின் இதழ்களும் கிடைத்தன.

தினந்தோறும் இரவு 7 மணி முதல் 8 மணி வரை அவருடன் பேசிப் பொழுது போக்கினேன். கேதார்நாத், பத்ரிநாத் என்று யாத்திரை போய் வந்தவர் ஒருவர் சுந்தரத்தைப் பார்க்க வரும்போது தனது பயண அனுபவங்களைச் சுவையாகச் சொல்வது உண்டு. இப்படி பலவகைகளிலும் என் மனப்பதிவுகள் கனமும் ஆழமும் பெற்றுவந்தன.

1939 ஆரம்பத்தில் சென்னையிலிருந்து சக்திதாசன் சுப்பிரமணியன் பரமக்குடி வந்து என்னைச் சந்தித்தார். திரு.வி. கலியாணசுந்தரனார் வார இதழாக நடத்திவந்த 'நவசக்தி'யில் உதவி ஆசிரியராக அவர் பணிபுரிந்து கொண்டிருந்தார். அத்துடன், ம.கி. திருவேங்கடம் நடத்திய 'லோகசக்தி', 'பாரத சக்தி' இதழ்களின் ஆசிரியர்குழுவிலும் இணைந்து செயலாற்றினார். அவ் இரண்டு பத்திரிகைகளின் விற்பனையை அதிகரிக்க -ஏஜண்டுகளிடமிருந்து பணம் வசூலிக்க-புதிதாக சந்தாக்கள் சேர்க்க எனும் நோக்கத்துடன் அவர் தமிழ்நாடு சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தார்.

பரமக்குடியில் என்னுடன் இரண்டு நாட்கள் தங்கினார். பத்திரிகையாளர்கள், சென்னை எழுத்தாளர்கள், லோகசக்தி அனுபவங்கள் என்று சுவாரசியமாகத் தகவல்கள் தந்தார். என் எழுத்தையும் ஆர்வத்தையும் மனமாரப் பாராட்டி விட்டு, "நீங்கள் இருக்க வேண்டிய இடம் அரசு அலுவலகம் இல்லை. இப்போது வட்டத் துவாரத்தில் சதுரமுளை - 'எ ஸ்குவேர் பெக் இன் எ ரவுண்ட் ஹோல்' -என்பது போல நீங்கள் பொருத்தம் இல்லாத இடத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் இருக்க வேண்டிய இடம் சென்னையில் ஒரு பத்திரிகாலயத்தில். அப்போது தான் உங்கள் திறமை உரிய முறையில் வெளியே தெரியவரும்" என்று கூறினார்.

சென்னைக்குப் போக வேண்டும் என்ற எனது உள் உந்துதலைக் கிளறிவிட்டுவிட்டு சக்திதாசன் போய்ச்சேர்ந்தார். எனது நாட்கள் வழக்கம் போல் போயின. 1939 நவம்பரில், நான் பரமக்குடி சேர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவ்வூரைவிட்டுப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஸ்ரீ வைகுண்டம் அலுவலகத்துக்கு நான் மாற்றப்பட்டேன்.

9

திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் எனக்குப் புதிய ஊர் இல்லை. எனது ஆறு, ஏழாவது வயதில் என் அப்பா பெருங்குளம் ஊரில் பணியாற்றியபோது, ஸ்ரீ வைகுண்டம் நன்கு அறிமுகமாகியிருந்தது. திருநெல்வேலியில் இருந்து ஸ்ரீவைகுண்டம் வந்துதான் பெருங்குளம் போகவேண்டும். அதேபோல் பெருங்குளத்தில் இருந்து வெளியூர் போகிற போதும் ஸ்ரீவைகுண்டம் வரவேண்டும். இப்படிப் பலமுறைகள் அறிமுகமாகியுள்ளது அந்த ஊர்.

பெருங்குளத்தில் வசித்த போது, அப்பா உத்தியோக விஷயமாக வைகுண்டம் வரநேர்ந்த சந்தர்ப்பங்களில் என் அண்ணாவும் நானும் அப்பாவுடன் அங்கே வந்திருக்கிறோம். அங்குள்ள பெயர்பெற்ற விஷ்ணு ஆலயத்தைக் கண்டு களித்தது உண்டு.

ஸ்ரீவைகுண்டமும், அதை அடுத்து அருகருகே உள்ள சில தலங்களும் 'நவதிருப்பதி' என்ற சிறப்புக்கு உரியவை ஆகும். வைகுண்ட ஏகாதசித் திருநாளில் இவ் ஒன்பது கோயில்களில் இருந்தும் பெருமாள்திருஉருவம் கருடவாகனத்தில் அலங்கரிக்கப்பட்டு, ஒன்பதாவது திருப்பதியான ஆழ்வார்திருநகரில் ஒன்று சேர்ந்து வீதி வலம் வருவது வழக்கம்.

ஒரு வருடம் அத் திருநாளின்போது வில்வண்டியில் ஸ்ரீவைகுண்டத்தில் தொடங்கி ஒவ்வொரு திருப்பதியாகச் சென்று, கோயில் தரிசனம் கண்டு, இறுதியில் ஆழ்வார் திருநகரி சேர்ந்து கருடவாகன ஊர்வலம் பார்த்தது நன்றாக நினைவில் பதிந்துள்ளது.

அதே ஸ்ரீவைகுண்டம் ஊரில் தங்கி வேலைபார்க்கும் வாய்ப்பு இப்போது கிட்டியது மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

ஆனால் மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைப் பிடிக்காத ஒரு மனிதர் அங்கே இருந்தார். அவர் விவசாய ஆபீஸ் அதிகாரியாகவும் இருந்தார். அந்த அலுவலகத்தில் கிளார்க் ஆகப் பணிபுரிந்து கொண்டிருந்த உள்ளூர் இளைஞர் மனைவி, குழந்தை, அம்மா, தம்பி என்று குடும்பத்தோடு சுக வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தார். அவர் அப்படி இருந்தது. அதிகாரிக்குப் பிடிக்கவில்லை. அவருடைய வேலையில் அடிக்கடி குறைகண்டு, மேலிடத்துக்கு எழுதி, அவருக்குத் தொல்லைகள் கொடுத்து வந்தார். இறுதியில் அவரைத் தொலைதூர இடமான பரமக்குடிக்கு மாற்றும்படி செய்துவிட்டார். அவருக்குப் பதிலாகத்தான் நான் ஸ்ரீவைகுண்டம் ஆபீசுக்கு மாற்றப்பட்டிருந்தேன்.

அந்த அதிகாரிக்கு இதே தான் தொழில்; உவப்பான வேலை. தன் கீழ்ப் பணிபுரிகிறவர்களை அமைதியாக இருக்கவிடாது ஏதாவது தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பார். மேலே ரிப்போர்ட் பண்ணி, வேலையிலிருந்து 'இடைநீக்கம்' செய்யும்படி பண்ணுவது அவருக்குப் பொழுதுபோக்கு! ஒரே அடியாகச் சீட்டைக் கிழித்து வீட்டுக்குப் போகும்படி பண்ணிவிட்டால், அது மாபெரும் ஆனந்தக் களிப்பு அவருக்கு.

இப்படி அவர் செய்த திருப்பணிகள் பற்றி, பரமக்குடிக்கு மாறுதலாகி வந்த ஸ்ரீவைகுண்டம் அன்பர் விவரித்திருந்தார். அதிகாரியின் இயல்பு அப்படித்தான் இருந்தது.

நான் பத்திரிகைகளுக்குக் கதை கட்டுரை எழுதிக் கொண்டிருந்தது அதிகாரியை உறுத்தியது. அரசுப் பணியில் இருந்து கொண்டு இது போல் எல்லாம் எழுதக்கூடாது; அப்படி எழுதவேண்டுமானால் அவ்வாறு எழுதுகிற ஒவ்வொன்றையும் என்னிடம் காட்டி அனுமதி வாங்க வேண்டும், சில விஷயங்களை மேல் அதிகாரிக்கு அனுப்பி அனுமதி பெற வேண்டியிருக்கும் என்று அவர் என்னிடம் தெரிவித்தார்.

நான் எனது வழக்கப்படி எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். அது அவருக்குப் பிடிக்கவில்லை. சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்துக் கட்டுரைகள் எழுதுவதாக அவர் மேலிடத்துக்கு ரிப்போர்ட் செய்தார். விளக்கம்கேட்டு எழுதும்படி மேலேயிருந்து கடிதம் வந்தது.

அலுவலகத்தில் வேலை மிகக் கொஞ்சம்தான். அதிகாரியின் தொல்லைதான் அதிகம் இருந்தது. ஆகவே எனக்கு அந்த உத்தியோகம் பிடிக்காமல் போயிற்று. நான் எழுத்துத் துறையில் வளர்ந்து முன்னேறவே விரும்பினேன். அதனால் வேலையை வேண்டாமென்று எழுதிக்

கொடுத்துவிட்டேன். என் கடிதம் மேலதிகாரிக்குப்போய் அங்கீகாரம் பெற்று வருவதற்கு ஒரு மாத காலம் ஆயிற்று.

ஸ்ரீவைகுண்டம் வந்து ஒரு வருடம் ஏழு மாதங்கள் பணிபுரிந்த பிறகு நான் அந்த வேலையிலிருந்து வெளியேறினேன். அரசுப் பணியில் சேர்ந்து, மூன்று வருடங்கள் ஏழு மாதங்கள் போக்கிவிட்டு வேலையற்றவனாகத் திருநெல்வேலி சேர்ந்தேன்.

நான் அப்படி வேலையை உதறிவிட்டு வந்தது என் உறவினர்களுக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாக, எனக்கு வேலை வாங்கித் தந்த பெரியவர் என் போக்கை வெறுத்தார். சொந்தக்காரர் ஒருவர் உபதேசம் புரிந்தார். 'நீ வேலையை விட்டது தப்பு. நீ எல்லாம் எழுதி முன்னுக்கு வரமுடியாது. ஒரு வேலையில் இருந்து கொண்டு, உன் மனத்திருப்திக்காக எழுதலாம். ஆபீஸ் வேலை பிடிக்கவில்லை என்றால், சின்னதாக ஒரு கடை வைத்துக் கொண்டு பிழைக்க வழி தேடு. கூட, உன் விருப்பம் போல் எழுது, பத்திரிகை ஆபீசில் சேர்ந்து முன்னேறி விடலாம் என நினைப்பது வெறும் கனவு தான். நம்மைப் போன்றவங்களாலே சொந்தமாகப் பத்திரிகை நடத்தி உயரவும் முடியாது. அதுக்கு நிறையப் பணம் வேணும்' என்று நீண்ட நேரம் பேசினார்

அவருக்குப் பத்திரிகைத் துறை அனுபவம் இருந்தது. இலங்கை போய், கொழும்பு 'வீரகேசரி' பத்திரிகையில் பல வருடங்கள் பணிபுரிந்துவிட்டு, வெறும் ஆளாக ஊர் திரும்பி வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். எனக்கு நல்லுரை கூற அவருக்கு உரிமையும் தகுதியும் இருந்தன.

ஆயினும், எவருடைய நல்லுரையையும் கேட்கும் நிலையில் நான் இருக்கவில்லை. என் உள்ளத்தில் ஒரு உறுதி படிந்திருந்தது, நான் எப்படியும் எழுத்தாளனாக வளர்ந்தே தீர்வேன் என்று.

நான் அரசுப் பணியைத் துறந்துவிட்டது என் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை தான். சரி, உன் இஷ்டம் போல் எழுதி முன்னேறு என்று என் அண்ணா கோமதி நாயகம் ஆதரவு தந்தார். இருக்கிற வேலையை விட்டுப்போட்டு, இனிமேல் என்ன பண்ணப் போகிறானாம் என்று பெரிய அண்ணா கலியாணசுந்தரம் விமர்சித்தார்.

என்ன செய்து எப்படி முன்னேறுவது என்ற எண்ணமே எனக்கு இருந்ததில்லை. எழுத வேண்டும், நிறையப் படிக்க வேண்டும் என்ற உறுத்தலே என்னுள் சதா வேலை செய்தது.

நான் ஸ்ரீவைகுண்டத்தில் தங்கியிருந்த காலத்தில் நல்ல புத்தகங்கள் வாங்கிப் படிக்க வாய்ப்பு கிட்டியது. நல்ல நூல்களை வெளியிட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த நவயுகப்பிரசுராலயம் தொடர்ந்து எட்டணா விலையில் சில புத்தகங்களைத் தான் பிரசுரிக்க முடிந்தது.

சார்லஸ் டிக்கன்சின் 'இருநகரங்களின் கதை'யை மொழிபெயர்த்து 'தேய்ந்தகனவு' என்றும், ஆர்.எல்.ஸ்டீவன்சன் எழுதிய 'டாக்டர் ஜெகில் அன்ட் மிஸ்டர் ஹைட்' நாவலை 'இரட்டை மனிதன்' என்றும் புத்தகங்களாக்கியது அந்த நிறுவனம். 'புதியசீனா', 'மைக்கேல் காலினஸ்' போன்ற வரலாற்று நூல்களையும் பிரசுரித்தது. பின்னர் வியாபார நோக்கில், பல்வேறு விகிதங்களில் விலை வைத்து வகை வகையான புத்தகங்களை வெளியிட்டது. புதுமைப்பித்தன் எழுத்துக்கள் அதிகம் வந்தன.

29 சிறுகதைகள் கொண்ட 'புதுமைப்பித்தன் கதைகள்', மற்றும் 'ஆறு கதைகள்' 'நாசகாரக்கும்பல்' 'பக்தகுசேலா-கலியுகமாடல்' என்கிற சிறு வெளியீடுகள், 'உலகத்துச் சிறுகதைகள்' எனும் மொழிபெயர்ப்புக்கதைகள், சர்வாதிகாரி முசோலினியின் சரிதையான 'பாசிஸ்ட் ஜடாமுனி', ஹிட்லர் பற்றிய 'கப்சிப் தர்பார்' ஆகியவை இந்தக் காலகட்டத்தில் பிரசுரம் பெற்றன.

மற்றும் இந்தி மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப் பெற்ற பலவகை நூல்களும் (கதை, நாடகம், கட்டுரை, நாவல்கள்) அழகு அழகாக வெளியிடப்பட்டன.

இவை எல்லாம் ஸ்ரீவைகுண்டத்தில் விலைக்குக் கிடைத்தன. 'மணிக்கொடி' இதழின் இறுதிக்கட்ட ஆசிரியரான ப. ரா. (ப. ராமஸ்வாமி) தான் 'நவயுகப் பிரசுராலயம்' நிர்வாகியாகச் செயலாற்றிவந்தார். அவருடைய தம்பி ஒருவர் ஸ்ரீவைகுண்டத்தில் கதர்க்கடை வைத்திருந்தார். அவர் 'தினமணி' நாளிதழின் விற்பனையாளர். நவயுகப் பிரசுரம் வெளியீடுகள் விற்பனைக்காக அவர் கடைக்கு வந்தன. அவற்றை நான் வாங்கிப் படித்தேன்.

நான் அவ்வூரில் வசித்த காலத்தில் வீரதீர சுவாரசிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. காசித்தேவன் என்கிற கொள்ளைக்காரன் அந்த வட்டாரத்தில் பிரபல ஹீரோ ஆக வளர்ந்து கொண்டிருந்தான். அவனைப்பற்றி ரசமான கதைகள் பரவி வந்தன.

பத்தாவது வரை படித்த காசி, ஆங்கில வரலாற்றில் படித்தறிந்த ராபின் ஹூட் எனும் கொள்ளைக்காரனை லட்சிய புருஷனாக மதித்தான். முன்னாட்களில், இங்கிலாந்தில் ராபின் ஹூட் என்றொரு கொள்ளையன் இருந்தான். அவன் பணக்காரர்களைக் கொள்ளையடித்தான். சிரமப்படும் ஏழை எளியவர்களுக்குத் தாராளமாக உதவிபுரிந்தான். அதனால் பயங்கரவாதியாகக் கருதப்பட்ட அவன் பெரும்பாலோரால் கருணைவீரன், ஏழைப்பங்காளன் என்று போற்றப்பட்டான். அவனைப்பற்றிக் கவிதைகளும் கதைகளும் எழுதப்பட்டிருந்தன. அவனைப் போலவே தானும் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டான் காசி. அத்துடன், தென்மாவட்டங்களில், ஒரு காலத்தில் மிகவும் கீர்த்தி பெற்று விளங்கிய ஜம்புலிங்கம் என்ற கொள்ளைக்காரனும் காசிக்கு முன்னோடி வீரனாகத் திகழ்ந்தான். ஆகவே, அவன் காசித் தேவன்

என்ற கொள்ளையனாக மாறினான். ஒரு ஆசாரி செய்த நாட்டுத் துப்பாக்கி அவனுடைய ஆயுதம் ஆயிற்று. துணைக்கு ஒருவனும் சேர்ந்தான். இரண்டு பேரும் குறுகிய காலத்தில் பெரும்பெயர் பெற்றுவிட்டார்கள். போலீஸார் கையில் அகப்படாமல் சாகசச் செயல்கள் புரிந்து திரிந்தார்கள்.

கடைசியில் இருவரும் பிடிபட்டார்கள். அவர்களைக் கைவிலங்கு மாட்டி போலீசார் வீதி வழியே இட்டுச் சென்றார்கள். 'விவசாய ஆபீஸ்' முன்பக்கமாகப் போகையில் காசித்தேவனை நான் பார்த்தேன். வீரநாயகனாக அவன் உருவம் பெற்றிருக்கவில்லை. சற்று உயரமாய், மெலிந்த உடல் பெற்ற சாதாரண நபராகத்தான் தோற்றம் அளித்தான். கொள்ளையனின் பராக்கிரமச் செயல்களைக் கேள்விப்பட்டிருந்த எனக்கு அவனது தோற்றம் ஏமாற்றமே தந்தது.

ஸ்ரீவைகுண்டம் பற்றி இன்னொரு முக்கிய விஷயமும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

நவதிருப்பதிகளில் ஒன்று எனப் புகழ் பெற்றிருந்த அந்த ஊரில் மிகப் பிற்போக்குத்தனமும் அநாகரிகமுமான ஒரு வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்த ஒரு இனத்தினர் கோட்டை கட்டி வசித்தார்கள். கோட்டைப் பிள்ளைமார் என அறியப்பட்டிருந்த அவ் இனத்தார் பல தலைமுறைகளாகத் தனித்து ஒதுங்கி வாழ்ந்து வந்தார்கள். பண்டைக்கால முறைப்படி அமைக்கப்பட்ட மண்கோட்டை. அதனுள் ஒரு தனி ஊர் போல் அநேக குடும்பங்கள் வாழ்ந்தன. நான் அங்கிருந்த நாட்களில், அறுபது குடும்பத்தார் கோட்டைக்குள் வசித்ததாகச் சொன்னார்கள்.

இந்த இனத்தைச் சேர்ந்த ஆண்கள் வெளியே வருவார்கள்; ஊர்வழி போவார்கள்; பகலில், வெளியே அவர்கள் அமைத்துள்ள வீடுகளில் பொழுது போக்குவார்கள்; தொழில் புரிவார்கள். சொந்தமாக வைத்திருந்த வயல்களில் விவசாய அலுவல்களை மேற்பார்ப்பார்கள். அவர்களில் நன்கு படித்து வக்கீல்களாகவும், அரசு அலுவலகங்களில் பணிபுரிகிறவர்களாகவும் வாழ்ந்தவர்களும் உண்டு. சென்னை, கோயமுத்தூர் போன்ற பெரிய நகரங்களுக்குப் போய் வந்த சமூகப் பிரமுகர்களும் இருந்தார்கள்.

ஆயினும், 'கோட்டைப்பிள்ளைமார்' இனப் பெண்கள் மிகுந்த கட்டுப்பாட்டுக்கு ஆட்பட்டிருந்தார்கள். அவர்கள் வெளி உலகுக்கு வர அனுமதிக்கப்பட்டதில்லை. சிறுமியர் கூடக் கோட்டை வாசலுக்கு வெளியே அடிஎடுத்து வைக்கக் கூடாது என்ற கண்டிப்பு இருந்தது.

எப்பவோ ஒரு குமரிப்பெண் வடக்குக் கோட்டை வாசல் வழியாக வெளியே போய் வந்து கொண்டிருந்தாளாம் அவளுக்கும் வேற்றுச் சாதி இளைஞன் ஒருவனுக்கும் தொடர்பும் காம உறவும் ஏற்பட்டிருந்ததாம். அதை அறிந்ததும் பெரியவர்கள் இரவோடு இரவாக அந்தப் பெண்ணை வெட்டிக்

கொன்று, வடக்கு வாசலில் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்களாம். அன்றிலிருந்து அந்த வாசல் நிரந்தரமாக அடைக்கப்பட்டு விட்டது. கிழக்கு, மேற்கு, தெற்குக்கோட்டை வாசல்கள் மட்டுமே திறந்து வைக்கப்படும். இரவில் அவை மூடப்பட்டு விடும்.

கோட்டைப் பிள்ளைமார் பெண்கள் தங்களுக்குள் உறவாடிக் கொள்வது தான். வெளி உலக ஆட்களையோ அழகுகளையோ அதிசயங்களையோ காணும் வாய்ப்பும் வசதியும் அவர்களுக்குக் கிடையா. வெளிஉலகப் பெண்கள் அபூர்வமாகக் கோட்டைக்குள் போய்வர அனுமதிக்கப்படுவார்கள். சின்னப் பையன்கள் கூட உள்ளே போகக் கூடாது.

கோட்டைக்குள்ளேயே அம்மன் கோயில், பிள்ளையார் கோயில் இருந்ததாகச் சொல்லப்பட்டது. 'ஆத்திர அவசரத்துக்கு'த் தேவைப்படுகிற சாமான்களை வாங்கிக்கொள்ள வகைசெய்யும் சிறுசிறு கடைகளும் ஒருசில இருந்ததாகச் சொன்னார்கள்.

பெண்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள், அவர்கள் இயற்கையாக ஓடும் தண்ணீரை-ஆற்றையும் வாய்க்காலையும் பார்த்தது கிடையாது. குளம், கோயில், ரயில், பஸ், கடைவீதி போன்ற எதுவுமே அவர்கள் வாழ்நாளில் அவர்களுக்கு அறிமுகமானதில்லை. கல்வி அறிவு பெறுவதற்கான வசதியும் அவர்களுக்குச் செய்து தரப்பட்டதில்லை.

1960 வாக்கில் கோட்டைப் பிள்ளைமாரிடையே பங்காளித் தகராறு ஏற்பட்டது. ஒரு பிரமுகர் கொலை செய்யப்பட்டார். அவருக்கு நெருக்கமான சில குடும்பத்தினர் கோட்டையை விட்டு வெளியேறிப் பாளையங்கோட்டைக்கு வசிக்கப் போய்விட்டார்கள். அவர்களில் சிலர் வேலை தேடிக்கொண்டு வெவ்வேறு ஊர்களில் குடியேறினார்கள். கோட்டைக்குள்ளேயே தங்கியிருந்த குடும்பத்தினர் செழித்து வளரவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது, கோட்டையைப் பழுது பார்த்துப் பராமரிப்பதற்காக அரசு அந்த இனத்தாருக்கு ஒரு தொகை மானியம் அளித்து வந்தது. காலப் போக்கில் அச் சிறு தொகை பற்றாததால் கோட்டைச் சுவர்கள் சரிவரப் பராமரிக்கப்படவில்லை. மழை, புயல் முதலிய இயற்கை சக்திகளால் பாதிக்கப்பட்டுக் கோட்டைச் சுவரின் பகுதிகள் சிதைந்து கொண்டிருந்தது பளிச்செனப் புலனாயிற்று.

காலத்துக்கு ஒத்து வராத, முரண்பட்ட இந்த வாழ்க்கைமுறை நாளடைவில் தானாகவே சிதைந்து போயிற்று.

கோட்டையினுள் எஞ்சியிருந்த சில குடும்பத்தாரும் ஒவ்வொருவராக வெளியேறி எங்கெங்கோ வசிக்கப் போய்விட்டார்கள். கோட்டை கவனிப்பின்றி வெறிச்சிட்டுக் கிடக்கிறது என்பது பிற்காலத் தகவல்.

10

திருநெல்வேலியில் அமைதியாக நாட்கள் ஓடின.

என் அண்ணா கோமதி நாயகம் அங்குள்ள தி மெடிக்கல் ஸ்டோர்ஸ் எனும் மருந்துக்கடையில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். அரசடிப்பாலத் தெருவில் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்தி அண்ணா. அம்மா. தம்பி முருகேசன் வசித்து வந்தார்கள். பெரிய அண்ணாச்சி கலியாணசுந்தரத்துக்குத் திருமணமாகி ஒரு குழந்தை பிறந்திருந்தது. அவர் முனிசிபல் பஸ் நிலையத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார். அவர் மாமனார் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

அரசடிப்பாலத் தெரு வீட்டில் நானும் சேர்ந்து கொண்டேன். படிப்பும் எழுத்தும் என் முழுநேர வேலை ஆயின. உற்சாகமாக எழுதுவதற்காக நான் திரும்பவும் 'இதயஒலி' என்கிற கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினேன். அதன் பக்கங்கள் முழுவதிலும் என் எழுத்துக்கள் மட்டுமே இடம் பெற்றன. அதற்காக மேலும் பல புனைபெயர்கள் – நையாண்டி பாரதி, கோரநாதன், மிவாஸ்கி, சொனா.முனா, பிள்ளையார் முதலியன சூடிக்கொண்டேன்.

என் கதைகள் பல பத்திரிகைகளிலும் வரத்தொடங்கின. சக்திதாசனின் 'நவசக்தி'யில் மாதம்தோறும் என் சிறுகதை வெளியாயிற்று. 'கலைமகள்' இதழிலும் வந்தன.

புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, க.நா. சுப்ரமண்யம், ந. சிதம்பரசுப்ரமண்யன் முதலிய, பிரசித்தி பெற்ற 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' கதைகள் அக்கால கட்டத்தில் 'கலைமக'ளில் வெளியாயின. அவர்களது எழுத்துக்களோடு என் கதைகளும் இடம் பெற்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி தந்தது. பெருமையாகவும் இருந்தது.

அப்போது நான் உருவகக் கதைகள் எழுதிக் கொண்டிருந்தேன். ஆஸ்கார் ஓயில்ட் எனும் ஆங்கில எழுத்தாளர் 'ப்ரோஸ் போயம்ஸ்' என்ற பெயரில் சின்னச் சின்னக் கதைகள் எழுதிப் பெயர் பெற்றிருந்தார். இவான் துர்கனேவ் என்கிற ரஷ்ய எழுத்தாளரும் அப்படிப்பட்ட 'ப்ரோஸ் போயம்ஸ்' எழுதியிருந்தார். அழகான நடையில், தத்துவ நோக்கில், வாழ்க்கை இயல்புகளை எடுத்துக் கூறும் குட்டிக் கதைகள். ஒரு பக்கத்திற்குள் அடங்கிவிடும். அத்தகைய தத்துவக் கதைகள் நல்ல கவனிப்பைப் பெற்றன.

இச் சந்தர்ப்பத்தில் நெல்லை வாலிபர்கள் பலரின் அறிமுகம் எனக்குக் கிட்டியது. இளைஞர்கள் பலர் சேர்ந்து 'நெல்லை வாலிபர் சங்கம்' அமைத்திருந்தார்கள். திருநெல்வேலி சம்பந்தர் தெருவில் ஒரு வீட்டின்

மாடியில் வாரம் தோறும் கூடி பேசிப் பயின்றார்கள். அவர்களில் சிலர் என்னைத் தேடி வந்தார்கள். அவர்கள் சங்கத்தில் ஒரு கூட்டத்தில் பாரதியார் பற்றி நான் பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவ் வாலிபர்களில் தி.க.சிவசங்கரனும் ஒருவர்.

நானும் நெல்லை வாலிபர் சங்கம் கூட்டங்களுக்குப் போய் வந்தேன். அவர்களில் சிலருக்குத் தாங்களும் எழுத வேண்டும் என்ற தாகம் எழுந்திருந்தது. தி.க. சிவசங்கரனும் மற்றும் இரண்டு மூன்று பேரும் எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் வளர்ச்சிக்கு நான் துணை புரிய வேண்டும் என்று கோரி, என்னைச் சங்கத்தின் தலைவராக்கினார்கள். அவர்களுக்கு உதவும் நோக்கத்தோடு, 'இளந்தமிழன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையை ஆரம்பித்தேன். சில இதழ்களுக்கு அவர்களில் அநேகர் உற்சாகத்தோடு எழுதினார்கள். பிறகு சோர்ந்துபோனார்கள். தி.க.சி.மட்டும் தொடர்ந்து எழுதுவதில் ஆர்வம் காட்டி வந்தார்.

திருநெல்வேலியில் வேறொரு பகுதியில் 'மணிஅரசுக் கழகம்' என்ற அமைப்பை சில இளைஞர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் 'மணிஅரசு' எனும் கையெழுத்து சஞ்சிகையைத் தயாரித்து வந்தார்கள். தொ.மு.சி. ரகுநாதன் அதன் பொறுப்பை ஏற்றிருந்தார். அவருடைய அறிமுகமும் எனக்குக் கிடைத்தது.

1941 டிசம்பரில் நெல்லை வாலிபர் சங்கம் ஆண்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தோம். 'சொல்லின் செல்வர்' ரா.பி.சேதுப்பிள்ளையைச் சிறப்புச் சொற்பொழிவாளராக அழைத்தோம். அவரும் மகிழ்ச்சியுடன் வந்து அருமையான சொல்விருந்து அளித்தார்.

ஆண்டு விழா அழைப்பின் முதல் பக்கத்தில், 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்' என்று பாரதிதாசன் வரிகளை அச்சிட்டிருந்தோம். கடைசிப் பக்கத்தில், 'பேச்செல்லாம் தமிழினிலே பேசுங்கள்; ஏச்செல்லாம் தமிழினிலே ஏசுங்கள்' என்று பொறித்திருந்தோம்.

அதைப் பார்த்துச் சேதுப்பிள்ளை மகிழ்ச்சி அடைந்தார். சொற்பொழிவில் அதைக் குறிப்பிட்டுப் பேசினார். 'இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களின் தமிழ்ப்பற்று பாராட்டப்பட வேண்டியது ஆகும். பேச்செல்லாம் தமிழினிலே பேசுங்கள் என்று கூறி நிறுத்திவிடாமல், ஏச்சுக்களைக் கூடத் தமிழிலே ஏசுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார்கள். முன்பு ஒரு சிவனடியார் பாடினார், வைதாலும் தமிழினிலே வையுங்கள், வாழ்த்தெனக் கொண்டிடுவேன் என்று. அந்தப் பக்தரின் பண்பும் தமிழ்ப்பற்றும் இவர்களுக்கும் இருக்கிறது. இது சாதாரணமானது அல்ல' என்றார்.

தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவது பற்றிச் சேதுப்பிள்ளை கூறியது என் நினைவில் நன்கு பதிந்துள்ளது. அருவி எனும் அழகான சொல்

இருக்கிறது. ஆனால், இப்போதெல்லாம் நீர்வீழ்ச்சி என்று எழுதுகிறார்கள். ஆங்கிலேயர் 'வாட்டர்ஃபால்ஸ்' எனக் கூறுவதைப் பின்பற்றித் தமிழ் நாட்டினரும் அதன் மொழிபெயர்ப்பாக நீர்வீழ்ச்சி என்கிறார்கள். அழகான அருவியை ஒதுக்கிவிட்டு, நீர்வீழ்ச்சி என்று ஏன் அமங்கலமாகக் கூற வேண்டும் என்று அவர் கேட்டார்.

அதே போலக் காவிரி என்ற இனிய சொல், வழக்கத்தில் காவேரி என்று திரிந்துவிட்டது. பேச்சிலும் எழுத்திலும் அப்படியே வழங்கப்படுகிறது. காவேரி என்பது பொருளற்றது. 'காவிரி' என்பது தோப்புகள் மரங்கள் அடர்ந்த கரைகளிடையே விரிந்து செல்லும் ஆற்றைக் குறிக்கும். காவேரி என்றால்? மழைநாட்களில் காவிரியில் செம்மண் நிறத்தில் நீர் ஓடும். அதில் குளித்துக் கரை ஏறுகிறவர்களின் வெள்ளைவேட்டி காவியேறி நிறம் மாறிக் காணப்படும். அதைக் குறிக்கத்தான் காவேறி என்று சொல்கிறார்கள் போலும் என்றும் சேதுப்பிள்ளை பேசினார்.

கடைவீதிகளில் உள்ள கடைகளின் பெயர்ப்பலகைகளில் எல்லாம் தமிழ்ப் பெயர்களை விட ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பெயர்களே காணப்படுகின்றன. ஆங்கிலப் பெயர்கள் அழிக்கப்பட்டு அங்கே தமிழ்ச் சொற்கள் எழுதப்படவேண்டும். நெல்லை வாலிபர் சங்கத்தினர் இவ்விதம் திருத்தம் செய்வது, அழகான தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துவது முதலிய நற்பணிகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று 'சொல்லின் செல்வர்' எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ளவர்களின் ஆங்கில மோகம் கால வேகத்தோடு சேர்ந்து வளர்ந்து வந்திருக்கிறதே தவிர குறைந்து விடவில்லை.

இச் சந்தர்ப்பத்தில்தான், 'பாரதிதாசன் கவிதைகள்' புதிய பதிப்பு வெளிவந்திருந்தது. நெல்லை வாலிபர்களுக்குப் பாரதிதாசன் கவிதைகள் பேரில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது.

'அல்லயன்ஸ் கம்பெனி' தமிழ்நாட்டுச் சிறுகதைகள் என்ற வரிசையில், பெயர் பெற்ற எழுத்தாளர்களின் கதைகளைத் தொகுத்து தனித்தனிப் புத்தகமாக வெளியிட்டது. வ.வெ.சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்','ராஜாஜி குட்டிக்கதைகள்', த.நா. குமாரஸ்வாமியின் 'கன்யாகுமரி' , கு.ப. ராஜகோபாலனின் 'கனகாம்பரம்', ந. சிதம்பரசுப்ர மணியனின் 'சக்ரவாகம்', தி.ஜ. ரங்கநாதனின் 'சந்தனக்காவடி', தி. நா. சுப்பிரமணியனின் 'தோட்டியை மணந்த அரசகுமாரி', பி.எம். கண்ணனின் 'பவழமாலை' கா.சி. வேங்கடரமணியின் 'ஜடாதரன்' ஆகியவை தொடர்ச்சியாகப் பிரசுரம் பெற்றன. இவற்றுடன் , பல எழுத்தாளர்களின் ஒவ்வொரு கதையைச் சேகரித்து, 'கதைக்கோவை' என்ற பெயரில் பெரிய புத்தகமாகவும் அந்த நிறுவனம் வெளியிட்டது.

இதனால் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சியை, வளத்தை, வகைகளை, வனப்பைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

கலைமகள், ஆனந்த விகடன் தீபாவளி மலர், மற்றும் சில சிறப்பு வெளியீடுகளில் 'ரசிகமணி' டி.கே. சிதம்பரநாத முதலியார் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பெற்று, 'இதயஒலி' என்ற நல்ல நூல் அப்போதுதான் வெளிவந்தது. அதைப் பிரசுரித்த மறுமலர்ச்சி பதிப்பகம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதைகளை 'மலரும் மாலையும்' என்ற தொகுப்பாகக் கொண்டு வந்தது. 'முக்கூடற் பள்ளு' நூலையும் வெளியிட்டது.

அப்போது டி.கே.சி. தாமிரவர்ணி ஆற்றங்கரையை ஒட்டியுள்ள வண்ணாரப்பேட்டை என்ற ஊரில் வசித்து வந்தார். புதுமைப்பித்தன் ஊரும் அதுதான். ஆனால் அவர் சென்னையில் வசித்தார்.

டி.கே.சி.யின் கட்டுரைகளைப் படித்து ரசித்த நாங்கள் அவரைச் சந்திப்பது என்று தீர்மானித்தோம்.

ஒருநாள் பிற்பகலில் நான், தி.க.சி., வேலாயுதம் என்ற நண்பர் ஆக மூன்று பேரும் திருநெல்வேலி டவுனில் இருந்து நடந்தோம். திருநெல்வேலி ஜங்ஷன்தோய், சிந்து பூந்துறை அடைந்தோம்.

ஆற்றின் கிழக்குப் பக்கக் கரை மீதுள்ள அழகான ஊர் சிந்து பூந்துறை. அதற்கு நேராக அக்கரையில் இருக்கிறது வண்ணாரப்பேட்டை. ஆற்றை ஒட்டிப் பெத்தாச்சி அம்மன் கோயில் இருக்கிறது. ஜங்ஷனிலிருந்து ஆற்றைக் கடந்து அக்கரை போவதற்கு ஒரு பெரிய பாலம் உள்ளது. சுலோசன முதலியார் பாலம். இச் சுற்றுப்புறம் எல்லாம் புதுமைப் பித்தன் கதைகளில் இடம் பெற்றிருக்கின்றன.

நாங்கள் ஆற்றில் இறங்கி நடந்தோம். அதிகமான தண்ணீர் இல்லை. நடந்து போக வசதியாகத்தான் இருந்தது.

நான்கு மணி அளவில் டி.கே.சி. வீட்டை அடைந்தோம். பிற்காலத்தில் எஸ்.வி.எஸ். என்ற எழுத்தாளராகப் பெயர் பெற்ற எஸ். வேங்கடசுப்பிரமணியம் டி.கே.சி.யின் உதவியாளராகப் பணியாற்றி வந்தார் அப்போது, நாங்கள் எங்களை அறிமுகம் செய்து கொண்டோம்.

அடுத்த அறையில் சாய்வு நாற்காலியில் ஓய்வாகச் சாய்ந்திருந்த டி.கே.சி.யிடம் அவர் எங்களை அழைத்துச் சென்று 'உங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்கள்' என்றார்.

ரசிகமணியிடமும் நாங்கள் எங்களை அறிமுகம் செய்து கொண்டோம். சிறுவர்களான எங்களை அவர் அலட்சியமாகப் பார்க்கவில்லை. நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து மலர்ந்த முகத்தோடு வரவேற்றார். அருகில் இருந்த

ஆசனங்களில் அமரும்படி உபசரித்தார். நாங்கள் என்ன செய்கிறோம் என்று கேட்டுத் தெரிந்து கொண்டார். தமிழின் சிறப்புப் பற்றியும், தமிழ்க் கவிதைகள், கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம் பற்றியும் எடுத்துச் சொன்னார். அப்போதுதான் வெளிவந்திருந்த இதயஒலி புத்தகத்தை எடுத்து, அதில் உள்ள நயமான பகுதிகளை ரசமாக விவரித்தார். கவிதைகளைப் பாவத்தோடு வாசித்துக்காட்டினார்.

பள்ளிப் படிப்பு, கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள், அவர்களில் சிலர் எழுத்துக்கள் எல்லாம் டி.கே.சிக்குப் பிடிக்காது. அவை பற்றிக் கேலியாகவும் கண்டித்தும் அவர் பல இடங்களில் எழுதியுள்ளார். அன்று பேச்சிலும் அதே தொனியில் அவர் அழுத்தமாகக் கருத்துக்கள் தெரிவித்தார்.

அவர் ரொம்பப் பெரியவர். நாங்கள் சிறுவர்கள். எனக்கு அப்போது வயது 21. எனினும் தோற்றத்தில் ஒரு பையன் மாதிரித்தான் இருந்தேன். இரண்டு மூன்று வருடங்களாகத் தான் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருந்தேன். தி.க.சிவசங்கரனும் வேலாயுதமும் கல்லூரி மாணவர்கள். இருப்பினும், டி.கே.சி எங்களைச் சமமானவர்கள் போல் மதித்து, அன்புடன் இயல்பாகப் பேசி மகிழ்ந்தார். அது அவருடைய பெரிய மனிதப் பண்பையும் பண்பாட்டையும் புலப்படுத்தியது.

ஒரு மணிநேரத்துக்கும் அதிகமாகவே உரையாடல் நிகழ்ந்தது. பிறகு நாங்களாகவே விடைபெற்றுப் புறப்பட்டோம். எங்களுக்கு மிகுந்த மனநிறைவு தந்தது அந்தச் சந்திப்பு. அது மிக இனிய அனுபவமாக அமைந்தது.

எழுதவேண்டும் என்ற ஆசை நெல்லை வாலிப சங்க உறுப்பினர்களுக்கு இருந்தது. ஆயினும் ஊக்கத்தோடு உழைக்கக்கூடிய மனமும் பொறுமையும் அவர்களுக்கு இல்லை. ஆரம்பத்தில் 'இளந்தமிழன்' இதழுக்கு ஏதாவது எழுதவேண்டும் என்று விரும்பி முயன்றார்கள். போகப் போக அவர்களுக்கு உற்சாகம் தேய்ந்து விட்டது. எழுதும் முயற்சியையே விட்டுவிட்டார்கள். தி.க. சிவசங்கரனும் தி.ப. திருஞானசம்பந்தம் என்ற மாணவரும் அவ்வப்போது எழுதித் தந்தார்கள்.

தி.க.சி 'நடைச்சித்திரம்' பாணிக் கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். கவிதையும் எழுதினார்.

'நடைச்சித்திரம்' என்பது தமிழக்குப் புதிதாக வ.ரா. அறிமுகப்படுத்தியிருந்த இலக்கிய வடிவம். 'மணிக்கொடி' சிறுகதைப் பத்திரிகையாக மாறுவதற்கு முன்னர், வார இதழாக வந்து கொண்டிருந்தது. அரசியல், சமூக சீர்திருத்த விஷயங்களோடு சிறுகதை இலக்கியக் கட்டுரைகளும் அதில் இடம் பெற்றன. அதில் 'நடைச்சித்திரம்' என்ற தலைப்பில் வ.ரா. வாரம்தோறும் ஒரு கட்டுரை எழுதினார்.

அன்றாட வாழ்க்கையில் காணப்படுகிற சாதாரண பாத்திரங்கள், அவர்களுடைய குணவிசித்திரங்கள் முதலியவற்றைச் சுவாரசியமாக விவரிப்பது 'நடைச்சித்திரம்' ஆங்கிலத்தில் ஏ.ஜி. கார்டினர் என்பவர் 'லைஃப் ஸ்கெட்சஸ்' என்று பல்வேறு குணச்சித்திரங்களை வர்ணித்து எழுதிய கட்டுரைகள் விசேஷ கவனிப்புப் பெற்றிருந்தன. அதே பாணியில் வ.ரா. தமிழில் எழுதினார். அங்காடிக்கூடை அலமேலு, மளிகைக்கடை மாணிக்கம், காவல் காத்தான் கான்ஸ்டபிள் சுப்பையா என்று பல ரகமான சாதாரணர்களைப் பற்றிய வர்ணனைகள். அவை 'நடைச்சித்திரம்' என்ற பெயரில் பெரிய புத்தகமாக வெளி வந்திருந்தது. (பல வருடங்களுக்குப் பிறகு அதன் மறுபதிப்பு, வேறொரு பதிப்பகத்தாரால், 'வாழ்க்கைச் சித்திரம்' என்ற பெயருடன் பிரசுரிக்கப்பட்டது)

வ.ரா.வின் எழுத்துக்களால் தாக்கம் பெற்ற தி.க.சி., வண்டிக்கார வேலு, மாடு மேய்க்கும் கருப்பசாமி என்று சில கட்டுரைகள் எழுதினார். அப்புறம் அவர் அதைத் தொடரவில்லை.

ஆகவே இளந்தமிழன் கையெழுத்துப் பத்திரிகையின் பக்கங்களை நிரப்ப வேண்டிய பொறுப்பும் என்னைச் சேர்ந்ததாயிற்று. நான் 'இதயஒலி' என்கிற எனது சொந்தப் பத்திரிகையுடன், வாலிபர்களுக்காக இளந்தமிழன் இதழையும் உருவாக்கி வந்தேன். ஒரு வருடம் முடிந்ததும் இளந்தமிழன் இதழுக்கு மூடுவிழா நடத்திவிட்டேன்.

என் எழுத்துக்களை விரும்பி ஏற்றுப் பிரசுரிப்பதற்குப் பல பத்திரிகைகள் இருந்தன. சென்னையில் இருந்து வெளிவந்த 'நவசக்தி' 'பாரதசக்தி', கோயம்புத்தூரிலிருந்து வந்து கொண்டிருந்த 'சினிமா உலகம்' (மாதம் இருமுறை) புதுக்கோட்டையிலிருந்து வந்த 'திருமகள்' 'அணிகலம்' என்னும் மாத இதழ்கள், திருச்சியிருந்து வந்த மறுமலர்ச்சி இலக்கிய இதழ் 'கலாமோகினி' முதலியன. எல்லாம் தரமான சிற்றிதழ்களாகவே விளங்கின. ஆனால், எந்த இதழும் எழுத்தாளருக்குச் சன்மானம் தரக்கூடிய நிலையில் இருந்ததில்லை.

முதன்முதலாக எழுத்து மூலம் எனக்குச் சன்மானம் என்று கிடைத்தது ஆனந்த விகடன் பத்திரிகையில் இருந்து. 'புன்னகையும் புதுநிலவும்' என்ற எனது கதையை வெளியிட்டுப் பதின்மூன்று ரூபாய் எட்டணா சன்மானம் வழங்கியது அது.

கதை மூலம் அடுத்து நான் பெற்ற வருமானம் 'இந்திரா' என்ற மாதப் பத்திரிகையிலிருந்து. காரைக்குடியில் இருந்து வெளிவந்த 'இந்திரா' ஒரு சிறுகதைப் போட்டி நடத்தியது. அதில் என் கதை 'தெருக்கூத்து' முதல் பரிசு பெற்றது. தெருவில் கழைக்கூத்து விளையாட்டுகள் ஆடிக்காட்டி, கிடைக்கிற காசுகளைக் கொண்டு வாழ்க்கை நடத்திய ஒரு ஏழைக் குடும்பத்தைப் பற்றிய

கதை. அதற்குப் பரிசுத் தொகை நூறு ரூபாய் வந்தது. அந்தக் காலத்தில் அது பெரிய தொகைதான்.

அதன் பிறகு 'இந்திரா' இதழ் தோறும் எனது கதைகளைப் பிரசுரம் செய்தது. ஆனால் பணம் எதுவும் தரவில்லை. அவ்வப்போது என் கதைகளை வெளியிட்ட கலைமகள்கூட எனக்குப் பணம் தந்ததில்லை. புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி போன்ற பெரிய எழுத்தாளர்களுக்கு மட்டும் கலைமகள் சன்மானம் அளித்துவந்தது. கதைக்குப் பதினைந்து ரூபாய்.

நான் எழுத்துத் துறையில் வளர்ச்சி பெற வேண்டும் என்ற ஊக்கத்தோடு எழுதிக் கொண்டிருந்தேன். அதனால் பத்திரிகைகள் பலவும் விரும்பி என் எழுத்துக்களை வெளியிட்டுக்கொண்டிருந்தது எனக்கு உற்சாகம் அளித்து வந்தது. என் எழுத்துகளுக்குப் பத்திரிகைகள் பணம் தர வேண்டும் என நான் எண்ணவுமில்லை; எதிர்பார்த்ததும் இல்லை.

மாதங்கள் மகிழ்ச்சிகரமாகப் போய்க்கொண்டிருந்தன. படிப்பதற்கு நல்ல பத்திரிகைகளும் புத்தகங்களும் கிடைத்தன.

திருநெல்வேலி முனிசிபல் நூல்நிலையத்தில் நல்ல ஆங்கிலப் புத்தகங்களும் இருந்தன. பெர்னாட்ஷா நாடகங்கள் அதிகம் இருந்தன. அண்ணா கோமதிநாயகம் படிப்பதற்காக அவற்றை வீட்டுக்கு எடுத்து வந்தார்.

தமிழ்ப் புத்தகங்களை நாங்கள் விலைக்கு வாங்கினோம். மொழிபெயர்ப்பு நாவல்கள் வேகமாக வெளிவந்து விற்பனையாயின. பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்', 'விஷவிருட்சம்', மற்றும் 'தேவி சௌது ராணி', 'ராஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம்' போன்ற நாவல்களின் தமிழாக்கங்கள் புத்தகங்களாகவே வெளிவந்தன.

'கலைமகள்' பிரேம் சந்த் நாவல்களைத் தொடர்கதையாக வெளியிட்டது. பங்கிம் சந்திரரின் 'அக்கினி' நாவலைத் தொடர்ந்து பிரசுரித்தது. ஆனந்த விகடன் 'சேவா சதனம்' நாவலை வெளியிட்டு வந்தது.

அந்தச் சமயத்தில்தான் வி.ஸ. காண்டேகர் எனும் மராத்தி எழுத்தாளரின் நாவல்கள் தமிழில் அறிமுகமாயின. 'வெறும் கோயில்' புத்தகமாகவே வெளிவந்தது. காண்டேகரின் எழுத்தாற்றலும், கதைப் போக்கும், கா.ஸ்ரீ.ஸ்ரீ.யின் திறமையான தமிழாக்கமும் அந்த நாவலுக்கு நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தன. தொடர்ந்து பிரசுரம் பெற்ற காண்டேகர் நாவல்கள் 'சுகம் எங்கே?', 'எரி நட்சத்திரம்' முதலியனவும் தமிழ் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தன. தொடர்ந்து வந்த 'கருகிய மொட்டு' பரபரப்பான கவனிப்பைப் பெற்றது. தமிழ்ப் பத்திரிகைகள் காண்டேகர் நாவல்களைத் தொடர்கதைகளாகப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டின.

நண்பர் தி.க. சிவசங்கரனும் புதிய புத்தகங்கள் வாங்கிப் படிப்பதில் உற்சாகம் காட்டினார். அவர் வாங்கிய புத்தகங்களை எங்களுக்குப் படிக்கத் தந்தார். மகாத்மா காந்தி நூல்கள், சுபாஷ் சந்திரபோசின் 'இளைஞன் கனவு', வ.ரா. கட்டுரைகளின் தொகுப்பு 'மழையும் புயலும்' போன்ற நூல்கள் அவர் மூலம் கிடைத்தன.

பெரிய அண்ணாச்சி கலியாண சுந்தரத்துக்கு அறிமுகமான ஒரு போலீஸ்காரர்- வள்ளிநாயகம் என்று பெயர்- தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு உடையவராக இருந்தார். சங்க இலக்கியங்கள் சம்பந்தமான புத்தகங்கள், திரு.வி. கலியாணசுந்தரமுதலியார் நூல்கள் முதலியவற்றை அவர் வைத்திருந்தார். அவற்றைப் படிக்கத் தந்து உதவினார்.

'சக்தி' என்ற மாதப் பத்திரிகை தனித் தன்மையோடு, சிறப்பாக வந்துகொண்டிருந்தது. அதன் நிர்வாக ஆசிரியரான வை. கோவிந்தன் நல்ல நோக்கமும் உயர்ந்த கொள்கைகளும் கொண்ட இலட்சியவாதி. தமிழில் உயர்ரகமான நூல்களை வெளியிட வேண்டும் என்ற ஆசையோடு அவர் 'சக்தி பிரசுரம்' ஆரம்பித்து நடத்தினார்.

'பெங்குவின் புக்ஸ்' எனும் வெளியீடுகள் அக்காலத்தில் ஆறணா விலையில் நல்ல புனைகதை இலக்கியங்களை (ஃபிக்ஷன்) விற்பனை செய்தது. அறிவியல் நூல்கள்- விஞ்ஞானம், தத்துவம், அரசியல் முதலியவை - 'பெலிக்கன் புக்ஸ்' என்ற பெயரில் பிரசுரம் பெற்றன.

சக்தி புத்தகங்களும் அதே மாதிரி விளங்கவேண்டும் என்று வை. கோவிந்தன் விரும்பினார். அவ்விதமே நூல்கள் வெளியிடலானார். புத்தக வெளியீட்டுடன் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' பாணியில் ஒரு பத்திரிகை நடத்த வேண்டும் என்ற எண்ணமும் அவருக்கு இருந்தது. அதனால் 'சக்தி' மாத இதழைத் தொடங்கினார்.

ஆரம்பத்தில் 'டைம்' பத்திரிகை மாதிரியான அளவும் அட்டை அமைப்பும் கொண்டு அந்த இதழ் வந்தது. சுத்தானந்த பாரதியார் இதழ் பொறுப்பைக் கவனித்துவந்தார் சிறிது காலத்துக்குப் பின்னர், தி.ஜ.ர. (தி.ஜ.ரங்கநாதன்) அதன் ஆசிரியரானார். 'சக்தி' புதிய அளவும் புதுப்பொலிவும் உள்ளடக்க மாற்றங்களும் பெற்று வளரலாயிற்று.

'சக்தி' இதழைப் பரவலாகத் தெரியச் செய்ய வேண்டும் என்று விரும்பினோம். முன்பணம் இல்லாது, பத்துப்பிரதிகள் அனுப்பிவைத்தால், அவற்றை விற்று உடனே பணம் அனுப்பிவிட இயலும் என்று 'சக்தி' காரியாலயத்துக்கு எழுதினேன்.

சுப. நாராயணன் என்ற அன்பர் அங்கு விற்பனை மேலாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் என் எழுத்துக்களிலும் எனது தமிழ் நடையிலும் வியப்பும் மதிப்பும் வைத்திருந்தார். என் வேண்டுகோளை ஏற்று

அவர் மாதம் தோறும் பிரதிகள் அனுப்பினார். அவை விற்பனையானதும் உடனே பணத்தை அலுவலத்துக்கு அனுப்பிவைத்தோம்.

இலக்கிய நண்பர்கள் 'சக்தி'யை விரும்பிப் படித்தார்கள். அதனால் அதன் விற்பனை அதிகரித்து, 25,-30 பிரதிகள் என்று உயர்ந்து, மாதம் ஐம்பது பிரதிகள் விற்பனையாகும் நிலை ஏற்பட்டது. சக்தி அலுவலகம் முன்பணம் கேட்காமலே அதிகப்படியான பிரதிகளை அனுப்பி உதவியது.

நான் திருநெல்வேலிக்கு வந்து ஒரு வருடம் நிறைவு பெறும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. நான் வெளியூர் சென்று - முக்கியமாக, சென்னை சேர்ந்து - வளர்ச்சி பெற வேண்டும் என்று விரும்பினேன். அதனால் பத்திரிகை உலக நண்பர்களுக்கு என் ஆசையைத் தெரிவித்துக் கடிதங்கள் எழுதினேன்.

'சினிமா உலகம்' பத்திரிகைக்கே ஒரு உதவி ஆசிரியர் தேவைப்படுகிறது; சிறிது காலம் பொறுத்திருங்கள்; நானே உங்களை அழைத்துக்கொள்வேன் என்று கோவையில் இருந்து சினிமா உலகம் ஆசிரியர் பண்டிட் பி.எஸ். செட்டியார் கடிதம் எழுதினார்.

சென்னையிலிருந்து 'நவசக்தி' ஆசிரியர் சக்திதாசன் சுப்பிரமணியம் உற்சாகமாக எழுதியிருந்தார். 'நவசக்தியே உங்களை ஏற்றுக்கொள்ளச் சித்தமாகவிருக்கிறாள். ஆனால் இப்போது சந்தர்ப்பங்கள் சரியாகயில்லை. யுத்தகால நெருக்கடிகள் சிரமங்கள் நீடிக்கின்றன. மக்கள்குடும்பம் குடும்பமாகச் சென்னையை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகள் கூட வெளியிடங்களுக்கு இடம் மாறிவிட்டன. வை.மு. கோதைநாயகியின் 'ஜகன் மோகினி' சிங்கப் பெருமாள் கோவிலுக்குப் போய்விட்டது. சக்தி காரியாலயம் சென்னையிலிருந்து காரைக்குடிக்கு இடம் பெயர்ந்துள்ளது. இப்படி அநேகம். இந்த நிலையில் நான் உங்களைச் சென்னைக்கு அழைத்துக் கொள்ள விரும்பவில்லை. நான் சென்னையிலேயேதான் இருப்பேன். 'நவசக்தி'யும் சென்னையிலிருந்தே வெளியாகும். ஒண்டியண்டி குண்டுவிட்டு உயிர்பறித்த போதினும், அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே! நீங்கள் இன்னும் கொஞ்ச காலம் திருநெல்வேலியிலேயே தங்கியிருங்கள். கவலைப்பட வேண்டாம். காலம் வரட்டும்' என்று அவர் தெரிவித்திருந்தார்.

கிடைத்திருந்த சர்க்கார் வேலையை விட்டுப்போட்டு, சும்மா வீட்டோடு இருந்து வெட்டிப்பொழுது போக்கிக்கொண்டு இருக்கிறானே என்று உறவினரில் சிலர் குறை கூறினார்கள். இனிமேல் என்ன பண்ணப்போகிறானாம் என்று அநேகர் குறிப்பிட்டார்கள். இந்த எண்ணம் என் அம்மாவுக்கும் இருந்தது. படித்தும் புத்திகெட்டுப் போன பிள்ளை என்ற மனவருத்தம் அம்மாவுக்கு. ஆயினும் என் அண்ணா கோமதிநாயகம் வருத்தப்படவுமில்லை, குறை கூறவுமில்லை, எனது எழுத்துமுயற்சிகளைப் படித்து ரசித்து எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கத் தவறவுமில்லை.

ஆயினும் என் உள்ளத்தில் அமைதி இல்லை. வளர்ந்து முன்னேறுவதற்கு வீட்டை விட்டு வெளியேறி. ஏதாவது பத்திரிகையில் சேர்ந்து உழைக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள் உறுத்திக் கொண்டிருந்தது. வெளிஉலகில் சென்று முயற்சிக்க வேண்டும் எனும் நினைப்பு பேருரு எடுத்து வந்தது.

எங்கே போவது? என்ன செய்வது? இப் பிரச்சினைகள் தலைதூக்கவில்லை. வீட்டைவிட்டு வெளியேறி ஏதாவது செய்தாக வேண்டும்!... எங்கே போவது?... சென்னைக்கே போகலாம்... போவதற்குப் பணம்?... நடந்தே போகலாம் - இப்படி மனம் தர்க்கித்துக் கொண்டிருந்தது.

புத்தகங்களில் படித்திருந்த சில வரலாற்று நிகழ்வுகள் என்னுள் வேலை செய்தன. பெயர் பெற்ற ஆங்கில நாவலாசிரியன் (எழுத்தாளன்-கவிஞன்)ஆலிவர் கோல்ட்ஸ்மித் நடந்து நடந்தே ஐரோப்பா முழுவதும் பயணம் செய்தான். ரஷ்ய எழுத்தாளன் மாக்சிம் கார்க்கி நடந்து நடந்தே ரஷ்யாவின் நீளஅகலங்களைக் கண்டறிந்தான். இத்தாலிய சர்வாதிகாரியாக வளர்ந்துவிட்ட பெனிட்டோ முசோலினி, பையில் மூன்றே மூன்று (இத்தாலியக்)காசுகளோடு, தொலைவில் இருந்த கிராமத்திலிருந்து புறப்பட்டு நடந்தே ரோம் நகரை அடைந்தான். நடப்பது ஒன்றும் சிரமமான காரியம் இல்லை என்றது மனம்.

தனக்குச் சாதகமாக மனம் கணக்கிட்டது. திருநெல்வேலியில் இருந்து சென்னை 400 மைல் தூரம். தினசரி 30 மைல்கள் நடக்கலாம். அப்படி நடந்தால் 14 நாட்களில் சென்னை போய்ச் சேரலாம். எப்படியும் 15 நாட்களில் போய்விடலாம் என்று சந்தோஷப்பட்டது.

தொடர்ந்து தினசரி 30 மைல்கள் நடக்கமுடியுமா? கையில் பணம் எதுவுமின்றி நடக்கிறபோது, சாப்பாட்டுக்கு என்ன செய்வது? போதுமான உணவு இன்றி எத்தனை மைல்கள் நடக்க முடியும்? எத்தனை நாட்கள் நடக்கமுடியும்? இக் கேள்விகளை மனசே கேட்டுக்கொண்டது.

ஆனால், இளமையும் கனவு வெறியும் கூடி 'அதெல்லாம் நடந்து போயிடலாம்!' என்று தைரியம் தந்தன.

என்றைக்குப் போவது? என்னென்ன எடுத்துப் போக? வீட்டில் யாருக்கும் தெரியாமல், எப்படிக் கிளம்பிப் போவது? இதை வைத்தே தறியடித்துப் பொழுது போக்கியது மனம்.

ஒருவாறு எல்லாம் தீர்மானிக்கப்பட்டது. ஒருநாள் அதிகாலையில் எழுந்து, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிவிட வேண்டும். ஒரு பையில் இரண்டு வேட்டி, இரண்டு சட்டை, இரண்டு துண்டு, எஸ்.எஸ்.எல்.சி.சர்டிபிகேட் புத்தகம், சில தாள்கள், பேனா- இவற்றை எடுத்து

வைத்து, பையை மறைவாக ஓர் இடத்தில் பத்திரப் படுத்தினேன். எனது எண்ணங்களையும் நோக்கத்தையும் விரிவாக எழுதி, நான் வீட்டை விட்டுப் போகிறேன். தேட வேண்டாம் என்று முடித்து ஒரு நீண்ட கடிதம் எழுதினேன். புறப்படுவதற்கு முன்னதாக அதை, அடிக்கடி திறந்து பார்க்கப்படுகிற ஒரு பெட்டியில் பார்வையில் படும்படியாக வைத்தேன். 1942 மே மாதம் 24ஆம் நாள்.

இரவு வந்தது. சரியான தூக்கமில்லை. எப்படிப் புறப்பட்டுப் போவது என்ற நினைப்பில் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. ஐந்து மணிக்குக் கிளம்பிவிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். ஆனால் அதிகாலையில் தூங்கிவிட்டேன். திடீரென விழித்த போது மணி ஆறு ஆகியிருந்தது. நல்ல வெளிச்சம் வந்திருந்தது. மற்றவர்கள் விழித்திருக்கவில்லை. அம்மா மட்டும் எழுந்து வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தாள். கதவைத் திறந்து கொண்டு வெளியேறினேன். நான் வாய்க்காலுக்குப் போவதாக அம்மா எண்ணியிருக்கலாம்.

நான் தெருவில் இறங்கி வேகமாக நடந்தேன். அண்ணாவோ தம்பியோ எழுந்து வந்துவிடக்கூடாது என்ற பதைப்பு. அவசரமாக நடந்தேன். திருநெல்வேலி ஜங்ஷன் சேர்ந்து, மதுரை ரோடில் நடந்தேன். அப்போது அந்தப்பகுதி எல்லாம் அமைதியும், போக்குவரத்து நெரிசல் இன்மையும், ஓங்கி வளர்ந்த மருதமரங்கள் நின்ற சூழலுமாக இருந்தன. காலப்போக்கில் அனைத்தும் முற்றிலும் மாறிவிட்டன. பஸ் போக்குவரத்தும் அதிகம் இருந்ததில்லை.

நான் நிதானமாக நடந்தேன். வீட்டிலிருந்து பணம் எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. கொஞ்சம் அவல் மட்டும் எடுத்துச் சிறு பொட்டலமாகப் பைக்குள் வைத்திருந்தேன். வழிநெடுகப் பசுமையாக இருந்தது. அடிக்கடி மழைபெய்து ரோடு ஓரங்களில் தண்ணீர் தேங்கிக் கிடந்தது.

பள்ளங்களில் தெளிவாகக் கிடந்த தண்ணீரை அவ்வப் போது குடித்துக்கொண்டு நடந்தேன். எப்பவாவது சிறிதளவு அவலை எடுத்து வாயில் போட்டு மென்றவாறு நடந்தேன். எந்த இடத்திலும் உட்காரவில்லை. மாலை 6 மணி அளவிற்குக் கோவில் பட்டி வந்துவிட்டேன். 35 மைல் தூரம் நடந்திருந்தேன். அன்று தேதி மே25.

ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் உட்கார்ந்தேன். படுத்தால் சுகமாக இருக்கும் என்று தோன்றியது. கட்டிடத்தின் ஒருமூலையில், கல் தரையில், படுத்தேன். ஆழ்ந்த தூக்கம் என்னை ஆட்கொண்டது.

விழிப்பு வந்தபோது விடிவின் வெளிச்சம் வந்திருந்தது. எழுந்து நடக்கலானேன். ரோடு ஓரம் ஒரு குளம். தண்ணீர் பெருகிக்கிடந்தது. காலைக்

கடமைகளை முடிக்க வசதியாக இருந்தது. பல் துலக்கி, சிறிது அவலை மென்று தண்ணீர் குடித்து விட்டு நடக்கலானேன்.

வெறிச்சோடிய ரஸ்தா. அபூர்வமாக எப்போதாவது ஒரு பஸ் அல்லது கார் வரும். ஏதேனும் ஊர் நெருங்கும்போது ஒன்றிரண்டு ஆட்கள் தென்படுவார்கள். ஊர்களும் ஆள் அரவமற்று அமைதியாகவே காட்சி தரும். யார், எங்கே போகிறாய் என்று எவரும் கேட்டதில்லை. நான் மெதுமெதுவாக நடந்தேன்.

மாலை வந்தது. விருதுநகரை எட்டிவிட்டேன். ஊருக்கு முன்னாடி ரஸ்தா ஓரத்தில் ஒரு தோட்டமும் அதில் சிறு மடம் அல்லது சத்திரம் போன்ற ஒரு கட்டிடமும் தென்பட்டன. எங்கும் ஆள் நடமாட்டமே இல்லை. இந்தத் திண்ணையில் சிறிது நேரம் படுத்து ஓய்வெடுக்கலாமே என்று தோன்றியது. படுத்தேன். உடனேயே தூங்கிப் போனேன்.

திடீரென விழிப்பு வந்தது. நல்ல இருட்டு. இரவில் நேரம் என்ன இருக்கும் என்று தெரியவில்லை. இருப்பினும் எழுந்து நடந்தேன். விருதுநகர் சேர்ந்தேன். நகரம் விழிப்புடன் இருந்தது. கடைகள் திறந்திருந்தன. வண்டிகளும் ஆட்களும் இயங்கிக் கொண்டிருந்தனர்.

பெரும்பாலான கடைகளில் மின்விளக்குகள் இல்லை. கனத்த பித்தளைச் சங்கிலிகள் தொங்க, அவற்றில் பெரிய பித்தளை விளக்குகள். எண்ணெயில் பிரகாசமாய் எரியும் திரிகள். ஒரு கடையில் சுவரில் காட்சி தந்த பெரிய கடியாரம் மணி 12 என்று சுட்டியது.

தெருக்குழாய்களில் குடிதண்ணீர் வந்து கொண்டிருந்தது. முகம் கழுவி, வாய் கொப்புளித்து, வேண்டிய மட்டும் தண்ணீர் குடித்தேன். நடந்தேன். நகரின் ஒளிப்புள்ளிகள் மங்கி மறைந்தன. இருள் கவிந்த ரஸ்தா. வானத்து நட்சத்திரங்கள் தான் துணை வந்தன!

கள்ளிக்குடி ஊர் வந்தது. அங்கு விடிந்தால் சந்தை கூடும் என்று தோன்றியது. கூண்டு வண்டிகள் வந்து சரக்குகளோடு அவிழ்க்கப்பட்டு நின்றன. மாடுகள் வண்டிகளருகில் நின்று தீவனம் தின்றுகொண்டிருந்தன. ஆட்கள் நின்றும், உட்கார்ந்தும், படுத்தும் பலநிலைகளில் காட்சி தந்தார்கள். சிறுசிறு கடைகள் வெளிச்சமிட்டவாறு இருந்தன.

நானும் இங்குச் சிறிது நேரம் படுக்கலாம் என்ற நினைப்பு வந்தது. சற்று தள்ளிப் போய் வண்டிகளோ ஆட்களோ இல்லாத இடத்தில் படுத்தேன். தூக்கம்தான்,

திடீரென்று யாரோ எழுப்புவதற்குக் குரல் கொடுத்ததை உணர்ந்து விழித்தேன். எழுந்து உட்கார்ந்து பார்த்தால் சுற்றி நெடுகிலும் கட்டை வண்டிகளும் கூண்டு வண்டிகளும் மாடுகளும் ஆட்களும் மொய்த்திருப்பது

வியப்பு தந்தது. 'எழுந்திரி... தள்ளிப்போ... வண்டியை இங்கே நிறுத்தணும்' என்று ஒருவன் கூவினான்.

எழுந்து விலகி ரோடில் நடந்தேன். மீண்டும் இருளோடு நடை தான். எவ்வளவு நேரம் ஆகியிருக்கும், எத்தனைத் தூரம் நடந்திருப்பேன் என்று புரியவில்லை. அலுப்பும் அசதியுமாக இருந்தது. ரோடோரத்தில் ஒரு புளியமரத்தின் கீழ்ப்படுத்தேன். அவ்வளவுதான். தன்னை மறந்து தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டேன்.

மீண்டும் விழிப்பு வந்த போதும் இருளாகத்தான் இருந்தது. நான் இருந்தது எந்த இடம், நேரம் என்ன இருக்கும் என்று எதுவும் விளங்கவில்லை. எழுந்து மீண்டும் நடந்தேன். விடிய விடிய நடந்து கொண்டேயிருந்தேன்.

ஆறு மணி அளவில் திருப்பரங்குன்றம் வந்திருந்தேன். அங்கே உள்ள பெரிய குளம் மழை பெய்து தண்ணீர் நிரம்பிக் காணப்பட்டது. ஆண்களும் பெண்களும் நீராடிக்கொண்டிருந்தார்கள். நானும் குளத்தில் இறங்கிக் குளித்தேன். சுகமாக இருந்தது. வேட்டியையும் துண்டையும் நனைத்து, அந்த இடத்திலேயே நின்று அவற்றை உலரவைத்தேன்.

வீட்டில் இருந்து புறப்பட்ட மூன்றாவது நாள் அன்று. முதல் நாள் திருநெல்வேலியில் இருந்து கோவில்பட்டிக்கு 35 மைல்கள்; இரண்டாம் நாள் கோவில் பட்டியிலிருந்து விருதுநகருக்கு 30 மைல்கள்; அங்கிருந்து மதுரைக்கு 30 மைல்கள். ஆக மூன்று நாட்களில் மதுரைக்கு நடந்து வந்தாயிற்று என்று மனம் உவகையுற்றது.

இன்னும் மதுரை நகரை அடையவில்லையே என்ற நினைப்பும் வந்தது. நகருக்கு ஒரு மைல் வெளியே உள்ள அரசு கட்டிடங்களில் பல பயிற்சி நிலையங்களும் அலுவலகங்களும் இயங்கிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தில் ராஜவல்லிபுரம் உறவினர் ஒருவர் கற்றுக் கொண்டிருந்தார். முன்பு எனக்கு வேலை வாங்கி உதவியவரின் தம்பி. அவரைச் சந்திக்க வேண்டும்; அவரிடம் சிறிது பணம் பெற்றுக்கொண்டு, ரயில் மார்க்கமாகக் காரைக்குடி போகலாம் என்று திட்டமிட்டது மனம்.

காரைக்குடியில் 'இந்திரா' பத்திரிகை அலுவலகம் இருந்தது. அங்கே போய் முயன்று பார்க்கலாமே என்று நினைப்பு. நடந்து போக முடியாது என்று நன்கு புரிந்தது. மூன்று நாட்கள் விடாது நடந்ததில் பாதங்கள் புண்பட்டிருந்தன. செருப்பு இன்றி நடந்ததால், விரல்களுக்கிடையே வெடிப்புகள் தோன்றியிருந்தன. வலியும் இருந்தது.

முதலில் உறவினர் கோபாலைச் சந்தித்தாக வேண்டும். இந் நினைப்புடன் திருப்பரங்குன்றம் குளத்திலிருந்து நடந்தேன். அதே ரஸ்தாவில், மதுரை நகருக்கு வெளியே இருந்த பயிற்சி நிலையக் கட்டிடம் போய்ச் சேர்ந்தேன். கோபால் எங்கே இருக்கிறாரோ, அவரை எப்படிப் பார்ப்பது என்று

நினைத்தபடி முக்கிய வாசலின் அருகிலேயே நின்றேன். 'சந்தர்ப்ப சகாயம்' என்பார்களே, அதுபோல் காலத்தின் உதவி எனக்குக் கிட்டியது.

கோபால் சைக்கிளில் வந்தார். வாசல் அருகில் நின்ற என்னைப் பார்த்ததும், சிரித்தபடி இறங்கினார். என்ன, இங்கே நிற்கிறே? எப்ப வந்தே? என்று கேட்டார். அவரிடம் 'ஒரு கதை அளக்க வேண்டிய' அவசியம் ஏற்பட்டது!

பத்திரிகை அலுவலகத்தில் வேலை விஷயமாக மதுரைக்கு வந்தேன். நேற்று வந்தேன்; கொண்டு வந்த பணம் தீர்ந்து போச்சு. ஊருக்குப் போகணும்; ரூபாய் வேண்டும் என்றேன்.

அவர் சிறிது யோசித்தார். கைக்கடியாரத்தைப் பார்த்தார். 'இப்ப மணி பத்தரை ஆகுது. இங்கே பக்கத்திலே ஓட்டல் எதுவும் கிடையாது. நீ மதுரைக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டுப் பன்னிரண்டரை மணிக்கு வா. இன்று என் கூட ரூமில் தங்கிவிட்டு நாளைக்குப் போகலாம்' என்று சொல்லி ஒரு ரூபாய் கொடுத்தார். நேரமாச்சு, நான் போகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றார்.

நான் மதுரை நோக்கி நடந்தேன். டவுன்ஹால் ரோடில் ஒரு ஓட்டலில் இட்டிலி, தோசை, காப்பி சாப்பிட்டேன். அந்நாட்களில் உணவுப் பொருள்களின் விலை மிகவும் குறைவு. ஒரு ரூபாய்க்குள் வயிறார உணவு சாப்பிட முடியும்.

திரும்பவும் கோபாலைச் சந்திப்பதற்கு நேரம் இருந்ததால் நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அங்கு ஓய்வாகத் தங்கினேன். அங்கே சுவரில் ரயில்வே ஸ்டேஷன்கள், கட்டணங்கள் விவரம் அச்சிட்ட பெரிய நோட்டீஸ் காணப்பட்டது. அதில் காரைக்குடிக்கு எவ்வளவு கட்டணம் என்று பார்த்தேன். மூன்று ரூபாய் தான்.

அக்காலத்தில் ரயில் பயணக்கட்டணங்களும் மிகக்குறைவுதான். திருநெல்வேலியிலிருந்து சென்னை எழும்பூருக்குக் கட்டணம் எட்டே ரூபாய் தான். (இப்போது நூற்று எண்பது ரூபாய்)

உரிய நேரத்தில் கோபாலின் பயிற்சி நிலையம் சென்று அவருக்காக வெளியே காத்து நின்றேன். அவர் வந்ததும், 'சாப்பிட்டாயா?' என்று அன்பாக விசாரித்தார். 'வா, போவோம். நான் இருக்கிற இடம் பக்கத்திலே தான் இருக்கு' என்று அழைத்துப் போனார்.

அது பல அறைகள் கொண்ட அமைதியான கட்டிடம். இனிய சூழல். அறைக்கு ஒருவராகப் பல பயிற்சி மாணவர்கள் அங்குத் தங்கியிருந்தார்கள். ஒரு உணவு விடுதியில் இருந்து அவர்களுக்குச் சாப்பாடு ஒவ்வொரு வேளையும் வந்தது.

அன்று அவரோடு உணவு உண்டு, இரவு அங்கேயே தங்கினேன். அவரும் பக்கத்து அறை நண்பர்களும் அவரவர் சிரமங்களைப் பற்றிப்

பேசிக்கொண்டார்கள். ஒவ்வொரு மாதமும் பணம் பற்றாக்குறை ஏற்படுவதையும், எதிர்பாராத செலவுகள் வந்து சேருவதையும் கூறி மனசுக்கு ஆறுதல் தேடிக் கொண்டார்கள். கோபாலுக்கு 'எதிர்பாராத செலவுக்கு' வழிசெய்பவனாக நான் வந்துள்ளதை எண்ணிச் சிறிது வருத்தப்பட்டேன்.

மறுநாள் காலையில் விழித்தெழுந்து, அங்கேயே கிணற்றில் குளித்தேன். சாப்பிட் இட்டிலி கிடைத்தது. 'இன்று நீ ஊருக்குப் போறியா? எவ்வளவு ரூபாய் வேண்டும்?' என்று கோபால் கேட்டார். 'மூன்று ரூபாய் போதும்' என்றேன்.

அதை அவர் தந்தார். அவரிடம் விடைபெற்றுக் கிளம்பினேன்.

அப்போது யுத்த காலம். ரயில் வண்டிகள் குறைவாகவே ஓடின. காரைக்குடி போவதற்கான ரயிலின் நேரத்தை முந்திய தினம் கவனித்திருந்தேன். மதுரை ஜங்ஷன் நிலையத்துக்குப் போகாமல், நடந்து அடுத்த ஸ்டேஷன் போய்க் காத்திருந்தேன்.

அங்கே பயணிகள் மூன்று-நான்கு பேர்தான் இருந்தார்கள். ரயில்வண்டி வந்ததும் வசதியாக ஏறிச் சவுகரியமாகப் பயணம் செய்தேன்.

காரைக்குடி சேரும்போது இரவாகிவிட்டது. ஊருக்குள்போய் இருட்டில் 'இந்திரா' அலுவலகத்தைத் தேடிக்கண்டு பிடிப்பது சிரமம்; அவ்வேளையில் ஆபீசில் யார் இருக்கப் போகிறார்கள் என்று எண்ணி, இரவை ரயில் நிலையத்திலேயே போக்கினேன். அதிகாலையில் எழுந்து, ஊருக்குள் சென்று 'இந்திரா' அலுவலகத்தைக் கண்டுபிடித்தேன்.

இரவில் யாரோ அங்கே தங்கியிருந்திருக்கிறார்கள். அவ்வேளையில் இரண்டு பேர் எழுந்து நின்றார்கள். நான் சிறிது நேரம் வெளியே சுற்றிவிட்டு மெதுவாக அந்த அலுவலகத்துக்குப் போனேன்.

இந்திரா மாத இதழின் வெளியீட்டாளர், உரிமையாளர் பழனியப்ப செட்டியார் என்று ஒருவர். ப. நீலகண்டன் ஆசிரியப் பொறுப்பில் இருந்தார். பிற்காலத்தில் நாடக ஆசிரியராகப் பெயர் பெற்று, சினிமா உலகில் பிரவேசித்து, திரைப்பட இயக்குநராகப் புகழ்பெற்ற அதே நீலகண்டன்தான். கோ.த. சண்முகசுந்தரம் உதவிஆசிரியர்.

பத்திரிகை விற்பனை வளர்ச்சியை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் தென்னாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த கோ.த.ச. திருநெல்வேலிக்கு வந்த போது ஒரு நாள் எங்கள் வீட்டுக்கும் வந்தார். 'இந்திரா' சிறுகதைப் போட்டியில் என் கதை முதல் பரிசு பெற்றிருந்த சமயம் அது. நன்கு பேசிப் பழகினார்.

நான் அலுவலகம் அடைந்த சமயம், ப. நீலகண்டன் இருந்தார். கோ.த.ச. இல்லை. வேறு ஒருவரும் அங்கே காணப்பட்டார்.

ப.நீ.யிடம் நான் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். எனது பயணநோக்கத்தையும் தெரிவித்தேன். என் பேச்சில் ஆர்வம் காட்டிய மற்றொருவர் பரிவுடன் விசாரித்தார். அவர் தான் எழுத்தாளர் ஆர். சண்முகசுந்தரம், கோயம்புத்தூரில் இருந்து இங்கு வந்துள்ளார் என்று நீலகண்டன் அறிமுகம் செய்தார்

'மணிக்கொடி'யில் சிறுகதைகள் எழுதிக் கவனிப்புப் பெற்றிருந்தவர் ஆர். சண்முகசுந்தரம். அவரை நாவல் எழுதும்படி கு.ப. ராஜகோபாலன் தூண்டியதன் பேரில், அவர் 'நாகம்மா' என்ற நாவலை எழுதியிருந்தார். அதைப் புத்தகமாக வெளியிடுவது பற்றிப் பேசி ஏற்பாடு செய்வதற்காக, 'சக்தி' வை. கோவிந்தனைச் சந்திக்க அவர் காரைக்குடி வந்திருந்தார். இரவில் 'இந்திரா' ஆபீசிலேயே தங்கியிருந்தார். இத் தகவல்களைச் சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

இந்திராவில் என்னைச் சேர்த்துக் கொள்ளத் தற்போது வசதியில்லை. கோ.த. சண்முக சுந்தரமும், வீரவநல்லூர் அன்பர் ஒருவரும் பணிபுரிகிறார்கள். வேண்டுமானால், சக்தி கோவிந்தனிடம் சொல்லிப் பார்க்கலாம் என்று ப.நீ. கூறினார்.

நான் அழைத்துப் போய் வை.கோ.விடம் சொல்கிறேன் என்று சண்முகசுந்தரம் தாமாகவே உதவ முன்வந்தார்.

முதலில் குளிப்பு வேலையை முடித்துக் கொள்ளலாம்; பக்கத்தில் ஒரு தோட்டமும் கிணறும் இருக்கிறது; குளிக்க- துணி தோய்க்க வசதியான இடம் என்று அவர் கூறி, என்னையும் கூட்டிப் போனார். அவர் எளிமையாக இருந்தார். புதியவனான என்னிடம் இயல்பாக அன்புடனும் பரிவுடனும் பேசிப் பழகினார். வேட்டி சட்டைகளுக்குச் சோப்புப் போட்டு அங்கேயே உலரவைத்தார்.

சவுகரியமாகக் குளித்தோம். உலர்ந்த உடுப்புகளை அணிந்து கொண்டு 'இந்திரா' அலுவலகம் வந்தோம். அதற்குள் கோ.த.ச. வந்திருந்தார். நேமத்தான்பட்டி என்ற பக்கத்து ஊரில் வசித்த பழனியப்ப செட்டியாரும், 'இந்திரா'வில் பணிபுரிந்த வீரவநல்லூர் அன்பரும் வந்து சேர்ந்தார்கள்.

'என்ன, வீட்டிலே சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டீர்களா? உங்க அண்ணன் கடிதம் எழுதியிருக்கிறார்' என்றார் கோ.த.ச.

நான் வீட்டைவிட்டுக் கிளம்பியதும், வெகுநேரம் வரை வீடு திரும்பாததால் அம்மாவும் சகோதரர்களும் கவலைப்பட்டனர். நான் எழுதி வைத்த கடிதத்தை அவர்கள் ரொம்ப தாமதமாகத்தான் பார்த்துள்ளனர். அண்ணா கோமதி நாயகம் தேடல் முயற்சிகளில் ஈடுபட்டார். சில பத்திரிகை அலுவலகங்களுக்குக் கடிதம் எழுதினார். காரைக்குடி

கோ.த.சண்முகசுந்தரத்துக்கும் சென்னை சக்திதாசனுக்கும் எழுதி விசாரித்திருந்தார். 'தம்பி அங்கே வந்தால் உதவிபுரியுங்கள்; அவன் சென்னைக்குப் போவதானால் போகட்டும். ஆனால் நடந்து போக வேண்டாம். எனக்கு எழுதினால் தேவையான பணம் அனுப்பிவைப்பேன். அவன் திருநெல்வேலிக்கே திரும்புவதானாலும் திரும்பி வரட்டும்' என்று அண்ணா கோ.த.ச.க்கு எழுதியிருந்தார்.

அவர் அந்தக் கடிதத்தை என்னிடம் காட்டினார். 'நீங்கள் இங்கே வந்திருப்பதாக உங்கள் அண்ணனுக்குக் கடிதம் எழுதி விடுகிறேன். நீங்களும் எழுதுங்கள்' என்றார்.

ஆர். சண்முகசுந்தரம் என்னை 'சக்தி காரியாலய'த்துக்கு அழைத்துப் போனார். யுத்தகாலத்தைக் கருதி, தற்காலிகமாக, 'சக்தி' காரைக்குடிக்கு இடம் பெயர்ந்திருந்தது. சிறிய இடம் தான். வை.கோ. இருந்தார். துணை ஆசிரியர் தி.ஜ. ரங்கநாத (தி.ஜ.ர) னும் இருந்தார். இருவரிடமும் என்னை அறிமுகம் செய்து, எனது தேவையைத் தெரியப்படுத்தினார் சண்முகசுந்தரம்.

தி.ஜ.ர. எனது எழுத்தைப் பாராட்டினார். 'சக்தி' மாத இதழிலும் என் கதைகள் பிரசுரம் பெற்றிருந்தன.

'சக்தியில் இப்போது ஆள் தேவையில்லை. பொதுவாக இப்போது எந்தப் பத்திரிகையிலும் புதிதாக யாரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். யுத்த கால நெருக்கடி; பத்திரிகைகளின் விற்பனையும் பாதிக்கப்பட்டிருக்கு; நீங்கள் திருநெல்வேலிக்குப் போய், அங்கிருந்தபடியே பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதி அனுப்புவதுதான் நல்லது' என்று தி.ஜ.ர. நல்லுரை கூறினார்.

'சக்தி' விற்பனைப் பிரிவில் சுப. நாராயணன் நிர்வாகியாக இருந்தார். அவரையும் சந்தித்துப் பேசினேன். அவரும் எனது எழுத்தை வெகுவாகப் பாராட்டி எனக்கு மகிழ்ச்சி ஊட்டினார்.

மீண்டும் இந்திரா அலுவலகம் சேர்ந்தோம். நீலகண்டனிடம் சண்முகசுந்தரம் நிலைமையை விவரித்தார்.

'தி.ஜ.ர. சொல்வதுதான் சரி. நீங்கள் திருநெல்வேலி திரும்பி வீட்டில் இருந்து எழுதிக் கொண்டிருப்பது தான் நல்லது' என்று நீலகண்டனும் ஆலோசனை கூறினார்.

வீரவநல்லூர் அன்பர் - அவர் பெயர் சுந்தரம்- என் மீது அனுதாபமும் அக்கறையும் கொண்டார். பிரியமாகப் பேசினார். அவர் நேமத்தான்பட்டியில் அம்மாவோடு வசித்தார். அவர் வீட்டுக்குப் பக்கத்திலேயே திருநெல்வேலி நண்பர்கள் இரண்டுபேர்- அவர்களுக்கும் சொந்த ஊர் வீரவநல்லூர்தான். வீ.தி. சொக்கலிங்கம், வீ.தி. நடராசன்- நேமத்தான்பட்டியில் பள்ளி

ஆசிரியர்களாகப் பணிபுரிகிறார்கள். 'உங்களைத் தெரியும் என்று சொன்னார்கள். உங்களைப் பார்த்தால் சந்தோஷப்படுவார்கள். இன்று மாலை நீங்கள் என்னுடன் நேமத்தான்பட்டிக்கு வாங்க, உங்கள் அண்ணணிடமிருந்து பணம் வருகிற வரை எங்களோடு தங்கியிருங்க. பணம் வந்ததும் திருநெல்வேலிக்கே போங்க' என்று சுந்தரம் என்னிடம் சொன்னார்.

அன்று மாலை நான் சுந்தரத்துடன் நேமத்தான்பட்டி போனேன். அண்ணன் தம்பியரான நடராசன், சொக்கலிங்கம் இருவரும், எதிர்பாராத அதிதியான என்னைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். திருநெல்வேலி நெல்லை வாலிபர் சங்கத்தில் அவர்களும் உறுப்பினர்களாக இருந்தார்கள். அதன் மூலம் பழகி நண்பர்களானவர்கள்.

நேமத்தான்பட்டியில் சகோதரர்களுடன் ஆறு நாட்கள் தங்க நேரிட்டது. அவர்கள் இருவரும் தனிவீடு வாடகைக்கு எடுத்து, தாங்களே சமையல் செய்து சாப்பிட்டுக் கொண்டு, சிக்கனமாக வாழ்க்கை நடத்தினார்கள். என்னை அன்போடு உபசரித்தார்கள்.

என் கடிதம் கிடைத்த உடனேயே அண்ணா எனக்கு மணியார்டரில் பணம் அனுப்பிவைத்தார். அது வந்து சேர்ந்ததும் நான் நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினேன்.

11

பத்து நாட்களுக்குப் பிறகு வீடு திரும்பிய என்னைச் சகோதரர்கள் சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். அம்மாதான் துயரத்தோடு குறை கூறினாள்.

நாட்கள் எப்போதும்போல் நகரலாயின.

யுத்த காலம் என்று சொல்லப்பட்டு வந்தாலும் புதிய பத்திரிகைகள் தோன்றிக் கொண்டு தான் இருந்தன.

ஆனந்த விகடன் இதழிலிருந்து பிரிந்து சென்ற கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி 'கல்கி' என்ற பெயரிலேயே பத்திரிகை ஆரம்பித்தார். அதன் பின்னர் பத்திரிகை நடத்த முற்பட்ட எழுத்தாளர்கள் சிலர் அவரவர் புனைபெயரைச் சூட்டி இதழ் ஆரம்பிப்பது ஒரு வழக்கமாகிவிட்டது.

மணிக்கொடி சிறுகதை இலக்கிய இதழின் தாக்கம் பெற்றிருந்தவர்கள், மணிக்கொடி மாதிரி ஒரு பத்திரிகை தேவை என்று எண்ணுவதும் பேசுவதும் இயல்பாக இருந்தது. அத்தகைய எண்ணம் கொண்டு ஓர் இலக்கியப் பத்திரிகை தொடங்க முற்பட்டார், வி.ரா. ராஜகோபாலன் என்ற இளைஞர்.

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே அவர் 'ஆனந்த மோகினி' என்ற பெயரில் ஒரு சிற்றிதழ் நடத்தினார். சிறிது காலமே வாழ்ந்தது அது. அதிலும் எனது கதைகள் பிரசுரம் பெற்றிருந்தன.

நல்ல முறையில் மறுமலர்ச்சி இலக்கிய இதழ் ஒன்று நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு வாழ்ந்த அவர், கல்லூரிப் படிப்பை நிறைவு செய்யாது விட்டு விட்டு, 'கலாமோகினி' என்ற மாதம் இருமுறையைத் திருச்சியில் ஆரம்பித்தார். தாம் இலக்கிய உலகில் ஒரு புதிய சகாப்தம் படைக்கப்போவதான எண்ணம் அவருக்கு இருந்தது. அதனால் 'சாலிவாகனன்' என்றும் 'விக்ரமாதித்தன்' என்றும் தமக்குப் புனைபெயர்கள் வைத்துக் கொண்டார். மணிக்கொடி எழுத்தாளர்களான ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன், 'சிட்டி' பெ.கோ. சுந்தரராஜன், எம்.வி. வெங்கட்ராம் ஆகியோரின் துணையும் பேராதரவும் அவருக்குக் கிடைத்தன.

கலாமோகினி நல்ல தரமான இலக்கிய ஏடு ஆக வளர்ந்தது. அதன் முதல் இதழிலிருந்து, இதழ் தோறும் அட்டையில் ஓர் எழுத்தாளர் படத்தை வெளியிட்டு, உள்ளே 'இவர் நமது அதிதி' என்று அவரைப் பற்றி ஒரு பக்கம் எழுதுவதை வி.ரா.ரா. வழக்கமாகக் கொண்டிருந்தார். இது கடைசி இதழ் வரை நீடித்தது.

சாலிவாகனன் சிறப்பாகக் கவிதைகள் எழுதக் கூடியவர். விக்ரமாதித்தன் என்ற பெயரில் சிறுகதைகள், விமர்சனக் கட்டுரைகள் எழுதினார். விறுவிறுப்பாகவும், கிண்டலாகவும், சூடாகவும் விமர்சனங்களை அவர் எழுதி வந்தார்.

கலாமோகினியில் என் சிறுகதைகளும் கட்டுரைகளும் வந்துகொண்டிருந்தன.

சேலத்தில் வேல்சாமி கவிராயர் என்பவர் 'சண்டமாருதம்' என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். அவர் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதுவார். திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுத முற்பட்டிருந்த கவிஞர் பாரதிதாசனுடன் அவருக்குப் பழக்கமிருந்தது. எனவே, இதழ்தோறும் பாரதிதாசன் புதிதாக எழுதிய கவிதை வெளிவந்தது. எனது எழுத்துக்களும் சண்டமாருதத்தில் வந்து கொண்டிருந்தன.

அயல்நாட்டிலிருந்து தமிழகம் வந்து சேர்ந்திருந்த சி.பா. ஆதித்தன் 'பார்-அட்-லா' (ஆதித்தனார் என்று குறிப்பிடும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது) 'தமிழ் ராஜ்யம்' பற்றிய கனவு வளர்த்தார். அதற்காகத் 'தமிழ் ராஜ்யக் கட்சி' தொடங்கினார். கட்சியை வளர்ப்பதற்குப் பத்திரிகைகள் தேவை என்று 'தமிழன்' வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். தொடர்ந்து 'தினத்தந்தி' தொடங்கினார்.

தமிழன் இதழ் புதுமைகள் பண்ணுவதில் மிகுந்த உற்சாகம் காட்டியது. இதழின் அட்டையில் சினிமா நடிகையர், அல்லது புகழ்பெற்ற அழகியர், பிரபலஸ்தர்கள் படங்களை வெளியிடவில்லை. சமூகத்தில் கலந்துள்ள சாதாரண பெண்மணிகளைப் படம்பிடித்து அட்டைச்சித்திரமாக்கினார்கள்.

உள்ளே, நி.சி.நி. (நினைத்தாலே சிரிப்பூட்டும் நிகழ்ச்சி, ம.மு.ச. (மறக்கமுடியாத சம்பவம்) என்றெல்லாம் சிறுசிறு பகுதிகள். ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி ஆசிரியர் இருப்பது போல, 'நி.சி.நி' ஆசிரியர், ம.மு.ச. ஆசிரியர், கேள்வி பதில் ஆசிரியர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. கோ.த.சண்முகசுந்தரம் 'இந்திரா' வை விட்டு விலகி, தமிழன் இதழில் சேர்ந்திருந்தார். 'மேதாவி' என்ற பெயரில் அவர் பரபரப்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

தமிழன் மதுரையிலிருந்து வெளிவந்தது. மதுரையிலிருந்து வேறு சில புதுப் பத்திரிகைகளும் வரலாயின.

இதனால் எல்லாம் என் மனம் மறுபடியும் குறுகுறுத்தது. இப் புதிய பத்திரிகைகளில் இடம் கிடைக்குமா என்று முயன்று பார்க்கலாமே என்று ஆசைப்பட்டேன். சேலம் வேல்சாமிக்கவி, மாடர்ன் தியேட்டர்சின் ஆதரவோடு. சண்டமாருதம் இதழை மேலும் நல்ல முறையில் கொண்டு வரப்போவதாக அறிவித்திருந்தார். அந்தப் பத்திரிகையில் இடம் கிடைத்தால், எனது வளர்ச்சிக்கும் பத்திரிகையின் வளர்ச்சிக்கும் உபயோகமாக இருக்கும் என்று எண்ணினேன்.

இம்முறை வீட்டில் எல்லோருடைய அனுமதியைப் பெற்றுச் செலவுக்குத் தேவையான பணத்துடன்தான் புறப்பட்டேன்.

மதுரை எழுத்தாளர்கள் ரா. ஆறுமுகம், ரா. வேங்கடாசலம் விளம்பரப்படுத்தியிருந்த முகவரியில், அவர்களைக் கண்டு பேசலாம் என்று போனேன். காலை பத்தரைமணி இருக்கும். நாற்காலியில் அமர்ந்திருந்த ஒருவர் மேஜைமீது தலை பதித்து உறங்கிக்கொண்டிருந்தார்.

குரல் கொடுத்ததும் அவர் தலை தூக்கி நோக்கினார் யார்? என்ன? என்றார். ரா. ஆறுமுகத்தைப் பார்க்க வேண்டும் என்றேன். ரா. ஆறுமுகம் சிறுகதைகள் எழுதி ஓரளவு கவனிப்புப் பெற்றிருந்த எழுத்தாளர்.

ஆசிரியர் ஊரில் இல்லை, சென்னை போயிருக்கிறார் என்று தெரிவித்தார் அங்கிருந்தவர். பத்திரிகை பற்றிக் கேட்கவும், ஓர் இதழ்தான் வந்திருக்கிறது. அடுத்து எப்போது வருமோ தெரியாது ஆசிரியர் வந்தால் தான் தெரியும் என்று அவர் கூறினார்.

தமிழன் ஆபீஸ் எங்கே இருக்கிறது? எப்படிப் போக வேண்டும்? என்று அவரிடம் கேட்டேன். இடமும் வழியும் சொன்னார் அவர்.

அவர் சொன்ன வழியில் போய், தமிழன் அலுவலகம் சேர்ந்தேன். சாதாரண கட்டிடம் தான். அருகில், வசதிக்காக, பிரப்பம்பாய்த் தட்டிகள் வைத்து அறைகள் அமைத்து, கூரை வேய்ந்த அமைப்பு காணப்பட்டது. அங்குதான் தமிழன் ஆசிரியப் பகுதி செயலாற்றியது. கோ.த.சண்முகசுந்தரம் இருந்தார். இன்முகத்தோடு வரவேற்றார்.

அவர் ஒருவர்தான் அங்கிருந்தார். ஆனால் பலபேர் இருப்பதற்கு வேண்டிய நாற்காலிகளும் மேஜைகளும் அந்த அறையில் இருந்தன. ஒவ்வொரு நாற்காலி பக்கத்திலும் தனி அலமாரி. அதில் சில ஃபைல்கள். அலமாரிமீது 'நி.சி.நி. ஆசிரியர்', 'ம.மு.ச. ஆசிரியர்', 'நகைச்சுவைத் துணுக்குகள் ஆசிரியர்' என்றெல்லாம் லேபிள் அச்சிட்டு ஒட்டப்பட்டிருந்தது.

கோ.த.ச.தான் இந்த இருக்கையிலிருந்து இன்னொன்றுக்கும், அங்கிருந்து அடுத்ததற்கும் என்று தேவைப்பட்ட குறிப்புகள் - காகிதங்களை எடுப்பதற்காகப் போய் வந்து கொண்டிருந்தார். மேதாவி - குரங்கு என்று ஒரு வாரம் அவர் தன் பெயருக்கு விளக்கம் கொடுத்திருந்தார். 'நான் மேதாவி என்பது சரிதானே ? அங்கும் இங்கும் தாவித்தாவி வேலை செய்கிறேன் அல்லவா?' என்று அவர் தமாஷ் பண்ணினார்.

'மற்ற பிரிவுகளுக்கு ஆட்கள் நியமிக்கவில்லையா?' என்று கேட்டேன்.

'இப்போதைக்கு இல்லை. எல்லாவற்றையும் நான்தான் கவனித்துக் கொள்கிறேன்' என்றார் கோ.த.ச.

'எனக்கு இங்கே வேலை கிடைக்குமா?'

'இப்போ புதுசா ஆட்கள் சேர்க்கிறதாக இல்லை. மேலும் உங்களுக்கு இங்கே சரிப்படாது' என்று நண்பர் சொன்னார்.

'ஆசிரியர் ஆதித்தனைப் பார்க்கலாமா?'

'ஓ, தாராளமா!... என்னோடு வாங்க' என்று அவர்ஆதித்தன் இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்று, அவரிடம் என்னைப் பற்றிக் கூறிவிட்டுத் தனது இடத்துக்குத் திரும்பினார்

ஆதித்தன் என்னைப் பற்றி விசாரித்தார். திருநெல்வேலியில் தமிழன் இதழுக்கு எப்படி வரவேற்பு இருக்கிறது என்று கேட்டார். 'தமிழ் ராஜ்யம்' பற்றிச் சிறிது விவரித்தார். அது சம்பந்தமான துண்டு பிரசுரங்களை எனக்குத் தருமாறு ஒருவருக்கு உத்திரவிட்டார்.

அவை கிடைத்தன. பத்திரிகையில் எனக்கு ஒரு வேலை வேண்டும் என்பது பற்றி அவரிடம் நான் எதுவும் கூறவில்லை. சிறிது நேரத்தில் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினேன்.

மதுரையைச் சிறிது சுற்றிப் பார்த்தேன். ரயில் நிலையம் போனேன். திருச்சிராப்பள்ளிக்கு ரயில் எப்போது போகும் என்று பார்த்தேன். டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயிலில் பயணமானேன்.

திருச்சியில் மட்டக்காரத் தெருவில் இருந்தது கலாமோகினி அலுவலகம். ஒரு சிறு அறை தான். அதை ஒட்டிய வீட்டில் வி.ரா. ராஜகோபாலன் குடும்பத்தோடு வசித்தார்.

நான் போனபோது இரவு ஆரம்பித்திருந்தது. ராஜகோபாலனின் தம்பி வி.ரா. சந்தானம் தான் அறையில் இருந்தார். நான் என்னை அறிமுகம் செய்து கொண்டதும், மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றார். பையை இங்கே வைத்துவிட்டு வாங்க. முதலில் ஓட்டலுக்குப் போய், காபி சாப்பிடுவோம். மற்றதெல்லாம் அப்புறம்தான் என்றார். அவர் என்னைப் போலவே ஒல்லியாய், சிறுவன் போன்ற தோற்றமே கொண்டிருந்தார்.

ஓட்டல் வெகு அருகிலேயே இருந்தது. 'கலாமோகினி ஆபீசுக்கு வருகிறவர்களுக்கெல்லாம் இங்கதான் காப்பி சாப்பாடு' என்று கூறினார். அங்குச் சிற்றுண்டியும் காப்பியும் சாப்பிட்டோம்.

அறைக்கு வந்து பல விஷயங்கள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். நான் 'இதயஒலி' கையெழுத்துப் பத்திரிகையில் ஆண்டு மலர் தயாரித்திருந்தேன். பெரிய அளவில்; அதிகப் பக்கங்கள்; நிறையச் சித்திரங்களோடு பலரகமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓரங்க நாடகங்கள். எல்லாம் நானே எழுதியவை.

சந்தானம் அதைப் பார்த்து அதிசயித்தார். 'கையெழுத்துப் பத்திரிகைன்னாலும் பிரமாதமா இருக்கு. இது வரை நான் கையெழுத்துப் பத்திரிகை எதையும் பார்த்ததில்லை. இப்பதான் முதன்முதலாகப் பார்க்கிறேன். கையெழுத்திலும் இப்படி பத்திரிகை உருவாக்கமுடியும் என்பது வியப்பாகத்தான் இருக்கு' என்று புகழ் பாடினார்.

அப்போது வி.ரா.ரா. வந்து சேர்ந்தார். தம்பி சந்தானம் அவரிடம் என்னைப் பற்றிக் கூறினார். 'காப்பி சாப்பிட்டாச்சா?' என்று பிரியத்தோடு விசாரித்தார் ராஜகோபாலன்

கலா மோகினி எழுத்தாளர்கள், ந.பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன், வ.ரா., க.நா.சு. முற்றும் பல எழுத்தாளர்கள் பற்றிப் பேசி மகிழ்ந்தோம். கலாமோகினியை மேலும் சிறப்பாகக் கொண்டு வருவது பற்றி அவர் விவரித்தார். அப்புறம் 'நீங்க இங்கே எங்கு வந்தீங்க?' என்று விசாரித்தார்.

நான் என் எண்ணத்தைச் சொன்னேன்: இரவு இங்குத் தங்கிவிட்டு, காலையில் முதல் பஸ்சில் சேலம் போகலாம்னு நினைக்கிறேன். அங்கே சண்டமாருதம் பத்திரிகையில் சேர முடியுமா என்று பார்க்கனும்.

வி.ரா.ரா. என்னையே கூர்ந்து நோக்கினார். வேல்சாமி கவியை உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார்.

'தெரியாது'

'சண்ட மாருதத்துக்கு வரும்படி அவர் எப்பவாவது உங்களுக்குக் கடிதம் எழுதினாரா?'

'இல்லை. நானாகத்தான் போய் முயற்சி பண்ணலாமே என்று புறப்பட்டேன்.'

'இப்படி வேலை தேடி பத்திரிகை பத்திரிகையாகப் போவது சரியில்லை. உங்கள் மதிப்பை நீங்களே குறைத்துக்கொள்கிற செயல் தான் அது. நீங்க சேலம் போக வேண்டாம். திருநெல்வேலிக்கே திரும்பிப் போங்க. வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். நான் என்னாலான உதவிகளைச் செய்வேன்' என்று உறுதியாகச் சொன்னார் வி.ரா.ரா.

ஆகவே மறுநாள் காலையில் நான் மீண்டும் திருநெல்வேலிக்கே பிரயாணம் செய்தேன்.

12

வி.ரா. ராஜகோபாலன் வாக்களித்தபடி உதவிபுரிந்தார். டிசம்பர் மாதம் அவரிடமிருந்து கடிதம் வந்தது.

– புதுக் கோட்டையில் இருந்து வெளிவரும் 'திருமகள்' உங்களுக்குத் தெரிந்த பத்திரிகைதான். அதன் வெளியீட்டாளரான ரா.சி. சிதம்பரம் என்னைக் கண்டு யோசனைகள் பெற வந்திருந்தார். திருமகளை மணிக்கொடி வழியில் தரமான மறுமலர்ச்சி இலக்கிய இதழாக வளர்க்க அவர் விரும்புகிறார். அதற்குத் தனக்குத் துணைபுரியக்கூடிய ஒருவரைச் சிபார்சு செய்யும்படி என்னைக் கேட்டார். நான் உங்கள் பெயரைக் கூறினேன். அவருக்கும் திருப்திதான். அவர் உங்களுக்குக் கடிதம் எழுதுவார். நீங்கள் தயங்காமல் புதுக்கோட்டை போய் திருமகள் பணியை ஏற்றுக்கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான வசதிகளை எல்லாம் ரா.சி. சிதம்பரம் செய்து தருவார். அவர் கடிதம் கிடைத்த உடனேயே புறப்பட்டுவிடுங்கள்.

இரண்டு நாட்களில் ரா.சி. சிதம்பரம் கடிதமும் வந்தது. ஆகவே நான் 1943 ஜனவரியில் புதுக்கோட்டை போய்ச் சேர்ந்தேன்.

நான் முதலில் அந்தப் பாதையில் ரயிலில் சென்றது 1942 மே மாதம். அவ்வருடம் ஆகஸ்டில் 'வெள்ளையனே வெளியேறு!' (Quit India) என்ற முழக்கத்துடன் இந்திய விடுதலைப் போராட்டம் தீவிர நிலையை எட்டியது. நாடு நெடுகிலும் கிளர்ச்சிகள், தந்திக் கம்பங்களை முறித்தல், ரயில் நிலையங்களுக்குத் தீ வைத்தல் போன்ற ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. தமிழ்நாட்டிலும் அக்கிளர்ச்சி பரவலாக நடைபெற்றது. தேவகோட்டைப் பகுதியில் ரொம்ப மும்முரமாக இருந்தது. காரைக்குடிக்கு அருகில் உள்ள பள்ளத்தூர் ரயில் நிலையம் தீயிட்டுப் பொசுக்கப்பெற்று முற்றிலும் சிதைக்கப்பட்டது.

இச் செய்திகளை நான் பத்திரிகைகளில் படித்து அறிந்ததுதான். அரசியல் விஷயங்களில் நான் ஆர்வம் கொண்டதில்லை. மே மாதம்

சென்றபோது பசுமையாய் முழுமையாய்க் காட்சி தந்த சில இடங்கள், ஜனவரியில் பார்க்கையில் கருகிச் சிதைந்து காணப்பட்டன. அழகான சூழ்நிலையில் அமைதியாக நின்ற சிறிய கட்டிடம் பள்ளத்தூர் ரயில் நிலையம் இப்போது கருகிச் சரிந்த கூரையும், இடிந்து தகர்ந்த சுவர்களுமாய்க் கண்களை உறுத்தியது. தேவையில்லாமலே அது என் மனசில் நிலையாகப் பதிவாகிவிட்டது.

புதுக்கோட்டையில் ராசி. சிதம்பரம் மகிழ்ச்சியோடு என்னை வரவேற்றார். செல்வந்தர் வீட்டு இளைஞர் என்பது அவரது நடை உடை பாவனைகளில் புலப்பட்டது. தனவைசிய இளைஞர்கள் பத்திரிகைப் பிரசுரத்திலும் புத்தக வெளியீட்டிலும் ஆர்வம் காட்டத் தொடங்கியிருந்த காலம் அது.

ரா.சி. சிதம்பரமும் கனவுகள் வைத்திருந்தார். 'திருமகளைச் சிறப்பான இதழாக வளர்க்க வேண்டும். இராம. மருதப்பர் இப்போது ஆசிரியராக இருக்கிறார். சாதாரணமானவர். அவரும் இருக்கட்டும். நீங்கள் உங்கள் திறமையை எல்லாம் காட்டித் திருமகளை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செலுத்த வேண்டும்' என்று அவர் என்னிடம் கூறினார்.

'இந்த மாடியிலேயே தங்கிக் கொள்ளலாம். சாப்பாட்டுக்குப் பக்கத்தில் ஒரு ஓட்டலில் ஏற்பாடு செய்கிறேன்' என்றும் அவர் சொன்னார்.

எல்லாம் வசதியாகத்தான் இருந்தது. திருமகள் இருந்த இடம் கீழராஜ வீதியில் விசாலமான ஒரு மாடி. மேஜைகள் நாற்காலி பெஞ்சுகள் ஏராளமாகவே கிடந்தன. அலமாரிகள் போன்றவற்றுக்கும் குறைவில்லை.

மறுநாள் இராம. மருதப்பர் வந்தார். பள்ளி ஆசிரியர் போல் தென்பட்டார். என்னை நானே அறிமுகம் செய்து கொண்டேன். எனது எழுத்துக்களைப் பெரிதும் பாராட்டினார். 'சரி, இருங்க' என்றார். பத்திரிகை சம்பந்தமான பல அலுவல்களை அவர் எனக்குக் கற்றுத் தந்தார். முக்கியமாக, அச்சுக் கோத்து வந்த பிரதிகளைத் திருத்தும் முறையைச் (புரூஃப் பார்ப்பதை) சொல்லிப் புரிய வைத்தார். மாலை நேரங்களில் அமைதியான இடங்களில் உலாவ அழைத்துச் சென்றார். பல விஷயங்கள் பற்றிப் பேசினார். 'செட்டியாருக்கு ஆசை அதிகமிருக்கு. அதெல்லாம் நடைமுறையில் எவ்வளவு சாத்தியம் என்பது போகப் போகத் தான் தெரியும்' என்றும் சொல்லி வைத்தார்.

விரைவிலேயே எனக்கு அது புரிவதற்குச் சந்தர்ப்பம் உதவியது.

நான் அங்கு வந்து சேர்ந்து பத்து நாட்கள் ஆகியிருந்தன. ஒருநாள் இரவு. ஏழு மணி இருக்கும். ராசி.சிதம்பரம் வந்தார். 'என்னைத்தேடி யாராவது வந்தார்களா?' என்று கேட்டார். யாரும் வரவில்லை என்றேன். பொதுவான விஷயங்களைப் பேசியவாறு நின்றார். சற்று நேரத்தில், வெளியே நின்று யாரோ

அவரை அழைத்தார்கள். உடனே அவர், 'சரி, நான் வாறேன். சும்மா தான் வந்தேன்' என்று கூறிவிட்டு வெளியேறினார். அங்கு நின்று அவரை அழைத்தது யார், அவர் யாருடன் சென்றார் என்பது எதுவும் எனக்குத் தெரியாது. இருட்டில் ஒன்றும் தெரியவுமில்லை.

சிறிது நேரம் சென்றதும் ஓர் ஆள் வந்து,'ஆச்சி உங்களைக் கூப்பிடுறாக' என்றார். எந்த ஆச்சி என்று நான் அறியாமையோடு கேட்டேன். செட்டியார் சம்சாரம் என்று அவன் மெதுவாகச் சென்னான். செட்டிநாட்டில், சாதாரணமாக, பெண்கள் 'ஆச்சி' என அழைக்கப்படுவது வழக்கம் என்பது நான் அறிந்திராதது. திருநெல்வேலிப் பக்கம் வயது முதிர்ந்தவர்களை, பாட்டிமாரைத்தான் 'ஆச்சி' என்று குறிப்பிடுவார்கள். வேலைக்காரர்கள், தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் 'பெரிய வீட்டு'ப் பெண்களை - உயர்மட்டத்தினரை - ஆச்சி என்று குறிப்பிடுவார்கள். வயது குறைந்தவர்களைக் கூட 'சின்ன ஆச்சி' என மரியாதையாக அழைப்பார்கள்.

வந்தவனிடம் 'எதற்காக?' என்று கேட்டேன். செட்டியார் வீட்டில் எவரையும் நான் அதுவரை பார்த்ததில்லை. 'கையோடு கூட்டி வரச் சொன்னாக' என்று அவன் அவசரப்படுத்தினான். உடன் சென்றேன்.

ஓர் இளம் பெண். வாயில் வெற்றிலையை ஒதுக்கிக் கொண்டு, பெரிய இடத்துப் பெண் என்ற மிடுக்குடன் காணப்பட்டாள். அமைதியின்றி அறையில் அப்படியும் இப்படியும் நடந்து கொண்டிருந்தாள். என்னைக் கண்டதுமே, 'உங்க செட்டியாரைத் தேடி யார் வந்தது?' என்று கேட்டாள்.

'யாரும் வரலியே' என்றேன்.

'பொய் சொல்ல வேண்டாம். கோகர்ணத்துக்காரி அங்கே வரலே?'

'யாருமே வரலே. செட்டியார்தான் வந்தார். என்னோடு சிறிது பேசிக்கொண்டிருந்தார்' என்றேன்.

'உங்க செட்டியாரைப் பாதுகாக்கணும்கிறதுக்காக மூடி மறைக்க வேண்டாம். செட்டியார் கூட ஒரு பொம்பிளை வரலே?'

'ஒருத்தரும் வரலே. செட்டியார் மட்டும் தான் வந்தார்.'

'வெளியே நின்றாளா?'

'அது எனக்குத் தெரியாது, நல்ல இருட்டு. வெளியே யாரும் நின்றால் கூட அது தெரியாது'.

'உம். செட்டியாரைத் தேடி பொம்பிளைக வருவாக, அப்படி யாராவது வந்தா எனக்குத் தெரியப்படுத்தணும். இப்ப நீங்க போகலாம்' என்று என்னை அனுப்பிவைத்தாள்.

இந்தக் குறுக்கு விசாரணை எனக்குச் சில உண்மைகளைப் புரிய வைத்தது. கண்ணகி- மாதவி விவகாரம் போலிருக்கு. செட்டியார்மீது மனைவிக்கு நம்பிக்கையில்லை. அவர் தமது ஆசைநாயகியை ஆபீசில் சந்திக்கிறார் என்ற சந்தேகம் அம்மாளுக்கு. அதனால் தான் இந்த விசாரிப்பு.

புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள கோகர்ணத்தில் தாசிகள் அதிகம்; அந்த வகையில் பிரசித்தமான இடம் அது என்று மருதப்பர் பேச்சோடு பேச்சாக அறிவித்திருந்ததும் நினைவுக்கு வந்தது.

திருமகள் அலுவலகத்துக்கு அ. ராமாமிர்தம் என்று ஓர் எழுத்தாளர் வருவார். வறுமை நிலையை அவர் தோற்றமே சொல்லும். நல்ல எழுத்துத் திறமை உடையவர். தமக்கென ஒரு தனிநடை கொண்டு சிந்தனைக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்தார். புதுக்கோட்டையில் இருந்த காகித விற்பனைக் கடை ஒன்றில் அவர் வேலை பார்த்தார். அ.ரா. என்ற பெயரில் எழுதிக் கொண்டிருந்தார்.

மறுநாள் வந்த அவர், 'என்ன, ராத்திரி ஆச்சி உங்களிடம் விசாரணை நடத்தினார்களாமே?' என்று கேட்டார். ஆச்சியின் வேலையாள் இவரிடம் சொல்லியிருக்க வேண்டும். நான் நடந்ததைச் சொன்னேன்.

'செட்டியார் கோவலன் டைப். அவர் விவகாரங்கள் ஆச்சிக்குத் தெரியும். சொத்து பணமெல்லாம் ஆச்சிகிட்டே தான் இருக்கு. பத்திரிகை நடத்துவதற்குக் கூட ஆச்சி பணம் தந்தால்தான் உண்டு. அதனாலேதான் திருமகள் காலம் தவறாமல் வரமுடிவதில்லை' என்று அ.ரா. விளக்கினார்.

பத்து மணிக்கு இராம. மருதப்பர் வந்தார். வந்ததுமே. 'ராத்திரி ஆச்சி உங்களைக் கூப்பிட்டு விசாரிச்சாங்களா?' என்று கேட்டார்.

இதுபோன்ற விஷயங்கள் என்னமா இறக்கை கட்டிப் பறந்து நெடுகப் பரவிவிடுகிறது என்ற வியப்பு எனக்கு.

ஆச்சிக்குச் செட்டியார் பேரில் நம்பிக்கையில்லை. பணம் சொத்து எல்லாம் ஆச்சி பேரில்தான் இருக்கிறது. செலவுக்குப் பணம் எல்லாம் ஆச்சி கொடுத்துத் தான் செட்டியாருக்கு வர வேண்டும். லாபம் இல்லாத தொழிலாய் இந்தப் பத்திரிகையை ஏன் நடத்த வேண்டும் என்ற எண்ணம் ஆச்சிக்கு. அதனால் தான் திருமகள் காலம் தவறாமல் வரமுடியவில்லை என்று மருதப்பர் தெரிவித்தார்.

நான் அங்குச் சேர்ந்த சமயம் திருமகள் ஜனவரி இதழ் வெளிவந்திருந்தது. பிப்ரவரி இதழ் தயாராக வேண்டும். சில பக்கங்கள் அச்சுக் கோக்கப்பட்டிருந்தன. அவற்றின் 'புரூஃப்' களை நான் திருத்தினேன். வேற சில விஷயங்கள் தேர்வு செய்யப்பட்டுக் காத்திருந்தன. அச்சடிக்கத் தாள் வாங்க வேண்டும். அது தள்ளிப்போடப்பட்டு வந்தது.

பத்திரிகைக்குப் பல இடங்களில் இருந்தும் எழுத்தாளர்கள் அனுப்பிய கதைகள் படித்துப் பார்க்கப்படாமலே கட்டுக்கட்டாக இருந்தன. அவற்றைச் சிறிது சிறிதாகப் படித்து, வெளியிடலாம் என்று தோன்றிய கதைகளைத் தனியாக எடுத்து வைத்தேன்.

அப்போது அகிலன் புதுக்கோட்டையில் இருந்தார். இந்திரா சிறுகதைப் போட்டியில் என் கதை 'தெருக்கூத்து' முதல் பரிசும், அகிலன் எழுதிய கதை இரண்டாவது பரிசும் பெற்றிருந்தன. சினிமா தியேட்டரில், வண்டியில் அமர்ந்து நோட்டீஸ் கொடுப்பதற்காகத் தெருத் தெருவாகச் செல்லும் ஒருவனின் வாழ்க்கை அனுபவம் பற்றியது அவர் எழுதிய கதை.

அவர் என்னைச் சந்தித்து மகிழ்ச்சியுடன் உரையாடிச் சென்றார். க. நாராயணன் என்ற எழுத்தாளரும் புதுக்கோட்டையில் வசித்தார். காகித விற்பனைக் கடையில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். வி.ஸ. காண்டேகர் பாணியில் 'வாழ்க்கைத் தோணி' எனும் நாவலை எழுதிப் பெயர்பெற்றார். 'தாய் நாடு' என்ற சிற்றிதழையும் சிறிது காலம் நடத்தினார். இவை பின்னர் நிகழ்ந்தவை.

'அணிகலம்' பத்திரிகை ஆசிரியர் கதிரேசன் செட்டியாரை ஒருநாள் அவர் வீட்டில் சந்தித்தேன். எனது வளர்ச்சிக்கு உதவிய பத்திரிகைகளில் 'அணிகல'மும் ஒன்று. தொ.மு.சி. ரகுநாதன் கதை, கட்டுரைகளையும் வெளியிட்டது. 'இலக்கிய விமர்சனம்' என்ற கட்டுரையை அவர் முதலில் அணிகலம் மலரில் தான் எழுதினார். பிறகு அதை விரிவாக எழுதி 'இலக்கிய விமர்சனம்' என்ற புத்தகமாக வெளியிட்டார். தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றிய முதலாவது விமர்சன நூல் அதுவேயாகும்.

கதிரேசன் செட்டியார் நடுத்தர வயதினர்தான். வெகு எளிமையாகக் காணப்பட்டார். அணிகலம் பத்திரிகையைத் தரமான இலக்கிய இதழாக உருவாக்கிய அவர் அதை ஒரு குடிசைத் தொழிலாகவே நடத்தினார் என்று சொல்லலாம். பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் அவர் ஒருவராகவே கவனித்துக் கொண்டார். சிக்கனத்தில் கருத்து உடையவர். தபால் கார்டில் எவ்வளவு அதிகம் எழுத முடியுமோ, அவ்வளவு வரிகளை நுணுக்கமாக எழுதுவார்.

'எதையும் வீணடிக்கக்கூடாது. சில பேர் போஸ்ட் கார்டில் இரண்டு வரி, மூன்று வரிகள் மட்டும் எழுதுகிறார்கள். கார்டை வீணடிப்பது தப்பு' என்று அவர் கூறுவது உண்டு.

ஒரு நாள் மாலை வி.ரா.ராஜகோபாலன் புதுக்கோட்டைக்கு வந்தார். இரவில் என்னுடன் தங்கினார். 'திருமகள்' நிலைமை பற்றி விசாரித்தார். நான் உள்ள நிலவரங்களைக் கூறினேன்.

'திருமகள் நிலைமை சிரமம் என்று தான் தெரிகிறது. கூடியவரை சமாளியுங்கள். வேறவாய்ப்பு ஏதாவது கிட்டுமா என்று பார்க்கலாம்' என்று சொல்லிச் சென்றார் வி.ரா.ரா.

வாய்ப்பு சில தினங்களிலேயே தேடி வந்தது.

'சமயம் வருகிறபோது நானே உங்களை, சினிமா உலகத்துக்கு அழைத்துக்கொள்வேன்' என்று முன்னர் உறுதி கூறியிருந்த ஆசிரியர் பி.எஸ். செட்டியார் எனக்குத் திருநெல்வேலிக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதை என் அண்ணா புதுக்கோட்டைக்கு அனுப்பிவைத்தார்.

'சினிமா உலகம்' பணிகளில் எனக்கு உதவியாக இருந்த ஜீவன் என்ற நண்பர் விலகிக்கொண்டார். நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால் சினிமா உலகத்துக்கு உதவியாக இருக்கும் என்று அதன் ஆசிரியர் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தை நான் மருதப்பரிடம் காட்டினேன். 'நீங்கள் இதை ஏற்றுக் கொள்வதுதான் நல்லது. இங்குள்ள நிலைமைகள் உங்களுக்கே தெரியும். திருமகள் பிப்ரவரி இதழ் எப்ப தயாராகி வெளிவரும் என்றே தெரியவில்லை. ஒவ்வொரு மாதமும் இதே சிரமம் தான் நீடிக்கும். அதனாலே நீங்கள் பி.எஸ். செட்டியார் அழைப்பை ஏற்றுக் கோயம்புத்தூர் போங்கள்' என்று யோசனை கூறினார்.

அது தான் சரி என்று எனக்கும்பட்டது. ஆகவே ரா.சி. சிதம்பரத்திடம், பி.எஸ். செட்டியார் கடிதத்தைக் காட்டி, நான் கோயம்புத்தூர் போகிறேன் என்று சொன்னேன்.

போகப் போகிறீர்களா? என்று வருத்தத்துடன் கேட்டார் அவர் 'இப்ப கொஞ்சம் சிரமம் தான். இன்னும் சில மாதங்களில் நிலைமை சரிப்பட்டுவிடும். திருமகளை நல்ல முறையில் கொண்டுவரலாம். இப்ப நீங்க கோவைக்குப் போவதும் நல்லதுதான். நிலைமைகள் சரிப்பட்டதும் நான் உங்களை அழைத்துக் கொள்கிறேன்' என்றார். செலவுக்குப் பணம் தந்து வழி அனுப்பிவைத்தார்.

நல்ல மனிதர் தான். ஆயினும் அவர் கனவுகள் நிறை வேற வழி பிறக்கவில்லை. ஒரு மாதம் கழித்து திருமகள் பிப்ரவரி இதழ் வந்தது. அதன் பிறகு ஓரிரு இதழ்களே பிரசுரம் பெற்றன. மருதப்பர் கதர்க்கடையில் வேலைக்குச் சேர்ந்துவிட்டார் என்ற தகவல் எனக்குக் கிடைத்தது.

13

புதுக்கோட்டையில் திருமகள் அலுவலகத்தில் ஒரு மாதமும் சில நாட்களும் போக்கிய பிறகு, பிப்ரவரி இறுதியில் நான் கோயம்புத்தூர் போய்ச் சேர்ந்தேன்.

வெறைட்டி ஹால் ரோடில் ஒரு சிறிய வீட்டில் பி.எஸ். செட்டியார் குடும்பத்துடன் வசித்தார். அங்கு ஒரு சிறு அறை தான் சினிமா உலகம் அலுவலகம்.

புத்தகங்கள், பழைய பத்திரிகைத் தொகுப்புகள் கொண்ட அலமாரிகள், மேஜை நாற்காலிகள், டைப்ரைட்டிங் மிஷின் முதலியன நிறைந்த நெருக்கடியான இடம் அந்த அறை. அங்குதான் நான் தங்கினேன். அருகில் இருந்த ஓட்டலில் சாப்பாட்டுக்கு ஏற்பாடுகள் செய்தார் செட்டியார்.

பக்கிரிசாமி செட்டியார் என்பது அவர் முழுப்பெயர். பத்திரிகை ஆரம்பிப்பதற்கு முன்பு அவர் சென்னையில் ஒரு உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். வளர்ந்து கொண்டிருந்த சினிமாத் துறை அவரை ஈர்த்தது. பள்ளிக்கூட வேலையை விட்டுவிட்டுச் சினிமா உலகத்தில் புகுந்தார். தமது பெயரை நாகரிகமாகப் பண்டிட் பி.எஸ்.செட்டியார் என்று மாற்றிக் கொண்டார். ராஜா தேசிங்கு, காளமேகம் போன்ற சில படங்களின் தயாரிப்பில் பொறுப்பேற்றுச் செயல்புரிந்தார். அந்நாளைய சினிமா வட்டாரத்தில் ஒரு பிரபலஸ்தராகத் தெரியவந்திருந்தார்.

வளர்ந்து கொண்டிருந்த சினிமாத் தொழிலை ஒட்டி சினிமாப் பத்திரிகைகளும் தோன்றி வளரலாயின. இந்தியா முழுவதிலும் பெயர் பெற்ற சினிமா இதழாக, பாபுராவ் பட்டேலின் 'பிலிம் இந்தியா' என்ற ஆங்கிலப் பத்திரிகை விளங்கியது. அவருடைய முரட்டுக் கிண்டலும், தடாலடி பதில்களும், சூடான விமர்சனங்களும் பாபுராவ் பட்டேலுக்கும் அவருடைய பத்திரிகைக்கும் பரபரப்பான கவனிப்பைப் பெற்றுத் தந்தன.

அவரது பாணியில் தமிழ்நாட்டிலும் சில ஆங்கில இதழ்கள் தலையெடுத்தன. தமிழில் முதலாவது சினிமாப் பத்திரிகை என்று பி.எஸ். செட்டியார் சினிமா உலகம் - சினிமா ஓர்ல்ட் என்ற மாதம் ஒருமுறை இதழை ஆரம்பித்து நடத்தினார். வெகு காலம் வரை இதழின் விலை அரையணாவாகத் தான் இருந்தது. சாதாரணத் தாளில், ரோஸ் நிறக் காகித அட்டையுடன் அது வெளிவந்து கொண்டிருந்தது.

பிற்காலத்தில் சினிமா சஞ்சிகைகள் வரித்துக் கொண்ட மினுமினுப்பான அட்டை, வர்ணப் படங்கள், நடிகையரின் கவர்ச்சிப்படங்கள், நடிகநடிகையர் பேட்டி, அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் முதலிய எதுவுமே சினிமா உலகம் பத்திரிகை பெற்றிருந்ததில்லை. திரைஉலகச் செய்திகள், தமிழ் - இந்தி-ஆங்கிலப் படங்கள் பற்றிய தகவல்கள், விமர்சனங்கள், கேள்வி பதில்கள் இடம் பெற்றிருந்தன.

இவை போக சினிமா உலகம் இதழுக்குத் தனிச்சிறப்புப் பெற்றுத் தந்த முக்கிய விஷயம், அந்தப் பத்திரிகைக்காக அவ்வப்போது உழைத்த துணை ஆசிரியர்களின் எழுத்தாற்றல். சினிமா உலகத்தின் வாய்ப்புகளை நாடி வந்து,

பி.எஸ். செட்டியாரின் உதவிகளைக் கோரியவர்கள் சினிமா உலகம் பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஒத்துழைத்திருந்தனர். திரைப்பட வசனகர்த்தாவாகப் புகழ்பெற்ற இளங்கோவன் (ம.க.தணிகாசலம்) ஒரு சமயம் சினிமா உலகம் இதழுக்காக உழைத்திருந்தார். கவி ச.து.சு. யோகியார் (ச.து. சுப்ரமணியயோகி) சிறிது காலம் அதற்குச் சிறப்புச் சேர்த்திருந்தார். கவி பாரதிதாசனும் சினிமா உலகத்துக்காக ஒரு கட்டத்தில் உழைத்துள்ளார்.

இதனால் எல்லாம் சினிமா உலகம் தனி மதிப்பும் ஒரு தரமும் பெற்று வளர்ந்திருந்தது. வெகு காலம் சென்னையிலேயே வளர்ந்த அது, யுத்த கால நெருக்கடி காரணமாகக் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டிருந்தது.

கோவை அந்நாட்களில், சென்னைக்கு அடுத்த முக்கிய சினிமாத் தயாரிப்புக் கேந்திரமாக விளங்கியது. அங்குப் பல ஸ்டுடியோக்களும், படத் தயாரிப்பு நிறுவனங்களும் செயலாற்றி வந்தன.

கோவையில் 'பேசும்படம்' சினிமா இதழ் பிறந்து, கவர்ச்சி அம்சங்கள் ஏற்று, வளர்ச்சிப் பதையில் முன்னேறிக் கொண்டிருந்தது. சேலத்திலும் சென்னையிலும் வேறு சில இதழ்களும் சினிமாவுக்காகத் தோன்றி, சினிமாத் துறையில் ஆதரவு பெற்று வளர்வதற்குப் போட்டியிட்டன.

இருப்பினும் சினிமா உலகம் இதழுக்குத் தனி மதிப்பு இருந்தது. இந்தச் சமயத்தில் அதன் விலை இரண்டணா ஆகியிருந்தது. ஸ்டுடியோச் செய்திகள், திரைப்படத் தகவல்கள், பட விமர்சனம், கேள்வி பதில் போக, கதை, கட்டுரை, கவிதைகளும் அதில் இடம் பெறுவது வழக்கம். வருடம்தோறும் இரண்டு மூன்று மலர்கள்- தீபாவளிமலர், புதுவருட மலர், சித்திரை மலர் என்று வெளியிடப்பட்டன.

மலர்கள் வெளியிடுவது விளம்பரங்கள் மூலம் பணவருமானம் பெறுவதற்காக. அப்படி விளம்பரங்கள் பெறுவதற்காக, செட்டியார் சேலம், திருச்சி, சென்னை என்று சுற்றிக் கொண்டேயிருப்பார். அப்போது அங்குள்ள எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டு விஷயங்கள் சேகரித்தும் வருவார். ஆகவே, விளம்பர பலத்துடன் விஷய கனம் கொண்டதாகவும் சினிமா உலகப் மலர்கள் அமைந்திருந்தன.

இருப்பினும், செட்டியார் பத்திரிகையில் வளர்ச்சியின் ஆர்வம் கொண்டவராகயில்லை. ஐநூறு பிரதிகள் அச்சிடப்படுவதே போதுமானது; மேலும் பிரதிகளை அதிகரித்தால் தாள் விலை, அச்சுக்கூலி காரணமாகச் செலவுகளும் அதிகமாகும்; விளம்பர வருவாய் லாபகரமாக இருக்கிறது; செலவுகளைக் கூட்டி நஷ்டத்தை உண்டாக்குவானேன் என்பது அவருடைய எண்ணமாக நிலை பெற்றிருந்தது.

சில மாதங்களில், எனது உழைப்பையும் ஈடுபாட்டையும் உணர்ந்து மகிழ்ச்சி அடைந்த செட்டியார், ஆசிரியர்: பி.எஸ். செட்டியார் என்று அச்சிடும்

இடத்தில் அடுத்துத் துணைஆசிரியர்-வல்லிக்கண்ணன் என்று அவராகவே அச்சிடச் செய்தார்.

பொருளாதார பலமின்றி, சிறு அளவில் நடைபெறும் பத்திரிகைகளில் உதவி ஆசிரியர்- துணை ஆசிரியர் என்ற பெயரில் உழைக்கிறவர்கள் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் செய்கிற நபர்களாகத் தான் இருப்பார்கள். தபால்களைக் கவனிப்பது, பத்திரிகைகளை அனுப்புவதற்கான பலதரப்பட்ட வேலைகளையும் செய்வது, புரூஃப் பார்ப்பது, பத்திரிகைக்குத் தேவையான பல்வேறு 'மேட்டர்'களையும் எழுதுவது - இப்படி ஏகப்பட்ட வேலைகள் செய்தாக வேண்டும்.

சினிமா உலகம் சம்பந்தப்பட்ட கணக்குகளை எழுதுவதற்கு ஓர் அன்பர் (ஒரு தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தவர்) உதவினார். அதற்காக ஏதோ சன்மானம் பெற்று வந்தார். ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதி, டைப் செய்து உரிய இடங்களுக்கு அனுப்புகிற பணியை வேறு ஒருவர், பகுதி நேர வேலையாக ஏற்று, செய்து கொண்டிருந்தார்.

நான் வந்த பிறகு, அவ்வேலைகளையும் நானே செய்ய முடியும் என்பதால், செட்டியார் அவ்விரு அன்பர்களையும் நிறுத்திவிட்டு அப்பொறுப்புகளையும் என்னிடம் ஒப்படைத்தார்.

எனக்குச் சம்பளம் என்று எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. சாப்பாடு ஓட்டலில், தங்குமிடம் வீட்டில்; அவசியச் செலவுக்குத் தேவைப்படுகிற பணத்தை அவ்வப்போது கேட்டுவாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை. அது திருப்திகரமாகத்தான் இருந்தது எனக்கு.

ஸ்டுடியோக்களுக்குப் போவது, படஉலகம் சம்பந்தப்பட்ட நபர்களைச் சந்திப்பது, விழா விசேஷம் என்று வரும் நிகழ்ச்சிகளுக்குச் செல்வது முதலியவைகளைச் செட்டியாரே கவனித்துக் கொண்டார். இவ் வட்டாரங்களில் நான் அறிமுகமாக வேண்டும், பழகி முன்னேற வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்ததில்லை.

அப்படி விருப்பம் இருந்திருந்தாலும் ஆசிரியர் உதவியிருக்கமாட்டார் என்றே எண்ணத் தோன்றியது.

பத்திரிகை தொடர்பான சிறுசிறு வேலைகள், வெளி உலக அலுவல்களைச் செட்டியாரின் உறவினரான எஸ்.பி. கிருஷ்ணன் என்ற இளைஞர் கவனித்துக் கொண்டார். அவரும் அக்குடும்பத்தில் ஒருவராகத்தான் வசித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் டி.கே.எஸ். சகோதரர்களின் நாடக சபை பாலக்காடு ஊரில் முகாமிட்டு நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தது. அங்குப் போய் 'நாடக நால்வ'ரைப் பேட்டி காணவும், விளம்பரம் பெற்று வரவும் செட்டியார்

என்னையும் எஸ்.பி. கிருஷ்ணனையும் அனுப்பினார். அதன் பயனாக டி.கே. சண்முகமும் அவருடைய சகோதரர்களும் எனக்கு அறிமுகமானார்கள். பிறகு நல்ல நண்பர்களானார்கள்.

நடிகர்கள் டி.வி. நாராயணசாமி, எஸ்.வி. சுப்பையா முதலியோரும் பிரியமுடன் பழகி, நண்பர்களாயினர்.

கோவையில் நான் இருந்த போதுதான், ஏ.கே. செட்டியாரின் 'குமரி மலர்' வெளிவரத் தொடங்கியது. யுத்த கால நெருக்கடிகளின் விளைவாகப் புதிய பத்திரிகைகள் ஆரம்பிக்க முடியாத நிலை தலையெடுத்திருந்தது. பத்திரிகை தொடங்க அரசின் அனுமதி பெற்றாக வேண்டும். அது மறுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் ஏ.கே. செட்டியார், சட்டத்தில் ஓட்டை கண்டு, சாமர்த்தியமாக ஒரு புதுவழியைக் கடைப்பிடித்தார். பத்திரிகை என்று குறிப்பிடாமல், 'மாதம் ஒரு புத்தகம்' என்ற தன்மையில் 'மலர்' எனும் பெயரில், பத்திரிகை அம்சங்கள் அனைத்தும் கொண்ட ஒரு வெளியீட்டைப் பிரசுரிப்பது என்பது தான் அவர் கண்ட வழி. அதன்படி குமரி மலர் எனும் மாத வெளியீட்டை அவர் தொடங்கி நடத்தினார். தரமான விஷயங்கள் கொண்ட இலக்கிய வெளியீடாக அது அமைந்திருந்தது.

ஏ.கே. செட்டியார் காட்டிய வழியில் ஏகப்பட்டபேர் தமிழ்நாட்டில் 'மாதம் ஒரு புத்தகம்' வெளியிடலானார்கள். கதை மலர், தமிழ் மலர், கதைக்கொடி, புதுமலர் என்றெல்லாம் பெயர் வைத்துப் பிரசுரித்தார்கள். சில தரமான தொகுப்புகளாகவும், பல சாதாரண வெளியீடுகளாகவும் இருந்தன.

இவ்வாறு காலம் போய்க் கொண்டிருக்கையில், என்னுள் அதிருப்தி தோன்றி உறுத்தலாயிற்று. நான் இங்கு வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன; தடம் விழுந்த நொடியில் வண்டி தள்ளாடி நகர்வது போல் தான் இருந்தது. முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் வாய்ப்பே இல்லை என்று நிச்சயமாகப்பட்டது. இங்கிருந்து போக வேண்டியது தான் என்றது மனம்.

செட்டியாரிடம் இதை நேரடியாகச் சொல்லத் தயக்கம். அவர் பரிவுடனும் பாசத்தோடும் பழகினார். குடும்பத்தாரும் அளவிலா அன்பு காட்டி வந்தார்கள். இருப்பினும், எனது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நான் வெளியேற வேண்டியது அவசியம் என்று மனக்குரல் திடமாகக் கூறிவந்தது.

எனவே, என் ஆசைகளையும் திருப்தி தராத நிலையையும் விவரித்து ஒருநீண்ட கடிதம் எழுதி, அதைச் செட்டியாரிடம் அளித்தேன். அதைப் படித்த அவர் யோசனையில் ஆழ்ந்தார். சாயங்காலம் அமைதியாகப் பேசலாம் என்று சொல்லிவிட்டு, வழக்கமான அலுவல்களைக் கவனிக்க வெளியே போனார்.

அன்று மாலை என்னை அழைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டார். வழியில் ஓர் ஓட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டோம். ஊரில் ஓர் ஓரமாக இருந்த பெரிய குளத்தின் நீண்ட அமைதியான கரைக்கு இட்டுச் சென்றார். எனது விருப்பங்களை மனம் திறந்து எழுதித் தெரிவித்ததற்காகப் பாராட்டினார். இலக்கியப் பத்திரிகை நடத்தும் எண்ணம் தனக்கும் நெடுநாட்களாக உண்டு என்றார். பாரதிதாசன் தன்னுடனிருந்து சினிமா உலகத்துக்குத் துணைபுரிந்த நாட்களில், அவருக்காக 'நிலா' என்ற பெயரில் ஓர் இதழ் தொடங்க முன்னேற்பாடுகள் செய்ததையும், அத்திட்டம் நிறைவேறாமல் போனதையும் விவரித்தார்.

'நிலாவுக்காகச் செய்த பிளாக்குகள் எல்லாம் இருக்கின்றன. இப்போது குமரி மலர் மாதிரி, நிலா என்று மாதம் ஒரு புத்தகம் கொண்டு வருவோம். அத்துடன் உங்கள் எழுத்துக்களைப் புத்தகங்களாக வெளியிடலாம். அதற்கான விளம்பரத்தைச் சினிமா உலகம் வருகிற இதழிலேயே அச்சிடலாம்' என்று கூறினார்.

வீடு திரும்பியதும், பழைய பிளாக்குகளில் தேடி எடுத்து நிலா சம்பந்தமான பிளாக்குகளைக் காட்டினார். 'பொற்காலப் பிரசுராலயம்' - வெளிவர இருக்கும் புதிய புத்தகங்கள் என்று சில நூல்களின் பெயர்களை எழுதினார். அவற்றில் இளங்கோவன் கதைகள், வல்லிக்கண்ணன் கதைகள் என்பவற்றையும் சேர்த்தார்.

அந்த விளம்பரம் சினிமா உலகம் இதழில் வெளிவந்தது.

இளங்கோவன் (மு.க. தணிகாசலம்) புதுமைப்பித்தனுடன் 'தினமணி'யில் பணியாற்றியவர். நல்ல சிறுகதைகள் எழுதியிருந்ததார். ஆஸ்கார் ஒயில்டு எழுத்துக்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இலக்கியவாதி. அவருடைய கதைகளிலும், கட்டுரைகளிலும் ஒயில்டு எழுத்துக்களின்- தத்துவங்களின் சாயைதென்படும். தினமணி 1937ஆம் வருட ஆண்டு மலரில் இளங்கோவன் 'சாவே வா!' என்றொரு அருமையான கட்டுரை எழுதியிருந்தார். ஆழ்ந்த சிந்தனைகளைக் கொண்டது.

அப்புறம் இளங்கோவன் சினிமாத் துறையில் ஈடுபட்டுத் திரைப்பட வசனத்தில் புதுமைகளும் இலக்கியநயமும் சேர்த்துப் புகழ்பெற்றார். பி.எஸ். செட்டியாருக்கு நல்ல நண்பர். இளங்கோவன் எழுத்துக்கள் அதுவரை புத்தகமாகப் பிரசுரம் பெற்றிருக்கவில்லை. அவற்றை வெளியிட வேண்டும். என்ற ஆசை செட்டியாருக்கு இருந்தது. அதற்காக இளங்கோவனின் அனுமதியையும் அவர் பெற்றிருந்தார்.

ஆசைகள் எல்லாம் செயல்வடிவம் பெற்றுவிடக்கூடும் என்ற சாத்தியப்பாடு வாழ்க்கையில் இருக்குமானால், எத்தனை எத்தனையோ அற்புதங்களும் மகத்தான சாதனைகளும் விளைந்து கொண்டே இருக்கும்.

எண்ணியவை எல்லாம் - அல்லது, அவற்றில் பெரும் பகுதியேனும் - எங்கே நிறைவேறுகின்றன? சினிமா உலகம் செட்டியாரின் எல்லா ஆசைகளும் செயல்மலர்ச்சி பெறமுடியாத தன்மையிலேயே இருந்தது. வழக்கமான காரியங்கள் வழக்கம்போல் நடந்து கொண்டிருந்தன.

என் மனக்குறை தீர வழி எதுவும் பிறந்துவிடவில்லை.,

மேலும் மூன்று மாதங்கள் ஓடிப்போயின. இனியும் இங்கேயே இருப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தேன். நல்லவிதமாகச் செட்டியாரிடம் சொல்லிக் கொண்டு பிரிந்து போவது நடக்கக் கூடிய காரியமாக இல்லை. ஆகவே 'ஒரு வழி சொல்லி, பெரு வழி போவதே நான் செய்ய வேண்டியதாகும்' என்று தீர்மானித்தேன்.

நான் திருநெல்வேலியை விட்டு வந்து பத்து மாதங்கள் ஆகின்றன; அம்மாவுக்கு உடல் நலம் சீராக இல்லை; என்னைப் பார்க்க விரும்புகிறாள் என்று சொல்லிவிட்டு, திருநெல்வேலி போவதாகப் பெயர்பண்ணி, சென்னைக்கு ரயிலேற வேண்டியது தான் என்று திட்டமிட்டேன்.

எனவே என் அண்ணாவுக்குக் கடிதம் எழுதி, நான் உடனே ஊருக்கு வரவேண்டும் என்று குறிப்பிட்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பும்படி கேட்டேன். அவ்வாறே கடிதம் வந்தது. அதைச் செட்டியாரிடம் காட்டி ஊர் போவதற்கு அனுமதி பெற்றேன். பணமும் பெற்றுக் கொண்டேன்.

இரவு 12 மணி அளவில் கோவையிலிருந்து திருநெல்வேலிக்கு ஒரு ரயிலும், சென்னைக்கு ஒரு ரயிலும் புறப்படும் என்று தெரிந்துவைத்திருந்தேன். புறப்படவேண்டிய நாளில் இரவு 10 மணி வரை, எழுத வேண்டிய - டைப் செய்ய வேண்டிய கடிதங்கள் பலவற்றையும் எழுதிமுடித்து மேஜையில் சீராக வைத்தேன்.

வீட்டில் பலரும் தூங்கிவிட்டார்கள். 11 மணி-அளவில், பெட்டியை எடுத்துக்கொண்டு மெதுவாக வெளியேறினேன். ரயில் நிலையம் தூரத்தில் இல்லை. கிருஷ்ணன் என்னைத் தேடிக்கொண்டு வந்துவிடக்கூடாது என மனம் உருப்போட்டவாறு இருந்தது.

சென்னைக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு உரிய ரயிலில் ஏறி, மறைவாக உட்கார்ந்து கொண்டேன். வண்டி புறப்படும் வரையில், 'கிருஷ்ணன் வந்து விடுவாரோ! என்னைக் கண்டுபிடித்து விடுவாரோ?' என்று உள்ளப் பதைப்பு என்னில் இருந்தது.

நல்ல வேளை! சென்னை போகிற ரயில் முதலில் புறப்பட்டது. இனிமேல் யார் வந்து தேடினாலும் கவலையில்லை என்று மனம் நிம்மதி அடைந்தது. திருநெல்வேலியில் இருந்து நான் எழுதுவதுபோல, என் நிலைமையையும் பிரயாணத்தையும் விரிவாகக் கூறும் ஒரு கடிதம் எழுதி, ஏற்கெனவே

அண்ணாவுக்கு அனுப்பியிருந்தேன். மூன்று நாட்கள் கழித்து அதைச் செட்டியாருக்குத் தபாலில் அனுப்பிவிடும்படியும் கேட்டிருந்தேன். அப்படியே செய்யப்பட்டது.

எஸ்.பி. கிருஷ்ணன் என்னை வழி அனுப்புவதற்காக ரயில்நிலையத்துக்கு வருவதாகயிருந்தார் ஆனால் அவர் தூங்கிவிட்டார். திடீரென விழித்துக் கொண்டு, நேரமாகிவிட்டதே என்று உணர்ந்து, நான் ஏற்கெனவே போய்விட்டேன் எனக் கண்டு கொண்டு, வேகம் வேகமாக ரயிலடி வந்தார். திருநெல்வேலி போகிற ரயில் நின்றது. அவர் ஒவ்வொரு பெட்டியினுள்ளும் சன்னல் வழியாக எட்டிப் பார்த்து, 'வல்லிக்கண்ணன்! வல்லிக்கண்ணன்!' என்று கூவியபடி, பிளாட்பாரத்தில் அங்குமிங்குமாக நடந்து பார்த்தார். ரயில் கிளம்பிவிட்டது. 'சரி. வண்டியில் கூட்டத்துக்கிடையில் சிக்கியிருப்பார்' என்று எண்ணிக்கொண்டு வீடு திரும்பினார். பின்னர் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் நேரிட்டபோது, கிருஷ்ணன் இதை என்னிடம் சொன்னார்.

மேலும் தமாஷாகக் குறிப்பிட்டார். 'அன்றைக்கு ராத்திரி, ரயிலை ஒட்டி பிளாட்பாரத்திலே, காப்பி-காப்பி... வடை முறுக்கு என்று கூவி விற்கிறவர்கள் மாதிரி, நான் வல்லிக்கண்ணன்-வல்லிக்கண்ணன் என்று சத்தமிட்டபடி அங்குமிங்கும் அலைந்தேனா! இவன் என்னடா புதுசா என்னமோ விற்கிறானே என்று மற்றவங்க எண்ணியிருப்பாங்க!' இதைக் கூறிவிட்டு உரக்கச் சிரித்தார் நண்பர்.

கோயம்புத்தூரில் நான் ஒன்பது மாதங்கள் தங்கியிருந்தேன். எனது அனுபவ ஞானம் விரிவடைவதற்கு அந்தக் காலகட்டம் நன்கு உதவியிருந்தது.

14

சென்னை போய்ச் சேரவேண்டும் என்று வெகுகாலமாக ஆசை வளர்த்து வந்த நான் ஒருவாறு சென்னை நகரம் வந்துவிட்டேன். 1943 டிசம்பர் மாதம் ஒரு நாளில். நேரே நவசக்தி அலுவலகம் போய்ச் சேர்ந்தேன்.

மயிலாப்பூர் நடுத்தெருவில் அந்த அலுவலகம் இருந்தது. வசதியான தனிவீடு. ஒரு டிரெடில் மிஷின்; அச்சகத்துக்குரிய இதர சாமான்கள் பலவும் அங்கேயிருந்தன. அங்கே யாரும் குடியிருக்கவில்லை. அது ஆபீஸாக மட்டுமே பயன்பட்டது.

நான் வந்து சேர்ந்த நாளில் சக்திதாசன் சுப்பிரமணியம் சென்னையில் இல்லை. நவசக்திக்கு நிதிவசூல் செய்வதற்காக அவர் இலங்கை போயிருந்தார்.

அந்தக் கட்டிடத்தில், 'கிராம ஊழியன்' ஆசிரியர் திருலோக சீதாராம் தங்கியிருந்தார். துறையூரில் புத்துயிர் பெற்று, மறுமலர்ச்சி இலக்கிய மாதம்

இருமுறை பத்திரிகையாக வளர்ந்து வந்தது கிராம ஊழியன். திருலோக சீதாராம் அதன் நிர்வாக ஆசிரியர் என்றும், கு.ப. ராஜகோபாலன் ஆசிரியர் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார் பதிப்பாளர். பத்திரிகை, கிராமஊழியன் பிரஸ் லிமிட்டெட் என்ற நிறுவனத்தின் சார்பில் வெளிவந்தது. அதன் செயலாளர் செட்டியார் தான்.

கிராம ஊழியன் பொங்கல் மலர் வெளியிட ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. மலருக்குச் சென்னை எழுத்தாளர்களிடம் கதைகள் கட்டுரைகள் கேட்டுப் பெறவும், விளம்பரங்கள் சேகரிப்பதற்காகவும் கு.ப.ரா.வும், திருலோக சீதாராமும் வந்து, நவசக்தி அலுவலகத்தில் தங்கியிருந்ததாகவும், சில தினங்களுக்குப் பிறகு கு.ப.ரா. கும்பகோணம் போய்விட்டார் என்றும், தாம் மட்டும் இருப்பதாகவும் திருலோகம் தெரிவித்தார்.

எனது எழுத்துக்கள் கிராம ஊழியனில் வந்திருந்தன. திருலோகத்தை இதுவரை நான் சந்தித்ததில்லை. இப்போதுதான் நாங்கள் அறிமுகமானோம். அவர் கவிஞரும் கூட. 'மந்தஹாசன்' என்ற பெயரில் கவிதை எழுதி வந்தார்.

திருலோக சீதாராம் பல வருடங்களுக்கு முன்பு விழுப்புரத்தில் உபாத்தியாயர் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அங்கே இராம. சடகோபன் என்பவர் 'தியாகி' என்ற இதழை நடத்தி வந்தார். எளியமுறையில் நடந்த சிற்றிதழ் அது. திருலோகம் அவருக்கு உதவிபுரிந்தார். நாமே ஏன் ஒரு பத்திரிகை நடத்தலாகாது என்ற நினைப்பு அவருக்குத் தோன்றியது. 'ஆற்காடு தூதன்' (ARCOT HERALD) என்ற பெயரில் அவர் ஒரு பத்திரிகை நடத்தினார். மகாகவி பாரதியார், வள்ளலார் இராமலிங்கம் ஆகியோர் பாடல்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் ஆவர். ஒரு தனிரகமான குரலில் அவற்றை அவர் பாடுவது வழக்கம். சொற்பொழிவும் ஆற்றுவார். அதனால் அந்த வட்டாரத்தில் அவருக்கு நல்ல பெயர் கிட்டியிருந்தது.

அவர் மனைவி ஊர் துறையூர். திருலோகம் அடிக்கடி அந்த ஊருக்குப் போவார். அங்கும் சுற்றுவட்டாரங்களிலும் பாரதியார் பாடல்களைப் பாடியும், இராமலிங்கர் பற்றிச் சொற்பொழிவாற்றியும் செல்வாக்கு பெற்றிருந்தார்.

அச்சமயத்தில் துறையூரில் 'கிராம ஊழியன்' என்ற காங்கிரஸ் பத்திரிகை வார இதழாக வெளிவந்துகொண்டிருந்தது. பூரணம்பிள்ளை என்பவர் அதன் ஆசிரியர். அந்தப் பத்திரிகை பிறப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது.

அந்தக் காலத்தில் திருச்சியிருந்து 'நகரதூதன்' பத்திரிகை வாரம்தோறும் வந்து கொண்டிருந்தது. ரெ. திருமலைசாமி அதன் ஆசிரியர். அது காங்கிரசுக்கு எதிர்க்கட்சியான நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் பார்ட்டி)யை ஆதரித்துவந்தது. திருமலைசாமி எழுத்தாற்றல் மிக்கவர். விறுவிறுப்பான நடையில், காரசாரமாக, அவர் கட்டுரைகள் எழுதுவார். காங்கிரஸ் கட்சியையும், அந்த வட்டாரத்துக்

காங்கிரஸ் பிரமுகர்களையும் கடுமையாகத் தாக்கி எழுதி வந்தார் அவர் 'நகரதூதனில்' 'பேனா நர்த்தனம்' என்பது சூடும் சுவையும் வேகமும் நிறைந்த பகுதி. திருமலைசாமிதான் அதை எழுதினார்.

'நகரதூதன்' தாக்குதல்களுக்கு எதிர்த்தாக்குதல் கொடுக்க வேண்டும், திருமலைசாமியின் சாடல்களுக்கு உரியமுறையில் பதிலடி தரவேண்டும் என்று திருச்சி மாவட்ட காங்கிரஸ்காரர்கள் கருதினார்கள். எனவே 'கிராம ஊழியன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையைத் துறையூரில் ஆரம்பித்து நடத்தினர்.

ஆசிரியர் பூரணம் பிள்ளை சிறிது காலத்தில் இறந்து போனார். பத்திரிகையை எப்படி நடத்துவது என்ற நெருக்கடி எழுந்தது. விழுப்புரத்தில் 'ஆற்காடு தூதன்' சரிவர நடக்கவில்லை. பத்திரிகை நடத்த வேண்டும் என்ற ஆர்வம் திருலோக சீதாராமுக்கு அதிகம் இருந்தது. அ.வெ.ர.கி. ரெட்டியார் அவர் நண்பர். அவரும் பாரதி பக்தர். பாரதி இலக்கியத்தில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார். திருலோகமும் ரெட்டியாரும் கலந்து பேசி, மற்றும் சில பிரமுகர்களையும் சேர்த்துக் கொண்டு, ஒரு லிமிட்டெட் நிறுவனம் அமைத்தார்கள். அது அச்சாபீஸ் நடத்தியதுடன் கிராம ஊழியன் பத்திரிகையையும் நடத்த முன் வந்தது. திருலோக சீதாராம் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர் துறையூருக்கே வந்துவிட்டார்.

அரசியல் வார இதழாக கிராம ஊழியன் வெற்றிகரமாக வளரமுடியவில்லை. இக் காலகட்டத்தில் திருச்சியில் வி.ரா.ராஜகோபாலன் நடத்திய மறுமலர்ச்சி இலக்கிய இதழான 'கலாமோகினி' எழுத்தாளர் வட்டாரத்திலும் பத்திரிகை உலகிலும் நல்ல கவனிப்பு பெற்று வளர்ந்தது. நாமும் இது மாதிரி ஓர் இலக்கியப் பத்திரிகை நடத்தலாமே என்ற எண்ணம் திருலோகம், அ.வெ.ர.கி இருவருக்கும் ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில், இந்தியாவில் ஆட்சிபுரிந்த பிரிட்டிஷ் அரசு பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் ஒன்று கொண்டுவந்தது. அதன்படி பத்திரிகைகள் இன்னின்ன விஷயங்களை வெளியிடக்கூடாது; அரசு அதிகாரிகளின் கண்காணிப்பு ஏற்படுத்தப்படும் என்றெல்லாம் விதிகள் வகுத்தது. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் அம்முயற்சியை எதிர்த்து இந்தியப் பத்திரிகைகள் பல தங்கள் வெளியீட்டை நிறுத்திக் கண்டனம் தெரிவித்தன. தமிழ்நாட்டிலும் தினமணியும் மற்றும் சில தினசரிகளும் பிரசுரிப்பதை நிறுத்தி அரசின் போக்கிற்கு எதிர்ப்புக் காட்டின. இதையே காரணமாகக் கூறி கிராம ஊழியனும் வெளிவருவதை நிறுத்திக் கொண்டது

கிராம ஊழியன் இதழை, கலாமோகினி போல இலக்கிய இதழாக மாற்றலாம்; மறுமலர்ச்சி இலக்கிய எழுத்தாளர் கு.ப. ராஜகோபாலன் கும்பகோணத்தில் சும்மாதான் இருக்கிறார். அவருடைய எழுத்துக்களைச் சென்னை இலக்கியப் பத்திரிகைகள் ஏற்று வெளியிடுவதில்லை. அவரைக் 'கௌரவ ஆசிரியர்' ஆக்கி ஊழியனை நடத்தலாம் என்று திருச்சி இலக்கிய நண்பர்கள் யோசனை கூறினார்கள். அவ்வாறே செயலாற்றப்பட்டது.

கு.ப.ரா. தமக்கிருந்த இலக்கிய ஆர்வத்தினாலும் உற்சாகத்தாலும், தமது பத்திரிகைப் பணிக்குச் சன்மானம் தேவையில்லை, பணம் எதுவும் தரவேண்டாம் என்று கூறினார். துறையூருக்கு வராமல், கும்பகோணத்தில் இருந்தபடியே கதை, கட்டுரை என்று பத்திரிகை விஷயங்கள் அனுப்பினார். மற்றும் சிலரிடமிருந்தும் படைப்புகள் பெற்று ஊழியனுக்கு அனுப்பி வந்தார். அவர் வேண்டாம் என்று பெரிய மனசுடன் பணத்தை மறுத்தபோதிலும் பத்திரிகை நிர்வாகம் அவருக்கு மாதம்தோறும் ஐம்பது ரூபாய் அனுப்பி உதவியது. ஆறு மாதங்களுக்குப் பிறகு கு.ப.ரா. பெயரை 'ஆசிரியர்' என்று வெளியிட்டு, மாதாமாதம் நூறு ரூபாய் வழங்கியது.

அந்நிலையில்தான் கு.ப.ரா. எழுத்தாளர்களிடம் 'விஷயதானம்' பெறவும் திருலோகம் விளம்பரங்கள் சேகரிக்கவும் சென்னைக்கு வந்தார்கள். இவர்கள் வந்த பிறகுதான் சக்திதாசன் சுப்பிரமணியம் இலங்கை சென்றார்.

இவ்விவரங்கள் அனைத்தையும் திருலோகம் எனக்குச் சொன்னார். கிராம ஊழியனை இன்னும் சிறப்பாக நடத்த வேண்டும். அதற்கு நீங்கள் துறையூருக்கு வந்தால் உதவியாக இருக்கும். நவசக்தி பொருளாதாரபலம் இல்லாது சிரமப்படுகிறது. பணம் சேகரித்து வருவதற்காகத் தான் சத்திதாசன் இலங்கை போயிருக்கிறார். ஓரளவு நிதி அவருக்கக் கிடைக்கவும் கூடும். ஆனால் அதை வைத்துக் கொண்டு எத்தனைக் காலத்துக்கு அவர் பத்திரிகை நடத்த முடியும்?' என்று திருலோகம் கேட்டார்.

சக்திதாசனும், ராதாமணியும், அவளுடைய சகோதரிகளும் சாலைத் தெருவில் வசதியான வீட்டில் வசிக்கிறார்கள் என்றும் திருலோகம் தெரிவித்தார். கே. ராமநாதன்தான் இப்போது 'நவசக்தி'யைக் கவனித்துக்கொள்கிறார்; ராமநாதனின் இலக்கிய நோக்கே வேறு என்றும் அவர் கூறினார்.

நவசக்தி திரு.வி. கல்யாணசுந்தரனாரின் பத்திரிகையாக நெடுங்காலம் வளர்ந்தது. ஒரு காலத்தில் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி, வெ.சாமிநாத சர்மா முதலியவர்கள் ஆசிரியர் குழுவில் பணியாற்றியுள்ளனர். பின்னர், அதன் இறுதிக்கட்டத்தில் கே. ராமநாதன், சக்திதாசன் சுப்பிரமணியம் முதலியோர் உதவி ஆசிரியர்களாக உழைத்தார்கள். ஒரு கட்டத்தில் ராமநாதன் இலங்கை போய்விட்டார். அங்கு அவர் 'தேசாபிமானி' என்ற பத்திரிகைப் பணியில் ஈடுபட்டதுடன் தொழிலாளர் நலனுக்காகத் தீவிரமாகப் பாடுபடவும் செய்தார். அங்குள்ள அரசு அவரைக் கண்காணித்து, வந்தது. அவர் கைது ஆகக்கூடிய நிலை ஏற்பட்டதும் அவர் தமிழகம் வந்துவிட்டார்.

திரு.வி.க. முதுமை காரணமாக நவசக்தியை வளர்க்க இயலாத நிலை ஏற்பட்டது. 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி நவசக்தியை ஏற்று நடத்த விரும்பினார் என்றும் ஆனாலும் இறுதிக்கட்டத்தில் நவசக்திக்காகச் சிரமங்களோடு

பணியாற்றிய சக்திதாசனுக்கே இதழ்ப் பொறுப்பைத் திரு.வி.க. தந்துவிட்டார் என்றும் செய்தி நிலவியது.

சக்திதாசன் சுப்பிரமணியம், ராதாமணி அம்மையார் துணையுடன் நவசக்தியைத் தனி இலக்கிய இதழாக, புத்தக வடிவில் வெளியிடலானார். கே.ராமநாதன் அவருடன் சேர்ந்து உதவிபுரிந்து வந்தார்.

1944 ஜனவரி இதழ் வெளிவரவேண்டும். பணத்துக்காகச் சக்திதாசனின் தபாலை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதழுக்குத் தேவையான விஷயங்கள் சிறிது சிறிதாக அச்சுக் கோக்கப்பட்டு, இரண்டு இரண்டு பக்கங்களாக அச்சாகிவந்தன.

வ.ரா. (வ. ராமஸ்வாமி) நவசக்தியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் சமூகநிலைமைகள், கல்வி வளர்ச்சி பற்றிப் பொதுப்படையான சிந்தனைகளைச் சிறுசிறு கட்டுரைகளாக்கி வந்தார். மாதம்தோறும் அவரே அலுவலகம் வந்து கட்டுரையைக் கொடுத்துச் செல்வது வழக்கம் என்று தெரிந்தது.

அதன்படி ஜனவரியில் ஒருநாள் வந்தார். மனிதன் இழுத்துச் செல்லும் ரிக்ஷாதான் அந்நாட்களில் நடைமுறையில் இருந்தது. சென்னையில் முக்கிய ரஸ்தாக்களில் டிராம் வண்டிகள் ஓடின.

ரோடு நடுவில் இரும்புத் தண்டவாளங்கள் பதிக்கப்பட்டிருந்தன. பெரிய ரயில் பெட்டி மாதிரியானது. டிராம் வண்டி நீளத்துக்கு பெஞ்சுகள் உண்டு. எத்தனை பேர் வேண்டுமானாலும் ஏறலாம். நெரிசலான நேரங்களில் ஆட்கள் நெருக்கமாக நின்று கொண்டும் பிரயாணம் செய்வார்கள். அந்நாட்களில் அரசு பஸ்கள் அதிக எண்ணிக்கையில் ஓடவில்லை.

வ.ரா. எங்கும், மனிதன் இழுக்கும் ரிக்ஷாவில்தான் போய்வந்தார். 'மனிதாபிமானம் பற்றிப் பேசுகிற-எழுதுகிற வ.ரா. மனிதன் இழுக்கும் ரிக்ஷாவில்தான் போகிறார். பாவம், கஷ்டப்படுகிற ஒருவனை ஆதரிப்பதே என் நோக்கம் என்கிறார். இருக்கலாம் ஆனால் மாலை நேரங்களில் அவர் கடற்கரைக்கு ரிக்ஷாவில் போய் என்ன செய்கிறார் தெரியுமா? ரிக்ஷாவைவிட்டுக் கீழே இறங்கமாட்டார். ரிக்ஷாக்காரனை, ரிக்ஷாவைத் தாங்கிப் பிடித்தபடியே நிற்கவைத்து அவர் ரிக்ஷாவில் ஜம்மென வீற்றிருந்தபடியே காற்று வாங்குவார். இப்படி ரொம்ப நேரம் ரிக்ஷாக்காரனிடம் வேலை வாங்குவார். இதுதான் மனிதாபிமானமோ?' என்று கே. ராமநாதன் என்னிடம் குறிப்பிட்டது உண்டு.

நவசக்தி ஜனவரி இதழுக்குக் கட்டுரை தருவதற்காக வ.ரா. அலுவலகம் வந்தபோது நானும் ராமநாதனும் அங்கே இருந்தோம். திருலோக சீதாராமனும் இருந்தார். ராமநாதன் என்னை அறிமுகப்படுத்தினார்.

வ.ரா., என்னைக் கூர்ந்து நோக்கினார். 'முன்பே சக்திதாசன் சொல்லியிருக்கிறார். எழுத்தாளன் ஆவதற்காக வீட்டைவிட்டு வெளியேறி நடந்தே புறப்பட்டுவிட்டீர் என்றும் சொன்னார். பேஷ். இப்படித் துணிச்சலாக வீட்டை விட்டு வெளியேறுகிறவர்கள்தாம் தமிழுக்காக ஏதாவது செய்யமுடியும்' என்று கூறிய வ.ரா., 'நீர் முறையாகத் தமிழ் இலக்கியம் படித்திருக்கிறீரா?' என்று கேட்டார்.

'இல்லை' என்று சொன்னேன்.

'அது தான் நல்லது. முறையாகப் பழந்தமிழ் இலக்கியம் படித்தவர்களால் புதுமையாக எதுவும் செய்யமுடியாது' என்று வ.ரா. குறிப்பிட்டார். உடனே திருலோகம் அவருடன் சண்டை பிடிக்கலானார்!

'வ.ரா.! நீங்கள் சொல்வது நல்ல யோசனையே இல்லை. எழுத்துத் துறையில் முன்னேற வேண்டும் என்று ஆர்வமாக இருக்கிற ஓர் இளைஞனிடம், பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்காதே என்று சொல்வது எப்படி நல்ல ஆலோசனையாக இருக்கமுடியும்? எல்லா இலக்கியங்களையும் படித்துப் புதுமைகள் செய்ய முயல்க என்று சொல்வதுதான் சரியான வழிகாட்டுதலாக இருக்கும்' என்று திருலோகம் வலியுறுத்தினார்.

வ.ரா. அது குறித்து வாதாடவில்லை.

'ஆபீசில் தான் உங்களுக்கு வேலை இல்லையே! என்னோடு வாங்க. சென்னையையும் சென்னை எழுத்தாளர்களையும் பார்த்த மாதிரியும் இருக்கும்' என்று திருலோகம் என்னிடம் சொன்னார். 'நான் இவரை அழைத்துக் கொண்டு போகிறேன். சென்னை மாநகரத்தையும் இவர் பார்க்க வேண்டும் அல்லவா!' என்று ராமநாதனிடமும் கூறினார். அவர் மறுப்பு எதுவும் சொல்லவில்லை.

ஆகவே, தினம்தோறும் டிராம் வண்டியிலும் பஸ்ஸிலும் நடந்தும் சென்னையின் பல பகுதிகளிலும் சுற்றினோம். நகரத்தையும் நகரில் வசித்த முக்கிய எழுத்தாளர்களையும் அறிந்து கொள்ள உதவிய துணைவராய்-வழிகாட்டியாய் விளங்கினார் நண்பர் திருலோக சீதாராம்.

சௌகார்பேட்டை, லாயர் சின்னத்தம்பி முதலி தெருவில் இருந்த 'பிரசண்ட விகடன்' அலுவலகம் சென்று நாரண துரைக்கண்ணனைச் சந்தித்தோம். அவரே 'ஆனந்த போதினி' மாத இதழின் ஆசிரியராகவும் இருந்தார். அதே அலுவலகத்தில் இருந்து 'சித்திரகுப்த' என்ற தெலுங்குப் பத்திரிகையும் வந்துகொண்டிருந்தது.

இப்பத்திரிகைகளின் வெளியீட்டாளர் நாகவேடு முனிசாமி முதலியார் 'ஆனந்தபோதினி பஞ்சாங்க'மும் வெளியிட்டு வந்தார். ஆண்டுதோறும் பத்திரிகைகள் மூலம் கிடைத்த வருமானத்தை விடப் பஞ்சாங்கம் மூலம்

கிடைத்த லாபமே அதிகம். அதைக் கொண்டு ஒவ்வொரு வருடமும் ஒரு வீடு வாங்கினார். புதிய ஆண்டில் பஞ்சாங்கம் அச்சடிக்கத் தொடங்கியதுமே, அந்த ஆண்டு எந்த வீட்டை விலைக்கு வாங்குவது என்று அவர் முடிவு செய்து விடுவார் என்று அவரைப் பற்றி நாரணதுரைக்கண்ணன் ஒரு சமயம் குறிப்பிட்டார்.

நாரணதுரைக்கண்ணன் முதல் சந்திப்பிலிருந்தே என்னிடம் அன்பும் பிரியமும் காட்டலானார். அவ்வப்போது ஆபீசுக்கு வந்து போய்க் கொண்டிருங்கள் என்றார்.

பிராட்வேயை ஒட்டிய ஒரு தெருவில் இருந்து 'தமிழ் மணி'என்ற வாரப் பத்திரிகை வந்து கொண்டிருந்தது. ஆல்பின் பர்னாண்டோ ஆசிரியர். 'தினமணி' நாளிதழை இரண்டாக மடித்த அளவில் அமைந்திருந்த அந்தப் பத்திரிகையின் பதினாறு பக்கங்களையும் அவரே நிரப்பிவிடுவார். அவர் ஒரு தொடர்கதை எழுதிவந்தார். முடிவற்று வருடக் கணக்கில் வளர்ந்து கொண்டிருந்த மிக நீண்டகதை அது. 'மணிஓசை' என்றொரு பகுதி ஒரு பக்கம் முழுவதும் வரும். பலருக்கும் எழுதப்பட்ட 'பகிரங்கக் கடிதங்கள்' அதில் நிறைந்திருக்கும். ஒவ்வொரு கடிதத்தையும் எழுதியவர் பெயர் 'டிங் டாங்' என்று இருக்கும் விறுவிறுப்பான அரசியல் விஷயங்களைக் கொண்ட இதழ் அது.

அங்குப் பணிபுரிந்த விஸ்வநாதன் என்பவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் திருலோகம். இந்த விஸ்வநாதன் பின்னர் 'கீமர் அன் கோ' என்கிற விளம்பர ஏஜன்சி('அட்வர்டைஸ்மெண்ட் கன்சல்டன்ட்ஸ்') நிறுவனத்தில் இணைந்து கொண்டார்

சென்னையில் இருந்த முக்கியமான விளம்பர ஏஜன்சிகளுக்கும் போய் வந்தோம். அந்நிறுவனங்களில் முக்கியப் பொறுப்பில் இருந்த பிரமுகர்களைப் பின்னர் அவரவர் வீட்டில் போய்க் கண்டு பேசினோம். கிராம ஊழியன் பொங்கல் மலருக்கு விளம்பரங்கள் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகத்தான்.

மலருக்குக் கதை, கட்டுரை கேட்பதற்காகவும் எழுத்தாளர்கள் வீடு தேடிச் சென்றோம்; மாலை வேளை, முன்னிரவு என்று. பகலில் சிலர் எங்காவது அலுவலகம் போயிருக்கக்கூடுமே!

கி.வா. ஜகந்நாதன் வீட்டுக்கு இரவில்தான் போனோம். அவர் அன்பாக உபசரித்தார். இரவு உணவை அவருடன் நாங்களும் சாப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்நாட்களில் நாடோடிப் பாடல்கள் சேகரிப்பது ஒரு புதுப் பழக்கமாகத் தமிழ் நாட்டில் தலைகாட்டியிருந்தது.

வடஇந்தியாவில் இருந்து தேவேந்திரநாத் சத்யார்த்தி என்பவர் காளைமாட்டு வண்டியிலேயே நாடு முழுவதும் சுற்றித் திரிந்தார். பல்வேறு

மொழிகளிலும் மக்கள் கலையான நாடோடிப் பாடல்களைச் சேகரித்து ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிவைத்திருந்தார். அவர் தந்த உந்துதலில் தமிழ்நாட்டிலும் சிலர் நாட்டுப் பாடல்களைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டினார்கள்.

மு. அருணாசலம் அப்படிப் பாடல்கள் சேகரம் செய்தார். அவற்றைத் தொகுத்து, 'காற்றிலே மிதந்த கவிதை' என்று புத்தகமாக வெளியிட்டார். சக்தி காரியாலய வெளியீடு அது.

கி.வா.ஜ.வும் நாட்டுப் பாடல்கள் சேகரித்தார். பத்திரிகைகளில் அவை பற்றி எழுதினார். அவர் சேகரித்த பாட்டுக்களை ஒரு பெரிய 'பவுண்டு நோட்'டில் எழுதி வைத்தார்.

பின்னர் யாரோ அந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அப்படி எடுத்துச் சென்றவர் மனம்வருந்தி திரும்பக் கொண்டுவந்து அதைத் தம்மிடம் சேர்த்துவிடுவார் என்று நம்புவதாக கி.வா.ஜ. குறிப்பிட்டு வந்தார். நம்பிக்கை தெரிவித்துப் பத்திரிகைகளிலும் எழுதினார். ஆசையோடு அந்தப் பெரிய நோட்டை எடுத்துச் சென்றவருக்கு மனசாட்சி உறுத்தியதாகத் தெரியவில்லை!

கா.ஸ்ரீ. ஸ்ரீ. யையும் (ஸ்ரீநிவாச ஆச்சார்யா) அவர் வீட்டிலேயே கண்டு பேசினோம். வி.ஸ. காண்டேகர் நாவல்களை ஒவ்வொன்றாக மொழிபெயர்த்து அவர் கவனிப்புப் பெறத் தொடங்கிய சமயம் அது. காண்டேகர் நாவல்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். 'கருகிய மொட்டு' என்ற நாவலைத் தமிழாக்கியிருப்பதாகவும் அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் சொன்னார்.

அந்த நாவல் பரபரப்பு ஏற்படுத்தத்தான் செய்தது. இல்லற வாழ்வில், ஒத்த உணர்வுகள் கொண்ட ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாகச் சேர்வதில்லை. பொருந்தாத ஜோடிகளே திருமணம் மூலம் இணைகின்றனர். அவர்களுடைய தாம்பத்திய உறவு பரஸ்பரம் திருப்தி அளிப்பதில்லை. அதனால் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சியும் நிம்மதியும் இல்லாமல் போகிறது. இதை, சில ஜோடிகள், கணவன் தனியாகவும் மனைவி தனியாகவும், அவரவர் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் மூடிமறைக்காமல் வெளியிடுவதுபோல் எழுதப்பட்ட நாவல். கதைமாந்தரே தனித் தனியாகப் பேசுவதுபோல் அமைந்திருக்கும். அழகான உவமைகள், கற்பனை நயம், கவிதைத்தன்மை, இனிய நடை, ரசமான கதையமைப்பு எல்லாம் வாசகர்களைப் பெரிதும் ஈர்த்தன. பத்திரிகைகள் விரிவாக விமர்சனம் எழுதின. கு.ப. ராஜகோபாலன் கிராம ஊழியன் இதழில் நீண்ட விமர்சனக் கட்டுரை எழுதினார்.

காண்டேகர் பாணியில் தமிழில் சிலர் நாவல் எழுதமுற்பட்டனர். அவற்றில் தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய 'முதல் இரவு' குறிப்பிடத் தகுந்தது ஆகும்.

மலருக்குக் கதை கேட்பதற்காக நாங்கள் சந்தித்தவர்களுள் கா.சீ. வேங்கடரமணியும் ஒருவர். மயிலாப்பூர் அலர்மேல்மங்காபுரத்தில் அவர் வசித்துவந்தார். 'பாரத மணி' என்ற பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். கிராம முன்னேற்றம், கிராம சமுதாய மறுமலர்ச்சி போன்ற இலட்சிய நோக்கத்துடன் அவர் வெகுகாலமாக எழுதிவந்தார். பத்திரிகை லாபகரமாக நடக்கவில்லை. பரவலாக அது அறியப்பட்டிருக்கவுமில்லை. அவரே மெலிந்து தளர்ந்துதான் காணப்பட்டார்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு நான் பரமக்குடியில் கா.சீ. வேங்கடராமணியின் ஆங்கில நூல்களைப் படித்துச்சுவைத்தது என் நினைவில் எழுந்தது. அத்தகைய சிந்தனை நூல்களை ஆங்கிலத்தில் எழுதி லண்டன் மாநகர வெளியீட்டாளர் மேக்மில்லன் கம்பெனியார் பிரசுரித்த புத்தகங்களின் ஆசிரியர் அவர். 'முருகன் ஓர் உழவன்' என்ற நாவல் மூலம் பிரபலமானவர். அவரை நேரில் பார்க்கக்கூடிய வாய்ப்பு கிட்டியது என் உள்ளத்தில் உவகை மலரச் செய்தது.

பேராசிரியர் கே. சுவாமிநாதனைக் காணச் சென்றோம் ஒரு நாள். அவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது, வையாபுரிப்பிள்ளையும் பெ.நா.அப்புஸ்வாமியும் அங்கு வந்தார்கள். பேராசிரியர் எங்கள் இருவரையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். பி.ஸ்ரீ. ஆச்சார்யாவையும் ஒருநாள் சந்தித்தோம்,

காரைக்குடியில் இருந்து சக்தி காரியாலயம் மீண்டும் சென்னைக்கே வந்திருந்தது. அதன் அலுவலகம் பவளக்காரத்தெருவில் இருந்தது. தி.ஜ.ர.வைக் கண்டு பேச நாங்கள் அங்குப் போனோம். அங்கே மஞ்சேரி எஸ். ஈஸ்வரனும் இருந்தார். அவரிடமும் கதை கேட்டார் திருலோகம். அவரது வீட்டு விலாசத்தைக் கேட்டுக் குறித்துக் கொண்டார்.

அன்று இரவே மஞ்சேரி ஈஸ்வரனைப் பார்க்கப் போவோம் என்று திருலோகம் என்னையும் அழைத்துச் சென்றார். அவர் வீடு எழும்பூரில் பஞ்சவடி என்ற பகுதியில் இருந்தது. இருட்டில் சிரமப்பட்டுத் தெருவைக் கண்டுபிடித்து, ஈஸ்வரன் வீட்டையும் கண்டுகொண்டோம். அவர் வீட்டில் இருந்தார்.

அந்த நேரத்தில் எங்கள் இருவரையும் அவர் எதிர்பார்க்கவில்லை. ஆச்சர்யம் அடைந்தார். ஏது இவ்வளவு தூரம் என்று கேட்டார். கிராம ஊழியன் மலருக்குக் கதை கேட்கலாம் என்றுதான் வந்தோம் என்று திருலோகம் சொன்னார்.

'அது தான் சக்தி காரியாலயத்தில் இருந்த போதே கேட்டீர்களே. நானும் எழுதித் தருவதாகச் சொன்னேனே' என்றார் ஈஸ்வரன்.

'ஏதோ பார்த்த இடத்தில் கேட்டதை மரியாதைக்குறைவாக எண்ணிவிடக் கூடாது. அதற்காகத்தான் வீட்டிற்கே வந்து உங்களிடம் கதை கேட்க வேண்டும் என்று வந்தோம்.'

ஈஸ்வரன் உளநெகிழ்ச்சி அடைந்தார். 'அப்படி எல்லாம் நான் நினைக்க மாட்டேன்' என்றார்.

மஞ்சேரி எஸ். ஈஸ்வரன் பெரிய எழுத்தாளர். ஆங்கிலத்தில் கதைகள் எழுதிப் பெயர் பெற்றிருந்தார். தமிழிலும் அவர் கதைகள் வெளிவந்தன. 'சக்தி'யில் அவருடைய கதைகள் பல வந்திருந்தன. அவற்றை எல்லாம் தி.ஜ.ர. தமிழாக்கியதாக அவரே சொன்னார். ஈஸ்வரன் கதைகள் 1930களில் 'தினமணி' மலர்களிலும் பிரசுரமாகியிருந்தன. மறக்க முடியாத கதைகள் பல.

அவற்றை நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அவர் வியப்பும் மகிழ்ச்சியும் தெரிவித்தார். 'எப்பவோ வந்த கதைகளைப் படித்து, நன்றாக ஞாபகம் வைத்திருந்து சொல்கிறீர்களே. எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது' என்றார்.

நாங்கள் விடைபெற்றுப் புறப்படும் போதும், 'மலருக்கு நீங்கள் அவசியம் கதை எழுதி அனுப்ப வேண்டும். மறந்துவிடக்கூடாது' என்று திருலோகம் நினைவுபடுத்தினார்.

'மறக்கமுடியுமா என்ன! நல்ல இலக்கிய ரசிகர்களான நீங்கள் இரண்டு பேரும். இருட்டில் சிரமப்பட்டு வீடு தேடி என்னைப் பார்ப்பதற்காகவே வந்திருக்கிறீர்கள். கட்டாயம் கதை எழுதி அனுப்புவேன்' என்று ஈஸ்வரன் சொன்னார்.

ஆனாலும் மலருக்கு அவர் கதை எழுதி அனுப்பவில்லை.

தி. நா. சுப்ரமணியத்தை கீமர் அன் கம்பெனியில் போய்ப் பார்த்தோம். அவர் அங்குப் பணிபுரிந்து கொண்டிருந்தார். சரித்திரத்தில் உள்ள சிறுவிஷயங்களை - சின்னத் தகவல் அல்லது குறிப்பை - வைத்துக் கொண்டு ரசமான கதைகள் எழுதி வந்தார் அவர். 'தோட்டியை மணந்த ராஜகுமாரி' என்ற பெயரில் அவருடைய சிறுகதைகள் புத்தகமாக வந்திருந்தன. 'கட்டபொம்மு' வரலாற்றை ஆராய்ந்து ஒரு நூலும் எழுதியிருந்தார்.

சென்னை எழுத்தாளர்கள் பலரையும் திருலோக சீதாராம் உதவியோடு ஒரு தடவை சந்தித்ததுதான். நான் திரும்பவும் அவர்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று விரும்பியதில்லை. ஆனால் புதுமைப்பித்தனை அநேக தடவைகள் அவர் வீட்டுக்குப் போய் பார்க்க நேரிட்டது. அதற்கான காரணமே வேறு.

கிராம ஊழியன் மலருக்குக் கதை கேட்பதற்கு என்று திருலோகமும் நானும் புதுமைப்பித்தனைத் தேடிப்போனோம். ராயப்பேட்டை

நெடுஞ்சாலையில் உள்ள ஒரு வீட்டில் அவர் மனைவியோடு குடியிருந்தார். ரோட்டடி வீடு.

திருலோகம் அவரிடம் என்னைப் பற்றிச் சொன்னார். 'ஓ, நான் இவர் எழுத்துக்களைப் படித்திருக்கிறேன்' என்றார் அவர். மலருக்குக் கதை கேட்டார் 'கதையோ அல்லது வேறு எதுவோ எழுதி அனுப்புகிறேன்' என்று புதுமைப்பித்தன் சொன்னார். பிறகு பேச்சோடு பேச்சாகத் திருலோகம் 'நீங்கள் ஒரு உதவி பண்ணவேண்டும். இவருடைய அண்ணன் சும்மா இருக்கிறார். நன்றாக மொழி பெயர்க்கக்கூடியவர். சொந்தமாகவும் எழுதுவார். நீங்கள் அவருக்குத் தினசரியில் வேலை வாங்கித் தந்தால் உதவியாக இருக்கும்' என்று கோரிக்கை வைத்தார்.

'அதுக்கென்ன! எடிட்டர் கிட்டே சொல்லி, முடிந்ததைச் செய்கிறேன். இன்னும் ஒரு வாரம் கழித்து வந்து பாருங்க' என்று புதுமைப்பித்தன் தெரிவித்தார்.

நாங்கள் விடைபெற்று வந்தோம். ஒரு வாரத்திற்குப் பிறகு நான் மட்டும் புதுமைப்பித்தன் வீட்டுக்குப் போனேன். திருலோகம் துறையூர் போய்விட்டார்.

என்னைக் கண்டதும் புதுமைப்பித்தன் 'நான் மலருக்கு விஷயம் அனுப்பிவிட்டேனே' என்றார். 'அதற்காக நான் வரவில்லை. என் அண்ணனுக்குத் தினசரியில் வேலை விஷயமாக...'

'ஓ அதுவா? நான் இன்னும் எடிட்டரிடம் பேசவில்லை. பார்த்துச் சொல்கிறேன். இன்னொரு நாள் வாங்க' என்று கூறி என்னை அனுப்பி வைத்தார்.

நானும் நாலைந்து தடவை போனேன். ஒவ்வொரு முறையும் 'எடிட்டர் ஊரில் இல்லை' 'நான் இன்னும் அதுபற்றி எடிட்டரிடம் சொல்லவில்லை' என்று ஏதாவது சொல்லி மற்றுமொரு நாள் வரும்படி சொல்வார். எங்கள் சந்திப்பு இந்த ரீதியில் அமைந்திருந்ததே தவிர, பத்திரிகைகள்-எழுத்து - இலக்கியம் சம்பந்தப்பட்டதாக இருந்ததில்லை. அதன் பிறகு நான் அவரைப் பார்க்கப் போகவுமில்லை.

பொதுவாக, எந்த எழுத்தாளரையும் அல்லது பத்திரிகை ஆசிரியரையும் போய்ப் பார்க்க வேண்டும், கண்டு பேச வேண்டும் என்ற அவா எனக்கு என்றும் இருந்ததே இல்லை. அவர்களுடைய எழுத்துக்களை, பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் படிப்பதில்தான் எனக்கு நாட்டம் அதிகமிருந்தது.

கிராம ஊழியன் பொங்கல் மலருக்குப் புதுமைப்பித்தன் ஒரு கவிதை அனுப்பியிருந்தார். வேளூர் வெ. கந்தசாமிக் கவிராயர் என்ற பெயரில் அவர் அதை எழுதியிருந்தார். 'உண்டுண்டு கடவுளுக்குக் கண்உண்டு; கண்ணோ

நெருப்பு வைக்க' என்று தொடங்கி, எட்டு வரிகளில் முடிந்த கவிதை, அதுதான் அவருடைய முதல் கவிதை.

15

சில நாட்களில் திருலோக சீதாராம் துறையூருக்குப் போய்விட்டார். அவர் சென்னையில் இருந்த நாட்களில், தினமும் என்னிடம் நீங்கள் கிராம ஊழியனுக்கு வந்துவிடுவதே நல்லது என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

'என்னோடேயே புறப்பட்டு வந்து விடுங்கள். நவசக்தி சரிவர நடக்காது' என்று அவர் கடைசி நாளிலும் சொன்னார்.

'நண்பர் சக்திதாசன் என்னைச் சென்னைக்கு வரும்படி அழைத்தார். நான் வந்துள்ள போது அவர் இல்லை. அவரைப் பார்க்காது, அவரிடம் கலந்து ஆலோசிக்காது, நான் வருவதற்கில்லை. அப்படி வருவது முறையல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது' என்றேன்.

'உங்கள் இஷ்டம். நன்றாக யோசித்து முடிவு செய்யுங்கள்' என்று கூறிப் பிரிந்தார் திருலோகம்.

நான் தனியாகச் சென்னை நகரைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டேன். பல இடங்களுக்கும் போனேன். இன்றைய ஜனப் பெருக்கமும் பேக்குவரத்து நெரிசலும் இல்லாதிருந்த நகரம் அது. மவுண்ட்ரோடில்கூட அங்கங்கே ஓங்கி வளர்ந்த மரங்கள் நின்ற காலம். திருவல்லிக்கேணியில் தென்னந்தோப்புகளும், கள்ளுக்கடைகளும் அதிகம் தென்பட்ட காலமும்கூட.

திருவல்லிக்கேணி பெல்ஸ்ரோடில் 'ஜோதி நிலையம்' இருந்தது. அ.கி. ஜயராமன் நடத்திய புத்தகப் பிரசுரநிறுவனம். அவர் இந்தியிலிருந்து மொழிபெயர்த்த நாவல்கள், நாடகங்களையும் க.நா. சுப்ரமண்யம், புதுமைப்பித்தன் முதலியவர்களது படைப்புகளையும் புத்தகங்களாக்கி வெளியிட்டது 'ஜோதி நிலையம்'. 'சர்வதேசக் கதைமலர்கள்' என்று பல நாடுகளின் கதைகளையும் தமிழாக்கி, எட்டணா விலையில் பிரசுரித்தது. தரமான இலக்கிய வெளியீடுகள் அவை.

நான் அ.கி. ஜயராமனைச் சந்தித்தேன். சினிமா உலகம் பி.எஸ்., செட்டியார் மூலம் அவர் என்னைப் பற்றி அறிந்திருந்தார். கலைமகளில் வந்த கதைகளையும் படித்திருந்தார். அவர் என்னை அன்புடன் வரவேற்று உரையாடினார். புத்தகங்கள் தந்தார்.

ஜோதி நிலைய வெளியீடுகள் எனக்குத் தொடர்ந்து கிடைத்தன. அ.கி.ஜ.வின் அன்பளிப்பு வெகுகாலம் வரை வந்து எனது நூல்நிலையத்தை வளம் செய்தது.

ஆங்கிலப் புத்தகங்கள் படிப்பதற்கு கே.ராமநாதன் உதவினார். 'யுனிவர்சிட்டி லைபிரரியில் புத்தகங்கள் எடுத்துப் படிக்கலாம். ஒரு நண்பர் கார்டு வைத்திருக்கிறார். அவர் அதை உபயோகிப்பதில்லை. நான் அந்தக் கார்டை வாங்கித் தருகிறேன். நீங்கள் ரஷ்ய இலக்கியங்களை எடுத்துவந்து படிக்கலாம்' என்றார்.

அதன்படியே டி செஞ்சையா என்பவரின் லைபிரரி கார்டை வாங்கி வந்து தந்தார்.

நான் யூனிவர்சிட்டி லைபிரரிக்குப் போய், டாஸ்டாவ்ஸ்கியின் 'க்ரைம் அன்ட் பனிஷ்மென்ட்' நாவலை எடுத்துவந்து வடித்தேன். அடுத்து, இவான் துர்கனேவ் நாவல்களைத் தேடி எடுத்தேன். நான்காவதாக, புஷ்கின் படைப்பு ஒன்றை எடுத்து வந்தேன்.

'நீங்கள் தான் டி. செஞ்சையாவா? 'என்று நூலகர் கேட்டார். இல்லை, அவருக்காக நான் புத்தகம் எடுத்துப் போகிறேன்' என்றேன்.

'அப்படியானால் அடுத்தமுறை செஞ்சையாவிடமிருந்து கடிதம் வாங்கி வரவேண்டும்' என்று நூலகர் தெரிவித்தார்.

நான் இவ்விவரத்தை ராமநாதனிடம் கூறினேன்.

'சிரமம் எதுவுமில்லை. செஞ்வையாவிடமிருந்து நான் கடிதம் வாங்கித் தருகிறேன்' என்றார் நண்பர்.

வாங்கித் தந்தார். இந்தக் கடிதம் கொண்டு வருபவரிடம் எனது கார்டுக்கு லைபிரரி புத்தகங்கள் கொடுத்து உதவும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று பொதுப்படையாக அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த நூலகர் இரண்டு முறை எதுவும் சொல்லவில்லை. நான் போலண்ட் சிறுகதைகள், ரஷ்யச் சிறுகதைகள் புத்தகங்களை எடுத்தேன்.

அம்முறை நூலகர் குறுக்கிட்டார். 'டி. செஞ்சையாதான் இந்தப் புத்தகங்களை எடுத்துவரச் சொன்னாரா?' என்று கேட்டார். 'இல்லை' என்றேன்.

'இனிமேல் ஒவ்வொரு முறையும், குறிப்பிட்ட இன்ன புத்தகம் வேண்டும் என்று செஞ்சையாவிடமிருந்து கடிதம் வாங்கி வரவேண்டும். அப்பதான் புத்தகம் தரமுடியும்' என்று அவர் உறுதியாகச் சொன்னார்.

இதையும் நான் ராமநாதனிடம் கூறினேன்.

'கொடுக்காவிட்டால் போகட்டும்! தொடர்ந்து ரஷ்ய ஆசிரியர்களின் புத்தகங்களையே எடுப்பதால், நாம ஏதோ புரட்சிக்கு ஆயத்தம் செய்கிறோம் என்று அந்த ஆள் எண்ணிவிட்டார் போலிருக்கு!' என்று சொல்லிச் சிரித்தார் நண்பர்.

எடுத்து வந்த புத்தகத்தைப் படித்து விட்டுத் திருப்பிக் கொடுத்ததோடு லைபிரரித் தொடர்பு முற்றுப் பெற்றது.

விதிகள், கட்டுப்பாடுகள் என்றெல்லாம் வைத்துக் கொண்டு, படிக்க விரும்புகிறவனின் ஆசைக்குத் தடைபோடுகிற லைபிரரிகளின் உதவியை இனி நாடப் போவதில்லை. நான் படிக்க ஆசைப்படுகிற புத்தகங்களைப் புதுசுபுதுசாக நானே விலைக்கு வாங்கிப் படித்துக் கொள்வேன்.

இப்படி என் மனம் உறுதிபூண்டது.

யுனிவர்சிட்டி லைபிரரிக்குப் போய்ப்புத்தகம் எடுத்துக்கொண்டு திரும்புகிற ஒவ்வொரு தடவையும் நான் திருவல்லிக்கேணி பெல்ஸ் ரோடு சென்று ஜோதி நிலையத்தில் அ.கி. ஜயராமனுடன் பேசிக்கொண்டிருப்பதை வழக்கமாக்கினேன்.

அவ்வேளைகளில் அங்கு வரக்கூடிய எழுத்தாளர்கள் சிலரின் அறிமுகம் கிட்டியது. ந. சிதம்பரசுப்ரமணியம் அப்படித்தான் அறிமுகமானார். சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு அழகான சிறுகதைகள் பலவற்றை எழுதியிருந்தார் அவர். பிற்காலத்தில் 'இதயநாதம்' என்கிற நல்ல நாவலை எழுதியவர். மணிக்கொடி பத்திரிகை நடந்த காலத்தில் மணிக்கொடிக்கு அவ்வப்போது பணஉதவி செய்தவர்அவர் என்று மணிக்கொடி வரலாறு குறிப்பிட்டுள்ளது.

ஒரு தடவை ப. ராமஸ்வாமியைச் சந்திக்க நேர்ந்தது. பி.எஸ். ராமையா கால மணிக்கொடிக்குப் பிறகு, மணிக்கொடி ஆசிரியப் பொறுப்பை ஏற்று பத்திரிகையைத் தொடர்ந்து சிறிது காலம் நடத்தியவர் அவர். ப.ரா. என்று அறியப்பட்ட அவர் திருநெல்வேலிக்காரர். மைக்கேல் காலின்ஸ், சீனா முதலிய புத்தகங்களை எழுதி, அவற்றை 'நவயுகப்பிரசுராலய' வெளியீடுகளாக அவர் கொண்டு வந்திருந்தார். அந்த லிமிட்டெட் நிறுவனத்தைப் பொறுப்பாகக் கவனித்து வந்தவரும் அவரே.

சினிமா உலகம் பொங்கல் மலருக்கு விளம்பரங்கள் சேகரிக்க, சென்னை வந்த பி.எஸ். செட்டியார் ஒருநாள் நவசக்தி அலுவலகத்துக்கு என்னைத் தேடிவந்தார். அங்கிருந்தவர்களிடம் சொல்லிவிட்டு என்னை அழைத்துக்கொண்டு கிளம்பினார்.

காலை நேரம். ஓர் ஓட்டலில் பூரி கிழங்கு காபி சாப்பிட்டோம். 'நீங்கள் ஊருக்குப் போறதா சொல்லிவிட்டு, சென்னைக்கு வந்துவிட்டது எங்களுக்கெல்லாம் வருத்தம் தந்தது. அப்படி புறப்படுகிற அன்று கூட, ராத்திரி 10 மணி வரை விழித்திருந்து கடிதங்கள் எழுதி டைப் பண்ணி, எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டு வந்ததைப் பற்றி வீட்டிலே அடிக்கடி சொல்லுவாங்க. நீங்கள் நான் சென்னைக்குப் போக வேண்டும் என்று என்னிடம் நேரடியாகவே சொல்லியிருக்கலாம். அப்படிச் சொன்னால் நான்

அதை அனுமதிக்க மாட்டேன் என்கிற நினைப்பிலே நீங்க இது மாதிரி செய்திருக்கீங்க. அதுவும் சரிதான். சினிமா உலகத்தை இன்னும் நல்லபடியா நடத்தணும், இலக்கியப் பத்திரிகை நடத்தணும், புத்தகங்கள் பப்ளிஷ் பண்ணணும்னு எனக்கும் ஆசையாகத் தான் இருக்கு. ஆனால் பொருளாதாரம் இடம் கொடுக்கலே...'

இந்த ரீதியில் பேசினார். 'நீங்க நல்லா வளர்ந்து முன்னுக்கு வரணும்கிறதுதான் என் விருப்பம்... உங்களை மாதிரி திறமையுள்ள நல்ல அசிஸ்டன்ட் எனக்குக் கிடைக்கமாட்டாங்க. இருந்தாலும், உங்களுக்குத் தெரிந்த, தகுதியான ஒருவரைச் சொல்லுங்க. சினிமா உலகத்துக்கு உதவி ஆள் வேண்டும்' என்று செட்டியார் கேட்டுக் கொண்டார்.

நான் என் அண்ணா கோமதிநாயகத்தைப் பரிந்துரைத்தேன். அவர் உடனடியாக ஏற்றுக்கொண்டார்.

'ஓ, உங்க அண்ணனை எனக்குத் தெரியும். உடனேயே அவருக்குக் கடிதம் எழுதி அவரை வரவழைத்துக் கொள்கிறேன்' என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

அண்ணா கோமதி நாயகம், நான் சினிமா உலகம் அலுவலகத்தில் பணிபுரிந்த நாட்களில் ஒருசமயம் கோயம்புத்தூர் வந்திருந்தார். திருநெல்வேலியில் அவர் வேலைபார்த்த மெடிக்கல் ஸ்டோர்ஸ் முதலாளியின் அதிகாரப் போக்கு பிடிக்காததால், அவரும் மற்றும் சிலரும் அந்த நிறுவனத்தை விட்டு விலகியிருந்தார்கள். கோவைக்கு வந்தால் ஏதாவது வேலை கிடைக்கும் என்று எனக்குத் தெரிந்தவர் ஒருவர் கூறியதால், நான் அண்ணாவுக்கு எழுத, அவர் அங்கு வந்தார். வடநாட்டு முதலாளி ஒருவரின் ஆயத்த உடைகள் விற்பனைக் கடை ஒன்றில் அண்ணாவுக்கு வேலை கிடைத்தது. பதினைந்து-இருபது நாட்கள் அவர் வேலை பார்த்தார். அந்த முதலாளியின் லாபநோக்கு நடவடிக்கைகளும், இரட்டைக்கணக்கு எழுதுகிற போக்கும், பொய்ம்மையும் அண்ணாவுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அந்த வேலையை விட்டுவிட்டு அவர் திருநெல்வேலிக்கே போய்விட்டார். கோவையில் தங்கியிருந்த நாட்களில் செட்டியார் அண்ணாவுடன் பேசிப் பழகியிருந்தார். விரைவிலேயே செட்டியார் அண்ணாவைச் சினிமா உலகம் பத்திரிகைக்கு உதவி ஆசிரியராக அழைத்துக் கொண்டார்.

உரியகாலத்தில் சக்திதாசன் சுப்பிரமணியம் இலங்கையிலிருந்து திரும்பினார். மகிழ்ச்சியோடு காணப்பட்டார். இதழ் வேலைகள் உற்சாகமாக நடைபெற்றன. ராதாமணி அம்மையார் கூடப் பத்திரிகை வளர்ச்சி குறித்துப் பெரும்கனவுகளுடன் திட்டமிடுவார்.

ஜனவரி இதழ் வந்தது. பிப்ரவரி இதழுக்கான வேலைகள் தொடர்ந்தன. நான் தயங்காது, காலம் கடத்தாது, துறையூருக்கு வந்துவிடவேண்டும் என்று திருலோகம் கடிதங்கள் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் நாடக நடிகர் டி.கே. சண்முகத்திடமிருந்து ஒரு கடிதமும் ஓர் அழைப்பும் வந்தன. முதலாவது நாடகக்கலை மாநாடு ஈரோட்டில் நிகழ இருக்கிறது; அதற்கான அழைப்பு தான் அது. அப்போது முக்கியமான ஒரு விஷயம் பற்றிப் பேசிமுடிவு எடுக்க வேண்டும். ஆகவே நான் கட்டாயம் ஈரோடு வரவேண்டும் என்று சண்முகம் எழுதியிருந்தார். சக்திதாசனிடம் சொல்லிவிட்டு நான் ஈரோடு போனேன்.

நாடகக்கலை மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. பொருளாதார அறிஞர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தலைமை வகித்தார். சி.என். அண்ணாதுரை சிறப்புரை ஆற்றினார். என்.எஸ். கிருஷ்ணன், நாடகங்கள் எழுதிப் பெயர்பெற்றிருந்த பேராசிரியர் சி.ஆர். மயிலேறு முதலியவர்கள் பேசினார்கள். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நாடகக் கலை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, 'நாடகம்' என்றொரு மாத இதழ் வெளியிட வேண்டும் என்பதும் ஒரு தீர்மானம்.

அது விஷயமாகப் பேசத்தான் டி.கே. சண்முகம் என்னை அழைத்திருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் முறையான பத்திரிகை தொடங்கி நடத்த அரசு அனுமதி அளிக்காது. அதனால் 'குமரி மலர்' மாதிரி 'மாதம் ஒரு புத்தகம்' ஆகக் கொண்டு வரலாம். நிலைமை சீர்பட்டதும் அதையே பத்திரிகையாக மாற்றிக்கொள்ளலாம். டி.கே.எஸ். நாடக சபை தான் அந்த இதழைப் பொறுப்பேற்று நடத்தும். அதன் ஆசிரியப் பொறுப்பை நான் ஏற்றுச் செயல்புரிய வேண்டும் என்று சண்முகம் கேட்டுக் கொண்டார்

நான் தயங்கினேன். நண்பர் சண்முகம் உற்சாகமூட்டினார். 'நாடகம்' இதழுக்கு வளமான எதிர்காலம் இருக்கும் என்று நம்பிக்கை அளித்தார். சரி, வருகிறேன் என்று சொல்லி வைத்தேன். ஆரம்ப ஏற்பாடுகளை எல்லாம் செய்துவிட்டு எனக்குக் கடிதம் எழுதுவதாக அவர் உறுதி கூறினார்.

நாடகக்கலை மாநாட்டிற்குத் திருச்சியிலிருந்து கலாமோகினி வி.ரா.ராஜகோபாலனும் வந்திருந்தார். மகிழ்ச்சியோடு பேசிப் பழகினார். போகிறபோது, திருச்சி வந்துவிட்டு நீங்கள் சென்னை போகலாம் என்றார். நான் அவரோடு திருச்சி சென்றேன்.

பத்திரிகைகளில் கதை கவிதை எழுதுகிறவர்களில் சிலர் சுலபமாகப் பிரசுர வாய்ப்பும் பெயரும் பெறுவதற்காக, ஏற்கெனவே வேறு யாராவது எழுதிய விஷயங்களைத் திருடித் தங்கள் சொந்தச் சரக்கு போல் பேர்பண்ணுவது அதிகரித்து வந்தது. நான் எழுதிய சில உருவகக் கதைகளைக் கவிதையாக மாற்றிய முயற்சிகள் பத்திரிகைகளில் வந்திருந்தன. இவை பற்றி எல்லாம் பேசியவாறு பயணம் செய்தோம்.

'இதை எல்லாம் நீங்கள் கட்டுரையாக எழுதவேண்டும். சூடாக எழுதிக்கொடுங்கள். கலாமோகினியில் 'அம்பலம்' என்ற தலைப்பில் அதை

வெளியிடலாம்' என்று வி.ரா.ரா. சொன்னார். திருச்சியிலிருந்து திருநெல்வேலி போக எண்ணம் கொண்டிருந்தேன். ராஜவல்லிபுரத்தில் ஒரு நாள் தங்கிக் கட்டுரையை எழுதிவிடலாம் என்று தீர்மானித்தேன்.

அதன்படி ராஜவல்லிபுரம் சேர்ந்தேன். என் அண்ணா திருநெல்வேலி மெடிக்கல் ஸ்டோர் வேலையை விட்டு சிலநாட்களிலேயே அம்மாவும் சகோதரர்களும் ராஜவல்லிபுரத்தில் வசிக்கச் சென்று விட்டார்கள். அங்கிருந்த பத்திரிகைகள் பலவற்றைப் பயன்படுத்தி, கதைகளைத் திருடி எழுதிய எழுத்தாளர்கள் பற்றி விரிவாகச் சான்றுகளுடன், ஒரு கட்டுரை எழுதினேன்.

திருச்சிக்கு வந்து, வி.ரா.ரா.வைச் சந்தித்துக் கட்டுரையைக் கொடுத்தேன். அவர் படித்துப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். வருகிற இதழிலேயே அதை வெளியிடத் தீர்மானித்தார். அட்டையில் எனது படத்தை வெளியிட விரும்பி, அங்கு வந்திருந்த தஞ்சாவூர் மாருதி என்ற நண்பரைச் சித்திரம் வரையச் செய்தார்.

நான் மீண்டும் நவசக்தி அலுவலகம் சேர்ந்தேன்.

விரைவிலேயே கலாமோகினி இதழ் வந்தது. அம்பலம் பகுதியில் 'மாரீச இலக்கியம்' என்கிற எனது கட்டுரை பிரசுரம் ஆகியிருந்தது. அட்டையில் எனது படமும், உள்ளே 'இந்த மாத அதிதி' என்று என்னைப் பற்றிய கட்டுரையும் வந்திருந்தன.

அந்தக் கட்டுரை பரபரப்பு ஏற்படுத்தியது. பத்திரிகை ஆசிரியர்கள் சிலரது மனக்கசப்பையும் பெற்றுத் தந்தது.

துறையூரில் இருந்து திருலோகம் எழுதியிருந்தார். நீங்கள் கட்டாயம் துறையூர் வரத்தான் வேண்டும்; அ.வெ.ர.கி. ரெட்டியார் சென்னை வருகிறார். அவர் திரும்புகிற போது அவருடன் நீங்களும் வந்துவிடுங்கள் என்று எழுதியிருந்தார்.

அன்றே டி.கே. சண்முகம் கடிதமும் வந்தது. 'நாடகம்' இதழுக்கான வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன. நாடகங்களுக்குச் 'சீன்கள்' வரைகிற ஓவியர் மாதவனிடம் அட்டைச் சித்திரம் வரையும்படி சொல்லியிருக்கிறோம். நீங்கள் எப்போது ஈரோடு வருகிறீர்கள் என்று அவர் கேட்டிருந்தார்.

நான் யோசித்தேன். 'நாடகம்' புதிதாக ஆரம்பித்து வளர்க்க வேண்டிய இதழ். அதில் நாடகம் மற்றும் கலைகள் பற்றிய விஷயங்களுக்கே முக்கியத்துவம் இருக்கும். டி.கே. சண்முகம் விருப்பம்போல்தான் பத்திரிகை தயாரிக்க வேண்டியிருக்கும். என் இஷ்டப்படி கதைகள் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கப் போதுமான வசதியும் வாய்ப்பும் இராது. கிராம ஊழியன் ஏற்கெனவே வந்துகொண்டிருக்கும் இலக்கியப் பத்திரிகை. மாதம் இருமுறை

வருவது. நல்ல கவனிப்பும் பெற்றுவருகிறது. நான் கிராமஊழியனுக்குப் போவதே நல்லது என்று முடிவு செய்தேன்.

என் எண்ணத்தை டி.கே. சண்முகத்துக்கு எழுதித்தெரிவித்தேன். மறுவாரம் சென்னைக்கு வந்த சண்முகமும் டி.கே. பகவதியும் நவசக்தி அலுவலகம் வந்து என்னைச் சந்தித்தார்கள். 'நீங்கள் நாடகத்தைச் சாகடித்துவிட்டீர்கள். நாடகம் இதழைக் கருவிலேயே சிதைத்து விட்ட பாபம் உங்களையே சேரும்' என்று சண்முகம் சிரித்துக்கொண்டே சொன்னார்.

'உங்கள் துணையோடு நாடகம் இதழைச் சிறப்பாகக் கொண்டு வரமுடியும் என்று எண்ணினோம். நீங்கள் வரவில்லை என்றதுமே எங்கள் நம்பிக்கை தளர்ந்துவிட்டது. அதனாலே இப்போதைக்குப் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டோம்' என்றும் அவர் விவரித்தார்.

'உங்கள் எழுத்தார்வத்துக்கும் திறமைக்கும் இலக்கியப் பத்திரிகையில் சேர்ந்து உழைப்பதுதான் நல்லது. கிராம ஊழியன் உங்களுக்கு ஏற்ற இடம் தான்' என்று கூறி வாழ்த்தி விட்டுச் சென்றார் சண்முகம்.

பிப்ரவரி கடைசி வாரத்தில் அ.வெ.ர.கி. ரெட்டியார் சென்னைக்கு வந்தார். 'டவுணுக்குப் போய் அச்சு எழுத்துகளுக்கு ஆர்டர் கொடுக்க வேண்டும். பிளாக் செய்யும் கம்பெனிக்கும் போக வேண்டும். சாயங்காலம் ரயிலுக்குப் போகத் தயாராக இருங்கள்' என்று என்னிடம் தெரிவித்தார்.

சக்திதாசன், ராமநாதன் இருவரிடமும், கிராம ஊழியனுக்குச் சரியான உதவி ஆசிரியர் இல்லை. வல்லிக்கண்ணனை அழைத்துப் போகலாம் என்று எண்ணம். இங்கு தான் அவருக்கு வேலை இல்லையே! இன்று சாயங்காலம் அவர் என்னோடு வரட்டும்' என்று கூறினார். அலுவல்களைக் கவனிக்கக் கிளம்பினார்.

சக்திதாசன் மறுக்கவில்லை. அப்படியே செய்யுங்க என்று இசைவு தெரிவித்தார்.

ரெட்டியார் போனதும், 'நீங்க துறையூர் போகிறீர்களா?' என்று என்னைக் கேட்டார், சக்திதாசன்.

நான் என் நிலையைச் சொன்னேன்.

'கிராம ஊழியன் உங்களுக்கு ஏற்ற இடம் தான். இருந்தாலும் நீங்கள் இவ்வளவு விரைவில் பிரிந்து போவீர்கள் என்று நான் நினைக்கவில்லை. நவசக்தியை இன்னும் சிறப்பாகக் கொண்டு வர வேண்டும் என்கிற ஆசை எனக்கு. ராமநாதன் இப்போதைக்கு இங்கே இருக்கிறார். சீக்கிரமே அவர் வேறிடம் போய் விடுவார். உங்கள் துணையோடு இதழை மேம்படுத்தலாம்

என்று எண்ணியிருந்தேன். நீங்கள் இப்பவே போகிறேன் என்கிறீர்கள். சரி, போய்வாங்க. உங்கள் எதிர்காலம் வெற்றிகரமானதாக விளங்கட்டும்' என்று சோகத்தோடு சொன்னார் நண்பர்.

மாலையில் ரெட்டியார் வந்து என்னை அழைத்துக் கொண்டு சென்றார்.

16

நான் சென்னையில் முழுமையாக மூன்று மாதங்கள் தங்கியிருக்கவில்லை. அதற்குள் நவசக்தியைப் பிரிந்து செல்ல வேண்டிய ஒரு அவசியத்தைக் காலம் ஏற்படுத்திவிட்டது.

எனது வளர்ச்சிப் பாதையில் என் முன்னேற்றத்துக்குக் காலம் நன்கு உதவி வந்துள்ளது என்றே சொல்லவேண்டும்.

1944 பிப்ரவரி இறுதியில் அ.வெ.ர.கி. ரெட்டியார் என்னைத் துறையூரில் கொண்டு சேர்த்தார்.

துறையூர், திருச்சிராப்பள்ளியில் இருந்து 28 மைல்கள் தள்ளி அமைந்துள்ள ஒரு சிற்றூர். இப்போது, எல்லா இடங்களையும் போல, அந்த ஊரும் வேகமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆனால் அந்தக் காலத்தில் அது சாதாரணமாகவே தோற்றம் கொண்டிருந்தது. துறையூரில் இருந்து 'கிராம ஊழியன்' என்கிற மறுமலர்ச்சி இலக்கிய மாதம் இருமுறைப் பத்திரிகை வெளியிடப் போகிறோம்; அதற்கு உங்கள் வாழ்த்து வேண்டும் என்று கு.ப. ராஜகோபாலனும், திருலோக சீதாராமனும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரை அணுகிய போது 'துறையூரிலிருந்தா? அந்த ஊரில் தபாலாபீஸ் இருக்கிறதா என்ன?' என்று அவர் கேட்டாராம். அவ்வளவுக்குச் சாதாரண ஊராக இருந்தது அது.

கிராம ஊழியன் அச்சகம், பெரிய கொட்டகை போன்ற நீளமான ஓட்டுக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. அதன் ஓர் ஓரத்தில் ஒரு சிறு அறை உண்டு. நீண்ட கொட்டகையில்தான் ட்ரெடில் மிஷின், சிலிண்டர், அச்சு எழுத்துக்கள் கொண்ட ஸ்டாண்டுகள், மற்றும் அச்சாபீசுக்கு உரிய சகல சாமான்களும் இருந்தன. பத்திரிகை அச்சிடுவதுடன் வேறு பல வெளிவேலைகளையும் ஏற்று,ச் செய்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அச்சுக் கோப்பவர்கள் (கம்பாசிட்டர்ஸ்) டிரெடில் மேன், சிலிண்டர் ஓட்டுகிறவர்கள், எடுபிடிப் பையன்கள் என்று ஆட்கள் பலர் வேலையில் இருந்தார்கள்.

ரெட்டியாரும் திருலோகமும் நிர்வாக வேலைகளைக் கவனித்தார்கள். பத்திரிகைக்கு உதவிஆசிரியராக நான் அமர்த்தப்பட்டேன். இதுவரை நான் பணிபுரிந்த பத்திரிகைகளில் எனக்கு மாதச் சம்பளம் இவ்வளவு என்று பேசப்பட்டதுமில்லை; நியமன உத்திரவு என்று எதுவும் தரப்பட்டதுமில்லை. இங்கே இவை கிட்டின.

உதவி ஆசிரியராக இன்ன தேதியிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கிறார் என்ற அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் என்னிடம் தரப்பட்டது. சம்பளம் மாதம் 25 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்திலேயே நான் தங்கிக்கொண்டேன்.

கிராம ஊழியன் ஒரு வருட காலம் சிறுஅளவு (கிரவுன் சைஸ்) பத்திரிகையாக வெளிவந்தது. 1944 ஏப்ரல் முதல் அதைப் பெரிய அளவில் (டெமி சைஸ் -ஆனந்த விகடன் மாதிரி) கொண்டு வருவது என்று திட்டமிடப்பட்டிருந்தது.

கு.பா.ரா. கும்பகோணத்திலிருந்து நிறையவே விஷயங்கள் அனுப்பிக் கொண்டிருந்தார். கதை, கட்டுரை, நாடகம், மகாராஷ்டிர வீரன் சிவாஜியின் வரலாறு என்று பலவகைப்பட்டவை. மற்றும் தி.ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு நாராயணசாமி, கி.ரா. கோபாலன், எம்.வி. வெங்கட்ராம் என்று பலபேர்களிடமிருந்தும் விஷயங்கள் வாங்கிஉதவினார். கும்பகோணம் ஓவியக் கலைக்கல்லூரியில் பயின்றுவந்த கோபுலு, ஸாரதி போன்றவர்களிடம் சித்திரங்கள் தீட்டச் சொல்லி அவற்றையும் அனுப்பிக் கொண்டிருந்தார்.

மார்ச் மாதம் கு.ப.ரா. துறையூர் வந்தார். பணஉதவி பெற்றுப் போகலாம் என்று. ஆனால் அவர் எணணம் ஈடேறவில்லை. ஏமாற்றத்துடன் ஊர் திரும்ப நேர்ந்தது. அதற்குப் பிறகு அவர் வரவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் நான் கு.ப.ரா.வைப் பார்த்ததுதான். அதுவே முதலும் கடைசியுமான சந்திப்பாக அமைந்துவிட்டது. ஏப்ரல் மாதம் அவர் இறந்துவிட்டார் என்ற தகவல் வந்தது.

கு.ப.ரா.வைப் பார்ப்பதற்கு முன்னதாக, ந. பிச்சமூர்த்தியைச் சந்திக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அந்நாட்களில் ந. பிச்சமூர்த்தியும் கு.ப.ராஜகோபாலனும் 'மறுமலர்ச்சி இலக்கிய இரட்டையர்' என மதிக்கப்பட்டுவந்தார்கள். இருவரும் ஒன்றாகக் கும்பகோணத்தில் வசித்ததும் ஒரு காரணம் ஆகும். இருவரும் மணிக்கொடி எழுத்தாளர்கள். இருவரும் தமிழில் புதுமுயற்சியான 'வசன கவிதை'யில் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். கால ஓட்டத்தில், ந. பிச்சமூர்த்தி, வாழ்க்கை நிர்ப்பந்தம் காரணமாக, வேலை பார்ப்பதற்கென்று வெளியூர் சென்று வெவ்வேறு ஊர்களில் வசிக்க நேரிட்டது.

கிராம ஊழியன் காலத்தில் ந. பிச்சமூர்த்தி, துறையூருக்கு அருகில் உள்ள செட்டிகுளம் என்ற ஊரில் கோயில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். கோயில் சம்பந்தமான வழக்குகள் துறையூர் முனிசீப் கோர்ட்டுக்கு விசாரணைக்கு வரும். அதற்காக அவர் அடிக்கடி துறையூருக்கு வந்துபோக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதெல்லாம் அவர் ரெட்டியார் வீட்டில் தங்கினார்; கிராம ஊழியன் அலுவலகம் வந்து வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

1936 முதலே நான் பிச்சமூர்த்தியின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டிருந்தேன். மணிக்கொடி பத்திரிகையில் வெளிவந்திருந்த அவருடைய சிறுகதைகளும் வசனகவிதைகளும் என்னை வசீகரித்திருந்தன. 1937இல் 'தினமணி' ஆண்டு மலரில் வெளிவந்த 'பிக்ஷு'வின் 'கிளிக்கூண்டு' என்ற வசனகவிதை என்னில் தாக்கம் ஏற்படுத்தியது. நானும் கவிதை எழுதவேண்டும் என்ற உந்துதலை அது என்னுள் தந்தது.

ஆகவே பிச்சமூர்த்தியின் அறிமுகமும் அவருடன் பேசிப்பழகும் வாய்ப்பும் கிட்டியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. நீண்ட முடியும் தாடியுமாக அவர் ஒரு ரிஷி போல் காட்சியளித்தார். அவருடைய முகத்தோற்றம் கவி தாகூரின் சாயலைக் கொண்டிருந்தது. அவர் என்னிடம் சகஜமாகப் பழகினார். வயது வித்தியாசத்தைக் கருதாது அவர் ஒரு நண்பனாகவே நடந்து கொண்டார்.

ந. பிச்சமூர்த்தி கிராம ஊழியன் இதழுக்குத் தொடர்ந்து கவிதைகள், கட்டுரைகள் எழுதி உதவினார். 'மனநிழல்' என்கிற புதுரகமான- கதையும் அல்லாத கட்டுரையுமில்லாத, ஆயினும் இரண்டின் தன்மைகளையும் கொண்டிருந்த- வாழ்க்கைச் சித்திரங்களை எழுதி வந்தார்.

பொங்கல் மலர் மூலம் விளம்பர வருமானம் கிடைத்திருந்தது. அதனால் ஆண்டு மலர் என்று ஒன்று தயாரித்து விளம்பரங்கள் சேகரித்துப், பத்திரிகையின் வருமானத்தை அதிகப்படுத்தலாம் என்று திருலோகம் திட்டமிட்டார். ரெட்டியார் அதை ஏற்றுக் கொண்டார்.

இலக்கிய மலருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, தினமணி ஆண்டு மலர்கள் விளங்கின. அம்மலர்களைப் போன்ற சிறப்பான இலக்கிய மலராக கிராம ஊழியன் ஆண்டு மலரும் அமைய வேண்டும் என்று நான் விரும்பினேன்.

மலருக்கான ஆரம்ப வேலைகள் உற்சாகமாக நடைபெற்றன. இதற்கிடையில், கு.ப. ராஜகோபாலன் இறந்துபோனதால் சிரமப்பட்ட அவரது குடும்பத்துக்கு உதவி புரிவதற்காக நிதி வசூல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

நிதி அதிகம் சேரவில்லை. கிடைத்த தொகை கு.ப.ரா. குடும்பத்துக்கு வழங்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில், ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா. இவர்களின் நண்பரும் மணிக்கொடி எழுத்தாளர்களில் மற்றொருவருமான 'சிட்டி' பெ.கோ. சுந்தரராஜன் துறையூருக்கு வந்து போனார். அவர் திருச்சி வானொலியில் பணிபுரிந்துகொண்டிருந்தார். அவரும் என்னை நண்பராக ஏற்றுக் கொண்டார்.

கிராம ஊழியன் எழுத்தாளர்கள் பத்திரிகைக்காரர்கள் இலக்கிய அன்பர்களின் கவனத்தையும் நன்மதிப்பையும் பெறும் விதத்தில் விஷயச் சிறப்புடன் வளர்ந்து வந்தது.

கு.ப.ரா.வின் மரணத்துக்குப் பிறகு, கும்பகோணம் எழுத்தாளர்கள் நீடித்த ஒத்துழைப்பு தர மனம் கொள்ளவில்லை. இதுவரை கு.ப.ரா.வுக்காக எழுதிக் கொடுத்தோம்; இனியும் சும்மா எதற்கு எழுதவேண்டும் என்று அவர்களில் சிலர் கருதினார்கள். எழுத்தாளர்களுக்குச் சன்மானம் அளிக்கக்கூடிய நிலையில் பத்திரிகை இல்லை.

எம்.வி. வெங்கட்ராம் தொடர்ந்து எழுதி உதவிக் கொண்டிருந்தார். தி. ஜானகிராமனின் முதல் நாவலான 'அமிர்தம்' தொடர்கதையாக வளர்ந்து முற்றுப் பெற்றது.

பத்திரிகை, காலம் தவறாது, மாதம் இருமுறை, வர வேண்டியிருந்தது. எனவே, நான் பல புனைபெயர்களில் அதிகம் எழுத வேண்டியதாயிற்று. நையாண்டி பாரதியாக நான் எழுதிய கட்டுரைகள் புதுமையாக இருந்தன; கட்டுப்பாடற்றுத் தாராளமாகச் சொடுக்கப்பெற்ற கிண்டல்களும் நையாண்டிகளும் அவற்றில் இடம் பெற்றன. அதனால் அவை பலரது பேச்சுக்கும் பொருளாயின. 'நையாண்டி பாரதி யார்?' என்று பலரும் கேட்கலாயினர்.

அதனால் 'இவர்தான் நையாண்டி பாரதி' என்று ஓர் இதழில் போட்டோ அச்சிடப்பட்டது.

அந்த சமயத்தில்தான் பாரதிதாசன் துறையூருக்கு வந்தார். திருச்சிக்கு வந்த கவிஞரைத் துறையூர் அன்பர்கள் தங்கள் ஊருக்கும் அழைத்து வந்தார்கள். அ.வெ.ர.கி. ரெட்டியாரின் அழைப்பை ஏற்று அவர் கிராம ஊழியன் அலுவலகத்துக்கு வந்தார்.

பாரதியார் பாடல்களோடு பாரதிதாசன் பாடல்களையும் பாடிப் பரப்பி வந்த திருலோக சீதாராம் இச்சமயம் துறையூரில் இல்லை. மலருக்கு விளம்பரம் சேகரிப்பதற்காகக் கோயம்புத்தூர் போயிருந்தார்.

கிராம ஊழியனில் 'உவமை நயம்' என்ற தலைப்பில் ஒவ்வொரு கவிஞரின் உவமைகள் பற்றிய கட்டுரைகள் பிரசுரம் பெற்றன. பாரதியார் உவமைகள் பற்றித் திருலோகம் எழுதியிருந்தார். அடுத்துப் பாரதிதாசன் உவமைநயம் குறித்து நான் பல கட்டுரைகள் எழுதினேன்.

எழுத்துக்கள் மூலம் பெயர் அதிகம் பரவியிருந்ததால், வல்லிக்கண்ணன் என்றால் பெரிய ஆள் என்றே பலரும் எண்ணினர். ஆளை நேரில் பார்த்ததும் நம்புவதற்குத் தயங்கினார்கள். இது தொடர்ந்து நடந்து வருவது.

கவிஞர் பாரதிதாசனும் அவ்விதமே உணர்ந்தார். 'வல்லிக்கண்ணனா!' என்று ஆச்சரியப்பட்டார். 'பையன் மாதிரி அல்லவா இருக்கிறே!' என்றார். 'உன் போட்டோவைப் பத்திரிகையில் வெளியிடாதே. எழுத்தைப் படித்துவிட்டு எப்படியெல்லாமோ எண்ணியிருக்கிறவங்க ஏமாற்றமே அடைவார்கள்' என்று சொன்னார்.

'இவர் படம் வெளிவந்துவிட்டது. 'ஊழியனி'லேயே அச்சிட்டிருக்கிறோம்' என்று ரெட்டியார் என் படத்தைக் கவிஞரிடம் காட்டினார்.

அவர் அதைப் பார்த்துவிட்டு, 'போகட்டும்... இனிமேல் படம் வெளியிட வேண்டாம்' என்று கூறினார்.

பாரதிதாசன் உவமைநயம் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்பெற்று, 1945இல் புத்தகமாக வெளிவந்தது. பாரதிதாசன்பற்றி வெளிவந்த முதல் புத்தகம் அதுதான் என்று பாரதிதாசன் ஆய்வாளர் ஒருவர் தமது ஆய்வில் குறிப்பிட்டிருக்கிறார்.

கிராம ஊழியன் ஆண்டுமலர் நிதானமாகத் தயாராகிக் கொண்டிருந்தது. அதற்குப் புதுமைப்பித்தன் ஒரு கவிதை அனுப்பியிருந்தார். வேளூர் வெ. கந்தசாமிக் கவிராயர் எழுதிய 'ஓடாதீர்!' வேகமும் அங்கதச் சுவையும் கொண்ட அருமையான கவிதை. எழுத்தாளன் வாழ்கிறபோது கவனிக்காமல் விட்டுவிட்டு, அவன் இறந்த பிறகு நிதி திரட்டுவது, நினைவுச் சின்னம் வைப்பது என்று பெருமைப்படுத்துகிற போக்கைக் கண்டித்துச் சூடு கொடுக்கும் நீண்ட கவிதை அது.

அந்தக் கவிதை அச்சில் வருவதற்கு முன்னரே பரபரப்பூட்டும் கவனிப்பைப் பெற்றுவிட்டது. அதற்குக் காரணம் திருலோக சீதாராம்தான். அதை மனப்பாடம் செய்து, அவர் போகிற இடங்களில் எல்லாம், அவருடைய விசேஷமான குரலில் பாடி ஒலிபரப்பினார்.

1944 இறுதியில் கோயம்புத்தூரில், தமிழ் எழுத்தாளர்களின் முதலாவது மாநாடு கோலாகலமாக நடந்தது. ஜி.டி. நாயுடு என்கிற விஞ்ஞானி-தொழில்அதிபரின் 'கோபால்பாக்' என்ற மாளிகையில் அம்மாநாடு நடைபெற்றது.

ஜி.டி. நாயுடு ஒரு விந்தை மனிதர். அவர் பரிசோதனைகள் செய்து புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் அற்புதமான ஆக்கங்களைப் படைத்தார். பப்பாளியில் மிக அதிகமான காய்கள் காய்க்கச் செய்வது; தேய்வுறாத ரேஸர் பிளேட், மற்றும் கார்கள், மோட்டார் சாமான்கள் என்று ஏகப்பட்ட தயாரிப்புகளை உருவாக்கினார். அவை மலிவு விலையில் சந்தைக்கு வந்து மக்களுக்கு உதவுவதற்கு வகை செய்தார். ஆனால் அரசாங்கம்

அங்கீகரிக்கவில்லை. மிகக் கடுமையாக வரிகள் விதித்தது. அவர் வரி கட்ட மறுத்தார். இறுதியில், அவரது கண்டுபிடிப்புகள் அனைத்தையும் சுத்தியலால் அவரே அடித்து நொறுக்கி அழித்தார். அப்படி அழித்து ஒழிப்பதற்கு முன்னதாக, அவற்றை ஒரு கண்காட்சியாக்கி மக்களின் பார்வைக்கு வைத்தார். 'அழிப்பதற்காகவே செய்யப்பட்ட ஆக்கங்கள்' என்று அந்தக் காட்சியில் அனைத்துப் பொருள்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (CONSTRUCTION FOR DESTRUCTION)

அந்த அதிசய மனிதர் எழுத்தாளர்களுக்கு நல்லாதரவு அளித்து வந்தார். எழுத்தாளர்களின் முதலாவது மாநாடு நடைபெற அவர் பெரிதும் உதவினார். கோவை நகர எழுத்தாளச் சகோதரர்கள் ஆர். சண்முகசுந்தரம், ஆர். திருஞானசம்பந்தம் இருவரும்தான் முன்முயற்சி எடுத்து, இம் மாநாடு வெற்றிகரமாக நிகழப் பாடுபட்டார்கள்.

முதல் எழுத்தாளர் என்று அந்நாட்களில் பெருமைப்படுத்தப்பட்டிருந்த வ.ரா. மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். தினசரி ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் சிறப்புரை ஆற்றினார். எழுத்தாளர்கள் பலர் பேசினர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எழுத்தாளர்கள் அனைவரும் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்து கொண்டது மாநாட்டின் சுவாரசியமான சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. அனைத்துப் பத்திரிகைகளும் மாநாடுபற்றிப் பிரமாதமாக எழுதிப் பெருமை சேர்த்தன.

அந்த மாநாட்டின் மேடையில் நின்று திருலோக சீதாராம்,புதுமைப்பித்தனின் 'ஓடாதீர்!' கவிதையை முழக்கமிட்டார். 'ஓகோ, உலகத்தீர் ! ஓடாதீர்; உம்மைப் போல் நானும் ஒருவன் காண்' என்று எழுத்தாளன் அறிவிப்பு செய்யும் கவிதை. குத்தலும் நையாண்டியும் சாடலும் நிறைந்தது. முடிவில் அது விடுத்த கோரிக்கை-

'இத்தனைக்கும் மேலே
இன்னொன்று! நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்பு கட்டி,
சிலைகள் செய்யாதீர்!'

இந்தக் கவிதைக்கும் திருலோகம் அதைப்பாடிய தோரணைக்கும் பிரமாத வரவேற்பு இருந்தது. இது யார் பாடியது என்று வ.ரா. கேட்டார். வேளூர் வெ. கந்தசாமிக் கவிராயர் என்ற திருலோகம் மிடுக்காகப் பதில் கூறவும், வ.ரா. திகைப்பு அடைந்தார். யார் அது? யார் அது? என்று திரும்பத்

திரும்பக் கேட்டார். அதன் பிறகு தான் 'புதுமைப்பித்தன் எழுதியது. இன்னும் அச்சில் வரவில்லை' என்று திருலோகம் தெரிவித்தார்.

கிராம ஊழியன் ஆண்டு மலர் உரிய காலத்தில் வெளிவந்தது. அது தரமான இலக்கிய மலராக அமைந்து, இலக்கிய வாதிகளின் பாராட்டுக்களை அதிகம் பெற்றது.

மகாகவி பாரதியாரை அடுத்துவந்து புகழ் பெற்றிருந்த கவிஞர்கள் அனைவரது கவிதைகளும் அம் மலரில் இடம் பெற்றிருந்தன; அவை மலருக்காக அவர்கள் புதிதாக எழுதித் தந்தவை. பாரதிதாசன், ச.து.சு. யோகியார், தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் வெ. ராமலிங்கம், கவியோகி சுத்தானந்த பாரதியார், கம்பதாசன் ஆகியோரின் படைப்புகள். அடுத்த தலைமுறைக் கவிஞர்களான கலைவாணன், சாலிவாகனன், மந்தஹாசன், தே.ப. பெருமாள், சுரபி கவிதைகள் படைத்திருந்தார்கள். ந. பிச்சமூர்த்தி (பிக்ஷு) 'மகாகவிகள்' என்று ஐந்து பறவைகள்பற்றித் தனித்தன்மையான கவிதை இயற்றியிருந்தார். சிறுகதைகள், கட்டுரைகளிலும் அந்த மலர் சிறப்பான விருந்து ஆக விளங்கியது.

அனைத்தினும் மேலாக விசேஷ அம்சமாக, குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றும் இருந்தது. தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் அக்காலத்தில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்குக் கவனிப்பும் வரவேற்பும் கொடுத்ததில்லை. 'கலைமகள்' அபூர்வமாக சம்பந்தன், சி. வைத்தியலிங்கம் கதைகளை வெளியிட்டது. திறமையை நிரூபித்திருந்த இலங்கை எழுத்தாளர்களுக்கும் இடம் அளிக்க வேண்டும் என்று விரும்பி, அங்குள்ள படைப்பாளிகளுக்குக் கடிதம் எழுதினேன். அவர்களும் மகிழ்ச்சியுடன் ஒத்துழைப்பு தந்தார்கள். இலங்கையின் முன்னோடித் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களான சம்பந்தன், சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் நல்ல சிறுகதைகள் அனுப்பி உதவினர். சோ. தியாகராசா, ச. அம்பிகைபாகன் போன்றவர்கள் கட்டுரைகள் தந்தார்கள். இளைய தலைமுறைப் படைப்பாளிகளும் கதை, கவிதை வழங்கியிருந்தனர்.

அந் நாட்களில் தமிழ்ப் பத்திரிகைகள் சிறப்பு மலர்கள் தயாரிக்கும்போது மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதய்யர், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முதலிய மகா பெரியவர்கள், மந்திரிகள் மற்றும் தலைவர்களுக்கு முதலிடம் தந்து அவர்களுடைய எழுத்துக்களையே முதன்மையாக, வரிசையாக, வெளியிடுவதை ஒரு மரபாகக் கொண்டிருந்தன. கிராம ஊழியன் மலர் அந்த மரபை மீறியது. இலங்கையின் சாதாரண எழுத்தாளரான சோ. தியாகராசனின் கட்டுரையை முதல் கட்டுரையாக வெளியிட்டது.

இதனால் எல்லாம் இலங்கை எழுத்தாளர்கள் கிராம ஊழியனையும் என்னையும் வெகுவாக மதித்துப் பாராட்டி மகிழ்ந்தார்கள். இலங்கையர்கோன், கிராம ஊழியனின் இறுதி இதழ் வரை சிறுகதை, நாடகம் என்று தொடர்ந்து

எழுதி உதவிக்கொண்டிருந்தார். இளைய படைப்பாளிகளும் உற்சாகமாக ஆதரவு தந்தார்கள்.

17

மீண்டும் காலம் எனது வளர்ச்சிக்கு வழி அமைத்தது.

திருலோக சீதாராம் கிராம ஊழியனை விட்டு விலகத் தீர்மானித்தார். அவர் தமது வாழ்க்கை முன்னேற்றத்துக்காகச் சில திட்டங்கள் தீட்டியிருந்தார். அதைச் செயலாற்றத் துறையூரை விட்டுத் திருச்சிக்கே போவதுதான் நல்லது என அவர் முடிவு செய்தார்.

திருச்சியில் 'சிவாஜி' என்றொரு வாரப் பத்திரிகை நடந்து கொண்டிருந்தது. வணிக சமூகத்துடன் தொடர்பு கொண்டிருந்த சிவஞானம் என்பவர் அதன் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்தார். சொந்த அச்சுக்கூடமும் வைத்திருந்தார். சிவாஜி ரொம்ப சாதாரண இதழாக வந்துகொண்டிருந்தது.

திருலோகம் சிவஞானத்துடன் பேசி, சிவாஜியைக் கவனிப்புக்கு உரிய- எல்லோரும் மதிக்கக்கூடிய- ஒரு பத்திரிகையாக மாற்றி விடலாம், வளர்ச்சி காரணமாக விளம்பர வருமானமும் கிடைக்கும் என்று யோசனைகள் கூறி அவரை இசைய வைத்தார். அவர் சிவாஜி பத்திரிகை, அச்சகம் இரண்டிலும் கூட்டாளியாகச் சேர்ந்து பொறுப்பேற்றார். சிவாஜி விரைவிலேயே வளர்ச்சிப் பாதையில் முன்னேறியது. முக்கிய எழுத்தாளர்கள் பலரும் அதில் எழுதலானார்கள்.

சிவாஜிக்கு மேலும் பெருமை சேர்க்கவும் விளம்பர வருமானம் பெறவும் திருலோக சீதாராம் ஆண்டுமலர் வெளியிட்டார். ஆண்டுதோறும் மலர் வெளியிடுவதை ஒரு முக்கியப் பணி ஆக்கினார் அவர். சிவாஜி ஆண்டுமலர்கள் தரமான தயாரிப்புகளாக அமைந்திருந்தன. வழுவழு தாள்கள், பளபள சித்திரங்கள், கவர்ச்சி அம்சங்கள் எதுவும் இல்லாது தரமான-நயமான எழுத்துக்களை (படைப்புகளை) மிகுதியாகக் கொண்டு கவனிப்புக்கு உரியனவாக அவை திகழ்ந்தன.

திருலோகம் கூட்டு சேர்ந்த பின், சில மாதங்களிலேயே சிவஞானம் பத்திரிகை, அச்சகம் ஆகியவற்றின் பொறுப்புகளை அவரிடமே ஒப்படைத்து விட்டு ஒதுங்கிக்கொண்டார். அதனால் திருலோகம் சிவாஜியின் சொந்தக்காரர் ஆனார். அவருடைய ஆர்வம், உழைப்பு, ஆற்றல் எல்லாம் சேர்ந்து சிவாஜியை வெற்றிகரமாக முன்நடத்திச் சென்றன. சிவாஜி சீதாராம் என்ற பெருமையும் அவரை வந்தடைந்தது.

கிராம ஊழியன் வழக்கம்போல் வெளிவந்தது. அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் நிர்வாக ஆசிரியர், வல்லிக்கண்ணன் ஆசிரியர் என்று

அறிவிக்கப்பட்டது. கும்பகோணம் எழுத்தாளர்கள் எழுதவில்லை. புதிதாகச் சிலர் தொடர்ந்து எழுதலானார்கள். ராசிபுரம் தனுஷ்கோடி, தி.க. சிவசங்கரன், என் அண்ணா அசோகன், சுப. நாராயணன், வானொலியில் பணிபுரிந்த குகன், சிட்டி என்று பலர். திருச்சி ரேடியோ நிலைய உதவி இயக்குநர் கு.ப. ரங்காச்சாரி, பராங்குசம் என்ற பெயரில் புதுமையான சிறுகதைகள் எழுதி உதவினார். நான் அதிகம் எழுத நேர்ந்தது. வெவ்வேறு புனைபெயர்களில், வித்தியாசமான நடைகளில் கதை, கட்டுரை, கவிதை என்று எழுதிக் கொண்டிருந்தேன்.

பாரதியின் வசனகவிதைப் படைப்புகளான 'காட்சிகள்' பாணியில், 'பாரதி அடிச்சுவட்டில்' என்ற தலைப்பில், இளவல் எனும் புனைபெயரில், நான் இதழ் தோறும் எழுதினேன். இவை மிகுந்த பாராட்டுதல்களைப் பெற்றுத்தந்தன போலவே கண்டனங்களையும் குறைகூறல்களையும் எதிர்கொண்டன.

புத்தக மதிப்புரை கிராமஊழியனின் சிறப்பான அம்சமாக விளங்கியது. ஆகவே மதிப்புரைக்காகப் பல்வேறு பதிப்பகங்களும் புத்தகங்கள் அனுப்பிக் கொண்டிருந்தன.

தி.க.சி., துருவன் என்ற பெயரில் திரைப்பட விமர்சனங்களைச் சூடும் சுவையுமாக எழுதி வந்தார். 'முச்சந்தி' என்ற பகுதியில் 'பிள்ளையார்' விவாதத்துக்கு உரிய பிரச்சினைகளை வெளியிட்டார். பிள்ளையார் என்பது எனது புனைபெயர்களில் ஒன்று.

ரெட்டியார், கண்ணன், அ.வெ.ர.கி., தேவராய பூபதி என்ற பெயர்களில் அ.வெ.ர.கிருஷ்ணசாமி எழுதினார்.

கிராம ஊழியன் இதழ்கள் முக்கியமான எழுத்தாளர்கள், பத்திரிகைக்காரர்கள், புத்தக வெளியீட்டாளர்களுக்கெல்லாம் இலவசமாக அனுப்பப்பட்டன. அதனால் எங்கள் எழுத்துக்கள் மிகப் பலரது கவனத்துக்கும் உரியனவாயின.

இச் சந்தர்ப்பத்தில், டி.கே.எஸ். சகோதரர்களின் சண்முகானந்த சபா திருச்சியில் முகாமிட்டு நாடகங்கள்நடத்தியது. புதிய நாடகங்களை அரங்கேற்றியது. நாரணதுரைக்கண்ணன் எழுதிய 'உயிரோவியம்', ப. நீலகண்டன் நாடகம் 'முள்ளில் ரோஜா', ஆதிமூலம் எழுதிய 'மனிதன்', கி.ஆ.பெ.விசுவநாதம், ரா. வேங்கடாசலம் எழுதிய நாடகங்கள் என்று பல புதிதாக மேடை ஏற்றப்பட்டன. ஏற்கெனவே அவர்களுக்குப் பெயர் வாங்கித்தந்திருந்த ஔவையார், சிவலீலா முதலிய நாடகங்களும் நடிக்கப் பெற்றன.

நடிகர் டி.கே. சண்முகம் இலக்கிய ரசிகர். பல்வேறு நூல்களையும் விரும்பிப் படிப்பவர். எழுத்தாளர்களின் நண்பர். அவர் எனது அன்புச் சகோதரர் ஆகியிருந்தார். அடிக்கடி சுவாரசியம் மிகுந்த கடிதங்கள் எழுதிக்

கொண்டிருந்தார். ஒவ்வொரு நாடக மாற்றத்தின் போதும் அவர் எனக்குப் பணம் அனுப்பி, அந் நாடகத்தைக் கண்டு மகிழ என்னைத் திருச்சிக்கு வரவழைப்பதை வழக்கமாகக்கினார்.

நான் பார்த்த நாடகங்கள்பற்றி ஊழியனில் விரிவான கட்டுரைகள் எழுதினேன். அவை வாசகர்களால் விரும்பி வரவேற்கப்பட்டன.

நாடகம் பற்றிக் கிராம ஊழியனில் எழுதியதால், நவாப் ராஜமாணிக்கமும் அவரது தேவி நாடகசபை முகாமிட்ட ஊர்களுக்கு வந்து நாடகங்களைப் பார்க்கும்படி அழைப்பும் பணமும் அனுப்பினார். அப்படி திருவனந்தபுரம், கொல்லம், கல்லிடைக்குறிச்சி ஊர்களுக்குப் போய் நவாபின் நாடகங்களைப் பார்த்தேன். அவை பற்றியும் கட்டுரைகள் எழுதினேன்.

கிராம ஊழியன் விற்பனையாளர்கள் மூலம் பல முக்கிய ஊர்களில் விற்பனை செய்யப்பட்டது. ஆனாலும் அதிகமான விற்பனை அதற்கு இருந்ததில்லை. ஆயிரம் பிரதிகளுக்குள்ளேதான் அது அச்சாயிற்று.

சுப. நாராயணன் கட்டுரைகள் தனித்தன்மையுடன் இருந்தன. அவர் நல்ல சிந்தனையாளர். 'சக்தி'யில் வேலை பார்த்தார். தி.ஜ. ரங்கநாதன் அதன் ஆசிரியர் பதவியில் இருந்து விலகி, 'மஞ்சரி' பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், சுப. நாராயணன் 'சக்தி' ஆசிரியரானார். அப்பொழுதும் அவர் ஊழியனின் ஒவ்வொரு இதழுக்கும் கட்டுரை எழுதி அனுப்பினார். 'சக்தி'க்கு மாதம்தோறும் நான் கதை எழுதித் தர வேண்டும் என்று கேட்டு வாங்கி என் எழுத்துக்களை வெளியிட்டார்.

எழுத வேண்டும்-புதிது புதிதாக எழுத வேண்டும்- என்றொரு வேகம் என்னுள்ளிருந்து என்னை இயக்கிக் கொண்டிருந்தது. கிராம ஊழியன் இதழ்களுக்காக எழுதியதுடன், சக்திக்கும் சிவாஜிக்கும் வேறு சிலஇதழ்களுக்கும் எழுதிக் கொண்டிருந்தேன். அதிகமாக எழுத வேண்டும் என்பதற்காக இதய ஒலி என்கிற எனது கையெழுத்து மாத இதழையும் விடாது வளர்த்தேன்.

இதய ஒலி பற்றி அறிய நேர்ந்த ந.பிச்சமூர்த்தி, 'நீங்கள் ஏன் உங்கள் திறமையையும் காலத்தையும் உழைப்பு சக்தியையும் வீணடிக்கிறீர்கள்?' என்று கேட்டார். 'எங்கே, இதய ஒலியைப் பார்க்கலாம்' என்று கேட்டு வாங்கிப் படித்துப்பார்த்தார். ரசித்துப் பாராட்டினார்.

'நன்றாகத் தான் தயாரிக்கிறீர்கள். கையெழுத்துப் பத்திரிகை என்றாலும் தரமான இதழாக இருக்கிறது. இதைப் பார்க்கையில் இதைப் பூக்குடலை என்று சொல்லலாம்போல் தோன்றுகிறது. பூக்காரன் பூக்களைச் சரங்களாகவும் ஆரமாகவும் செண்டாகவும் கட்டிக் குடலைக்குள் வைத்துப் பாதுகாக்கிறான். அப்புறமாக அவற்றை விநியோகிக்கிறான். வீடுகளுக்கும் கடைகளுக்கும் தேவைப்படுவோருக்கும் வழங்குகிறான். அதே மாதிரி உங்கள்

எழுத்துமலர்களை நீங்கள் வகைவகையாகக் கோர்த்து, இந்த இதழில் பத்திரப்படுத்துகிறீர்கள்' என்று மகிழ்ச்சியோடு சொன்னார்

இதய ஒலி கையெழுத்துப் பத்திரிகையின் பெருமை சிறிது சிறிதாக வெளியே பரவிவந்தது. பெரும்அளவில் தெரியவருவதற்கு ஒரு வாய்ப்பு கிட்டியது.

திருச்சியிலும் அதன் அருகில் உள்ள பல ஊர்களிலும் பல இளைஞர்கள் கையெழுத்துப் பத்திரிகையை ஆர்வத்துடன் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீரங்கத்தில் ம.ரா. சுப்பிரமணியன் என்ற ஆரம்ப எழுத்தாளர் ஓட்டல்தொழிலில் ஈடுபட்டிருந்தார். அவர் கையெழுத்துப்பத்திரிகையும் நடத்திவந்தார்.

அவருக்கும் அவரது நண்பர்கள் சிலருக்கும் ஓர் எண்ணம் ஏற்பட்டது. திருச்சிமாவட்டத்தில் வளர்கிற கையெழுத்துப்பத்திரிகைகள் பலவற்றையும் ஒரே இடத்தில் சேர்த்து ஒரு கண்காட்சி நடத்துவது. அத்துடன் 'கையெழுத்துப்பத்திரிகை மாநாடு'ம் நடத்தலாமே என்று யோசித்தார்கள். திட்டம் தீட்டினார்கள். என்னைத் தேடி வந்து எனது கருத்தையும் கேட்டார்கள். பணச் செலவை அவர்கள் பெரிதாகக் கருதவில்லை.

அவர்கள் யோசனையை நான் வரவேற்றேன். செய்ய வேண்டியதுதான் என ஆதரித்தேன். வரவேற்புக் குழுவின் தலைவராக நான் இருக்கவேண்டும் என்றும், கையெழுத்துப் பத்திரிகைகளின் காட்சியில் எனது இதயஒலியும் இடம் பெற வேண்டும் என்று ம.ரா. சுப்பிரமணியன் வேண்டினார். நானும் இசைவு தெரிவித்தேன்.

கையெழுத்துப்பத்திரிகையாளர் மாநாடு ஸ்ரீரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது 1946இல். சென்னையில் இருந்து, 'பாரததேவி' நாளிதழ் ஆசிரியர் கே. அருணாசலமும், ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்த 'நாடோடி' வெங்கட்ராமனும் மாநாட்டுக்காக வந்திருந்தார்கள்.

நான் வரவேற்புரை நிகழ்த்தினேன். பாரத தேவி அருணாசலம் தலைமை உரை. நாடோடி வாழ்த்துரை வழங்கினார். நாகப்பட்டினம் வக்கீல் சூரியமூர்த்தி, ந. பிச்சமூர்த்தி, சிட்டி சுந்தரராஜன் முதலியோரும் வாழ்த்திப் பேசினர். மற்றொரு மணிக்கொடி எழுத்தாளர் ஆன சி.சு. செல்லப்பா, வத்தலக்குண்டிலிருந்து திருச்சிக்கு வந்திருந்தார், நண்பர்களைப் பார்த்துப் பேசுவதற்காக. சிட்டியின் அழைப்பின் பேரில் அவரும் மாநாட்டுக்கு வந்திருந்தார். மாநாடு பெரும் வெற்றியாக மதிக்கப்பட்டது. ஐம்பதுக்கும் அதிகமான கையெழுத்து இதழ்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

சென்னைப் பத்திரிகைகள் இந்த மாநாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகள் வெளியிட்டிருந்தன.

துறையூரில் கிராம ஊழியன் மாதம்இருமுறைப் பத்திரிகைக்காக உழைத்தபோதே, இதய ஒலி மாத இதழையும் வளர்த்த காலத்திலேயே, நையாண்டி பாரதிக்காக 'காப்பி' என்ற தினசரி கையெழுத்து இதழையும் தயாரித்துக் கொண்டிருந்தேன்.

முழுநீளத்தாளில் (ஃபுல்ஸ்கேப் பேப்பர்) நான்கு பக்கங்கள் கொண்ட இதழ் காப்பி. நையாண்டி பாரதியின் கிண்டல், குத்தல், சாடல்களே அதில் அதிகம் இடம் பெற்றன. முக்கியச் செய்திகள், அவை பற்றிய கருத்துக்களும் உண்டு. பாரதியாரின் 'புதிய ஆத்தி சூடி' மாதிரி 'நை. பாரதீயம்' என்று தொடர்ந்து எழுதப்பட்டன. 'நாம் வாழ்க!' 'நமக்கு நாமே துணை' என்று தொடங்கி, வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டிய - தற்காலச் சமூக நடைமுறைகளைப் பரிகாசம் செய்யும்- அறிவுரைகள் அடங்கியது நை பாரதீயம்.

நாம் வாழ்க! நமக்கு நாமே துணை என்ற சொற்கள் பலரை வசீகரித்தன. பின்னாளில் 'கல்கண்டு' தமிழ்வாணன், வல்லிக்கண்ணன் விளம்பரப்படுத்திய இவ் உரைகளைத் தனது கட்டுரைகளில் குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார்.

எழுத்து என்பது எனக்கு விளையாட்டாக, உற்சாகம் ஊட்டுவதாக, ஒரு உந்து சக்தியாக அமைந்திருந்தது. பண வரவு பற்றியோ, வாழ்க்கை வசதிகள் குறித்தோ எண்ணாமல், எப்போதும் வகைவகையாக எழுதுவதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் கண்டேன்.

கிராம ஊழியன் ஆசிரியர் என்று பெயர் வந்ததே தவிர, சம்பளம் அதிகமாகக் கிடைத்துவிடவில்லை. சேர்ந்தபோது இருபத்தைந்து ரூபாய் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. சிறிது காலத்துக்குப் பிறகு அது முப்பது ரூபாய் ஆக்கப்பட்டது. ஆசிரியர் என்றானதும் நாற்பது ரூபாய் என்று ஆனது. அதற்கு மேல் உயரவில்லை. நான் அதுபற்றிப் பெரிதாக எண்ணவுமில்லை; கவலைப்படவுமில்லை. இஷ்டம் போல் எழுதுவதற்குச் சுதந்திரம் இருந்தது. என் எழுத்துக்களில் யாரும் குறுக்கிட்டதில்லை. 'இதை எழுது, அதை எழுதாதே' என்று கட்டுப்பாடுகள் விதிக்க யாருமில்லை. அதுவே எனக்குப் போதுமானதாக இருந்தது.

ரெட்டியாரும் விளையாட்டு மனப்பண்பு பெற்றிருந்தார். ஊழியன் அச்சகத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களும் சுதந்திரப் போக்கு கொண்டவர்களாக, நண்பர்களாகவே பழகினார்கள். ரெட்டியார் அவர்களது இயல்புகளை ஆதரித்தார் என்றே சொல்லலாம்.

துறையூரில், ஊரை அடுத்து விசாலமான ஓர் ஏரி உண்டு. மழைக்காலத்தில் ஏரியில் நீர் நிறைந்து அழகாக விளங்கும். ஏரி நடுவில் புராதனமான ஒரு கட்டிடம். கீழ்த் தளமும் மாடியும் கொண்டு, வரலாற்றுச்

சாயையுடன் நின்றது. துறையூர் ஜமீன்தார் வசமிருந்தது. அழகு ரசிகரும் உல்லாசியுமான ஒரு ஜமீன்தார் ஒரு காலத்தில் ஏரி நடுவில் ஒரு கட்டிடம் கட்டிவைத்தார். ஏரியில் நீர் நிறைந்திருந்த நாட்களில் அவர் தோணியில் அமர்ந்து சுற்றி மகிழ்வார்; பௌர்ணமி நாட்களில், 'செஜ்ஜை' என்கிற அந்தக் கட்டிடத்தில் உல்லாசமாகப் பொழுதுபோக்குவார் என்று சொல்லப்பட்டது.

நாமும் செஜ்ஜையில் போய், ஒரு நிலாராத்திரி, சந்தோஷமாகப் பொழுதுபோக்கலாமே! சித்திரான்னங்கள் தயாரித்துக் கொண்டு போய்ச் சாப்பிட்டு மகிழலாம் என்று அச்சுக் கோக்கும் தொழிலாளர்கள், சும்மா ஜாலியாகப் பேசினார்கள். ஆனால் ரெட்டியார் அதைச் செயல்படுத்த முன்வந்தார். அவருடைய கிராமத்தைச் சேர்ந்த மூன்று நண்பர்களும் சேர்ந்துகொண்டார்கள்.

அப்போது ஏரியில் தண்ணீர் இல்லை. நல்ல நிலாக்காலம். பதினைந்து பேர் 'செஜ்ஜை' கட்டிடத்தில் புகுந்தோம். இருளைப் போக்க 'கியாஸ்லைட்' (GAS LIGHT) உதவியது. ருசிருசியான தின்பண்டங்களும் சிற்றுண்டிகளும் பரிமாறப்பட்டன. உற்சாகமாகப் பேசியும் பாடியும் சந்தோஷமாக இருந்தார்கள் எல்லோரும்.

என்றும் இல்லாத அதிசயமாக, திடீரென்று, செஜ்ஜையில் பளீர் வெளிச்சமும், ஆட்கள் நடமாட்டமும் பேச்சொலிகளும் நிலவுவதைக் கண்ட ஊர்க்காரர்கள் என்னவோ ஏதோ என்று திடுக்கிட்டார்கள். விஷயம் அறிந்த ஒருவர், ஊழியன் பிரஸ் ரெட்டியாரும் அவருடைய ஆட்களும் செஜ்ஜையில் கூடி உல்லாசமாகப் பொழுது போக்குகிறார்கள் என்று தெளிவுபடுத்தவும் மற்றவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

ஒரு சமயம் ரெட்டியார் மற்றும் பலரையும் அழைத்துக்கொண்டு கொல்லி மலைக்குப் போனார். துறையூரிலிருந்து சில மைல் தூரத்தில் உள்ளது கொல்லிமலை. கிராமவாசிகள் அடிக்கடி அங்கே போய்வருவது வழக்கம். ரெட்டியாரின் கிராமத்து நண்பர்கள் தூண்டிவிட, ரெட்டியார் எங்களை அழைத்துக்கொண்டு மலைமீது யாத்திரை போய் வந்தார். அங்கே வனபோஜனம் உண்டு மகிழ்ந்தோம்.

18

என் எழுத்துக்கள் பத்திரிகைகளில் வந்தன. அச்சில் வராமல் கையெழுத்து நிலையிலும் ஏகப்பட்டவை இருந்தன. நான் மேலும் மேலும் எழுதிக் கொண்டிருந்தேன். கடிதங்கள் நிறைய எழுதினேன்.

'நீங்கள் கடிதங்களுக்காக அதிகம் செலவிடுகிறீர்கள். உங்கள் சம்பளத்தில் பாதி தபால் செலவிலேயே காலியாகிறது. இது அவசியமா?' என்று ஒருமுறை நண்பர் திருலோக சீதாராம் என்னைக் கேட்டார்.

'சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதானே வாழ்க்கையின் நோக்கம்? எழுதிக்கொண்டிருப்பது எனக்கு சந்தோஷம் தருகிறது. கடிதங்கள் எழுதுவது என் சந்தோஷங்களை அதிகப்படுத்துகிறது' என்று சொன்னேன்.

'உங்கள் எழுத்துக்களைப் புத்தகங்களாகக் கொண்டுவர வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படவில்லையா?' என்று நண்பர் வேறொரு சமயம் கேட்டார்.

'காலம் வருகிறபோது அவை வந்துவிட்டுப் போகட்டும்! வெறுமனே ஆசைப்படுவதால் மட்டும் காரியங்கள் நடந்துவிடுவதில்லை. மேலும், முயற்சிகள் எப்போதும் உரிய பலன்களைப் பெற்றுத் தருவதுமில்லை' என்றேன்.

என் எழுத்துக்கள் புத்தக வடிவம் பெறவேண்டும் என்று எண்ணத்துடன் நான் மேற்கொண்ட சில முயற்சிகளின் நிலைமை அப்படித்தான் இருந்தது.

நான் 1944 ஆரம்பத்தில் சென்னையில் நவசக்தியில் தங்கியிருந்த போது, ஒருநாள் 'அல்லயன்ஸ் கம்பெனி' குப்புசாமி அய்யரைக் கண்டு பேசினேன். அவர் தமது நிறுவனம் மூலம் நல்ல நல்ல புத்தகங்களை வெளியிட்டு வந்தார். 'தமிழ் நாட்டுச் சிறுகதைகள்' என்ற வரிசையில் தொடர்ந்து பல எழுத்தாளர்களின் சிறுகதைகளைப் புத்தகங்களாகப் பிரசுரித்தார். பலபேர்களின் சிறுகதைகளைத் தொகுத்துப் பெரிய புத்தகமாகக் 'கதைக் கோவை' என்றும் வெளியிட்டார். என்னுடைய கதைகளையும் புத்தகமாக வெளியிட இயலுமா என்று நான் அவரிடம் கேட்டேன். அவர் மகிழ்வுடன் இணங்கிக் 'கதைகளைக் கொடுங்கள்' என்றார். நான் பதினைந்து கதைகளைத் தொகுத்து அவரிடம் அளித்தேன். அவற்றில் 'பட்டாசுக்கட்டு' என்றொரு கதை இருந்தது. அந்தப் பெயரிலேயே கதைத் தொகுதியை வெளியிடலாம் என்று அவர் கூறினார். 'வெளிவர இருக்கும் நூல்கள்' பற்றிய விளம்பரங்களில் அந்தப் பெயரும் இடம் பெற்றது. ஆயினும் வருடங்கள் பல ஓடியும் என் சிறுகதைத் தொகுப்பு 'பட்டாசுக்கட்டு' வெளிவரவேயில்லை.

துறையூரில் 'பாரதமாதா பிரசுரம்' என்றொரு வெளியீட்டு நிறுவனம் இருந்தது. கருப்பையா என்பவர் அதை நடத்திக் கொண்டிருந்தார். இந்திரா பத்திரிகையில் ஆசிரியர் ப. நீலகண்டன் எழுதிய கம்பராமாயணக் கட்டுரைகளைக், 'கோசலை செல்வன்' 'மிதிலைச் செல்வி' என்ற இருபுத்தகங்களாக வெளியிட்டிருந்தார். சிரஞ்சீவி எனும் எழுத்தாளரின் கதைகளையும் வேறு சில புத்தகங்களையும் அவர் பிரசுரித்திருந்தார். நான் திருநெல்வேலியில் இருந்தபோதே என்னை அறிமுகம் செய்து கடிதம் எழுதி என் கதைகளைப் புத்தகமாக வெளியிடுவீர்களா? என்று கேட்டேன். அவர் சம்மதித்துக் கதைகளை அனுப்பச் சொன்னார். பன்னிரண்டு கதைகள்

அனுப்பினேன். 'அணையா விளக்கு' என்று பெயர் வைக்கலாம் என்று தெரிவித்தேன். அந்த விளக்கு ஏற்றப்படவேயில்லை!

நான் துறையூர் சேர்ந்ததும் பாரத மாதா பிரசுரம் கருப்பையாவைச் சந்தித்தேன். என் கதைகள் பற்றி விசாரித்தேன். 'கண்டிப்பாக அவற்றைப் புத்தகமாக்கிவிடுவேன். இப்ப கொஞ்சம் பணக்கஷ்டம். பொருளாதாரநிலை சரிப்பட்டதும் முதலாவதாக அணையா விளக்கைக் கொண்டு வந்து விடுவேன்' என்று அவர் உறுதிகூறினார்.

ஆனாலும், அவருடைய பொருளாதார நிலைமை சீர்படவுமில்லை. எனது 'அணையா விளக்கு' வெளிச்சத்தைப் பார்க்கவுமில்லை. 'கடை விரித்தேன், கொள்வாரில்லை, கட்டிவிட்டேன்' என்று கூறிய வள்ளலார் இராமலிங்கர் காட்டியவழியைத்தான் பாரதமாதா பிரசுரம் அதிபர் கருப்பையாவும் பின்பற்ற வேண்டியதாயிற்று.

சரி. காலம் வரும், காத்திருப்போம் என்று எண்ணியபடி நான் எழுதிக் கொண்டிருந்தேன்.

கோயம்புத்தூரில் சினிமா உலகம் பத்திரிகையைக் கவனித்துவந்த எஸ்.பி. கிருஷ்ணன்-ஆசிரியர் பி.எஸ். செட்டியாரின் உறவினர் - 'ஏதாவது பிசினஸ் பண்ணணும்' என்று ஆசைப்பட்டார். அவரது நண்பர் ஒருவரும் கூட்டுச் சேர்ந்தார். புத்தகங்கள் வெளியிடலாம் என்று தீர்மானித்தார்கள். முதலில் எனது சிறுகதைகளை ஒரு புத்தகமாக்க விரும்பினார்கள். நான் பன்னிரண்டு கதைகள் அனுப்பிவைத்தேன். 'கல்யாணி முதலிய கதைகள்' என்று பெயர் சூட்டலாம் என்றும் தெரிவித்தேன். கல்யாணி என்ற அழகான பெயருக்கு ஏற்றபடி அழகும் வசீகரமும் நிறைந்த அட்டைப் படம் அமைக்கமுடியும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது.

சில மாதங்களில் புத்தகம் தயாராகி வெளிவந்துவிட்டது. ஆனால் அதன் அட்டைச் சித்திரமும் அமைப்பும் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. எப்படியோ, எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். 1944இல் அது நிகழ்ந்தது.

1945இல் எனது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான 'நாட்டியக்காரி' வெளிவந்தது. இது வெளிவர நேர்ந்ததும் விநோதமான ஓர் அடிப்படையிலேதான்.

நான் திருநெல்வேலியில் வசித்த நாட்களில், எனக்கு நண்பர்களான இளைஞர்களில் எஸ். சிதம்பரம் என்பவரும் ஒருவர். கல்லூரி மாணவர். தி.க.சி.யின் நண்பர். செல்வந்தர் வீட்டுப் பிள்ளை. அவர் தந்தை திருவனந்தபுரத்தில் பிரபல வைரவியாபாரி. அவருக்குச் சொத்து நிறைய. அனைத்துக்கும் வாரிசு ஒரே மகனான சிதம்பரம்தான். அவருடைய சித்தப்பாவுக்குப் பிள்ளை இல்லை. அவரது சொத்துகளுக்கும் சிதம்பரம்தான் வாரிசு என்ற நிலை இருந்தது. அவர் உல்லாசி. ஜாலி பிரதர். கவிஞர்

பாரதிதாசன் அறிமுகம் செய்துள்ள 'காற்றடிக்கும் சோலையிலே கனி அடித்துத் திரிகின்ற செல்லப்பிள்ளை' இனம் இந்தச் சிதம்பரம்.

கல்லூரிப் படிப்பை அரைகுறையாக விட்டுவிட்ட பிறகு, வாழ்க்கையில் ஏதாவது பண்ணி எப்படியாவது பெயர் பெறவேண்டும் என்ற ஆசை சிதம்பரத்துக்கு ஏற்பட்டது. அவருடைய நண்பர்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு யோசனை சொன்னார்கள். ஒருவர் சொன்ன யோசனை சிதம்பரத்துக்குப் பிடித்திருந்தது. அவருக்கு ஓரளவு இலக்கிய ஈடுபாடும் எழுதும் திறமையும் இருந்ததால்.

'உன்னுடைய எழுத்துக்களைப் புத்தகமாகக் கொண்டு வரவேண்டும். அதற்கு முன்னதாகக் கவனிப்புப் பெறுவதற்காக எழுத்துலகில் பெயர் பெற்றுள்ள ஒருவரின் எழுத்துக்களைப் புத்தகமாக வெளியிட வேண்டும். அதன் பக்கபலத்தில் உனது புத்தகங்களும் கவனிப்புப் பெறும்' என்பது அந்த நண்பரின் யோசனையாகும்.

யோசித்த சிதம்பரத்துக்கு அந்த யோசனை நல்ல வழி என்று பட்டது. தமக்குத் துணைவரக்கூடிய - பெயர்பெற்ற எழுத்தாளராக யாரை அணுகலாம் என்று அவர் நினைத்துப் பார்த்தார். வல்லிக்கண்ணன் நினைவு அவருக்கு வந்தது. நேரே அவர் துறையூர் வந்து சேர்ந்தார்.

நான் அவருக்குக் கதைகள் கொடுத்தேன். நாட்டியக்காரி என்ற கதைத் தொகுப்பை அவர் 'கவிக்குயில் நிலையம்' வெளியீடாகக் கொண்டு வந்தார். கூடவே தமது கவிதைகளைக் 'காதலிக்கு' என்ற தொகுப்பாகப் பிரசுரித்தார்.

அவருடைய கவிதைகள் தொடர்ந்து கிராம ஊழியன் இதழ்களில் இடம் பெற்றன. 'வைரம்' என்ற புனைபெயரிலும் எஸ். சிதம்பரம் எழுதினார். மேலும் கவனிப்பு பெறுவதற்காக இலக்கிய மலர் வெளியிடலாம் என்று அவரிடம் சொன்னேன். கவிக்குயில் மலர் தயாரிப்பதில் அவர் மும்முரமாக ஈடுபட்டார். அவருக்காக, முக்கிய எழுத்தாளர்கள் பலருக்கும் நானும் கடிதங்கள் எழுதினேன், மலருக்கு விஷயங்கள் கேட்டு.

எழுத்தாள நண்பர்கள் அன்புடன் ஒத்துழைத்தார்கள். கவிக்குயில் முதல் மலர் நன்கு உருவாகி வெளிவந்தது. அதில் என்னுடைய எழுத்துக்கள் அதிகம் இருந்தன.

மலரின் சிறப்பைக் கண்ட எழுத்தாளர்கள் இரண்டாவது மலருக்கு உற்சாகத்துடன் உதவினார்கள். புதுமைப்பித்தன் கவிதைகள் கொடுத்தார். இரண்டாவது மலர், முதல் மலரை விடச் சிறப்பாக அமைந்திருந்தது. இவ் இரண்டு மலர்களும் திருவனந்தபுரத்தில் இருந்துதான் வெளியிடப்பட்டன.

சிதம்பரத்தின் உற்சாகமும் ஆர்வமும் திசைமாறிப் போயின. அவருக்குத் திருமணமாகிக் குழந்தைகள் இருந்தன. ஆயினும் செல்வப்பெருக்கு அவரை விபரீத வழிகளில் செல்லத் தூண்டியது. திருவனந்தபுரத்தில் அவருக்குச் சேர்ந்த நண்பர்களும் அப்படிவந்து

வாய்த்தார்கள். இலக்கியத்தில் இருந்து அவர் கவனம் போட்டோக்கலை பக்கம் திரும்பியது. படங்கள் எடுத்து முன்னேற வேண்டும் என்று அவர் ஏராளமாகப் பணம் செலவு செய்தார்.

அவரது நல்ல உள்ளம், திருவனந்தபுரத்தில் வந்து தங்கிய புதுமைப்பித்தனுக்கு அவருடைய இறுதிக்காலத்தில் தாராளமாக உதவிகள் புரிய இடமளித்தது. புதுமைப்பித்தனின் மரணம் வரை அவர் கூடவே இருந்து தேவைப்பட்ட உதவிகளைச் செய்தார் சிதம்பரம்.

அந்தச் சோக நாட்கள் பற்றியும் புதுமைப்பித்தனின் இறுதிச் சடங்குகள் குறித்தும் சிதம்பரம் உருக்கமான ஒரு கட்டுரை எழுதினார், அது கு. அழகிரிசாமியும் ரகுநாதனும் ஆசிரியர்களாகப் பணியாற்றிய சக்தி மாத இதழில் வெளி வந்தது. பிற்காலத்தில் வேறு இடங்களிலும் அக் கட்டுரை மறுபிரசுரம் பெற்றது.

நல்ல கலைஞனாக, கவிஞனாக, வளர்ந்திருக்க வேண்டிய எஸ். சிதம்பரம் அவருடைய இயல்புகளினாலும் விபரீதப் போக்குகளினாலும் பாழாகிப்போனார். அவருடைய போக்குகளைச் சகிக்க முடியாத அவரது சித்தப்பா தமது சொத்துக்களுக்கு வாரிசாக ஒரு தத்துப் பிள்ளையை வரித்துக் கொண்டார். சிதம்பரத்தின் அப்பாவும் தமது பேரக்குழந்தைகளைத் தம் சொத்துக்களுக்கு உரிய வாரிசுகள் என்று பதிவு செய்துவிட்டார்.

விரக்தி அடைந்த சிதம்பரம் பெங்களூரில் தங்கித் தறிகெட்ட முறையில் வாழ முயன்றார். சினிமா போட்டோகிரபி பயிற்சி பெறுகிறேன் என்று பணத்தை வீண்செலவுகளில் வாரி இறைத்தார். சரத் சந்திரரின் கதாபாத்திரமான தேவதாஸ் மாதிரி, சதா குடித்துக்குடித்து, தம்மை மறந்த நிலையில் திரிந்து முடிவில் செத்துப் போனார், அனுதாபத்துக்கு உரிய நண்பர். அவருடைய நினைவு என்றும் என் உள்ளத்தில் அழிக்க முடியாத சோக நிழலாய்ப் பதிந்திருக்கிறது.

எனது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்ததை ஒட்டிய சோக வரலாறு இது.

மூன்றாவது புத்தகம் தான் 'பாரதிதாசன் உவமை நயம்'. முல்லை முத்தையா, கமலா பிரசுரம் வெளியீடாகப் பிரசுரித்தார்.

உங்கள் எழுத்துக்களை நீங்களே புத்தகங்களாக வெளியிடலாமே என்று அச்சகத் தோழர்கள் ஊக்குவித்தார்கள். புத்தகங்கள் பிரசுரிப்பது பற்றி நான் பெரிய கனவுகளை வளர்த்துவந்தேன். அவற்றைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பொருளாதார வசதிகள் இல்லை. இருப்பினும் சிறுசிறு பிரசுரங்கள் வெளியிடலாம் என்ற எண்ணம் எழுந்தது.

முதலில், புதுமையாக இருக்கும் என்ற நினைப்புடன் நையாண்டி பாரதி எழுதிய நாவல் 'குஞ்சாலாடு' அச்சாயிற்று, சாந்தி நிலையம் வெளியீடு என்ற முத்திரையுடன்.

கிராம ஊழியன் அச்சகத்திலேயே அது தயாராயிற்று. அச்சுக் கூலி, காகிதச் செலவு முதலியவைகளில் ரெட்டியார் தாராள சலுகை காட்டி உதவினார். அச்சுத் தோழர்கள் உற்சாகமாக வேலை செய்தார்கள். குஞ்சாலாடு நாவல் நல்ல வரவேற்பைப் பெற்றது.

அடுத்து, சிந்தனை விழிப்பூட்டும் சிறு பிரசுரங்களை வெளியிட வேண்டும் என்று எண்ணினேன். தமிழ்நாட்டில் சிந்தனை விழிப்பு ஏற்பட்டு வளர்ந்து கொண்டிருந்த காலம் அது. பெரியார் ஈ.வெ.ரா.வின் சூடும் சுவையும் நிறைந்த சொற்பொழிவுகள், கட்டுரைகள், சி.என். அண்ணாதுரையின் எழுத்துக்கள் மற்றும் திராவிட இயக்க இளைஞர்களின் எழுத்துக்கள். பொதுஉடைமை இயக்கச் சிந்தனை வெளியீடுகள், பல்வேறு பத்திரிகைகள் எல்லாம் மக்களுக்கு அறிவுச் சுடர் ஏற்றி வந்தன. எந்த இயக்கத்திலும் சேர்ந்திராத எழுத்தாளர்களும் சுயசிந்தனை வெளிப்பாடுகளாகவும் அனுபவப் பதிவுகளாகவும் கட்டுரைகள், கதைகள், புத்தகங்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். சாதி, மதம், கடவுள்கள் பெயரால் நாட்டில் பரவி வந்தள்ள அக்கிரமங்கள், அநியாயங்கள், மூடநம்பிக்கைகள் முதலியவற்றை வெளிப்படுத்தும் தன்மையில் அவை இருந்தன. சமூகத்தில் ஏற்றம் பெற்றுள்ளவர்களின் மனிதநேயமற்ற செயல்களையும், வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்டோரின் அவலநிலைமையையும் எடுத்துச் சொல்லின.

புதுமைப்பித்தன் கதைகள், பாரதிதாசன் கவிதைகள், தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதைக் கருத்துக்கள் இந்த விதமான சிந்தனை ஒளியைப் பரப்பின. 'கோவைகிழார்' என்ற பெயரில் சி.எம்.ராமச்சந்திரன் செட்டியார் என்ற எழுத்தாளர், அறநிலையத் துறையில் பணிபுரிந்த காலத்தில், பல ஊர் கோயில்களிலும் கண்டறிந்த சிறுமைச் செயல்களையும் சீர்குலைவுகளையும் சுவாரசியமாக வெளிச்சப்படுத்தியிருந்தார் 'கோயில் பெருச்சாளிகள்' என்ற புத்தகத்தில்.

இவற்றால் எல்லாம் தாக்கம் பெற்றிருந்த நானும் 'கோயில்களை மூடுங்கள்!' என்ற சிறுபுத்தகத்தை எழுதினேன். இலக்கிய ஆதாரங்களையும், சமூக நடவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு விறுவிறுப்பான நடையில் எழுதப்பட்ட சிந்தனை நூல் அது. கோரநாதன் எழுதியது - சாந்தி நிலைய வெளியீடு எனப் பிரசுரிக்கப்பட்டது. சுடச்சுடப் பரப்பப்பெற்ற எண்ணங்களும் வேகமான நடையும் வாசகர்களைப் பெரிதும் ஈர்த்தன. புத்தகத்தின் பெயரும்தான்.

நாங்களே எதிர்பார்க்கவில்லை- எட்டணா விலையில் வெளியிடப்பட்ட ஆயிரம் பிரதிகள் பதினைந்தே நாட்களில் விற்பனையாகிவிட்டன. மேலும் மேலும் பல ஊர்களிலுமிருந்து வந்த தேவைக்குரல் அச்சகத் தோழர்களுக்கு மிகுந்த உற்சாகம் தந்தது. அவர்கள் ஊக்கத்தோடு உழைத்து உடனடியாக இரண்டாம் பதிப்பாக ஆயிரம் பிரதிகள் தயாரித்துத் தந்தார்கள். அவையும் ஒருமாதத்தில் விற்பனையாகித் தீர்ந்தன.

எனவே, மூன்றாவது பதிப்பு அச்சிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. இப்போது புத்தகத்தின் விலையை ஆறணாவாக நிர்ணயித்தோம். லாபம் பெரிதல்ல; எண்ணங்கள் எங்கும் பரவவேண்டும் என்பதே எங்கள் நோக்கமாக இருந்தது.

அச்சகத் தோழர்கள் கூட்டுச் சேர்ந்து 'எரிமலைப் பதிப்பகம்' என்ற பெயரில் புத்தக வெளியீட்டு முயற்சியைத் தொடங்கினார்கள். அதன் முதல் வெளியீடாக கோரநாதன் புத்தகத்தையே பிரசுரிக்க ஆசைப்பட்டார்கள். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகச் 'சினிமாவில் கடவுள்கள்' என்ற சிறுநூலை எழுதிக் கொடுத்தேன். இதுவும் மூன்று பதிப்புகள் பிரசுரம் பெற்றது.

சாந்தி நிலையம் வெளியீடுகளாக ஈட்டிமுனை, அடியுங்கள் சாவுமணி! ஓடிப்போனவள் கதை ஆகியவை பிரசுரிக்கப்பட்டன. சாந்தி நிலையம் என்னுடைய எழுத்துக்களைப் புத்தகங்களாக்குவதற்காகவே அமைக்கப்பட்டது.

தோழர்களின் கூட்டுமுயற்சியான எரிமலைப் பதிப்பகம் பலபேர்களது எழுத்து முயற்சிகளையும் புத்தகங்களாக்கி வெளியிடும் நோக்குடன் அமைந்தது. எனவே, அப்போதுதான் எழுத்தில் ஆர்வம் கொண்டு சிந்தனை நூல்கள் எழுதுவதில் ஊக்கம் காட்டிய திராவிட இயக்க மேடைப் பேச்சாளர்களின் எழுத்துக்களை அச்சகத் தோழர்கள் வரவேற்றுப் புத்தகங்களாக்கினார்கள். சாணக்கியன் செயல்களைக் கண்டித்தும் விமர்சித்தும் மு. கருணாநிதி எழுதிய 'பலிபீடம் நோக்கி' என்ற நாடகம், புராணகாலக் கடவுளர்கள் பற்றித் தில்லை வில்லாளன் எழுதிய 'சாவோலை' முதலிய சிறுநூல்கள் எரிமலைப் பதிப்பகம் வெளியீடுகளாக வந்தன. சி.என். அண்ணாதுரை எழுதித் 'திராவிட நாடு' இதழில் வெளிவந்த கட்டுரை, கதைகள் சிலவற்றையும் தோழர்கள் புத்தகமாக்கி வெளியிட்டார்கள். அப்படிப் பிரசுரம் செய்தவற்றில் 'எட்டுநாட்கள்' என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தகுந்தது ஆகும்.

இவ்விதமாக, சாதாரண ஊராக இருந்த துறையூர் பலவகைகளில் முக்கியத்துவம் பெறுவதற்குக் காலம் வகைசெய்தது.

19

துறையூருக்கும் திருச்சிக்கும் இடையே 28 மைல் தூரம். தனியார் கம்பெனி ஒன்று பஸ் விட்டுப் போக்குவரத்துக்கு உதவிக் கொண்டிருந்தது. இரண்டே பஸ்கள், யுத்த காலம் என்று பெட்ரோல் தட்டுப்பாடு காரணமாக அநேக பஸ்கள் கரிவண்டிகளாக மாற்றப்பட்டிருந்தன.

பஸ்ஸின் பின் பக்கம் பாய்லர் போன்ற அமைப்பு இருக்கும். அதில் கரித்துண்டுகளைப் போட்டு நிரப்பி, நெருப்பு வைத்து, சூடேற்றுவதற்காக ஒரு

கைப்பிடி கொண்ட ஓர் அமைப்பை வெகுநேரம் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். மோட்டர் போதிய சூடு பெற்றதும் பஸ் புறப்படத் தயாராகும்.

பஸ்ஸில் எப்போதும் நெருக்கடிதான். பயணிகள் டிக்கட் வாங்கிக் கொண்டு ஏறுவது சிரமமாகவே இருந்தது. பொதுவாக, கிராம ஊழியன் அலுவலகத்துக்கு யாரும் வெளியூரிலிருந்து வருவதில்லை. நானும் அதிகமாக வெளியூர் போவதில்லை. திருச்சியில் டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகங்கள் நடைபெற்றபோது, அவ்வப்போது போய் வர நேரிட்டது.

என் தம்பி முருகேசன் துறையூர் வந்து சில மாதங்கள் தங்கியிருந்தான். அவனுக்கு இருமல் கண்டது. அது காசநோய் என்று டாக்டர் தெரிவித்தார். அவன் ராஜவல்லிபுரம் போனான். அங்கு நோய் முற்றி விரைவிலேயே மரணம் அடைந்தான் 1946இல். அப்போது அவனுக்கு வயது 22.

என் அண்ணா கோமதி நாயகம் துறையூர் வந்து சில மாதங்கள் தங்கியிருந்தார். தி.க. சிவசங்கரன் ஒருமுறை வந்தார். எஸ். சிதம்பரம் ஒரு தடவை வந்துபோனார். யாழ்ப்பாணம் எழுத்தாளர் சோ. தியாகராசன் துறையூருக்கு விசேஷமாக வந்தார். இவர் சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் தம்பியாவார். 'சோதி'யின் கவிதைகள் கிராம ஊழியனில் பிரசுரம் பெற்றிருந்தன.

ந. பிச்சமூர்த்தி செட்டிகுளம் கோயிலில் இருந்து மாற்றப்பட்டு ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாகியாகப் போய்விட்டார். அதனால் அவர் துறையூருக்கு வரவேண்டிய அவசியம் இல்லாது போயிற்று.

திருச்சி வானொலி நிலையம் எப்பவாவது எனக்குப் பேசும் வாய்ப்பு அளித்தது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்ற ரீதியில் இருக்கும். அதற்காக நான் திருச்சி போய் வர நேரும்.

டி.கே.எஸ். சகோதரர்கள் தங்கள் நாடக முகாமைக் கோயம்புத்தூருக்கு மாற்றிக்கொண்டார்கள். அவர்கள் அங்குச் சென்ற சில வாரங்களில், டி.கே. சண்முகம் எனக்குக் கடிதம் எழுதினார். 'கோவையில் 'பில்கணன்' நாடகம் அரங்கேற இருக்கிறது. நீங்கள் இதை அவசியம் பார்க்க வேண்டும். நாடக ஆசிரியர் ஏ.எஸ்.ஏ. சாமி இங்குதான் இருக்கிறார். அவர் உங்களோடு ஒரு முக்கிய விஷயமாகப் பேச விரும்புகிறார். நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால் நல்லது' என்ற எழுதியிருந்தார்.

கோவை போனேன். சினிமா உலகம் அப்போதும் கோவையில் தான் நடந்து வந்தது. என் அண்ணா கோமதி நாயகம் அதில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். நான் அண்ணாவுடன் தங்கினேன்.

பில்கணன் நாடகம் பார்த்தோம். மறுநாள் டி.கே. சண்முகம் என்னை ஏ.எஸ்.ஏ. சாமிக்கு அறிமுகப்படுத்தினார். அவரும் உடனிருக்க, சாமி தனது விருப்பத்தைக் கூறினார்.

ஜுபிடர் பிக்சர்ஸ் எனும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் அப்போது கோவையில் இயங்கிக் கொண்டிருந்தது. யுத்த காலம் என்ற வேறு சில திரைப்படக் கம்பெனிகளும் கோவை சேர்ந்து படத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தன.

பில்கணன் கதை ஜுபிடர் பிக்சர்ஸ் படமாகத் தயாரிக்கப்பட இருந்தது. அது ஏ.எஸ்.ஏ. சாமி எழுதியது. அதை அவரே இயக்குவதாகவும் பேசப்பட்டது. அத்துடன் வேறு சில படங்களும் அவரது இயக்கத்தில் தயாரிக்கப்படலாம் என்ற நிலை. மொத்தம் ஆறு படங்கள்.

ஏ.எஸ்.ஏ. சாமி சொன்னார்: பில்கணன் படத்துக்கு வசனம் எழுத நீங்கள் உதவ வேண்டும். மற்றப் படங்களுக்கும் - மொத்தம் ஆறு படங்களுக்கு- நீங்கள் வசனம் எழுத வேண்டும். உரிய பணம் உங்களுக்குத் தரப்படும். ஆனால், திரையில் கதை-வசனம் ஏ.எஸ்.ஏ. சாமி என்றுதான் வரும். உங்கள் பெயர் வராது. நீங்கள் இதற்குச் சம்மதிப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

நான் சம்மதிக்கவில்லை. அவர் பேரம் பேசிய விதமே எனக்குப் பிடிக்கவில்லை.

சாமி மேலும் சொன்னார்: இவற்றுக்கு மாற்றாக நான் உங்களுக்கு ஒரு பெரிய உதவி செய்வேன். மதுரை பிலிம் கம்பெனி ஒன்று ரத்னகுமார் என்ற படம் தயாரிக்கிறது. அதற்குக் கதை வசனம் டைரக்ஷன் பொறுப்பும் எனக்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படத்துக்கும் நீங்களே வசனம் எழுதலாம். உங்களுக்குத் தாராளமாகப் பணம் கிடைக்க நான் ஏற்பாடு செய்வேன். திரையில் கதை-வசனம் என்று உங்கள் பெயர் வரவும் உதவுவேன்.

'சினிமாவுக்குக் கதை வசனம் எழுதி முன்னேற வேண்டும் என்கிற ஆசை எனக்கு இல்லை. அதனால் உங்கள் உதவியை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை' என்று உறுதியாய்க் கூறினேன்.

'ஏன்? இது நல்ல வாய்ப்பு. இது மாதிரி வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்காது' என்று சாமி கூறினார்.

'சினிமா வாய்ப்புகள் எனக்கு வேண்டாம். இலக்கியத் துறையில் தான் எனது நாட்டம் இருக்கிறது. இலக்கியப் பத்திரிகையில் எழுதி வளர்ச்சி பெற வேண்டும் என்பது தான் என் ஆசை' என்றேன்.

'பத்திரிகை வேலையை நீங்கள் விட வேண்டாம். துறையூரில் பத்திரிகை வேலையைக் கவனிப்பதுடன், அவ்வப்போது இங்கே வந்து சினிமாப் பணியையும் கவனிக்கலாமே? உங்கள் வசதிப்படி வந்து போக நான் ஏற்பாடுகள் செய்வேன்' என்று சாமி ஆசைகாட்டினார்.

'வேண்டாம். எனக்கு இதில் விருப்பம் இல்லை. சினிமாத் துறையில் ஈடுபட எனக்கு மனமே இல்லை' என்று கண்டிப்பாய்த் தெரிவித்துவிட்டேன்.

'சாமி சொல்கிறபடி நீங்கள் செய்யலாம். பத்திரிகையையும் கவனித்துக் கொண்டு, சினிமாப் படங்களுக்கும் எழுதித் தரலாமே. உங்களுக்கு நல்லது தானே இந்த ஏற்பாடு' என்று டி.கே. சண்முகமும் பரிந்துரைந்தார்.

ஆயினும் நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இலக்கிய எழுத்தாளனாக வளர வேண்டும் என்பதுதான் என் விருப்பம்; சினிமா உலகம் எனக்கு அதற்குத் துணை புரியாது; தடங்கலாகத்தான் இருக்கும். அதனால் அது வேண்டாம் என்று திடமாகக் கூறி மறுத்துவிட்டேன்.

நண்பர் சண்முகம் பிறகு தனியாகச் சொன்னார்: இந்த ஏற்பாட்டுக்கு நீங்கள் சம்மதித்திருக்கலாம். பணம் தாராளமாகக் கிடைக்கும். பிறகு பெயர் தானாக வரும் என்றார்.

எனக்கு இந்த ஏற்பாடே பிடிக்கவில்லை என்று சொன்னேன். அவர் மவுனமாகச் சிரித்தார். 'இந்தக் காலத்தில் இப்படியும் இருக்கிறானே, பிழைக்கத் தெரியாதவன்!' என்று அவர் எண்ணுவது போலிருந்தன அவர் பார்வையும் சிரிப்பும்.

நான் துறையூர் சேர்ந்து வழக்கமான என் பணிகளில் ஆழ்ந்தேன். துறையூரின் தனிமைச் சூழ்நிலையும் அமைதியான வாழ்க்கைமுறைகளும் எனக்கு வெகுவாகப் பிடித்திருந்தன.

அவை அ.வெ.ர.கி. ரெட்டியாருக்கு அலுப்புத்தந்தன என்றே தோன்றியது. அவர் திருச்சி நகருக்கே குடியேற வேண்டும் என்று திட்டமிடத் தொடங்கினார். திருச்சியில் திருலோக சீதாராம் அச்சகத் தொழிலிலும், சிவாஜி வாரப் பத்திரிகை வெளியீட்டிலும் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருந்தது ரெட்டியாரின் ஆசைகளைத் தூண்டியிருக்க வேண்டும்.

கிராம ஊழியன் பத்திரிகை எழுத்தாளர்கள். பதிப்பகத்தார்கள். பத்திரிகைத் துறையினரிடையே கவனிப்புக்குரிய இதழாக இருந்தது. ஆனால் பொருளாதார ரீதியில் அது லாபகரமாக இயங்கவில்லை. ஆகவே ஏதாவது மாறுதல்கள் செய்ய வேண்டும் என்று ரெட்டியார் விரும்பினார். ஊழியன் அச்சகமும் நல்ல வருவாய் பெற்றுத் தரவில்லை. அதனால், அச்சு யந்திரங்களை விற்றுவிடலாம் என அவர் திட்டமிட்டார்.

பல மாதங்களாகத் திட்டமிட்டு, தேவையான நட்வடிக்கைகளை மேற்கொண்டு செயலாற்றி, யந்திரங்களையும் அச்சகச் சாமான்களையும் நல்ல லாபத்துக்கு விற்றுவிட்டார் ரெட்டியார்.

அப்படி விற்பதற்கு முன்னதாக, வெளிவந்த கிராம ஊழியன் இதழில் அறிவிப்பு செய்யப்பட்டது. வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கருதி, கிராம ஊழியன் பத்திரிகையைத் திருச்சிக்கு இடமாற்றம் செய்வதற்கான

ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நல்ல பல மாறுதல்களுடன் ஊழியன் திருச்சியில் இருந்து வெளிவரும். வரும் தேதி பற்றிப் பின்னர் அறிவிப்போம் என்று அந்த அறிக்கை கூறியது. அதுதான் கிராம ஊழியன் கடைசி இதழ். அது வெளியான தேதி 1947 மே15.

கிராம ஊழியன் நின்று விட்ட பிறகும், நான் பல மாத காலம் துறையூரிலேயே வசித்தேன். 'சாந்தி நிலைய வெளியீடுகள்' நன்கு விற்பனையாகிக் கொண்டிருந்தன.

அந்தச் சமயத்தில் இரண்டாயிரம் ரூபாய் இருந்தால் எனது எழுத்துக்களைப் புத்தகங்களாக வெளியிடும் முயற்சியைத் தீவிரப்படுத்தி, நல்ல நல்ல புத்தகங்களைப் பிரசுரித்திருக்கலாம். ஆனால் ஆயிரம் ரூபாய்கூடக் கிடைக்க வழிஇல்லை. அதனால் நூல் வெளியீட்டுத் திட்டம் வளராமலே இருந்தது.

துறையூரில் தனியாக இருப்பதைவிட, சென்னைக்கே வந்துவிடலாம். புத்தகங்கள் வெளியிட விரும்பினால், சென்னையிலிருந்தே அதைச் செய்யலாம் என்று என் அண்ணா எழுதினார். சினிமா உலகம் 1946 இறுதியில் மீண்டும் சென்னைக்கே வந்திருந்தது.

1947 ஆகஸ்டில் இந்தியா சுதந்திரம் பெற்றது. அந்நிகழ்ச்சி சென்னையில் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. சுதந்திரத் திருவிழாக் கோலாகலங்களைக் கண்டு களிக்க நான் முன்கூட்டியே சென்னைக்கு வந்துவிடுவது நல்லது என்று என் அண்ணா அழைத்திருந்தார்.

ஆனாலும் அப்போது நான் சென்னைக்கு வரவில்லை. சுதந்திர தினக் கொண்டாட்டங்களின்போது நான் துறையூரில்தான் இருந்தேன்.

எனது சென்னைப் பயணத்தைத் தூரிதப்படுத்தும்படி வேறு சிலரும் தூண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் எம்.கே.டி. சுப்பிரமணியன் முக்கியமானவர். அவர் திராவிடக் கழகத்தைச் சேர்ந்திருந்தார். கோரநாதன் எழுத்துக்கள் அவரை வசீகரித்திருந்தன. அந்நாட்களில் பலரும் உற்சாகமாகப் பத்திரிகைகள் ஆரம்பித்து நடத்தினார்கள். எம்.கே.டி. சுப்பிரமணியனும், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்காக ஒரு பத்திரிகை நடத்த ஆசைப்பட்டார். அதற்குக் கோரநாதனை ஆசிரியராக்க வேண்டும் என அவர் விரும்பினார்.

கோரநாதன் திராவிடக் கழக இயக்கத்தை ஆதரித்து எழுதியதில்லை. ஆயினும் கோரநாதன் சிந்தனைகளும் எழுத்தும் பகுத்தறிவுக் கொள்கைகளுக்குச் சாதகமாக இருந்தன. கோரநாதன் எழுத்துக்கள் வேகமும் விறுவிறுப்பும், சூடும் சுவையும் கொண்டு வாசகர்களைப் பெரிதும் ஈர்த்தன.

இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார் எம்.கே.டி. சுப்பிரமணியன். எனக்குத் திரும்பத் திரும்பக் கடிதங்கள் எழுதினார்.

'இங்கே நீங்கள் சும்மா இருப்பதை விட, சென்னைக்குப் போய் இந்தப் புதிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாம். உங்கள் எண்ணங்களும் எழுத்தும் எங்கும் பரவ புதிய பத்திரிகை உதவக்கூடும்' என்று துறையூர் அச்சுத்தொழிலாள நண்பர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

எனக்கும் அது சரி என்றே பட்டது. நான் எந்த அரசியல் கட்சியையோ, இயக்கத்தையோ சார்ந்திருக்கவில்லை. என் இஷ்டம்போல் எனக்குச் சரி என்று பட்டதை அழுத்தமாகப் பதிவு செய்கிறேன். கோரநாதன் எழுத்துக்கள் சுதந்திரமானவையாகத்தான் இருக்கும் என்று கூறினேன். எம்.கே.டி. சுப்பிரமணியன் என் கருத்தை ஏற்றுக் கொண்டார். முதலில் சென்னைக்கு வந்து சேருங்கள் என அவசரப்படுத்தினார்.

1947 அக்டோபர் இறுதியில் நான் துறையூரை விடுத்து, சென்னைக்குப் புறப்பட்டேன். துறையூர் நண்பர்கள் பிரிவுபசாரக்கூட்டம், விருந்து எல்லாம் நடத்தி, உற்சாகப்படுத்தி, வழிஅனுப்பி வைத்தார்கள்.

துறையூரில் நான் வசித்த வருடங்கள் மனோகரமான காலமாக அமைந்திருந்தது. என் வளர்ச்சிக்குத் துணை புரிந்த இனிய பருவமாகவும் அது இருந்தது.

கிராம ஊழியன் நடந்து கொண்டிருந்த காலத்தில், இதழியல் துறையில் மிக முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. இதழியல் வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய, மிகத் தனித்தன்மை உடைய ஒரு நிகழ்ச்சி அது.

லட்சுமிகாந்தன் என்றொருவர் தமது எழுத்து மூலமும், தாம் கொடுக்கிற செய்திகள் மூலமும் பரபரப்பு ஏற்படுத்திப் பெயர் பெற ஆசைப்பட்டார். அதன் மூலம் பணம் பண்ணுவதும் அவருடைய நோக்கமாக இருந்திருக்கலாம். அந்தக் காலத்தில், நடந்துகொண்டிருந்த ஏதாவது ஒரு பத்திரிகையை வாங்கி, தமது நோக்கிற்கும் போக்கிற்கும் தக்கபடி அதைப் புதுப்பித்து வெளியிடத் திட்டமிட்டுச் சில பத்திரிகையாளர்களை அணுக முயன்றார். நின்று போயிருந்த 'சினிமா தூது' என்ற பத்திரிகை அவருக்குக் கிடைத்தது.

சினிமா தூதுவில், சினிமா நடிகர்கள் நடிகைகள், படத்தயாரிப்பாளர்கள் மற்றும் சினிமாத் தொழில் பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்துவதாக அறிவித்து, லட்சுமிகாந்தன் ஒளிவுமறைவில்லாமல் திரைமறைவு விஷயங்கள் பலவற்றையும் எழுதினார். வம்புகள், வதந்திகள், அவதூறுகள் தாராளமாக வழங்கப்பட்டன. பத்திரிகைக்குப் பரபரப்பான விற்பனை கிட்டியது. ஆனால் விரைவிலேயே பத்திரிகை தடை செய்யப்பட்டது.

லட்சுமிகாந்தன் ஓய்ந்துவிடவில்லை. 'இந்து நேசன்' என்ற வேறொரு பத்திரிகையை வாங்கி, தனது போக்கில் எழுதி வெளியிட்டார். புகழ் பெற்று விளங்கிய சினிமா நட்சத்திரங்கள், நடிகைகள், படாதிபதிகள், பிரபலஸ்தர்களின் வாழ்க்கை அந்தரங்கங்களை அம்பலப்படுத்தி விறுவிறுப்பாகத் தகவல்களும்

செய்திகளும் தந்து கொண்டிருந்தது இந்து நேசன். அதனாலேயே மக்களிடம் அது மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

நாளிதழான செய்திப் பத்திரிகையை இரண்டாக மடித்த அளவில் 4 பக்கங்கள்தான் இருக்கும். விலை 4 அணா. வாரம் தோறும் வெளிவந்தது. பத்திரிகை வருகிற நாளன்று கடைகள் முன் பெரும் கூட்டம் ஆவலோடு காத்து நின்றது. வந்த உடனேயே பிரதிகள் தீர்ந்துவிடும். பலருக்கு இதழ் கிடைக்காது.

'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'வதில் முனைப்பாக இருந்த விற்பனையாளர்கள் ஒரு பிரதியை ஒரு ரூபாய் விலைக்கு விற்றார்கள். அப்பவும் அதற்குக் கிராக்கிதான்.

ஒரு ரூபாய் கொடுத்து ஒரு பிரதி வாங்கியவர் அதைப் படித்து முடித்ததும் வாடகைக்குப் படிக்கக் கொடுத்தார். படிப்பதற்கு ஒரு நபருக்கு நான்கணா என்று வசூலித்தார். அதன் மூலம் அவருக்கு நல்ல வருமானம் கிடைத்தது.

இவ்விதம் வாடகைக்குப்பெற்றுப் படிக்கிறவர்களும், படிப்பதற்காகக் காத்திருந்தவர்களும் திருச்சி நகரின் பூங்காக்களிலும், ரயில்வே ஸ்டேஷனிலும், இதர முக்கிய இடங்களிலும் அதிகமாகவே தென்பட்டார்கள் அந்நாட்களில்.

இந்துநேசன் வெற்றிகரமாக நடந்துகொண்டிருந்தது. மக்களின் ருசியை-வாசக ரசனையைப்-புரிந்து கொண்டுள்ள வணிகநோக்குப் பத்திரிகைக்காரர்கள் இந்நாட்களிலும் இந்த உத்தியைக் கையாள்கிறார்கள். சினிமாக்காரர்கள் பற்றிய கிளுகிளுப்புச் செய்திகளையும், வதந்திகளையும் ஊகங்களையும் சுவாரசியமாக வழங்கி வாசகர்களை ஈர்க்கிறார்கள். அந்நாட்களில் இல்லாத வசதிகள் இந்நாளைய பத்திரிகைக்காரர்களுக்கு இருக்கின்றன. வசீகரிக்கும் 'போஸ்'களில் நடிகைகளையும் நடிகர்களையும் படம்பிடித்து, பளிச்சிடும் வர்ணங்களில் அச்சிட்டுக் கவர்ச்சி பண்ண முடிகிறது இப்போது.

திடீரென்று ஒருநாள் லட்சுமிகாந்தன் கொலை செய்யப்பட்டார். படஉலகப் பிரபலஸ்தர்கள் பலர் சந்தேகிக்கப்பட்டார்கள். அந்நாளைய மிகமுக்கிய நட்சத்திரங்களான எம்.கே.தியாகராஜ பாகவதரும் என்.எஸ். கிருஷ்ணனும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு, வழக்கு நடந்தது. பிறகு அவர்கள் தண்டிக்கப்பெற்றுச் சிறைவாசம் அனுபவித்தார்கள். அது வேறு வரலாறு.

இந்து நேசன் பத்திரிகை மஞ்சள் பத்திரிகை என இனம் காணப்பட்டது. அந்நாட்களில் 'புலனாய்வு இதழ்'கள் என்பன தோன்றியிருக்கவில்லை. பிற்காலத்தில் 'இன்வெஸ்டிகேஷன் ஜர்னல்' - புலனாய்வுப் பத்திரிகை-என்று பலப்பல இதழ்கள் தோன்றின. அவற்றில் அநேகம் 'மஞ்சள் பத்திரிகை' தரத்திலேயே இருந்தன என்று சொல்லலாம்.

20

நான் சென்னை சேர்ந்து என் அண்ணாவுடன் சினிமா உலகம் அலுவலகத்தில் தங்கினேன்.

அந்த அலுவலகம், மவுண்ட் ரோடை (தற்போதைய அண்ணா சாலை) அடுத்த ஜெனரல் பேட்டர்ஸ் ரோடில் உள்ள சுபத்ராபாய் மேன்ஷன் என்ற விஸ்தாரமான இடத்தில் ஒரு பகுதியில் இருந்தது. இந்த வளாகமே ஒரு தனி உலகம் போல் இருந்தது. அநேக மோட்டார்கள் பழுது பார்க்கும் பட்டறைகள், பலவிதமான அலுவலகங்கள், சில சினிமா கம்பெனிகள், ஃப்ரீ இண்டியா என்கிற ஆங்கில வாரப் பத்திரிகை அலுவலகம் - அச்சகம் - இப்படிப் பல்வேறு நிறுவனங்கள் அங்கு இயங்கிக் கொண்டிருந்தன. நீண்ட வரிசையான கட்டிடத்தில், ஒரு மூலையில் இருந்த விசாலமான தனிப் பகுதியில் சினிமா உலகம் ஆபீஸ். அதன் முன்பக்கம் ஆர்ட்டிஸ்ட் வேந்தன் தொழில் புரிந்துகொண்டிருந்தார்.

சினிமா சம்பந்தமான போஸ்டர்கள், விளம்பரங்களுக்கான படங்கள் தயாரித்துக் கொடுப்பது வேந்தன் வேலை. போட்டோக்களை வெட்டி ஒட்டி, கலர்கள் தீட்டி வசீகரமாக அவற்றை அவர் தயாரிப்பார். அதில் அவருக்கு நல்ல வருமானம். நாலைந்து உதவியாளர்களை வைத்துக்கொண்டு, அவர்களுக்குக் கணிசமான சம்பளம் கொடுக்கவும், இட வாடகை முதலியன தரவும், அவர் தாராளமாகச் செலவு செய்யவும் அவருக்குப் பணம் கிடைத்துக்கொண்டிருந்தது. அவரும் அவருடைய ஆட்களும் இரவில் வெகுநேரம் வரை வேலை செய்துகொண்டிருப்பார்கள்.

இதர சில அலுவலகங்களிலும் இரவு வேலை நடைபெறும். அதனால் அந்த வளாகம் இரவிலும் பரபரப்பாகவும் பலவித ஓசைகளோடும் விளங்கும். வேறொரு மூலைப்பகுதியில் 'கண்ணா பிலிம்ஸ்' என்ற படக்கம்பெனி செயலாற்றியது. அதில் கவிஞர் ச.து.சு. யோகி தங்கியிருந்தார்.

சினிமா உலகம் இருந்த கட்டிட வரிசையில், வேறொரு பகுதியில் 'எபிஷியன்ட் பப்ளிஸிட்டீஸ்' எனும் விளம்பர ஆலோசகர்கள் நிறுவனம் தொழில்புரிந்து வந்தது. அதை நான்கு சகோதரர்கள் கவனித்துவந்தார்கள். தொழில்துறையினர், வணிகர்கள், சினிமா கம்பெனிக்காரர்கள் முதலியவர்கள் தங்களுடைய விளம்பரங்களை இவர்கள் மூலம் பத்திரிகைகளில் வெளியிடுவார்கள். பத்திரிகைத்துறை வளர்ச்சியோடு புதிதாகத் தோன்றி லாபகரமாக வளர்ந்து வந்த தொழில்முறைகளில் இந்த 'அட்வர்டைசிங் கன்சல்டன்ட்ஸ்' எனும் தொழிலும் ஒன்று ஆகும். இப்படிப்பட்ட நிறுவனங்கள் நாகரிகப் பெருநகரங்களில் வளத்தோடு தொழில் புரிந்து பிரகாசிக்கின்றன. சில மிகப்பெரிய அமைப்புகளாக வளர்ந்துள்ளன.

அவ்வகையில் வளர்ந்து கொண்டிருந்த சிறிய நிறுவனம் 'எபிஷியன்ட் பப்ளிஸிட்டீஸ் பிரைவேட் லிமிட்டெட்.' இதை நிர்வகித்த சகோதரர்களில் இரண்டுபேர் ஆழ்ந்த இலக்கிய ரசிகர்களாகவும் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம் மிக்கவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ராமச்சந்திரன், கணபதி என்ற பெயருடையவர்கள்.

விளம்பரங்களுக்கான படங்கள், டிசைன்கள் தயாரிப்பதற்காக அவர்கள் அடிக்கடி வேந்தனை நாடி வருவார்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கி விஷயங்கள் எழுதுவதற்காக என் அண்ணாவின் உதவியைப் பெறுவார்கள். இருவரில் கணபதி ஐயர் எல்லோரிடமும் இயல்பாகப் பேசிப் பழகி இனிமையாகப் பொழுதுபோக்குவார். எங்களிடம் புத்தகங்கள் பற்றிச் சுவாரசியமாக உரையாடுவார்.

நான் சென்னைக்கு வந்ததும், எம்.கே.டி சுப்பிரமணியன் என்னுடன் தொடர்புகொண்டார். அவர் நடத்தத் திட்டமிட்ட பத்திரிகையின் பெயர் 'தீப்பொறி'. மாதம் இருமுறை வெளிவரும் இதழ். ஆசிரியர்-கோரநாதன் என்று விளம்பரங்கள் செய்யப்பட்டன.

பத்திரிகை வெளிவந்தது. சூடான, சிந்தனையைத் தூண்டும் விஷயங்கள் நிறைந்திருந்தன. கோரநாதன் எழுதியவை பல. வேறு சிலர் எழுதிய கட்டுரைகளும் உண்டு. அந்தக் காலகட்டத்தில், பத்திரிகை தொடங்கி நடத்த வேண்டும் என்ற உந்துதல் மிகப்பலருக்கு ஏற்பட்டிருந்தது. திராவிட இயக்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பேச்சாளரும் தனித்தனியே பத்திரிகை ஆரம்பித்து நடத்தினார்கள். எல்லாம் வெகுகாலம் நீடித்து உயிரோடிருந்தன என்று சொல்வதற்கில்லை.

எம்.கே.டி. சுப்பிரமணியன் ஆரம்பித்த 'தீப்பொறி'யும் நெடுங்காலம் சுடர் பரப்பவில்லை. அவர் எதிர்ப்பார்த்தபடி அவருடைய குடும்பத்தினர் அவருக்குப் பண உதவி பண்ண மனம் கொள்ளவில்லை. அவர் எப்படியோ முயன்று சிரமப்பட்டுப் பணம் புரட்டிச் சிறிது காலம் பத்திரிகையைக் கொண்டுவந்தார். பத்து இதழ்களுக்கு மேல் அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தீப்பொறி பத்தாவது இதழுடன் அணைந்து அடங்கிவிட்டது.

இதனால் எனக்கு நஷ்டம் எதுவுமில்லை. ஒரு விளையாட்டு மாதிரித் தோன்றியது இம் முயற்சி. அது நின்றுபோனதும் நல்லதுதான் என்ற நினைப்பே எனக்கு எழுந்தது.

எம். சூரி என்பவர் அடிக்கடி சினிமா உலகம் அலுவலகத்துக்கு வருவார். அவர் சிறு அச்சகம் ஒன்று வைத்திருந்தார். சிறுசிறு புத்தகங்கள் வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டி வந்தார். என் அண்ணா அசோகன் தமிழாக்கிய கொகோல் (ரஷ்ய எழுத்தாளர்) கதை ஒன்றை 'அன்று இரவு' எனும் சிறுபுத்தகமாகப் பிரசுரம் செய்திருந்தார்.

அவர் எனது எழுத்துக்களையும் சிறுசிறு வெளியீடுகளாக வெளியிட விரும்பினார். அவருக்காக 'அவள் ஒரு எக்ஸ்ட்ரா' (சினிமா துணை நடிகை பற்றியது), 'ராதை சிரித்தாள்' போன்ற கதைகள் எழுதிக்கொடுத்தேன். அவை இருபத்து நான்கு பக்கங்கள், முப்பது பக்கங்கள் என்ற அளவில் புத்தகங்களாக வெளிவந்தன.

சென்னைக்கு வந்த பிறகும் நான் புத்தக வெளியீட்டு முயற்சியில் ஓரளவு ஈடுபட்டேன். துறையூரில் சில வசதிகள் இருந்தன. ஊழியன் பிரஸ் அச்சுக் கூலியில் சலுகை காட்டியது. அச்சகத் தோழர்களும் பலவகைகளில் ஒத்துழைப்புத் தந்து உதவினார்கள். சென்னையில் அவ்வசதிகள் இல்லை. ஆயினும் நண்பர் சூரி அவரால் இயன்ற அளவு உதவிகள் புரிந்தார்.

'ஒய்யாரி' (சிறுகதை), 'நாசகாரக்கும்பல்' (நையாண்டி பாரதி நாடகம்), அறிவின் கேள்வி' (கோரநாதன்)-இப்படிச் சில சிறுபிரசுரங்கள் வெளியிட்டேன். 'சாந்தி நிலைய' வெளியீடுகள் முன்பு போல் வேக விற்பனை பெறவில்லை. இருப்பினும் பணம் கிடைத்துக் கொண்டுதானிருந்தது. தாராளமாகப் புத்தகங்கள் வாங்க முடிந்தது.

அண்ணாவும் நானும் ஆங்கிலப் புத்தகங்கள் அதிகம் வாங்கினோம். 'ராண்டம் ஹவுஸ் புக்ஸ்' என்றும், 'மாடர்ன் லைபிரரி எடிஷன்ஸ்' என்றும் அமெரிக்க வெளியீடுகள் வந்து கொண்டிருந்தன. ஐந்து ரூபாய் விலையில், அழகான கட்டமைப்பில், உலக இலக்கியங்கள் பலவும் கிடைத்தன. பெரிய புத்தகமாக இருந்தால், 'ஜெயன்ட் எடிஷன்' என்று பத்து ரூபாய் விலையில் விற்கப்பட்டன. உயர்ந்த இலக்கிய நூல்களை அப்படி வாங்க முடிந்தது. ரஷ்ய இலக்கியங்கள் சோவியத் வெளியீடுகளாகக் குறைவான விலைக்குக் கிடைத்தன. பெங்குவின் புத்தகங்கள், பெயர்பெற்ற ஆசிரியர்களின் நூல்களை, செட் செட்டாகப் (பத்துப் புத்தகங்கள், எட்டு நூல்கள் என்ற தன்மையில்) பிரசுரம் செய்தன. அவ்வகையில் பெர்னாட் ஷா, டி.எச். லாரன்ஸ், எச்.ஜி. வெல்ஸ் போன்ற படைப்பாளிகளின் நூல்களை மலிவான விலைக்கு வாங்க முடிந்தது. கிடைக்கிற போது புத்தகங்களை வாங்கி வைத்துவிட்டால், படிக்க முடிகிறபோது படித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு நாங்கள் புத்தகங்களைத் தொடர்ந்து வாங்கிக்கொண்டிருந்தோம்.

படிக்கவும் செய்தோம். ஓவியர் வேந்தன் இரவில் வெகு நேரம் வரை விழித்திருந்து உழைத்தது எங்களுக்கும் ஒரு உந்துதலாக இருந்தது. பத்தரை-பதினோரு மணி ஆகும் போது, 'என்ன, டீ சாப்பிடப் போகலாமே?' என்பார் வேந்தன். மவுண்ட் ரோடு ஈரானி ஓட்டலுக்குப் போய் தேநீர் அருந்திவிட்டு மெதுவாகப்பேசிக்கொண்டே நடந்து வருவது மனோகரமான அனுபவமாக இருந்தது. பின்னர் பன்னிரண்டு மணி வரை படிப்போம்.

அலுப்புத் தட்டுவது போலிருந்தால், 'என்ன, பிக்சருக்குப் போகலாமே?' என்று வேந்தன் அழைப்பார். தியேட்டர்கள் அருகிலேயே இருந்தன, ஓடியன்,

வெலிங்டன், காசினோ, கெயிட்டி, எல்பின்ஸ்டன் என்று. ஆங்கிலம், இந்தி, தமிழ்ப் படங்கள் ஓடின. நல்ல படம் எனத் தோன்றிய படங்கள் பலவற்றையும் இப்படிப் பார்த்து மகிழ்ந்தோம்.

பகல் வேளைகளில் பலரகமானவர்களும் வந்தார்கள். பத்திரிகையாளர்கள், புத்தகம் வெளியிடுவோர், எழுத்தாளர்களும் வந்தார்கள். வேந்தனை, அல்லது சினிமா உலகம் ஆசிரியர் பி.எஸ். செட்டியாரைப் பார்த்துப் பேசுவதற்காக. அவர்கள் என்னிடமும் உரையாடிச் சென்றார்கள்.

நான் யாரையும் பார்க்கப் போவதில்லை. அப்படிப் போய்ப் பார்க்க வேண்டும் என்று விரும்புவதுமில்லை. ஆனாலும் பல பத்திரிகைகளிலும் என் கதைகள் வந்து கொண்டிருந்தன. சில பணம் தந்தன. பல சன்மானம் என்று எதுவும் தருவதில்லை. அதைப் பற்றி நான் கவலைப்பட்டதுமில்லை. கேட்டவர்களுக்கெல்லாம் எழுதிக் கொடுத்தேன்.

சினிமா உலகம் பத்திரிகையில் என் எழுத்துக்கள் அதிகமாகவே வெளிவந்தன. திருச்சி 'சிவாஜி' பத்திரிகையிலும் தொடர் கதை, சிறுகதை, கட்டுரை என்று பிரசுரமாயின.

ஆங்கிலப் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் தமிழிலும் சிறப்பாக எழுதக் கூடியவர். 'நாணல்' என்ற பெயரில் கவிதைகள் எழுதினார். சிறுசிறு நாடகங்கள் எழுதியிருக்கிறார். அவர் 'சிந்தனை' என்ற பெயரில் ஒரு இலக்கியப் பத்திரிகை நடத்தினார். சென்னையிலிருந்து மாதந்தோறும் வெளிவந்த தரமான இதழ் அது. ஒவ்வொரு மாதமும் என் கதையைச் 'சிந்தனை' வெளியிட்டது. நீதிபதி எஸ். மகாராஜன் திருமூலர் பற்றிய அருமையான கட்டுரைகளை அதில் எழுதி வந்தார் 'சிந்தனை' ஒரு வருடம் தான் நடந்தது.

1948இல் கும்பகோணத்திலிருந்து எம்.வி.வெங்கட்ராம் 'தேனீ' என்ற மாத இதழை நடத்தினார். அதிலும் என் சிறுகதைகள் வந்தன. 'தேனீ'யும் ஒரு வருடம் தான் வெளிவந்தது.

இப்படி எத்தனையோ பத்திரிகைகள். ஆர்வத்தாலும், ஆசை காரணமாகவும் பத்திரிகைகளை ஆரம்பிப்பதும், தொடர்ந்து நடத்த முடியாமல் அவை 'அல்பாயுசில்' முடிந்து போவதும் எல்லாக் காலத்திலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

இம் முயற்சியில் சிலரது அர்ப்பணிப்பும் ஈடுபாடும் வியந்து போற்றப்பட வேண்டியவையாகும். அத்தகையவர்களில் 'தியாகி' என்ற இதழை நடத்திய இராம. சடகோபன் முக்கியமானவர்.

அவர் விழுப்புரத்தில் ஆடம்பரம் இல்லாமல், மிக எளிய முறையில் 'தியாகி' இதழை நடத்திக் கொண்டிருந்தார். ஆரம்ப நாட்களில் திருலோக சீதாராம் அதில் பயிற்சி பெற்ற அனுபவம் உண்டு. 'தியாகி' ஆசிரியர் இராம.

சடகோபன் தூய காந்தியவாதி. காந்தீயக் கொள்கைகளை நடைமுறையில் கையாண்டவர். சிறிய அச்சகம் வைத்து, தமது பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். அதில் அவருக்கு ஒரு மன நிறைவு - 'ஆத்ம திருப்தி' இருந்தது. 'இராமாயண திரிவேணி' என்று - வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம், துளசி ராமாயணம் மூன்றையும் ஒப்பிட்டு - அவர் தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாக விளங்கின. ஓர் இலட்சியப் பிடிப்போடு அவர் 'தியாகி'யை நடத்திக் கொண்டிருந்தார்.

அதே ரீதியில் நடத்தி வந்தால் அவர் தம் ஆயுள் காலம் பூராவும் 'தியாகி' இதழை வெளியிட்டு வந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அரசியல்வாதி எஸ்.ஏ.ரகீம் சடகோபனின் நண்பரானார். இந்தக் காலத்தில் இப்படிப் பத்திரிகை நடத்திக்கொண்டிருப்பதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை; காலம் ரொம்பவும் மாறிவிட்டது; காலத்துக்குத் தக்கபடி நாமும் பத்திரிகையை மாற்றியாக வேண்டும் என்று யோசனைகள் கூறினார். நீங்கள் சென்னைக்கு வாங்க. 'தியாகி'யைச் சென்னையிலிருந்து பிரமாதமாகக் கொண்டு வரலாம். 'தியாகி'யை வெற்றிகரமான பத்திரிகையாக நடத்திக்காட்டுவோம் என்று உறுதி அளித்தார்.

இராம. சடகோபன் நண்பரின் பேச்சுக்குக் கட்டுப்பட்டார். 'தியாகி' அச்சகம், பத்திரிகை, அவரது குடும்பம் எல்லாம் சென்னைக்கு மாற்றப்பட்டன. எஸ்.ஏ.ரகீம் இணை ஆசிரியராகி, 'தியாகி'யைத் தடபுடலான இதழாகத் தயாரித்து வெளியிட்டார். ஆர்ப்பாட்டமான அட்டை. நல்ல வழுவழுத் தாளில், வர்ணங்களில் தலைவர்கள் படங்கள். இதில் அவர் ஒரு புதுமை பண்ணினார். ஒவ்வொர் இதழ் அட்டையிலும் வடஇந்தியத் தலைவர் ஒருவரையும் தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவரையும் இணைத்துப் படம் வெளியிட்டார். அவர்களைப் பற்றி உள்ளே கட்டுரை எழுதினார். விறுவிறுப்பான அரசியல் சமாச்சாரங்களையும் அளித்தார். மற்றும் கதை, கவிதை, இலக்கியக் கட்டுரைகளும் இடம் பெற்றன.

பத்திரிகை 'அமர்க்களமாகத்தான்' இருந்தது. ஆனாலும் விற்பனையில் சூடு பிடிக்கவில்லை! பிரமாதமாகத் தயாரித்ததால் செலவுகள் அதிகமாயின. ஆறு மாதங்களுக்குள் எஸ்.ஏ. ரகீம் விலகிக்கொண்டார். முழுப் பொறுப்பும் இராம. சடகோபன் மீது படிந்தது. மிகவும் சிரமப்பட்டார்.

விழுப்புரத்தில் வாழ்க்கை நடத்தியது போலவேதான் அவர் சென்னையிலும் வாழ்ந்தார். தோய்த்துத் தோய்த்துப் பழுப்பேறிய கதர் வேட்டி, கதர்ச் சட்டை, காந்திக் குல்லாய் இவற்றோடு சைக்கிளில்தான் அவர் எங்கும் போய் வந்தார்.

அட்டைப் படம் தயாரிக்க என்று வேந்தனைப் பார்க்கவும் விளம்பரங்கள் கேட்டு 'எபிஷியண்ட் பப்ளிசிட்டீஸ்' சகோதரர்களைச் சந்திக்கவும் சடகோபன் சுபத்ராபாய் மேன்ஷனுக்கு அடிக்கடி வந்தார். எனது

அறிமுகம் கிட்டவும் 'தியாகி'க்குக் கதை கட்டுரை எழுதி உதவும்படி கேட்டுக்கொண்டார். எழுதினேன்.

அவரால் வெகுகாலம் தாக்குப்பிடிக்க இயலவில்லை. பத்திரிகையை நிறுத்திவிட்டு, அச்சகத்தை மட்டும் நடத்த முயன்றார். அதுவும் வெகு நாட்கள் ஓடவில்லை. விழுப்புரத்தில் இருந்தபோது அவருக்குக் கிட்டியிருந்த மனநிறைவும் ஆத்மதிருப்தியும் சென்னைக்கு வந்தபிறகு அவருக்கு இல்லாது போயின.

'தியாகி' இராம. சடகோபனைப் பற்றி நினைக்கும்போது மனித வாழ்க்கையின் வியர்த்தம் நமக்குப் புரிகிறது. நேர்மையாய், நியாயமாய்ப் பாடுபட்டு, இலட்சியப் பணிபுரிந்து , ஏதோ சாதிக்க வேண்டும் - சாதிக்க முடியும்- என்ற நம்பிக்கையோடுதான் அவர் இதில் ஈடுபட்டார். அதற்காகவே வாழ்ந்தார். ஆயினும் அவர் வாழ்வில் சாதித்தது எதுவும் இல்லை. தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்களையும்கூட திருப்திகரமாக வாழவைக்கவும் அவரால் இயலாது போயிற்று. இப்படி திருலோக சீதாராம் ஒருமுறை என்னிடம் சொன்னார். அவர் பேச்சு பொருள் பொதிந்ததாகத்தான் இருந்தது.

இதே தொனியில், ஆனால் வேறு கோணங்களில் பேச்சு உதிர்த்தார் கவிஞர் ச.து.சு. யோகியார்.

பாரதிக்கு அடுத்த தலைமுறைக் கவிஞர்களில் முக்கியமானவர்களில் யோகியாரும் ஒருவர். கம்பனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். விருத்தப் பாக்களில் அருமையான கவிதைகள் இயற்றியவர். தமிழ்க்குமரி, கண்ணகி, அகல்யா போன்ற அவரது கவிதைகள் குறிப்பிடத்தக்கவை. மரியா மகதலேனா கதையைச் சிறுகாவியமாக இயற்றியுள்ளார். பாரசீகக் கவியமுதம் ருபையத்தைத் தமிழாக்கியிருந்தார். அதே தன்மையில் அவரே ஆங்கிலத்தில் 'ருபையம்' என்றொரு காவியம் படைத்திருந்தார். அது அச்சில் வரவில்லை. அவர் சினிமாத் துறையில் ஈடுபட்டு 'அதிர்ஷ்டம்' 'சுந்தரமூர்த்தி நாயனார்' போன்ற படங்களுக்குக் கதைவசனம் எழுதியுள்ளார். தாமே 'ஆனந்தன் அல்லது அக்கினிபுராண மகிமை' என்றொரு படம் தயாரிப்பதாக விளம்பரங்கள் செய்தார். ஆனால் அம் முயற்சி வெற்றிபெறவில்லை. அவருடைய கவிதையாற்றலும் மற்றுமுள்ள திறமைகளும் உரியவரவேற்பையும் கவனிப்பையும் பெறவில்லை என்ற மனக்குறை அவருக்கு இருந்தது. பொருளாதார நிலையிலும் அவர் சிரமங்கள் அனுபவித்துக் கொண்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் சுபத்ராபாய் மேன்ஷனிலிருந்த கண்ணா பிலிம்சில் தங்கியிருந்தார்.

யோகியார் அடிக்கடி சினிமா உலகம் ஆபீசுக்கு வந்து சுவாரசியமாக உரையாடிக் கொண்டிருப்பார். முன்னிரவுகளில் வெகுநேரம் பேசிப் பொழுது போக்குவார். ஆபீசுக்குப் பின்பக்கம் திறந்த வெளி விரிந்து கிடந்தது. அங்கு நாற்காலிகளைப் போட்டு, பரந்த வானத்தின் கீழே, நட்சத்திரங்களின் மோகன

ஒளியில் அமர்ந்து, சகல விஷயங்கள் பற்றியும் உரையாடி மகிழ்ந்த பொழுதுகள் மிக இனிமையானவை.

யோகியார் வருகிறபோதெல்லாம் நான் ஏதாவது எழுதிக்கொண்டு அல்லது படித்துக்கொண்டிருப்பேன். 'என்னய்யா எப்ப பார்த்தாலும் எழுத்தும் படிப்பும்! நாங்கள் எல்லாம் எழுதி என்ன கண்டுவிட்டோம்? தமிழ்நாட்டில் யார் என்ன எழுதினாலும் உரிய கவனிப்பு கிடைக்காது. பாரதிக்குக் கிடைத்ததா? கம்பனுக்குக் கிடைத்ததா?' என்று சொல்வார்.

மேலும் அவர் விரக்தியோடு பேசுவார். கம்பன் ஒரு தப்பு செய்து விட்டான். மிகப் பிரமாதமான ஒரு காவியத்தைத் தமிழில் எழுதி வைத்தான். இது போன்ற ஒரு மாகாவியம் உலகின் வேறு எந்த மொழியிலாவது படைக்கப்பட்டிருக்குமானால், எந்தக் காலத்திலோ பெரும் புகழ் பெற்றிருக்கும். தமிழர்களுக்கு நல்ல விஷயங்களை ரசிக்கத் தெரியாது.

இப்படி அவர் தமது மனக்குமைதல்களை வெளிப்படுத்துவார். கம்பனிடம் ச.து.சு. யோகியார் பக்தியே கொண்டிருந்தார் என்று சொல்லலாம். 'கம்பன் ஒரு மகாகவி. மகா கவிகள் போற்றும் கவிச்சக்கரவர்த்தி. கவிச்சக்கரவர்த்திகள் தொழுதேற்றும் கவிக் கடவுள். கம்பனே அடியேனது கவிதைத் தெய்வம்' என்று அவர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

1948 இறுதியில் தி.க. சிவசங்கரன் சென்னை வந்து சேர்ந்தார். அவர் திருநெல்வேலியில் தாம்கோஸ்பாங்கில் கேஷியர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். உத்தியோகம் சம்பந்தமாக இடமாற்றம் பெற்றுச் சென்னைக்கிளைக்கு வந்தார். அவரும் எங்களோடு தங்கினார்.

மூன்று பேரும் சினிமா உலகம் அலுவலகத்திலேயே தங்குவது முறையல்ல என்று கருதி, வேறு தங்குமிடம் தேடினோம். பம்மல் ஊரிலிருந்து தினசரி சென்னைக்கு வந்துபோய்க்கொண்டிருந்த நண்பர் டி.ஆர். நடராஜன், பல்லாவரத்தில் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் ஓர் அறை வாடகைக்குக் கிடைக்கும் என்று போர்டு மாட்டியிருந்தது கண்டு அந்த இடம் வசதியாக இருக்கும் என்று தெரிவித்தார். அவருடன் பல்லாவரம் போய் அந்த இடத்தைப் பார்த்தோம். எங்களுக்குப் பிடித்திருந்தது. அதையே அமர்த்தி, அங்குக் குடியேறினோம்.

அருகில் இருந்த ஓட்டலைச் சேர்ந்த தனிக்கட்டிடம் அது. ஓட்டலில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் கீழ்ப்பகுதியில் தங்கியிருந்தார்கள். மாடி வாடகைக்கு விடப்பட்டது. அது வசதியாக இருந்தது. பல்லாவரத்துக்கும் எழும்பூர் ஸ்டேஷனுக்கும் போய்வர எலெக்ட்ரிக் ரயிலில் சீசன் டிக்கட் வாங்கிக் கொண்டோம். தி.க.சி., கோட்டை ஸ்டேஷன் வரை போக வர டிக்கெட் வாங்கினார். தினசரி மின்சார ரயிலில் பயணம் செய்வது உல்லாச அனுபவமாகவே இருந்தது.

டி.ஆர். நடராஜன் பல பத்திரிகைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர். இச்சமயத்தில் 'தினத்தந்தி'யில் தலையங்கம் எழுதும் பொறுப்பை ஏற்றிருந்தார். அது மட்டும் தான் அவரது வேலை. குறிப்பிட்ட நேரத்துக்குப் போய், 'தினந்தந்தி' ஆபீசில் இருந்து, பத்திரிகைகளைப் படித்து, முக்கியச் செய்திகளை அறிந்து, அன்றைக்கு எதைப் பற்றித் தலையங்கம் எழுதுவது எனத் தெரிந்து, எழுதிக் கொடுத்துவிட்டு வரவேண்டியது தான். சில மணி நேர வேலை. அவர் ஒரு உற்சாகி. பரந்த அனுபவ ஞானம் உடையவர். எம்.என். ராய் அரசியல் கொள்கைகளில் ஆர்வம் காட்டி வந்தார். தமாஷாகவும் கிண்டலாகவும் பேசி மகிழ்வார். சிறிது காலத்துக்குப் பிறகு அவர் 'தினமணி கதி'ரில் - துமிலன் ஆசிரியராக இருந்த போது சேர்ந்து பணிபுரிந்தார். அந்தக் காலகட்டத்தில் சி.சு. செல்லப்பாவும் 'தினமணி'யில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

நடராஜன் அடிக்கடி எங்களோடு ரயிலில் வந்தார். சினிமா உலகம் ஆபீசிலும் பல்லாவரம் அறையிலும் பொழுதுபோக்கினார். நிலா காயும் இரவுகளில் எட்டு-எட்டரை மணிக்குப் புறப்பட்டு ரயிலில் பயணம் செய்து மீனம்பாக்கம் ஸ்டேஷனில் இறங்கி, ரோடு வழியாக நடந்து பல்லாவரம் அறைக்கு வருவோம். சும்மா உல்லாச உலா! ரயிலிலும் கூட்டம் இராது. ரோடின் வெறிச்சிட்ட தனிமையும், மரங்களினூடே பாய்ந்து தரை மீது வந்து படியும் நிலவின் ஒளியும், சுற்றுப்புற மோகனத் தோற்றமும் மனோகரமாக இருக்கும்.

இப்படி ஆறு மாதங்கள் பல்லாவரத்தில் கழித்தோம். கட்டிடத்தை இடித்துப் புதுப்பிக்கப் போகிறோம்; அறையைக் காலி செய்யுங்கள் என்று ஒட்டல்காரர் கூறியதால், பல்லாவரம் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இப்போது நாரண. துரைக்கண்ணன் உதவிபுரிந்தார். அவர் வசித்த கோடம்பாக்கம்- சௌராஷ்டிர நகரில் ஒரு வீடு இருக்கிறது என்று தெரிவித்து, வேண்டிய உதவி செய்தார். அவர் குடியிருந்த தெருவுக்குப் பக்கத்துத் தெருவில் இருந்தது அந்த வீடு. நீளமான பெரிய வீடு. ஐந்து தனிவீடுகளை வரிசையாகக் கொண்ட நீளஅமைப்பு. ஒயிட் ஹவுஸ் என்று பெயர் பெற்றிருந்தது. ஓரத்து வீட்டில் நாங்கள் குடிபுகுந்தோம். வாடகை மாதம் நாற்பது ரூபாய் விசாலமான இடம். கீழ்ப்பகுதியும் மாடியும் மிக வசதியாக இருந்தன. கீழே நாங்கள் புழங்குவதில்லை. அண்ணா, நான், தி.க.சி. மூன்று பேர்தான். மாடிப் பகுதியில் இடம் வெகு தாராளமாக இருந்தது.

அதே தெருவில் சில வீடுகள் தள்ளி ஒரு வீட்டில் அறிஞர் சாமி சிதம்பரனார் வசித்தார். அவருடன் பழகும் வாய்ப்பு கிட்டியது.

1948இல் சினிமா உலகம் அலுவலகத்தில் தங்கியிருந்தபோதுதான், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சி நடந்தது. 'பாரதி விடுதலைக் கழகம்'

அமைத்துப் பாரதியார் படைப்புகளை நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்ற உரிமைப் போராட்டம்.

டி.கே.எஸ். சகோதரர்கள் 'பில்கணன்' திரைப்படம் எடுத்தார்கள். அதில் பாரதியார் பாடல்களைச் சேர்த்திருந்தார்கள். அப்படி, பாரதி பாடல்களை உபயோகித்திருப்பது உரிமை மீறல் ஆகும்; பாரதியார் பாடல்களின் உரிமை தம்மிடம் இருக்கிறது: அவற்றை மற்றவர்கள் நாடகம், சினிமா முதலியவற்றுக்காகப் பயன்படுத்துவது சட்டப்படிக் குற்றமாகும் என்று திரைப்படத் தொழில் அதிபர் ஏவி. மெய்யப்ப செட்டியார் வழக்குத் தொடர்ந்தார். டி.கே. சண்முகம் நாரணதுரைக்கண்ணன் ஆலோசனையை ஏற்று, எழுத்தாளர்கள் பத்திரிகைக்காரர்கள் ஆதரவை நாடினார்.

சுதந்திரக் கவிஞரான பாரதியின் பாடல்கள் தனிப்பட்டவர்களிடம் அடிமைப்பட்டிருப்பது சரியல்ல; அவை நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும் என்று, ஏற்கனவே எழுத்தாளர்கள் சிலர் குரல் கொடுத்து வந்தார்கள். இப்போது உரிமையை மீட்பதற்காகப் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது என்ற உணர்ச்சி ஏற்பட்டது. எனவே பாரதி விடுதலைக் கழகம் அமைக்கப்பட்டது. நாரண துரைக்கண்ணன் அதன் தலைவராகவும், திருலோக சீதாராம்-வல்லிக்கண்ணன் செயலாளர்களாகவும், எழுத்தாளர்கள் பலரும் உறுப்பினர்களாகவும் இருந்து செயலாற்றியது அவ் அமைப்பு.

முக்கிய எழுத்தாளர்கள் பலரும் உற்சாகத்தோடு ஒத்துழைத்தார்கள். பத்திரிகைகள் துணை நின்றன. தினப்பத்திரிகைகள் தலையங்கம் தீட்டி ஆதரவளித்தன. பாரதி விடுதலைக்கழகத்தினர் காங்கிரஸ் தலைவர் காமராஜ் அவர்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களையும் சந்தித்துக் கோரிக்கைகளை முன்வைத்தனர். அவர்களும் ஏற்று ஆதரவு காட்டினார்கள்.

பாரதியாரின் மனைவி உயிரோடிருக்கிறார்; பாரதி பாடல்களை நாட்டுடைமை ஆக்குவதில் அவருக்கு ஆட்சேபம் எதுவுமில்லை என்று ஒப்புதல் கடிதம் எழுதி வாங்கிவரும்படி ராமசாமி ரெட்டியார் தெரிவித்தார். கடிதம் கிடைத்ததும் ஆவன செய்யலாம் என்று உறுதிகூறினார்.

பாரதியார் மனைவி செல்லம்மாள் பாரதியும், அவர் மூத்தமகள் தங்கம்மா பாரதியும் அப்போது திருநெல்வேலியில் வசித்தார்கள். அவர்களைச் சந்தித்து இசைவுக் கடிதம் பெறுவதற்காகச் சென்னையிலிருந்து ஒரு குழு புறப்பட்டுச் சென்றது. பாரதி விடுதலைக் கழகத்தின் தலைவர் நாரண துரைக்கண்ணன், துணைத் தலைவர் பேராசிரியர் அ. சீனிவாசராகவன், செயலாளர் வல்லிக்கண்ணன், நடிகர் டி.கே. சண்முகம், திருச்சி வானொலியில் பணியாற்றிவந்த மாறன் எனும் புனைபெயர் கொண்ட கே.பி. கணபதி ஆகியோரே அக்குழுவினர்.

திருநெல்வேலியில் செல்லம்மா பாரதியும் தங்கம்மா பாரதியும் குழுவினரை வரவேற்று மகிழ்ச்சியுடன் ஒப்புதல் கடிதம் எழுதிக் கையெழுத்திட்டுத் தந்தார்கள். அந்நாளில் நகரசபைத் தலைவராகப் பொறுப்பு வகித்த ப.ரா.வும் (ப.ராமஸ்வாமி) குழுவோடு சேர்ந்து கொண்டார். மணிக்கொடி இலக்கிய இதழின் இறுதிக்கட்ட ஆசிரியராகச் செயலாற்றியவர் அவர். பின்னர் 'நவயுகப் பிரசுராலயம்' புத்தக வெளியீட்டு நிறுவனத்தை நிர்வகித்து, நல்ல நூல்களை வெளியிட உதவிய எழுத்தாளர். மாக்சிம் கார்க்கியின் 'மதர்' நாவலை 'அன்னை' என்ற பெயரில் மொழிபெயர்த்துப் புத்ததகமாக வெளியிட்டிருந்தார். அதையே அவர் நாடகமாக எழுதி, ஒரு குழு அமைத்து மேடைகளில் நடிக்க வைத்து, 'தாய்' நாவலுக்கு மேலும் பெருமை சேர்த்ததையும் குறிப்பிட வேண்டும். அவர் குழுவினரை வாழ்த்தி வழி அனுப்பினார்.

பாரதி நூல்களை வெளியிட்டுவந்த பாரதி பிரசுராலயம் உரிமையாளர் பாரதியின் சகோதரர் சி. விஸ்வநாதன் அவர்களும் ஒப்புதல் கடிதம் தந்தார்.

பாரதி குடும்பத்தாரின் இசைவுக் கடிதங்களைப் பெற்றதும் முதலமைச்சர் ராமசாமி ரெட்டியார் ஏவி. மெய்யப்ப செட்டியாரை வரவழைத்துப் பேசினார். பாரதி பாடல்களின் உரிமையை முதலில் குஜராத் சேட் ஒருவர் பெற்றிருந்தார். அவருக்குக் கணிசமான ஒரு தொகை கொடுத்து உரிமையை ஏவிஎம் செட்டியார் வாங்கியிருந்தார். இருப்பினும் இப்போது பணம் எதுவும் பெற்றுக் கொள்ளாமலே, தம்மிடமிருந்த பாரதிபாடல்களின் உரிமையை மனமுவந்து விட்டுக்கொடுத்தார் செட்டியார். பாரதியார் படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

அதைக் கொண்டாடும் வகையில் பாரதி விடுதலைக் கழகம் உட்லண்ட்ஸ் ஓட்டலில் ஒரு சிறு விழா நடத்தியது. இடைக்காலத்தில் கழகத்தின் தலைவராக எழுத்தாளர் வ.ரா. பொறுப்பேற்றிருந்தார். அவரே இவ் விழாவுக்கும் தலைமை தாங்கினார்.

நோக்கம் நிறைவேறியது. கடமை முடிந்த மனநிறைவுடன் பாரதி விடுதலைக் கழகம் கலைக்கப் பெற்றது.

மகாகவி பாரதியின் படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பின்னர், பல்வேறு புத்தக வெளியீட்டாளர்கள் பாரதியாரின் கவிதைகளையும் இதரப் படைப்புகளையும் விதம் விதமான பதிப்புகளாக வெளியிடுவதில் ஆர்வம் காட்டலாயினர். திரைப்படங்களிலும் பாரதி பாடல்கள் தாராளமாக இடம்பெறத் தொடங்கின.

21

1948-49இல் நிகழ்ந்த மற்றொரு முக்கிய விஷயம் பற்றியும் சொல்ல வேண்டும். மீண்டும் திரைப்படத் துறை என்னை அழைத்த விவரம் அது.

விளம்பரங்கள் கொடுக்கிற விஷயமாகப் பேசிமுடிவு பண்ண, திரைப்படத் தயாரிப்பாளர்கள் பலர் எபிஷியன்ட் பப்ளிசிட்டீஸ் சகோதரர்களை நாடி வருவார்கள். அப்படி வந்தவர்களில் டைரக்டர் நாகூர் என்பவரும் ஒருவர்.

நாகூரும் சில கூட்டாளிகளும் சேர்ந்து பாலாஜி பிக்சர்ஸ் என்ற பெயருடன் படம் தயாரித்து வந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் 'லைலா மஜ்னு' என்ற படம் தயாரித்தார்கள். டி.ஆர். மகாலிங்கமும் எம்.வி.ராஜம்மாவும் நடித்த படம். என்.எஸ். கிருஷ்ணன் டி.ஏ. மதுரம் ஜோடியின் நகைச்சுவைப் பகுதியும் அதில் உண்டு.

இதே காலகட்டத்தில் இன்னொரு 'லைலா மஜ்னு' படமும் தயாராகிக் கொண்டிருந்தது. ஜெமினி பிக்சர்ஸ் தயாரிப்பு அது. நாகேஸ்வரராவ், சுசீலா நடித்தது.

ஜெமினி ஸ்டுடியோவின் படங்களுக்குத் தனிஒருவர் வசனம் எழுதுவதில்லை. 'ஜெமினி கதை இலாகா' என்று பல எழுத்தாளர்கள் படக்கதை வசனம் தயாரிக்கும் முறையைப் படாதிபதி எஸ்.எஸ். வாசன் நடைமுறைப்படுத்தியிருந்தார். அதைப்பின்பற்றி இதர படத்தயாரிப்பாளர்கள் சிலரும் அவ்விதமே ஒரு படத்துக்குப் பலபேரிடம் வசனம் எழுதி வாங்கும் முறையைக் கையாள்வது வழக்கமாயிருந்தது. சிறிது காலம் இப்படி நடந்தது. திரைக்கதை, டைரக்ஷன் என்று ஒருவர் பெயரைப் போட்டுக் கொள்வார்கள்.

பாலாஜி பிக்சர்சாரும் அவ்விதமே செய்தார்கள். லைலா மஜ்னு என்றொரு படம் இந்தி மொழியில் வந்து வெற்றிகரமாக ஓடியது. அந்தப் படத்தைப் பார்த்து, தமிழ்ப்படத்துக்கும் திரைக்கதை அமைத்துக் கொண்டார்கள். அந்தப் படத்தின் வசனத்தை (உரையாடல்களை)யே பெரும்பாலும் தமிழாக்கி எழுதி வைத்திருந்தார் ஒருவர். அதை ஒட்டியும், சில காட்சிகளுக்குச் சொந்தமாகவும் வசனம் எழுதுவதற்கு எழுத்தாளர்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள் படத்தயாரிப்பாளர்கள். கவிஞர் ச.து.சு. யோகியார் சிலகாட்சி எழுதிக் கொடுத்திருந்தார்., என்னிடமும் சிலகாட்சிகளுக்கு உரையாடல்களை எழுதிவாங்கலாம் என்று எபிஷியன்ட் பப்ளிசிட்டீஸ் சகோதரர்கள் நாகூரிடம் சொன்னார்கள்.

நாகூர், கணபதி ஐயருடன், என்னை அணுகினார். தம் எண்ணத்தைச் சொன்னார். எனக்குச் சம்மதமில்லை என்று நான் தெரிவித்தேன். இரண்டு பேரும் வலியுறுத்தி, சிலகாட்சிகளுக்குத் தான் எழுதவேண்டும்; படப்பிடிப்புக்கு, ஸ்டுடியோவுக்கு வரவேண்டும் என்கிற கட்டாயம் எதுவுமில்லை. நீங்கள் இங்கிருந்து எழுதிக்கொடுத்தாலே போதும் என்று நாகூர் சொன்னார்.

'உங்களுக்கு இதில் சிரமமே கிடையாது. ஒரு சில காட்சிகள் தானே! நீங்கள் எளிதில் எழுதிவிட முடியும்' என்று நண்பர் கணபதியும் கூறினார்.

நான் இசைவு தெரிவிக்க வேண்டியாதாயிற்று. நாகூரின் உதவியாளர் டி.ஏ, மூர்த்தி என்பவர் கதைச் சுருக்கம், காட்சி அமைப்புகள் முதலியன அடங்கிய ஒரு குறிப்புப் புத்தகத்தைத் தந்தார். படித்துப் பார்க்கும்படி சொன்னார். எந்த எந்தக் காட்சிகளுக்கு நான் வசனம் எழுத வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொன்னார். முதலில் இரண்டு மூன்று கட்டங்களுக்கு எழுதித் தந்தால் போதும் என்றார்.

கயசும் லைலாவும் சிறுபருவ விளையாட்டுகள் சேர்ந்து விளையாடி ஆடிப் பாடி மகிழ்வது போன்ற காட்சிகள். எழுதி வைத்தேன். குறித்த நாளில் மூர்த்தி வந்து வாங்கிப் போனார். பிறகு கயசும் லைலாவும் வளர்ந்து பெரியவர்களாகி, பேசிப் பழகி, காதலர்களாக விளங்கும் காட்சிகள். மேலும் ஒன்றிரண்டு. மொத்தத்தில் பத்து இடங்கள் (காட்சி அமைப்புகள்)கூட இல்லை.

சில வாரங்களுக்குப் பிறகு மூர்த்தி வந்தார். அன்று படப்பிடிப்பு நடைபெறப் போவதாகவும், விரும்பினால் நான் அதைப் பார்க்க வரலாம் என்றும், அவர் வந்து அழைத்துப் போவதாகவும் கூறினார். நான் வரவில்லை என்று சொல்லி விட்டேன்.

மேலும் சில வாரங்களுக்குப் பிறகு நாகூர் என்னை அவர் வீட்டுக்கு அழைத்தார். கீழ்ப்பாக்கத்தில் இருந்த அவருடைய வீட்டுக்குப் போனேன். படம் முடியும் நிலையில் இருக்கிறது; நன்றாக அமைந்திருக்கிறது என்று மகிழ்ச்சியோடு சொன்னார். அன்று அவர் வீட்டில் சாப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நீண்ட மேஜையில் சாப்பாடு. விருந்து தான். நாகூர், அவர் குடும்பத்தார், மூர்த்தி, நான்- மொத்தம் ஏழு பேர். நாகூரின் மனைவி தாம் பரிமாறி உபசரித்தார். உணவுத் தயாரிப்புகள் ருசிகரமாக இருந்தன. சாப்பிடும் போதே நாகூர் பேசினார்:

'படம் முடியப் போகுது. எல்லாம் நல்லா வந்திருக்கு. நீங்க எழுதிக் கொடுத்ததற்காக உங்களுக்கு ஆயிரம் ரூபாய் தரலாம்னு முடிவு பண்ணியிருக்கோம். உங்களுக்கு இன்னும் அதிகமாகவே தரணும். ஆனால் புதுக்கம்பெனி. தாராளமாச் செலவு பண்ணுவதற்குப் பொருளாதார வசதியில்லே. ஆயிரம் ரூபாய் குறைச்சல் என்று நீங்க எண்ணினால் சொல்லுங்க. என்ன?' என்றார்.

நான், சரிதான்; இதுவே போதும் என்று சொல்லிவிட்டேன். சாப்பிடச்செய்து, சாப்பிடுகிற போதே இப்படிப் பேசி முடிப்பது இவர்களுக்கு வசதியான செயல்முறை போலும் என்று எண்ணிக் கொண்டேன்.

அப்புறம் நண்பர் கணபதி, நாகூர் எவ்வளவு பணம் தந்தார் என்று கேட்டார். ஆயிரம் ரூபாய்க்குச் செக் தந்தார் என்றேன்.

'ஆயிரம் தானா தந்தார்? இது குறைவான தொகை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?' என்று அவர் விசாரித்தார்.

'இல்லை. நான் எதுவும் நினைக்கவில்லை' என்று சொன்னேன். அவர் சிரித்தார்

'பார்க்கப் போனால், நீங்கள் பத்துப் பன்னிரண்டு கதைகள் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பினாலும், உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்ற நிச்சயம் எதுவும் இல்லை. இப்ப நீங்க கொஞ்சம் எழுதிக் கொடுத்ததற்கு மொத்தமாக ஆயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறதே. இதற்காகச் சந்தோஷப்படலாம்' என்று நண்பர் விவரித்தார்.

சில தினங்களுக்குப் பிறகு, 'லைலா மஜ்னு படத்தைத் திரையிட்டுப் பார்க்கப் போகிறார்கள். வாங்க' என்று மூர்த்தி அழைத்துப் போனார். படம் பார்த்தேன். திருப்திகரமாக இருந்தது. ஆரம்பத்தில் பெயர்கள் வரிசையாகக் காட்டப்பட்டபோது, வசனம்: வல்லிக்கண்ணன் என்று தனியாகக் காட்டப் பெற்றது.

அது எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. பொய்யான கவுரவம்-போலிப் பெருமை என்றே என் மனம் முனகியது. உண்மையில் இந்தப் படத்தின் வசனம் முழுவதையும் நான் எழுதவில்லை. பலபேர் எழுதியுள்ளனர். நான் ஒருசில காட்சிகளுக்கு மட்டுமே எழுதினேன். அப்படியிருக்கையில், வசனம்-வல்லிக்கண்ணன் என்று சொல்வது நியாயமேயில்லை. நாகூர், பணம் குறைவாகக் கொடுத்துவிட்டோமே என்று நினைத்து, தமது மனசாட்சியைத் திருப்தி செய்வதற்காக இப்படி அறிவித்திருக்கலாம் என்று எண்ணிக் கொண்டேன்.

நாகூர் அத்துடன் ஒதுங்கிவிடவில்லை. திடீரென்று ஒருநாள் வந்தார். 'சினிமாத் துறையில் நான் உங்களுக்கு உதவி செய்ய விரும்புகிறேன். என் நண்பர் லாவண்யா பிக்சர்ஸ் அதிபர், பாரிஜாதம் என்ற படம் பிடிக்கிறார். அதற்கு வசனம் எழுதுவதற்கு தகுந்த ஆள் வேண்டும் என்று சொன்னார். நான் உங்கள் பெயரைச் சொல்லியிருக்கிறேன், வாங்க, நான் உங்களை அவரிடம் அறிமுகம் செய்து வைக்கிறேன்' என்ற கூறி அழைத்துப் போனார்.

லாவண்யா பிக்சர்ஸ் அதிபரிடம் அறிமுகம் செய்துவிட்டு, 'அவர் சொன்னார். எனக்கு வேறே வேலை இருக்கு. நான் அப்புறம் பார்க்கிறேன்.' என்று சொல்லிப் போய்விட்டார்.

'பாரிஜாதம்' படத்துக்காக அன்று ஏதோ ஷூட்டிங் என்று திட்டமிடப்பட்டிருந்தது போலும். நடனக் காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பன்னிரண்டு பெண்கள் வந்தார்கள். பால் சப்ளை செய்கிற ஒருவர், எத்தனைக் குடம் பால் வேண்டும் என்று கேட்டபடி நின்றார். முதலாளி, 'இன்று ஷூட்டிங்

இல்லை. கேன்சல் பண்ணிவிட்டோம். இதனாலே உங்களுக்கு வேலை இல்லை. நீங்கள் போகலாம்' என்று அந்தப் பெண்களை அனுப்பிவைத்தார். அவர்கள் ஏமாற்றத்தோடு சோகமாய்த் திரும்பிச் சென்றார்கள். பால்காரரிடம் 'இன்னிக்குப் பால் வேண்டாம். வேண்டும் என்கிற போது சொல்லி அனுப்புகிறேன்' என்று கூறி அவரையும் அனுப்பி விட்டார்.

மற்றவர்களின் சிரமங்கள், உணர்வுகள், காலநஷ்டம் இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாத படாதிபதியின் போக்கு என் மனசில் உறுத்தல் ஏற்படுத்தியது. அவர் என்னிடம் படக்கதையில் வரும் ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார். 'காதல் கொண்ட இருவர் சந்திக்கிறார்கள்; அவர்கள் பேச்சு சுவாரசியமாக இருக்க வேண்டும்; இரட்டை அர்த்தம் தொனிக்கிறபடி வசனம் எழுதிக்கொண்டு வாங்க. அதைப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்வோம்' என்றார்.

எனக்கு எழுத விருப்பமில்லை. அதனால் அவரைப் பார்க்கப் போகவேயில்லை.

நான்கு நாட்கள் கழித்து நாகூர் மீண்டும் வந்தார். 'என்ன லாவண்யா பிக்சர்ஸ்காரர் வரச்சொல்லியிருந்தாராம்; நீங்க போகலியாமே? ஏன்?' என்று கேட்டார்.

'ஏதோ புராணப்படம் எடுக்கிறாங்க. அதுக்கு வசனம் எழுத நான் விரும்பலே' என்று சொல்லிவைத்தேன்.

'புராணப் படமானால் என்ன! பெரிய பகுத்தறிவு-சுயமரியாதைவாதியான பாரதிதாசனே புராணப்படங்களுக்குக் கதை வசனம் எழுதுறாரு. நீங்க ஏன் எழுதக்கூடாது?' என்று அவர் வாதாடினார்.

'யாரும் எப்படியும் எழுதிவிட்டுப் போகட்டும். எனக்கு இது இஷ்டமில்லை. சினிமாவுக்குக் கதை வசனம் எழுதவே நான் விரும்பலே. எனக்குப் பிடிக்காததை நான் செய்ய மாட்டேன்' என்று நான் உறுதியாய்த் தெரிவித்தேன்.

அவர் ஏதேதோ சொன்னார். நான் என் மனசை மாற்றிக் கொள்ளவில்லை. வருத்தப்பட்டபடி நாகூர் போய் விட்டார். அதன் பிறகு நான் அவரைக் காண நேர்ந்ததே இல்லை.. அவர் மூலம் விஷயம் அறிந்த நண்பர் கணபதி எனக்காக அனுதாபப்பட்டார்.

'அவர்கள் போக்கின்படி எழுதிக் கொடுத்தால் பணம் கிடைக்கும். பணம் அதிகம் சேர்ந்தபிறகு, உங்கள் இலட்சிய நோக்கின்படி காரியங்களைச் செய்யலாமே. இப்போது பணம் கிடைக்கிற வழியில் செல்ல மறுப்பானேன்?' என்று நண்பர் தர்க்கித்தார்.

'எனக்கு அது சம்மதமில்லை. எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும், நான் தேர்ந்துகொண்ட பாதையிலேயேதான் நான் முன்னேற விரும்புகிறேன்' என்று கூறினேன்.

22

நாங்கள் கோடம்பாக்கத்தில் பெரியவீட்டில் மூன்று மாதங்கள்தான் வசித்தோம். தி.க.சி, அவர் வேலை பார்த்த வங்கி அருகிலேயே, தங்கசாலைத் தெருவில் இருந்த ஒரு லாட்ஜின் அறையில் தங்கப் போவதாகக் கூறிப் பிரிந்து சென்றார். எங்கள் இரண்டு பேருக்கும் அவ்வளவு பெரிய இடம் தேவையில்லை என்பதால், என் அண்ணாவும் நானும் அதைக் காலிசெய்தோம். திருவல்லிக்கேணி, கிருஷ்ணாம்பேட்டைப் பகுதியில் முருகப்ப முதலி தெருவில் இருந்த ஒரு வீட்டின் ஓர் அறையில் குடிபுகுந்தோம்.

அது மிகச் சின்ன அறை. போதுமான வசதிகள் இல்லாத இடம். அதில் இருந்தபடியே வேற நல்ல இடம் தேடிக் கொண்டிருந்தோம்., அச்சுத் தொழிலாளித் தோழர் ஒருவர் உதவிபுரிந்தார். மிகச் சிறப்பான இடம் கிடைத்தது

கிருஷ்ணாம்பேட்டை வட்டாரத்திலேயே, டாக்டர் நடேசன் சாலையை ஒட்டிய கிளை E டிப்போத் தெரு. அதன் வழி நடந்து சிறு சந்து ஒன்றைக் கடந்தால் விசாலமான ஒரு தோட்டம். மிகப் பசுமையான இடம். வாழை மரங்கள் செறிந்து நிற்கும். பெரும் பரப்பில் கத்திரி, கீரை வகையறா பயிரிட்டிருக்கும். உரிய காலத்தில் தவனம் பயிரிடப்படும். மல்லிகைச் செடிகள், செம்பருத்திச் செடிகளும் ஒருபுறம் ஓங்கி வளர்ந்து நின்றன.

அத் தோட்டத்தின் ஓரத்தில் இரண்டு குடிசைகள். செங்கல் சுவர்கள். சுண்ணாம்பு பூசி வெள்ளையடிக்கப்பட்டவை. ஓலைக் கூரை கொண்டவை. அவற்றில் ஒன்று எங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டது. தோட்டம் தனியாக எந்தத் தெருவையும் சேர்ந்திருக்கவில்லை. நேரே வெங்கடசாமி இரண்டாவது தெரு என ஒன்று இருந்தது. மற்றது, சந்து கொண்டு சேர்ந்த 'E டிப்போத் தெரு'. நாங்கள் தபாலுக்குக் கார்டன் எண்10, E டிப்போத் தெரு, கிருஷ்ணாம் பேட்டை, சென்னை-5 என்று முகவரி கொடுத்தோம். இந்தப் பத்தாம் நம்பர் தோட்ட வீடு ஒரு பதினைந்து வருட காலம் பிரசித்தி பெற்றுத் திகழ்ந்தது. பெயர் பெற்ற எழுத்தாளர்கள், பத்திரிகைக்காரர்கள், நடிகர்கள், அரசியல் வாதிகள் சிலர் வந்து போனார்கள். இளைய எழுத்தாளர்கள் அநேகர் தேடிவரும் இடமாகவும் இருந்தது அது.

அந்தத் தோட்டத்தின் உரிமையாளர் எல்லம்மாள் என்ற அம்மையார் அவ் வட்டாரத்தில் செல்வாக்குப் பெற்றவராக விளங்கினார். அவருடன்

அவரது உறவினர் கண்ணபிரான், மகன் மணவாளன் அவர் மனைவி மக்கள் முதலியோர் வேறொரு தனி வீட்டில் வசித்தார்கள். காலை நேரம் வெகு சுறுசுறுப்பாக இருக்கும் தோட்டத்தில். கீரை வியாபாரம், கத்திரிக்காய் பறித்து சந்தைக்குக் கொண்டு போவது, பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது, இதர தோட்ட வேலைகள் என்று உழைப்பாளிகள் இயங்கிக்கொண்டிருப்பார்கள்.

நகரத்தின் பரபரப்பான சூழலையும் நெருக்கடியையும் கடந்து உள்ளே வந்தால், முற்றிலும் மாறான கிராமியச் சூழ்நிலை பெற்று அழகுடனும் அமைதியோடும் விளங்கியது அந்த இடம். அதில் ஓர் ஆசிரமம் போல் அமைந்திருந்தது நாங்கள் குடியிருந்த சிற்றில்.

கண்ணபிரான் சென்னை டிராம்வண்டிப் போக்குவரத்து நிறுவனத்தில் பணிபுரிந்தார். தொழிற்சங்க ஈடுபாடு உடையவர். அதனால் பத்திரிகைகள் படித்தல், அரசியல் கட்சிகள் பற்றிய அறிவு, பொதுவாழ்வில் அக்கறை முதலியன கொண்டவராக இருந்தார். எங்களிடம் நண்பராகப் பழகினார். சிறிதுநாட்களில் டிராம் கம்பெனி வேலையிலிருந்து ஓய்வு பெற்று வீட்டோடிருந்து, பயிர்த்தொழிலைக் கவனித்து வந்தார். மகன் மணவாளனும் டிராம்வேயில் கண்டக்டர் வேலை பார்த்தார். அவருடைய இயல்புகள் வேறானவை.

எல்லம்மாளும் அவரது குடும்பத்தினர் அனைவரும் எங்களிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டு, மிகுந்த அன்புடன் பழகிவந்தனர்.

பயிர்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு, தொலைவில் தெரு ஓரத்திலிருந்த ஒரு கிணற்றிலிருந்து குழாய் பதிக்கப்பட்டு வசதி செய்திருந்தார்கள். மோட்டார் வைத்துக் கிணற்று நீர் அதன் வழியாகப் பாய்ச்சப்பட்டது. தோட்டத்தின் ஆரம்பத்தில், வீடுகளின் பக்கம், ஆழமும் நீளமும் கொண்ட ஒரு தொட்டி அமைக்கப்பட்டிருந்தது. குழாய் வழியாக வரும் தண்ணீர், தொட்டியில் விழும்; தொட்டி நிறைந்த பிறகு கால்வாய் வழி தோட்டத்துக்கு ஓடும். தொட்டியில் விழுகிற தண்ணீர் குளுமையாய்ச் சுத்தமாக இருக்கும். தொட்டியில் ஆழ்ந்து மூழ்கிக் குளிக்கலாம். அப்படி நீராடி மகிழ்வது இனிய சுகானுபவமாக இருந்தது.

என் அண்ணாவின் சினிமா உலகம் வேலை ஒரு முடிவுக்கு வரவேண்டிய காலம் நெருங்கியிருந்தது. அந்தப் பத்திரிகை சீராக நடைபெறுவதில் சறுக்கல் கண்டது. ஆசிரியர் பி.எஸ். செட்டியார், பத்திரிகைக்கென்று தனி அலுவலகம் வைத்திருப்பது வீணான பணச்செலவு என எண்ணத்தொடங்கினார். அதனால், பத்திரிகையையும் அவர் குடும்பத்தோடு குடியிருந்த மயிலாப்பூர் அப்பர்சாமி கோயில் தெரு வீட்டுக்கு மாற்றிவிடத் திட்டமிட்டார். அவ்விதமே செய்தார். அண்ணா, சினிமா உலகம் பத்திரிகை அச்சிடப்பட்ட ராயல் பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலைக்குச் சேர்ந்தார்.

எபிஷியன்ட் பப்ளிசிட்டீசுக்கு அண்ணா அசோகனின் வேலை தேவையாக இருந்தது. எனவே அவரைத் தங்கள் நிறுவனத்தில் பணிபுரிபவராகச் சேர்த்துக் கொள்ள எபிஷியன்ட் சகோதரர்கள் முன்வந்தார்கள். சிறிது காலம் அச்சகத்தில் வேலைபார்த்த அண்ணா முடிவில் சகோதரர்களின் விளம்பர ஆலோசனை நிறுவனத்தில் சேர்ந்துவிட்டார்.

நான் வழக்கம்போல் படிப்பதும் எழுதுவதுமாகச் செயலாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது தேவை இல்லாமலே ஒரு வேலை என்னைத் தேடி வந்தது.

'ஹனுமான்' வாரப் பத்திரிகையில் சேர்ந்து அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்று அதன் நிர்வாகிகள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள்.

'ஹனுமான்' தனி வரலாறு உடைய வார இதழாக வளர்ந்திருந்தது. 1930களின் இறுதியில், தேசிய இதழாக அது பிறந்தது. சங்கு சுப்பிரமணியன் சிறிது காலம் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் தி.ஜ. ரங்கநாதன் ஆசிரியப் பொறுப்பேற்றிருந்தார். பிறகு, 'றாலி' என்ற புனைபெயர் கொண்ட எம்.ஜே. ராமலிங்கம் வெகுகாலம் அதன் ஆசிரியராக இருந்தார். அவருக்குப் பிறகு பி.எம். கண்ணன் ஆசிரியரானார். அவர் வாசகர்களின் கவனத்தை ஈர்த்த அவரது நாவல்கள் பலவற்றை அதில்தான் தொடர்கதையாக எழுதினார். அச்சமயம் பி.ஆர்.எஸ். கோபால் சினிமாப் பகுதியைக் கவனித்து வந்தார். அவருடைய 'குண்டூசியின் பதில்கள்' எனும் கேள்வி பதில் பகுதி பெரும் ஆதரவைப் பெற்றிருந்தது.

ஆரம்பத்தில் நல்ல ஆதரவும் கவனிப்பும் பெற்று வந்த 'ஹனுமான்' கால ஓட்டத்தில் தேய்ந்து, விற்பனை குறைந்து, ஏதோ பத்திரிகை என்று வந்து கொண்டிருந்தது. வெகு காலம்வரை தினமணி நாளிதழ் அளவில் வெளிவந்த வார இதழ் பின்னர் தினமணியை இரண்டாக மடித்த அளவில் வரத்தொடங்கியது. விற்பனை குறைந்து, வருமானம் போதிய அளவில் இல்லை என்ற நிலையில், அதிகமான தொகையைச் சம்பளமாகப் பெற்றுவந்த ஆசிரியர்கள் விலகிக் கொண்டார்கள். பிரபலமில்லாத சில எழுத்தாளர்கள் பத்திரிகைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

நிர்வாகமும் கைமாறியது. பத்திரிகை ஆரம்பித்து நடத்திய அதிபர் அதை பத்திரிகை உலக அனுபவமில்லாத- அத் துறைக்கே முற்றிலும் புதியவர்களான சிலரிடம் விற்றுவிட்டார்கள். பத்திரிகையின் வரலாற்றுப் பெருமைக்கும் நல்ல பெயருக்குமாகப் புதியவர்கள் மிக அதிகமான பணம் கொடுக்க நேர்ந்தது. அவர்களால் பழைய அளவு சம்பளம் கொடுக்க இயலாது என்ற நிலையில்தான் அதுவரை ஆசிரியராக இருந்த பி.எம். கண்ணன் விலகிக் கொண்டார். 'குண்டூசி' கோபால் குண்டூசி என்ற பெயரில் சினிமாப்

பத்திரிகை தொடங்குவதற்காக அநேக வருடங்களுக்கு முன்பே விலகியிருந்தார். கேள்வி பதில் பகுதியைக் கவனித்து வந்த 'மைனா' என்ற புனைபெயர் கொண்ட சந்தானம் வெளியிலிருந்து அந்தப் பகுதியை எழுதிக் கொண்டிருந்தார்.

பதிப்பாசிரியர், ஆசிரியர் என்று 'ஹனுமான்' இதழை வாங்கியிருந்த வக்கீல்களின் பெயர்கள் அச்சிடப்பட்டிருக்கும். மருமகனான எஸ். ராஜகோபாலன் என்பவர் எழுத்தார்வம் கொண்டவர். அவர் ஆசிரியர். மாமனாரான வக்கீல் பதிப்பாசிரியர். ஆபீசில் இருந்து கவனித்துக் கொள்ள ஓர் எழுத்தாளர் இருந்தார். அவர் வேறொரு பத்திரிகையில் சேர்வதற்காக 'ஹனுமான்' பொறுப்பை விட்டுவிடுவதில் முனைப்பாக இருந்தார்.

அவர் விலகியதும் பத்திரிகையைக் கவனித்துக் கொள்வதற்காக அவர்கள் என்னை அழைத்தார்கள். எஸ். ராஜகோபாலன் பத்திரிகைத் துறையில் தாங்கள் ஏமாற்றப்பட்ட கதையைச் சொன்னார். பத்திரிகை நஷ்டத்தில்தான் நடக்கிறது; இன்னும் சிறிது காலம் நடத்திப் பார்க்கலாமே என்ற ஆசையிருக்கிறது. துணை ஆசிரியருக்கு அதிகமான சம்பளம் கொடுப்பதற்கில்லை. நீங்கள் எவ்வளவு எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டார். நான் நூறு ரூபாய் போதும் என்று சொன்னேன்.

1950 பிப்ரவரியில் நான் 'ஹனுமான்' வார இதழில் சேர்ந்தேன். கதைகள், கட்டுரைகள், சுவையான விஷயங்கள் என்று நிறையவே எழுதினேன். எஸ். ராஜகோபாலனும் அதிகம் எழுதினார். வெளியிலிருந்து வருகிற கதைகளைப் படித்து, பிரசுரிக்கத் தகுதியானவற்றைத் தாராளமாகவே வெளியிட்டோம். பேசிய தொகை கிடைக்க வழி இல்லை என்பதால் சினிமாச் செய்திகள், கேள்வி பதில்கள் எழுதிக் கொண்டிருந்த 'மைனா' சந்தானம் நின்று விட்டார். ஆகவே, அவற்றையும் நானே எழுதினேன். 'மைனா பதில்கள்' குயிலோசை என்று பெயர் மாற்றம் பெற்றது. 'செவ்வானம்' என்ற தொடர்கதை எழுதினேன். பின்னர் அடுத்த வீட்டுக்காரி என்ற தொடர்கதை வளர்ந்தது. அவ்வப்போது சில புதிய பகுதிகள் சேர்த்தேன்.

இருப்பினும், சோகை பிடித்த பத்திரிகை புதுபலம் பெற்று எழுந்துவிடவில்லை. என் எழுத்துகளுக்கு நல்ல கவனிப்பு கிடைத்தது. சிங்கப்பூர் 'தமிழ்முரசு' ஆசிரியர் 'தமிழவேள்' கோ. சாரங்கபாணி தனது நாளிதழுக்குக் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதித் தரும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து எழுதினேன். ஒரு தொடர்கதையும் எழுதினேன். போதிய அளவு பணம் கிடைத்துவந்தது.

சிங்கப்பூர் தமிழ்முரசுக்குச் சென்னை திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் சாலையில் ஒரு மாடியில் கிளை அலுவலகம் இருந்தது. அதன் ஆசிரியரின் தம்பி இராதாகிருஷ்ணன் அலுவலக நிர்வாகியாக இருந்தார். அவரே

என்னிடம் கதை கட்டுரைகள் வாங்கி சிங்கப்பூருக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். சில வருடங்கள் இது தொடர்ந்து நிகழ்ந்தது.

1950,1951 ஆகிய இரண்டு வருடங்கள் நான் 'ஹனுமான்' இதழுக்காக உழைத்தேன். மேலும் வீண் உழைப்பு உழைக்க நான் விரும்பவில்லை. ஹனுமான் ஒப்பேறாத நோயாளி என்று அதை விட்டு விட்டேன்.

அப்போது வை. கோவிந்தனின் 'சக்தி' மாத இதழில் பணியாற்றிக் கொண்டிருந்த விஜயபாஸ்கரன் ஹனுமானுக்காகவும் உழைக்க முன்வந்தார். சிறிது காலம் பாடுபட்டார். முடிவில் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவது வீண்வேலை என்று அதன் நிர்வாகிகளே முடிவுகட்டி, பிரசுரத்தை நிறுத்திவிட்டார்கள்.

விஜயபாஸ்கரன் 'விடிவெள்ளி' என்ற பெயரில் மாதம் இருமுறை இதழ் ஒன்றைத் தொடங்கி நடத்தினார். அரசியல், பொருளாதார விஷயங்களுடன் கலை இலக்கிய விஷயங்களும் அதில் இடம் பெற்றிருந்தன. விறுவிறுப்பான விஷயங்களைக் கொண்ட அந்தப் பத்திரிகை நன்றாகத்தான் இருந்தது. ஆனாலும் அது வெகுகாலம் நடக்கவில்லை. பொருள் இழப்பு அதிகமானதும் விஜயபாஸ்கரன் அதை நிறுத்திவிட்டார். அதற்குப் பல வருடங்களுக்குப் பிறகு தான் அவர் சரஸ்வதி பத்திரிகையை ஆரம்பித்தார். அது 1955இல்.

நான் 'ஹனுமான்' பத்திரிகையில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது ஒரு முக்கிய நிகழ்ச்சி நடந்தது. எனது 'விடியுமா?' நாடகத்தைச் சில தோழர்கள் இரண்டுமுறை மேடையேற்றினார்கள்.

1948இல் நான் 'விடியுமா?' என்ற அந்த நாடகத்தை எழுதியிருந்தேன். அதை எம். சூரி புத்தகமாக வெளியிட்டார். இலட்சிய நோக்குடன் எழுதப்பட்ட நாடகம் அது. இலட்சியவாதியான கதாநாயகன் உயர்ந்த சிந்தனைகளையும் கொள்கைகளையும் பேசும் வசனங்களை அதிகம் கொண்ட நாடகம். சிறிது சம்பவங்களும் உண்டு. அதை மேடையில் நடிக்க ஆசைப்பட்டார் வாத்தியார் வரதராஜன் என்பவர்.

நடிக்கவேண்டும் என்ற ஆர்வம் உடைய இளைஞர்கள் பலரைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குப் பயிற்சி அளித்து நாடகங்களை அரங்கேற்றுவதை உபதொழிலாகக் கொண்ட பலர் சென்னையில் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நாடகக் கலையை உய்விக்க வேண்டும் என்கிற உயர்நோக்கம் எதுவும் கிடையாது. சினிமாவில் சேர்ந்து நடித்துப் பணமும் பெயரும் சுகபோக வாழ்வும் பெற வேண்டும் என்ற ஆசை உள்மன உந்துதலாக இருந்தது.

ஏதாவது ஒரு நாடகத்தைப் பயின்று, எப்படியாவது மேடை ஏற்றி நடித்து விடுவது. அந்த நாடகத்துக்குச் சினிமாத் துறைப் பிரபலங்களில் எவரையாவது

தலைமை வகிக்கும்படி செய்வது. அவர் திரைப்பட இயக்குநராகவோ, நடிகராகவோ இருப்பார். அவர் நாடகத்தைப் பார்த்துப் பாராட்டுவார்; இளைஞர்களின் நடிப்புத்திறமை அவரை வசீகரிக்கும். அவர் மூலம் ஒன்றிரண்டு பேராவது சினிமாவில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுவிடமுடியும் என இளைஞர்கள் கனவு காண்பது இயல்பாக இருந்தது.

அப்படிப்பட்ட கனவுகளோடு எங்கெங்கிருந்தோ சென்னைக்கு வந்த இளைஞர்களில் அநேகர் சாப்பாட்டுக்காகவும் தங்குமிடத்துக்காகவும் ஓட்டலில் பணியாளர்களாகச் சேர்ந்து உழைத்தார்கள். அவர்களது சினிமா மோகமும் நடிப்புத் தாகமும் அவர்களை ஆட்டிப்படைத்தன. அவர்கள் சிறு குழுக்களாகச் சேர்ந்து, யாராவது ஒரு வாத்தியாரைப் பயிற்சியாளராகக் கொண்டு, நாடகங்களில் நடிப்பதில் ஆர்வம் காட்டினார்கள். இவர்களில் படித்துப் பட்டம் பெற்றவர்களும் இருந்தார்கள்.

இத்தகைய ஒரு குழுவினருக்குத்தான் வாத்தியார் வரதராஜன் பயிற்சி அளித்தார். அவர் பள்ளிக்கூட ஆசிரியராகவும் பணிபுரிந்துவந்தார்.

நாடகத்தில் நடிக்கப் பெண்கள் வேண்டுமல்லவா? அதற்கும் இளம் பெண்கள் மிகுதியாகவே இருந்தார்கள். சினிமாவில் நடிக்கும் ஆசையால் வீட்டை விட்டு, ஊரைவிட்டு, பட்டணம் வந்தவர்கள், சென்னையிலேயே எப்படிஎப்படியோ வாழ்கிறவர்கள், என்றைக்காவது ஒருநாள் நாமும் சினிமா நடிகை ஆகிவிடமுடியும் என்ற ஆசையோடு முயல்வார்கள். அவர்கள் பயிற்சிபெறும் குழுக்களில் சேர்ந்து நடிக்கத் தயாராக இருப்பார்கள். அவர்களுக்கு ஒரு நாடகத்துக்கு - பயிற்சி நாட்களையும் சேர்த்தே தான் - இவ்வளவு ரூபாய் என்று மொத்தமாய்ப் பேசிக்கொள்வார்கள். அது குறைவான தொகையாகத் தான் இருக்கும். பயிற்சி நாட்களில் டிபன், காப்பி, சாப்பாடு எல்லாம் கிடைக்கும். வறுமை நிலையில் உள்ள பெண்கள் இதற்காகவே நாடகத்தில் நடிக்க வருவது உண்டு. அவர்களில் சாமர்த்தியசாலிகள் வேறு வழிகளில் பணம் சம்பாதித்துவிடுவார்கள். இந்த ரகப் பெண்களில் அநேகரிடம் நல்ல நடிப்புத் திறமை இருந்தது.

வாத்தியார் வரதராஜன் 'விடியுமா?' நாடகத்துக்கு இரண்டு பெண்களை ஏற்பாடு செய்திருந்தார். அவர்களில் ஒருத்தி அழகான தோற்றம் பெற்றிருந்தாள். இன்னொருத்தி நல்ல நடிப்புத் திறமையும் வசனங்களை நன்கு உச்சரிக்கும் ஆற்றலும் பெற்றிருந்தாள்.

நாடகத்துக்குக் கவிஞர் தமிழ்ஒளி அருமையான பாடல்கள் எழுதி உதவினார். நாடக அரங்கேற்றத்துக்கு அந்நாளையப் பிரபல திரைப்பட இயக்குநர் கே. சுப்பிரமணியத்தை அழைத்திருந்தார்கள். பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் க. அன்பழகனைத் தலைமை வகித்துப் பாராட்டிப் பேசுவதற்காகக் கூப்பிட்டிருந்தார்கள்.

நாடகம் விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடைபெற்றது. நன்றாகவே அமைந்திருந்தது. பேராசிரியர் அன்பழகன் நாடகத்தையும் நடித்தவர்களையும் வெகுவாகப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். டைரக்டர் சுப்பிரமணியம் வரவேயில்லை. அது நாடகத்தில் நடித்த தோழர்களுக்கு ஏமாற்றம் அளித்தது.

பத்திரிகைகள் பாராட்டி எழுதியிருந்தன. அதனால் மகிழ்ச்சி அடைந்த வாத்தியார் வரதராஜனும், தொழிலாளத் தோழர்களும், சில மாதங்களுக்குப் பிறகு விடியுமா? நாடகத்தை மீண்டும் மேடை ஏற்ற முன்வந்தார்கள். இம்முறை வரதராஜனே கதாநாயகன் பாத்திரத்தை ஏற்று நடித்தார். நாடகம் அனைவருக்கும் திருப்தி தந்தது. அதைத் தவிர வேறு பலன் எதுவும் கிட்டவில்லை. அதன் பிறகு வரதராஜன் என் பார்வையில் படவில்லை.

விடியுமா? நாடகமும் கவனிக்கப்படாமலே போயிற்று.

23

நான் ஹனுமான் பத்திரிகைப் பணியை விட்டதும் எனக்கு நானே ஒரு தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டேன், இனிமேல் எந்தப் பத்திரிகை அலுவலகத்துக்கும் போய்ப் பணி புரிவதில்லை என்று. வழக்கம்போல் வீட்டில் இருந்தவாறே படிப்பதும் எழுதுவதும் என்று காலம் கழிப்பதே நல்லது என்று.

எனினும், என் மனஉறுதியைக் குலைக்க முயல்வன போல சிலசில வாய்ப்புகள் அவ்வப்போது வரத்தான் செய்தன.

ஒருநாள் சின்ன அண்ணாமலையும் கவி கா.மு. ஷெரீபும் தேடிவந்தார்கள். அதையும் இதையும் பேசிப் பொழுது போக்கிவிட்டு, சின்ன அண்ணாமலை சொன்னார்: 'நாங்கள் உங்களைப் பார்க்க வந்தது ஒரு முக்கிய விஷயமாக. ஷெரீப் வாரப் பத்திரிகை ஒன்று ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்கிறார். அவருக்குத் துணையாக அந்தப் பத்திரிகையில் வேலை செய்ய நீங்கள் வந்தால் நன்றாக இருக்கும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். என்ன சொல்கிறீர்கள்?'

'நான் அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை' என்று சொன்னேன் அவர்கள் எதிர்பார்த்திராத பதில் அது.

'ஏன்? போதுமான சம்பளம் கிடைக்காது என்று நினைக்கிறீர்களா?' என்று அண்ணாமலை கேட்டார்.

'சம்பளத்தைப் பற்றி ஒன்றுமில்லை. நான் எந்தப் பத்திரிகைக்கும் வேலைக்குப் போக விரும்பவில்லை. புதுசோ. பழசோ, எந்தப் பத்திரிகைக்குமே தான்!'

'என்ன காரணம்?'

'என் மனசுக்குப் பிடிக்கவில்லை. என் மனசுக்கு ஒத்துவராத காரியங்களை நான் செய்வதில்லை. நான் படித்தாக வேண்டிய புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. நான் எழுதியாக வேண்டியவையும் அதிகம் உள்ளன. பிற இடங்களுக்கு வேலைக்குப் போவதனால் எனக்கு நஷ்டமே ஏற்படுகிறது' என்று உறுதியாகக் கூறினேன்.

'அப்ப சரி. வெளியிலேயிருந்து கதை கட்டுரைகள் எழுதிக்கொடுங்கள்' என்று சொல்லிவிட்டு, இரண்டு பேரும் விடை பெற்றுச் சென்றார்கள்.

அவர்களுக்கு ஏமாற்றமும் வருத்தமும் அளிக்க நேர்ந்ததற்காக நான் வருத்தம் எதுவும் கொள்ளவில்லை.

சிறிது காலத்துக்குப் பின்னர் வேறொரு அழைப்பு வந்தது. எபிஷியன்ட் பப்ளிசிட்டீஸ் சகோதரர்களின் நண்பர் ஒருவர் மதுரையில் நடந்து வந்த நாளிதழ் 'தமிழ்நாடு' அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். விளம்பரப்பிரிவை அவர் கவனித்து வந்தார். மதுரையிலிருந்து சென்னை வந்த அவர் கணபதி ஐயரிடம், மதுரைப் பத்திரிகைக்கு ஓர் உதவி ஆசிரியர் தேவை என்றும், வல்லிக்கண்ணன் வருவதாக இருந்தால் கூடவே அழைத்துப் போகலாம் என்றும் தெரிவித்தார். கணபதி என் அண்ணா மூலம் என் கருத்தை அறிய முயன்றார்.

'நான் எந்தப் பத்திரிகையிலும் சேர விரும்பவில்லை. அதிலும் தினசரிப் பத்திரிகை வேலை எனக்கு ஒத்துவரவே வராது. ஒரு வாரம் பகல் வேலை, ஒரு வாரம் இரவு வேலை என்று மாற்றி மாற்றி உழைக்க வேண்டியிருக்கும். அது எனக்குச் சரிப்படாது' என்று கூறிவிட்டேன்.

வேறொரு முக்கிய அழைப்பு சிங்கப்பூரில் இருந்து வந்தது. 'தமிழ்முரசு' என் எழுத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருந்தது. நான் சிங்கப்பூர் சேர்ந்து, தமிழ்முரசு ஆசிரியர் குழுவிலேயே இடம் பெற்றால் பத்திரிகைக்கும் நல்லது எனக்கும் நல்லது என்று அதன் ஆசிரியர் சாரங்கபாணி எண்ணினார். அப்படி நான் அங்கு வரச் சம்மதிப்பேனா என்று கேட்டு எழுதும்படி அவர், சென்னை அலுவலகத்தைக் கவனித்து வந்த அவருடைய சகோதரர் இராதாகிருஷ்ணனுக்கு எழுதினார். சகோதரர் என்னிடம் கேட்டார். எனக்குச் சம்மதமில்லை என்று சொல்லிவிட்டேன்.

அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ள விரும்பாத ஆசிரியர் சாரங்கபாணி மீண்டும் அவர் தம்பிக்கு எழுதினார். வல்லிக்கண்ணன் சிங்கப்பூருக்கு

வருவதனால் அவருக்கு நன்மைகளே கிட்டும். தமிழ்நாட்டில் உள்ளதைவிட வளமான வாழ்க்கையைப் பெற முடியும். கோலாலம்பூர் தமிழ்நேசனுக்குப் பணியாற்ற வந்திருக்கும் எழுத்தாளர் கு. அழகிரிசாமி வாழ்க்கை வசதிகளை அதிகரித்துக்கொள்ள முடிந்திருப்பதைப் போல வல்லிக்கண்ணனும் பயன் அடையலாம். அழகிரிசாமி போலவே நல்ல இடத்தில் திருமணம் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்புகூட எதிர்ப்படலாம் என்றெல்லாம் அவர் ஆசைகாட்டி எழுதியிருந்தார்.

தம்பி அந்தக் கடிதத்தை என்னிடம் காட்டினார். நீங்கள் சிங்கப்பூர் போவதே நல்லது என்றார். தமிழ்நாட்டில் இருந்து சிரமப்படுவதை விட, சிங்கப்பூர் சென்று சவுகரியமாக வாழலாம்; பணமும் சம்பாதிக்கலாம்; அண்ணன் சொல்வது போல, திருமணம் செய்து கொள்வதற்கு நல்ல பெண்ணும் கிடைக்கும் என்று அவர் பங்கிற்கு அவர் ஆசைத் தூண்டில் போட்டார்.

எனக்குத் தமிழ்நாட்டில் கிடைக்கிற வசதிகளே போதும். திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறவர்கள் அல்லவா பெண்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்! நான் இன்ன மாதிரிதான் வாழ்வது என்று தீர்மானித்துவிட்டேன். நான் தேர்ந்து கொண்ட வாழ்க்கைமுறையில் ஏற்படுகிற சிரமங்கள் எனக்குச் சிரமங்களாகத் தோன்றா என்று தெரிவித்தேன். வாழ்க்கை வசதிகளும் சுகபோகங்களும் தான் முக்கியம் என்று நான் கருதியிருந்தால், எனக்குக் கிடைத்த சினிமா வாய்ப்புகளையே நான் பயன்படுத்தி லாபம் அடைந்திருக்க முடியும் என்றும் சொன்னேன்.

அதன் பிறகும் நண்பர் ஏன் வலியுறுத்தப் போகிறார்!

தமிழ்நாட்டில் திறமை உள்ள எழுத்தாளர்களுக்கு- அதிலும் நாங்கள் எண்ணுவதை எங்கள் விருப்பம் போல்தான் எழுதுவோம் என்று தன்மான உணர்வோடு எழுதிக் கொண்டிருப்பவர்களுக்கு -உரிய மதிப்பும் போதிய அங்கீகாரமும் கிட்டுவதில்லை. இதைத் தன்மான உணர்வு மிகுந்த, சுயசிந்தனையும் எழுத்தாற்றலும் நன்கு பெற்றிருந்த சுப. நாராயணன் அடிக்கடி சொல்லிவந்தார். எனக்கு எழுதிய கடிதங்களிலும் எழுதினார். இங்குப் பத்திரிகை அலுவலகங்களில் வேலை பார்க்கும் உதவி-துணை-ஆசிரியர்களுக்கு கும்பிடுபோட்டு, நல்லபிள்ளைகளாக நடந்து, அவர்களைப் பாராட்டிப் புகழ்ந்து பேசுகிற எழுத்தாளர்கள் வேகமாக வளரமுடியும். அல்லது, அரசியல் கட்சி எதையாவது சார்ந்து, அதன் தலைவர்களுக்கு நல்லபிள்ளையாகத் துதிபாடி வாழ்த்தி வணங்குகிறவர்கள் முன்னேறமுடியும். என்னையும் உங்களையும் போன்றவர்களுக்கு வளர்ச்சியே கிடையாது, இந்த நாட்டில். நான் மலேயாவுக்குப் போகிறேன். பின்னர் நீங்கள் அங்கே வரலாம் என்று சுப. நாராயணன் சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்படியே அவர் கோலாலம்பூர் போய்ச் சேர்ந்தார். அங்கு நல்ல வேலை ஒன்று அவருக்குக் கிடைத்தது. அத்துடன் மலேயா 'தமிழ் நேசன்'

பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினார். சிறுகதை எழுதுவது எப்படி என்று வகுப்புகள் நடத்தி இளைஞர்களை எழுத்தாளர்களாக்குவதில் உற்சாகம் காட்டினார். கந்தசாமி வாத்தியார் என்று பெயர் வைத்துக்கொண்டு உருப்படியான காரியங்கள் பல செய்தார்.

ஆனாலும் அவருடைய குணங்கள் அங்கும் அவருக்கு எதிர்ப்பாளர்களையே மிகுதியாகப் பெற்றுத் தந்தன. மேலதிகாரிகளோடும், பழகியவர்களோடும், நண்பர்களோடும் சதா சண்டை பிடித்து, கெட்ட பெயர் வாங்கிக் கொண்டார். கடைசியில் மனஅமைதியின்றி இறந்து போனார்.

அவர் நடத்திய கதை வகுப்புகளையும், தமிழ்ப்பணிகளையும் மலேயாத் தமிழர்கள் மறக்கவில்லை. பயன் பெற்றவர்கள் நினைவுகூரத் தவறவுமில்லை. அவருக்குப் பிறகு கோலாலம்பூருக்குத் 'தமிழ்நேசன்' இதழில் பணிபுரியச் சென்ற கு. அழகிரிசாமியும் சுப. நாராயணனின் பணிகள் குறித்துப் பாராட்டி எழுதியிருக்கிறார்.

'சக்தி' பத்திரிகையை வை. கோவிந்தன் நிறுத்திவிட்ட பிறகு, அதில் ஆசிரியராகப் பணிபுரிந்த கு. அழகிரிசாமி வேலையில்லாதவராகிச் சிரமப்பட்டார். கோலாலம்பூர் 'தமிழ் நேசன்' பணி வந்ததும், அவர் மலேயாவுக்கு மகிழ்வுடன் போனார். அங்கே அவர் வசதியாக வாழமுடிந்தது. சங்கீதப் பயிற்சி உடைய ஒரு பெண், கு.அ.வின் இசைநயம் செறிந்த கதைகளால் ஈர்க்கப்பட்டு, அவர் ரசிகை ஆகி, அவரையே மணம் புரிந்து கொண்டாள். இசைத் துறையில் முன்னேறிப் புகழ் பெறவேண்டும் என்ற உள்உந்துதல் காரணமாக, அந்த அம்மணி கணவனைத் தூண்டி, வற்புறுத்தி, தமிழகத்துக்கே அவர் திரும்பிவரும்படி செய்தார். மீண்டும் வாழ்க்கைத் துயரங்களில் சிக்கிச் சுழன்றார் அழகிரிசாமி.

கிராம ஊழியன் காலத்திலேயே என் நண்பராகிவிட்ட – என்னிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்த சுப. நாராயணன், கோலாலம்பூரில் வாழ்ந்தபோது, நீங்கள் எப்போது இங்கே வருகிறீர்கள் என்ற கேட்டுக்கொண்டேயிருந்தார். சிங்கப்பூர் 'தமிழ்முரசு' வேலையை வைத்துக்கொண்டு விரும்பி அழைத்து போதும், நான் அங்கே வர மறுத்துவிட்டதை அதன் ஆசிரியர் மூலம் அறிந்த நண்பர் எனக்காக வருத்தப்பட்டார். வேதனையோடு கடிதம் எழுதினார். 'தமிழ்நாட்டில் என்ன இருக்கிறது என்று அதைவிட்டு வர நீங்கள் மறுக்கிறீர்கள்? தமிழ்நாடு திறமையான, தன்மானமுள்ள எழுத்தாளர்களைச் சாகடிக்கும் இயல்புடையது.

திறமையான எழுத்தாளர்களுக்கு உரிய அந்தஸ்தை அந்த நாடு தருவதேயில்லை. கவி பாரதியாரை அது வாழவைத்ததா? புதுமைப்பித்தனுக்கு உரிய வாழ்வு தந்ததா? இப்படி எத்தனையோ எழுத்தாளர்களை, அவர்களது மதிப்பை அறியாது, அலட்சியப்படுத்திவரும் மண் அது. அதன்மீது உங்களுக்கு

ஏன் இவ்வளவு பற்றுதல் என்று எனக்கு விளங்கவேயில்லை' என்று துயருற்றிருந்தார் சுப. நாராயணன்.

'நான் உருப்பட விரும்பாதவன் என்றே வைத்துக்கொள்ளுங்கள். என் மனசுக்குப் பிடித்தபடி வாழ்வதுதான் எனக்கு சந்தோஷம் தரும்' என்று நண்பருக்கு எழுதினேன்.

இதையே இன்னொரு நண்பரிடம் நேரில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1940களில் 'இந்திரா' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக அறிமுகமாகி எனக்கு நண்பரானவர் ப. நீலகண்டன். கால ஓட்டத்தில் அவர் நாடக ஆசிரியராகி, பின்னர் சினிமாத் துறையில் புகுந்து வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருந்தார். ஏவி.எம். ஸ்டுடியோவில் சேர்ந்து படக்கதை வசனம் எழுதி, அப்புறம் இயக்குநர் ஆக வளர்ந்தார். இடையில் சொந்தமாகப் படம் பிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார்.

அந்தச் சமயத்தில்தான் எங்கள் சந்திப்பு மீண்டும் ஏற்பட்டது. சென்னை மவுண்ட்ரோடில் என் அண்ணாவும் நானும் நடந்து சென்றதைக் காரில் போன அவர் பார்க்க நேரிட்டது. காரைப் பின்னுக்கடித்து எங்கள் அருகில் வரச்செய்து நிறுத்தி, கீழே இறங்கி மகிழ்ச்சியோடு நலம் விசாரித்தார். இப்போது எங்கே இருக்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள், வாழ்க்கைநிலைமை எப்படி இருக்கிறது? என்று பிரியமாக விசாரித்தார். தன்னைப் பற்றியும் சொன்னார். 'வெகு காலத்துக்குப் பிறகு உங்களைப் பார்த்தது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. உங்களுடன் நிறையப் பேச வேண்டும்' என்று கூறினார். விலாசம் கேட்டு வாங்கிக்கொண்டார். வண்டி அனுப்புகிறேன். ஒருநாள் வாங்க. பேசலாம் என்றார்.

அவ்விதமே அவரது அழைப்பின் பேரில் அண்ணாவும் நானும் நீலகண்டன் அலுவலகம் சேர்ந்தோம். நல்ல வசதியான இடம் தான். அவர் அன்புடன் வரவேற்று பிரியமாக உபசரித்தார். எங்கள் நலம் அலுவல்கள் பற்றி எல்லாம் விசாரித்தார். பார்த்த சினிமாப்படங்கள் பற்றியும் பேசினோம். அவர் தமது முயற்சிகள், புதிய திட்டங்கள் பற்றிச் சொன்னார். அப்போது அவர் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த படத்துக்குக் கதை, வசனம் எழுதுவதில் உதவிபுரிவதற்காக நான் வரமுடியுமா என்று கேட்டார்.

'முடியாது; சினிமாத் துறைக்கு வராமலே நான் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன' என்று தெரிவித்தேன்.

'உங்களுக்கு நான் ஏதாவது உதவிசெய்யலாம் என்று நினைத்தேன்...'

'என்னை நான் இருப்பது போலவே இருக்கவிடுவதுதான் எனக்குச் செய்கிற பெரிய உதவியாக இருக்கும். நான் படித்தாக வேண்டிய புத்தகங்கள் அதிகம் இருக்கின்றன. எழுத வேண்டியவையும் நிறையவே தான். அவற்றை என் இஷ்டம் போல் செய்துகொண்டிருக்க விடுவதுதான் மற்றவர்கள் எனக்குச் செய்கிற உதவியாகும்' என்றேன்.

அதன் பிறகு அவர் அதிகம் பேசவில்லை. 'நீங்கள் படித்த நாவல்களில், படிக்கிறவைகளில், சினிமாவுக்கு ஏற்ற நல்ல கதை அம்சம் கொண்டவை இருந்தால் சொல்லுங்க. அவ்வப்போது எனக்குத் தெரியப்படுத்துங்க' என்றார்.

சிறிது நேரத்தில் நாங்கள் அவரிடம் விடைபெற்றுத் திரும்பிவிட்டோம்.

இப்படி வலிய வருகிற வாய்ப்புகளை உதறித் தள்ளிக்கொண்டிருப்பது நல்லதில்லை என்று நண்பர்கள் சிலர் சொன்னார்கள். உங்களுக்குப் பரிபூரண திருப்தி அளிக்கக்கூடிய வேலை எதுவும் கிடைக்காது; கிடைக்கிறவற்றை உங்களுக்கு உகந்தபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டியது தான். வாழ்வதற்குப் பணம் வேண்டும் தானே? வேலை செய்யாமல் பணம் கிடைத்துவிடாது என்றும் நல்லெண்ணத்தோடு சிலர் கூறினர்.

என் மனநிலைக்கு எதுவும் சரிப்பட்டு வராது என்று சொல்லிவந்தேன். சினிமாத் துறைக்குத் திறமையான எழுத்தாளர்கள் தேவையில்லை. படம் பிடிப்பதாகப் பேர் பண்ணிக் கொண்டு பணத்தை, காலத்தை, பிறர் உழைப்பை, ஏகப்பட்ட பொருள்களைப் பாழடித்துக் கொண்டிருப்பவர்களோடு சேர்ந்து தொழில் புரிய எனக்கு இஷ்டமில்லை. சினிமாவில் சேர்ந்து பணமும் புகழும் பெறமுடியும் என்று எதிர்பார்த்தும் ஆசைப்பட்டும் அந்தத் துறைக்குப் போன எழுத்தாளர்கள் உயரவுமில்லை, அவர்களது திறமை சோபிக்கவுமில்லை; அவர்கள் பணம் சம்பாதித்து விடவுமில்லை. உண்மை நிலவரங்களைத் தெரிந்து கொண்டே நானும் ஏன் அந்த நச்சுச் சூழலில் சிக்கி நாசமாய்ப் போக வேண்டும் என்று நண்பர்களுக்குப் பதில் அளித்தேன்.

பத்திரிகைகளுக்கு வேலைக்குப் போகப் பிடிக்கவில்லையென்றால், நீங்களே ஏன் சொந்தப் பத்திரிகை நடத்தி உங்கள் மனம்போல் எல்லாம் எழுதக் கூடாது? என்று சிலர் கேட்டார்கள்.

எழுதத் தெரிந்த எழுத்தாளர்கள் மட்டுமல்ல; அரசியல் மேடைகளில் பேசி முழக்கிப் பெரும்பேச்சாளர்கள் என்று பெயர் பெற்றிருந்தவர்களும் ஆளுக்கு ஒரு பத்திரிகை ஆரம்பிப்பது நடைமுறை நிகழ்வாக இருந்தது. அதிலும், சுதந்திரத்துக்குப் பிறகு பத்திரிகைகள் அதிகமாகவே தோன்றின. அவை நீடித்து நடக்கவுமில்லை. ஒரு சில மாதங்களிலேயே மறைந்து போயின. விடாப்பிடியாக வளரமுயன்ற சில இதழ்கள் ஒரு ஆண்டு காலம் வாழ முடிந்ததே அரும் பெரும் சாதனையாகத்தான் இருந்தது. நாலைந்து வருடங்கள்

தொடர்ந்து வரமுடிந்தது என்றால், அந்தப் பத்திரிகை மகத்தான வெற்றி என்றே மதிக்கப்படவேண்டும்.

பணவசதி இல்லாமல், எழுத்தாற்றலையும் இலட்சிய வேகத்தையும் கனவுகளையும் துணைக்கொண்டு எந்த எழுத்தாளர் பத்திரிகை நடத்த முனைந்தாலும், அது தோல்வியாகவே முடியும். இதைப் பத்திரிகை வரலாறு நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

உண்மை நிலைமைகளைத் தெரிந்து கொண்டே நானும் ஏன் 'விழலுக்கு நீர் பாய்ச்சி மாய' வேண்டும்? என்பதே என் பதிலாக இருந்தது.

புத்தகங்கள் வெளியிடும் எனது முயற்சியே பணபலம் இல்லாத காரணத்தால் நல்லமுறையில் வளரமுடியாத நிலையில்தான் இருந்தது. எனது கதைகளைத் தொகுத்துப் பெரிய புத்தகமாகக் கொண்டுவர வசதிப்படவில்லை. நாவல்களைப் புத்தகமாக்குவதற்கு வசதிகள் இல்லை. சின்னச் சின்ன வெளியீடுகளே 'சாந்தி நிலையம்' பிரசுரங்களாக வந்தன. நண்பர் எம். சூரியும், பணபலம் போதுமான அளவு இல்லாததால் சிறுசிறு புத்தகங்களையே வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

சூரி வெளியிட்ட பெரிய புத்தகம், என் அண்ணா அசோகன் தமிழாக்கிய மாக்சிம் கார்க்கியின் 'லோயர் டெப்த்ஸ்' நாடகம் தான். 'அதலபாதாளம்' என்ற பெயரில் அது புத்தகமாக வந்தது.

'ஹனுமான்' வார இதழில் நான் எழுதிய தொடர்கதை 'செவ்வானம்' துறையூர் எரிமலைப் பதிப்பகம் தோழர்களால் 1951இல் புத்தகமாக வெளியிடப்பட்டது. அது பெரிய புத்தகம் தான்.

நீங்கள் ஒதுங்கியிருந்தபடியே என் எழுத்துக்கள் புத்தகங்களாக வரவேண்டும்-வரவில்லையே என்று சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை. புத்தகம் வெளியிடுவோரைப் - பதிப்பக அதிபர்களைப் போய்ப் பார்த்துப் பேச வேண்டும். உங்கள் எழுத்துக்களைப் புத்தகங்களாக வெளியிடும்படி கோரிக்கை வைக்கவேண்டும். அவர்கள் வியாபாரிகள். நீங்கள் ஒருதடவை இரண்டு தடவை போய்ப்பார்த்து வேண்டுதல் செய்தால் போதாது. பலமுறை பார்க்கவேண்டும். அவர்களது விருப்பு வெறுப்புகளுக்கத் தக்கபடி பேசி, அவர்களது பேச்சைக் கேட்டு சந்தோஷப்பட வேண்டும். அப்புறம் அவர்கள் உங்கள் எழுத்துக்களைப் புத்தகமாக வெளியிட மனம்கொள்வார்கள் என்று ஒரு அனுபவசாலி விவரித்தார்.

இவை எல்லாம் எனக்கு உவப்பான காரியங்கள் இல்லை. பத்திரிகை அலுவலகங்கள், பதிப்பகங்கள் முதலியவைகளுக்குப் 'படைஎடுக்கவோ' 'முற்றுகையிடவோ' நான் விரும்பியதில்லை.

அப்படியானால் உங்கள் எழுத்துக்கள் வெளிச்சத்தைக் காணப்போவதில்லை என்றார் அந்த நண்பர்.

'அதனால் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது!' என்று சிரித்தேன் நான்.

நீங்கள் பதிப்பகம்தோறும் அலைய வேண்டாம்; பதிப்பக அதிபர்களுக்குக் கடிதங்கள் எழுதி முயற்சிக்கலாமே என்று ஒரு அன்பர் யோசனை கூறினார்.

அதைச் செய்து பார்க்கலாம் என்று நான் செயலில் இறங்கினேன். சென்னையில் இருந்த முக்கியப் பதிப்பாளர்கள் பலருக்கும் கடிதங்கள் எழுதினேன்.

'உங்கள் எழுத்துக்கள் தரமானவை. அவை புத்தகங்களாக வெளிவர வேண்டும் தான். ஆனால் நாங்கள் வெளியிடத் திட்டமிட்டு வைத்துள்ள எழுத்துப் பிரதிகள் ஏராளமாக இருக்கின்றன. இந்நிலையில் உங்கள் சிறு கதைகளை ஏற்றுப் புத்தகமாக வெளியிட இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று 'கலைமகள் பதிப்பகம்' சார்பில் கி.வா. ஜகன்னாதன் பதில் எழுதியிருந்தார்.

'நாங்கள் வெளியிட்டாக வேண்டிய நாமக்கல் கவிஞர் படைப்புகளே மிகுதியாக உள்ளன. வேறு சில முக்கிய நூல்கள் தயாராக வேண்டும். எனவே, உங்கள் எழுத்துக்களைப் புத்தகமாக வெளியிட முடியாமல் இருக்கிறோம். வருத்தம்'. இப்படி 'தமிழ்ப்பண்ணை' அண்ணாமலை தெரிவித்தார்.

இந்த விதமாக இன்னும் சிலரும் வருத்தம் தெரிவித்துவிட்டார்கள். சிலர் என் கடிதத்துக்கு எதிரொலி தரவேயில்லை.

இருப்பினும் மீண்டும் காலம் எனக்கு உதவிபுரிய முன்வந்தது! புத்தக வெளியீட்டுத் துறைக்கே தொடர்பில்லாத ஒரு நண்பர் என் சிறுகதைத் தொகுப்பு ஒன்றைப் பிரசுரிக்க ஆசைப்பட்டார்.

திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவின் ஆரம்பத்தில் நெய்க்கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார் சென்னியப்பன் என்றொரு அன்பர். அவருக்குத் தமிழ் இலக்கியத்திலும் ஈடுபாடு இருந்தது. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பாலூர் கண்ணப்பமுதலியார் போன்ற அறிஞர்களைத் தெரிந்துவைத்திருந்தார். புதுமை இலக்கியத்திலும் அவருக்கு அறிமுகம் ஏற்பட்டிருந்தது.

நான் 'ஹனுமான்' இதழுக்காக உழைத்த காலத்தில், தினந்தோறும் காலையிலும் மாலையிலும் அவர் கடைமுன்பாகப் போய் வருவதைச் சென்னியப்பன் கவனித்திருந்தார். அவராகத் தம்மை அறிமுகம் செய்துகொண்டு பழகலானார். நாங்கள் நண்பர்களானோம்.

அவரது நெய்க்கடைக்கு எதிர்வரிசையில் 'லாயல் பிரஸ்' என்றொரு அச்சகம் இருந்தது. அதன் முதலாளி சென்னியப்பனின் நண்பர். இருவரும் பேச்சோடு பேச்சாகத் தொழில் வளர்ச்சி பற்றியும் திட்டமிட்டார்கள். புத்தக வெளியீட்டுத் தொழிலில் ஈடுபட இருவரும் தீர்மானித்தார்கள். கூட்டு சேர்ந்தார்கள். 'கயிலைப் பதிப்பகம்' தொடங்கினார்கள்.

அதன் முதலாவது வெளியீடு தெ.பொ.மீ. அவர்களின் கட்டுரை நூலாகும். இரண்டாவது பிரசுரம் 'வல்லிக்கண்ணன் கதைகள்'. இத் தொகுப்பு 1954இல் வெளிவந்தது.

எனது முதல் கதைத் தொகுப்பு, கோயம்புத்தூரில் எஸ்.பி. கிருஷ்ணன் என்ற நண்பரால் லாண்டரிக் கடைத் தோழர் ஒருவரது கூட்டுடன் வெளியிடப்பட்டது, 1944இல்.

இரண்டாவது தொகுப்பும் அதே வருடம் வந்துவிட்டது. எஸ். சிதம்பரம் என்கிற வைர வியாபாரியின் மகன் புகழ் மோகம் கொண்டு இலக்கியத் துறையில் இறங்கியதன் பயனாக வெளிவந்தது.

மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவருவதற்குப் பத்துவருடங்கள் தேவைப்பட்டுள்ளது. இதையும் தொழில்முறைப் புத்தக வெளியீட்டாளர்கள் பிரசுரமாக்கவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது ஆகும்.

24

கால ஓட்டத்தில் எத்தனையோ மாற்றங்களும் வளர்ச்சிகளும் புதுமைகளும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. அரசியல், சமூகம், தொழில் முதலிய துறைகளில் ஏற்படும் இவை மற்றுமுள்ள சகல துறைகளையும் வெகுவாகப் பாதிக்கின்றன.

இந்திய நாடு விடுதலை பெறவேண்டும் என்பதற்காக அகில இந்திய தேசீயக் கட்சிகள் போராடின. மகாத்மா காந்திஜீயின் தலைமையில் காங்கிரஸ் கட்சி இதில் பெரும்பங்கு வகித்தது.

இந்திய சுதந்திரப் போராட்டம் வெறும் அரசியல் போராட்டமாக மட்டுமே அமைந்திருந்ததில்லை. அரசியல் விடுதலை உணர்வோடு, சமூக சீர்திருத்த வேட்கையும், தனி மனிதப் பண்பாட்டு உயர்வு உணர்ச்சியும், தாய் மொழி வளர்ச்சி வேகமும் சேர்ந்தே செயல்பட்டன.

மொழி வளர்ச்சி உணர்வு பத்திரிகைகளின் வளர்ச்சிக்குத் துணை புரிந்தது. நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் விடுதலை உணர்வு, சமூகச் சீர்திருத்த உணர்வு, பண்பாட்டு உயர்வு, இலக்கிய உணர்வு முதலியவற்றைப் பரப்புவதற்குப் பத்திரிகைகள் உதவின.

இலக்கியத்தை முதன்மைப் பணியாகத் தேர்ந்து கொண்ட பத்திரிகைகள் 'மறுமலர்ச்சி இலக்கிய இதழ்கள்' என்று கூறிக் கொண்டன. அவற்றில் எழுதியவர்கள் மறுமலர்ச்சி இலக்கிய எழுத்தாளர்கள் என அறியப்பட்டனர்.

தமிழில் கவி பாரதியார் அனைத்துத் துறைகளின் மறுமலர்ச்சிக்காகவும் எழுத்து மூலம் சிந்தனை ஒளி பரப்பினார். அவருக்குப் பின் வந்து, அவர் காட்டிய வழியில் நடக்க முனைந்த இலக்கியவாதிகள் 'மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்' என்று பெயர் பெற்றார்கள்.

காங்கிரசின் வழிமுறைகளிலும் காந்தியின் வழிகாட்டலிலும் நம்பிக்கை இழந்து, எதிர்ப்புக் காட்டி, தத்தம் வழியில் செயல்பட முற்பட்ட கட்சிகளும் செல்வாக்குப் பெற்று வந்தன. அகில இந்திய ரீதியில் கம்யூனிஸ்டுக் கட்சி சக்தி பெற்று வளர்ந்து கொண்டிருந்தது. தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டுக் கட்சியோடு போட்டியிட்டு வேகவளர்ச்சி பெற்று வந்தது பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்களின் தலைமையில் இயங்கிய திராவிட இயக்கம்.

ஈ.வெ.ரா. பெரியாரின் சிந்தனைகளும் செயல்முறைகளும் வரவர மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெறலாயின. சமூகத்தின் அடிநிலையில் இருந்த, வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த-தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த - இனங்களின் மக்களுக்கு விழிப்பும் உரிமை உணர்வும் போராட்ட உணர்ச்சியும் தந்தன.

பெரியாரும் அவரைப் பின்பற்றியவர்களும் பார்ப்பனீய எதிர்ப்பு, பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு, வடவர் ('பனியா') ஆதிக்க எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, மதஒழிப்பு, மூடநம்பிக்கைகள் மற்றும் வறுமை, விபசாரம், பெண்அடிமைத்தனம் ஆகியவற்றின் ஒழிப்பு, இந்தி எதிர்ப்பு, தமிழ் மற்றும் தமிழர் இன உணர்வு, சமூக சீர்திருத்தப் பிரசாரம் (சாதி ஒழிப்பு, விதவைத் திருமணம், கலப்புத் திருமணம்) முதலிய கொள்கைகளை வேகமாகவும் உணர்ச்சிகரமாகவும் மேடைப் பேச்சுக்கள் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வலியுறுத்தினர்.

அதற்காகப் பலப்பல பத்திரிகைகள் தோற்றுவிக்கப்பட்டன, 1940களிலும் பின்னரும். இலக்கியம் என்பது அவற்றின் முக்கிய நோக்கமாக இருந்ததில்லை. இலக்கிய நோக்குடன் 'பொன்னி' எனும் மாத இதழ் தோன்றியது. அது பாராட்டத் தகுந்த சாதனைகள் புரிந்தது.

அதே சமயம், வேறொரு இலக்கிய நோக்கும் தலை தூக்கியது. உலக அளவில் தோன்றிய இந்த இலக்கியப் போக்கு, இந்திய மொழிகள் அனைத்திலும் கால்பாவியது தமிழ் மொழியிலும் வலுவாக இடம் பெற்று வளரலாயிற்று. அதுதான் 'முற்போக்கு இலக்கிய நோக்கு' . இது கம்யூனிஸ்டு இயக்கம் சார்ந்ததாக இருந்தது.

முற்போக்கு இலக்கிய நோக்கு 'வர்க்க உணர்வை' வலியுறுத்தும் பொருளாதார தத்துவப் பார்வையை - மார்க்சியக் கண்ணோட்டத்தை - அடிப்படையாகக் கொண்டது. கம்யூனிஸ்ட் கொள்கைகளைப் போற்றுவது. முதலாளித்துவ எதிர்ப்பு, முதலாளி வர்க்க ஒழிப்பு, பாட்டாளி வர்க்க உயர்வு, பொருளாதார சமத்துவம் முதலியவற்றை இலட்சியமாகக் கொண்டது.

இந்த இலக்கிய நோக்கை கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகையான 'ஜனசக்தி' ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்தது. பின்னர் 'ஜனயுகம்', 'புதுமை இலக்கியம்' என்று சில இதழ்கள் தோன்றின. இவை சில காலம் பணிபுரிந்து விட்டு மறைந்து போயின.

முற்போக்கு இலக்கிய மனோபாவம் தமிழ்நாட்டில் சிறிது சிறிதாகப் பரவி வந்தது. என்றாலும், முற்போக்கு இலக்கியப் பத்திரிகை என்று எதுவும் இல்லாதிருந்தது. அந்தக் குறையைக் போக்குவதற்காக, தொ.மு.சி. ரகுநாதன் 1954 டிசம்பரில், திருநெல்வேலியிலிருந்து, 'சாந்தி' மாத இதழை வெளியிட்டார்.

'சாந்தி' நடந்து கொண்டிருந்தபோதே, வ. விஜயபாஸ்கரன் சென்னையில் 'சரஸ்வதி' என்கிற முற்போக்கு இலக்கிய இதழை ஆரம்பித்து நடத்தலானார், 1955 மே மாதம் முதல்.

சில வருடங்களுக்குப் பிறகு, தலைவர் ப. ஜீவானந்தம், கம்யூனிஸ்டுக் கட்சியின் இலக்கிய ஏடு ஆக, 'தாமரை'யைத் தொடங்கினார்,1958இல்.

திராவிட இயக்கம் வேகமும் வலுவும் பெற்று வந்த காலத்தில், தலைவர் சி.என். அண்ணாதுரை தமிழர் மறுமலர்ச்சி தமிழ் இன மறுமலர்ச்சி என்ற ரீதியில் பேசியும் எழுதியும் வந்ததால், 'மறுமலர்ச்சி' எனும் சொல் வேறு பொருள் ஏற்றது. அதனால், தனி இலக்கியவாதிகள் 'மறுமலர்ச்சி இலக்கியம்' 'மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்' எனக்குறிப்பிடுவதைக் குறைத்துக் கொண்டார்கள். மெதுமெதுவாக அவ்வழக்கம் மறைந்தும் விட்டது. தூய இலக்கியம், ஆழ்ந்த இலக்கியவாதிகள் போன்ற சொற்கள் வழக்கத்துக்கு வந்தன.

மணிக்கொடி எழுத்தாளர்களின் தாக்கத்தைப் பெற்று, அவ்வழியில் எழுதிய நான் மறுமலர்ச்சி இலக்கிய எழுத்தாளனாக மதிக்கப்பட்டேன். தேசீயவாதிகள் நடத்திய பத்திரிகைகளிலேயே என் எழுத்துக்கள் அதிகம் வந்தன. காந்திஜீயின் இலட்சியங்களிலும் கொள்கைகளிலும் எனக்கு ஈடுபாடு இருந்தது. ஆயினும் அரசியலில் எனக்கு நாட்டமோ ஆர்வமோ கிடையாது.

பெரியாரின் எழுத்துக்கள், அவை வெளிவந்த பத்திரிகைகளை நான் படித்ததில்லை. அவருடைய பகுத்தறிவுச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஒன்றிரண்டு சிறுவெளியீடுகளைப் படித்தது உண்டு. நான் பகுத்தறிவுச் சிந்தனைகளை எழுதுவதில் ஈடுபாடும் வேகமும் கொண்டது இங்கர்சால், வால்டேர், ரூசோ, பெர்னாட்ஷா, பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போன்ற

சிந்தனையாளர்களின் நூல்களைப் படித்ததனால். 'பிரம்ம சமாஜம்' வெளியிட்ட தயானந்த சரஸ்வதி சிந்தனை நூலும் என்னில் தாக்கம் ஏற்படுத்தியிருந்தது. மற்றும் சித்தர் பாடல்கள், தமிழ் இலக்கியங்கள், தமிழ்க் கவிஞர்கள் எடுத்துக் கூறிய சிந்தனைகளும் என் சிந்தனையைப் பாதித்திருந்தன.

இதர பத்திரிகைகளில் என் எழுத்துக்களை விரும்பிக் கேட்டு வெளியிட்டது போல, திராவிட இயக்க இதழ்கள் என்னை அணுகியதில்லை. 'பொன்னி' கூட, என்னை நெருங்கியதில்லை. மாறாக, 1940களில் திராவிட இயக்க ஏடுகள் வல்லிக்கண்ணன் எனும் எழுத்தாளனை வெகுவாகச் சாடியுள்ளன. 'ஆரிய அரவணைப்பு எனும் புளியங்கொம்பைப் பற்றிக் கொண்டு இலக்கிய உலகத்தில் முன்னேறிவரும் வல்லிக்கண்ணன்' என்று ஒருசமயம் திராவிட நாடு பத்திரிகை குறிப்பிட்டிருந்தது., போர்வாள் என்ற ஏடு வசைபாடித் தனிக் கட்டுரையே எழுதியது. அந்நாளையப் பேச்சாளர்கள் சிலர் மேடையிலேயே என்னைக் கண்டித்து முழக்கமிட்டார்கள்.

நான் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்தவனுமில்லை. அன்பு, மனிதநேயம், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், மனிதம் முதலிய உயர்ந்த பண்புகளைப் போற்றும்முறையில் எழுதிவந்ததால், நானும் முற்போக்கு இலக்கியவாதியாக மதிக்கப்பட்டேன். இடதுசாரிப் பத்திரிகைகள் என் எழுத்துக்களை ஏற்றுப் பிரசுரித்தன. முற்போக்கு இலக்கிய நண்பர்கள் தங்கள் பத்திரிகைப் பணிக்கு என் உதவியை நாடினார்கள்.

அப்படித்தான் 'சரஸ்வதி' இதழுக்கு நான் பெரும்அளவில் ஒத்துழைக்க நேர்ந்தது. நண்பர் விஜயபாஸ்கரன் கம்யூனிஸ்டாக இருந்த போதிலும், சரஸ்வதி மாத இதழைப் பொதுவான இலக்கிய ஏடு ஆக- 'கலைமகள்' பத்திரிகை போல - நடத்த விரும்பினார். அதனால், கட்சிக் கொள்கையில் தீவிரப் பற்றுதல் கொண்ட எழுத்தாளர்களின் படைப்புகளோடு, க.நா. சுப்ரமண்யம், சி.சு. செல்லப்பா, ந. சிதம்பரசுப்ரமண்யம் போன்றோரின் எழுத்துக்களையும் வரவேற்றுப் பிரசுரித்தார். சரஸ்வதியின் இரண்டாவது ஆண்டிலிருந்து இந்த வழக்கம் செயல்படுத்தப்பட்டது. எனது உதவியையும் கோரினார்.

சரஸ்வதி தரமான இலக்கிய இதழாக வளர்ந்தது. ஜெயகாந்தன் வளர்ச்சிக்கு அது பெரிதும் துணைபுரிந்தது. இலங்கை எழுத்தாளர்களின் அறிமுகத்துக்கும் அவர்களது இலக்கியமுயற்சிகள் தமிழ் வாசகர்களுக்குத் தெரியவருவதற்கும் உதவியது. நான் முதலில் சிறுகதைகள் மட்டும் எழுதிக்கொண்டிருந்தேன். பிறகு கட்டுரைகள், புத்தக மதிப்புரை, துணுக்குகள், நாவல் சுருக்கம் என்று அதிகமாகவே எழுதினேன், அநேக எழுத்தாளர்கள் இடையில் விட்டுப் பிரிந்து போன போதிலும், நான் சரஸ்வதியின் இறுதி இதழ்வரை எழுதிக் கொண்டிருந்தேன்.

சரஸ்வதி நடந்துகொண்டிருந்த காலத்தில் கவிஞர் தமிழ்ஒளியும் ஜெயகாந்தனும் தினந்தோறும் E டெப்போத் தெரு தோட்ட வீட்டுக்கு வந்து

பொழுது போக்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். பல நாட்கள் கடற்கரைக்குப் போய் மாலை நேரத்தை இனிமையாகப் போக்குவதும் வழக்கமாயிற்று. ஆரம்ப நாட்களில் ஜெயகாந்தன் தமது ஆசைகளையும் இலட்சியக் கனவுகளையும் உணர்ச்சியோடு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய உணர்வுகளும் ஆற்றலும் உழைப்பும் அவரை வளர்ச்சிப் பாதையில் முன்னேறச் செய்தன.

தமிழ்ஒளி பத்திரிகை உலகம், புத்தகப் பிரசுரத்துறை, எழுத்தாளர்கள் பற்றி எல்லாம் கசப்புடன், காரசாரமாகத் தனது விருப்புவெறுப்புகளை ஒலிபரப்புவார். வாழ்க்கை அவரை வெகுவாகச் சோதித்துக் கொண்டிருந்தது. அவருடைய திறமைக்கு உரிய கவனிப்பு கிடைக்கவில்லை.

இடைக்காலத்தில், தி.க.சிவசங்கரன், அவர் பார்த்துக் கொண்டிருந்த பாங்கு வேலையைத் துறந்துவிட்டு, சோவியத் செய்தித் துறையில் பணிபுரிவதற்காகச் சென்னை வந்து சேர்ந்தார். அந்தப் பணிநேரம் போக, 'தாமரை' இலக்கிய இதழின் பொறுப்பைக் கவனிப்பதிலும் அவர் உற்சாகம் காட்டினார்.

ஜீவானந்தம் மறைவுக்குப் பிறகு, எழுத்தாளர் மாஜினி ஆசிரியப் பொறுப்பை விட்டுவிட்ட பின்னர், தி.க.சிவசங்கரன் ஆ. பழநியப்பன் எம்.கே. ராமசாமி மூவரும் ஆசிரியர் குழுவாக இயங்கி, 'தாமரை'யை உற்சாகத்துடன் வளர்த்தார்கள். பத்து வருட காலம் அது நடைபெற்றது. அக்காலகட்டத்தில் 'தாமரை' மிகுந்த கவனிப்புக்குரிய முற்போக்கு இலக்கிய இதழாக விளங்கிற்று,

நான் 'தாமரை'க்காகவும் உழைத்தேன். சிறுகதைகள், புத்தக மதிப்புரை என்று அதிகம் எழுதி உதவினேன். சரஸ்வதி, தாமரைப் பணிகள் மூலம் எனது எழுத்தாற்றல் மேலும் பரவலாகத் தெரிவதற்குக் காலம் துணைபுரிந்தது.

இந்த சந்தர்ப்பதில் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் வேகம் தமிழ்நாட்டில் நிலவியது. ரஷ்ய நூல்களைத் தமிழாக்கிப் புத்தகங்களாக வெளியிடுவதும், அமெரிக்க உதவியோடு அமெரிக்க இலக்கியங்களைத் தமிழில் பிரசுரம் செய்வதும் அதிகம் செயல்படுத்தப்பட்டன. எனக்கும் மொழிபெயர்ப்புப் பணிகள் வந்து சேர்ந்தன.

டால்ஸ்டாய் கதைகள் சிலவற்றைத் தமிழாக்கினேன். அவை அலைட் பப்ளிகேஷன்ஸ் என்ற நிறுவனத்தால் புத்தகமாக்கப் பெற்றன. மாக்சிம் கார்க்கியின் 'டேல்ஸ் ஆஃப் இத்தாலி' என்ற தொகுப்பிலிருந்து சில கதைகளை மொழிபெயர்க்க, அவை 'வெண்புறா வெளியீடு' ஆகப் பிரசுரம் பெற்றன. இவை இரண்டும் 1956 இல் வந்தன.

திருநெல்வேலியில், 'சிந்துபூந்துறை அண்ணாச்சி' எனச் சிறப்புப் பெற்றிருந்த சண்முகம் பிள்ளை முற்போக்கு இலக்கிய நூல்களை வெளியிடுவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அதற்காக 'நெல்லை

பப்ளிஷிங்ஹவுஸ்' அமைக்கப்பட்டிருந்தது. அவரே அநேக நூல்களைத் தமிழாக்கியிருந்தார். கார்க்கி கதைகளில் மொழி பெயர்த்திராத சில சிறுகதைகளைத் தமிழாக்கும் பொறுப்பை என்னிடம் அளித்தார்.

நான் மொழிபெயர்த்த கதைகள் 'சின்னஞ் சிறு பெண்' என்ற புத்தகமாக வந்தன. கார்க்கி கட்டுரைகளை மொழி பெயர்த்தேன். அவை கார்க்கி கட்டுரைகள் என்ற புத்தகமாகப் பிரசுரம் பெற்றன, 1957 இல்.

சண்முகம் பிள்ளை அண்ணாச்சி மிக நல்ல மனிதர். பொது நலப் பணிகள் புரிவதில் ஆர்வம் மிகக் கொண்டிருந்தார். எல்லோரிடமும் அன்பு காட்டி உதவிகள் புரியும் இயல்பினர். அவர் மரணம் அடைகிற வரை, என்னிடம் சகோதர அன்புகாட்டிப் பிரியமாகப் பழகி வந்தார்.

அமெரிக்க நிதி உதவி பெற்று, புத்தகங்கள் வெளியிடுவதில் ஈடுபட்டிருந்த நிறுவனங்களில் 'இந்தியா புக் ஹவுஸ்' என்பதும் ஒன்று. அகில இந்திய ரீதியில் தொழில் நடத்திய இந்த நிறுவனத்தின் கிளை சென்னையிலும் இருந்தது. தமிழ் நூல்களை வெளியிடுவதற்காக அது 'பொள்ள் பப்ளிகேஷன்ஸ்' - முத்துப் பிரசுரம் - என்ற பிரிவை அமைத்திருந்தது. அந்தப் பிரிவின் 'எடிட்டர்' ஆகக் கவிஞர் ச.து.சு. யோகியார் பொறுப்பு வகித்தார்.

அமெரிக்க வெளியீடுகளான கம்யூனிச எதிர்ப்பு நூல்களை இந்தி மொழிகளில் பரப்புவது தான் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம். அதை மறைக்கும் முறையில் நல்ல இலக்கிய நூல்களையும் மொழி பெயர்த்து வெளியிடும் வேலையும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இம் முறையினால் பல நல்ல புத்தகங்கள் தமிழுக்குக் கிடைக்க வழி ஏற்பட்டது. எர்னஸ்ட் ஹெமிங்வே நாவல்கள், ஹெலன் கெல்லர் வரலாறு, எமர்சன் சிந்தனைகள், ஆபிரஹாம் லிங்கன் வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு நாவல், சில சிறுகதைத் தொகுப்புகள் - இப்படி வரவேற்புக்கு உரிய நல்ல நூல்கள் தமிழாக்கப் பெற்றன.

இவ்வகையில், ராபர்ட் ரூஆர்க் எழுதிய 'ஓல்ட் மேன் அன்ட் தி பாய்' என்ற புத்தகத்தைத் தமிழாக்கும் பணி எனக்குத் தரப்பட்டது. இது ஒரு வித்தியாசமான புத்தகம். அனுபவம் மிகுந்த ஒரு முதியவர் தமது வேட்டை அனுபவங்கள், பறவைகள், மிருகங்கள், மீன்கள் மற்றும் மரம், செடி, கொடிகள் பற்றிய தனது பட்டறிவை எல்லாம் தம்முடைய பேரனுக்குச் சொல்கிறார். சுவாரசியமாக, தனிமுறையில் விவரிக்கிறார். அவை நயம் செறிந்த அழகிய நடையில் எழுதப்பட்டுள்ளன. பொருள் பொதிந்த சிந்தனைகளும் அங்கதக் குறிப்புகளும் அவரது விவரிப்புக்குக் கனம் சேர்த்திருக்கின்றன.

'தாத்தாவும் பேரனும்' என்ற பெயரில் அந்த நூலை நான் தமிழாக்கினேன். அழகிய புத்தகமாக அது பிரசுரம் பெற்றது. 'முத்துப் பிரசுரங்கள்' எழுபத்தைந்து பைசா. அல்லது ஒரு ரூபாய் என்ற குறைந்த

விலையிலேயே விற்கப்பட்டன. ஆகவே அவற்றுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. 'தாத்தாவும் பேரனும்' மிகுந்த பாராட்டுதலைப் பெற்றுத் தந்தது.

வெகு நாட்களுக்குப் பின்னரும், எதிர்பார்க்கமுடியாத இடங்களில் இருந்து கூட, எவராவது 'தாத்தாவும் பேரனும்' நூலை வியந்து ரசித்துப் பாராட்டியதைக் கேட்கமுடிந்தது. எனக்கு மனநிறைவும் மகிழ்ச்சியும் தந்தது அது.

திருநெல்வேலியில் ரகுநாதன் 'சாந்தி' மாத இதழை நடத்தி நிறுத்திய சில வருடங்களுக்குப் பிறகு, எஸ்.ஏ. முருகானந்தம் தூத்துக்குடியிலிருந்து 'சாந்தி' என்ற பெயரிலேயே ஒரு பத்திரிகை வெளியிட முன்வந்தார். இது மாதம் இருமுறை ஏடு. இதன் முதல் இதழிலிருந்தே என் எழுத்துக்கள் இடம் பெற்றன. இலக்கியக் கட்டுரைகள், படித்த புத்தகங்கள் பற்றிச் சுவையான விவரிப்புகள், தனிரகமான சிறுகதைகள் என்று 'சாந்தி'யில் நிறையவே எழுதினேன்.

பொருளாதார சிரமங்களினால் 'சாந்தி' பத்திரிகை நிறுத்தப்படுகிற வரை, என் எழுத்துக்கள் அதில் வந்துகொண்டிருந்தன.

இவ்வாறு எனக்குப் பெயரும் கவனிப்பும் அதிகரித்து வந்தபோதிலும், அவை பணம் போதிய அளவு கிடைப்பதற்கு வழி செய்யவில்லை. இலட்சிய நோக்குடனும் கொள்கைப் பற்றோடும் மனஉறுதியோடு சிற்றிதழ்களை நடத்தியவர்கள் மிகுந்த பொருளாதார சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது. அப்படி சிரமங்களைச் சகித்துக் கொண்டு அவர்கள் தளராது இலட்சியப்பணி புரிந்துவந்ததனால், நான் அவர்களுக்கு மகிழ்வுடன் எனது ஒத்துழைப்பை வழங்கினேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் மற்றொரு இலட்சியவாதியாகிய சி.சு. செல்லப்பா துணிந்து, இலக்கிய விமர்சனத்துக்காக ஓர் இதழ் என்று மாதப் பத்திரிகை நடத்த முன்வந்தார். அதற்குத் துணிச்சலாக எழுத்து என்ற பெயரைச் சூட்டினார். துணிகரமான சில கட்டுப்பாடுகளையும் அவர் வகுத்துக்கொண்டார்.

25

கால வேகத்தில் பத்திரிகைகளில் போக்குகளும் மாறியிருந்தன. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு பெரும்பாலான பத்திரிகைகள் தேச விடுதலையையே லட்சியமாகக் கொண்டு பாடுபட்டன. அவற்றில் ஈடுபட்டிருந்த எழுத்தாளர்களில் பெரும்பான்மையோர் அர்ப்பணிப்போடும், தியாக மனப்பான்மையோடும் உழைத்து வந்தார்கள். பத்திரிகை தர்மம் எழுத்தாளர் தர்மம் என்றெல்லாம் கருதப்பட்டன.

நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு மெதுமெதுவாக அனைத்துத் துறைகளிலும், பணம் பண்ணும் ஆசையும் லாபநோக்கும் கொண்டவர்கள் பெருகலானார்கள். பத்திரிகைத்துறையும், புத்தகவெளியீட்டுத் துறையும், இதர தொழில் துறைகளைப் போல, பணம் சம்பாதிக்கக்கூடிய களங்களாக அமையமுடியும் என்ற எண்ணம் உடையவர்கள் நம்பிக்கையுடன் புகுந்து செயல்படலானார்கள். நிறையப் பணத்தை ஈடுபடுத்தி, இத்துறைகளையும் உற்பத்தி சாதனங்களாக்கி, வாசகர்களை 'நுகர்வோர்' ஆக மதித்து, தங்கள் சரக்குகளை அவர்கள் விரும்பி வாங்கும்படி செய்வதற்கான உத்திகள் பலவற்றையும் கையாண்டு வெற்றி காண முற்பட்டார்கள். அவர்களுக்கு லட்சியங்கள் பெரிதல்ல: லட்சங்களே முக்கியமாகத் தோன்றின.

லட்சக்கணக்கில் பத்திரிகைகளை அச்சிட்டுப் பரப்பி, லாபம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்த அவர்கள் மக்களின் ஒழுக்கத்தைச் சிதைப்பது பற்றியும், பண்பாட்டுச் சீரழிவுக்கு வழிவகுப்பது பற்றியும் கவலைப்படவில்லை. திரைப்படங்களும், வர்த்தக நோக்குப் பத்திரிகைகளும் இவ்வகையில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தலாயின.

முன்பு நல்லமுறையில் மொழிப்பணியும் இலக்கியப்பணியும் ஆற்றிக் கொண்டிருந்த பத்திரிகைகள் கூட, பத்திரிகை உலகத்தில் போட்டி போட்டு வாழ்வதற்காகத் தங்கள் போக்குகளை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம் எனக் கருதி அவ்வாறே செயல்பட்டன.

'மக்களுக்குப் பிடிக்கிறதை நாங்கள் கொடுக்கிறோம் என்ற குரல் இலக்கிய உலகத்திலும் அரித்துக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில், பழக்கமுறையாகிவிட்ட ரீதியிலேயே கருத்துக்களையும் அலுக்கும்படியாக, ஒரே விதமாகக் கொடுக்கும் ஒரு மனப்பாங்கு பரவியுள்ள நிலையில், மக்களுக்கு இன்னின்னவைகளைக் கொடுத்துப் படிக்கச் செய்ய வேண்டும், புதுப்புது விதமாக நோக்கும் பார்வையும் கொண்டு வெளியிட்டுச் சொல்ல வேண்டும் என்ற நினைப்பு ஒரு மொழிஇலக்கியத்துக்கு அவசியமானது' எனக் கருதியவர்களில் சி.சு. செல்லப்பாவும் ஒருவராவார்.

'முழுக்க முழுக்க கருத்து ஆழமும் கனமும் உள்ள ஒரு இலக்கியப் பத்திரிகையை, இந்தப் பாமரப் பிரியமான பத்திரிகைப் பரப்புக் காலத்தில் ஆரம்பிப்பது ஒரு சோதிக்கிற முயற்சிதான்' என்று நன்கு உணர்ந்தே அவர் எழுத்து பத்திரிகையைத் தொடங்கினார்.

அந்தப் பெயரைப் பரிகசித்தவர்களுக்கு அவர் சூடாகப் பதிலளித்தார். 'ஆங்கிலத்தில் ரைட்டிங், நியூரைட்டிங் என்றெல்லாம் பத்திரிகைகளுக்குப் பெயர் இருக்கிறதே, தமிழில் எழுத்து என்று பெயர் வைத்தால் என்ன கெட்டுப் போகும்?' என்று அவர் வாதித்தார்.

பெயர் வைப்பதிலும் அவர் புதுமை செய்து தனிவழி வகுத்தார் என்று சொல்ல வேண்டும். அவருக்குப் பிறகு பத்திரிகை தொடங்க முற்பட்டவர்கள்

நடை, தலைஎழுத்து, கசடதபற, (அஃக்),ங என்றெல்லாம் பெயர் சூட்டத்துணிந்தார்கள்.

சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' தான் சரியான 'சிற்றிதழ்' (லிட்டில் மேகசின்) ஆகும். அதற்கு முன் நடத்தப்பட்ட இலக்கிய இதழ்கள் பலவும் தன்மையினால் சிற்றிதழ்கள் என மதிக்கப்பட்டன. ஆயினும் அவை பெரிய பத்திரிகைகள் போல் பரவலாக எங்கும் செல்ல வேண்டும்; அதற்கு வகை செய்யக்கூடிய விதத்தில் பற்பல ஊர்களிலும் ஏஜண்டுகள் நியமிக்க வேண்டும் என்று திட்டமிட்டு, அதற்குத் தேவையானவற்றைச் செய்து வந்தன. ஆனால் எழுத்து அப்படிப்பட்டது அல்ல.

எழுத்து குறைவான எண்ணிக்கையிலேயே அச்சாகும். கடைகளில் விற்பனைக்குக் கிடைக்காது. சந்தாதாரர்களுக்கு மட்டுமே பிரதிகள் கிடைக்கும். அட்டை, அட்டைப்படம் என்றெல்லாம் கவனம் செலுத்தாது. கனமான விஷயங்களே முக்கியம். இப்படித் திட்டவட்டமாக வரையறுத்துக்கொண்டு பத்திரிகையைத் தொடங்கினார் செல்லப்பா.

அவர் இலக்கிய விமர்சன வளர்ச்சி கருதியே 'எழுத்து'வை ஆரம்பித்தார். ஆனால் அவரே எதிர்பாராத விதத்தில், புதுக்கவிதையை வளர்க்கும் ஒரு சக்தியாக வலுப்பெற்றது எழுத்து.

எழுத்து 1959 ஜனவரி மாதம் தோன்றியது. விமர்சனக் கட்டுரைகள், புதுக்கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு என்று பலவகை விஷயங்களையும் அளித்தது. 'ஜீவனாம்சம்' என்ற புதுமையான நாவலை தொடர்கதையாக சி.சு. செல்லப்பா எழுதினார். 'எழுத்து' 500 பிரதிகளே அச்சிடப்பட்டன. ஒன்பதரை வருடங்கள் மாத இதழாகச் சிரமத்துடன் வாழ்ந்த அது பத்தாவது ஆண்டில் காலாண்டிதழாக மாற்றப்பட்டது.

அப்படியும் அது வெற்றிகரமாக வளர இயலவில்லை. பன்னிரண்டாம் ஆண்டில், 119வது ஏட்டுடன் எழுத்து நின்று விட்டது. செல்லப்பாவின் பிடிவாதமும், இலக்கியப் பற்றும், கடின உழைப்பும்தான் 'கருத்து ஆழமும் கனமும் கொண்ட இலக்கியப் பத்திரிகை'யை அவ்வளவு காலம் நீடித்திருக்கச் செய்தன. பின்னர், சாதனைகள் புரிந்த இலக்கிய ஏடு ஆக எழுத்து வரலாற்றில் இடம் பெற்றது.

எழுத்துக்காக சி.சு. செல்லப்பா அனுபவித்த பணநஷ்டமும் கஷ்டங்களும் அதிகம்தான். அதற்காக அவர் வருத்தப்பட்டதில்லை.

எழுத்து-பத்திரிகையில் நான் அதிகம் எழுதியதில்லை. சில கவிதைகள், சில கட்டுரைகள், புத்தக விமர்சனங்கள், ஒரு சிறுகதை என்று குறைந்த அளவிலேயே எனது எழுத்துக்கள் 'எழுத்து'வில் வந்துள்ளன.

ஆயினும், செல்லப்பா என்னிடம் மிகுந்த அன்பும், நட்பும், மதிப்பும் கொண்டிருந்தார். அவருடைய எழுத்துக்களை வர்த்தக நோக்கு நூல் வெளியீட்டாளர்கள் புத்தகங்களாக வெளியிட மனம்கொள்ளவில்லை. அதனால் என்ன, என் எழுத்துக்களை நானே புத்தகமாக வெளியிடுவேன் என்ற கூறி 'எழுத்துப் பிரசுரம்' ஆரம்பித்தார் அவர்.

அவருடைய எழுத்துக்களைப் புத்தகங்களாக அச்சிடுவதுடன் அமையாது, அவர் அன்பும் மதிப்பும் வைத்திருந்த எழுத்தாளர்கள் சிலபேரின் எழுத்துக்களையும் புத்தகங்களாக வெளியிட முன்வந்தார். வரா., ந. பிச்சமூர்த்தி, 'சிட்டி' சுந்தரராஜன் படைப்புகளை அவ்விதம் புத்தகங்களாக்கினார். அவற்றுடன் என் சிறுகதைகளையும், அவரே விரும்பிக் கேட்டு 'ஆண்சிங்கம்' என்ற தொகுப்பாக வெளியிட்டார். பின்னர் 'அமரவேதனை' எனும் கவிதைத் தொகுப்பையும், 1977இல் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் கட்டுரை நூலையும் 'எழுத்துப் பிரசுரம்' களாகக் கொண்டு வந்தார். அவற்றுக்கு உரிய பணத்தையும் அவர் தரத் தவறவில்லை.

சி.சு. செல்லப்பா காந்தீயவாதி. சுதந்திரப் போராட்ட தியாகி. மிக எளிமையான வாழ்க்கையையே அவர் வாழ்ந்தார். இலக்கியத்தில் தீவிரமான பற்றுதல் கொண்டிருந்தார். எப்பவும் அவர் இலக்கிய விஷயங்களையே பேசினார். தமிழ் இலக்கியத்துக்கு என்னென்ன செய்யப்பட வேண்டும் என்று திட்டங்களிட்டுப் பேசுவதில் அவர் மிகுந்த உற்சாகம் கண்டார். மிகுந்த பிடிவாத குணம் கொண்டவர் அவர்.

செல்லப்பா 'எழுத்துப் பிரசுரம்' தொடங்கி, புத்தகங்கள் வெளியிட்டபோது, அவற்றை விற்பனை செய்வதற்கு அவர் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பொதுவான புத்தக விற்பனையாளர்கள், இதர நூல் வெளியீட்டாளர்களது உதவியை அவர் நாடினார். இந்தப் புத்தகமெல்லாம் விற்பனையாகாது என்று அவர்களில் பலர் மறுத்துவிட்டார்கள். தெரிந்த - பழகிய - புத்தகப் பிரசுரகர்கள் - அவருக்காகப் புத்தகங்களின் சில பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்கள். பல மாதங்களுக்குப் பின்னர், விலை போகவில்லை என்று கூறி, அழுக்கடைந்த நிலையில், அவரது புத்தகங்களை அவரிடமே திருப்பிக் கொடுத்தார்கள்.

வியாபாரிகளின் மனநிலையையும் தன்மையையும் புரிந்துகொள்ள உதவிய வாய்ப்புகள் இவை என்று அவர் கருதினார். அதற்காக மனம் சோர்ந்துவிடவில்லை. என் புத்தகங்களை இவர்கள் விற்றுத்தராவிட்டால் போகட்டும்; நானே அவற்றை விற்பனை செய்வேன் என்று உறுதிபூண்டார் செல்லப்பா. தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள், மேல் நிலைப்பள்ளிகளின் பட்டியல் தயாரித்தார் - மாவட்ட ரீதியாக.

'எழுத்துப் பிரசுர' வெளியீடுகளை இரண்டு பைகளில் நிரப்பி எடுத்துக் கொண்டு, மாவட்ட ரீதியாகச் சென்று, கல்லூரி கல்லூரியாகப் போனார்.

மேல்நிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்றார். அங்குள்ள நூல்நிலையங்களுக்காகப் புத்தகங்கள் வாங்கும்படி செய்தார். அவரது அலைச்சலுக்கும் முயற்சிக்கும் நல்ல பலன் கிடைத்தது. புத்தகங்கள் திருப்திகரமாக விற்பனையாயின.

புத்தக விற்பனைக்காக சி.சு. செல்லப்பா திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்ய வந்தபோது, நானும் அவருடன் சேர்ந்துகொண்டேன். இரண்டு மாத காலம் நாங்கள் சுற்றித் திரிந்தோம். அது நடந்தது 1974இல். அது பற்றிப் பின்னர் பேசலாம்.

தொழில்முறைப் புத்தக வெளியீட்டாளர்களிலும், இலட்சிய நோக்கும் இலக்கிய ஈடுபாடும், எழுத்தாளர்களை விலைபோகக்கூடிய எழுத்துக்களை உற்பத்திசெய்வோர்களாக அல்லாது கலைஞர்களாகவும் மனிதநேயம் உடையோராகவும் மதிக்கும் பண்பாடும் உடைய ரசிகர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அபூர்வமானவர்கள்.

இப்படி அபூர்வமானவர்களில் விசேஷமாகக் குறிப்பிடத் தகுந்தவர் 'கலைஞன் பதிப்பகம்' மாசிலாமணி.

நாகப்பட்டினத்தில் 'இமயப் பதிப்பகம்' ஆரம்பித்து அதைத் தொழில் ரீதியில் வெற்றிகரமாக வளர்த்துவந்த தோ. ந. வீரராகவன் மாசிலாமணியின் நண்பர் ஆவார். அவரும் இலக்கியத்தில் ரசனையும் ஈடுபாடும் உடையவர்தான்.

வீரராகவன் உந்துதலில், மாசிலாமணியும் புத்தகப் பிரசுரத்தில் ஈடுபட முன்வந்தார். சென்னைக்கு வந்து 'கலைஞன் பதிப்பகம்' தொடங்கினார். அவருடைய இலக்கிய ரசனையும் ஈடுபாடும், கனத்த புதுமையான சிந்தனைகள் மீதுள்ள ஈர்ப்பும் அவரை வழக்கமான புத்தகங்களை வெளியிடுவதில் ஆர்வம் கொள்ளச் செய்யவில்லை; புதுமையும் நயமும் நிறைந்த இலக்கியப் படைப்புகளை வெளியிடும்படி தூண்டின. எனவே, லா.ச. ராமாமிர்தம் சிறுகதைகளைத் தொகுத்துச் சில புத்தகங்கள் வெளியிட்டார். சிந்தனை நூல்களையும் பிரசுரித்தார்.

அந்நாட்களில் சென்னை தியாகராயநகரில் பாண்டிபஜாரில் ஒரு பெரிய கட்டிடத்தின் மாடியில் அநேகப் பதிப்பகங்கள் இடம் பெற்றிருந்தன. மாடியின் ஆரம்பத்தில் முன்னதாக ஒரு அறையில் கலைஞன் பதிப்பகம் இருந்தது. அதற்கு எதிர் வரிசையில் வானதி பதிப்பகம், குயிலன் பதிப்பகம் மற்றும் சில நிறுவனங்கள் இருந்தன.

வானதி பதிப்பகத்துக்கு நல்ல வியாபாரம். எளிதில் விற்பனையாகக்கூடிய - வாசகர்கள் விரும்பி வரவேற்ற - புத்தகங்களை அது வெளியிட்டது.

'கலைஞன்' மாசிலாமணி ஒரு சமயம் சொன்னார் - 'நீங்களும் உங்களைப் போன்றவர்களும் ஆழ்ந்த இலக்கியங்களை, சிந்தனை நூல்களை வெளியிட வேண்டும் என்று சொல்கிறீர்கள். நானும் அதுமாதிரியான புத்தகங்களைத்தான் வெளியிடுகிறேன். எழுத்தாளர்கள் எல்லாம் வியந்து பாராட்டுகிற எழுத்தாளரான லா.ச. ராமாமிர்தம் சிறுகதைகளைப் புத்தகங்களாக வெளியிட்டு அடுக்கியிருக்கிறேன். விலையும் அதிகம் இல்லை. மூன்றரை ரூபாய், நான்கு ரூபாய் என்று குறைவான விலைதான். ஆனாலும் யாரும் வந்து அவற்றை வாங்கக் காணோம். லா.ச.ரா. புத்தகம் வாரத்துக்கு ஒன்று- மாசத்துக்கு ஒன்று கூட விற்பனையாகவில்லை. ஆனால், பாருங்க. வானதி பதிப்பகம் சாண்டில்யனின் கடல் புறா நாவலை மூன்று பாகங்களாக வெளியிட்டிருக்கிறது. ஒரு பாகம் விலை பதினைந்து ரூபாய். மூன்று பாகங்கள் நாற்பத்தைந்து ரூபாய் காலேஜ் மாணவிகள் தேடி வந்து வாங்கிப் போகிறார்கள். இன்று மட்டும் மூன்று செட் வாங்கிச் சென்றிருக்கிறார்கள். நான் இதைப் பொறாமைப்பட்டுச் சொல்லவில்லை. தமிழ்நாட்டு வாசகர்கள் மனநிலை எப்படி இருக்கிறது என்று தெரியப்படுத்துவதற்காகச் சொல்கிறேன்'.

ஆனாலும், கலைஞன் பதிப்பகம் புதுமையான இலக்கிய முயற்சிகளை வெளியிடுவதை நிறுத்திவிடவில்லை. மாசிலாமணி படித்து ரசித்த நல்ல எழுத்துக்களை, மற்றவர்களும் படித்து மகிழ வேண்டும் என்ற எண்ணத்தோடு, புதுமையான எழுத்துக்களை விரும்பிப் புத்தகங்களாக வெளியிட்டுக் கொண்டுதான் இருந்தார்.

'சரஸ்வதி'யில் 'உதிரிப்பூக்கள்' என்ற தலைப்பில், இதழ்தோறும் நான் சுவையான, ரசமான, விஷயங்களை எழுதிக்கொண்டிருந்தேன். நான் படித்த புத்தகங்களில் நயமான சங்கதிகள், வித்தியாசமான புத்தகங்கள், உலகத்து இலக்கிய சமாச்சாரங்கள், எழுத்தாளர்களின் விந்தைப் பண்புகள் பற்றி எல்லாம் எழுதினேன். எழுத்தாளர்களும் இலக்கிய ரசிகர்களும் விரும்பிப் படித்த பகுதி அது.

மாசிலாமணியும் அவற்றைப் படித்து ரசித்திருக்கிறார். அவற்றில் தேர்ந்து தொகுத்த சில பகுதிகளைப் புத்தகமாக வெளியிட ஆசைப்பட்டு என்னை அணுகினார். மகிழ்ச்சியுடன் இசைந்தேன். முக்கியமான சில 'உதிரிப்பூக்கள்' தொகுக்கப்பட்டு, 'முத்துக்குளிப்பு' என்ற பெயரில் கலைஞன் பதிப்பக வெளியீடாக வந்தது. 'சரஸ்வதி'யில் வந்தவற்றில் கால்வாசி தான் அவை. ஏனையவை புத்தகமாகவில்லை.

திருச்சியிலிருந்து வந்துகொண்டிருந்த திருலோக சீதாராமின் சிவாஜி வார இதழில் நான் சிறுகதை, கட்டுரை, கவிதை என்று நிறையவே எழுதினேன். மூடுபனி, காகித ரோஜா எனும் இரண்டு நாவல்கள் தொடர்கதைகளாகப் பிரசுரமாயின.

1965இல் முத்துக்குளிப்பு நூலை வெளியிட்ட கலைஞன் பதிப்பகம் 1966இல் எனது 'மூடுபனி' நாவலைப் புத்தகமாக்கியது. 'வசந்தம் மலர்ந்தது' என்ற பெயரில் அது பிரசுரம் பெற்றது.

1967இல் எனது மற்றொரு நாவல் வெளிவருவதற்கும் நண்பர் மாசிலாமணி உதவினார். அது கலைஞன் பதிப்பகம் வெளியீடாகப் பிரசுரம் பெறவில்லை 'வீடும் வெளியும்' என்ற அந்த நாவலை மாசிலாமணி அவருடைய நண்பர் சொக்கலிங்கத்திடம் தர, அவர் அதை 'காவேரி பதிப்பகம்' மூலம் வெளியிட்டார் இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் ஈடுபட்ட உற்சாகிகளின் அனுபவங்கள், அவர்களது பிற்கால நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் அது. அந்த நாவல் நல்ல பாராட்டைப் பெற்றது. தமிழ் நாவல் வரலாற்றை விரிவாக எழுதிய 'சிட்டி' பெ.கோ. சுந்தரராஜன்-சோ.சிவபாதசுந்தரம் அவர்கள் நூலில் இந்த நாவலைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வீடும் வெளியும் நாவல், புத்தகமாகப் பிரசுரம் பெறுவதற்கு முன்னால் தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ. சிவஞானகிராமணி அவர்களின் வார இதழான 'செங்கோல்' பத்திரிகையில் தொடர்கதையாக வந்தது.

'செங்கோல்' இதழில் எப்பவாவது நான் கட்டுரைகள் எழுதுவது உண்டு. ஒரு தொடர்கதை எழுதும்படி ம.பொ.சி. கேட்டதற்கு இணங்கி விடுதலைப் போராட்ட கால அனுபவங்களைக் கூறும் வீடும் வெளியும் நாவலை எழுதினேன்.

அந்த சந்தர்ப்பத்தில், ம.பொ.சி.யின் உதவியாளராகவும், 'செங்கோல்' பத்திரிகையின் நிர்வாகியுமாகப் பணிபுரிந்த வே. கணபதி E டெப்போத் தெரு, தோட்டத்தில் நானும் என் அண்ணாவும் வசித்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருந்தார். ரசம் என்ற பெயரில் எழுதி வந்த ர. சண்முகம், மற்றும் கணபதியின் தம்பி வே. சுப்பய்யா ஆகியோரும் அங்கு வசித்தார்கள். சுப்பய்யா அப்போது 'இன்பநிலையம்' புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பின்னர் அவர் அந்தப் பதிப்பகத்திலிருந்து நீங்கி, சொந்தமாகப் 'பூங்கொடி பதிப்பகம்' அமைத்து நாவலாசிரியர் லக்ஷ்மி, தலைவர் ம.பொ.சி., மற்றும் பலரது நூல்கள் வெளியிடலானார்.

தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த ஆ.கோ. வேங்கடராமானுஜமும் எங்கள் நண்பர்களில் குறிப்பிடத்தகுந்த ஒருவர். என் அண்ணா சினிமா உலகம் பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே அறிமுகமானவர் அவர். அவர் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தொழில் புரிவதில் ஆர்வம் காட்டினார். நாதன்ஸ் பிரஸ் என்ற அச்சகத்தில் பணியாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்த போது, அவர் எனது நாவல் ஒன்றை நாதன்ஸ் வெளியீடு ஆகப் பிரசுரம் பெற வழி செய்தார்.

'ஹனுமான்' வாரப் பத்திரிகையில் தொடராக 'அடுத்த வீட்டுக்காரி' என்ற நாவலை எழுதினேன். அதை ரசித்திருந்த நண்பர் அனுஜன் - வேங்கடராமானுஜனின் புனைபெயர் இது- அதைப் புத்தகமாகக் கொண்டு வருவதில் முனைப்புக் காட்டினார். நான் வைத்திருந்த பெயரை வேண்டாம் என ஒதுக்கிவிட்டு, நாவல் நாயகியின் பெயரான 'சகுந்தலா' என்பதைப் புத்தகத்தின் பெயராக மாற்றிவிட்டார் அவர்.

அனுஜன் சுவாரசியமான நாவல்களும் சிறுகதைகளும் எழுதியுள்ளார். அவர் எழுதிய 'முதலாளி' என்ற நாடகம் பின்னர் முதலாளி என்னும் திரைப்படமாக வெளிவந்து வெற்றிகரமாக ஓடியது.

26

பொதுவாக நான் சென்னையில் வசித்தபோதிலும், ஆண்டு தோறும் ராஜவல்லிபுரம் சென்று அங்கே இரண்டுமூன்று மாதங்கள் தங்குவதை வழக்கமாக்கியிருந்தேன். சில வருடங்கள் ஆறு மாத காலம் கூட கிராமத்தில் தங்கியதும் உண்டு.

அதனால், 'நாடாறு மாதம் காடாறு மாதம் என்று வாழ்ந்த விக்கிரமாதித்தன் போல', நான் நாகரிகப் பெரும்நகரில் ஆறு மாதங்களும் கிராமத்தில் ஆறுமாதமும் வசிக்கிறேன் என்று நண்பர்கள் குறிப்பிடுவார்கள்.

நாகரிகப் பெரும் நகரமான சென்னையில் வசிக்கிற நீங்கள், வசதிகளற்ற இந்தப் பட்டிக்காட்டில் எப்படி சந்தோஷமாக வாழ முடிகிறது என்று சிலர் அவ்வப்போது கேட்பார்கள்.

எனக்கு எல்லா இடமும் ஒன்றுபோல் தான்! புத்தகங்கள், தாள்கள், பேனா மை இவை தட்டுப்பாடின்றிக் கிடைக்கக் கூடிய எந்த இடத்திலும் நான் சந்தோஷமாக வாழமுடியும் கடிதப் போக்குவரத்துக்குத் துணை புரியும் தபால் ஆபீஸ் அங்கு இருந்தால் அது எனது சந்தோஷங்களை அதிகப்படுத்தும் என்று சொல்வேன்.

சென்னையில் இருந்தாலும் சரி, ராஜவல்லிபுரத்தில் தங்கினாலும் சரி நான் ஒரே சீராகச் செய்வது படிப்பதும் எழுதுவதும் தான். யாரையும் போய்ப் பார்க்கவேண்டும் என்று நான் விரும்புவதில்லை,. மற்றவர்கள் வந்து என்னைக் காண வேண்டும் என நான் ஆசைப்படுவதுமில்லை.

'ராஜவல்லிபுரத்தில் அப்படி என்ன கவர்ச்சி சக்தி இருக்கிறது? ஒவ்வொரு வருடமும் அங்குப் போய் மாதக்கணக்கில் தங்கிவிடுகிறீர்கள்?' என்று அடிக்கடி யாராவது என்னிடம் கேட்பது உண்டு. ஒரு பத்திரிகைப் பேட்டியின் போது அதன் ஆசிரியர் இதே கேள்வியை என்னிடம் கேட்டார்.

எல்லோருக்கும் சொல்கிற காரணத்தைத் தான் அவருக்கும் பதிலாகச் சொன்னேன்: ராஜவல்லிபுரம் என்ற ஊர் என்னை ஈர்ப்பதற்கான காரணம்

அதன் அருகில் ஓடுகிற தாமிரவர்ணி ஆறு தான். அந்தச் சூழலில் நிலவுகிற அமைதியும் அழகும் என் உள்ளத்துக்கு இதம் தருகின்றன; அளவிலா மகிழ்ச்சி அளிக்கின்றன.

காலையிலும் மாலையிலும் ஆற்றுக்குப் போய்த் தனிமையில் பொழுது போக்குவதும், குளித்து மகிழ்வதும் விசேஷமான இனிய அனுபவங்களாகும் எனக்கு.

சென்னையில் இருக்கிற நாட்களில் காலையிலும் மாலையிலும் கடலோரம் சென்று மணிக்கணக்கில் தனித்திருப்பது எனக்குப் பிடித்த காரியமாக இருந்தது. வெகு காலம் வரை, 1980களின் பிற்பகுதியிலிருந்து, கடற்கரைக்குப் போய் வருவது எனக்கு மகிழ்வு தராத செயலாகிவிட்டது.

ராஜவல்லிபுரத்தில் தனித்திருந்த பெரிய வீடு வசதியானது. அங்கும் ஏகப்பட்ட புத்தகங்கள், பழங்காலப் பத்திரிகைகள், என் கையெழுத்துப் பத்திரிகைகள் மற்றும் பல எழுத்துப்பிரதிகள் இருந்தன. என் அம்மாவும், பெரிய அண்ணாச்சி கலியாண சுந்தரமும் வசித்தார்கள். அதனாலும் நான் ஆண்டுதோறும் அந்த ஊருக்குப் போய்ப் பல மாதங்கள் தங்கினேன்.

பெரிய அண்ணாச்சிக்குக் கல்யாணமாகிச் சில வருடங்களில் மனைவி இறந்துபோனாள். அவர்களுக்கு ஒரே மகள். அண்ணாச்சி மறுவிவாகம் செய்து கொள்ளவில்லை. மகளை வளர்த்து, பெரியவளாக்கி, திருமணம் செய்து வைக்க வேண்டிய கடமையைத் திருப்திகரமாக நிறைவேற்ற முடிந்தது. பொருளாதார சிரமங்கள் எப்போதும் இருந்து வந்தன.

என் இரண்டாவது அண்ணா கோமதிநாயகமும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. திருமணம் வேண்டாம் என்றுதான் வெகுகாலம் வரை சொல்லிக் கொண்டிருந்தார்.

நான் திருமணம் செய்து கொள்வதில்லை என்று சின்ன வயசிலேயே உறுதிபூண்டு விட்டேன்.

இதனால் எல்லாம் எங்கள் அம்மா மனஅமைதியின்றி அவதிப்படுவதும், எங்களைக் குறை கூறுவதும் இயல்பாயிற்று. குடும்பத்தில் எல்லோருமே சன்னியாசிகள் மாதிரி ஆகிவிட்டால் என்ன அர்த்தம்? யாராவது ஒருவர் கல்யாணம் பண்ணிக் குலம் விளங்கச் செய்ய வேண்டாமா? என்று குமைவதும் சண்டை பிடிப்பதும் சகஜமாயின. இறுதியில், யாராவது கல்யாணம் செய்து குடியும் குடித்தனமுமாக வாழவில்லையென்றால், நான் கிணற்றிலே விழுந்து செத்துப்போவேன் என்று அடம்பிடித்து, மிரட்டலானாள் அம்மா.

நான் மனம் மாறவில்லை. என் அண்ணா கோமதி நாயகம் அம்மாவுக்கு மனதிருப்தியும் அமைதியும் அளிக்க இசைந்தார். 1963இல், அவருக்கு, அவரது நாற்பத்தைந்தாவது வயதில், திருமணம் நிகழ்ந்தது.

திருமணம் நடைபெற்றுக் குடும்பம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், சென்னையில் அதற்கேற்ற வீடு தேடவேண்டிய கட்டாயம் உண்டாயிற்று. முதலில், மீர்சாகிப்பேட்டை செக்கடித் தெருவில், ஒரு வீட்டில் ஒரு பகுதி ('போர்ஷன்') வாடகைக்கு அமர்த்தப்பட்டது. அது வசதிப்படாததனால், சில மாதங்களிலேயே வேறு இடம் பிடிக்க நேர்ந்தது.

ஜெனரல் பேட்டர்ஸ் ரோடை ஒட்டிய, உட்ஸ்ரோடில், அதன் கிளைகளில் ஒன்றாக அமைந்துள்ள ராமசாமி மேஸ்திரி தெருவில், ஒரு வீட்டின் மாடிப் பகுதி அமர்த்தப்பட்டது. அது போதுமான வசதிகளைக் கொண்டிருந்தது. அண்ணா வேலை பார்த்த எபிஷியன்ட் பப்ளிசிட்டீஸ் ஆபீசுக்கு வெகு அருகிலும் இருந்தது கூடுதல் சவுகரியமாயிற்று.

ஆகவே, அண்ணா தோட்ட வீட்டை விட்டுப் பிரிந்து குடும்பம் நடத்தலானார். குழந்தைகள் பிறந்தன.

நான் தோட்ட வீட்டிலேயே தங்கினேன். சாப்பிடுவதற்காக உட்ஸ்ரோடுக்கு வந்து போவதை வழக்கமாக்கிக் கொண்டேன். எங்கும் நடந்து போய் நடந்து திரும்புவதே எனது பழக்கம். இங்கும் அப்படித் தான். சில வருடங்கள் இது நீடித்தது.

பிறகு, இது வெட்டிவேலை, வீண் அலைச்சல், காலநஷ்டம் என்பதனால் 'இரட்டை வாழ்வை' விட்டுவிடத் தீர்மானித்தேன். மேலும், அண்ணாவுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. தினசரிப் பொறுப்புகளும் அலுவல்களும் அதிகரித்தன. அண்ணாவின் சிரமங்களும் கூடின. எனவே, நானும் அங்கேயே அவர்களுடன் தங்கினால் உதவியாக இருக்கும் என்று அண்ணா கருதியதால், நானும் தோட்ட வீட்டை விட்டு விட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஆகவே, 1965இல் E டெப்போத் தெரு, தோட்ட வீடு எண் பத்துக்கும் எனக்கும் இருந்த உறவு அறுபட்டது. பதினைந்து வருடகாலம் அருமையான வசிக்குமிடமாக உதவிய ஆசிரமம் போன்ற சிறுவீடு எனக்குச் சம்பந்தமே இல்லாத ஒரு இடமாகிவிட்டது!

1973இல் என் அம்மா இறந்து போனாள். அம்மா இறப்பதற்கு முன்னதாக அவள் முதுமைக் காலத்தில் உதவுவதற்காகவும், ஆஸ்துமா நோயினால் அதிகம் கஷ்டப்பட்ட பெரிய அண்ணாச்சிக்குத் துணையாகவும் 1972 முதல் நான் ராஜவல்லிபுரத்திலேயே தங்கினேன்.

ஒரு காலத்தில் வளமாக இருந்த குடும்பம், காலகட்டத்தில், சிறிது சிறிதாக வறுமை நிலை அதிகம் ஏற்று வந்தது. குடும்பச் செலவுகள், நோய்க்குச் சிகிச்சை என்றெல்லாம் செலவுகள் அதிகரித்துக் கொண்டிருந்தன. அதனால், தோட்டம், வயல் ஆகியவற்றை விற்க வேண்டியதாயிற்று. சிறிதளவு வயலும்,

பெரிய வீடும் எஞ்சியிருந்தன. பாகப்பிரிவினை செய்யப்படாத பொதுச் சொத்து ஆக.

1974 ஆரம்பத்தில் பெரிய அண்ணாச்சி இறந்து போனார். அதன் பிறகும் நான் ராஜவல்லிபுரத்திலேயே தங்கினேன். இம்முறைதான் இரண்டு வருடங்களுக்கும் மேலாக நான் அந்த ஊரிலேயே வசிக்க நேரிட்டது.

இச்சந்தர்ப்பத்தில்தான் வண்ணதாசன், வண்ணநிலவன், விக்ரமாதித்யன் எனப் பின்னர் பெயர்சூடிக் கொண்ட அ. நம்பிராஜன் ஆகியோரின் கடிதத்தொடர்பும், பின் நேரடிப் பழக்கமும் கிட்டின.

வண்ணதாசன் என்கிற எஸ். கல்யாணசுந்தரம், தி.க. சிவசங்கரனின் மகன். அப்போது அவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். கடிதத் தொடர்பு கொண்டார். பிறகு ராஜவல்லிபுரத்துக்கு வந்து பார்த்தார்.

நம்பிராஜன் பாபநாசம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அவர், சகமாணவரான பெருங்குளம் ரங்கநாதனுடன் என்னைக் காணவந்தார்.

பாளையங்கோட்டையில் வக்கீல் குமாஸ்தாவாக இருந்த உ.நா. ராமச்சந்திரன், 'தாமரை'யில் வந்த எனது கதைகளைப் படித்துவிட்டு எனக்குக் கடிதம் எழுதினார். தமது எழுத்தார்வத்தை வெளிப்படுத்தினார். அவர் ஒரு புனைபெயர் தேடித் தரும்படி என்னைக் கேட்டபோது, நான் அவருக்கு 'வண்ணநிலவன்' என்ற பெயரைச் சூட்டினேன்.

இம்மூவரும் நெருங்கிய நண்பர்களானார்கள் அவ்வப்போது-என் அம்மாவும் அண்ணாச்சியும் வாழ்ந்த நாட்களிலேயே ராஜவல்லிபுரம் வந்து, என்னுடன் உரையாடி மகிழ்ந்தார்கள்.

இடைசெவல் கி. ராஜநாராயணன், தென்காசி தீப. நடராஜன் (ரசிகமணி டி.கே.சி.யின் பேரன்), ராஜபாளையம் த.பீ. செல்லம், கொ.ச. பலராமன், நாச்சியார்பட்டி சுப.கோ. நாராயணசாமி முதலிய நண்பர்கள் பலரும் ராஜவல்லிபுரம் வந்திருக்கிறார்கள். 'சும்மா' பார்த்துப் பேசிப் போவதற்காகத்தான்.

அம்மா திடமாக இருந்த காலத்தில், அந்தப் பெரிய வீட்டைப் பெருக்குவது மெழுகுவதுமுதல் வீட்டு வேலைகள் அனைத்தையும் அம்மாவே செய்துகொண்டிருந்தாள். கொஞ்சம் தள்ளாமை ஏற்பட்டதும், 'வாசல் தெளிக்கப் பெருக்க', வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க, பாத்திரங்கள் கழுவ என்று சில வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு வேலைக்காரியை நியமித்துக் கொண்டாள். அப்படி வந்தவள் இசக்கி என்கிற முத்தம்மாள்.

முத்தம்மாள் எனும் மறவர்மகள் தனியாக இருந்தாள். அவள் கணவன் அவளை விலக்கிவிட்டுத் தேவமார் தெருவில் வசித்தான். அவர்களுக்கு இரண்டு பெண்கள். மூத்த மகளுக்குப் பக்கத்துக் கிராமத்தில்

கல்யாணமாகியிருந்தது. இரண்டாவது மகள் அப்பனோடு இருந்தாள். தாய் எங்கள் வீட்டுக்கு வந்த சில வருடங்களில் இரண்டாவது மகளுக்குச் சீவலப்பேரியில் திருமணமாயிற்று,

எங்கள் அம்மா முத்தம்மாளை இசக்கி என்றே கூப்பிட்டு வந்தாள். முத்து என்பது மாமனார் பெயர் என்பதால், அதை அவள் கூறுவதில்லை. முந்தைய தலைமுறைப் பெண்கள் கணவன், மாமனார் மாமியார், மச்சினர் போன்ற மூத்தவர்களின் -மரியாதைக்குரிய உறவின் முறையாரது- பெயர்களை உச்சரிப்பதில்லை. அவற்றைச் சொல்வது பெரியவர்களை அவமதிப்பது போலாகும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. இது ஒரு மரபு ஆகவே நிலைபெற்றிருந்தது. கால வேகத்தில் இத்தகைய பழக்கவழக்கங்கள் அடிப்பட்டுப் போயின.

அம்மாவின் வயது அதிகமாக ஆகப் பலவீனங்களும் கூடின. கண்பார்வை மங்கிப் பிறகு முற்றிலும் தெரியாமலே போய்விட்டது.

அதனால் சமையல் முதல் சகல வேலைகளையும் முத்தம்மாள் என்கிற இசக்கியே செய்யவேண்டிய நிலைமை எற்பட்டது. அவளும் குடும்பத்தில் ஒரு நபர் ஆனாள்.

அம்மா இறக்கும் போதும், அண்ணாச்சி இறப்பதற்கு முன்னரும், 'இசக்கி நம்மை நம்பி நம்ம வீட்டோடவே இருந்து விட்டாள். அவளுக்கு வேற வழி இல்லை. அவள் இனிமேலும் எப்போதும் போல் இந்த வீட்டிலேயே இருக்கட்டும் என்று என்னிடம் தெரிவித்தார்.

அவர்கள் வாக்கைக் காப்பாற்றுவதற்காக நானும் அந்த முதியவளை எப்பவும் போல் வீட்டிலேயே வசித்து, வீட்டைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை அவளை நம்பி அவளிடமே விட்டுவிட்டேன்.

அவள் அத்தகைய நம்பிக்கைக்கு உரியவளாக நடந்து கொள்ளாவில்லை. அது பற்றி உரிய இடத்தில் கவனிக்கலாம்.

என்னைப் பார்த்துப் பேசிப்போகலாம் என்று ராஜவல்லிபுரம் தேடி வந்தவர்களில் தஞ்சை ப்ரகாஷ் முக்கியமானவர். தஞ்சாவூர் ப்ரகாஷ் தனிரகமான மனிதர். நல்ல ரசிகர். இலக்கியவாதி. படிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர். பல மொழிகள் பயின்றவர். மலையாள இலக்கியங்களை அம்மொழியிலேயே படித்து ரசித்தவர். உலக இலக்கியங்களை ஆங்கிலம் மூலம் நன்கு அறிந்தவர். இந்தியாவில் பல மாநிலங்களிலும், உல்லாசமாகவும் ஏதாவது தொழில் காரணமாகவும் சுற்றித் திரிந்து அனுபவ வளம் பெற்றவர். தமிழ் இலக்கியங்கள், புதிய படைப்புகள், பத்திரிகைகளை ஆர்வத்தோடு படித்து மகிழும் பண்பினர். நல்ல எழுத்தாளர்களின் நட்பை விரும்பிப் பெற்று வளர்க்கும் இயல்பினர். எம்.வி. வெங்கட்ராமின் நெருங்கிய நண்பர் க.நா. சுப்ரமண்யம், ந. பிச்சமூர்த்தி ஆகியோரது அன்பையும் மதிப்பையும் பெற்றவர்.

அவரும் கதைகள் எழுதினார். பிற்காலத்தில், நாவல்கள் படைத்தார். மொழிபெயர்ப்புகள், கட்டுரைகள் என்று எழுதிக்கொண்டிருந்தார். புத்தகங்கள் பிரசுரித்தார். சில சிற்றிதழ்கள் வெளியிட்டார். புதுமை நாட்டமும் செயல்வேகமும் கொண்டிருந்தார்.

அவர் தம் நண்பர் முருகேசனுடன் ராஜவல்லிபுரம் வந்தார். முருகேசன் மனைவியும் உடன் வந்திருந்தார். வீட்டில் அமர்ந்து பல மணிநேரம் பேசிய பிறகு, ஆற்றங்கரைக்குப் போனோம். அங்கே மணலில் அமர்ந்து பேசி மகிழ்ந்தோம். பிறகு செப்பறை நடராஜர் கோயிலுக்குப் போனோம். இரவு வந்ததும் அவர்கள் விடைபெற்றுச் சென்றார்கள். நினைவில் ஆழமாகப் பதிந்திருக்கும் இனிய நினைவுகளில் அந்த நாளும் ஒன்று ஆகும்.

27

எனது ஒத்துழைப்பை அதிகம் பெற்று, என் எழுத்துக்களை மிகுதியாக வெளியிட்டு, என் வளர்ச்சிக்கு வழி செய்த மற்றொரு முக்கியமான பத்திரிகை தீபம் இலக்கிய இதழ் ஆகும்.

தன்னம்பிக்கையும் தன்மான உணர்வும், எழுத்தாற்றலும் கற்பனைவளமும், இலட்சிய தாகமும் கடுமையான உழைப்பும், சுயசிந்தனைத்திறமும் பெற்றிருந்த நா. பார்த்தசாரதி சுயமுயற்சியாக 'தீபம்' இலக்கிய இதழைத் தொடங்கினார், 1965 ஏப்ரல் மாதம். இலக்கியவாதிகள் பலரது பக்கபலமும் அவருக்கக் கிட்டியது.

எனினும், பத்திரிகை பொருளாதார ரீதியில் வெற்றிபெறவில்லை. இலக்கிய இதழை விடாது நடத்துவது மிகச் சிரமமான செயலாகவே இருந்தது. நா.பா. மனம் சோரவில்லை. எதிர்ப்பட்ட கஷ்ட நஷ்டங்களை எல்லாம் சகித்துக்கொண்டு, கடுமையாக உழைத்து, தியாகங்கள் பல செய்து, 'தீபம்' இதழை இலட்சிய நோக்குடனேயே வளர்த்தார்.

விஷயங்களில் பல புதுமைகள் செய்தார். பல பத்திரிகைகளும் இலக்கிய இதழ்கள் கூட - தங்கள் வளர்ச்சிக்காக, கதைச்சுவை நிறைந்த தொடர்கதைகளை வெளியிடுவது இதழியல் மரபாக இருந்து வருகிறது. வெகு காலமாக. நா.பா. இதில் ஒரு மாறுதல் செய்தார். தடம் பதித்த இலக்கிய இதழ்களின் வரலாற்றைத் தொடர்கட்டுரைகளாகப் பிரசுரிக்கத் துணிந்தார்.

அதன்படி மணிக்கொடி சிறுகதைப் பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து, தமிழ்ச் சிறுகதைக்கு வளமும் இலக்கியமதிப்பும் சேர்வதற்கு வகை செய்த பி.எஸ். ராமையாவை 'மணிக்கொடிக்காலம்' எனும் கட்டுரைத் தொடரை எழுதும்படி செய்தார்.

அத்தொடர் நிறைவுற்றதும் 'சரஸ்வதி' பத்திரிகை பற்றி எழுதும்படி நா.பா. என்னைக் கேட்டுக்கொண்டார். நான் எழுதுவது எப்படி அமையுமோ

என்ற சந்தேகம் அவருக்கு இருந்தது. அதனால், பத்து இதழ்களுக்கு வருமாறு கட்டுரைத் தொடர் இருந்தால் போதும்; ஒவ்வொரு இதழிலும் நான்கு பக்கங்கள் வரும் அளவுக்கு எழுதினால் நல்லது என்றும் கோரிக்கை வெளியிட்டார். ஆரம்பத்தில் நான்கு இதழ்களுக்கு, சரஸ்வதிக்கு முற்பட்ட இலக்கிய இதழ்கள் பற்றி எழுதினால் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். நண்பர் சி.சு. செல்லப்பாவும் அவருக்குத் துணையாக வந்திருந்தார்.

நா.பா.வின் விருப்பப்படியே கட்டுரைகள் எழுதித்தர நான் இசைந்தேன். அதற்கு முன்னர் 'தீபம்' இதழ்களில், அவ்வப்போது சிறுகதை எழுதிவந்தேன். ஒவ்வொரு ஆண்டு மலரிலும் எனது கதையும் இடம் பெற்றது.

'சரஸ்வதி காலம்' என்ற தலைப்பில், ஆரம்பத்தில் நான்கு பகுதிகள் கவி பாரதியாரின் பத்திரிகை முயற்சிகள் முதல் சக்தி பத்திரிகை ஈறாக, அனைத்து இலக்கியச் சிற்றிதழ்கள் பற்றிய தகவல்களைக் கொண்டிருந்தன. அதன் பிறகு முற்போக்கு இலக்கிய இதழான சரஸ்வதியின் வரலாறும் அதன் சாதனைகளும் விரிவாக விவரிக்கப்பட்டன.

நா.பா. வும் பிறரும் எதிர்பார்த்திராத அளவுக்கு இத்தொடர் வாசகர்களின் வரவேற்பையும் பாராட்டுதல்களையும் பெற்றுத்தந்தது. எனவே தொடர்ந்து இலக்கிய வரலாற்றுத் தொடர்கட்டுரை எழுதும்படி நா.பா. என்னைக்கேட்டுக்கொண்டார். இப்போது அவர் எந்தவிதமான பக்கக் கட்டுப்பாடோ, காலவரம்போ நிர்ணயிக்கவில்லை. எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதுங்கள்; எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் அது வளரட்டும் என்று எனக்குச் சுதந்திரம் அளித்து விட்டார்.

நான் 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றிக் கட்டுரைகள் எழுதினேன். இத் தொடர் 'தீபம்' இதழில் நாலரை வருட காலம் வந்தது. அதற்கு மிகப் பெரும் வரவேற்பு கிட்டியது.

ஆகையால், தொடர்ந்து கட்டுரைகள் எழுதும்படி நா.பா. கோரினார். 'பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை' என்ற கட்டுரைத் தொடரை எழுதினேன். அது மூன்று வருடங்களுக்கு மேலாக வெளிவந்தது. அதை அடுத்து, தமிழில் சிறுபத்திரிகைகள் என்ற தொடரை எழுத, அது நாலரை வருடங்கள் வந்தது.

இக்கட்டுரைத் தொடர்களினால் 'தீபம்' பத்திரிகைக்கும் மதிப்பு ஏற்பட்டது. அவற்றை எழுதிய எனக்கும் பெயர் வந்தது. எந்த அளவுக்கு என்றால், வல்லிக்கண்ணன் நல்ல சிறுகதை எழுத்தாளன், நாவலாசிரியன் என்ற மதிப்பு வாசகர்களால் மறந்து போகிற அளவுக்கு! குறிப்பிடத் தகுந்த இலக்கிய வரலாற்றுத் திறனாய்வாளன் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

பொதுவாக நான் என் எழுத்துக்களை யார் படிக்கிறார்கள்; அவை எப்படி வரவேற்கப்படுகின்றன என்றெல்லாம் கவலைப்பட்டதில்லை. அதை

அறிந்து கொள்வதில் அக்கறை காட்டியதும் இல்லை. நான்பாட்டிற்கு எழுதிக்கொண்டேயிருந்தேன். சகல வகை எழுத்துக்களையும் எழுதினேன். இதயஒலி என்ற கையெழுத்துச் சஞ்சிகையிலும் நிறைய எழுதி வைத்தேன். வருடக்கணக்கில், நானும் இந்த உலகமும் என்று பெரிய 'பவுண்டு நோட்டு'களில் எனது அனுபவங்களை, நான் சந்தித்தவர்களை, கண்டு களித்த வாழ்க்கை விநோதங்களைப் பற்றி எல்லாம் எழுதி வைத்தேன். இவை 'டயரி'கள் இல்லை. மாதவாரியாக எழுதப்பட்ட ரசமான குறிப்புகள்.

அவை எல்லாம் அச்சில் வந்ததில்லை. என்னைப் பார்க்க வருகிற நண்பர்களும் ரசிகர்களும் அவற்றைப் படித்து மகிழ்வார்கள். அவற்றைப் படிப்பதற்கென்றே சிலர் அடிக்கடி வந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில், அச்சில், பத்திரிகையில் வெளிவரும் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைத் தொடர் எவ்வளவுக்கு விரும்பிப் படிக்கப்பட்டது, படித்தவர்கள் எப்படி மகிழ்ச்சியுடன் பாராட்டினார்கள் என்று நான் தெரிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பு எனக்கு 1974இல் கிட்டியது.

அவ் வருட ஆரம்பத்தில் என் பெரிய அண்ணாச்சி இறந்து விட்ட பிறகும் நான் ராஜவல்லிபுரத்திலேயே தங்கியிருந்தேன். அச்சமயம் 'எழுத்துப் பிரசுரம்' வெளியீடுகளைத் திருநெல்வேலி மாவட்டத்தில் விற்பனை செய்வதற்காகத் திருநெல்வேலி வரத் திட்டமிட்டிருப்பது பற்றி சி.சு. செல்லப்பா எனக்குக் கடிதம் எழுதினார். நான் அவருக்கு உதவி புரிய இயலுமா என்றும் கேட்டிருந்தார்.

'நான் இப்போது கட்டற்று இருக்கிறேன். உங்களோடு சேர்ந்து சுற்ற நான் தயார்' என்று எழுதினேன். அதனால் அவர் மிகுந்த உற்சாகம் அடைந்தார். அதிக அளவில் புத்தகங்களைப் பார்சலில் அனுப்புகிறேன்; நான் வந்து பார்சல்களை எடுக்கலாம். அவற்றை உங்கள் வீட்டில் வைத்துவிட்டு, சிறிதுசிறிதாக எடுத்துச் சென்று விற்பனையைக் கவனிக்கலாம் என்று செல்லப்பா தெரிவித்தார்.

புத்தகப் பொதிகளைத் திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து ராஜவல்லிபுரம் வீட்டுக்குக் கொண்டு போவது சிரமம். எனவே அருகில் சிந்துபூந்துறையில் சண்முகம் பிள்ளை அண்ணாச்சி வீட்டில் பத்திரப்படுத்துவது; நாங்கள் ராஜவல்லிபுரம் வீட்டில் தங்குவது; அன்றாடம் வந்து தேவைப்படும் புத்தகங்களை எடுத்துக்கொண்டு கல்லூரி கல்லூரியாகப் போகலாம். இதுவே வசதியானது என்று கருதினேன்.

செல்லப்பா வந்ததும் என் எண்ணத்தை அவரிடம் சொல்ல, அவரும் ஒப்புக்கொண்டார். அவரையும் அழைத்துக் கொண்டு அண்ணாச்சியைக் காணச் சென்று, அறிமுகம் செய்து, விஷயத்தைச் சொன்னேன். சண்முகம் பிள்ளை அண்ணாச்சி மிகுந்த மகிழ்ச்சியோடு உதவ முன்வந்தார். 'இந்த

வீட்டில் பெரிய மாடி முழுவதும் சும்மா தான் கிடக்கு. நீங்கள் தாராளமாக உபயோகித்துக் கொள்ளலாம். இங்கேயே தங்குவதானாலும் தங்கிக்கெள்ளலாம்' என்றார்.

ராஜவல்லிபுரத்தில் தங்குவது தான் எங்களுக்குச் சவுகரியம் என்று சொல்லிவிட்டோம்.

அப்படியே செய்தோம். தினசரி அதிகாலையில் செல்லப்பாவும் நானும் எழுந்து ஆற்றுக்குப் போய் நீராடி வருவோம். இசக்கி என்கிற முத்தம்மாள் தோசை தயாரித்திருப்பாள். சில நாள், பக்கத்து வீட்டில் இட்டிலி வியாபாரம் செய்யும் அம்மாளிடம் இட்டிலி வாங்கி வைத்திருப்பாள். அவற்றைச் சாப்பிட்டு விட்டு பஸ்ஸில் திருநெல்வேலி ஜங்ஷன் வருவோம். நான்கு மைல் தூரம். சிந்துபூந்துறை போய், அண்ணாச்சியிடம் சிறிது பேசிவிட்டு, புத்தகப்பைகளுடன் ஒன்பது மணிக்கெல்லாம் புறப்பட்டு விடுவோம். இது தினசரி நியதி ஆயிற்று.

இவ்விதம் இரண்டு மாதங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றினோம். கல்லூரி கல்லூரியாகப் போனோம். பேட்டை, பாளையங்கோட்டையில் உள்ள கல்லூரிகளை முதலில் முடித்து விட்டுத் தூத்துக்குடி போனோம்.

தூத்துக்குடியில் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் வ.உ.சி. கல்லூரி முதல்வராக இருந்தார். அவர் நல்ல இலக்கிய ரசிகர்; எழுத்தாளரும் கூட, எங்கள் நண்பரும் ஆவார். அவர் எங்களை வரவேற்று, வேண்டிய உதவிகள் எல்லாம் செய்தார். இதர கல்லூரிகளுக்கு ஃபோன் மூலம் தகவல் சொல்லி எங்களுக்கு உதவும்படி கேட்டுக் கொண்டார். சிலருக்குக் கடிதமும் தந்தார். ஒரு நாள் அவர் வீட்டில் தங்குவதற்கும் உதவினார்.

பிறகு, சாயர்புரம், ஸ்ரீவைகுண்டம், நாசரேத், திருச்செந்தூர் என்று பல ஊர்களுக்கும் போனோம். எந்த ஊர் கல்லூரிக்குப் போனாலும், அங்கே இருந்த தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். புத்தகங்கள் வாங்கினார்கள். பெயர் பெற்ற எழுத்தாளர்கள் இரண்டு பேர் இப்படித் திடீரென்று வந்திருக்கிறீர்களே. இங்குள்ள மாணவர்களுக்கு எழுத்தாளர்களைப் பார்க்கக் கூடிய வாய்ப்பே கிடையாது. நீங்கள் முன்னதாக அறிவித்திருந்தால், இலக்கியக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து, உங்களை நல்லமுறையில் அறிமுகம் செய்திருக்க முடியுமே என்று வருத்தப்பட்டார்கள்.

இக் கால கட்டத்தில் தான், 'தீபம்' பத்திரிகையில் 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' கட்டுரைத் தொடர் வந்துகொண்டிருந்தது. மதுரைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்லூரிகளில் தற்கால இலக்கியமும், புதுக்கவிதையும் பாடநூல்களாக வைக்கப்பட்டிருந்தன. எனவே, அந்த இலக்கியத் தொடரை எல்லோரும் விரும்பிப் படிக்கிறார்கள்; மாணவர்களுக்கு

வெகுவாகப் பயன்படுகிறது என்று பேராசிரியர்கள் தவறாது கருத்துத் தெரிவித்தார்கள்.

ஒரு சில கல்லூரிகளில் தற்காலத் தமிழ் இலக்கியம், புதுக்கவிதை பற்றி, மாணவர்கள் முன் எங்களைப் பேசச் செய்தார்கள். ஒரிரு கல்லூரி முதல்வருக்கு எழுத்தாளர்களான எங்களைப் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை, சீசனில் லைபிரரிக்குப் புத்தகங்கள் விற்பனை செய்ய வருகிற புத்தக வியாபாரிகள் இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம் நாங்களும் என்று அவர்கள் கருதினார்கள். அந்த ரீதியிலேயே பேசி அனுப்பினார்கள்.

எல்லா இடங்களிலும் பேராசிரியர்களுக்கு வியப்புத் தந்த விஷயங்களும் உண்டு. நீங்கள் இரண்டு பேருமே மிக எளிமையாகத் தோன்றுகிறீர்கள். பெரிய எழுத்தாளர்கள் என்ற எவ்வித பந்தாவும் பண்ணாது சாதாரணமாக இருக்கிறீர்கள். உங்கள் புத்தகங்களை எடுத்துக் கொண்டு நீங்களே விற்கக் கிளம்பியிருக்கிறீர்கள் என்று ஆச்சரியப்பட்டார்கள்.

ஒரு கல்லூரியில் எங்களை நன்கு உபசரித்தார்கள். நீங்கள் தான் உண்மையான காந்தீயவாதிகள். எளிமையாக இருக்கிறீர்கள். தேச விடுதலைப் போராட்ட காலத்தில், தேசத் தொண்டர்கள் அவர்களே நூற்ற நூலில் செய்த கதராடைகளை மூட்டையாகச் சுமந்து கொண்டு, ஊர்ஊராகப் போய் விற்பனை செய்தார்கள். உங்களைப் பார்க்கிற போது அவர்களுடைய நினைவு வருகிறது. நீங்கள், உங்களுடைய புத்தகங்களைச் சுமந்து கொண்டு விற்பனை செய்கிற இலக்கியத் தொண்டர்களாக இருக்கிறீர்கள் என்று மகிழ்ச்சியோடு பேசி எங்களைச் சந்தோஷப்படுத்தினார்கள். கூடவே சொன்னார்கள்! நீங்கள் வந்திருக்கிற சமயம் சரியில்லை. இப்போது உங்கள் புத்தகங்களை வாங்கக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை. அதற்காக நாங்கள் வருத்தப்படுகிறோம்.

நாங்கள் வருத்தப்படவில்லை. அவர்களுடைய உபசரிப்பும் பண்பாடும் இனிய பேச்சும் எங்களுக்குச் சந்தோஷமே தந்தன. இந்த ஊர்சுற்றல் மகிழ்ச்சிகரமான அனுபவமாக அமைந்திருந்தது.

ஆயினும், இரண்டு மாதங்களக்குப் பிறகு, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுவதற்கும், பின்னர் திருச்சி மாவட்டத்தில் சற்றுப் பயணம் செய்யவும் சி.சு. செல்லப்பா அழைத்தபோது, நான் வரவில்லை என்று மறுத்துவிட்டேன்.

செல்லப்பா மட்டும் பிடிவாதமாகத் தனது முயற்சியை மேற்கொண்டார். அலைச்சலினால் கால் மூட்டுகளில் வலியும், புத்தகப் பைகளைச் சுமந்து சுமந்து தோள்களில் வலியும் ஏற்படும் வரை அவர் புத்தகங்களை விற்பதற்காகச் சுற்றித் திரிந்தார். உடல் பலவீனங்கள் அதிகரித்து, இனி அலைய முடியாது என்ற நிலை ஏற்படும் வரை அவர் விடாது தமது பணியைச் செய்து கொண்டிருந்தார்.

28

ஊர்சுற்றுவது எனக்குப் பிடித்தமான விஷயங்களில் ஒன்று. படிப்பது. எழுதுவது. ஊர்சுற்றுவது ஆகியவற்றை எனது வாழ்க்கை முறையாக வரித்துக்கொண்டிக்கிறேன்.

கூடியவரை தமிழ்நாட்டின் பலப்பல ஊர்களையும் போய்ப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆசையை நான் வளர்த்துவந்தேன். சிறுபிராயத்தில் தங்கியிருந்த ஊர்களை மீண்டும் சென்று காணவேண்டும் என்ற எண்ணம் என்னுள் வளர்ந்தது.

என்னுள் நிலையான பதிவுகளை ஏற்படுத்தியிருந்த ஊர்களுள் பெருங்குளம் முக்கியமானது. எனது ஆறு, ஏழாவது வயதுகளில் நான் அங்கே வாழ்ந்தேன். அந்த ஊரின் அனைத்து விவரங்களும் என் உள்ளத்தில் பசுமையாக நிலைத்திருந்தன. அந்த ஊரை மீண்டும் காணக்கூடிய வாய்ப்பு எனக்கு எனது ஐம்பத்து நான்காவது வயதில் கிட்டியது.

1974இல் சி.சு. செல்லப்பாவுடன் சேர்ந்து சுற்றியபோது, எதிர்பாராத விதத்தில் பெருங்குளம் சேர நேரிட்டது. தூத்துக்குடியில் இருந்து ஸ்ரீவைகுண்டம் போகத்திட்டமிட்டார், செல்லப்பா. நேர் பஸ் இல்லை. பெருங்குளத்துக்கு ஒரு பஸ்ஸில் போய், அங்கிருந்து ஸ்ரீவைகுண்டத்துக்கு வேறொரு பஸ்ஸில் பயணம் செய்ய வேண்டும் என்று தெரிந்தது. ஆகவே பெருங்குளம் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து ஸ்ரீவைகுண்டத்துக்குப் பஸ் கிடைக்க நேரம் அதிகமாகும் எனத் தோன்றியது. வேறு நகரத்திலிருந்து வருகிற 'ரூட் பஸ்' அவ்வூரில் நிற்கும்; அதில் இடம்பிடித்துச் செல்லவேண்டும் என்று சொல்லப்பட்டது.

சுமார் இரண்டு மணி நேரம் நாங்கள் பெருங்குளம் ஊரில் காத்து நின்றோம். அவ்வேளையில் நான் அந்த ஊரை, என் நினைவில் பதிந்த இடங்களைப் பார்த்தேன். முன்பு வளமாக, தென்னந்தோப்புகளும் மரங்களும் பசுமையுமாகக் காட்சி அளித்த ஊர் இப்போது வளமும் அழகும் பசுமையும் குன்றிக் காணப்பட்டது. வறுமையில் அடிபட்ட ஊராகக் காட்சி தந்தது. செங்கோல் மடம் எனும் சைவ மடம் அந்நாட்களில் விழிப்புடன் செழிப்பாக இருந்தது. இச்சமயம் அது தூங்கி வழியும் இடமாக, சிதைந்து, நூலாம்படை பற்றி, ஒரு பகுதி இடிந்த நிலையில் காணப்பட்டது.

முன்பு நாங்கள் சிவன் கோயிலுக்கு நேர் எதிரே இருந்த தெருவில் உள்ள ஒரு பெரிய வீட்டில் வசித்தோம். அந்த வீட்டுக்கு எதிராக சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ். தெருவில் ஐந்தாறு வீடுகளே இருந்தன. இப்போது வீடுகள் குறைந்திருந்தன. ஆபீஸ் சோகமூலாம் பூசியது போல் நின்றது. அதன் அருகில் உள்ள வெற்றிடத்திலும், சிவன் கோயிலுக்கும் தெருவுக்கும் போகிற சின்னத்

தெருவிலும் வேலிக்கருவை (நீர்க்கருவேல்) என்று சொல்லப்படுகிற முட்செடிகள் புதர்புதராக மண்டி வளர்ந்திருந்தன. ஆட்கள் நடந்துபோவதற்கு மத்தியில் குறுகலான பாதையே இருந்தது. சிவன் கோயிலும் விழிப்பாக இல்லை.

தென்மாவட்டங்களின் வளமற்ற-வறட்சி படிந்த - பலப்பல கிராமங்களுக்கும் ஒருவகை மாதிரியாகத்தான் காட்சி தந்தது பெருங்குளம். அதன் நிலையைக் காண்கையில் எனக்கு மனவேதனையே ஏற்பட்டது.

ரொம்ப நேரத்துக்குப் பிறகு முக்காணி என்ற ஊரிலிருந்து வந்த பஸ், பெருங்குளத்தில் நிற்காமலே போய்விட்டது. அரை மணி கழித்து ஏரல் நகரிலிருந்து வந்த பஸ் நின்றது. அது மிக அதிகமான பயணிகளோடுதான் வந்தது. அதனுள் புகுவதற்காக இந்த ஊரிலும் அதிக ஆட்கள் - ஆண்களும் பெண்களும் - காத்திருந்தார்கள். எல்லோருக்கும் இடம் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருந்தது.

ஒதுங்கி நின்ற எங்கள் இருவரைத் தவிர மற்ற அனைவரும் பஸ்ஸினுள் புகுந்துவிட்டார்கள். இந்த நெரிசலில் மாட்டிக் கொண்டு நாம் திணற வேண்டியதில்லை என்று நாங்கள் எண்ணினோம். அப்போதே மணி மாலை நாலரை ஆகியிருந்தது. இனி பஸ் வந்து, ஸ்ரீவைகுண்டம் போவது சரிப்பட்டு வராது. தூத்துக்குடிக்கே திரும்பி, அங்கிருந்து திருநெல்வேலி போய்விடுவோம்; இன்னொரு நாள் திருநெல்வேலியில் இருந்து நேரே ஸ்ரீவைகுண்டம் வரலாம் என்று செல்லப்பா முடிவு செய்தார்.

தூத்துக்குடி போக எளிதில் பஸ் கிடைத்தது. பஸ் போக்குவரத்தில், எல்லா பஸ்களிலும் எப்போதும் நெருக்கடியும் கூட்டமும்தான். இடைவழி ஊர்களில் பஸ் பிடிக்க வேண்டுமென்றால் பயணிகள் வெகுநேரம் காத்திருக்க நேரிடுவதுடன், அநேக சமயங்களில் பஸ் கிடைக்காமல் போவதும் இயல்பாக இருக்கிறது. இன்றும் இதே நிலைமைதான் நீடிக்கிறது.

சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு ஒட்டப்பிடாரம் ஊரைக் காணக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அச்சிற்றூரில் நான் எனது மூன்று, நான்காவது வயதில் வசித்தேன். ராஜவல்லிபுரத்தில் நான் அம்மா, அண்ணாச்சியுடன் தங்கியிருந்த நாட்களில் ஒட்டப்பிடாரத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது.

அங்கு ஆ. குருசுவாமி என்ற இலக்கிய ரசிகர் வசித்தார். வசதிகள் படைத்தவர். ஒரு காலத்தில் கொழும்புவில் தங்கி வியாபாரம் செய்தவர். அவர் அங்கு வணிகராக இருந்த காலத்தில், இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்களுக்குப் பலவகைகளில் உதவிகள் புரிந்தவர். புதுமைப்பித்தன் எழுத்துக்களில் ஈடுபாடு கொண்டவர். ஒட்டப்பிடாரம் வந்து ஊரோடு தங்கி விவசாயத்தைக் கவனித்து வந்த காலத்திலும் இலக்கிய உலகத் தொடர்பை

விட்டுவிடாது வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார். புத்தகங்கள் பத்திரிகைகள் அதிகம் வாங்கிப் படித்தார்.

அவருக்குத் துணை சேர்ந்திருந்தார் இளசை அருணா, பள்ளி ஆசிரியரான இவர் ஓவிய எழுத்துக்கள் எழுதுவதில் திறமையும் தேர்ச்சியும் பெற்றிருந்தார். கவிதைகள் எழுதினார். கதை கட்டுரைகள் எழுதுவதும் உண்டு. ஒட்டப்பிடாரத்தில் இலக்கியக் கூட்டங்கள் ஏற்பாடு செய்வதிலும் முனைப்பானவர்.

நான் ஒட்டப்பிடாரம் வரவேண்டும், குருசுவாமியின்அதிதியாகச் சில தினங்கள் தங்கவேண்டும் என்று இவ்விருவரும் அழைத்தார்கள். போனேன். மூன்று-நான்கு நாட்கள் அங்கு தங்கினேன்.

ஒட்டப்பிடாரம் இனிய ஊராகத்தான் இருந்தது. முதல் முறை போனபோது, வழிநெடுக உள்ள குளங்கள் ஏரிகள் எல்லாம் தண்ணீர் நிறைந்து, காற்றில் அலைபுரள, அழகாகக் காட்சி தந்தன. புன்செய் காடுகளில் பயிர்கள் பசுமையாய்ச் செழித்து வளர்ந்தன. பிறகு, இடைவெளிவிட்டு அவ்வப்போது அங்கே போக நேர்ந்தபோதெல்லாம் நீர்வளம் குறைந்து, விவசாயம் ஓய்ந்துபோன நிலையே காணப்பட்டது. சரிவர மழை பெய்யாததால் கிராமங்களில் வறட்சியும் வறுமையும் பெருகிவந்தது நன்கு புலனாகியது.

எதிர்பாராத இடங்களில் எல்லாம் இலக்கிய நண்பர்கள் இருந்தார்கள். அவரவர் ஊர்களுக்கு நான் வரவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அவர்களோடு சில நாட்கள் தங்கவேண்டும் என்று அன்புடன் உபசரித்தார்கள்.

ராஜபாளையம் த.பீ. செல்லம் நல்ல இலக்கிய ரசிகர். செல்வர். அதிகமாகப் புத்தகங்கள் வாங்கிப் படிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். கவிதைகளும் எழுதினார். மாளிகை போன்ற பெரிய வீடு அவருடையது. அதில் ஒரு அறை நிறையப் புத்தகங்களை அடுக்கிப் பாதுகாத்து வந்தார். திடீரென்று ஊர் சுற்றக் கிளம்பிவிடுவார். மதுரை, பெங்களூர், கோயம்புத்தூர், திருவனந்தபுரம் என்று போய் வருவார். ஒவவொரு முறையும் புத்தகங்களையும் வேறு அரிய பொருட்களையும் வாங்கி வருவார். அவருடைய அழைப்பை ஏற்று ராஜபாளையத்துக்குப் போய் வந்தேன்.

கோ.மா. கோதண்டம், பன்மொழிப் புலவர் ஜகந்நாத ராஜா, மாதவன், 'கதைப்பித்தன்' இரா. சுப்பிரமணியம், துரைராஜா முதலிய எழுத்தாளர்களும் ராஜபாளையத்திலிருந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். இலக்கியக் கூட்டங்கள் நடத்தினார்கள். புத்தகங்கள் வெளியிடுவதில் ஊக்கம் காட்டினார்கள்.

நாச்சியார்பட்டி என்றும் நாச்சியார் கோயில் என்றும் பெயர் பெற்ற கிராமத்தில் வசித்த சுடகோ. நாராயணசாமி 'எழுத்து' 'தீபம்' இதழ்களில் கவிதைகள் எழுதினார். 'தாமரை'யில் கதைகள் எழுதிக்கொண்டிருந்தார். பள்ளி

ஆசிரியராகப் பணியாற்றினார். என்னை அவர் ஊருக்கு வரும்படி செய்தார். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ளது அவரது ஊர்.

மற்றொரு இனிய நண்பர் வீர. வேலுசாமி ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாகச் செல்லவேண்டிய இன்னொரு கிராமம் அவருடையது. பி. ராமச்சந்திரபுரம் என்று பெயர். ஆனால் 'செந்நாக்குளம்' என்றுதான் மக்களால் அழைக்கப்படுகிறது. வேலுசாமியும் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்தான். ஆயினும், அரசு மாணவர் விடுதிக் காப்பாளராகப் பணியாற்றினார். அருமையான சிறுகதைகள் பல எழுதினார். அவை 'நிறங்கள்' என்ற தொகுப்பாக வந்தன. சிறுவர் கதைகளும் எழுதியுள்ளார். பிறகு ஏனோ எதுவும் எழுதுவதில்லை.

எழுத்தாற்றல் பெற்ற சிலபேர் ஒருகாலகட்டத்துக்குப் பிறகு ஏதோ சொந்தக் காரணங்களினால் எழுதாமலே இருந்துவிடுகிறார்கள். ஆனாலும், நல்ல புத்தகங்கள் படிப்பதை விட்டுவிடுவதில்லை. இதைப் பாராட்ட வேண்டும்.

என்னிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டுள்ள இனிய நண்பர்களில் வீர. வேலுசாமியும் ஒருவர். அவருடைய ஊருக்கு என்னை அநேக முறைகள் வரவழைத்துள்ளார் அவர்.

அது அழகான கிராமம். ஒரு காலத்தில் புகழ்வாய்ந்த காங்கிரஸ் தலைவராக விளங்கிய கிருஷ்ணசாமி நாயுடுவின் ஊர் அது. அவர் ஊர்ப்பற்றுதலோடு அந்த ஊரைப் பண்படுத்திப் பேணி ஒரு 'மாதிரி கிராமம்' (மாடல் வில்லேஜ்) ஆக அமைத்திருந்தார். ஊர் மக்களும் அதன் பெருமையைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டினார்கள்.

'வானம் பார்த்த கரிசல் காட்டு' பூமி அது. மழை பெய்து கண்மாய் பெருகினால் விவசாயம் செழிப்பாக நடைபெறும். வறட்சிக் காலங்களில் மக்கள் பாடு வெகு சிரமம்தான். பெரும்பாலும் மழை பொய்த்து விடுகிறது. மழையை எதிர்பார்த்து, விரக்தியோடும் வேதனையோடும் முணுமுணுத்துக் கொண்டு, விவசாய வாழ்க்கையை விட்டுவிடலாமா என்ற நினைப்போடும் விடமுடியாத வாழ்நிலையோடும் மண்ணை நம்பி நாளோட்டுகிற மக்கள் வசிக்கிற ஊர்களில் அதுவும் ஒன்று.

நான் மேற்கொண்ட நீண்ட பிரயாணம் கல்கத்தா போய் வந்தது ஆகும். அது 1977இல் நிகழ்ந்தது.

அவ் வருடம் நான் ராஜவல்லிபுரத்தில் பல மாதங்கள் போக்கினேன். நவம்பர் மாதம் சென்னை செல்லலாம் என்று எண்ணினேன். அச் சமயம் தீபாவளி நவம்பரில் வந்தது. தீபாவளி இரவில் ரயில் பயணம் செய்யலாமே என நினைத்தேன். வருவதே வருகிறாய், தீபாவளிக்குச் சில நாட்கள் முன்னதாக வரலாமே; எல்லோருக்கும் சந்தோஷமாக இருக்கும் என்று என்

அண்ணா எழுதினார். எனவே ஒரு வாரம் முன்னதாகவே சென்னை சேர்ந்தேன்.

அப்படி வந்தது நல்லதாயிற்று! தீபாவளிக்கு முதல்நாளிலிருந்து பெரிய மழை தொடங்கியது. தீபாவளி அன்று பேய் மழை வெளுத்து வாங்கியது. அன்று இரவு நான் ரயிலில் வந்திருந்தால் பல சிரமங்களை அனுபவிக்க நேரிட்டிருக்கும்.

நான் சென்னை வந்ததும் நண்பர் நா. பார்த்தசாரதி ஒரு வேண்டுகோள் விடுத்தார். கல்கத்தாவில் தமிழ்ச்சங்கம் நண்பர்கள் 'நாவல் நூற்றாண்டு' கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார்கள். முக்கிய எழுத்தாளர்களை அழைத்து வரும்படி என்னிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். நான் அசோகமித்திரன், ஞானக்கூத்தன், மு. மேத்தா, சேவற்கொடியோன், 'ஹிந்து' பத்திரிகையில் பணிபுரியும் நடராஜன் ஆகியோர் போகிறோம். நீங்களும் எங்களோடு வந்தால் நன்றாக இருக்கும். அவசியம் வாங்க என்று அழைத்தார்.

போய் வரலாமே என்று எண்ணினேன். இசைவு தெரிவித்தேன். நாங்கள் ஏழு பேரும் கல்கத்தா சென்ற பயணம் மிக முக்கியத்துவம் பெற்றதாகிவிட்டது.

நவம்பரில் மழை விடாது பெய்தது. கடலில் புயல் சின்னம் தோன்றியிருந்தது. புயல் சென்னையைத் தாக்கலாம், திருவல்லிக்கேணியை அது சாடக்கூடும் என்ற பயமுறுத்தல்களும், எதிர்பார்ப்புகளும் நிலவின.

நாங்கள் தனித்தனியாக சென்ட்ரல் ஸ்டேஷன் அடைந்தோம். மழையோடு மழையாகத் தான். மழையோடு தான் புறப்பட்டது 'கோரமண்டல் எக்ஸ்பிரஸ்'. பிரயாணம் நன்றாக அமைந்தது. எனினும், சென்னை நகரம் என்ன ஆகுமோ என்ற கவலை பலருக்கும் இருந்தது.

வளம் நிறைந்த பிரதேசங்கள், பசிய வயல்கள், மரங்கள் செறிந்த வனவெளிகள், பெரிய நதிகள் என்று இயற்கைக் காட்சிகளையும், மனிதர்களின் உழைப்பால் பொலிவும் புதுமையும் பெற்றுத் திகழும் நகரங்களின் வனப்புகளையும் கண்டுகளித்தபடி நாங்கள் பயணம் செய்தோம். புயலையே மறந்து விட்டோம். போகப் போக மழையும் இல்லாது போனது.

நாங்கள் கல்கத்தா போய்ச் சேர்ந்த உடன், எங்களை வரவேற்பதற்காகக் காத்து நின்ற நண்பர்கள் மிகுந்த சந்தோஷம் கொண்டார்கள். நிம்மதிப் பெருமூச்சு உயிர்த்தார்கள். 'நல்லபடியாக வந்து சேர்ந்தீர்களே. அது ரொம்ப சந்தோஷம் தருகிறது. நீங்கள் வந்த எக்ஸ்பிரசுக்கு என்ன நேருமோ, ஒழுங்காக அது கல்கத்தா வந்து சேருமோ சேராதோ என்ற பயம் எங்களுக்கு' என்று சொன்னார்கள்.

'ஏன், என்ன விஷயம்? சென்னை எப்படி இருக்கிறது?' எனக் கேட்டார் நா.பா.

'சென்னைக்கு ஒன்றுமில்லை. அது நன்றாகத் தான் இருக்கிறது. எதிர்பார்த்தபடி புயல் சென்னையைத் தாக்கவில்லை. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி காப்பாற்றிவிட்டார். புயல் உங்களுக்குப் பின்னாலேயே வந்திருக்கிறது. உங்கள் ரயிலைத் துரத்திக் கொண்டே வந்துள்ளது. ஆந்திராவை அது பலமாகத் தாக்கியுள்ளது. ரயில் பாதையை நாசமாக்கி விட்டது. அநேக ரயில்கள் அங்கங்கே நிறுத்தப்பட்டுவிட்டன. அதனால்தான் கோரமண்டல் எக்ஸ்பிரசுக்கு என்ன ஆகுமோ என்ற பயம் எங்களுக்கு ஏற்பட்டது' என்று அன்பர்கள் தெரிவித்தார்கள்.

அந்த வருடம் கல்கத்தாவில் தமிழ் நாவல் நூற்றாண்டு விழா சந்தோஷத்துடன் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதல் தமிழ் நாவலான மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' 1877இல் எழுதிமுடிக்கப்பட்டது; எனவே 1977 தான் நாவல் நூற்றாண்டு ஆகும் என்றொரு கருத்து இருக்கிறது. அந்த நாவல் நூலாக அச்சிடப்பட்டு 1879இல் தான் வெளிவந்தது. ஆகவே 1879தான் நாவல் நூற்றாண்டு என்று இன்னொரு கருத்தும் உள்ளது.

கல்கத்தாவிலும் தமிழ்நாட்டில் சில இடங்களிலும் 1977இல் நாவல் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. மாயூரம் வேதநாயகம் பிள்ளை வசித்த மாயவரத்திலும் (மயிலாடுதுறை) மற்றும் சில ஊர்களிலும் 1979இல் தமிழ் நாவல் நூற்றாண்டு விழா இனிது நிகழ்ந்தது.

கல்கத்தாவில் தமிழ்ச்சங்கம் சார்பில் நாவல் விழா கொண்டாடிய நாங்கள் திட்டமிட்டபடி மூன்றாம் நாளே அங்கிருந்து புறப்பட் இயலவில்லை. புயலினால் பாதிக்கப்பட்டு பல இடங்களில் தண்டவாளங்கள் பெயர்ந்து போயிருந்தன. அவற்றைப் பழுதுபார்த்துச் செம்மைப்படுத்திய பின்னரே சென்னைக்கு ரயில் வண்டிகள் போகும் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஒரு வார காலம் தேவைப்பட்டது.

நாங்கள் ஒரு வாரமும் கல்கத்தாவில் தங்கினோம். கல்கத்தாவையும், அந்நகரில் பார்க்கவேண்டிய இடங்கள் பலவற்றையும் கண்டு களித்தோம். கல்கத்தா இலக்கிய நண்பர்களின் விருந்து உபசாரம் போற்றப்பட வேண்டியதாகும்.

ரயில் போக்குவரத்து சீர்பட்டதும், கல்கத்தா நண்பர்கள் கோரமண்டல எக்ஸ்பிரசில் எங்களை அனுப்பிவைத்தார்கள்.

திரும்பியபோது ஆந்திரப் பிரதேசத்தில் நாங்கள் பார்க்க நேர்ந்த காட்சிகள் கோரமானவை. அருவருப்பும் பயஉணர்வும் எழுப்பக்கூடியனவாக இருந்தன.

கல்கத்தா சென்றபோது, வழிநெடுகப் பசுமையாய், குளுமையாய், இனிமையாய்க் காட்சி தந்த வளங்கள் எல்லாம் இப்போது நாசமாக்கப்பட்டிருந்தன. வாழைகளும் பசிய மரங்களும் இதர வகைப் பயிர்களும் அடித்து நொறுக்கப்பட்டுச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கப்பட்டிருந்தன. எங்கெங்கும் எருமைகள், பசுக்கள், இதர மாடுகள் கன்றுகள், நாய்கள் செத்து, வயிறு உப்பி, நாற்றம்பரப்பிக்கிடந்தன. வழி நெடுக நின்ற தந்திக் கம்பங்களும், மின் விளக்குக் கம்பங்களும் மாய அசுரக் கரங்களால் துணிபோல் திருகி இறுக்கிப் பிழியப்பட்டனவாக வளைந்து நெளிந்து கோணிக் கிடந்தன. சற்றுத் தொலைவில் தெரிந்த ஊர்களில் வீடுகள், ஓடு வேய்ந்த கூரைகள் சிதைத்துச் சீர்குலைக்கப்பட்டிருந்தன. கூரை வீடுகள் என்ன பாடுபட்டிருக்கும் என்று எண்ணவைத்தன. வெறி பிடித்த பேய்க்காற்றினாலும் பயங்கர மழையினாலும் மனிதர்கள் - அபலைகளான பெண்களும் குழந்தைகளும் வலுவற்றுப் போன ஆண்களும் - எத்தகைய கஷ்டங்களை அனுபவித்திருப்பார்கள் என்ற நினைப்பு இதய வேதனை தந்தது. ஒரு வாரத்திற்குப் பிறகும் இப்படிக் கிடக்கிற அவலங்கள் மாறி இயல்புநிலை பெற இன்னும் எத்தனை வாரங்கள் ஆகுமோ என்று எண்ணாதிருக்க முடியவில்லை.

ஒவ்வோர் ஆண்டும் கடலில் புயல் சின்னம் தோன்றுகிறது. புயலாக மாறி அது தமிழ்நாட்டுக் கடலோரப் பகுதியில் எங்காவது கரையைக் கடக்கக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கவும்படுகிறது. ஆனால் ஆண்டுதோறும் அது நகர்ந்து போய் ஆந்திரப் பிரதேசத்தில் கரையைக் கடந்து, கடலோரப் பகுதிகளில் சேதம் விளைவிப்பதும் நடந்து வருகிறது.

அதுபற்றிய செய்திகள் எனக்கு 1977ஆம் வருடப் புயலின் பின்விளைவுகளை நினைவுக்குக் கொண்டு வரும். அந்தப் பிரதேசத்தின் மக்களின் துன்ப துயரங்களை எண்ணி என் உள்ளத்தில் சோகம் படர்வது இயல்பாகி விட்டது.

29

நான் நல்ல பேச்சாளன் இல்லை. மேடைப்பேச்சு ஒரு தனிக்கலை. அதில் நான் பயின்று தேர்ச்சி பெறவில்லை.

வெகுகாலம் வரை நான் கூட்டங்களில் பேசமுற்பட்டதேயில்லை. அதை மறுத்தே வந்தேன். என் எழுத்துக்களைப் படித்தால் போதும்; என்னைப் பார்க்கவும் எனது பேச்சைப் பலரும் கேட்கவும் வேண்டியதில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தேன். எனவே எந்தக் கூட்டத்துக்கும் போவதுமில்லை.

ஆனாலும், நாள் ஆகஆக, கூட்டங்களில் பேசவேண்டிய கட்டாய நிலை எனக்கு ஏற்படலாயிற்று. மேடைப் பேச்சுக்குத் தேவையான குரல் ஏற்ற

இறக்கங்களுடன் பேசுவது : நீட்டியும் இழுத்தும் பேச்சை வளர்ப்பது, இடையிடையே கவிதைகள், மேற்கோள்கள், சுவாரசியமான துணுக்குகள் முதலியவற்றைக் கலந்து அளித்துக் கேட்போரை ரசிக்கச் செய்வது போன்ற சாமர்த்தியங்கள் எனக்கில்லை. என் பேச்சு ஏதோ புத்தகத்தைப் பார்த்துப் படிப்பது போல ஒலிக்கும். மேலும், கேட்போர் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் நிறுத்தி நிதானமாகப் பேசாமல், வெகு வேகமாகப் பேசுவதாகப் பலரும் குறைகூறுவதும் உண்டு.

இருப்பினும் என் பேச்சில் நிறைந்திருக்கிற தகவல்களும் விவரங்களும் அநேகரை வியக்க வைக்கும். குறிப்புகள் எதுவும் இல்லாமல், இடைக்கிடை எதையாவது பார்த்து அறியாமல், பொருளுக்குச் சம்பந்தப்பட்ட செய்திகளையும் தகவல்களையும் விடாது சொல்வதாக ரசித்தவர்கள் குறிப்பிடுவது வழக்கம்.

கல்கத்தா தமிழ்ச் சங்கத்தில் நாவல்கள் பற்றி நான் பேசிய விவரங்கள் பலரையும் வியக்கவைத்தன. 'எவ்வளவு நாவல்கள் படித்திருக்கிறீர்கள்! அவற்றை எல்லாம் நினைவு வைத்து எடுத்துச் சொல்கிறீர்கள்! அபாரமான ஞாபகசக்தி!' என்று அவர்கள் பாராட்டினார்கள்.

அதே போன்ற பாராட்டுரையை 1979இல் மாயவரத்தில் நடைபெற்ற நாவல் விழாவின்போதும் நான் பெறமுடிந்தது. மாயவரம் (அப்போது அந்த ஊர் தனது முன்னைப் பெயரான மயிலாடுதுறை என்பதை மீண்டும் ஏற்றிருக்கவில்லை) தெய்வத்தமிழ் மன்றம் 'தமிழ் நாவல் நூற்றாண்டு விழா'வை 1979இல் கொண்டாடியது.

இரண்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்ற விழா அது. பெயர் பெற்ற நாவலாசிரியர்கள் அதில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். அகிலன், நீல. பத்மநாபன், லா.ச. ராமாமிர்தம், சாண்டில்யன் முதலியவர்கள் நாவல்கள் பற்றிப் பேசினார்கள். சி.சு. செல்லப்பா, கோவை ஞானி, தி.க. சிவசங்கரன் போன்ற விமர்சகர்களும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். 'சரித்திர நாவல்கள்' பற்றிப் பேசும்படி என்னைக் கேட்டிருந்தார்கள். பேசினேன்.

'சரித்திர நாவல்கள்' என்று பெயர் பண்ணப்படுகிறவை உண்மையில் சரித்திரமும் இல்லை; அவை இலக்கியத்தரமான நாவல்களும் இல்லை. சரித்திரங்களில் இடம்பெற்றுள்ள மன்னர்களின் பெயர்கள், இடங்கள் போன்ற வரலாற்றுப் பெருமை பெற்ற விஷயங்களை வைத்துக் கொண்டு, காதல், உளவு, சூழ்ச்சிகள், தந்திர மந்திரங்கள், மர்மங்கள், பாதாளச் சிறை-குகை வழிகள் முதலிய மசாலாக்களைச் சேர்த்து, அதீதக் கற்பனையில் புரட்டி எடுத்துப் பரிமாறப் படுகிற பம்மாத்து வேலைகளே அவை. சரித்திர நாவல்கள் என்று எழுதப்படுகிறவற்றில் பெரும்பாலானவை துப்பறியும் மர்மக் கதைகளாகவே பின்னப்பட்டிருக்கின்றன. மாமன்னன் அப்பாவி போல் இருப்பான். அவனுக்கு எதிரான சூழ்ச்சிகள் திட்டங்கள் முதலியன வெற்றிகரமாக நடத்தப்படும்.

முடிவில் மாமன்னன் மிகத் திறமையாளனாக- ஆரம்பம் முதலே அனைத்தையும் அறிந்து வந்திருப்பவனாக, சூழ்ச்சிகள் பலவற்றையும் ஆற்றலோடு முறியடிக்கும் சக்திமானாக ஓங்கிநிற்பான். இது தான் சரித்திரக் கதை 'ஃபார்முலா' வாகப் பல ஆசிரியர்களாலும் கையாளப்படுகிறது.

ஒரு சிலர், தாங்கள் உண்மையான வரலாற்றை ஆராய்ந்து, நடந்தனவற்றையே சித்திரித்திருப்பது போல, இடங்களுக்கான வரைபடங்கள் தீட்டுவார்கள்; அடிக்குறிப்புகள் எழுதிவைப்பார்கள்; சம்பந்தப்பட்ட இடங்களுக்கெல்லாம் நேரேபோய் ஆதாரங்களைத் தேடியதாக எழுதுவார்கள். ஆனாலும் அவர்களும் வழக்கமான பாணியிலேயே கதை பண்ணியிருப்பார்கள்.

சாண்டில்யன் தனக்கெனத் தனி உத்திகளைக் கையாள்வது வழக்கம். அவர் எழுதும் சரித்திர நாவல்களில் சிருங்கார ரசம் பெருகி ஓடும். பெண் அங்க வர்ணனைகள் அதிகமாக இடம் பெறும். தமிழ் சினிமாவில் கட்டாய அம்சங்களாகி விட்டவை போல, அவருடைய நாவல்களிலும் படுக்கை அறைக்காட்சி, அழகி குளத்தில் குளிக்கும் காட்சிகள், அவள் மழையில் நனைகிற காட்சி கண்டிப்பாக இடம் பெறும். அச்சமயங்களில் அலங்காரவல்லியின் மெல்லிய ஆடை அவள் உடம்பில் எப்படிப்படர்ந்து என்னென்ன அழகுகளை எடுத்துக் காட்டின என்று சுவையான வர்ணனைகள் உண்டு. இவற்றை எல்லாம் கதாநாயகன் மறைந்து நின்று பார்த்து ரசிப்பது தான் முக்கிய அம்சமாகும்.

படுக்கையில் இளவரசி கிடந்த திருக்கோலம் பற்றியும், அவள் புரண்டு திரும்பிப்படுத்த அழகு, அப்போது அவளது ஆடை. எங்கெங்கு விலகின, திரையின் பின் பதுங்கிநின்ற கதாநாயகன் காணக்கிடைத்த அற்புதங்கள் பற்றியும் ஓர் அத்தியாயம் எழுதியிருப்பார் சாண்டில்யன்.

இன்னொரு நாவலில், படுக்கையறைக்குப் பதிலாக பூங்காவனத்துப் பூஞ்சுனை வரும். அதன் அழகான - அகலமான-சிறுசுவர் மீது அழகி படுத்திருப்பாள் ஒயிலாக. அவளது நிழல் நீரில் படிந்து கிடந்த கவர்ச்சித் தோற்றத்தை விரிவாக வர்ணித்திருப்பார் ஆசிரியர்.

இவ்விதம் வாசகர்களைக் கிறங்கவைக்கும் உத்திகள் சரித்திர நாவல்களில் அதிகம் ஆளப்படுகின்றன. அந்த அந்தக் காலத்துச் சமூக நிலைமைகள், மக்களின் வாழ்க்கை முறைகள், கலாசாரம் போன்றவை அவற்றில் பதிவு செய்யப்படுவதேயில்லை.

இத்தன்மையில் நான் என் எண்ணங்களைச் சொன்னேன். கேட்டிருந்தவர்கள் வெகுவாக ரசித்தார்கள். எழுத்தாளர் சாண்டில்யன் அப்போது அங்கே இல்லை. முதல்நாள் கூட்டத்தில் பேசிவிட்டு, அன்று இரவே அவர் சென்னைக்குத் திரும்பிவிட்டார்.

இருந்திருந்தால், கோபம் கொண்டு எழுந்து ஆத்திரத்தோடு பதில் கூறியிருப்பார் அவர். அவரது வழக்கமான விளக்கம்தான். 'இப்படி எல்லாம் எழுதுவது காவிய தர்மம் ஆகும். காளிதாசன் பெண் வர்ணனைகள் எழுதவில்லையா? பவபூதி எழுதவில்லையா? நான் எழுதினால் மட்டும் அது குற்றமா? நாவலும் காவிய வகையைச் சேர்ந்தது தான்' என்று கூறியிருப்பார்.

நாவலாசிரியர் அகிலன் வெகுண்டு சூடாகப் பேச வேண்டிய சந்தர்ப்பம் மாயவரம் நாவல் விழாவில் ஏற்பட்டது. அவ்விழாவின் போது '50 தமிழ் நாவல்கள் 50 கட்டுரைகள்' என்ற தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

அதுவரை வெளிவந்து கவனிப்புப் பெற்றிருந்த ஐம்பது முக்கிய நாவல்கள் பற்றி ஐம்பது எழுத்தாளர்களிடம் கருத்துக் கட்டுரைகள் வாங்கித் தொகுக்கப்பட்டிருந்தன. தொகுத்தவர் - தமிழ் மன்றத் தலைவர் இரா. இராஜசேகரன்.

அவற்றில் அகிலன் நாவல்கள் பற்றிச் சுந்தர ராமசாமி எழுதிய கட்டுரையும் இருந்தது. சுரா விமர்சன ரீதியில், நையாண்டியாகச் சில வரிகள் ாழுதியிருந்தார். புத்தகம் கிடைத்தவுடன் முதலாவதாக அந்தக் கட்டுரையைப் ிடித்த அகிலனுக்குக் கோபம் வந்து விட்டது. அப்போது அவர் மேடையில் ஃமஜை முன்பாக அமர்ந்திருந்தார். ஆவேசமாக எழுந்து கைகளை வீசிப் ஃபசலானார். அவர் கைவீசிய வேகத்தில், மேஜை மீதிருந்த சோடாபுட்டி உருண்டு விழுந்து, சோடாநீர் வழிந்து ஓடியது.

'என் நாவலைப் பற்றி இப்படி எழுதியிருக்கிறார் ஒருவர். அவர் பெரிய எழுத்தாளராம்!' என்று கேலியாகப் பேசலானார். அவரும் அவர் போன்றவர்களும் எழுதுகிற எழுத்துக்களைச் சில நூறு பேர்தான் படித்து ரசிப்பார்கள். என் எழுத்துக்களை லட்சக்கணக்கான வாசகர்கள் படித்து மகிழ்கிறார்கள். பாராட்டுகிறார்கள். நான் இவர்களைப் போன்ற ஒரு சில விமர்சகர்களின் பலத்தில் எழுத்தாளனாக வளர்ந்திருக்கவில்லை. நாடெங்கிலும் உள்ள பல லட்சம் வாசகர்களின் பலத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறேன். என்னுடைய எழுத்துக்கள் தமிழில் மட்டுமல்ல, இதர பல இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பல மொழி வாசகர்களாலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. இன்று கூட எனது நாவல் ஒன்று குஜராத்திமொழியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புத்தகமாக வந்திருக்கிறது. இது தான் அந்தப் புத்தகம்' என்று ஒரு புதிய நூலை உயர்த்திப் பிடித்துக் காண்பித்தார்.

விமர்சனத்தைப் பொறுத்தவரை நம் எழுத்தாளர்களின் மனநிலை இந்த விதமாகத் தான் இருக்கிறது. மிகப்புகழ் பெற்ற எழுத்தாளர்களினால் கூட எதிர்ப்படும் விமர்சனத்தைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. விமர்சனங்கள் அவர்களுக்கு எரிச்சல் மூட்டுகிறது. விமர்சனம் என்றால் பாராட்டுரையாகவே அமைய வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். குறை கூறி எழுதினால்,

எழுதுகிறவர்களை 'வேண்டாதவர்க'ளாக-விரோதிகளாக-மதிக்கத் தொடங்குகிறார்கள்.

தமிழில் இலக்கிய விமர்சனம் வளராமல் இருப்பதற்கு எழுத்தாளார்களின் இந்த மனநிலையும் ஒரு காரணமாகும்.

இதை 'மணிக்கொடி எழுத்தாளர்' கு.ப. ராஜகோபாலன் 1940களிலேயே ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். 'என்ன எழுதுவது?' என்பது கட்டுரையின் பெயர். எழுதும்படி அடிக்கடி மற்றவர்கள் தூண்டுகிறார்கள். ஆனால், எழுதுகிறவருக்கு என்ன எழுதுவது என்ற குழப்பம் அவ்வப் போது தோன்றத்தான் செய்கிறது என்று தொடங்கி, தனக்கு உள்ள நெருக்கடிகள், சிரமங்கள் பற்றிக் கூறிவிட்டு, புதிதாக எழுதவேண்டுமானால் விமர்சனம் எழுதலாம். ஆனால் விமர்சனம் எழுதுவதில் ஓர் ஆபத்தும் இருக்கிறது.விமர்சனத்துக்கு உள்ளாகிறவர்கள் நம்மை எதிரியாகக் கருதிவிடுவார்கள். நண்பர்களைப் பகைவர்களாக்கிக் கொள்ள வேண்டுமானால், விமர்சனம் எழுதலாம். அது எதற்காக என்று எண்ணித் தான் நான் வெறுமனே கதைகளையே எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று கு.ப.ரா. கூறியிருக்கிறார்.

'மணிக்கொடி எழுத்தாளர்கள்' இலக்கிய விமர்சனத்தில் ஆர்வம் கொண்டதில்லை. முதலில் படைப்புகள் தான் முக்கியம்; போதுமான அளவு படைப்புகள் தோன்றிய பிறகு விமர்சனத்தில் ஈடுபடலாம் என்று அவர்கள் கருதினார்கள். அதனால் இலக்கியத் தரமான சிறுகதைகள் படைப்பதிலேயே அவர்கள் உற்சாகம் காட்டினார்கள்.

இருப்பினும், புதுமைப்பித்தன் விமர்சன ரீதியில் அவ்வப்போது கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார். புத்தகங்கள் பற்றியும் சில எழுத்தாளர்களின் எழுத்துக்கள் குறித்தும் சூடும் சுவையும் நிறைந்த அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தியின் கதைகள் பற்றிக் காரசாரமான விமர்சனங்கள் எழுதினார்.

இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் அவசியம் தேவை என்ற உணர்வோடு 1960களில் க.நா. சுப்ரமண்யம் விமர்சனத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இலக்கிய விமர்சனத்தில் முனைப்பாக இருந்ததனால் அவர் பல எழுத்தாளர்களின் வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் ஆளாக நேரிட்டது. அதற்கு அவர் கையாண்ட விமர்சன முறையே காரணம் ஆகும்.

க.நா.சு. தமது சொந்த ரசனையை ஆதாரமாகக் கொண்டு முடிவுகள் தெரிவித்தார். யார் யார் சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் என்று பட்டியலிட்டார். சிறிது காலத்துக்குப் பிறகு, முதலில் குறிப்பிட்ட பத்துப் பெயர்களில் இருந்து சில பெயர்களை நீக்கினார். வேறு சிலரைச் சேர்த்தார். அவற்றுக்கான காரணங்களைச் சொல்லவும் இல்லை. நான் உலக இலக்கியங்கள் கற்றவன்;

அதிகம் படித்தவன்: என்னுடைய ரசனையில் ஆதாரத்தில் தீர்மானித்துக் சொல்கிறேன். அதை அப்படியே நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் என்றார்.

இந்தப் போக்கு எழுத்தாளர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே பலரும் க.நா.சு வைக் குறை கூறினார்கள். மேலும், அவர், பெயர்பெற்றிருந்த அநேக எழுத்தாளர்களை எழுத்தாளர்களாகவும் அவர்களது எழுத்துக்களைத் தரமான எழுத்துக்களாகவும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவை எல்லாம் பத்திரிகை எழுத்துக்கள்; அவை இலக்கியத் தரம் உடையன ஆகா என்று தெரிவித்தார். இதனாலும் எழுத்தாளர்களது வெறுப்பை அவர் அதிகம் பெற்றார்.

க.நா.சு. விமர்சனத்தில் ஈடுபட்டதனால், அவருடைய சாதனைகள் உரிய மதிப்பைப் பெறாது போயின. அவை புறம்தள்ளப்பட்டன. அவர் நல்ல சிறுகதை எழுத்தாளர்; சிறந்த நாவல்கள் எழுதியிருப்பவர்: மொழிபெயர்ப்புகள் மூலம் அரும்பணி ஆற்றியவர் என்பனவெல்லாம் மறக்கப்பட்டன. விமர்சனம் என்று இஷ்டம் போல் கருத்துக்களை எழுதிக் கொண்டிருப்பவர் என்ற அபிப்பிராயமே பத்திரிகை உலகத்தில் மேலோங்கியது.

க.நா. சுப்ரமண்யம் உலகமொழிகளில் சிறந்த நாவல்கள் சிறவற்றை, ஆங்கிலம் வழியாகத், தமிழாக்கியிருக்கிறார். நோபல் பரிசு பெற்ற நாவல்கள் சிலவற்றை மொழி பெயர்த்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். உலக இலக்கியங்கள் பற்றியும், இலக்கியப் படைப்பாளிகள் பற்றியும் அறிமுகக் கட்டுரைகள் எழுதி நற்பணி புரிந்திருக்கிறார்.

அதே போல, தமிழில் இருந்தும் சில நாவல்களையும் சிறுகதைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இந்தியாவின் இதர மொழி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் அவர் செய்துள்ளார். மேலும், சிலப்பதிகாரக் காவியத்தையும் திருக்குறள் நூலையும் ஆங்கிலப்படுத்திப் புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்.

க.நா. சுப்பிரமண்யத்தின் தாக்கம் பெற்றுச் சி.சு. செல்லப்பாவும் இலக்கிய விமர்சனத்தில் ஈடுபட்டார். க.நா.சு விமர்சனப் பாணியை முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத செல்லப்பா தமக்கெனத் தனி முறை வகுத்துக் கொண்டார். ஆழ்ந்த ஆய்வுமுறையில் 'பகுப்பாய்வு விமர்சன'ப் பாங்கு அவருடையது. (ANALYTICAL CRITICISM). இம் முறைப்படி லா.ச. ராமாமிர்தம், மௌனி, புதுமைப்பித்தன் ஆகியோரது சிறுகதைகளை ஆய்வுசெய்து ஆழ்ந்த கட்டுரைகள் எழுதினார். சில நாவல்கள் குறித்தும் விமர்சனக் கட்டுரைகள் எழுதினார். இலக்கிய விமர்சனத்தை வளர்ப்பதற்கென்றே 'எழுத்து' பத்திரிகையைப் பன்னிரண்டு வருடங்கள் நடத்தினார்.

சி.சு,. செல்லப்பாவின் இலக்கிய நோக்கிலும் சில குறைகள் இருந்தன. மணிக்கொடி எழுத்தாளர்களுக்குப் பிறகு தமிழில் சிறந்த சிறுகதைகள்

எழுதக்கூடியவர்கள் இல்லை என்று அவர் திடமாக நம்பினார். இந்தக் கருத்தை எழுத்திலும் பேச்சிலும் வெளியிட அவர் தயங்கியதில்லை. பின்வந்த எழுத்தாளர்களின் எழுத்துக்களை அவர் படிக்கவே மறுத்தார்.

இந்த வகையில் க.நா. சுப்ரமண்யம் எவ்வளவோ மேல், அவர் தமிழில் வருகிற புத்தகங்களை வரவேற்றுப் படித்தார் புதிய் எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் படிப்பதில் அவர் ஆர்வம் காட்டினார்.

'எழுத்து'ப் பத்திரிகையின் தாக்கத்தினால், இலக்கிய விமர்சனத்தில் சிலர் ஈடுபட்டனர். பேராசிரியர் சி. கனகசபாபதி தற்கால இலக்கியம் குறித்த விமர்சனக் கட்டுரைகள் எழுதினார். பாரதி, பாரதிதாசன், புதுக்கவிதை பற்றி எல்லாம் அவர் எழுதியுள்ள விமர்சனக் கட்டுரைகள் கவனிப்புக்கும் பாராட்டுதலுக்கும் உரியனவாயின,

வெங்கட் சாமிநாதன், பிரமிள் என்கிற தருமு சிவராம் இருவரும் எழுத்துக் காலத்திலிருந்து விமர்சனம் எழுதுவதில் தீவிர உற்சாகம் காட்டலாயினர்.

வெங்கட் சாமிநாதன் எதிர்மறை நோக்கே கொண்டிருந்தார். தமிழ்நாடு இலக்கியப் பாலை; இங்குப் பசுமையான வாழைகள் தோன்றுவதில்லை. இங்கிருப்பவர்களுக்கு சுயசிந்தனை ஆற்றலே கிடையாது என்று உறுதியாக நம்பி, அந்த நோக்குடனேயே விமர்சனத் துறையில் ஈடுபட்டுச் செயலாற்றினார். பெயர் பெற்றிருந்த படைப்பாளிகள் பலரையும் குறைகூறித் தாக்குவதாகவே இருந்தன அவருடைய விமர்சனக் கட்டுரைகள்.

தருமு. சிவராம் விமர்சனங்களும் அதே தன்மையில்தான் இருந்தன. அவரும் வெங்கட்சாமிநாதனும் ஆரம்பத்தில் பரஸ்பரம் பாராட்டிப் புகழ்ந்து எழுதினார்கள். இதர எழுத்தாளர்கள் பலரையும் தாக்கினார்கள். அதனால், பரபரப்புக் கட்டுரைகள் மூலம் கவனிப்புப் பெற விரும்பிய சிறுபத்திரிகைகள் அநேகம் இவ்விருவருடைய எழுத்துக்களையும் விரும்பி ஏற்று வெளியிட்டன.

காலப்போக்கில் இவ்விருவருமே ஒருவரை ஒருவர் தாக்கியும் பழித்தும் நீளம்நீளமான விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதில் மகிழ்ச்சி கண்டார்கள். ஒவ்வொருவரும் முப்பது பக்கங்கள், நாற்பது பக்கங்கள் என்று இந்தரகக் கட்டுரைகளை எழுதினார்கள். தனிப் பிரசுரங்களும் வெளியிட்டார்கள்.

1970களில் தமிழில் சிறு பத்திரிகைகள் அதிகமாக வெளிவந்தன. அவற்றில் பல வெங்கட்சாமிநாதன், தருமு சிவராம் இருவரது விமர்சனக் கட்டுரைகளை வெளியிடுவதில் பெருமை கொண்டன. இவ் வகையில் அக்காலகட்டத்திய சிற்றிதழ்களின் பக்கங்களையும் தரத்தையும் கெடுத்த 'புண்ணியம்' இந்த இரண்டு பேரையும் சாரும்.

விமர்சனத் துறையில், மார்க்சியக் கண்ணோட்டத்துடன் இலக்கிய விமர்சனம் செய்வதும் வளர்ந்து வந்தது. இலங்கை இலக்கிய விமர்சகர்களான கலாநிதி க. கைலாசபதி, கலாநிதி சிவத்தம்பி இருவரது தாக்கமும் தமிழ்நாட்டில் வலிமை பெற்றிருந்தது. பேராசிரியர் நா. வானமாமலை மார்க்சியப் பார்வையுடன் ஆழ்ந்த விமர்சனங்கள் எழுதினார். தொ.மு.சி. ரகுநாதனும் இவ்வகையில் சாதனை பூரிந்திருக்கிறார். தி.க.சிவசங்கரன் விமர்சனத்துறையில் ஈடுபட்டுக் கவனிப்புக்கு உரியவரானார்.

பேராசிரியர் நா.வா. மார்க்சிய நோக்கு விமர்சனத்தை வளர்ப்பதற்காகவே 'ஆராய்ச்சி' என்கிற காலாண்டு இதழை நடத்தினார். 'ஆராய்ச்சி' என்ற பெயரில் வகுப்புகள் கூட்டி வழிகாட்டினார். அதன் மூலம் 'ஆராய்ச்சிக் குழு' என்று பெயர் பெற்ற திறனாய்வாளர்கள் பலர் உருவாயினர். முனைவர் தி.சு. நடராஜன், வெ. கிருஷ்ணமூர்த்தி, ஆ. சிவசுப்பிரமணியன் போன்ற ஆய்வாளர்கள் வளர்ந்து நற்பணி புரியலாயினர்.

என்னை நான் ஓர் இலக்கிய விமர்சகனாகக் கருதுவது இல்லை. நான் விமர்சகன் அல்லன், ரசிகன் - இலக்கிய வாசகன் என்றே சொல்லி வருகிறேன். அவ்விதமே பல இடங்களிலும் குறிப்பிட்டிருக்கிறேன். நான் படித்த புத்தகங்களை இதர வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் தன்மையில், மதிப்புரைகளும் கட்டுரைகளும் மிகுதியாகவே எழுதியுள்ளேன்.

ஆயினும், நான் சரியான விமர்சகன் இல்லை; அனைத்தையும் அனைவரையும் பாராட்டிக் கொண்டிருக்கிறேன் என்ற குறைகூறல் பலராலும் சொல்லப்பட்டு வருகிறது.

பாராட்டுகிற மனம் வேண்டும்; பாராட்டப்பட வேண்டியவற்றைப் பாராட்டத் தவறியதாலேயே அநேக நல்ல விஷயங்கள் வளர்ச்சி அடையாமலே போயின என்று மகாகவி பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் காலத்தில் பாரதியாரோடு பழகி, அவரைப் பின்பற்றிய வ.ரா.வும் (வ. ராமஸ்வாமி) பாராட்டுவதில் கஞ்சத்தனம் காட்டவில்லை. அவர் எல்லோரையும் தாராளமாகப் பாராட்டுகிறார் என்று மற்றவர்கள் குறை கூறினார்கள். அதற்கு அவர் பதில் சொன்னார் : 'ஆமாம். நான் பாராட்டவே செய்கிறேன். எழுந்து, நின்று, நடக்க விரும்புகிறவர்களுக்கு, ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் நாம் பாராட்டுவது. ஒருவர் செய்வதைப் பாராட்ட மனமில்லாமல், இது சரியில்லை; நீ செய்வது நன்றாகவேயில்லை; உன்னால் உருப்படியாக எதுவும் செய்ய முடியாது என்று குறைகூறிக் கொண்டிருந்தால் அவன் வளரமாட்டான். மாறாக, அவனை மனம் திறந்து பாராட்டினால் அவன் உற்சாகம் பெற்று, ஊக்கத்தோடு உழைத்து முன்னேறுவான். நான் எவ்வளவு தான் பாராட்டினாலும், உண்மையான திறமையும் உழைப்பும் இருக்கிறவர்தான் வளர்ச்சி பெறமுடியும். அதற்காக எடுத்த எடுப்பிலேயே, நீ உருப்பட மாட்டே,

உன்னாலே இதைச் செய்ய முடியாது என்று மட்டம் தட்டினால், உருப்படக் கூடியவன்கூட வளர்ந்து முன்னேற மாட்டான்' என்று.

பாரதியும் வ.ரா.வும் காட்டிய வழியிலேதான் நானும் நடக்கிறேன் என்று நான் சொல்லி வருகிறேன்.

30

தீபம் மாத இதழில் நான் எழுதி வந்த புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் கட்டுரைத் தொடர் நிறைவு பெற்றதும், அக்கட்டுரைகள் நூல் வடிவில் வெளி வரவேண்டியது அவசியம் என்று பலரும் கருதினர். நண்பர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் செய்தனர்.

ஆனால், வணிக நோக்குப் புத்தக வெளியீட்டாளர் எவரும் அதை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. நண்பர் நா. பார்த்தசாரதி அவருக்கு நன்கு தெரிந்திருந்த பிரசுரகர்த்தர்களிடம் எடுத்துச் சொன்னார். ஆயினும், இது போன்ற விஷயங்கள் விலைபோகா; இதை நூலாக வெளியிடுவது நட்டமாகவே முடியும்; அதனால் புத்தகமாகப் போடவிரும்பவில்லை என்று மறுத்துவிட்டார்கள். அவர்களுடைய இந்த மனநிலைமை எண்ணி நா.பா. ரொம்பவும் வருத்தப்பட்டார்.

நண்பர் சி.சு. செல்லப்பா, 'இதை நானே வெளியிடுவேன். இது எழுத்து பிரசுரமாகத் தான் வெளிவரவேண்டும். ஆனால் இப்போதே உடனடியாகப் பிரசுரிக்க இயலாது' என்று சொன்னார்.

இந்தச் சமயத்தில் கவிஞர் மீரா, அவருடைய அன்னம் வெளியீடு வாயிலாக அதை வெளியிட விரும்பினார். ஒரு வகையில், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் வரலாறு எழுதப்படுவதற்கு நான் தூண்டுதலாக இருந்தேன். அப்போது நான் எண்ணியபடி இலக்கிய இதழ் தொடங்கி நடத்த முடியாமல் போயிற்று, இப்போது அதை நானே நூல் வடிவில் கொண்டு வர விரும்புகிறேன் என்று மீரா எனக்கு எழுதினார்.

அநேக வருடங்களுக்கு முன்னர் கவிஞர் மீராவும் கவிஞர் அப்துல் ரகுமானும் சேர்ந்து, 'ஆல்' என்ற பெயரில் ஓர் இலக்கிய இதழ் வெளியிடத் திட்டமிட்டார்கள். அப்போது இருவரும் ராஜவல்லிபுரம் வந்து என்னைச் சந்தித்தார்கள். 'ஆல்' பத்திரிகையில் நான் ஓர் இலக்கியக் கட்டுரைத் தொடர் எழுத வேண்டும் என்றும், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்தே எழுதலாம் என்றும் கோரினார்கள். நானும் இசைவு தெரிவித்தேன்.

ஆனால் அவர்கள் திட்டமிட்டபடி 'ஆல்' பத்திரிகையைத் தொடங்கவில்லை. 'தீபம்' இதழில் 'சரஸ்வதி காலம்' தொடரை எழுதி முடித்ததும், அடுத்து ஒரு தொடரை எழுத வேண்டும் என்று நா.பா. கேட்டுக்

கொண்டார். இலங்கை இலக்கிய விமர்சகர் க. கைலாசபதியும், நான் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுத வேண்டும் என்று கடிதம் எழுதியிருந்தார். அதனால் 'தீபம்' இதழில் அந்த வரலாற்றை நான் எழுதினேன்.

எனவே, இப்போது அக்கட்டுரைகளை கவிஞர் மீரா புத்தகமாக வெளியிட விரும்பியதும், நான் செல்லப்பாவிடம் அதுபற்றிப் பேசினேன். 'இதை எழுத்து பிரசுரமாக வெளியிட வேண்டும் என்றே நான் ஆசைப்படுகிறேன். ஆனாலும் மீரா உடனடியாக இதை வெளியிட்டு விடுவார் என்பதால் நான் அவருக்கு விட்டுக் கொடுக்கிறேன். எப்படியும் இது புத்தகமாக வரவேண்டும். அது தான் முக்கியம்' என்று செல்லப்பா தெரிவித்தார்.

கவிஞர் மீரா மகிழ்ச்சி அடைந்தார். புத்தகத்தை வெளியிடுவேன் என்று தெரிவித்தார். ஆயினும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அவருக்கு ஒத்துழைக்கவில்லை. ஏறக்குறைய ஒரு வருடம் காத்திருந்து விட்டு, மீரா வருத்தத்துடன் எனக்கு எழுதினார், 'நான் எதிர்பார்த்தபடி இந்த நூலை வெளியிட இயலவில்லை. பல சங்கடங்கள். எனவே, இதை சி.சு. செல்லப்பாவே வெளியிடட்டும்' என்று.

அக்கடிதத்தைச் செல்லப்பாவிடம் தந்தேன். 'இது எழுத்து பிரசுரமாகத் தான் வெளிவரவேண்டும் என்றிருக்கிறது. இது சீக்கிரம் வந்துவிடும் என்று எண்ணி மீராவே வெளியிடட்டும் என்று இசைந்தேன். அது நடக்கவில்லை. எனக்கே அந்தப் பொறுப்பு ஏற்பட்டுள்ளது. எப்படியும் இதை நான் புத்தகமாகக் கொண்டு வருவேன்' என்று செல்லப்பா உறுதியாகச் சொன்னார்.

அவ்விதமே செய்தார். 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் எழுத்து பிரசுரம்' ஆக 1977இல் வெளிவந்தது.

வியாபார ரீதியில் புத்தகங்கள் வெளியிடுகிற தொழில் முறைப் பிரசுரகர்த்தர்களின் நோக்கையும் போக்கையும் பற்றி இங்குச் சில விஷயங்கள் சொல்ல வேண்டும்.

எழுத்தாளர்கள் என்னதான் பெயர் பெற்றிருந்தாலும், எவ்வளவு ஆழ்ந்த - நல்ல - பயனுள்ள விஷயங்களை எழுதினாலும், அவ் எழுத்துக்கள் புத்தகங்களாகப் பிரசுரம் பெறக்கூடிய வாய்ப்பை எளிதில் பெற்றுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. அதிகம் விற்பனையாகிற ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் எழுதி எழுதிப் பரவலாகப் பெயர் தெரிய வந்துள்ள எழுத்தாளர்களின் எழுத்துக்களை வணிக நோக்கு வெளியீட்டாளர்கள் உடனுக்குடன் புத்தகங்களாக வெளியிடுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். அவை வாசகர்களின் வரவேற்பைப் பெறும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது.

ஜெயகாந்தன் 'சரஸ்வதி' மாத இதழில் நல்ல சிறுகதைகள் எழுதிக் கொண்டிருந்தார். இலக்கிய ரசிகர்களின் கவனிப்பையும் பாராட்டுதல்களையும்

பெற்றுவந்தார். அவர் தன்னுடைய கதைகள் புத்தகமாகப் பிரசுரம் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆயினும் வாய்ப்புகள் அப்போது கிட்டவில்லை.

அந்நாட்களில் அவரும் கவிஞர் தமிழ் ஒளியும் தினந்தோறும் என்னைச் சந்திக்க வந்து, வெகுநேரம் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். தமிழ் நாட்டு வாசகர்கள், பத்திரிகைகள், புத்தக வெளியீட்டாளர்களின் போக்குகள் பற்றி ஆங்காரத்தோடு அவர்கள் காரசாரமாகக் கருத்துகள் தெரிவிப்பார்கள்.

'ஓர் எழுத்தாளனின் நியாயமான ஆசை, அவனது எழுத்துக்கள் புத்தகமாக வெளிவர வேண்டும் என்பது. ஆனால் தமிழ் நாட்டில் இந்த நியாயமான ஆசை நிறைவேறக்கூட வழியில்லையே. புத்தக வெளியீட்டாளர்கள், பிரபல பத்திரிகைகளில் தொடர்கதைகளை எழுதி கவனிப்புப் பெற்றவர்களின் கதைகளை உடனுக்குடன் ஏற்றுப் புத்தகங்களாக்கி விடுகிறார்கள். சிலருக்கு முன்பணமாகவே ரூபாயும் தருகிறார்கள். அதே சமயம் நல்ல எழுத்துக்களைப் புத்தகமாக்கத் தயங்குகிறார்களே' என்று ஜெயகாந்தன் ஒரு சமயம் குறிப்பிட்டார்.

அவருடைய சிறுகதைகளைத் தொகுத்து, முதன்முதலில், 'ஒரு பிடி சோறு' என்ற பெயரில், எழுத்தாளரும் ஜெயகாந்தனின் நண்பருமான விந்தன்தான் புத்தகமாக வெளியிட்டார். காலப்போக்கில் நிலைமை மாறியது. ஜெயகாந்தன் கதைகளையும் நாவல்களையும் 'ஆனந்தவிகடன்' விரும்பிக் கேட்டு வாங்கிப் பிரசுரிக்கும் காலம் வந்தது. இதர வணிகநோக்கு வார இதழ்களும் அவருடைய எழுத்துக்களை வெளியிட்டன. இயல்பாகவே புத்தக வெளியீட்டாளரும் அவருடைய எழுத்துக்களை உடனுக்குடனே புத்தகங்களாக வெளியிடுவதில் உற்சாகம் கொண்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில், 'தமிழ்ப் புத்தகாலயம்' அதிபர் கண. முத்தையா என்னிடம் சொன்னது என் நினைவில் நிலையாகப் பதிந்துள்ளது. அவர் கூறினார்.

'உங்களுடைய எழுத்துக்களைப் பதிப்பாளர்கள் புத்தகமாக வெளியிடத் தயங்குவது, அவை வேகமாக விலை போகமாட்டா என்ற எண்ணத்தினால்தான். சில எழுத்தாளர்களின் எழுத்துக்கள், அவர்களுடைய வாழ்நாளில் போதிய கவனிப்பைப் பெறத் தவறி விடுகின்றன. அவர்கள் இறந்த பிறகு நல்ல கவனிப்பைப் பெறுகின்றன. பாரதியார், புதுமைப்பித்தன் இவர்களுடைய எழுத்துக்கள், அவர்கள் இறந்த பின்னர் தான் பரவலான கவனிப்பைப் பெற்றுள்ளன. இன்னொரு நிலைமையும் உண்டு. உங்களுடைய எழுத்துக்கள் பலவும் புத்தகங்களாக வர வேண்டுமானால், உங்களுக்கு ஒரு மார்க்கெட்டை நீங்களே உற்பத்தி செய்து தர வேண்டும். மு. வரதராசனார் விஷயத்தில் அப்படித் தான் நடந்தது.

மு.வ. முதலில் ஒரு நாவல் எழுதினார். அதை வெளியிடும்படி பாரிநிலையம் செட்டியாரை வேண்டினார். ஆனால் செட்டியார், இதெல்லாம் விற்பனையாகாது என்று சொல்லி, மு.வ. நாவலை வெளியிட மறுத்து விட்டார். மு.வ. அதைத் தாமே பிரசுரித்தார். அந்த நாவலுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. இரண்டாவது நாவல் எழுதி அதையும் மு.வ.வே பிரசுரம் செய்தார்.அதைப் பாரி நிலையம் விற்பனை உரிமை பெற்று விற்பனை செய்தது. கல்லூரி மாணவர்களிடையிலும், இதர வாசகர்கள் மத்தியிலும் மு.வ. எழுத்துக்குத் தனி மதிப்பு ஏற்பட்டது. மு.வ. புத்தகங்களின் விற்பனையைக் கவனித்த பாரிநிலையம் செட்டியார், மூன்றாவது நாவல் எழுதி வெளியிடும்படி அவரைக் கேட்டுக் கொண்டார். பாரிநிலையம் விற்பனை உரிமை என்று போட்டபடிதான் மு.வ. நாவல்கள் வெளிவந்தன.

'ஆரம்பத்தில் புத்தகங்கள் விற்றபிறகே பாரிநிலையம் மு.வ. க்குப் பணம் கொடுத்தது. நாற்பது சதவிகிதம் அது தனக்கு எடுத்துக் கொண்டது. போகப் போக, மு.வ.வின் எழுத்துக்களுக்கு இருந்த செல்வாக்கையும், வரவேற்பையும் பார்த்த செட்டியார், மு.வ. எழுத்துக்களைத் தாமே பிரசுரிக்க முன்வந்தார். மு.வ. எழுதிக் கொடுத்து விட வேண்டியது. எழுத்துப் பிரதியைப் பெற்றதுமே பாரிநிலையம் முன் பணமாக உரிய தொகையை மு.வ.வுக்குத் தந்துவிடும். விற்பனை உரிமை, பாரிநிலையம் என்று தான் மு.வ. புத்தகங்கள் அச்சிடப்பட்டு வந்தன. அப்படி ஒரு நிலைமையை எழுத்தாளரின் எழுத்துக்கள் ஏற்படுத்துமானால், புத்தக வெளியீட்டாளர்கள் தாங்களே விரும்பி அவற்றைப் பிரசுரிப்பார்கள்' என்று கண. முத்தையா கூறினார்.

இது எல்லா எழுத்தாளர்களுக்கும் சாத்தியமாகக் கூடியதா என்ன?

தமிழ்நாட்டில், எழுத்தாளர்கள் எவ்வளவு திறமையாளர்களாக இருந்தாலும், அவர்களுடைய எழுத்துக்கள் எவ்வளவு தரமும் கனமும் புதுமையும் உடையனவாக இருந்தாலும், எளிதில் தொழில்முறைப் பதிப்பகத்தாரின் தயவையும் உதவியையும் பெற்று, புத்தகங்களாக வெளி வந்துவிட முடியாது. இந்த நிலைதான் காலங்காலமாக நீடித்து வளர்கிறது.

எழுத்தாளர் நீல. பத்மநாபன், அவருடைய ஒவ்வொரு நாவலையும் ரெகுலர் பப்ளிஷர் மூலம் புத்தகமாக்க முயன்று, வருடக் கணக்கில் காத்திருந்து, ஏமாற்றம் அடைந்ததையும், பின்னர் அவரே பணம் செலவுபண்ணித் தமது நாவல்களைத் தானே புத்தகங்களாக வெளியிட்டுச் சிரமங்கள் ஏற்றதையும் பல இடங்களில் எழுதியிருக்கிறார். பேட்டிகளில் குறிப்பிட்டிருக்கிறார். இறுதியில், தேரோடும் வீதி என்ற இரண்டு பாக நாவலில் விரிவாகவே பதிவு செய்திருக்கிறார். திறமை, ஊக்கம், உழைப்பு, உற்சாகம், தன்னம்பிக்கை எல்லாம் பெற்றிருந்த போதிலும் ஓர் எழுத்தாளன் தனது எழுத்துக்களை வெளிக்கொண்டு வரவும், உரிய கவனிப்பைப் பெறவும் எவ்வளவு சிரமங்களை மேற்கொள்ளவும் போராட்டங்களை எதிர் கொள்ளவும் வேண்டியிருக்கிறது.

அப்படி எல்லாம் நடந்தபோதிலும் வாழ்வின் இறுதி வரையில் அவன் தன் எழுத்துக்களுக்கு உரிய மதிப்பையும், தனக்கு உரிய கவனிப்பையும் பெறமுடிவதில்லை என்பதை அந்த நாவல் விவரிக்கிறது.

என்னிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்த நண்பர்களில் என்.ஆர். தாசனும் முக்கியமானவர். அவர் அரசுப் பணியில் ஈடுபட்டிருந்தார். அத்துடன் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆற்றல் நிறைந்தவர்; சுயசிந்தனையாளர்; உழைக்கத் தயங்காதவர்; புத்தகங்கள் படிப்பதில் உற்சாகம் உடையவர். கதைகள், நாவல்கள், வசன கவிதைகள், நாடகம் முதலியன எழுதினார். கவிஞர் கண்ணதாசன் நடத்திய தரமான இலக்கிய இதழான 'கண்ணதாச'னில் என். ஆர். தாசன் அதிகம் எழுதினார். பிறமொழிக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்துள்ளார். ரவீந்திரநாத தாகூர், கலீல் கிப்ரான் கவிதைகளின் தாக்கத்தினால், தாசனும் தத்துவச் சிந்தனைகளும் வாழ்க்கை அனுபவங்களும் செறிந்த வசனகவிதைகளைச் 'சொற்கோலம்' என்ற பெயரில் அதிகமாகவே எழுதியிருக்கிறார்.

என். ஆர். தாசன் சிறுகதைகள், ஓரிரு நாவல்களை அவருடைய நண்பர் ஒருவர் வெளியிட்டார், ஆரம்ப காலத்தில். பிறகு தாசனின் எழுத்துக்கள் புத்தகங்களாக வர வாய்ப்பில்லாது போயின. எனவே தாசன் தாமே புத்தக வெளியீட்டிலும் முனைந்தார். நாவல்களையும், சிறுகதைகளையும், சொற்கோலங்களையும் தொகுத்து, அக்கறையோடு கவனித்து, அழகு அழகான புத்தகங்களாகப் பிரசுரித்தார். அவற்றைத் தாமே எடுத்துச் சென்று புத்தக விற்பனையாளர்களிடம் கொடுத்து வந்தார். பின்னர், பணம் வசூலிப்பதற்காக அலைந்தார். இப்படியெல்லாம் தீவிரமாக முயன்று உழைத்ததனால்தான் என். ஆர். தாசன் எழுத்துக்கள் புத்தகங்களாக உருவம் பெறமுடிந்தது. அது அவருக்குத் திருப்தி தந்தது.

ஆயினும், அவருடைய படைப்புகளும் எழுத்தாற்றலும் உரிய கவனிப்பைப் பெறாமலே போயின; அவருடைய அருமையான 'சொற்கோலம்' எவ்வளவுக்குப் பேசப்பட்டிருக்க வேண்டுமோ, அவ்வளவுக்குப் பேசப்படவில்லை- சிறிது கூடக் கவனிக்கப்படவில்லை என்பது வருத்தம் தரும் விஷயம் ஆகும். சில வருடங்களுக்கு முன்பு அவர் இறந்துபோனார். காலவெள்ளத்தில் அமிழ்ந்துவிட்ட எத்தனையோ திறமைசாலிகள்- சிந்தனையாளர்கள்- படைப்பாளிகளைப் போல என்.ஆர். தாசனும் மறக்கப்பட்டார்.

தமிழ்நாட்டில் இது புதிய விஷயம் ஒன்றுமில்லை.

'இந்திரா' பத்திரிகை மூலம் எனக்கு அறிமுகமான நண்பர் கோ.த. சண்முகசுந்தரம் - பின்னர் ஆதித்தனாரின் 'தமிழன்' இதழ் மூலம் 'மேதாவி' என்று பெயர் பெற்றவர் - வாழ்க்கையில் பலவித அனுபவங்கள் பெற்று

வளர்ந்தார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாகாவிலும் பணிபுரிந்தார். ஒரு காலகட்டத்தில் விறுவிறுப்பான மர்மநாவல்கள், துப்பறியும் கதைகள் எழுதிப் பெயர் பெற்றார், ஒரு சந்தர்ப்பத்தில். 'சுதேசமித்திரன்' நாளிதழைக் காங்கிரஸ் கட்சி ஏற்று, தலைவர் பக்தவத்சலம் பொறுப்பேற்று நடத்திய காலத்தில் மேதாவி கோ.த.ச. அதன் ஆசிரியராகச் செயலாற்றினார். அப்போது அபயானந்தா என்ற பெயரில் ராசிபலன் எழுதலானார்.

சுதேசமித்திரன் நின்றுவிட்ட பிறகு, அபயானந்தா ராசிபலன் புத்தகம் வெளியிட முன்வந்தார். ஒவ்வொரு ராசிக்கும், தனித் தனியாக, விரிவாக, பலன்கள் எழுதித் தனித் தனிப் புத்தகங்களாகத் தயாரித்தார். ஒரு புத்தகம் விலை ஒரு ரூபாய். பன்னிரண்டு ராசிகளுக்கும் பலன்கள். ஒரு ராசிக்குப் பத்தாயிரம் பிரதிகள் அச்சிட்டார். அவற்றைக் காரில் வைத்துத் தமிழ் நாடு எங்கும், ஊர் ஊராகப் போய், விற்பனையாளர்களைப் பிடித்து, விற்க ஏற்பாடுகள் செய்து பிசினஸ் பண்ணினார்.

ஒரு சமயம் அவர் என்னிடம் சொன்னார்: 'இது ரொம்ப லாபகரமான பிசினஸ். ஒரு ராசிக்குப் பத்தாயிரம் புத்தகம். ஒரு புத்தகம் விலை ஒரு ரூபாய். பத்தாயிரம் புத்தகமும் நிச்சயம் விற்பனையாகும் ஏஜன்சி கழிவு போக, ரொக்கமாகக் கையிலே காசு. இப்படி பன்னிரண்டு ராசிகளுக்கும், பத்தாயிரம் வீதம் கணக்குப் பண்ணிக் கொள்ளுங்கள். கதை, நாவல் எல்லாம் நிச்சய விற்பனை பெறுவதில்லை. ராசிபலன் சுடச்சுட விற்பனையாகுது. சுதேசமித்திரனில் அபயானந்தா ராசிபலன் எழுதியபோது கவனித்தேன். ராசிபலன் வெளியாகிற அன்றைக்குப் பத்திரிகை அதிகமான பிரதிகள் அச்சிடுவார்கள். பிரமாதமாகப் பிச்சிட்டுப் போகும்! அப்பதான் எனக்கு இந்த ஐடியா, இராசிபலன் புத்தகம் போடுகிற எண்ணம் வந்தது. வெற்றிகரமாக வண்டி ஓடுது!' என்று பெருமையும் மகிழ்ச்சியும் பொங்கப் பேசினார்.

வேறொரு சமயம் நண்பர் மேதாவி என்னிடம் கேட்டார், 'எழுத்தாளனுக்கு சமூகத்தில் ஓர் அந்தஸ்து இருக்கிறதா? சமூக மதிப்புப் பெறமுடிகிறதா எழுத்தாளனாலே?' என்று.

நான் பதில் கூறுவதற்கு முன்பே அவர் தொடர்ந்து சொன்னார்: 'நீங்க என்ன வேண்டுமானாலும் சொல்லுங்க. உண்மையில் எழுத்தாளனுக்கு எந்த விதமான சமூகஅந்தஸ்தும் இல்லை. சமூகத்தின் மதிப்பை அவன் பெறவில்லை,. ஒரு சினிமா நடிகனுக்கும், ஓர் அரசியல்வாதிக்கும் சமூகத்தில் இருக்கிற மதிப்பும் கவனிப்பும் ஓர் எழுத்தாளனுக்குக் கிடையாது. எழுத்தாளன்தான் அவன் என்னவோ ரொம்பப் பெரியவன், மற்றவங்களை விட உயர்ந்தவன் என்று அவனாகவே எண்ணிக் கர்வப்பட்டுக் கொள்கிறான் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கிற ஒரு மயக்கநிலைதான் அது'.

நான் ஒன்றும் சொல்லவில்லை. சமூக அந்தஸ்து மதிப்பு, செல்வம், செல்வாக்கு முதலியன பற்றி நான் கவலைப்படவுமில்லை. இவை எனக்கு வந்து சேரவேண்டும் என்று ஆசைப்படவுமில்லை.

31

1978 ஆம் வருடத்துக்கான சாகித்ய அகாதமி விருது புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் நூலுக்காக எனக்கு வழங்கப்பட்டது.

1979 ஆம் வருட ஆரம்பத்தில், பரிசு அறிவிக்கப்பட்ட சமயம், நான் ராஜவல்லிபுரத்தில் தனியாக இருந்தேன். உடனே சென்னைக்கு வரும்படி என் அண்ணாவும் தி.க.சிவசங்கரனும் எனக்கு எழுதினார்கள். சென்னை வந்து சேர்ந்தேன்.

சாகித்ய அகாதமிப் பரிசு அறிவிக்கப்பட்டதும், ஒவ்வொரு வருடமும் எதிர்ப்புக்குரல்களும், குறைகூறல்களும், கடுமையான விமர்சனங்களும் பத்திரிகைகளில் வெளியிடப்படுவது வழக்கம். ஆனால் அந்த வருடம் அனைத்துப் பத்திரிகைகளும், தகுதியான நூலுக்குப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது என வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துப் பாராட்டின. சிற்றிதழ்களும் பெரிய பத்திரிகைகளும் எனக்கு வாழ்த்துக் கூறின. மாலை முரசு, கல்கி, துக்ளக், குமுதம் பத்திரிகைகள் விரிவாகப் பேட்டி கண்டு பிரசுரித்தன.

'குமுதம்' அட்டையில் படம் வெளியிட்டு, பேட்டியைப் பிரசுரித்தது. பேட்டி கண்டவர் 'தொலைக்காட்சி' நிலையச் செய்தி வாசிப்பாளர் திருமதி சோபனா ரவி.

இலங்கை, டொமினிக் ஜீவாவின் 'மல்லிகை'யும் என் படத்தை அட்டையில் வெளியிட்டு, உள்ளே கலாநிதி சிவத்தம்பி எழுதிய கட்டுரையைப் பிரசுரித்து என்னைப் பெருமைப் படுத்தியது.

நான் எதிர்பார்த்திராத விதத்தில், நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் - தூரத்துச் சிற்றூர்களில் இருந்தும் கூட - வாசக அன்பர்கள் வாழ்த்துக் கடிதங்கள் எழுதியிருந்தார்கள். அவர்களுடைய அன்பையும் மகிழ்ச்சியையும் புலப்படுத்திய எண்ணற்ற கடிதங்கள் என்னைப் பிரமிக்கவைத்தன.

பிப்ரவரி மாதம் பரிசளிப்பு விழா, ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரத்தில் நடைபெற்றது.

பொதுவாக, சாகித்ய அகாதாமியின் விருதுகள் வழங்கும் விழா இந்தியாவின் தலைநகரமான புதுடில்லியில்தான் நடைபெறுவது வழக்கம். ஆனால், நடுவில் சில வருடங்கள் ஒரு புது வழக்கம்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த அந்த மாநில மொழிக்கெனத் தனி சாகித்ய அகாதமி இயங்குகிறது. தமிழ் நாட்டில் மட்டுமே தமிழ் மொழிக்கான 'ரீஜனல் சாகித்ய அகாதமி' இல்லை.

சாகித்ய அகாதமி விருது வழங்கும் விழா, எப்போதும் புது டில்லிலேயே நிகழ்வதற்குப் பதிலாக, ஒவ்வொரு வருடம் வெவ்வேறு மாநிலத் தலைநகரில் நடைபெற ஏற்பாடு செய்வது அந்தந்த மொழிக்கும் மாநிலத்துக்கும் பெருமை சேர்ப்பதாக அமையும் என்ற கருத்து எழுந்தது. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அது நடைமுறைக்கும் வந்தது. ஒரு வருடம் ஹைதராபாத்தில் விழா நடந்தது. இன்னொரு வருடம் கோவாவில் நடைபெற்றது. 1979இல் ஒரிசா- புவனேஸ்வரத்தில்.

பின்னர் இந்த வழக்கம் சரிப்பட்டுவரவில்லை என்று கைவிடப்பட்டது. விழா ஏற்பாடுகளை அந்த அந்த மாநில அரசே பொறுப்புடன் ஏற்று நன்கு செய்துமுடித்தன என்றாலும், விழாவைப் புதுடில்லியில் நடத்துவதில் பல நன்மைகள் உண்டு எனக் கண்டு உணரப்பட்டது.

புதுடில்லி இந்தியாவின் தலைநகரம். அங்குப் பலமொழி பேசுகிறவர்களும் வசிக்கிறார்கள். பல மாநிலத்தவர்களும் அவரவருக்கெனச் சங்கங்கள் அமைத்திருக்கிறார்கள். அனைத்து மொழிகளின் நூல்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகிற விழாவுக்குப் பல மொழிக்காரர்களும் வந்து கலந்து கொள்கிறார்கள். மேலும், ஆங்கிலப் பத்திரிகைகள் பல வெளிவருகின்றன. அவை விழாச் செய்திகளை எடுப்பாகப் பிரசுரிக்கின்றன. அதனால் எங்கும் அவை பரவ வாய்ப்பு கிட்டுகிறது. ரேடியோ, தொலைக்காட்சி மூலமும் விழாச் செய்திகளைப் பரப்புவதற்கு டில்லியில்தான் அதிக வசதிகள் இருக்கின்றன.

ஒரு மொழிமாநிலத்தின் தலைநகரில் விழா ஏற்பாடு செய்வதனால், அந்த மொழியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அதிகமாகக் கூடுகிறார்கள். அந்த மொழிப் பத்திரிகைகள்தான் இங்கே இருக்கின்றன. ஆங்கில மொழி இதழ்கள் கூட இருப்பதில்லை. அந்த மாநில மொழிக்கு உரிய சங்கங்கள் மட்டும் உள்ளன. இதர மொழிகளைச் சேர்ந்தவர்கள், அவர்களது அமைப்புகள் அங்கே இல்லாததால், பிற மொழியாளர்கள் எவரும் விழாவுக்கு வர வாய்ப்பில்லை.

இவ்வாறு பல சாதகபாதகங்களையும் ஆராய்ந்து, இனிமேல் பரிசளிப்பு விழாவைப் புதுடில்லியிலேயே நடத்துவது என்று சாகித்ய அகாதமி பின்னர் முடிவுசெய்தது. அவ்விதமே தொடர்ந்து நடைபெறுகிறது.

நான் பரிசு பெற்ற வருடம் புவனேஸ்வரம் போக வேண்டியதாயிற்று. சாகித்ய அகாதமியில் தமிழ் மொழிக்குப் பொறுப்பாளர் ('கன்வீனர்') ஆகப் பதவி வகித்த நா. பார்த்தசாரதியும் உடன் வந்தார்.

மாநில அரசே பொறுப்பேற்ற சாகித்ய அகாதமிப் பரிசளிப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்கிறபோது, தங்கள் மாநிலத்துக்குப் பெருமையும் மதிப்பும் கிட்ட

வேண்டும் என்ற நோக்குடன் திட்டங்களிட்டு ஆவன செய்வதில் ஆர்வம் காட்டுவது வழக்கமாக இருந்தது. ஒரிசா மாநில அரசும் சிறப்பான முறையில் விழா ஏற்பாடுகள் செய்திருந்தது.

அம் மாநிலத்துக்குரிய கலை கலாச்சார நிகழ்ச்சிகள் முதலியன நடத்திக் காட்டப்பெற்றன. அத்துடன், அம் மாநிலத்திற்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் முக்கிய இடங்களைப் பார்த்து மகிழ்வதற்கான சுற்றுலா வசதிகளையும் செய்து தந்தது அரசு.

பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. பிறகு, பூரி நகருக்கு அழைத்துச் சென்று ஜெகநாதர் ஆலயம், அழகான கடற்கரை, அப்புறம் கோனார்க் சூரியன் கோயில் ஆகியவற்றைக் கண்டு களிக்கத் துணைபுரிந்தார்கள். புவனேஸ்வரத்திலேயே நூற்றுக்கணக்கான கோயில்கள் இருக்கின்றன. அவற்றின் கோபுர அமைப்புகள் தனிரகமானவை. முக்கியமான சில கோவில்களைப் பார்த்தோம்.

புவனேஸ்வரத்திலிருந்து சென்னைக்கு ரயில் பயணத்தை மேற்கொள்ளாது, நாம் கல்கத்தா போய் அங்கிருந்து சென்னை செல்லலாம்; கல்கத்தாவில் தமிழ்ச்சங்கம் ஒரு பாராட்டு விழா நடத்த விரும்புகிறது என்று நா.பா. கூறினார். அதன்படி நாங்கள் இருவரும் கல்கத்தா போனோம்.

நான் சாகித்ய அகாதமிப் பரிசு பெற்றதற்காக எனக்கு அளிக்கப்பட்ட முதலாவது பாராட்டு விழா கல்கத்தாவில்தான் நடந்தது. அம் மாநகரில் மூன்று நாட்கள் தங்கிவிட்டு நாங்கள் சென்னைக்குப் பயணமானோம்.

சென்னை சேர்ந்த பிறகு பாராட்டு விழாக்கள் தொடர்ந்தன. சென்னையில் சில விழாக்கள். பின்னர் கோயம்புத்தூர், திருச்சி-துறையூர், மதுரை, திருநெல்வேலி, ஒட்டப்பிடாரம், ராஜவல்லிபுரம் என்ற பல இடங்களிலும் விழா ஏற்பாடு செய்து பாராட்டி மகிழ்ந்தார்கள்.

துறையூரில், முன்பு கிராம ஊழியன் காலத்தில் என்னுடன் பழகிய அச்சுத் தொழிலாளர்கள் விழா ஏற்பாடு செய்திருந்தனர். சிறு அளவில் ஒரு சிறப்புமலர் கூடத் தயாரித்திருந்தார்கள்.

மதுரையில் எழுத்தாளர் நண்பர் கர்ணன் சிறப்பான முறையில் விழா நடத்தினார். கர்ணன் நல்ல சிறு கதை எழுத்தாளர். அவர் எழுதிய கதைகள் ஆனந்த விகடன், அமுதசுரபி, தாமரை போன்ற இதழ்களில் அதிகம் வெளிவந்துள்ளன. அவற்றை அவரே புத்தகங்களாக வெளியிட்டார். புரட்சி வீரர் பகத்சிங், அன்னை கஸ்தூரிபாய் ஆகியோர் வரலாற்றையும் விரிவாக எழுதினார். அவை பத்திரிகைகளில் தொடராக வந்து, பின்னர் புத்தகங்களாகவும் பிரசுரமாயின. திறமைக்கும் உழைப்புக்கும் உரிய கவனிப்பையும் மதிப்பையும் பெறாமல் இருக்கும் எழுத்தாளர்களில் கர்ணனும்

ஒருவர். அவர் எழுத்தை மட்டுமே நம்பி இருக்கவில்லை. தையல் தொழிலாளியாக உழைத்து கவுரவமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் இலட்சியவாதி கர்ணன்.

விழாக்கள் நடத்திப் பாராட்டியது போதுமே என்று எண்ணவேண்டிய அளவுக்கு அந்த ஆண்டு முழுவதும், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எனக்குப் பாராட்டு விழாக்கள் நடைபெற்றன. தமிழ் அன்பர்கள் என்மீது கொண்ட அன்பையும் நட்பு உணர்வையும் அவை வெளிப்படுத்தின. எனக்கு மேலும் ஊக்கமும் உற்சாகமும் அளித்தன.

32

சாகித்ய அகாதமி விருது கிடைத்ததனால், வாழ்க்கையில் பிரமாதமான மாறுதல் அல்லது வளர்ச்சி எதுவும் ஏற்பட வழி பிறந்துவிடவில்லை. அந்த ஒரு வருடம் முழுவதும் என் பெயருக்கு விளம்பர வெளிச்சம் மிகுதியாகக் கிடைத்ததுதான் கண்டபலன்!

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உங்கள் எழுத்துக்களை புத்தகங்களாக வெளியிடப் பதிப்பகத்தார்கள் முன்வருவார்கள்; கூடியவரை உங்கள் எழுத்துக்கள் பலவற்றையும் நூல்களாக்கிவிடுங்கள் என்று சில நண்பர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட அதிசயம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை.

'நீங்கள் தராதரம் பாராமல், சிறு பத்திரிகைகள் பலவற்றுக்கும் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள். இனிமேல் அப்படிச் செய்யாதீர்கள். கவுரவமான பெரிய பத்திரிகைகளுக்கு மட்டுமே எழுதுங்கள்' என்று ஒரு நண்பர், எனக்கு நல்லது எண்ணிச் சொன்னார்.

சிறுபத்திரிகைகளில் எழுதிவந்ததன் மூலமே கவனிப்பையும் எண்ணற்ற அன்பர்களின் நட்பையும் நான் பெறமுடிந்துள்ளது. சிறுபத்திரிகைகளை நான் ஏன் ஒதுக்க வேண்டும்? என்று எண்ணினேன்.

'உங்கள் எழுத்துலக வாழ்க்கையிலேயே, இத்தனை வருடங்களுக்குப் பிறகு இப்போது தான் உங்களுக்கு ஒரு பெரும் தொகையாக ஐயாயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இதைக் கொண்டு என்ன செய்ய எண்ணியிருக்கிறீர்கள்?' இப்படியும் சிலர் என்னைக் கேட்டார்கள்.

மதுராந்தகம் நகரில், 'இலக்கிய வீதி' இனியவன் ஏற்பாடு செய்திருந்த பாராட்டுக் கூட்டத்திலும் இதே கேள்வி என்னிடம் கேட்கப்பட்டது.

ஐயாயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு பெரிதாக என்ன பண்ணிவிடமுடியும்? 1940கள் 50களில் இது ஒரு பெரும்தொகையாக எனக்குப் பெரிதும் உதவியிருக்கும். என் எழுத்துக்களைப் புத்தகங்களாக வெளியிட

எனக்குச் சில ஆயிரங்கள் வேண்டும் என்று நான் அக்காலத்தில் விரும்பினேன். அன்று இரண்டாயிரம் ரூபாய் எனக்குக் கிடைக்கவில்லை. இப்போது கிடைத்துள்ளதைக் கொண்டு ஒரே ஒரு புத்தகம்தான் வெளியிட முடியும். ஒரு புத்தகம் வெளியிடுவதால் தாக்குப் பிடிக்க முடியாது. தொடர்ந்து புத்தகங்கள் வெளியிட்டுக் கொண்டிருந்தால்தான் உரிய பலன் கிட்டும். இப்போதுள்ள நிலைமையில் இந்த ஐயாயிரம் ரூபாய் ஒரு வருடச் செலவுக்குப் போதுமானதாக இருக்கும் என்று கூறினேன்.

அந்தக் கூட்டத்தில் என்னைப் பாராட்டிப் பேசிய நண்பர் சு. சமுத்திரம் சொன்னார்: 'ஐயாயிரம் ரூபாய் ஒரு வருடச் செலவுக்குப் போதுமானதாக இருக்கும் என்று வல்லிக்கண்ணன் சொல்கிறார். வல்லிக்கண்ணனாக இருக்கப்போய்தான் ஐயாயிரம் ஒரு வருடத்துச் செலவுக்குப் போதுமானதாகிறது. எனக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைத்தால் அது ஓரிரு மாதத்துக்குக்கூடப் பற்றாது. இப்பவே என் மனைவி வீட்டிலே மேஜை இல்லை, நல்ல நாற்காலிகள் இல்லை என்று செல்லிக்கொண்டிருக்கிறாள். அதை யெல்லாம் வாங்கினால் ஐயாயிரம் ரூபாய் ஒரு வாரத்திலேயே தீர்ந்து போகும். ஆகவே, ஐயாயிரம் என்பது உருப்படியாக ஏதாவது பண்ணுவதற்குப் போதுமான பெரும் தொகை இல்லை தான்!' என்று.

எனது பொருளாதார சிரமங்களைக் குறைப்பதற்கு அவ்வப்போது உதவிகள் புரிந்தவர்களில் நண்பர் சு. சமுத்திரமும் ஒருவர் ஆவார். இக்காலகட்டத்தில் அவர், மத்திய அரசின் செய்தித் துறையில், 'திட்டம்' பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பு வகித்தார். திட்டம் இதழில் மதிப்புரை எழுதச் சொல்லித் தொடர்ந்து புத்தகங்களை அனுப்பிவைத்தும், சாதனைகள் புரிந்த எழுத்தாளர்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதும்படி கேட்டும், உரிய முறையில் சன்மானம் வந்து சேர உதவிக் கொண்டிருந்தார் அவர்.

இனியவன் நடத்திய இலக்கிய வீதி பற்றிச் சொல்ல வேண்டும். அதற்கு முன்னதாகச் சென்னையில் உள்ள 'இலக்கியச் சிந்தனை' என்ற அமைப்புப் பற்றிக் கூறவேண்டும்.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக நல்லமுறையில் இலக்கியப் பணி புரிந்து வருகிறது இலக்கியச் சிந்தனை. முதலில், சிறுகதை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அது அமைக்கப்பட்டது. இலக்கிய ஆர்வமும், எழுதுவதில் உற்சாகமும் கொண்ட ப. லட்சுமணன் 'இலக்கியச் சிந்தனை'யைத் தொடங்கினார். அவர் தம்பி ப. சிதம்பரம் அவருக்கு உற்ற துணையானார். பாரதி எனும் இலக்கிய நண்பரும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

தமிழில் மாதம் தோறும், தரமான பத்திரிகைகளில் வருகிற சிறுகதைகளைப் பரிசீலனை செய்து, சிறந்த சிறுகதை ஒன்றைத் தேர்வு செய்து,

அதை எழுதியவருக்குப் பரிசு வழங்குவது. பின்னர், ஆண்டு முடிவில், தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு சிறுகதைகளில் தலைசிறந்த சிறுகதையைத் தேர்ந்தெடுத்து, அதை எழுதியவருக்குக் கணிசமான ஒரு தொகையைப் பரிசாக அளிப்பது. அப் பன்னிரண்டு கதைகளையும் தொகுப்பாகத் தயாரிப்பது. அதை இலக்கியச் சிந்தனை ஆண்டு விழாவின் போது வெளியிடுவது. இவை அந்த அமைப்பின் செயல்திட்டங்கள்.

ஒவ்வொரு மாதமும், அந்த அந்த மாதத்திய சிறந்த சிறுகதையைத் தேர்வு செய்யும் பொறுப்பு யாராவது ஒருவரிடம் ஒப்படைக்கப்பெறும். அந்த ரசிகர் தமது விருப்பம் போல், தனக்குப் பிடித்த ஒரு கதையை அந்த மாதத்தின் சிறந்த சிறுகதை என்று தேர்ந்தெடுப்பார். எந்தப் பத்திரிகையில் வந்த எந்தக் கதையையும் அவர் தம் இஷ்டம் போல் தேர்ந்து வரலாம். அவருடைய மதிப்பீட்டில் இலக்கியச் சிந்தனை குறுக்கிடாது; அவர் தேர்வை அப்படியே ஏற்றுக் கொள்ளும்.

ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை மாலையில் இலக்கியச் சிந்தனைக் கூட்டம் நடைபெறும். இலக்கியம் சம்பந்தமான ஒரு சிறப்புச் சொற்பொழிவை ஒருவர் நிகழ்த்துவார். அந்த மாதத்திய சிறுகதைத் தேர்வு குறித்துத், தேர்ந்தெடுத்தவர் கட்டுரை வாசித்துத் தம்முடிவைச் சொல்வார். அந்தக் கதைக்கு உரிய பரிசு வழங்கப்படும்.

அதே போல, பன்னிரண்டு கதைகளையும் படித்து, வருடத்தின் சிறந்த சிறுகதையைத் தேர்ந்து சொல்லும் பொறுப்பு, பெயர்பெற்ற எழுத்தாளர் ஒருவருக்குத் தரப்படும். அவரது விமர்சனக் கட்டுரை தொகுப்பில் சேர்க்கப்படும்.

இப்படி ஒரு நற்பணியை இலக்கியச் சிந்தனை விடாது செய்து கொண்டிருக்கிறது. அது ஆரம்பித்துச் சிறுகதை இலக்கியப் பணி செய்து வந்த காலத்திலேயே, நடுவில் புதிய திட்டம் ஒன்றையும் மேற்கொள்ள முனைந்தது. ஒவ்வொரு வருடமும், தமிழில் வெளிவருகிற புத்தகங்களில் சிறந்த ஒரு நூலுக்குப் பரிசு வழங்க முன்வந்தது. நாவல், நாடகம், இலக்கிய விமர்சனம், வாழ்க்கை வரலாறு போன்ற எந்த நூலாகவும் இருக்கலாம். தகுதி வாய்ந்தது என இலக்கியச் சிந்தனை அமைப்பாளர்கள் கருதுகிற ஒரு புத்தகத்துக்குப் பரிசு வழங்கப்படும்.

சில வருடங்களுக்குப் பிறகு, இலக்கியச் சிந்தனை மற்றுமொரு நற்பணியையும் மேற்கொண்டது. சாதனை படைத்த படைப்பாளிகள் அநேகர், அவர்களுடைய வாழ்நாளிலும் போதிய கவனிப்புப் பெறமுடிந்ததில்லை; அவர்கள் மரணம் அடைந்த பின்னரும் உரிய கவனிப்பைப் பெற்றதில்லை. பலர் அடியோடு மறக்கப்படுகிறார்கள். அத்தகைய படைப்பாளிகளின் வாழ்க்கையையும் படைப்புகளையும். அவற்றின் தன்மைகளையும் இலக்கிய

வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டியது. அவசியமாகும் என்று இலக்கியச் சிந்தனை கருதியது. அதனால் ஆண்டுக்கு ஒரு படைப்பாளி பற்றி நூல் எழுதச் செய்து, புத்தகமாக்கி, அதையும் ஆண்டு விழாவின் போது வெளியிட்டு வருகிறது.

முதலாவதாக, 'கு. அழகிரிசாமியின் படைப்புகள்' பற்றி எழுத்தாளர் என். ஆர். தாசன் நன்கு ஆய்வு செய்து, பெரிய அளவில், சிறப்பான நூல் ஒன்றை எழுதினார். தொடர்ந்து ஜெகசிற்பியன், ந. பிச்சமூர்த்தி, மௌனி, கு.ப. ராஜகோபாலன், ந. சிதம்பரசுப்பிரமணியன், தி.ஜ.ர., வ.ரா., வைமு. கோதைநாயகி, எஸ்.வி.வி. என்று அநேக எழுத்தாளர்கள் பற்றிய நூல்களை இலக்கியச் சிந்தனை வெளியிட்டிருக்கிறது.

இலக்கியச் சிந்தனையின் பணிகள் போற்றுதலுக்கு உரியவை.

இலக்கியச் சிந்தனை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், சிறுகதைக்காக அது வரையறுத்துக் கொண்ட திட்டங்களால் உந்தப்பெற்று, வேடந்தாங்கல் அருகில் உள்ள விநாயகநல்லூர் இனியவன் 'இலக்கிய வீதி'யைத் தொடங்கினார். இந்த அமைப்பும் சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலக்கியச் சிந்தனை ஒவ்வொரு மாதமும், பத்திரிகைகளில் பிரசுரம் பெற்ற சிறுகதைகளில் சிறந்ததைத் தேர்வு செய்யும். ஆனால், இலக்கிய வீதி மாதம் தோறும் புதுபுதிதாகக் கதைகள் எழுதி அனுப்பும்படி எழுத்தாளர்களைக் கேட்டுக் கொண்டது. அப்படி வருகிற எழுத்துப் பிரதிகளைப் பரிசீலனை செய்து, சிறந்த கதையை ஒவ்வொரு மாதமும் தேர்வு செய்து, இலக்கியக் கூட்டத்தில் தெரியப்படுத்தியது. வருடமுடிவில், பன்னிரண்டு சிறுகதைகளையும் தொகுத்து நூலாக்கியது. ஆண்டு விழாவின் போது புத்தகத்தை வெளியிட்டது.

இலக்கியச் சிந்தனை தனது மாதாந்தரக் கூட்டங்களையும், ஆண்டு விழாவையும் சென்னையிலேயே நடத்துகிறது. ஆனால், இனியவன் இலக்கிய வீதிக் கூட்டங்களை, பெரும்பாலும் மதுராந்தகம் நகரில் நடத்தியபோதிலும், வெவ்வேறு நகரங்களில் நடத்துவதில் ஆர்வம் காட்டுவது வழக்கம், செங்கல்பட்டு, காஞ்சீபுரம், சென்னை, தஞ்சாவூர் என்று எங்கு வேண்டுமானாலும் நடத்துவார். ஒருவருடம் புதுதில்லிக்கே சென்று, இலக்கிய வீதியின் சிறப்புக்கூட்டத்தை அம்மாநகரில் நடத்தி, சாதனை புரிந்த பெருமை இனியவனுக்கு உண்டு.

33

பயணங்கள் போவதில் நான் அதிக ஆர்வம் கொண்டிருந்தேன். இந்தியா முழுவதும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது.

சுவாமி விவேகானந்தர் காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை சுற்றித் திரிந்து, பரந்த பாரத பூமியைக் கண்டறிவதில் ஆர்வம் உடையவராக இருந்தார். அவர் சந்நியாசியாக இருந்ததால் அது அவருக்கு எளிதில் சாத்தியமாகும் காரியமாகவே அமைந்தது.

பேரறிஞர் ராகுல் சாங்கிருத்யாயன் பாரதநாட்டை, அதன் மக்களின் வாழ்க்கை முறைகளை, நாடு நெடுகிலும் நிலவுகிற பலவிதமான கலாசாரங்களை எல்லாம் தெரிந்துகொள்ள முயன்றார். அவருக்குத் துணிவு மிகுதியாக இருந்தது. சந்நியாசி போல அவர் திரிந்தார். ரயில் வண்டியில் டிக்கட் வாங்காமலே பரதேசிகளோடும் பிச்சைக்காரர்கள் கூடவும் சேர்ந்து பயணம் செய்தார். திபெத் நாட்டிலும், இமாலயம் வழியாகச் சீனா செல்லவும் அவர் யாத்ரீகர்களோடு, சுமைதூக்கும் கூலிக்காரன் மாதிரிச் சென்றார். இவ்வாறெல்லாம் அவருடைய வரலாறு கூறுகிறது. பல மொழிகள் கற்று. பலவித ஆய்வு நூல்கள் எழுதியுள்ள சாங்கிருத்யாயன் ஊர்சுற்றியாகத் திரிந்த அனுபவங்களை 'ஊற்சுற்றியின் புராணம்' என்ற நூலில் சுவையாக விவரித்திருக்கிறார்.

நானும் என்னை 'ஊர்சுற்றி' என்று குறிப்பிட்டு வந்திருக்கிறேன். எழுதுவது, படிப்பது இவற்றுக்கு அடுத்தபடியாக ஊர்கள் சுற்றிப் பார்ப்பதை நேசித்தேன். இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றி அலைய வேண்டும்; அதன் பெரிய பெரிய ஆறுகளை எல்லாம் கண்டு களிக்க வேண்டும் என்று ஆசை வளர்த்தேன்.

மகாத்மா காந்திஜியுடன் நெருங்கிப் பழகிய அறிஞர் காகா காலேல்கர் இந்தியாவின் நதிகளை நேசித்தார். நதிகளைச் சகோதரிகளாகவும் சிநேகிதிகளாகவும், கங்கையை மாதாவாகவும் மதித்தார். முதலில் அவர் தமது நதிகள் பற்றிய வியப்புகளையும் ரசிப்புகளையும் 'சப்த நதிகள்' என்ற சிறுபுத்தகத்தில் வெளியிட்டார். பின்னர் இந்திய நதிகள் பற்றி 'ஜீவன் லீலா' என்ற பெரிய புத்தகம் எழுதி வெளியிட்டார். அதில் அவர் இந்தியாவின் பெரிய நதிகள் சிறிய ஆறுகள் பலவற்றையும் கண்டு உணர்ந்தவற்றைப் பதிவு செய்திருக்கிறார். தமிழ்நாட்டின் நதிகளை அவர் கண்டு கொள்ளவில்லை. காவிரி பற்றி மட்டும் ஒரு சிறிது கூறியிருக்கிறார்.

நானும் அப்படி நதிகள் பலவற்றையும் தரிசிக்க வேண்டும் என்று கனவுகள் வளர்த்தேன். அதேபோல, கூடியவரை எத்தனை மலைகள்மீது ஏறமுடியுமோ, ஏறிச் சிகரங்கள்மீது நின்று விண்விரிவை, வியன்வெளியை, சூழ்நிலையை, ஆழ்நிலப் பரப்புகளை எல்லாம் கண்டு ரசிக்க வேண்டும் என்று விரும்பினேன். வெவ்வேறு இடங்கள் சேர்ந்து - கடலோர ஊர்கள் போய்- அங்கங்கே உள்ள அலைகடலின் அற்புதத் தோற்றங்களை எல்லாம் பார்த்து மகிழ வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

இவை எல்லாம் அனுபவத்தில் சுலபமாகச் சாத்தியமாகக் கூடியவை அல்ல என்று வாழ்க்கையும் காலமும் உணர்த்தின. எனவே, சாத்தியமானவரை

தமிழ்நாட்டில் மட்டுமாவது போக முடிந்த ஊர்களுக்கெல்லாம் போக வேண்டும் என்று எண்ணினேன். திருநெல்வேலி மாவட்டத்திலேயே தோன்றி, அம் மாவட்டத்திலேயே ஓடி, அந்த மாவட்டத்திலேயே கடலில் கலக்கிற தாமிரவர்ணி ஆற்றையாவது முழுமையாக - அது உற்பத்தியாகும் இடத்திலிருந்து புறப்பட்டு, அதன் கரை வழியாகவே பயணம் செய்து, அது கடலோடு சேரும் புன்னைக்காயல்வரை போய்ப் பார்க்க வேண்டும் என்று சொல்லி வந்தேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சின்னச் சின்ன மலைகள் மீது ஏறிப் பார்க்கவும், மேற்குத் தொடர்ச்சி மலையின் சில பகுதிகள் மீது ஏறவும் வாய்ப்புகள் கிட்டின. தாமிரவர்ணி ஆற்றை அதன் முழுநீளத்தையும் ஒரே முறையில் கண்டறியக் கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. எனினும், வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு இடங்களில் அந்த நதியைக் காணவும், அது புன்னைக்காயலில் கடலோடு சேரும் இடத்தில் நின்று பார்க்கவும் காலம் துணை புரிந்துள்ளது.

இந்தியப் பெருநதிகள் பலவற்றையும் கல்கத்தா போய்வந்த பயணங்களின் போது, ஓடும் ரயில் வண்டியில் இருந்தபடியே கண்டுகளிக்கும் பேறு பெற்றேன். அத்துடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று.

தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் சிற்சில இடங்களுக்குப் போகவும், கடலோரம் நின்று மகிழவும் சந்தர்ப்பங்கள் உதவியுள்ளன. தமிழ்நாடு பூராவும் சுற்றிப், பார்க்க வேண்டிய இடங்கள் அனைத்தையும் பார்த்துவிட்டேன் என்று சொல்ல முடியாது. காலமும் வாழ்க்கைநிலையும் துணைபுரிந்த வரை ஓரளவுக்கு ஊர்கள் சுற்றினேன். அவ்வளவுதான். நான் ஓர் இலக்கியச் சொற்பொழிவாளன் ஆகவோ, பட்டிமன்றப் பேச்சாளனாகவோ இருந்திருந்தால், ஊர்கள் சுற்றுவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் மிக அதிகம் கிட்டியிருக்கக்கூடும்.

சாகித்ய அகாதமியின் உதவியோடு சில புதிய இடங்களைக் காணமுடிந்தது. சாகித்ய அகாதமியின் தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் நானும் ஒருவனாகத் தேர்வு செய்யப்பட்டிருந்தேன். ஐந்து வருட காலத்துக்கு அந்தப் பொறுப்பு. ஆண்டுக்கு ஒரு முறை ஆலோசனைக் குழு கூடும். அநேகமாக, சென்னையில்தான் கூட்டம் நடைபெறும். சில சமயம் வேறு தூரத்து நகரத்திலும் நடக்கும்.

ஆலோசனைக் குழு செய்து முடிப்பதற்கு அரும்பெரும் காரியங்கள் இரா. அகாதமி மொழிபெயர்க்கத் திட்டமிட்டுள்ள புத்தகங்கள், புதிதாக எழுதப்பட வேண்டிய நூல்கள், முன்பு ஒதுக்கப்பட்ட மொழிபெயர்ப்பு வேலைகள் என்ன நிலையில் இருக்கின்றன; முன்பு மொழிபெயர்ப்பு வேலையை ஏற்றுக் கொண்டவரிடமிருந்து எழுத்துப் பிரதி வந்துவிட்டதா; அனைத்து இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் தமிழில் யார் யாரைப்

பற்றி எழுதவேண்டும்; எழுதக் கூடிய பொறுப்பை யாரிடம் ஒப்படைக்கலாம் - இவற்றுக்கெல்லாம் நீண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கும். அது வாசிக்கப்படும். உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அது பற்றிக் கருத்து கூற வேண்டும். அவ்வளவு தான்.

ஒரு வருடம் ஆலோசனைக் குழுவின் கூட்டம் உடுப்பியில் நடைபெற்றது. அங்கே கன்னட மொழிக்கவிஞர் ஒருவரைப் பற்றிய கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதர மொழிகளின் குழுவினரும் வந்திருந்தார்கள். கருத்தரங்கு, ஆலோசனைக் கூட்டம் எல்லாம் முடிந்த பிறகு நாங்கள் - நா. பார்த்தசாரதி, நான் மற்றும் நான்கு பேர்- உடுப்பி, மங்களூர் எல்லாம் சுற்றிப் பார்த்தோம். முகாம்பிகை கோயிலுக்குப் போனோம். அங்கிருந்து தர்மஸ்தலா என்ற இடம் சென்றோம்.

தர்மஸ்தலா, மலைமீது நெடுந்தொலைவு சென்று சேரவேண்டிய இடம். நல்ல பாதை இருந்தது. மலை வளத்தையும் இயற்கை வனப்புகளையும் ரசித்தபடி காரில் வசதியாகப் பயணம் போதலாம். தர்மஸ்தலாவின் முக்கியச் சிறப்பு, அங்கே தினசரி பலநூறு பேருக்கு இலைபோட்டு, உண்போர் வயிறும் மனமும் நிறைவு பெறும் அளவில், சாப்பாடு பரிமாறப்படுகிறது. ராஜகுடும்பத்தைச் சேர்ந்த, வள்ளல்மனம் படைத்த செல்வர் ஒருவர் அப்படி அன்னதானம் செய்கிறார். ஏகப்பட்ட பேர் வந்து உண்டு மகிழ்கிறார்கள்.

சாப்பாடு வழங்கப்படுகிற இடம் பெரிய கட்டிடம், அது வளமும் பசுமையும் நிறைந்த சூழலில் அமைந்திருக்கிறது. வள்ளலும் இனியவராய், நல்ல தோற்றம் உடையவராய் விளங்கினார். நாங்கள் தர்மஸ்தலத்தைப் பார்ப்பதற்காகத்தான் போனோம். வள்ளல் பண்புடன் உபசரித்து, உணவு உண்டுவிட்டுத்தான் போக வேண்டும் என்றார். ஆனால் அவரது விருந்துபசாரத்தை ஏற்றுக்கொள்ளப் போதுமான நேரம் எங்களுக்கு இல்லை. மங்களூர் சென்று, குறிப்பிட்ட நேரத்தில், சென்னை செல்லும் ரயில் வண்டியைப் பிடித்தாக வேண்டிய அவசரத்தில் நாங்கள் இருந்தோம். எனவே அங்கு உணவுக்காகத் தங்காது உடனேயே திரும்பிவிட்டோம்.

தர்மஸ்தலத்துக்குப் போனதும் வந்ததும் மனோகரமான பிரயாணம் ஆகும்.

நான் புதுடில்லி போய் வருவதற்கும் சாகித்ய அகாதமி உதவியது.

1987இல் புதுடில்லியில், சாகித்ய அகாதமியின் ஆதரவில் 'புதுமைப்பித்தன் கருத்தரங்கு' ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு தமிழ் எழுத்தாளருக்கு, அகில இந்திய அளவில் கவனிப்புப் பெற்றுத் தருவதற்காக, இந்தியத் தலைநகரில் கூட்டப்பட்ட முதல் கருத்தரங்கு அதுதான்.

அப்படி ஒரு கருத்தரங்கைக் கூட்ட வேண்டும் என்று எண்ணம் கொண்டு செயலுக்குத் தூண்டியவர் க.நா. சுப்ரமண்யம். சாகித்ய அகாதமியில்

தமிழ்மொழிக்கான பொறுப்பாளர் ('கன்வீனர்') ஆக இருந்த நா.பார்த்தசாரதி அந்த யோசனையை ஏற்றுப் பெரிதும் முயன்று பெரிய அளவில் ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தார்.

தமிழ்நாட்டிலிருந்து அசோகமித்திரன், சா. கந்தசாமி, நான் மூவரும் புதுடில்லி போனோம். கட்டுரைகள் படிப்பதற்காக. டில்லியில் இருந்த வலம்புரி ஜான், முனைவர் ரவீந்திரன், வெங்கட் சாமிநாதன் மற்றும் சிலரும் கலந்து கொண்டார்கள். இதர மொழிகள் பேசும் எழுத்தாளர்களும் வந்திருந்தார்கள்.

பொதுவாக, கட்டுரைகள் ஆங்கிலத்தில் படிக்கப்பட்டன. நானும், சா. கந்தசாமியும் தமிழில் வாசித்தோம்.

அந்த வருடம்தான் சாகித்ய அகாதமியின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் புதுமைப்பித்தன் பற்றி நான் எழுதிய நூல் வெளிவந்திருந்தது. அந்தக் கருத்தரங்குகளில் அது வெளியிடப்பட்டது.

கருத்தரங்கு வெற்றிகரமாக அமைந்து எல்லோருக்கும் மனநிறைவு தந்தது. டில்லியில் உள்ள ஆங்கிலப் பத்திரிகைகள் கருத்தரங்கு பற்றி எழுதியதோடு, புதுமைப்பித்தன் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டிருந்தது.

அந்தக் கருத்தரங்கிற்காக நான், அசோகமித்திரன் சா. கந்தசாமி இருவரோடும் பயணம் செய்தேன். ரயில் பயணத்தின்போது இருவரும் அன்புடன் எனக்கு உதவினர். டில்லி சேர்ந்ததும், சா. கந்தசாமிதான் எனக்கும் தங்குவதற்கான இடவசதி தேடித்தந்தார். அவரோடு ஆறு நாட்கள் டில்லியில் தங்கினேன். நண்பர் அந்நாட்களில் காட்டிய அன்பும் செய்த உதவிகளும் மறக்கமுடியாதவை.

சென்னையில் எங்களை வழிஅனுப்பிவிட்டு, நா.பா. மலேசியா போனார், அங்கு நடைபெற்ற தமிழ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக. நீங்கள் டில்லி போங்கள்; நான் மலேசியாவில் என் வேலையை முடித்துக் கொண்டு, அங்கிருந்து நேரே டில்லிக்கு வந்து சேர்வேன் என்று அவர் உறுதியாகச் சொல்லிப் போனார். ஆனால் அவரால் அப்படிச் செய்ய இயலாது போயிற்று. உடல் நலம் பாதிக்கப்பட்டதால் அவர் மலேசியாவிலிருந்து சென்னைக்குத் திரும்பவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

புதுடில்லியிலிருந்து திரும்பியபோதும் நான், சா. கந்தசாமி, அசோகமித்திரன் இருவரோடும் சேர்ந்தேதான் வந்தேன்.

பம்பாய்க்கு நான் போனதில்லை. பெங்களூருக்கு இரண்டு முறை போயிருக்கிறேன்.

முதல்முறை தி.க. சிவசங்கரனுடன், பெங்களூரில் நடைபெற்ற அமைதி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் 'தாமரை' இதழ் சார்பில் போனோம். மகாநாடு சிறப்பாக நிகழ்ந்தது. தங்குவதற்கு வசதியான ஏற்பாடுகள்

செய்யப்பட்டிருந்தன. மகாநாட்டுடன், நகரையும் மூன்று நாட்கள் நன்கு சுற்றிப் பார்க்க முடிந்தது.

இரண்டாவது முறையாக நான் பெங்களூர் போக நேரிட்டதும் ஓர் இலக்கியக் கருத்தரங்கிற்காகத்தான். 'எக்குமினிக்கல் ஸெண்ட்டர்' எனும் கிறிஸ்தவ நிறுவனம் ஒயிட் ஃபீல்ட் என்ற இடத்தில் கருத்தரங்கு கூட்டியது. பலவகைக் கருத்தரங்குகள் நடத்துவதும் அந்த அமைப்புகளின் முக்கியப் பணிகளில் ஒன்று ஆகும்.

அந்த இலக்கியக் கருத்தரங்கில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மொழிகளின் எழுத்தாளர்கள் பங்கு பற்றிப் பேசினார்கள். தமிழ்நாட்டிலிருந்து, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் சேர்ந்த டேவிட் பாக்கியமுத்து, ஜி. நாகராஜன். ஸ்ரீவேணுகோபாலன் (புஷ்பா தங்கதுரை), நா. பார்த்தசாரதி, ஜெயகாந்தன், நான் சென்றிருந்தோம். கருத்தரங்கு நிகழ்வுகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் பேசப்பட்டன. நகரை விட்டு விலகித் தனித்த ஓர் இடத்தில் இருந்தது ஒயிட்ஃபீல்ட். அங்குள்ள எக்குமினிக்கல் சென்ட்டர் வளாகம் மிகப் பெரியது. கட்டிடங்களும் பெரிது பெரிதாகச் சகல வசதிகளோடும் அமைக்கப்பட்டிருந்தன. மூன்று நாட்கள் மனோகரமாகக் கழிவதற்குக் கருத்தரங்கம் துணை புரிந்தது.

திருவனந்தபுரத்துக்கு நான் பலமுறை போயிருக்கிறேன். முதல்முறையாகப் போனது, கிராம ஊழியன் இதழில் நான் பணிபுரிந்த காலகட்டத்தில். 1945இல். நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகசபை அங்கே முகாமிட்டிருந்தபோது, அவர்களது நாடகங்களைப் பார்ப்பதற்காக நவாப் என்னைத் திருவனந்தபுரத்துக்கு அழைத்தார். அப்போது சில தினங்கள் தங்கினேன்.

இரண்டாவது முறையும் கிராம ஊழியன் காலத்தில்தான். 1946இல். நண்பர் எஸ். சிதம்பரம் அழைப்பை ஏற்று, அவருடைய அதிதியாகப் போனேன். அப்போதுதான் 'கவிக்குயில் மலர்' வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்தோம். மலர் நல்லமுறையில் தயாராகி வெளிவந்தது.

மூன்றாவது முறையாக நான் திருவனந்தபுரம் போனது முக்கியமான ஒரு பயணம் ஆகும். அச் சந்தர்ப்பத்தில் தி.க. சிவசங்கரன், 'தீபம்' இதழுக்காக முக்கியமானவர்களைப் பேட்டி கண்டு வந்தார். டி.எஸ். சொக்கலிங்கம், 'மணிக்கொடி' கு. சீனிவாசன், தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோரைப் பேட்டி கண்டு எழுதினார். அந்த வரிசையில் சுந்தர ராமசாமியையும் பேட்டி காணத் திட்டமிட்டார். அதற்காக, சென்னையிலிருந்து தி.க.சி. நாகர்கோவில் சென்றார். என்னையும் அவர் உடன் அழைத்துப்போனார்.

நாங்கள் சுந்தரராமசாமி வீட்டிலேயே தங்கினோம். எழுத்தாளர் கிருஷ்ணன் நம்பியும் உடன் இருந்தார். இருவரும் பிரியமாகப் பேசிப்

பழகினார்கள். காரில் கன்யாகுமரிக்கு அழைத்துப் போனார் சு.ரா. அங்குக் கடற்கரையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். இருட்டியதும் திரும்பினோம். வழிநெடுக, சுந்தரராமசாமி சுவாரசியமாகப் பேசிக்கொண்டே வந்தார். நாகர் கோவிலிலும் தனித்த ஒரு ரஸ்தாவில், இருள் செறிந்த மரங்களின் அடியில், காரில் அமர்ந்தபடியே ரசமான உரையாடலில் மகிழ்ச்சி அடைந்தோம். பிறகு வீட்டிலும் இரவில் வெகுநேரம் வரை, நண்பர் பல்வேறு விஷயங்கள் பற்றியும் பேசினார். இங்கிலீஷ் இசைப் பாடல்களின் 'ரிக்கார்டு'களை ஒலிக்கச் செய்து சந்தோஷித்தார்.

ஆனாலும், சுரா பேட்டி தர மனம் கொண்டாரில்லை. 'பேட்டி, என்ன பேட்டி'! என்று சொல்லிச் சிறுசிரிப்பு உதிர்த்தார். 'பேட்டி' என்பதை விட interview என்று சொல்வது எடுப்பாக, நன்றாக இருக்கிறது என்றார்.

'நீங்கள் கேள்விகளைக் கொடுத்துவிட்டுப் போங்க. நான் பதில் எழுதி அனுப்புகிறேன்' என்று சொல்லிவைத்தார். தி.க.சியும் கேள்விகளை அவரிடம் கொடுத்தார்.

அதன்பிறகும் சுரா 'பேட்டி'க் கேள்விகளுக்கான பதிலை எழுதி அனுப்பவேயில்லை. சுந்தர ராமசாமி பேட்டி 'தீபம்' இதழில் வரவேயில்லை.

தி.க.சியும் நானும் நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரம் போனோம். தாமரை இதழில் கதை கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்த எழுத்தாளர்களை நேரில் கண்டு பேசி அறிமுகம் செய்து கொள்ளலாமே என்ற நினைப்போடு.

எங்கள் வருகையைப் பற்றித் திருவனந்தபுரம் எழுத்தாளர்களுக்கு தி.க.சி. ஏற்கெனவே எழுதியிருந்தார். நாங்கள் நீல. பத்மநாபன் வீட்டைத் தேடிக் கண்டு கொண்டோம். அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றார். சற்று நேரத்தில், ஆ. மாதவன், டி.கே. துரைஸ்வாமி (நகுலன்), சண்முகம் சுப்பையா ஆகியோரும் வந்துசேர்ந்தனர். உற்சாகமான இலக்கியச் சந்திப்பு அது.

நாங்கள் நீல. பத்மநாபன் வீட்டில் தங்கினோம். மறுநாள், பத்மநாபனின் மாமனார் காரில் திருவனந்தபுரத்தில் பார்க்கவேண்டிய இடங்களான கோயில், மியூசியம், சித்திர சாலை போன்றவற்றுக்கு அழைத்துப் போய்க் காட்டினார்கள். சாலை பஜாரில் உள்ள மாதவன் கடைக்கும் போனோம். மறுநாள் கோவளம் கடற்கரைக்கும், அதன் பிறகு 'செவ்வறா' என்ற இடத்துக்கும் போய் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தோம்.திருவனந்தபுரம் தமிழர்கள், அவர்களின் சங்கங்கள் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டோம். நாங்கள் சும்மா நட்புமுறைச் சந்திப்புக்காகத்தான் போயிருந்ததால், இலக்கியக் கூட்டம்-பேச்சு நிகழ்ச்சி எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை

சில வருடங்களுக்குப் பின்னர் நான் மீண்டும் திருவனந்தபுரம் போக நேரிட்டது. பேராசிரியர் ஜேசுதாசன் பணிபுரிந்த கல்லூரியின் தமிழ்த்துறையில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஆர். சண்முகசுந்தரம் நாவல்கள் பற்றி. சுந்தர ராமசாமியும்

நானும் கட்டுரை வாசித்தோம். வேறு சிலரும் சண்முகசுந்தரத்தின் படைப்புகள் பற்றிப் பேசினார்கள். நண்பர் ஆ. மாதவன் தான் கல்லூரிக்கு என்னை அழைக்கும்படி பரிந்துரை செய்தார் என்று புரிந்தது.

அடுத்த முறை நான் திருவனந்தபுரம் போனது, தமிழ்ச் சங்கம் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக. 'ஆ. மாதவன் சிறுகதைகள்' என்ற புத்தகம் வெளிவந்திருந்தது. அதன் அறிமுகக் கூட்டம் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்முறை நான் மாதவனின் விருந்தாளியாகச் சில தினங்கள் தங்கியிருந்தேன்

என் வாழ்க்கையில் நான் அதிகமாகப் பயணம் செய்தது சென்னையில் இருந்து திருநெல்வேலிக்கும், திருநெல்வேலியில் இருந்து சென்னைக்கும் தான்! வருடம் தோறும் இங்கிருந்து திருநெல்வேலி போய் ராஜவல்லிபுரம் சேர்ந்து, அங்குச் சில மாதங்கள் தங்குவதும் எனது வாழ்க்கைமுறைகளில் ஒன்றாக அமைந்திருந்தது.

நான் வெளிநாடு எங்கும் போக விரும்பியதில்லை. பாஸ்போர்ட், விசா போன்ற தேவைகளும் கட்டுப்பாடுகளும் எனக்குப பிடிக்காத விஷயங்களாக- தொல்லைகளாகவே இருந்தன. அப்படியும் இலங்கை போய் வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பல்வேறு சமயங்களில் பல நண்பர்கள் விரும்பி அழைத்தும்கூட, நான் இலங்கை போவதைத் தவிர்த்தே வந்தேன். ஆயினும் 1996இல் நான் அங்கே செல்ல நேரிட்டது. அப்போது எனக்கு வயது 76 ஆகியிருந்தது.

அந்தப் பயணம் பற்றிப் பின்னர் கவனிக்கலாம்.

34

எனது அறுபதாம் ஆண்டு நிறைவை 1980இல் கொண்டாட வேண்டும் என்று நண்பர்கள் தீர்மானித்தார்கள்.

விழாக்கள் கொண்டாடுவதில் எனக்கு விருப்பமில்லை என்ற போதிலும், நண்பர்கள் விடுவதாக இல்லை. தி.க.சி. தீவிர உற்சாகத்துடன் செயல்பட்டு நண்பர்கள் பலரையும் தூண்டி மணி விழா கொண்டாடுவதில் முனைப்பாக இருந்தார். ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் என்னைப் பெருமைப்படுத்துவதற்காக அவர் எடுத்துக்கொள்ளும் அக்கறையும் முயற்சிகளும் அவருடைய உத்தம குணத்தை எடுத்துக் காட்டக் கூடியன.

எனது ஒவ்வொரு பிறந்த நாளின் போதும், பல வாரங்களுக்கு முன்னதாகவே அவர் நண்பர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதி எனக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கும்படி நினைவூட்டுவார். சென்னையில் இருக்கிற நண்பர்களை நேரில் சென்று என்னைப் பாராட்டி வாழ்த்தும்படி தூண்டுதல்

கடிதங்கள் அனுப்ப அவர் தவறியதேயில்லை. எனது அறுபது, எழுபது, எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். என்று தீர்மானித்துத் திட்டங்கள் தீட்டி, முன்முயற்சி எடுத்து அவர் ஆவன செய்ததை மறக்கவே முடியாது.

மணி விழா, சென்னை லஸ்சில் உள்ள சீனிவாச சாஸ்திரி ஹாலில் சிறப்பாக நடைபெற்றது. எழுத்தாளர்கள், பத்திரிகைத்துறை நண்பர்கள் பலரும் வாழ்த்திப் பேசினார்கள். திருநெல்வேலியிலும், வேறு சில இடங்களிலும் சிறிய அளவில் விழாக்கள் நடத்தி நண்பர்கள் என்னைப் பெருமைப்படுத்தினார்கள்.

பாளையங்கோட்டை சவேரியார் கல்லூரித் தமிழ்த்துறையைச் சேர்ந்த 'சிவசு' என்கிற சிவசுப்பிரமணியன் தனிச்சிறப்புடைய ஒரு காரியம் செய்தார். அறுபது கேள்விகள் தயாரித்து, அவற்றுக்கு உரிய பதில்களை விரிவாக எழுதித் தரும்படி கேட்டு வாங்கி, அவற்றைக் 'காலத்தின் குரல்' என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டார். அந்த நூல் நல்ல கவனிப்பைப் பெற்றது.

சிவசு தான் 'இலக்கியத் தேடல்' எனும் பெயரில் பதிப்பகம் ஆரம்பித்து, எனது 'சரஸ்வதி காலம்' கட்டுரைகளையும் புத்தகமாக்கி வெளியிட்டிருந்தார். அந்த நூலும் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது.

மணிவிழா சந்தர்ப்பத்தில் வேறு இரண்டு புத்தகங்களும் பிரசுரமாயின. சென்னை பூம்புகார் பதிப்பகம் என்னிடமிருந்து இரண்டு நாவல்களின் எழுத்துப் பிரதியை வாங்கி வைத்திருந்தது. இரண்டு மூன்று வருடங்களாக அவற்றைப் பிரசுரிக்காமலே கிடப்பில் போட்டிருந்தது. மணிவிழாவருடத்தில் அவற்றை நூல்களாக வெளியிடப் பதிப்பகம் முன்வந்தது. 'நினைவுச் சரம்', 'அலை மோதும் கடல் ஓரத்தில்' என்ற நாவல்களே அவை.

காலஓட்டத்தில், ஊர்களில், சுற்றுப்புறங்களில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விடுகின்றன. ஆனாலும் மனிதர்களின் குணங்களிலும் போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. இதை மயிலேறும் பெருமாள் என்பவரின் நினைவுகள் மூலமாகச் சுட்டுவதே 'நினைவுச்சரம்'.

'அலைமோதும் கடல் ஓரத்தில்' ஓர் அப்பாவி மனிதனின் அனுபவக் கசப்புகளை அவனது எண்ணங்கள் வாயிலாக வெளிப்படுத்துகிற நாவல். சோதனை ரீதியில் அமைந்தது. அவன்-அவள்-அவர்கள் என்ற மூன்று பகுதிகள் தான். ஓர் இரவில் கடலோரத்தில் நிகழ்வதாக உள்ளது. அவர்களின் எண்ணங்கள், பேச்சு, செயல்கள், சிந்தனை ஓட்டத்தோடும் நடை வளத்தோடும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ் இரு நாவல்களும் இலக்கிய ரசிகர்களிடமிருந்து பெரும் பாராட்டுகளைப் பெற்றுத்தந்த போதிலும், அவை பெற்றிருக்க வேண்டிய கவனிப்பைப் பெறவில்லை என்பது குறைபாடுதான்.

எனது எழுபதாண்டு நிறைவும் சிறுஅளவில் கொண்டாடப்பட்டது. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு 'பவள விழா' என்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

எழுபதாம் ஆண்டு நிறைவின் போதும், எனது புத்தகங்கள் இரண்டு வெளியாயின. என்னிடம் மிகுந்த அன்பும் பெரும் மதிப்பும் கொண்டிருக்கிற டாக்டர் தயானந்தன் பிரான்சிலின் நல்லெண்ணமே இதைச் சாத்தியமாக்கியது.

எனது சிறுகதைகள் சிலவற்றைத் தொகுத்து ''அருமையான துணை'' என்றும், குறுநாவல்களைச் சேர்த்து 'மன்னிக்கத் தெரியாதவர்' என்றும், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் (CLS) வெளியீடுகளாகப் பிரசுரிக்க டாக்டர் தயா ஏற்பாடு செய்தார். அத்துடன் 'எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன்' என்ற வரலாற்று நூலையும் CLS வெளியீடாக அவர் கொண்டு வந்தார்.

இவ்வரலாறு மு. பரமசிவம் எழுதியது. ஆகும். எழுத்தாளர் மு. பரமசிவம் தொழிலால் ஒரு 'பைண்டர்'. அச்சகத்தில் பணிபுரிபவர். அவர் ஆர்வம் காரணமாக எழுத்துத்துறையிலும் ஈடுபட்டு நல்ல வெற்றிகள் கண்டிருக்கிறார். நாவல், சிறுகதைகள் தொகுப்பு வெளியிட்டுள்ளார். 'கற்சிலை' என்ற சிற்றிதழைச் சிறிது காலம் நடத்தினார். அனைத்தினும் மேலாக, எழுத்தாளர் விந்தனிடம் தூய அன்பும் ஆழ்ந்த நட்பும் கொண்டுள்ளதனால், விந்தனின் சிறப்புகளைத் தமிழகத்துக்கு உணர்த்தும் வகையில் பெரும் பணிகள் ஆற்றியுள்ளார். விந்தன் வரலாறு, விந்தன் நாவல்கள் பற்றி விமர்சனங்களின் தொகுப்பு, விந்தன் கட்டுரைகள் தொகுப்பு என்றெல்லாம் பல நூல்கள் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்.

அவற்றுடன் முக்கியமான வரலாற்று நூல்களைப் பாராட்டத் தகுந்த முறையில் மு. பரமசிவம் எழுதியிருக்கிறார். 'கவிஞர் தமிழ் ஒளி', 'நாடு போற்றும் நாரணதுரைக்கண்ணன்' 'எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன்' 'எழுத்தாளர் கு. அழகிரிசாமி', 'தி.க.சி. என்றொரு விமர்சனத் தென்றல்' ஆகிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் அவரால் எழுதப்பட்டவை. தி.க.சியின் வரலாறு தவிர்ந்த ஏனைய நூல்கள் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியீடுகளாகும். தி.க.சி. வரலாறு நர்மதா பதிப்பகம் வெளியீடு.

எழுபத்தைந்தாவது ஆண்டு பவளவிழா சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நன்கு நடைபெற்றது. தி.க.சி.யின் யோசனைகளின்படி, பா. கலியாணசுந்தரம் பொறுப்பேற்று, ஒரு நாள் முழுவதும் நிகழ்ச்சிகளை நடத்தினார். வ.க. சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள் என்று தனித்தனிக் கருத்துரைகள் வழங்குவதற்குத் தகுந்தவர்கள் முன்வந்திருந்தனர்.

இந்த நூற்றாண்டின் அபூர்வ மனிதர், மாமனிதர், மகாத்மா, பெரும் தியாகங்கள் புரிந்தவர் என்றெல்லாம் அழைக்கப்படுவதற்குத் தகுதியானவர்

பா. கலியாணசுந்தரம். 'நடமாடும் சேவை மையம்' என்று பத்திரிகையாளர்களால் போற்றப்படுபவர் அவர்.

பணம்-பணம் என்று பணத்தாசை பிடித்து அலைகிறவர்கள் நிறைந்த மனித சமுதாயத்தில், பல ஆயிரங்கள்- லட்சங்கள் கிடைத்தாலும் பணப்பசி தணியாமல் மேலும் மேலும் பணம் திரட்டுவதிலேயே கருத்தாக உள்ளவர்கள் மிகுந்த நாட்டில் ,தனக்குக் கிடைத்த பல ஆயிரங்களையும் லட்சங்களையும் தாராள மனத்துடன் ஏழை எளியவர்களின்-முக்கியமாக ஏழைச் சிறார்களின் - நலனுக்காக அள்ளிக் கொடுத்த 'பொன்மனச் செம்மல்' கலியாணசுந்தரம்.

திருநெல்வேலி மாவட்டம், களக்காடு எனும் ஊருக்கு அருகில் உள்ள கருவேலங்குளம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் பா. கலியாணசுந்தரம். ஊரில் இருந்த போதே, அங்குள்ள ஏழைச் சிறுவர், சிறுமியர் கல்வி அறிவு பெறமுடியாது கஷ்டப்படுவதைக் கண்டு உணர்ந்து, அத்தகைய குழந்தைகளின் நலனுக்காக ஏதாவது செய்தாக வேண்டும் என்று எண்ணம் வளர்த்துவந்தார்.. அவ்வப்போது தம்மால் இயன்ற அளவு உதவிகளும் செய்யலானார்.

கல்வி கற்றுத் தேர்ந்து, ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரன் கல்லூரியில் நூலகராகப் பதவிஏற்றார் அவர். காலப் போக்கில், ஒரு பேராசிரியர் அளவு சம்பளம் பெறலானார். தனது மாதச் சம்பளத்தில், தமது செலவுகளுக்கென அறுநூறு ரூபாய் மட்டும் எடுத்துக் கொண்டு, மீதித் தொகை முழுவதையும் குழந்தைகளின் கல்விப் பயிற்சிக்காகவும், அவர்களுக்குத் தேவையான உடை, பாடப் புத்தகங்கள் முதலியன வாங்கி அளிப்பதற்காகவும் ஈடுபடுத்தினார். அதற்காக, 'சர்வதேசக் குழந்தைகள் நலச் சங்கம்' என்றொரு அமைப்பையும் உருவாக்கினார். பூர்வீகச் சொத்தில் தமது பங்காகக் கிடைத்த பாகத்தையும் இந்த அமைப்புக்கே வழங்கினார். மேலும், அவ்வப்போது முறைப்படி வந்து சேர்ந்த சம்பள உயர்வு விகிதப்படி கிடைத்த லட்சக்கணக்கான பாக்கிப் பணம் போன்றவற்றையும் குழந்தைகளின் நலனுக்கே அளித்துவிட்டார்.

தம் பங்கு மட்டும் போதாது, மற்றவர்களின் ஒத்துழைப்பும் தேவை என்று ஆளுக்கு ஒரு ரூபாய் வழங்கும் திட்டம் ஏற்படுத்தி அனைவரிடமும் பணம் வசூல் செய்து நலப்பணியில் ஈடுபடுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார் கலியாணசுந்தரம். மாதச்சம்பளம் பெறும் தனிநபர்களில் மிக உயர்ந்தபட்ச அளவில் பரோபகாரத்துக்காக நிதிகள் வழங்கிய தனிமனிதர் என்ற பெருமை இவரை வந்தடைந்தது.

தமிழ்நாட்டிலும், ஆந்திரா, ஓரிஸ்ஸா போன்ற இதர மாநிலங்களிலும் பெரும் மழை வெள்ளத்தால் சேதங்கள் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டபோதெல்லாம், மக்களிடம் நிதி திரட்டி, நேரே சென்று, பாதிக்கப்பட்டுப் பொருள் இழந்து சிரமப்படுகிறவர்களின் குழந்தைகள் பற்றி விசாரித்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதில் முனைப்பாக இருந்தார் அவர்.

மிக எளிமையாக உடை உடுத்து, சாதாரணனாக வாழ்கிற பா. கலியாணசுந்தரம், தமது மரணத்துக்குப் பிறகு தன்னுடைய கண்கள் தேவைப்படுகிறவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று 'கண்தானம்' செய்திருக்கிறார். அத்துடன், தமது உடல் புதைக்கப்படவோ எரிக்கப்படவோ வேண்டாம்; மருத்துவ மாணவர்களின் பயிற்சிக்காக மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்.

ஸ்ரீவைகுண்டம் ஊரில் குழந்தைகளுக்காக ஒரு பூங்கா அமைப்பதும், குழந்தைகள் நூலகம் ஏற்படுத்துவதும் அவரது திட்டப்பணிகளாகும். மேலும், தமிழ்நாட்டில் குழந்தைகளுக்காக ஒரு பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியிலும் தீவிரமாக முனைந்து செயல்பட்டு வருகிறார்.

என் நெடுங்கால நண்பர்களில் பா. கலியாணசுந்தரமும் ஒருவர். ராஜவல்லிபுரத்தில் பள்ளி ஆசிரியராக இருந்த பார்வதிநாதன் என்பவரின் உறவினரான அவர், அடிக்கடி அவ்வூருக்கு வருவார். பார்வதிநாதன் மூலம் அறிமுகமாகிப் பின் என் நண்பரானார். தமக்கு வரக்கூடிய மனைவி தன்னுடைய இலட்சியப் பணிகளுக்குத் துணைபுரியமாட்டாள்; தடங்கலாகவே இருப்பாள் என உணர்ந்து, தமக்குத் திருமணம் வேண்டாம் என்று உறுதிபூண்டு, பிரமச்சாரியாகவே வாழ்கிறார் அவர்.

இப்போது சிறிது காலமாக, சென்னையில் பாலம் எனும் அமைப்பை நிறுவிப் பொதுப்பணிகள் புரிவதில் தமது காலம் முழுவதையும் செலவிடுகிறார் பா. கலியாணசுந்தரம், உலக அளவில் கவனிப்புப் பெற்று, 'இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர்' என்ற கவுரவத்தை அடைந்துள்ளார் அவர். அவருக்குத் தற்போது வயது 61.

35

அமைதியாக, விளம்பர வெளிச்சத்துக்கு ஆசைப்படாமல், சமூக நலப் பணிகள் புரிந்து கொண்டிருக்கும் அமைப்புகள் ஆங்காங்கே இருக்கின்றன. அறப்பணிகளுக்காக அயல்நாடுகளிலிருந்து தாராளமாகப் பணம் பெறமுடியும் என்று கண்டு கொண்டவர்கள், சமூகநல அமைப்பு என்று ஏதாவது பெயர் வைத்துக் கொண்டு, மேல்நாடுகளிலிருந்து பணம் பெற்றுச் சுகபோக வாழ்க்கைவசதிகளைப் பெருக்கிக் கொண்டு ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துகிறவர்களும் நாட்டில் செயல்புரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

சமூகத்தில் வறுமைநிலையில் வசிக்கிறவர்களுக்கு உதவும் நோக்கத்தோடு அமைப்பு ஏற்படுத்தி, அவர்களுக்கு வாழும் வகைகளைக் கற்றுக் கொடுப்பதற்கு ஆவன செய்யும் இலட்சியவாதிகள் போற்றத் தகுந்த

முறையில் பணியாற்றுகிறார்கள். தேவைப்படுகிற- தகுதியானவர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்குதல், கைத்தொழில் பயிற்சி அளித்தல், வைத்தியமுறைகளைக் கற்றுக்கொடுத்தல், அதற்கு வசதியாக மூலிகைகளைப் பயிரிடுதல் போன்ற நல்ல காரியங்களை நகர்ப்புறங்களில் செய்து வரும் அமைப்புகளில் 'சோலை ட்ரஸ்ட்' (SOLAI TRUST) என்பதும் ஒன்று ஆகும்

கிறிஸ்தியான்பேட்டை (CHRISTIANPET) என்ற சிற்றூரில் அமைந்து, பல்லாண்டுகளாக நற்பணி புரிந்து கொண்டிருக்கிறது 'சோலை அறக்கட்டளை.' அதை அமைத்து இயக்கி, பாராட்டப்படவேண்டியமுறையில், திட்டங்களிட்டுச் செயல்புரிகிறவர் முனைவர் ஆர்.டி.ராஜன் எனும் இலட்சியவாதி. செயலாற்றல் மிகுந்தவர். ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று, பொருளாதார ரீதியிலான வளர்ச்சிகளை ஆய்வு செய்து அனுபவம் பெற்றவர் அவர்.

சிறிது காலம், சோலை அறக்கட்டளை சார்பில் 'பாரதி சோலை' என்றொரு சிற்றிதழை ஆர்.டி. ராஜன் ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தினார். அது தரமான மாத இதழாக வெளிவந்துகொண்டிருந்தது. பின்னர் நிறுத்தப்பட்டது.

1985 கடைசியில், ஒருநாள் ஆர்.டி.ராஜன் என்னைத் தேடி வந்தார்.

அப்போது நாங்கள் ராயப்பேட்டை, பாரதி சாலையில் ஒரு பெரிய வீட்டின் பின்புறம் ஒதுக்கமாக இருந்த தனிவீட்டில் குடியிருந்தோம். ராமசாமி மேஸ்திரி தெருவில் குடியிருந்த மாடிப்பகுதியை 1967இல் காலி செய்து விட்டு இந்த வீட்டுக்கு வந்திருந்தோம்.

அந்தப் பெரிய வீடு வரலாற்றுப் பெருமை பெற்றிருந்த 'காந்தி பீக்மேன்ஷன்' என்று பெயர் பெற்ற மூன்று மாடிக்கட்டிடம். என்ஜினீயர் அய்யாசாமிக்குச் சொந்தமானது. அவரது சந்ததியினர் அதில் வசிக்கிறார்கள். ஒவ்வொரு மாடிக்கும் தனித்தனிப் பெயர் இடப்பட்டிருந்தது. 'ஸ்வாமீஸ் ஸமிட்', 'காந்தி பீக்' என்ற தன்மையில். மகாத்மா காந்தி சென்னைக்கு வந்திருந்த போது அந்த மாளிகைக்கும் வருகைதந்தாராம். ராஜாஜி அங்கே வந்திருக்கிறார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரசிலிருந்து விலகி, தனிக்கட்சி ஆரம்பித்த சமயம், சென்னை வந்தவர் இந்த வீட்டில் சில தினங்கள் தங்கியிருந்தாராம். இவற்றை அவ்வீட்டுக்காரர்கள் பெருமையாகச் சொல்வார்கள்.

பாரதி சாலை எனப் பெயர் மாற்றம் பெற்றுவிட்ட பைகிராப்ட்ஸ் ரோடில் எடுப்பாக நிற்பது இந்தப் பெரிய கட்டிடம். பெரிய இரும்பு 'கேட்'டைத் திறந்தால், வரிசையாக இரண்டு மூன்று கார்கள் நிறுத்தப்பட்டிருக்கும். அவற்றின் ஓரமாகக் கிடைக்கிற குறுகலான வழியில் நடந்து உள்ளே போனால் பசுமாடு கட்டப்பெற்ற தொழுவம் இருக்கும். அதைக்கடந்து புகுந்தால், சிறிய 'அவுட் ஹவுஸ்' ஆகத் தனி வீடு அமைதியாக இருக்கும். அந்த வீட்டில் நாங்கள் பதினெட்டு வருடங்கள் வசித்தோம்.

பல இடைஞ்சல்களையும் தாண்டி வந்துதான் நண்பர்கள்- எழுத்தாளர்கள், பத்திரிகைக்காரர்கள் மற்றும் பலரும்- என்னைச் சந்தித்துச் சென்றார்கள். சோலை ட்ரஸ்ட் பொதுச் செயலாளர் ஆர்.டி.ராஜனும் வந்து, பார்த்து, வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். சோலை இயக்கம், அது செய்து வருகிற சமூகநலப் பணிகள், நடத்துகிற பத்திரிகை பற்றி எல்லாம் சென்னார்.

அவர்களது திட்டத்தின்படி எழுத்தாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதும் ஒரு முக்கிய நோக்கம் ஆகும். வணிகப் பத்திரிகைகளும், அவற்றில் எழுதுகிறவர்களும் சமூகச் சீர்கேடுகளுக்கும் பண்பாட்டுச்சிதைவுக்கும் வழி செய்கிறார்கள். நச்சு எழுத்துக்களின் மூலம் மக்கள் மனசைக் கெடுத்து, மக்கள் கலாச்சாரத்தை மாசுபடுத்துகிறார்கள். இவற்றை எல்லாம் விமர்சித்தும் கண்டித்தும் சோலை இயக்கம் கூட்டங்கள் நடத்துகிறது. எழுத்தாளர்கள் நல்லமுறையில், சமூக உணர்வோடு எழுதி, மக்களின் வாழ்க்கையை வளம் செய்ய வேண்டும் என்று கோருகிறது. ஜெயகாந்தன் மற்றும் சில முக்கிய எழுத்தாளர்களும் கவிஞர்களும் எங்கள் கூட்டங்களில் கலந்து கொண்டு நல்ல ஆலோசனைகள் வழங்கியிருக்கிறார்கள். அடுத்த கூட்டத்தை ஜனவரியில் நடத்தத் தீர்மானித்திருக்கிறோம். நீங்கள் வந்து அதில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ராஜன் கேட்டுக் கொண்டார்.

நான் இசைவு தெரிவித்தேன். 1986 ஜனவரியில் கிறிஸ்டியான்பேட்டையில் நிகழ்ந்த கூட்டத்துக்குப் போனேன். கவிஞர் இன்குலாப், மற்றும் சமூக நலனில் அக்கறை கொண்ட ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இலக்கியம் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும் என்ற கருத்து அனைவராலும் வலியுறுத்தப்பட்டது.

பின்னர், செயலாளர் ஆர்.டி.ராஜன் தீவிரமாக முயன்று, தமிழ்நாட்டின் பல பகுதியிலும் உள்ள எழுத்தாளர்களோடு தொடர்புகொண்டு, 1986 ஜூன் மாதம் மதுரையில் பெரிய கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார். சமூக மேம்பாட்டுக்கான கலை இலக்கியக் கலாச்சார வளர்ச்சிக்குச் சமூக உணர்வோடு செயலாற்றும் எழுத்தாளர்கள் - பொதுவாக எழுத்துத்துறையில் புதிதாக ஈடுபட்டுள்ள ஆர்வமுள்ள இளைஞர்கள்-சிற்றிதழ் ஆசிரியர்கள் கூடியிருந்தனர். சுமார் நூறுபேர் இருக்கும்.

தற்கால எழுத்தாளர்கள், பத்திரிகைகளின் தன்மைகள் போக்குகள் பற்றியும், வாசகர்களின் தரத்தையும் ரசனையையும் திட்டமிட்டுச் சிதைத்துச் சீர்குலைத்துக் கொண்டிருக்கும் வணிக நோக்குப் பத்திரிகைகளின் செயல்பாடுகள் குறித்தும் காரசாரமான பேச்சுக்கள் ஒலிபரப்பப்பட்டன.

வெகுஜனப் பத்திரிகைகளின் போக்கை எதிர்த்து, ஆரோக்கியமான-சமூக மேம்பாட்டுக்கான- எழுத்துக்களை வளர்க்கும்

முயற்சிகளைத் தூண்டவும், அப்படி எழுதுகிறவர்களுக்கு உற்சாகம் அளிக்கவும் 'எழுத்தாளர் உறவு' என்ற அமைப்பை உருவாக்க வேண்டும்; அதற்கு உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும்; மாவட்டம்தோறும் அதற்குக் கிளைகள் அமைக்கவேண்டும்; சமூக உணர்வு கொண்ட எழுத்து முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய சிறுபத்திரிகைகள் வளர்க்கப்பட வேண்டும் என்று தீர்மானங்கள் கொண்டு வந்தார் ஆர்.டி.ராஜன்.

நீண்ட ஆலோசனைக்குப் பிறகு 'எழுத்தாளர் உறவு' அமைக்கப்பட்டது. நான் அதன் தலைவராக இருக்க வேண்டும் என்று அனைவரும் கேட்டுக் கொண்டனர். நான் மறுத்தும், என் மறுப்புரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முடிவில் நான் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க வேண்டியதாயிற்று.

செயலாளர்-ஆர்.டி.ராஜன், பொருளாளர்-குன்றம் மு. இராமரத்னம் என்றும் தேர்வு செய்யப்பட்டது. இதர பொறுப்புகளுக்கும், மாவட்டச் செயற்குழுக்களுக்குமான பொறுப்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். உறுப்பினர் கட்டணம் முதலியன பேசி முடிவு செய்யப்பட்டது. எல்லோரும் மனநிறைவுடன் பிரிந்து சென்றார்கள்.

இந்தக் கூட்டம் மதுரை நகரின் முக்கியப் பகுதியில் ஒரு பெரிய ரஸ்தாவிலிருந்து விலகிச் சிறிது தூரம் நடந்து சேர வேண்டிய பகுதியில் உள்ள 'ஐடியாஸ் நிலையம்' வளாகக் கட்டிடத்தில் நடைபெற்றது. வாழைத்தோப்பு என்கிற, பிற்படுத்தப்பட்டோர் வசிக்கிற வட்டாரம் அது. டீக்கடை, ஓட்டல் எதுவும் அருகில் கிடையாது. டீ சாப்பிடுவதற்கு, சிறிது தொலைவு நடந்து முக்கிய ரஸ்தாவுக்குத்தான் வரவேண்டும்.

அந்த வட்டாரத்தில் 'ஐடியாஸ் நிலையம்' எனும் கிறிஸ்தவ அமைப்பு வசதியான முறையில் கட்டிடங்கள் கட்டி, ஆண்டு முழுவதும் கருத்தரங்குகள், சமூக மேம்பாட்டுக்கான கூட்டங்கள் முதலியன நடத்துவதற்கு வகை செய்து உதவியது. பிற்படுத்தப்பட்ட-பின்தங்கிய மக்களின் நலனுக்காகவும் சமூகத்தொண்டுகள் புரிந்துவந்தது. எழுத்தாளர் உறவு கூட்டத்துக்கு வந்தவர்கள் தங்குவதற்கு வசதியாக இருந்தது அந்த இடம்.

செயலாளர் ஆர்.டி.ராஜன் சோலை நிறுவனத்தை வளர்ப்பதற்காகப் பல இடங்களிலும் சுற்றி அலைந்து அனுபவப்பட்டிருந்ததால், அத்தகைய அமைப்புகளோடு அவருக்கு நல்ல தொடர்பு இருந்தது.

அவர் சுற்றுப்பயணங்கள் மூலமும், கடிதத் தொடர்புகள் வாயிலாகவும் நிறுவன வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வந்தார். பணச் செலவுக்குச் சோலை ட்ரஸ்ட் உதவியது.

இத்தகைய அமைப்புகளில் பெரும் பொறுப்பும் அதிகாரமும் பெற்றவராக விளங்குவது செயலாளர்தாம். தலைவர் சும்மா பெயருக்குத்தான்.

கூட்டங்கள், நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகிறபோது தவறாது கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றவேண்டிய கடமை அவருக்கு உண்டு. முக்கியமான அறிக்கைகள் தயாரிக்க வேண்டுமானால், அவர் எழுதிக் கொடுக்கலாம். பெரும்பாலும், செயலாளர் தயாரிக்கிற அறிக்கைகளில் தலைவர் கையெழுத்திட்டாலே போதும்.

ஆர்.டி.ராஜன் பல மாதங்களுக்குப் பிறகு, புதுக்கோட்டையில் எழுத்தாளர் கூட்டம் ஏற்பாடு செய்து என்னையும் அழைத்துச் சென்றார். இளைய எழுத்தாளர்கள் உற்சாகத்தோடு கலந்து கொண்டு, கருத்துக்கள் பரிமாறினர். உறுப்பினர்கள் சேர்த்து, எழுத்தாளர் உறவு அமைப்பை வலிமைப்படுத்தும்படி அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

இப்படிப் பல இடங்களிலும் எழுத்தாளர் உறவு அமைக்கவும், உறுப்பினர்களாகச் சேர்ந்து இயக்கத்தை வலுப்படுத்தவும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. அறிக்கைகள் அனுப்பப்பட்டன.

'எழுத்தாளர்கள் பத்திரிகைகள்-அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் நாட்டின் நிலைமைகளை எடுத்துக் கூறும் நூல் ஒன்று எழுதித்தரும்படி ஆர்.டி.ராஜன் என்னைக் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறே எழுதிக்கொடுத்தேன். அது 'சோலைத் தேனீ' வெளியீடாகப் பிரசுரம் பெற்றது. 1987இல் அந்த நூலுக்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிப் பரிசு கிடைத்தது.

அதை அடுத்து 'வாசகர்கள்-விமர்சகர்கள்' பற்றி ஒரு புத்தகம் எழுதும்படி ராஜன் கோரினார். அதையும் சோலைத் தேனீ வெளியிட்டது.

சோலைத் தேனீ, வேறு பொருளாதார, மருத்துவ, சமூக நல நூல்களையும் பிரசுரித்திருக்கிறது.

நீண்ட இடைவேளைக்குப் பிறகு எழுத்தாளர் உறவு வேலூரில் கூடியது. உற்சாகமாகப் பலரும் கலந்து கொண்டார்கள். எழுதி ஓரளவு பெயர் பெற்ற எழுத்தாளர்களைவிட, புதிதாக எழுத வேண்டும் என்ற ஆர்வம் உடைய இளைஞர்களே இம் முயற்சிக்கு ஆதரவு காட்டினார்கள். அவர்கள், தங்களுடைய எழுத்துமுயற்சிகள் அச்சில் வருவதற்கு இந்த அமைப்பு உதவக்கூடும் என்று எண்ணினார்கள்; உதவ வேண்டும் என எதிர்பார்த்தார்கள். அப்படிப்பட்ட உதவி எதுவும் கிட்ட வழியில்லை என உணர்ந்ததும் சோர்வடைந்தார்கள்.

சிற்சில இடங்களில் கிளைகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும், உறுப்பினர்கள் அதிகமாகச் சேர்ந்து எழுத்தாளர் உறவை வலுப்படுத்தவில்லை. சேர்ந்திருந்தவர்கள் ஒழுங்காக உறுப்பினர் கட்டணம் செலுத்தவுமில்லை.

சோலை ட்ரஸ்ட் நிறுவனரும் செயலாளருமான ஆர்.டி. ராஜன் ஒரு திட்டத்தின்படி, குறிப்பிட்ட ஏதோ நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே செயலாற்றி வந்தார், எழுத்தாளர் உறவு அமைப்பை இயக்கினார் என்று எண்ணவேண்டியிருந்தது. ஒரு குறித்த காலம் வரை அவர் தாராளமாகப் பணஉதவி செய்து, 'உறவு'க் கூட்டங்களை வெவ்வேறு ஊர்களில் கூட்டி, அதன் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்து அறிக்கைகள் தயாரித்து வெளியிட்டுக்கொண்டிருந்தார். சோலை ட்ரஸ்ட் எங்கிருந்தோ நிதி உதவி பெறுவதற்கு, அந்த இயக்கம் எழுத்தாளர்களை இலட்சிய மார்க்கத்தில் வழிநடத்திச் செல்கிறது என்று காட்ட வேண்டிய அவசியம் அவருக்கு இருந்திருக்குமோ என்னவோ!

எனவே, இரண்டு ஆண்டுகள் முடிந்ததும் ஆர்.டி. ராஜன், செயலாளர் பொறுப்பில் இருந்து, தான் விலகிக் கொள்வதாக அறிவித்தார். எழுத்தாளர் உறவு தனித்து இயங்க வேண்டும்; அதற்கெனத் தனியாகத் திறமையுள்ள ஒருவரை செயலாளராகத் தேர்ந்துகொண்டு செயல்பட வேண்டும்; இனி அது வேலை ட்ரஸ்ட் அமைப்பைச் சார்ந்து இருக்க முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

பணபலம் இல்லாமல் எந்த இயக்கம்தான் வளர முடியும்? ஒரே இடத்தில் கூட்டங்கள் நடத்த வேண்டுமானால்கூடப் போதுமான பணம் வேண்டுமே! தேவைப்படுகிற செலவுகளுக்குக்கூடப் பணம் பெற்றிராத-உறுப்பினர்கள் மூலம் கட்டணத் தொகை வசூலிக்க முடியாத-அமைப்பு எப்படி சரிவர இயங்குதல் கூடும்? அதனால் எழுத்தாளர் உறவு சோர்வுற்றது.

பொருளாளரான குன்றம் இராமரத்னம் சோர்ந்து பின்வாங்கத் தயாராகஇல்லை, எழுத்தாளர் உறவு என்று ஆரம்பித்துவிட்டோம், இரண்டு வருடங்கள் நடத்தியுமாயிற்று மேலும் தொடர்ந்து நடத்த முயல்வோம் என்று உறுதியாகச் சொன்னார், கோயம்புத்தூரில் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார், கோவை நகரப் பேராசிரியர் - பெயர் பெற்றிருந்த எழுத்தாளர் ஒருவரைச் செயலாளராகத் தேர்வு செய்தார், உற்சாகமூட்டும் சொற்பொழிவுகள், வழிகாட்டும் அறிக்கைகள் எல்லாம் நிகழ்த்தப்பட்டன, புதிய செயல் வேகம் பெறக்கூடும் என்றொரு தோற்றம் அந்தக் கூட்டத்தின் முடிவில் ஏற்பட்டது.

ஆனாலும், காலஓட்டத்தில் எழுத்தாளர் உறவு அமைப்பு செயல்வேகமும் உற்சாக முனைப்பும் பெற்றுவிடவில்லை புதிய செயலாளர், தலைவர் பதவி வகிப்பது போலவே நடந்து கொண்டார், அறிக்கைகள் அனுப்புவது. கடிதங்கள் எழுதுவது, பத்திரிகைகளில் தன் பெயர் வரும்படி கவனித்துக் கொள்வது என்ற நிலையில்தான் செயல்பட்டார்,

பொருளாளர் அவ்வப்போது செயலாளரை ஊக்குவித்து ஏதாவது செய்யத் தூண்டிக் கொண்டிருந்தார், எழுத்தாளர் உறவு இயக்கரீதியில்

செயலாற்ற வேண்டுமானால், தலைவரும் செயலாளரும் ஊர்ஊராகச் சென்று, மாவட்டக் கிளைகளுடன் தொடர்பு கொண்டு கூட்டங்கள் கூட்டி, சொற்பொழிவுகள் நிகழ்த்தி வழிகாட்ட வேண்டியது அவசியம் என்று பொருளாளர் கருதினார், எனது கருத்தைக் கேட்டார். நல்ல திட்டம்தான், நான் சுற்றுலா வரத் தயார் என்று தெரிவித்தேன்.

பொறுப்புகளும் பணிகளும் மிகுதியாகப் பெற்றிருந்த செயலாளர் ஊர்ஊராகச் சென்று, கொள்கைப் பரப்பு அலுவலில் ஈடுபட இசையவில்லை, தலைவரும் பொருளாளரும் சுற்றுப்பயணம் போய் ஆவன செய்யலாம் என்று பொருளாளர் தீர்மானித்தார்.

செலவுக்குப் பணம் மிகுதியாகத் தேவைப்படுமே? என்ன செய்யலாம்? சோலை ட்ரஸ்ட் உதவியை நாடுவது என்று பொருளாளர் நினைத்தார், வேலூர் - காட்பாடி சென்று, சோலை அறக்கட்டளைப் பொதுச் செயலாளர் ஆர். டி. ராஜனைச் சந்தித்துப் பேசினார், ஆனாலும் பலன் ஏற்படவில்லை.

திட்டம் நல்ல திட்டம் தான். ஓர் இயக்கத்தை இப்படித்தான் வளர்க்க வேண்டும். அதற்குத் தேவைப்படுகிற பணத்தையும் நீங்களேதான் தேடிக்கொள்ள வேண்டும், சந்தாபாக்கி வசூலித்தல், உறுப்பினர்களிடமே நிதி கேட்டுப் பெறல், வேறு தகுந்தவர்களிடமிருந்து நிதி பெறுதல் என்று திரட்ட வேண்டும். எங்கள் ட்ரஸ்ட் பொருள் உதவி செய்ய இயலாது. ட்ரஸ்டின் விதிமுறைகள் அதற்கு இடம் கொடாது என்று ராஜன் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்.

ஆகவே எழுத்தாளர் உறவு செயலற்று ஓடுங்கியது, இப்படி ஓர் அமைப்பை- நசிவு இலக்கியத்தைக் கண்டிப்பது, நச்சு எழுத்துக்களை வளர்த்துப் பண்பாட்டுச் சீரழிவை உண்டாக்கிக் கொண்டிருக்கும் வணிகநோக்குப் பத்திரிகைக்களின் போக்கை எதிர்ப்பது, எழுத்தாளர்களையும் மக்களையும் இத்தகைய நாசகாரசக்திகளுக்கு எதிராக விழிப்பு உணர்வு பெறச் செய்வது, ஆரோக்கியமான நல்ல எழுத்துக்கள் தோன்றிப் பரவத் துணைபுரிவது முதலிய நோக்கங்களுடன் செயலாற்றக் கூடிய எழுத்தாளர் அமைப்பை ஆரம்பிக்க வேண்டும் என்று நண்பர் ஆர். டி. ராஜன் தீவிரமாக இருந்த ஆரம்பகட்டத்தில், அவரிடம் நான் கேட்டேன்.

இதே நோக்கங்களோடும், நல்ல செயல் திட்டங்களோடும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பயனுள்ள பணிகள் செய்து கொண்டிருக்கிறதே, நாடு தழுவிய இயக்கமாக அது வளர்ந்திருக்கிறது, இப்போது அதே மாதிரியான இன்னோர் அமைப்பு எதற்காக?

அந்த எழுத்தாளர் சங்கம் ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்து வளர்கிறது, கம்யூனிசச் சார்புடையதாக இருக்கிறது. அப்படி இல்லாமல், சுயேச்சையாக

இயங்கும் எழுத்தாளர்களுக்கான ஓர் அமைப்பு தேவை. எந்த அரசியல் கட்சியையும் சாராது தனித்து இயங்க வேண்டும் எழுத்தாளர் உறவு என்று நண்பர் கூறினார்.

கலை, கலாச்சார, சமூக இலக்கிய உணர்வோடு எழுத்தாளர் உறவு வளரவேண்டும்; சமூக உயர்வுக்கும் மனித மேம்பாட்டுக்காகவும் இலக்கியங்கள் மூலம் அது வழி காட்டவேண்டும், அப்படி எழுதக் கூடிய எழுத்தாளர்களை ஒருங்கிணைக்க வேண்டும், புதிய எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும் என்றெல்லாம் இலட்சியம் பேசினார் அவர், ஆயினும், அப்படி ஓர் அமைப்பைத் தோற்றுவித்த பிறகு அதை அவர் அந்தரங்கத்தில் விட்டு விட்டார். இந்த முயற்சிக்கு என்னையும் இழுத்திருக்க வேண்டாமே என்ற எண்ணம் எனக்கு ஏற்படத்தான் செய்தது,

பொருளாளர் பொறுப்பு வகித்த குன்றம் மு. இராமரத்னம் நல்ல செயல் முனைப்பு உள்ளவர், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற அறிவியலாளர், கோயம்புத்தூர் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையில் (சுகர்கேன் இன்ஸ்டிடியூட்) சயன்டிஸ்ட் ஆகப் பணிபுரிந்து கொண்டிருந்தார், எழுத்தார்வம் பெற்று, 1940 முதலே கதை, கவிதை, கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் காட்டிவந்தவர். அவ்வப்போது சில பத்திரிகைகளும் நடத்தியுள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் 'தாராமதி' என்ற இதழை நடத்திக் கொண்டிருந்தார், எழுத்தாளர்களுக்கும் சிற்றிதழாளர்களுக்கும் வழிகாட்டி அவர்களது வளர்ச்சிக்குத் துணை புரியவேண்டும் என்ற நோக்கம் உடையவர்.

எழுத்தாளர் உறவு அமைப்பு, தோற்றுவிக்கப்பட்ட காலத்திலேயே. தமிழ்ச் சிற்றிதழாளர்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அவர் வளர்த்து வந்தார், எனவே அவர் சிற்றிதழாளர் மாநாடு ஒன்றைச் சிவகாசியில் கூட்டினார், 1987இல்

தமிழ் நாட்டின் பலபகுதிகளிருந்தும் சிற்றிதழாளர்கள் சிவகாசி மாநாட்டுக்கு வந்து சேர்ந்தனர். ஒரு நாள் முழுவதும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கி. ராஜநாராயணன், நான் மற்றும் சிலர் சிறப்புரை ஆற்றினோம். குன்றம் இராமரத்னம் தலைமை தாங்கினார், சிற்றிதழ்களின் கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது, அதைப் பொள்ளாச்சி நசன் ஏற்பாடு செய்திருந்தார்.

பொள்ளாச்சியைச் சேர்ந்த நடேசன், தன் பெயரைப் பொள்ளாச்சி நசன் என்று சுருக்கிக் கொண்டுள்ளார். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியும் நசன் முதலில் விடுதலைப் பறவை என்றொரு சிற்றிதழ் நடத்தினார். அதுமுதல் சிற்றிதழ்களைச் சேகரித்துப் பாதுகாப்பதில் நாட்டம் கொண்டார். விடுதலைப் பறவை நின்று விட்டது. நசன் ஆய்வு ரீதில் சிற்றிதழ்களில் கவனம் செலுத்தலானார். அதற்காகச் சிற்றிதழ்ச் செய்தி என்ற ஆய்வு இதழைப் பல வருடங்கள் நடத்தினார்.

அது தமிழில் தனிரகமான பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருந்தது, சிற்றிதழ்கள் பற்றிய தகவல்கள், பழங்காலத்துப் பத்திரிகைகளின் விவரங்கள். அயல்நாடுகளில் நடக்கும் சிற்றிதழ்கள் பற்றிய செய்திகள் - முகவரிகள், பழம் பத்திரிகைகளில் இருந்து எடுக்கப்பட்ட அரிய விஷயங்கள். ஆண்டுதோறும் தோன்றிய சிற்றிதழ்களின் எண்ணிக்கையும் விவரங்களும், அவற்றில் நின்று விட்டவை போக தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் இதழ்களின் பெயர்கள் (அடுத்த வருடங்களில் தரப்படும் கணக்கு) போன்ற ஆய்வுச் செய்திகள் வெளியிடப்பட்டன. பயனுள்ள யோசனைகளைக் கூறும் கட்டுரைகளும் தரப்பட்டன,

சிற்றிதழ்ச் செய்தியில் முதலாவது இதழில் இருந்து நான் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தேன். கலாமோகினி, கிராம ஊழியன் ஆகிய மறுமலர்ச்சி இலக்கிய இதழ்கள் பற்றி எழுதினேன். அடுத்து, சிற்றிதழ்கள் செய்தவையும் செய்யத் தவறியவையும் என்ற தொடரை எழுதினேன். இக்கட்டுரைகளில் கூறப்பட்ட விஷயங்கள் தற்காலச் சிற்றிதழாளர்களுக்கு வெகுவாகப் பயன்படக் கூடியவை என்று சிற்றிதழ்கள் நடத்துகிற அன்பர்கள் பாராட்டி எழுதினார்கள்.

பொள்ளாச்சி நசன் பின்னர், தமிழ்வழிக் கல்விப் பயிற்சியில் தீவிர ஈடுபாடு கொண்டு உழைக்கத் தொடங்கினார். அதனால் சிற்றிதழ்ச் செய்தி தானாகவே நின்று விட்டது. எனினும் நசன் சிற்றிதழ்களைச் சேகரித்துப் பாதுகாப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறார், இதுவரை இரண்டாயிரத்துக்கும் அதிகமான சிற்றிதழ்களை அவர் சேகரித்திருக்கிறார். அவற்றை வகைப்படுத்தி, அவற்றில் இடம் பெற்றுள்ள விஷயங்களைப் பட்டியலிட்டு, அட்டவணைகள் தயாரித்து, ஆய்வு ரீதியில் அவர் பெரிதும் உழைத்துள்ளார். இந்தப் பணிக்கென்றே தம்மைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டுள்ள நசன் தமது காலத்தையும் பணத்தையும் உழைப்பாற்றலையும் ஆர்வத்தோடு ஈடுபடுத்தி வாழ்கிறார். அதனால் தமக்குத் திருமணம் வேண்டாம் என்ற உறுதியும் பூண்டிருக்கிறார்.

சிவகாசி மாநாட்டில் காட்சிப்படுத்தப்பட்ட சிற்றிதழ்கள் பரிசீலனை செய்யப்பெற்று, தகுதி அடிப்படையில் மூன்று இதழ்கள் தேர்வுசெய்யப்பட்டன, அவற்றுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிற்றிதழ்கள் நடத்துவதில் உள்ள சிரமங்கள் மாநாட்டில் சுட்டிக்காட்டப் பெற்றன, அவற்றை நீக்குவதற்காகவும், உரிமைகளை வலியுறுத்தி அரசாங்கத்திடமிருந்து உதவிகள் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வதற்காகவும் சிற்றிதழாளர்கள் சங்கம் அமைக்கப்பட்டது. குன்றம் மூ. இராமரத்னம் அதன் தலைவரானார்.

அவர் உற்சாகமாகக் காலம், பணம், உழைப்பு முதலியவற்றை ஈடுபடுத்தி, சிற்றிதழ்களின் நலனுக்காகவும் வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபட்டு

வருகிறார். ஆண்டு தோறும், வெவ்வேறு ஊர்களில் தமிழ்நாடு சிற்றிதழாளர்கள் சங்கம் ஆண்டுவிழா சிறப்பான முறையில் நடத்தப்படுகிறது. உரிய முறையில் மூன்று இதழ்கள் தேர்வு செய்யப்பட்டு, முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என்று மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. தொடர்ந்து இராமரத்னமே சங்கத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்து, சீரிய முறையில் தொண்டாற்றிவருகிறார்.

குன்றம் இராமரத்னம் தரமான பத்திரிகையாகத் தாராமதி இதழை நடத்தினார். நீண்ட காலம் நடந்த அச்சிற்றிதழ் சில காரணங்களால் நிறுத்தப்பட்டது. அவர் தொடர்ந்து 'முங்காரி' என்ற இதழை நடத்துகிறார்.

'எழுத்தாளர் உறவு' அமைப்பை உயிர்ப்பிக்க குன்றம் இராமரத்னம் எவ்வளவோ முயன்றும் பயனில்லாது போயிற்று. 1989இல் கோயம்புத்தூரில் அவரது முயற்சியால் உறவுக் கூட்டம் நடைபெற்றது. புதிதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டன. பின்னர் எழுந்து வளர்ந்த கருத்து வேற்றுமைகளினால் எழுத்தாளர் உறவு பாதிக்கப்பட்டது. அந்த அமைப்பு, செயலற்றுப் போனது.

36

செல்வர்கள் மிக அதிகமாகவே இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்குமே கொடுக்கும் மனம் இருக்கிறது என்று சொல்ல முடியாது.

பணம் படைத்த பலர் மேலும் மேலும் பணத்தைப் பெருக்குவதிலேயே நாட்டம் உடையவர்களாக இருக்கிறார்கள். பணத்தை லாபம் தரக்கூடிய பலவழிகளில் ஈடுபடுத்தி, பேங்க் சேமிப்பை அதிகப்படுத்துவதில் ஆர்வம் கொண்டவர்களே அதிகம் காணப்படுகிறார்கள்.

அனேகர் 'ஆன்மீகலாபம்' தேடும் எண்ணத்தோடு சாமியார்களுக்கும் கோயில்களுக்கும் வாரி வழங்குகிறார்கள். அவர்கள் தேவைப்படுகிற ஏழை எளியவர்களுக்கோ, சமுதாய நலப் பணிகளுக்கோ தாராளமாகப் பணம் வழங்க மனம் கொள்வதில்லை.

சில பணக்காரர்கள் 'ஆண்டவன் எங்களுக்கு அள்ளி அள்ளி வழங்குகிறார். நாங்கள் அவற்றில் சிறிதளவு நுள்ளி நுள்ளி நற்பணிகளுக்குத் தருகிறோம்' என்று கணக்குப் பார்த்து ஓரளவு பொதுப்பணிகளுக்கு வழங்க முன்வருகிறார்கள்.

கொடுப்பவர்களிலும் பலர் தங்களுக்கு எவ்வளவு புகழ்வெளிச்சம் கிட்டும் என்று எதிர்பார்த்து, விளம்பரமோகத்துடனேயே செலவு பண்ணுகிறார்கள்.

சமூகப் பணி, சமயத் திருப்பணி போன்றவற்றுக்குத் தாராளமாகக் கொடுக்கிற செல்வர்கள் கூட மொழி இலக்கியம் சம்பந்தமாகப் பணம் செலவு பண்ணத் தயாராக இருப்பதில்லை.

தற்காலத்திய நிலைமையில் மாறுதல்கள் ஏற்பட்டுவருகிறது. அறக்கட்டளை அமைத்துத் தமிழ்ப்பணி, இலக்கியப்பணிக்கு என்று தாராளமாக நிதி வழங்கும் மனம் செல்வர்களிடையே அதிகரித்து வருகிறது.

கொடுக்கும் மனம்பற்றிப் பழந்தமிழ்ச் செய்யுள் ஒன்று அழகாக விவரித்திருக்கிறது. 'சொல்லாமலே செய்வர் பெரியோர் - சொல்லிச் செய்வார் சிறியர் - சொல்லியும் செய்யார் கயவரே' என்று கூறும் அப்பாடல் உவமையாக 'பலா, மா, பாதிரி' யைக் காட்டுகிறது.

அதையே பூவாதே காய்க்கும் மரமும் உள, பூத்துக் காய்க்கும் மரங்களும் உண்டு; பூத்தும் காய்க்காத மரங்களும் இருக்கின்றன என்று கூறி, மனிதர்கள் தன்மையைக் சுட்டுகிறது வேறொரு பாடல்.

பலாமரம் வெளிப்படையாகப் பூக்களைக் காட்சிப்படுத்துவதில்லை. ஆயினும் பயனுள்ள - சுவை மிகுந்த - பழங்களைக் காய்த்து விளங்குகிறது. மா போன்ற மரங்கள். நாங்கள் காய்த்துக் குலுங்கப் போகிறோம் என்று விளம்பரப்படுத்துவது போல் பூக்களை அதிகம் அதிகமாக மலர்விக்கின்றன; அப்புறம் காய்களை உண்டாக்குகின்றன. பாதிரி மரம் பளீர்ச் சிரிப்புபோல் பூக்கள் தாங்கி மினுக்குகின்றன. ஆயினும் அவை காய்ப்பதில்லை. இவை மனிதரின் கொடைத்தன்மைக்கு உவமைகளாக்கப்பட்டிருக்கின்றன.

எக்காலத்திலும் இம் மூன்றுவகை மனம் பெற்றவர்கள் மனிதரிடையே இருக்கத்தான் செய்வர்.

கொடுக்கும் மனம் பெற்றவர்கள் பிறருக்குத் தெரியாமல் தகுதியானவர்களுக்குப் பலவகை உதவிகளும் செய்கிறார்கள். நன்றியுரை, பாராட்டு, புகழ் வெளிச்சம் என்று எதையும் எதிர்பார்க்காமல் அவர்கள் உதவுகிறார்கள். கொடுப்பதில் அவர்கள் ஒரு மனநிறைவு - ஆத்மதிருப்தி பெறுகிறார்கள் என்று சொல்லலாம்.

செல்வர்கள்மட்டும்தான் இப்படிக் கொடுத்து மகிழும் மனமும் பண்பும் பெற்றிருக்கிறார்கள் என்றும் சொல்லுதற்கில்லை. வாழ்க்கையில் பல்வேறு தரத்தில் உள்ளவர்களிடையேகூட இத்தகைய பண்பாளர்கள் இருக்கிறார்கள்.

தாராளமாக அள்ளி வழங்கும் உயர் மனம் பெற்றுள்ள அபூர்வ மனிதர்களில் கோயம்புத்தூரில் வசிக்கும் ஈ.எஸ். தேவசிகாமணியும் ஒருவராவார்.

ஈ.எஸ். டி.யின் நல்லியல்புகள் பற்றி நண்பர் ஞானன் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் பேசி மகிழ்வார். எழுத்தாளர் செ. ஞானன் சிவகாசியில்

தபால் துறையில் பணிபுரிகிறவர். அவர் ஈ.எஸ். தேவசிகாமணியைத் தோழராய், தலைவராய், நல்லாசிரியனாய். நற்றுணையாய் ஏற்று வாழ்பவர். ஈ.எஸ்.டி.யும் தபால் துறையில் பெரும் பொறுப்புகள் ஏற்றுப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுக் கோவையில் வசித்துவருகிறார். அவரது பணிக் காலத்தில் தபால் துறையில் உள்ள பலருக்கும் பலவகைகளில் உதவிபுரிந்து வந்திருக்கிறார். இப்போதும், கொடுப்பது தெரியாமல் பலருக்கும் ஈத்துவக்கும் பண்பாளாராக வாழ்கிறார்.

ஈ.எஸ். தேவசிகாமணியை நான் முதல் முறையாக, சிவகாசியில்தான் சந்திக்க நேர்ந்தது. ஈ.எஸ்.டி. ஓர் எழுத்தாளரும் கூட. ஆனால் அவர் ஆங்கிலத்தில்தான் எழுதியுள்ளார். 1930கள் 40களில் சென்னையிலிருந்து 'மை மேகசின்' என்ற ஆங்கிலப் பத்திரிகை வந்து கொண்டிருந்தது. அதில் ஈ.எஸ்.டி. சுவாரசியமான கதைகள் பல எழுதியிருக்கிறார்.

அக் கதைகளில் சிலவற்றைத் தொகுத்து 'UNEXPECTED GUEST' என்ற புத்தகமாக உருவாக்கினார் ஞானன். ஈ.எஸ்.டி.க்குத் தமது அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தும் ஒரு கவுரவப் பணியாக ஞானன் அதைச் செய்தார்.

அத்துடன் ஈ..எஸ்.டி.யைச் சிறப்பித்துப் பெருமைப்படுத்தும் முறையில், அந்தப் புத்தக வெளியீட்டைச் சிவகாசியில் விழா நடத்தி நிறைவேற்றினார் ஞானன். அந்த விழா ஒரு திருமண வைபவம் போல் நடந்தது. 1990இல்.

அவ்விழாவில்தான் நான் ஈ.எஸ்.டி.யை நேரில் கண்டேன். அவ்விழா தனி வரலாற்றுச் சிறப்பு உடையதாகவும் ஆயிற்று. விழாவில் ஏற்புரை நிகழ்த்திய ஈ.எஸ்.டி. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் ஒரு பரிசுத் திட்டத்தை அறிவித்தார்.

ஆண்டு தோறும், அந்த வருடத்தில் வெளிவரும் சிறுகதை நூல்களைப் பரிசீலித்துத் தகுந்த நூல்களைத் தேர்வு செய்து, அவற்றின் ஆசிரியர்களுக்குப் பரிசு வழங்க முன்வந்தார் ஈ.எஸ்.டி. மறைந்த அவரது மனைவியின் பெயரால் அமைக்கப்படும் பரிசுத்திட்டம் அது. லில்லி தேவசிகாமணி நினைவுச் சிறுகதை இலக்கியப் பரிசுத்திட்டம் என்று அது பெயரிடப்பட்டது.

1990இல் வெளிவந்த சிறுகதைப் புத்தகங்கள் விலைக்கு வாங்கப்பட்டுப் பரிசீலிக்கப்பெற்றன. வ.க., தி.க.சி., ராஜம்கிருஷ்ணன். ஞானன், ஈ.எஸ்.டி. நடுவர்களாக இருந்து பரிசுகளுக்கு உரிய நூல்களைத் தேர்வு செய்தார்கள்.

முதலாவது பரிசளிப்பு விழா 1991இல் கோயம்புத்தூரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. எழுத்தாளர் மாநாடு போலவே அது சிறப்பாக அமைந்திருந்தது.

அதிலிருந்து பரிசளிப்பு ஆண்டுதோறும் நிகழ்கிறது. அந்த அந்த வருடம் வெளிவரும் சிறுகதைப் புத்தகங்களை அனுப்பிவைக்கும்படி பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படுகிறது. அப்படி வருகிற புத்தகங்களுக்கு

உரிய விலையை ஈ.எஸ்.டி அனுப்பிவிடுவார். வ.க., தி.க.சி., ராஜம் கிருஷ்ணன் மூவரும்தான் நடுவர்களாக இருந்து வருகிறார்கள்.

சில வருடங்கள் கோவையில் பரிசளிப்பு விழா ஒரு நாள் முழுவதும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. புத்தக வெளியீடு இலக்கியச் சொற்பொழிவுகள், பரிசளிப்பு எல்லாம் நடைபெறும். ஈ.எஸ்.டி.க்கு முதுமையும் நோய்களும் பாதிப்பு உண்டாக்கியதால், நாள் முழுவதும் இருந்து விழாவைக் கவனிக்க முடியாத நிலைமை வந்தது. எனவே, பரிசளிப்பு, மாலை நேர நிகழ்ச்சியாக்கப்பட்டது.

பின்னர் செயலாளர் ஞானனுக்கும் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அதனால் விழாவுக்கான முன்னேற்பாடுகளைக் கவனித்து. விழாவைக் குறையின்றி நடத்த இயலவில்லை. எனவே, பரிசுகள் உண்டு, விழா கிடையாது என்று தீர்மானிக்க வேண்டியதாயிற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை நூல்களுக்கான பரிசுகள் உரிய ஆசிரியர்களுக்குப் 'பேங்க் டிராப்ட்' ஆக அனுப்பிவைக்கப்பட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

ஞானன் முயற்சியிலும் உழைப்பிலும் சில உயரிய நூல்கள் வெளிவருவதற்கும் ஈ.எஸ்.டி. துணைபுரிந்திருக்கிறார். மூத்த எழுத்தாளர்கள் பலபேருடைய சிறுகதைகள் தொகுக்கப்பட்டுத் 'தலை வாழை' என்ற நூலாக வெளியிடப்பட்டது. 'வாழ்வும் இலக்கியமும்' பற்றிச் சில முக்கிய எழுத்தாளர்களிடம் கட்டுரைகள் பெற்று, அவை நூலாகத் தொகுக்கப்பட்டுப் பிரசுரமானது. தமிழ்நாட்டுப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டு, ஒரு பெரிய புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டது. 'நந்தவனத் தென்றல்' என்பது அதன் பெயர்.

ஈ.எஸ்.டியின் வாழ்க்கை வரலாற்றை, 'அனிச்சை இதயம்' என்ற பெயரில் ஞானன் எழுதி, அதுவும் ஒரு வருடம் வெளியிடப்பட்டது. பின்னர். இத்திட்டத்தின் அரும்பெரும் முயற்சியாக 'தத்துவ தரிசனங்கள்' என்ற நூல் பிரசுரம் பெற்றது. இந்தியத் தத்துவங்களை விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பு இது.

வள்ளல் மனம் பெற்ற ஈ.எஸ். தேவசிகாமணி 2001 பிப்ரவரி இறுதியில் இறந்துபோனார். இலக்கிய உலகத்திற்கு இது ஒரு பேரிழப்பேயாகும்.

37

கிறிஸ்தவ அமைப்புகளும் கிறிஸ்தவ அறிஞர்களும் தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் கணிசமான பங்காற்றியிருக்கிறார்கள். இப்போதும் ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வகையில் சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் குறிப்பிடத்தகுந்த விதத்தில் தமிழ்ப்பணி புரிந்துள்ளது.

நூற்றைம்பது வருடங்களுக்கும் மேலாகவே பதிப்புத் துறையில் ஈடுபட்டிருக்கும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் - கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி (CLS) கிறிஸ்தவ இலக்கியங்களையும் கிறிஸ்தவ எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் புத்தகங்களாக வெளியிடுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பினும் பொதுவான தமிழ் இலக்கிய நூல்களையும் வெளியிட்டு வந்திருக்கிறது. இப்போதும் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. உலக இலக்கியங்களின் தமிழ் மொழிபெயர்ப்புகளைப் பிரசுரம் செய்துள்ளது. பெருங்குளம் அ. மாதவய்யாவின் ஆங்கில நாவல்களையும் அவற்றின் தமிழாக்கங்களையும் பிரசுரம் செய்திருக்கிறது. கிறிஸ்தவரல்லாத எழுத்தாளர்களின் படைப்புகளையும் விரும்பி ஏற்று வெளியிட்டுள்ளது.

இதற்கெல்லாம் அந்நிறுவனத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்புரிகிற அறிஞர்களின் பரந்த நோக்கும் தாராள மனப்பண்புமே அடிப்படைக்காரணங்களாகும். தற்போது சி.எல்.எஸ்.சின் பொதுச்செயலாளராகக் கடமையாற்றும் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் ஆழ்ந்த அன்பும் மனிதநேயமும் விசாலநோக்கும் முற்போக்குச் சிந்தனைகளும் பலருக்கும் உதவக் கூடிய மனநிலையும் திறமையாளர்களை மதிக்கும் உயர்பண்பும் மதநல்லிணக்க உணர்வும் கொண்டவராவார். அவருடைய பரந்த உள்ளம், ஒரு முஸ்லீம் எழுத்தாளரின் சிறுகதைகளை ஏற்று கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியீடாகக் கொண்டுவர இடமளித்திருக்கிறது. திறமையான சிறுகதை எழுத்தாளரான களந்தை பீர்முகம்மதுவின் படைப்புகளை டாக்டர் தயா ஏற்று நல்லதொரு தொகுப்பாகப் பிரசுரித்திருக்கிறார்.

அசோகமித்திரன் நாவல்கள், சிட்டி பெ. கோ. சுந்தர ராஜனும் சிவபாத சுந்தரமும் இணைந்து எழுதிய தமிழ் நாவல்: நூறாண்டு வளர்ச்சியும் வரலாறும் மற்றும் தமிழ்ச்சிறுகதைகளின் வரலாற்று ஆய்வு, சு.சமுத்திரம் படைப்புகள், புலவர் கோவேந்தன் எழுத்துக்கள், வ.க. சிறுகதைகள், குறுநாவல்கள். தி.க.சி.யின் திறனாய்வுக் கட்டுரைகள், விந்தன் கட்டுரைகள் என்று வெளியிட்டு, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் பரந்த மனத்துடன் தமிழுக்குப் புரிந்துள்ள இலக்கியப் பணி பெரிதாகும்.

அனைத்தினும் மேலாகப் போற்றத் தகுந்த விதத்தில் மற்றொரு நற்பணியையும் சி.எல்.எஸ். செய்து கொண்டிருக்கிறது. ஆண்டுதோறும் மூன்று நாள் கருத்தரங்கு நடத்தி, தமிழ் இலக்கியப் படைப்புகளை ஆய்வு செய்து, விமர்சனக் கலையை வளர்த்து வருகிறது அது. முப்பது வருடங்களாக இப் பணியை அது தொடர்ந்து செய்கிறது.

முப்பது வருடங்களுக்கு முன்பு, கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த திரு. ராசதுரை நண்பர் வட்டம் கருத்தரங்கைத் துவக்கிவைத்தார். ஒரிரு வருடங்களில் அவர் மறைந்து விடவும் அவரைத்

தொடர்ந்து பதவி ஏற்ற டேவிட் பாக்கியமுத்து கருத்தரங்குகள் கூட்டுவதையும் சிறப்பான முறையில் நிறைவேற்றினார்.

பாக்கியமுத்து நல்ல எழுத்தாளரும் ஆவார். நாடகம், சிறுகதை, வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள் என்று குறிப்பிடத் தகுந்த அளவில் அவர் எழுதியிருக்கிறார். அவர் மனைவி சரோஜினி பாக்கியமுத்துவும் திறமையான எழுத்தாளர்; நல்ல மொழிபெயர்ப்பாளர். மாதவய்யா நாவல்களை அவர் தமிழாக்கியுள்ளார். சாகித்ய அகாதமிக்காக அவர் சில நாவல்களை மொழிபெயர்த்திருக்கிறார். அவர் எழுதிய விவிலியமும் தமிழும் தனிச் சிறப்புடைய நூல் ஆகும்.

பாக்கியமுத்து பதவி வகித்த காலகட்டத்தில், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் - நண்பர் வட்டம் கருத்தரங்கு என்ற தலைப்பிலேயே கூட்டங்கள் நடத்தப்பெற்றன. பின்னர் அவர் அந்த நிறுவனத்திலிருந்து விலகி, வேறு நிறுவனத்துக்குப் பணிபுரியச் சென்றுவிட்டார். அங்குப் பதவி வகித்த பிறகு அவர் சொந்த ஊரான பாளையங்கோட்டை சேர்ந்தார். 'நண்பர் வட்டம்' என்ற பெயரில் ஒரு சிற்றிதழை வெளியிட்டார். தரமான அச்சிற்றிதழ் பல வருடகாலம் நடந்தது; இயன்ற அளவு இலக்கியப் பணி ஆற்றியது.

'நண்பர் வட்டம்' என்ற பெயருக்குப் பாக்கியமுத்து உரிமை கொண்டாடியதால் அவருக்குப் பிறகு பொறுப்பேற்ற டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் கருத்தரங்கிற்குப் பெயர் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் - இலக்கிய நண்பர்கள் வட்டம் கருத்தரங்கு என்று குறிக்கப்படலாயிற்று.

இக் கருத்தரங்குகளில் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் எழுத்தாளர்கள் வந்து கலந்து கொள்வர். கிறிஸ்தவ எழுத்தாளர்களோடு மற்ற எழுத்தாளர்களும் வந்து கட்டுரைகள் வாசிப்பது. விவாதங்களில் ஈடுபடுவது என்று உற்சாகமாகப் பங்கேற்பார்கள். கருத்தரங்குப் பொருள்கள் முற்போக்குச் சிந்தனைப் பார்வை கொண்டனவாகவே இருக்கும். தமிழ் இலக்கியத்தில் விடுதலை உணர்வு, தமிழ் இலக்கியத்தில் தொழிலாளர் பிரச்சினைகள், மனித மாண்பு, மனிதநேயமும் மதநல்லிணக்கமும், பெண் உரிமைப் பிரச்சினை; சாதி ஒழிப்பு, பண்பாட்டுச் சிதைவுகளுக்கு எதிர்ப்புகள் - இப்படி ஆண்டுக்கு ஒரு பிரச்சினை அடிப்படையில் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, நாடகம் முதலியன ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டு நிறைவு பெறும் கட்டத்தில் இருவருடங்கள் கருத்தரங்கில் இருபதாம் நூற்றாண்டில் தடம் பதித்த படைப்பாளர்கள் என்ற நோக்கில் ஆய்வுக்கட்டுரைகள் தயாரிக்கப்பெற்று வாசிக்கப்பட்டன.

சி.எல்.எஸ் நண்பர் வட்டக் கருத்தரங்குகளின் ஆய்வுக் கட்டுரைகள் வருடம் தோறும் புத்தகமாக்கப்பட்டு அடுத்த ஆண்டுக் கருத்தரங்கில்

வெளியிடப்படுவதும் வழக்கமாக நடைபெறுகிறது. இத்தொகுப்புகள் நல்ல விமர்சன நூல்களாகவும் ஆய்வு மாணவர்களுக்குப் பெரிதும் உதவக் கூடிய துணைப் புத்தகங்களாகவும் அமைந்து விளங்கும் தன்மையன.

இக் கருத்தரங்குகளில் பல வருடங்கள் நான் கலந்து கொண்டு கட்டுரை படித்திருக்கிறேன். சமீப காலத்தில் சில நாளில் நிறைவுரையும் வழங்கும் பொறுப்பு எனக்கு வந்து சேர்ந்தது. டாக்டர் தயா என்மீது கொண்டுள்ள அன்பும் மதிப்புமே இதற்குக் காரணம் ஆகும்.

கருத்தரங்குகள் வாயிலாக இலக்கிய ஆய்வுக்கு உதவிக் கொண்டிருக்கும் இன்னொரு அமைப்பு பற்றியும் கூறவேண்டும். மொழி வளர்ச்சிக்குத் தேவையான இதழியல் ஆய்வுக்கு இந்த அமைப்பு மிக முக்கியப் பங்காற்றிக் கொண்டிருக்கிறது. டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வுமையம் தான் அது.

தமிழில் இதழியல் வளமாக, வலிமை பொருந்திய ஒரு சக்தியாக உருவாகி வளர்ந்துவந்திருக்கிறது.

நாட்டின் விடுதலைப் போராட்டத்துக்கு இதழ்கள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன. சமூக வளர்ச்சிக்கும் தனி மனித மேம்பாட்டுக்கும் மொழி வளம் பெறவும் இலக்கியம் வளர்வதற்கும் நாட்டின் அரசியல், பொருளாதார, வணிக, அறிவியல், ஆன்மிகத் துறைகளில் மாற்றங்களும் முன்னேற்றமும் ஏற்படவும் நாட்டு மக்கள் விழிப்பு உணர்வு பெறுவதற்கும் பத்திரிகைகள் பக்கபலமாக நின்று செயல்புரிந்துள்ளன-புரிகின்றன.

தமிழ் இதழியல் வரலாற்றையும் வளர்ச்சியையும் சாதனைகளையும் கவனத்துக்குக் கொண்டுவரும் விதத்தில் ஆய்வு முயற்சிகளும் வரலாற்று ரீதியான பதிவுகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அவை அனைத்தினும் மேலானதும் மிக முக்கியமானதும் மிகுந்த பயனுள்ளதுமான பெரும் முயற்சி என்று ஒன்றைக் குறிப்பிட வேண்டும். சென்னைப் பல்கலைக்கழகம், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் ஆகியவை இணைந்து நடத்திய 'இதழியல் கருத்தரங்குகள்' எனும் திட்டமிட்ட செயல்பாடே அது.

திறமையாகத் திட்டம் வகுக்கப்பட்டு, சீரான முறையில் 1997,1998,1999 ஆம் வருடங்களில் இக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் குறித்து விரிவான கருத்தரங்குகள் நிகழ்த்தப்பட்டன. இத்தலைப்பில் 4 கருத்தரங்குகள், வெவ்வேறு காலத்தில் கூட்டப் பெற்றுள்ளன.

திராவிட இயக்க இதழ்கள் பற்றி 2 கருத்தரங்குகள், மற்றும் தமிழ் ஆய்வு இதழ்கள், பொதுவுடைமை இயக்க இதழ்கள், மகளிர் இதழ்கள், தமிழ்

இலக்கிய இதழ்கள் குறித்துத் தனித்தனிக் கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஒவ்வொரு கருத்தரங்கும் இரண்டு நாட்கள் நிகழ்ந்தன. ஒவ்வொரு நாளும் முற்பகலிலும் பிற்பகலிலுமாக ஐந்து அமர்வுகள். முதல் நாளில் தொடக்க விழாவும் பின்னர் இறுதியில் நிறைவு விழாவும் சிறப்பாக அமைந்திருந்தன.

தொடக்க விழாவின் போதும் நிறைவு விழாவிலும் முக்கியமான அறிஞர்கள் உரையாற்றுவது முறையாக நிகழ்ந்தது. தலைமை உரை, தொடக்க உரை, சிறப்புரை, வாழ்த்துரை, முடிவில் நிறைவுரை என அறிஞர்கள் ஆற்றிய உரைகள் அனுபவம், ஆய்வுச் சிந்தனை ஆகியவை அமைந்து நன்கு வழிகாட்டும் தன்மை பெற்றிருந்தன.

ஒவ்வோர் அமர்விலும் தகுதிவாய்ந்த-வரலாற்றுப் பெருமை உடைய-சாதனை புரிந்த-இதழியல் துறையில் தனக்கெனத் தனி இடம் அமைத்துக்கொண்டுள்ள பல இதழ்கள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. தக்கவர்கள், ஆழ்ந்தமுறையில் அக்கட்டுரைகளைத் தயாரித்திருந்தார்கள். கருத்தரங்கில் கலந்துகொண்ட பலருக்கும் பயனுள்ள கருத்துக்களையும் அரிய தகவல்களையும் அக் கட்டுரைகள் வழங்கின. ஆய்வு மாணவர்கள் இவ்அமர்வுகளில் கலந்து கொண்டதன் மூலம் பெரும் பயன் பெற்றிருக்கக் கூடும்.

கால வெள்ளத்தில் மறைந்துவிட்ட பல சிறந்த இதழ்கள் குறித்தும், அபூர்வமாகவே கிடைக்கக்கூடிய சில இதழ்கள் பற்றியும் மிகவும் சிரமப்பட்டு அக்கறையோடு அரிதின் முயன்று நல்ல தகவல்களையும் இதழ்களின் சிறப்புத் தன்மைகளையும் தேடிக்கண்டு நல்லமுறையில் கட்டுரை தயாரித்திருந்தார்கள் கருத்தரங்கில் கட்டுரை படித்தவர்கள்.

ஒவ்வோர் அமர்வின் முடிவிலும் கட்டுரையாளர்கள் வாசித்த கட்டுரைகள் பற்றி அறிஞர் ஒருவர் கருத்துரை வழங்கிய ஏற்பாடு பயனுள்ளதாக இருந்தது. படிக்கப்பட்ட நான்கு அல்லது ஐந்து கட்டுரைகளை மதிப்பிட்டு, கருத்துக்களைத் தொகுத்து, விமர்சன ரீதியில் கருத்துரை வழங்கப்பட்டது கேட்போரின் சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது.

ஒவ்வொரு கருத்தரங்கின் அமர்வுகளிலும் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் தனித்தனித் தொகுப்புகளாக வெளியிடப் பெறுகின்றன. இது மிகவும் பயனுள்ள ஏற்பாடு. ஒவ்வொரு தொகுதியும் தமிழ் இதழியல் குறித்த நல்ல ஆவணமாக விளங்கும் தன்மை உடையது. தமிழ் இதழியலில் ஆர்வம் உடையவர்கள் இதழியல் வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும் குறிப்பிட்ட இதழின் சிறப்பையும் தன்மைகளையும்

சாதனைகளையும் புரிந்து கொள்ளவும் வருங்கால ஆய்வாளர்களுக்கு நற்றுணையாகவும் இத்தொகுப்புகள் நன்கு உதவும்.

இக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது ஒரு நற்பேறு ஆகும்; என்றும் நினைவில் நிற்கும் இனிமையான அனுபவமும் கூட.

ஆய்வு மையத்தின் இயக்குநர் பேராசிரியர் மா.ரா.அரசுவின் செயலூக்கமும் உற்சாகமான ஈடுபாடும் சோம்பலின்றி அலைந்துதிரிந்து ஏற்பாடுகளைக் கவனிக்கிற இயல்பும் கருத்தரங்கங்களின் வெற்றிக்கு ஆதாரமாக அமைகின்றன என்று கூறலாம்.

ஆரவாரமான விளம்பரங்கள் எதுவுமின்றி அமைதியான தன்மையில் உயரிய பயனுள்ள பணிகள் இவ்வாறு நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

நெய்வேலியில் செயலாற்றிக் கொண்டிருக்கும் 'வேர்கள் இலக்கிய இயக்கம்' என்பதையும் மற்றொரு சான்றாகக் குறிப்பிடலாம்.

பல்சுவை இலக்கிய இதழ்கள் என்றும் ஜனரஞ்சகப் பத்திரிகைகள் என்றும் கூறிக் கொண்டு, வசீகரமான அட்டை அமைப்புகளோடும் கவர்ச்சிப் படங்களுடனும் கிசுகிசுச் செய்திகள் கிளுகிளுப்பூட்டும் கதைகள் முதலியவற்றோடும் படையெடுத்து மக்களின் ரசனையையும் சமுதாயத்தின் கலாச்சாரங்களையும் நாட்டின் பண்பாட்டையும் சிதைத்துச் சீரழித்துக் கொண்டிருக்கின்றன வணிகநோக்குப் பத்திரிகைகள். பணபலமும் அசுரவேகத்தில் உற்பத்தி செய்து குவிக்கிற இயந்திரங்களின் பலமும் கொண்டு பூதாகரமாக வளர்ந்து விட்ட இந்த ரக நச்சுச் சக்திகளை எதிர்த்துப் போராடி முறியடிக்க இயலாது நல்ல மனமும் நல்ல நோக்கங்களும் உடையவர்களால்.

இருப்பினும் நம்மால் இயன்ற அளவு எதிர்ப்பைக் காட்ட வேண்டும். அத்துடன் நல் இலக்கியங்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். இத்தீய சக்திகளுக்கு எதிராகப் போராடத் துணிகின்ற சிறுபத்திரிகைகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். ஒத்த மனமுடைய இலக்கிய ரசிகர்களை ஒருங்குசேர்க்க வேண்டும். அதற்காக அவ்வப்போது புத்தகக் காட்சிகள், சொற்பொழிவு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யவேண்டும். இந்தவிதமான சீரிய நோக்கங்களோடும் இலட்சியத் துடிப்போடும் நெய்வேலியில் வேர்கள் இலக்கிய இயக்கம் தொடங்கப்பட்டது.

இலக்கிய ஈடுபாடும் தேர்ந்த ரசனையும் கொண்டுள்ள இளைஞர் மு. இராமலிங்கம் செயலாளராக இருந்து இவ் அமைப்பைக் கட்டிக் காத்து வளர்த்து வருகிறார். தரமான இலக்கியச் சிற்றிதழ்களை விற்பனை செய்யத் துணைபுரிவதுடன், தகுதி வாய்ந்த சிற்றிதழ்களுக்குப் பொருளுதவியும் செய்திருக்கிறது வேர்கள் இயக்கம். நல்ல புத்தகங்களை விற்றுக் கொடுப்பதுடன்

இந்த இயக்கமே நல்ல நூல்களை வெளியிடவும் முற்படுகிறது. ரஷ்ய நாவலாசிரியர்களையும், லத்தீன் அமெரிக்க இலக்கியப் படைப்பாளிகளையும் தமிழ் வாசகர்களுக்கு அறியச் செய்வதில் ஆர்வமாக உழைத்திருக்கிறது.

அத்துடன் 'வேர்கள்' என்ற காலாண்டிதழையும் இவ் இயக்கம் வெளியிடுகிறது. நல்ல படைப்புகள் எந்த மொழியில் வெளிவந்திருப்பினும் அவற்றைத் தமிழில் கொண்டு வரவேண்டும் என்ற ஆசையோடு. சீரிய மொழிபெயர்ப்புகளை இதழ்தோறும் பிரசுரிக்கிறது. புதுமையான சோதனை ரீதியான கதைகள், கவிதைகளையும் வேர்கள் வெளியிட்டு வருகிறது.

வேர்கள் இலக்கிய இயக்கம் வெளியீடாக, வல்லிக் கண்ணன் கடிதங்கள் என்ற தொகுப்பு நூலை மிகுந்த சிரமங்களுடன் வருடக் கணக்கில் உழைத்துக் கடிதங்கள் சேகரம் செய்து மு. இராமலிங்கம் பிரசுரித்துள்ளது ஒரு சாதனையாகும்.

38

கடித இலக்கியம் என்பதை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

ஒன்று, கடித வடிவத்தைப் பயன்படுத்தி உயர்ந்த கொள்கைகள், சிந்தனைகள், ஒருவர் சொல்ல விரும்புகிற விஷயங்களைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தல் போன்ற வகை. பண்டித ஜவகர்லால் நேரு தன் மகள் இந்திரா பிரியதர்சனிக்கு எழுதிய கடிதங்கள் இவ்வகைப்பட்டதாகும்.

உலக வரலாற்றையும் இந்தியாவின் சிறப்புகளையும் வரலாற்றுப் பெருமைகளையும் நேருஜி கடித உருவத்தில் எழுதி மகளுக்கு அனுப்பினார். அவை பின்னர் நூலாக வந்தன. அவற்றின் தாக்கத்தால், தமிழ் நாட்டின் காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி தம் மகளுக்கு அம் மாதிரிக் கடிதங்கள் எழுதி, புத்தகமாக வெளியிட்டார். மு.வ. எனப் பெயர் பெற்றிருந்த மு.வரதராசனார் உயர்ந்த சிந்தனைகளையும் நற்கருத்துக்களையும் வாசகர்கள் மனசில் பதியவைக்கும் முறையில் கடிதங்களாக எழுதினார். திராவிட இயக்கத் தலைவர் சி.என் அண்ணாதுரை - அறிஞர் அண்ணா - அவர் சொல்ல விரும்பிய எண்ணங்கள் பலவற்றையும் தம்பிக்கு என்று கடிதங்களாகத் தீட்டினார். அவரைப் பின்பற்றிக் கலைஞர் கருணாநிதியும் அழகிய தமிழ் Sû P« p 'தம்பி'க்கு மிக அதிகமாகவே கருத்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

இவை எல்லாம் 'கடித இலக்கியம்' எனக் கருதப்பட்ட போதிலும் உண்மையான கடிதங்கள் ஆகா. கடிதக் கட்டுரைகளேயாகும் அவை. கட்டுரையாக எழுதப்பட் வேண்டிய கருத்துக்களை, நேரடியாக வாசகர் மனசில் பதியவைப்பதற்காக, நேரே பேசுவது போல் கடிதங்களாக எழுதும் முறை இது.

மறைமலை அடிகள், கடிதங்களாகவே ஒரு நாவலைப் படைத்திருக்கிறார். 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்ற பெயருடைய நாவல் அது.

சிலர் தங்கள் கடிதங்கள் இலக்கியத் தகுதி பெறவேண்டும் என்ற நோக்கத்துடன், பலருக்கும் எழுதுகிறபோது, அக்கறை எடுத்துக் கடிதங்களை வரைவார்கள். போதனைகள், பொன்மொழிகள், அறிஞர்களின் சிந்தனைகள், திருக்குறள் மேற்கோள் எல்லாம் கலந்து கடிதம் எழுதுவார்கள். அத்தகையவை படித்து மெச்சப்படுவதற்காக எழுதப்பட்ட செயற்கைக் கடிதங்களாகத்தான் இருக்கும். உயிர்ப்பும் உணர்வும் எழுதுகிறவரின் சுய ஆளுமையும் வெளிப்படுகிற இயல்பான எழுத்துக்களாக இரா.

கடித இலக்கியம் என்பதன் இரண்டாவது வகை இயல்பாகப் பல விஷயங்கள் பற்றியும் நேரே இருந்து உரையாடுவது போல் இருக்கும். எப்பொருள் குறித்தும் மனம் திறந்து பேசப்படுகிற தன்மையில் இருக்கும். வலிந்து செய்யப்படுவன அல்ல. அனுபவமும் அன்பும் தானாகவே எழுத்தில் இடம் பெறுகிற இயல்பான பதிவுகளே கடிதங்களில் இலக்கியத் தன்மை உடையனவாக மதிக்கப்படும்.

ரசிகமணி என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்த டி.கே. சிதம்பரநாத முதலியார் அவ்விதமான கடிதங்களை வாழ்நாள் முழுதும் எழுதிக் கொண்டிருந்தார். டி.கே.சி. யின் அனுபவ ஞானத்தை, ரசனையை, வாழ்க்கையில் அவருக்கு இருந்த ஈடுபாட்டை அக்கடிதங்கள் புலப்படுத்துகின்றன. அவை தொகுப்பு நூல்களாக வெளிவந்து ரசிகர்களுக்கு இனியவிருந்து ஆயின.

நண்பர்களுக்கும் அறிஞர்களுக்கும் குடும்பத்தலைவியருக்கும் - அவர் அன்பும் நட்பும் கொண்டிருந்த பலருக்கும் - எழுதிய கடிதங்கள் ரசிகமணி டி.கே.சியின் கடிதங்கள் என்ற புத்தகமாகப் பிரசுரம் பெற்றது. டி.கே.சி.யின் நண்பரும் ரசிகருமான பாஸ்கரத் தொண்டமான் தொகுத்தளித்த புத்தகம் அது.

ரசிகமணியின் மற்றொரு ரசிகரும் நண்பருமான நீதிபதி எஸ்.மகராஜன் அவரது சகோதரி வேலம்மாளுக்கு டி.கே.சி. எழுதிய கடிதங்களைத் தொகுத்து வெளியிட்டார். 'ரசிகமணி டி.கே.சி. கடிதங்கள் - வேலம்மாளுக்கு எழுதியவை' என்ற பெரிய புத்தகம் அது.

டி.கே.சி.யின் கடிதங்கள் வாழ்க்கையை, மனிதர்களை, உலக இனிமைகளை, இசை, கலை, கவிதை முதலிய பல்வேறு விஷயங்களைப் பற்றியும் சுவாரசியமான எண்ணங்களைக் கூறும் எழுத்துக்களாகும். ஒரு ரசஞ்ஞானியின் அனுபவ ஞான வெளிப்பாடுகள் அவை.

தமிழில் வெளிவந்துள்ள கடிதத் தொகுப்புகளில் ஆயன் கடிதங்கள் என்பதும் தனித்தன்மை கொண்டதாகும்.

ஆயன் என்பவர் ஒரு சாதாரண கிராமவாசி, ஓவியத்திறமை உடையவர். கைத்தொழில் செய்து வாழ்க்கை நடத்துகிறவர். நல்ல ரசிகர். அவர் தாம் பார்த்தவை. கேட்டவை, ரசித்த காட்சி இனிமைகள், பயண அனுபவங்கள் முதலியவற்றை ஒரு நண்பருக்குக் கடிதங்களில் எழுதித் தெரியப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தாம் பெற்ற இன்பத்தை ரசிக்கத் தெரிந்த பலரும் பெற்று மகிழட்டுமே என்ற நல்ல எண்ணத்தோடு அந்த நண்பர் 'ஆயன் கடிதங்கள்' என்று அவற்றைத் தொகுத்து வெளியிட்டார். ரசம் நிறைந்த புத்தகம் அது.

நான் வெளியூர்களில் வசிக்கத் தொடங்கிய வருடத்தில் இருந்தே - 1939 முதலே - நிறைய கடிதங்கள் எழுதுவதில் உற்சாகம் காணலானேன். என் அண்ணாவுக்கு எனது அனுபவங்கள் பற்றி எழுதினேன். பிறகு நண்பர்கள் பலருக்கும் எழுதினேன். எனக்குக் கடிதங்கள் எழுதுகிறவர்கள் யாராக இருப்பினும் அவர்களுக்குப் புத்தகங்கள் பற்றியும், பலவித எண்ணங்கள் குறித்தும் எழுதினேன்.

உங்கள் கடிதங்கள் சுவாரசியமாக இருக்கின்றன. ஊக்கமும் உற்சாகமும் தருகின்றன. எத்தனையோ விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள அவை உதவுகின்றன. உங்கள் கடிதங்களைப் பொக்கிஷம் போல் பாதுகாக்கிறோம் என்று அவ்வப்போது பலரும் எனக்கு எழுதினார்கள்.

பொதுவாக நேரில் பார்க்கிறபோது நான் அதிகமாகப் பேசுகிற இயல்பினன் இல்லை. ஆனால் கடிதங்களில் நான் அதிகம் பேசினேன். விரிவாக அனைத்து விஷயங்கள் பற்றியும் உரையாடினேன். பார்த்தவை. படித்த புத்தகங்கள், சந்தித்த மனிதர்கள். பயண அனுபவங்கள், கனவுகள். ஆசைகள், சிந்தனைகள் என்று மனம் விட்டுப் பேசினேன் கடிதங்களில் ஒவ்வொரு கடிதமும் பல்சுவை விருந்தாகவே மதிக்கப்பட்டது கடிதங்கள் கிடைக்கப்பெற்றவர்களால்.

சிலர் தங்களுடைய பிரச்சினைகளை, வாழ்க்கைக் கஷ்டங்களை எனக்கு எழுதினார்கள். நான் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் எழுதினேன். அவை நண்பர்களுக்கு இதம் அளித்தன. அதனால் என் கடிதங்களை அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்தார்கள். சூடாகவும் சுவையாகவும், நையாண்டிப் பண்போடும் என் எண்ணங்களைக் கடிதங்களில் எழுதினேன்.

வருடங்கள் ஆக ஆக, என் கடிதங்கள் தொகுக்கப்பட்டுப் புத்தகமாக வந்தால் நன்றாக இருக்கும் என்று பலரும் கருத்துத் தெரிவிக்கலானார்கள். அது சாத்தியப்படாத காரியம் என்று சொல்லிவந்தேன்.

1990களின் ஆரம்பத்தில் நண்பர் மு. நாகரத்தினம் இக் கருத்தை வலியுறுத்தி வந்தார். அவரே என் கடிதங்களைச் சேகரித்துத் தொகுத்து

வெளியிடும் முயற்சியில் ஈடுபடப் போவதாகவும், அதற்கு என் அனுமதி தேவை என்றும் கோரினார். அனுமதிக்கென்ன! தாராளமாகச் செய்யுங்கள் ஆனால் கடிதங்களைச் சேகரிப்பது மிகச் சிரமமாக இருக்கும் என்று தெரிவித்தேன்.

நான் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக. எண்ணற்ற பேருக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன். என் அண்ணாவுக்கு எழுதியதை விடத் தி.க. சிவசங்கரனுக்கு மிக அதிகமாக எழுதியுள்ளேன். ஆதவன் போன்ற இளைய நண்பர்களுக்கு ஏகப்பட்ட கடிதங்கள் எழுதியிருக்கிறேன். அவற்றை எல்லாம் சேகரிப்பது சாத்தியமில்லை என்று சொன்னேன்.

ஆதவன் புதுடில்லியில் நேஷனல் புக்ட்ரஸ்ட்டில் தமிழ்ப்பிரிவின் ஆசிரியராக வேலை பார்த்தார். திறமையான எழுத்தாளர். 'காகிதச் சிறகு' என்ற பெரிய நாவல் 'தீபம்' இதழில் தொடராக வந்து பின்னர் புத்தகமாகப் பிரசுரம் பெற்றது. சிறந்த சிறுகதைகளும் குறுநாவல்களும் எழுதியுள்ளார் அவர்.

ஆதவன் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சியைப் பூர்வீக ஊராகக் கொண்டவர். அவர் தாத்தா காலத்திலேயே புதுடில்லிக்குப் பணிநிமித்தம் சென்று விட்டார்கள். அவருடைய தந்தை டில்லியிலேயே வசித்தார். அம்மா தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆதவனின் அப்பாவுக்குக் கல்லிடைக்குறிச்சிமீது தனி அபிமானம் இருந்தது. அந்தப் பற்றுதல் ஆதவனுக்கும் இருந்தது. திருநெல்வேலி வட்டார மனிதர்கள். விஷயங்கள் பற்றி நான் எழுதியவற்றை அவர் மிகுதியும் ரசித்தார். புத்தகங்கள். எழுத்தாளர்கள் மற்றும் பல விஷயங்கள் பற்றியும் நான் எழுதுவதைப் படித்து மகிழ்ந்தார்.

'எனக்கு வருகிற கடிதங்களை எல்லாம். படித்து, பதில் எழுதியவுடன் நான் கிழித்துப் போட்டு விடுவேன். ஆனால் உங்கள் கடிதங்களை அப்படிக் கிழித்தெறிய மனம் வருவதில்லை. அவற்றைப் பத்திரமாகப் பாதுகாக்கிறேன். எப்போது எடுத்துத் திரும்பப் படித்தாலும் அவை மகிழ்ச்சி தருகின்றன' என்று ஆதவன் ஒருசமயம் எழுதினார்.

நல்ல நண்பரான ஆதவன் எதிர்பாராத விதத்தில் திடீர் மரணம் அடைய நேரிட்டது. கர்நாடகாவில் ஒரு புண்ணிய ஸ்தலத்துக்குப் பலரோடு சென்ற அவர் அங்குள்ள பெரிய நதியில் குளிப்பதற்காக இறங்கினார். அவர் இறங்கிய இடத்தில் நீரினுள் ஆபத்தான சுழல் இருந்திருக்கிறது. அச்சுழியில் சிக்கிய ஆதவன் ஆற்றின் வேக இழுப்பில் ஆழ்ந்து மரணம் அடைந்தார்.

இவற்றை எல்லாம் நான் நண்பர் நாகரத்தினத்திடம் கூறினேன். ஆதவன் சேர்த்து வைத்த கடிதங்கள் எல்லாம் என்ன ஆகியிருக்குமோ தெரியாது. இப்படி எதிர்பாராதவை பல நிகழ்ந்திருக்கும். பலர் சேர்த்து வைத்திருக்க மாட்டார்கள் என்று சொன்னேன்.

ஆயினும். எப்படியும் முயன்று. போதுமான கடிதங்களைச் சேகரித்து ஒரு தொகுதி கொண்டுவந்து விடுவேன் என்று நாகரத்தினம் உறுதியாய்க் கூறினார்.

நாகரத்தினம் வங்கியில் பணிபுரிந்து கொண்டிருந்தார். நல்ல இலக்கிய ரசிகர். புத்தகங்கள் வாங்கிப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர். தனது தந்தையிடம் அதிகமான பற்றும் பாசமும் கொண்டிருந்தார். தந்தை இறந்து விடவும். நாகரத்தினம் அதிகம் துயருற்று அமைதி இழந்து தவித்தார். உத்தியோக மாறுதலில் மதுரை சென்றார். அன்பும் பிரியமும் கொண்டு நெருங்கிப் பழகிய நண்பர். நீண்ட கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தவர், பிறகு தொடர்பு கொள்ளாமலே ஒதுங்கிப் போனார். நண்பர் எவருடனுமே அவர் கடிதத் தொடர்போ, நேர்முக உறவோ கொண்டதில்லை.

நாகரத்தினம் சில வருடங்கள் என் கடிதங்களைத் தேடிப் பெறுவதில் முனைப்பு காட்டினார். பின்னர் அக்கறை இழந்து. அம்முயற்சியை நெய்வேலி, வேர்கள் இலக்கிய இயக்கம், இராமலிங்கத்திடம் ஒப்படைத்துவிட்டார்.

இராமலிங்கம் கடித வேட்டையில் மும்முரமாக ஈடுபட்டார். சிற்றிதழ்களில் விளம்பரம் செய்தார். 'வேண்டுகோள்' அச்சிட்டு, பலருக்கும் அனுப்பினார். நானும் நண்பர்களுக்கு எழுதினேன்.

'நல்ல திட்டம். வ.க. கடிதங்கள் தொகுப்பாக வரவேண்டியது அவசியம், என்று பாராட்டி ஏகப்பட்ட கடிதங்கள் வந்தன. ஆயினும் நான் எழுதிய கடிதங்கள் போதுமான அளவு வந்து சேரவில்லை. முக்கிய நண்பர்கள் கூடக் கடிதங்களைத் தந்து உதவவில்லை.

பல நண்பர்கள். அவர்கள் பாதுகாத்து வைத்திருந்த கடிதங்களை அனுப்பி உதவியதை நன்றியுடன் குறிப்பிட வேண்டும். மூன்று வருடகாலம் பெரிதும் முயன்று. காத்திருந்துவிட்டு. 'இனியும் காத்திருப்பதில் பயனில்லை. இருக்கிற கடிதங்களை வைத்துத் தொகுப்பைக் கொண்டு வந்து விடுவோம்' என்று இராமலிங்கம் முடிவுசெய்தார். புத்தகமாக வெளியிட்டார்.

அழகாக வெளிவந்துள்ள கடிதத் தொகுப்புகளில் 'வண்ணதாசன் கடிதங்கள்' தொகுப்புக் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியது ஆகும். 'எல்லார்க்கும் அன்புடன்' என்ற அந்தப் புத்தகம் வண்ணதாசனின் தனித்தன்மையை நன்கு வெளிப்படுத்துவதாகும். நுட்பமான உணர்வுடன் அவர் பெற்ற அனுபவங்கள் கண்டு ரசித்த இனிமைகள், மனசில் தோன்றிய எண்ணங்கள் முதலியவற்றை அழகான தமிழில் வண்ணதாசன் பதிவு செய்திருக்கிறார் இக்கடிதங்களில்.

39

கடல் கடந்து, வான் பறந்து, அயல் நாடுகளுக்குப் போக வேண்டும் என்று நான் ஆசைகள் வளர்த்தது இல்லை. ஆனாலும் பயணம் போய் வந்தவர்கள் எழுதிய ரசமான கட்டுரைகள், புத்தகங்களைப் படிக்க மறுத்ததுமில்லை. நம் நாட்டுக்கு அருகில் இருக்கிற இலங்கை பற்றியும் சுவாரசியமான கட்டுரைகள் பல படித்து ரசித்தது உண்டு.

அறிஞர் திரு.வி.க. 'எனது இலங்கைச் செலவு' என்றொரு கட்டுரை எழுதியிருந்தார். அதுதான் இலங்கைப் பயணம் பற்றி நான் படித்த முதல் கட்டுரை ஆகும். பள்ளிக்கூடப் பாடநூலில் இடம் பெற்றிருந்தது அது.

'எனது இலங்கைச் செலவு என்னும்போது யான் இலங்கைபோய் வந்ததில் எனக்கு ஏற்பட்ட பொருட்செலவை இங்குக் குறிப்பிடவில்லை; எனது இலங்கைப் பயணம் என்ற பொருளிலேயே செலவு எனும் சொல்லை யான் இங்குப் பெய்திருக்கிறேன்'. என்ற ரீதியில் திரு.வி.க. அந்தக் கட்டுரையைத் தொடங்கியிருப்பார். இலங்கையின் வளம், வனப்பு மற்றும் பெருமைகள், கண்டி கதிர்காமம் போன்றவற்றின் சிறப்புகள் குறித்தெல்லாம் அவர் அழகாக விவாதித்திருப்பார்.

1930களில் ஆனந்த விகடன் சார்பில் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியும், சித்திரக்காரர் மாலியும் இலங்கை யாழ்ப்பாணம் போய்ப்பலநாள் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பினார்கள். இலங்கைப் பயணம் பற்றியும், இலங்கைக்குப் பெருமை சேர்க்கும் இடங்கள், அங்குள்ள சிறப்புகள் முதலியன குறித்தும் கல்கி-கிருஷ்ணமூர்த்தி அவருக்கே உரிய தனித் தன்மையோடு ரசமாகப் பல வாரங்கள் தொடர்ந்து விகடனில் எழுதினார்.

இன்னும் பலபேர் 'இரத்தினத் தீவு' பற்றிச் சுவாரசியமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். அவற்றைப் படித்து ரசித்த என் உள்ளம் இலங்கை பற்றி இனிமையான சித்திரங்களைப் பதிவு செய்துள்ளது. ஆயினும் இலங்கைக்குப் போய் அவற்றை எல்லாம் கண்டு களிக்க வேண்டும் என்று ஏனோ என் மனம் விரும்பியதில்லை.

'நம் மாவட்டத்துக்காரர்கள் (திருநெல்வேலிக்காரர்கள்) மனதில் சிறுவயது முதல் கொழும்பு பற்றிய நினைவுகள் இருந்து வருவது சகஜம். உறவினர்கள் மத்தியில் கொழும்புக்குப் போய்வந்தவர்கள் யாராவது இருப்பார்கள். கதிரேசன் என்ற பெயர் கூட நம் பக்கத்தில் அதிகமிருக்கும்' என்று நண்பர் வண்ண நிலவன் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

முன் நாட்களில் கொழும்புக்குப் போய் சம்பாத்தியம் பண்ணிவிட்டுத் திரும்பி வந்து கொழும்புப் பிள்ளை என்ற பட்டப் பெயரோடு பெருமையாக

வாழ்ந்தவர்கள் அந்த வட்டாரத்தில் அதிகம் இருந்தார்கள். கொழும்புக்குப் போய் பணம் பண்ணாமல் திரும்பி வந்து, சுவையான கதைகள் பேசிப் பெயர் பெற்ற அண்ணாச்சிகளும் அநேகர் இருந்தார்கள்.

அவர்கள் எல்லோரும் கதிர்காமம் கோயில் பற்றிக் கதைகதையாகப் பேசுவார்கள். அங்கு நடக்கிற பூசை பற்றியும், திரைக்குப் பின்னால் என்ன இருக்கிறது, என்ன நடக்கிறது, என்று கண்டு கொள்ள முடியாத மர்மம் குறித்தும் கோயிலின் மேல் கூரை வேய்வது சம்பந்தமான சம்பிரதாயங்கள் பற்றியும் அவர்கள் சொல்வது வழக்கம்.

சில ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கதிர்காமம் கோயிலின் மேல்கூரையைப் பழுதுபார்ப்பார்கள். மேலே ஏறிக் கூரை மாற்றுகிற ஆள் கோயிலின் உள்ளே இருக்கிற ரகசியத்தைத் தெரிந்து கொள்ளமுடியும்; அவர் கீழே வந்து மற்றவர்களிடம் அதைச் சொல்லிவிடக் கூடுமே! அதனால் அந்த ஆள் வேலை முடித்துக் கீழே இறங்கி வந்ததுமே மயங்கி விழுந்து இறந்து போவார். அப்படி ஒரு சக்தி அந்தக் கோயிலுக்கு உண்டு. அதனால் வயது முதிர்ந்த நபர்களே இந்த வேலையில் ஈடுபடுவார்கள் என்றெல்லாம் சொல்வார்கள். இது பற்றிய ஓரிரு கட்டுரைகளையும் நான் படித்திருக்கிறேன்.

இவ்வாறு பக்தியும் நம்பிக்கையும் நிறைந்த சூழ்நிலையான கதிர்காமம் அவசியம் பார்க்கப்பட வேண்டிய இடம் என்பது பலரது எண்ணம். இலங்கையில் அனுராதபுரம், சிகிரியா எல்லாம் பார்க்க வேண்டும் என்றும் சொல்வார்கள்.

என்னை இலங்கை வரும்படி விரும்பிக் கூப்பிட்ட அழைப்புகள் அவ்வப்போது வந்தன. முதன்முதலாக வந்த அழைப்பு, இலங்கை எழுத்தாளரான இலங்கையர்கோன் இறந்த பின்னர், அவர் மனைவியும் நண்பர்களும் அவருடைய சிறுகதைகளைக் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டபோதுதான்.

இலங்கையர்கோன் என்னோடும் கிராம ஊழியன் இதழோடும் அதிகமான எழுத்துத்தொடர்பு கொண்டிருந்தார். அந்நாட்களில்-1930கள் 40களில் பெயர் பெற்றிருந்த, தமிழ்நாட்டுக்கு ஓரளவு தெரியவந்திருந்த முக்கியமான எழுத்தாளர்கள் மூன்று பேர்-சம்பந்தன், சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் இவர்களுடைய கதைகள் அவ்வப்போது கலைமகள் இதழில் பிரசுரம் பெற்றுவந்தன.

கிராம ஊழியன் மறுமலர்ச்சி இலக்கிய இதழில் நான் பொறுப்பேற்றுப் பணியாற்றத் தொடங்கியதும், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் வரவேற்று வெளியிடுவதில் கவனம் செலுத்தினேன். இளையதலைமுறை எழுத்தாளர்கள் மகாகவி, வரதர், நாவற்குழியூர் நடராசா, சோ. தியாகராசா, சு. வேலுப்பிள்ளை முதலியவர்கள் கிராம ஊழியனில்

தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார்கள். சம்பந்தன், சி. வைத்தியலிங்கம் ஆண்டு மலருக்கு எழுதியதோடு சரி. இலங்கையர்கோன் ஆண்டு மலருக்குப் பின்னரும் தொடர்ந்து, கடைசி வரை கிராம ஊழியன் இதழுக்கு ஆதரவு காட்டி வந்தார்.

எனவே, இலங்கையர்கோன் கதைத்தொகுப்பை வெளியிடும் விழாவில் நான் கலந்து கொள்ள வேண்டும் என்று அங்குள்ள இலக்கிய நண்பர்கள் விரும்பினார்கள். என்னை அழைத்தார்கள். நான் வரஇயலாது என்று தெரிவித்துவிட்டேன்.

கிராம ஊழியன் காலத்திலேயே இலங்கை இலக்கிய வட்டாரத்தினரின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியதாக வல்லிக்கண்ணன் பெயர் அமைந்துவிட்டது. பின்னர் சரஸ்வதி காலத்தில் அது அதிக மதிப்புக்கும் கவனிப்புக்கும் உரியதாயிற்று. தாமரை அதற்கு மேலும் வலுசேர்த்தது.

வல்லிக்கண்ணன் பெயருக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற மதிப்பையும் மரியாதையையும் அங்கீகாரத்தையும்விட அதிகமான மதிப்பும் அங்கீகரிப்பும் இலங்கையில் இருக்கிறது. நீங்கள் ஒரு தடவை இங்கு வந்தால் அதை நன்கு உணர்வீர்கள். இங்குள்ள ரசிகர்கள் உங்களைக் காண வேண்டும் என்று ஆவலோடு இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் கட்டாயம் இலங்கைக்கு வரவேண்டும் என்று இலங்கை நண்பர்கள், சரஸ்வதி காலத்துக்குப் பிறகு, அடிக்கடி என்னை அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

முக்கியமாக 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா இவ்விஷயத்தில் முனைப்பாக இருந்தார். ஒருமுறை, இலக்கியவாதிகளின் நண்பரும் தொழிலதிபருமான ரங்கநாதன் மூலம் ஏற்பாடுகள் செய்தார். போக வர விமானப் பயணத்துக்கு டிக்கெட் ஏற்பாடு செய்து, ஒரு நண்பர்மூலம் சொல்லி அனுப்பினார். அவசியம் நான் இலங்கைக்கு வந்துபோக வேண்டும் என்று. பின்னர், 1979இல் சாகித்ய அகாதமிப் பரிசு பெற்றதும், என் படத்தை 'மல்லிகை' அட்டையில் வெளியிட்டு, கலாநிதி கா. சிவத்தம்பி என்னைப் பற்றி எழுதிய கட்டுரையையும் பிரசுரித்த டொமினிக் ஜீவா, இந்தச் சந்தர்ப்பத்திலாவது நீங்கள் இலங்கை வரவேண்டும் என்று விரும்பி அழைத்தார்.

அப்போதும் நான் இலங்கை செல்ல மனம் கொள்ளவில்லை. பாஸ்போர்ட், விசா எல்லாம் வாங்குவது தொல்லையான-சிரமங்கள் நிறைந்த காரியமாகும் என்ற நினைப்பே முக்கிய காரணம் ஆகும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதாவது காரணம் கூறிப் பயணத்தைத் தட்டிக் கழித்து வந்த நான் 1996இல் இலங்கை செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது நாற்பதாம் ஆண்டு நிறைவை 1996 ஜூலை மாதம் முதல் வாரத்தில் கொண்டாடியது. அதை

ஒட்டி 'இலக்கியப் பேரரங்கு' கூட்டியது. அதில் கலந்து கொள்வதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து எழுத்தாளர் பொன்னீலன், 'தாமரை' ஆசிரியர் சி. மகேந்திரன். ஆகியோருடன் நானும் வரவேண்டும் என்று முற்போக்கு எழுத்தாளர்கள் விரும்பி அழைத்தார்கள். சங்கத்தின் செயலாளர் என். சோமகாந்தன் நேரில் வந்து கூப்பிட்டார். அவருடன் நண்பர் செ. யோகநாதனும் வந்தார்.

நான் என் மறுப்புகளைக் கூறினேன். அவர்கள் ஏற்றுக்கொள்வதாயில்லை. கண்டிப்பாக இலக்கியப் பேரரங்கிற்கு வந்தே ஆகவேண்டும் என்று நண்பர்கள் கட்டாயப்படுத்தினார்கள். நான் பாஸ்போர்ட் வாங்குவது சிரமம், விசா வேறு பெற வேண்டும், அதெல்லாம் தொல்லைகள் என்றேன்.

அந்தக் கவலை எல்லாம் உங்களுக்கு வேண்டாம். நானே பாஸ்போர்ட் பெற்றுத் தருகிறேன் என்று யோகநாதன் பொறுப்பேற்றுக் கொண்டார். அப்புறமென்ன; நீங்கள் இலங்கை வருகிறீர்கள்; எங்கள் விழாவில் கலந்து கொள்கிறீர்கள்; எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி என்று நண்பர் சோமகாந்தன் மனநிறைவோடு சொல்லிச் சென்றார்.

இடையில் நாட்கள் குறைவாகவே இருந்தன. பொறுப்பு ஏற்றுக்கொண்ட நண்பர் யோகநாதன் எனக்குப் பாஸ்போர்ட் வாங்குவதற்காக மிகவும் சிரமங்கள் மேற்கொண்டார். தினசரி ஆட்டோவில் அலைந்து திரிந்து, யார் யாரை எல்லாமோ பார்த்துப் பெரிதும் முயன்றார். இதற்காக அவர் தமது காலம், பணம், உழைப்பு அனைத்தையும் முழுமையாக ஈடுபடுத்தி வெகுவாகச் சிரமப்பட்டார். அப்படியும், ஒருநாள் தாமதமாகத்தான் பாஸ்போர்ட்டும், விசாவும் கிடைத்தன. ஜூலை 5ஆம் தேதி விழாத் துவக்க நாளன்று நானும் பொன்னீலனும் இலங்கை போய்ச் சேர இயலாது போயிற்று. மகேந்திரன் மட்டும் முன்னதாகவே போக வசதிப்பட்டது. அவர் இலக்கியப் பேரரங்கின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டார்.

பொன்னீலனும் நானும் 6ஆம் தேதி காலையில் விமானத்தில் பயணம் செய்து கொழும்பு நகரை அடைந்தோம். பயண நேரம் ஒரு மணி தான். விமான நிலையத்திலிருந்து எங்களைக் காரில் நண்பர்கள் அழைத்துச் சென்றார்கள்.

இலக்கியப் பேரரங்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. முதல் நாள் துவக்கவிழாவில் வரவேற்பு உரை, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நான்கு தசாப்தங்கள் பற்றிய அறிமுகவுரை, வாழ்த்துரைகள், புதுமை இலக்கியம் மலர் வெளியீடு, கருத்துரைகள் முதலியன நிகழ்ந்தன.

இரண்டு, மூன்றாவது நாட்களில் இலக்கிய ஆய்வு அரங்குகள். 1950 முதல் 1980 வரை, மற்றும் 1980க்குப் பின் என இரு காலகட்டங்களாகப் பகுத்துக்கொண்டு ஈழத்துச் சிறுகதைகள், ஈழத்து நாவல்கள், கவிதைகள் ஆகியவற்றின் நிலைமைகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன. தமிழக நாவல், சிறுகதை, கவிதை, பத்திரிகைகள், சிற்றிதழ்கள், இலக்கியப் போக்குகள், எதிர்கால இலக்கியம் பற்றி நாங்கள் சிறப்புரை ஆற்றினோம்.

இலங்கை அமைச்சின் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்தான் எங்கள் மூவரின் இலங்கைப் பயணத்துக்கு உதவியிருந்தது. ஆகவே இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க இலக்கியப் பேரரங்க நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின்னர், கொழும்பு நகரின் வெவ்வேறு இடங்களில், கலாச்சார அலுவல்கள் திணைக்களம் அநேக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் விரிவுரை மண்டபத்தில் 'இலக்கியச் சந்திப்பு-கலந்துரையாடல்' , விவேகானந்த சபை மண்டபத்தில் இலக்கியச் சொற்பொழிவு முதலிய பல நிகழ்ச்சிகள், கண்டி, மாத்தளை, அட்டன் ஆகிய இடங்களில் சிறப்பு நிகழ்வுகள், கலாச்சார சமய அலுவல்கள் அமைச்சின் தமிழ் இலக்கியக் குழு, வடக்கு கிழக்கு கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் திருகோணமலையில் நடத்திய 'பிரதேச தமிழ் இலக்கிய விழா' விலும் கலந்துகொண்டு உரையாற்றினோம். சில பள்ளிகளிலும் மாணவர் மாணவிகளுக்காக விசேஷ உரை நிகழ்த்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

மலையக கலை இலக்கியப் பேரவையின் பதினைந்தாவது ஆண்டு விழா கண்டி, சேனநாயகா நூலக மண்டபத்தில் பெரிதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிலும் கலந்து கொண்டோம்.

இந்நிகழ்ச்சிகள் சிலவற்றில் கலாச்சார சமய அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு லக்ஷ்மன் ஜெயக்கொடியும் கலந்துகொண்டார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச்செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரனும் அமைப்புச் செயலாளர் என். சோமகாந்தனும் இலங்கை வானொலி நிலையம் டெலிவிஷன் மற்றும் முக்கிய பத்திரிகை அலுவலகங்களுக்கெல்லாம் எங்களை அழைத்துச்சென்று அறிமுகம் செய்துவைத்தனர், வானொலி, தொலைக்காட்சியில் பேச்சு, பேட்டிகள் பதிவு செய்யப்பட்டன.

இலங்கையில் நாங்கள் பதினான்கு நாட்கள் தங்கி, இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றினோம். அவற்றை எல்லாம் நாளிதழ்களும், வானொலியும், தொலைக்காட்சியும் பிரபலப்படுத்தி, எங்களுக்கு நிறைய

'பப்ளிசிட்டி' தந்தன. பிரேம்ஜி எங்களை அமைச்சகத்துக்கு அழைத்துச்சென்று சில அமைச்சர்களோடு அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும் இளைஞர்கள் இலக்கிய ஆர்வமும் இலக்கிய அறிவும் ஈடுபாடும் அதிகம் பெற்றிருப்பவர்களாய்க் காணப்பட்டார்கள். ஆழ்ந்த கேள்விகள் கேட்டு, பயனுள்ள பதில்கள் பெற்றார்கள்.

கண்டி, மாத்தளை, அட்டன் ஆகியவை மலையகப் பகுதியைச் சேர்ந்தவை. மலையக மக்களின் வாழ்க்கை தேயிலைத் தோட்டங்களைச் சார்ந்து இயங்குவது.. தோட்டங்களில் பாடுபடுகிறவர்கள் என்றும் வறுமை நிலையிலேயே இருக்கிறார்கள். இவர்களது குடியுரிமை பறிக்கப்பட்டு, எண்ணற்றோர் வீடற்றவர்கள் ஆனார்கள். இம் மக்களின் வாழ்க்கைத் துயரங்கள், உரிமைப் போராட்டங்கள் குறித்து மிகப்பல கவிதைகளும் சிறுகதைகளும், அநேக நாவல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பவும் எழுதப்படுகின்றன. அவை மலையக இலக்கியம் என்று சிறப்புப் பெற்றுள்ளன.

மலையக இலக்கியம், கலை, கலாச்சாரம், மலையக எழுத்தாளர்களை எல்லாம் கவுரவிக்கும் விதத்தில் கண்டியில் ஒரு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. மலையக இலக்கியத்தையும் கலைகளையும் வெளித்தெரியச் செய்வதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அந்தனி ஜீவா இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். 'கொழுந்து' என்றொரு இதழையும் இவர் நடத்துகிறார்.

மாத்தளையில் மகளிர் பள்ளி ஒன்றில் சிறப்பு நிகழ்ச்சியின்போது, சிற்றிதழ்கள் பற்றி நானும், நாவல்கள் குறித்துப் பொன்னீலனும் பேசினோம். அட்டனில் நந்தலாலா இலக்கிய வட்டம் கூட்டிய கருத்தரங்கில், இன்றைய இலக்கிய இசங்களும் முற்போக்கு இலக்கியத்தில் அவற்றின் தாக்கமும் பற்றி நானும், தமிழ் நாவல்கள் பற்றிப் பொன்னீலனும் சொற்பொழிவாற்றினோம். இலக்கிய ரசிகர்கள் அக்கறையோடு கேள்விகள் கேட்டார்கள். உரிய விளக்கங்கள் அளித்தோம். எங்களுக்கு உற்சாகம் அளித்த நல்ல நிகழ்ச்சிகள் இவை.

திருகோணமலையில் நடந்த பிரதேச தமிழ் இலக்கிய விழாவில், கலை நிகழ்ச்சிகள், நாடகம், இசை இவற்றோடு இலக்கியச் சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நாங்களும் பேச நேர்ந்தது. அங்குள்ளவர்களின் இலக்கிய உணர்வும் அக்கறையும் எங்களுக்கு உற்சாகம் தந்தன.

நாங்கள் கொழும்பு நகரில் ஒரு லாட்ஜில் தங்கியிருந்தோம். கொழும்பு தவிர்ந்த இதர இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக நாங்கள் அதிகாலையிலேயே எழுந்து, காரில் பயணம் செய்து உரிய நகரத்தை

அடையவேண்டியிருந்தது. ஒவ்வொரு இடமும் தூரதூரமாகத்தான் இருந்தது. அங்கே நிகழ்ச்சி முடிந்ததும் உடனேயே கொழும்பு திரும்பினோம்.

ஒவ்வொரு நாளும் இப்படி பல நூறு மைல்கள் பிரயாணம் செய்ய நேரிட்டது. பயண அலுப்பு, ஓய்வு என்ற பாராது, உடனடியாக ஏதாவது இலக்கிய நிகழ்ச்சி, எழுத்தாளர் சந்திப்பு அல்லது பேட்டி என்று எதிலாவது ஈடுபட வேண்டியதாயிற்று.

இவ்விதம் காரில் போகிற வருகிறபோது கொழும்பு நகரின் பலபகுதிகளையும் பார்க்கமுடிந்தது. கண்டியின் அழகை ஒருவாறு ரசிப்பது சாத்தியமாயிற்று. மற்றப்படி அங்குள்ள வரலாற்றுப் பெருமை பெற்ற-காண வேண்டிய இடங்கள் எவற்றையும் நாங்கள் பார்க்கவில்லை. பார்த்து ரசித்து மகிழ்வதற்கான வாய்ப்புகள் கிட்டவில்லை.

அட்டனுக்குப் போகிற நீண்ட நெடிய, வளைந்து நெளிந்து மேலேறிச் செல்கிற பாதையில், மலைக்குப் பின் மலையாக வருகிற இடங்களையும், அங்குத் தென்பட்ட தோட்டங்களையும், அவற்றில் உழைப்பவர்களையும், ஓடுகிற ஓட்டத்தில் வேகப் பார்வையில் விழுங்கிக் கொள்கிற வாய்ப்புகிட்டியது. இது மகிழ்ச்சிகர அனுபவமாகவே இருந்தது.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குப் போகிற வழியில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக, பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவக் கண்காணிப்பு நிலையங்களையும் பயணிகள் நிறுத்தப்பட்டுச் சோதனை போடப்படுவதையும் கண்டுணர முடிந்தது. இந்துசமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களம் சேர்ந்த அதிகாரி ஒருவராவது எங்களோடு வந்ததனால், எங்கள் பயணம் இடைஞ்சல் எதுவுமின்றி இனிதே அமைந்திருந்தது. காரில் இருந்து இறங்கிச் சோதனைக்கு உட்பட வேண்டிய தேவை எங்களுக்கு இல்லாது போயிற்று.

திருகோணமலைப் பகுதி இராணுவக் கண்காணிப்பிலும் காவலிலும் இருக்கிறது. அதனால் அங்கே தாராளமாக விருப்பம் போல் சஞ்சரிக்கவோ, பார்க்கவேண்டியவற்றைப் பார்ப்பதோ சாத்தியமில்லை.

திருகோணமலை வட்டாரத்தில், திருகோணநாதர் ஆலயத்தில் ஏழு கிணறுகள் இருக்கின்றன. அவற்றில் உள்ள நீர் வெவ்வேறு வெப்ப தட்ப நிலை கொண்டது. ஒன்றில் மிக உஷ்ணநீர் கிடக்கும், இன்னொன்றில் சற்று சூடான வெந்நீர், வெதுவெதுப்பான நீர் என்ற தன்மையில் பலவகையில் நீர் காணப்படும். இயல்பாகவே இப்படி நீர் அக்கிணறுகளில் ஊறுகின்றது. அவை அவசியம் பார்க்கப்பட வேண்டியவை என்று சொன்னார்கள். அவற்றைக் காணவும், உஷ்ண-மிக உஷ்ண-அதிமிகு உஷ்ண - சுடுநீரை அள்ளி உணரக்கூடிய பேறு நாங்கள் பெற்றிருக்கவில்லை. சாமான்யர் மொழியில் சொல்வதென்றால் 'அதுக்கு எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை'! அந்த இடமெல்லாம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது.

பன்னிரண்டு நாட்கள், ஆர்வமும் உற்சாகமும் கொண்டிருந்த இலக்கிய நண்பர்களையும், இலக்கிய தாகம் மிகப் பெற்றிருந்த இளைஞர்களையும் கண்டு பேசிப்பழக முடிந்ததே, அது நல்வாய்ப்பு; அவர்களுடைய அன்பையும் உபசரிப்பையும் அளவிலாது பெறமுடிந்தது ஒரு நற்பேறு என்ற மனநிறைவு எங்களுக்கு ஏற்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்துக்குப் போகவே முடியாது என்ற நிலை. அங்கு நீடித்த யுத்த நிலைமையும் இராணுவக்கெடுபிடிகளும் மிக அதிகம் என்று அறிவித்தார்கள். கொழும்புவில் கூட இராணுவக் கொடுபிடி அதிகம்தான். ரோடில் போகிறவர்கள் எந்த நேரத்திலும் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதனால் அங்கு வசிப்பவர்கள் தங்கள் அடையாள அட்டையை எப்பவும் உடன் வைத்திருக்க வேண்டும். அயல் நாட்டுப் பயணிகள் தமது பாஸ்போர்ட்டைச் சதா தம்முடன் கொண்டு செல்ல வேண்டும்.

இரவுகளில் எந்த வேளையிலும் மிலிடரி வந்து வீட்டுக் கதவைத் தட்டி, உட்புகுந்து அறை அறையாகச் சோதனை செய்வது நடைபெறுகிறது. பயணிகள் தங்கியிருக்கும் லாட்ஜ்களில் கூட, இராணுவத்தினர் நள்ளிரவுக்கு மேல் புகுந்து, துப்பாக்கியை நீட்டிக் கொண்டு விசாரணையில் முனைவது, அறைகளில் தங்கியிருப்பவர்களின் அமைதியைக் குலைத்து அச்சத்தை ஏற்படுத்துவது சகஜமாக நிகழ்கிறது. இரவு நேரங்களில் 10 மணிக்கு மேல் எல்லா ரோடுகளிலும் போய்வரக் கூடாது; குறிப்பிட்ட சில ரோடுகள் வழியாகத்தான் போய்வர வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. அப்பவும் எந்த இடத்திலும் மிலிட்டரி தடை செய்யக்கூடும்.

ஆகவே, அழகும் வளமும் நிறைந்த கொழும்பு நகரிலும் இலங்கையிலும் தற்காலத்தில் அமைதியான வாழ்வு இல்லை. ஒருவித அச்சநிலையிலேயே மக்கள் வாழ நேரிட்டுள்ளது காலம் செய்யும் கோலம்தான்!

யாழ்ப்பாணம் பல ஆண்டுகளாக யுத்த பூமியாக மாற்றப்பட்டுவிட்டது. அங்குள்ள நகரங்கள் தாக்கப்பட்டு, மக்கள் வீடுகளை விடுத்துத் தப்பி ஓடிக் காடுகளில் வசிக்கிறார்கள்; வேறு இடங்களுக்குச் செல்கிறார்கள். பலர் கொழும்பு சேர்ந்து அங்கே வசிக்க நேர்ந்துள்ளது. அநேகர் இலங்கையை விட்டு வெளியேறி அகதிகள் என்ற பெயரில் இந்தியாவிலும், இதர பல நாடுகளிலும் தங்கி வாழ்க்கை நடத்துகிறார்கள். உலகம் நெடுகிலும் இலங்கைத் (யாழ்ப்பாணம்) தமிழர்கள் பரவியிருக்கிறார்கள்.

அப்படி வெளியேற வசதியற்றவர்கள் ரோடு ஓரங்களிலும், காட்டுப்புறங்களிலும் தங்கி எப்படியோ உயிர் வாழ்கிறார்கள். அங்கே அரிசி (1996இல்) கிலோ 90 ரூபாய் என்று சொல்லப்பட்டது. அதுவும் கிடைப்பதில்லை. மின்சாரம் கிடையாது. மண்நெய் (கெரசினாயில்-மண்எண்ணெய்) தான். அதுவும் அநியாய விலை கொடுத்து வாங்க வேண்டும். பணம் கொடுத்தாலும்

கிடைப்பது அரிது. மனிதர்கள் நாகரிகம் தெரியவராத குகைக்கால மக்கள் போல் நாளோட்ட நேர்ந்துள்ளது. இந்த நூற்றாண்டின் கொடுமைகளில் எல்லாம் மிகப் பெரும் கொடுமை இது. மிகுந்த மனவேதனை தரும் வாழ்க்கை நிலைமை.

இலங்கையின் உயர் நாகரிகத்தை, கலாச்சாரத்தைக் காட்டுவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத் தமிழரின் மேலான வாழ்க்கை, அவர்களது பண்பாடு, அறிவுநிலை முதலிய பலவும் இலங்கைக்கே பெருமை தரக்கூடியதாகும். இப்படி யாழ்ப்பாணத் தமிழர்கள் கூறுவது வழக்கம்.

அத்தகைய மாண்புகள் பெற்றிருந்த தமிழர்கள் சொந்த நாட்டிலேயே அடிமைகளாய், தங்க இடமற்றவர்களாய், தவிக்க நேரிட்டிருப்பதும், அகதிகள் என்ற பெயரில் புலம் பெயர்ந்து நாடற்றவர்களாய் உலகெங்கும் பரவி, பிழைப்பு நடத்துவதும் மனிதகுல வரலாற்றில் படிந்த கறைகளாகும். மனிதர்கள் யுத்தங்களற்று, அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழக் கற்றுக் கொள்ளவில்லை இன்னும் என்பதை இலங்கையில் - யாழ்ப்பாணத்தின் நிகழ்வுகளும் உலகில் பல்வேறு இடங்களிலும் நிகழ்ந்து கொண்டிருக்கிற ஆக்கிரமிப்புகள்- தாக்குதல்கள்-அழிவுவேலைகள் முதலியனவும் அறிவுறுத்துகின்றன.

1960களில் அல்லது 1970களில் நான் இலங்கைக்குப் போயிருந்தால் அந்நாட்டின் வளங்களையும் வனப்புகளையும்-பார்க்கவேண்டிய இயற்கைச் செல்வங்களையும் கலைச் செல்வங்களையும் கண்டுகளிக்கக்கூடிய வாய்ப்புகளையும் வசதிகளையும் பெற்றிருக்கக்கூடும்! 1996இல் அங்கே போகக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தியதால், நானும் இலங்கை போயிருக்கிறேன் என்று மட்டுமே கூறிக் கொள்ள முடிகிறது.

ஆனாலும், நான் இலங்கை போனதும் வந்ததும், அங்கே தங்கிய நாட்களின் அனுபவங்களும் மனோகரமானவை என்பதில் சந்தேகமில்லை.

40

நாங்கள் வசித்த ராயப்பேட்டை, பாரதிசாலை, காந்தி பீக் மேன்ஷனில் உள்ளடங்கிய சிறுவீட்டைக் காலி செய்ய வேண்டிய கட்டாயம் 1988இல் ஏற்பட்டது. அந்த வீட்டில் நாங்கள் பதினெட்டு வருடங்கள் வசித்தோம். வீட்டுக்காரர்கள் தங்களுக்கு வீடு தேவைப்படுகிறது என்ற சொல்லி, எங்களை வேறு இடம் பார்த்துப்போகும்படி கேட்டுக் கொண்டார்கள்.

திருவல்லிக்கேணி வட்டாரத்தில் எங்களுக்கு வசதியான ஓர் இடத்தை என் அண்ணாவும் நானும் நண்பர்களும் தேடலானோம். புரோக்கர் உதவியையும் நாடினோம். தகுந்த வீடு கிடைப்பது சிரமமானதாகவே இருந்தது.

இந்த வீட்டுவேட்டையின் போது, நடுத்தர வர்க்கத்தினர் நாகரிக நகரத்தில், வீடு என்ற பெயரால் ஒண்டுக் குடித்தனத்தில் எப்படியெல்லாம் வாழ நேரிட்டுள்ளது என்பதை மீண்டும் கண்டறிய முடிந்தது. வீட்டுச் சொந்தக்காரர்களின் பேராசை மனப்போக்கையும் புரிந்து கொள்வது சாத்தியமாயிற்று.

ஒரு பெரிய வீட்டின் சின்னச் சின்ன அறைகளைக் காட்டி, இது தான், குடக்கூலிக்கு உரிய பகுதி (போர்ஷன்), வாடகை ரூ.800 என்று கூசாது கேட்பார்கள் வீடுவைத்திருக்கிறவர்கள். எண்ணூறும், ஆயிரமும் மாதவாடகையாகக் கொடுத்தாலும், எலெக்ட்ரிக் விளக்கு எரிக்க தனிக் கட்டணம், முறை வாசல் தெளித்துப் பெருக்க இவ்வளவு என்றெல்லாம் வசூலிக்கிறார்கள். சிலர் முறைவாசல் கூட்டிப் பெருக்குவதற்குத் துடைப்பத்துக்குத் தனியாகப் பணம் தரவேண்டும் என்று கேட்டு வாங்குவதும் சகஜமாக நடக்கிறது.

முன்பெல்லாம் குடிவருகிறவர்கள் இரண்டு மாத வாடகைப் பணத்தை முன்பணமாக வீட்டுச் சொந்தக்காரரிடம் கொடுக்க வேண்டும் என்ற எழுதப்படாத விதி இருந்தது. குடிஇருப்போர் வீட்டைக் காலி செய்ய நேர்ந்தால், வீட்டுக்காரர் முன்பணத்தைத் திருப்பித் தந்துவிடுவார். அல்லது, முன்னதாகத் தெரிவித்துவிட்டு வாடகையாக அந்த முன்பணத்தைச் சரிக்கட்ட வேண்டியிருக்கும்.

காலப்போக்கில், பத்துமாத வாடகையை முன்பணமாகக் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. அல்லது, வீட்டுக்காரர் கொடுக்கச் சொல்லும் ஒரு பெரும்தொகையை முன்னதாகக் கட்ட வேண்டும். வீட்டைக் காலி பண்ணிப் போகிறபோது வீட்டுக்காரர் அந்தத் தொகையைத் திருப்பித் தந்து விடுவார். சிலர், நீங்களே சரியான ஆளைப் புதிதாகக் குடியிருக்க அமர்த்தி விட்டு அவரிடமிருந்து பணத்தைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறுவதும் நடைமுறையில் இருக்கிறது.

நாகரிகப் பெருநகரத்தில் பெரிய வீடுகள் வைத்துக் கொண்டு வாடகைக்கு விட்டுப் பணம் பண்ணுவது லாபகரமான ஒரு தொழிலாக வளர்ந்துள்ளது. இடம் பிடித்துத் தர உதவுகிற தரகருக்கும் நல்ல வருமானம்தான். வாடகைக்கு வீடு தேடித் தந்தால், குடிவருவோர் புரோக்கர் கமிஷன் என்று ஒரு மாத வாடகையை முழுசாக அவருக்குக் கொடுத்தாக வேண்டும். வீட்டுக்காரரிடமும் தனியாக அவர் பணம் பெற்றுக் கொள்வார். எனவே, வீட்டுத்தரகு வேலையும் நல்ல தொழிலாக நடந்து வருகிறது நாகரிக நகரங்களில்.

தரகர், அங்கே வீடு இருக்கு, இங்கே வீடு இருக்கு என்று எங்களை அலையவைத்தார். தி.க.சிவசங்கரனும் எங்களோடு அநேக இடங்களுக்கு வந்து பார்த்தார். எதுவும் வீடாகத் தெரியவில்லை எங்களுக்கு. வசதியற்ற சில

அறைகள். பல இடங்கள் நெருக்கடியான சந்துபொந்துகளில் இருந்தன. வீண் அலைச்சல்தான் கண்ட பலன்.

இப்போது குடும்பம் பெரிதாகியிருந்தது. அண்ணா, அண்ணி, ஆறு பிள்ளைகள் (நான்கு பெண்கள், இரண்டு பையன்கள்) மற்றும் நான். அண்ணியின் அம்மாவும் அடிக்கடி வந்து நீண்ட காலம் எங்களோடு தங்குவது வழக்கம். பின்னர், எங்கள் குடும்பத்தினராகவே தங்கிவிட்டாள். எங்களுக்குப் பல அறைகள் கொண்ட தனி வீடு தான் வசதிப்படும். அப்படியான இடம் நாங்கள் கொடுக்கக் கூடிய வாடகையில் கிடைக்கவே கிடைக்காது. சில அறைகள் கொண்ட சவுகரியமான இடம்கூட ஆயிரம் ரூபாய் வாடகையில் கூடக் கிடைக்கவில்லை.

அந்நேரத்தில்தான் வள்ளலார் ஃபிளாட்ஸ் (வள்ளலார் குடியிருப்பு) பற்றிய தகவல் கிடைத்தது. அங்கு வசதியான ஃபிளாட்டுகள் விற்பனைக்கு இருக்கின்றன; இரண்டரை இலட்சம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கலாம்; உங்கள் குடும்பத்துக்குப் போதுமானதாக இருக்கும் என்று சொன்னார்கள்.

முன்பு 1950களிலும் 60களின் ஆரம்பத்திலும் என் அண்ணாவும் நானும் வசித்த ஆசிரமம் போன்ற குடிசை இருந்த அழகான தோட்டம் தான் 1980களின் பிற்பகுதியில் குடியிருப்பு அடுக்குக் கட்டிடங்கள் (ஃபிளாட்ஸ்) வளாகமாகப் பரிணாமம் பெற்றிருந்தது. வாழை மரங்கள் வளமாக வளர்ந்து குளுகுளுவெனக் காட்சி தந்த இடம்; கத்திரிச் செடிகள், கீரை, தவனம் (மருக்கொழுந்து) எல்லாம் பசேலென விளங்க வனப்புடன் இருந்த சூழல்; கிணற்றில் மோட்டார் வைத்துக் குழாய் மூலம் வாய்க்கால் எனத் தண்ணீர் ஜிலுஜிலுவென ஓடி எங்கும் பாய்ந்து வளம் செய்த பிரதேசம் இப்போது காங்கிரீட் கட்டிடங்கள் முளைத்து நிற்கும் வளாகமாக மறுமலர்ச்சி பெற்றிருந்தது.

நாங்கள் வந்து பார்த்தபோது அனைத்து ஃபிளாட்டுகளும் கட்டிமுடிக்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடங்கள் கட்டி விற்பனை செய்வதையே லாபகரமான தொழிலாகக் கொண்டிருந்த நிறுவனம் ஒன்று தோட்டத்தை வாங்கி வீடுகள் கட்டி விற்றுக் கொண்டிருந்தது. பணம் கிடைக்கக் கிடைக்க கட்டிட வேலையை நிறைவு செய்துவந்தது.

அரைகுறையான நிலையில் இருந்த பத்தாவது எண் ஃபிளாட் எங்களுக்குத் தரப்பட்டது. (முன்பு நாங்கள் வசித்த தோட்ட வீட்டின் எண்ணும் பத்து தான். அந்த வீட்டுக்கு வழி E டெப்போத்தெரு என்று பெயர் பெற்றிருந்தது. E டெப்போத்தெரு முடிந்து, மற்றொரு சந்தின் திரும்பி நடந்து, மீண்டும் திரும்பி ஒரு தடத்தின் வழியே தோட்டத்தை அடைய வேண்டும். வெங்கடசாமி தெரு என்பதன் வழியாகவும் வரலாம். இப்போதோ லாயிட்ஸ் ரோடை ஒட்டிய புதுத்தெருவின் வழியாக வரவேண்டும்.)

அண்ணா, எபிஷியன்ட் பப்ளிசிட்டீஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து, நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெற்றபோது கிடைத்த பணம் இருந்தது. மேற்கொண்டு தேவைப்பட்ட தொகையைக் கடனாகப் பெற்று வீடு வாங்கப்பட்டது.

பத்தாம் எண் ஃபிளாட் சுவர்கள் சிமிண்ட் பூசப்படாமலும், தரை மெருகுபடுத்தி மொசெய்க் செய்யப்படாமலும், மற்றும் பல வேலைகள் பூர்த்திபெறாமலும், ஒரு வீட்டின் எலும்புக்கூடு போல் இருந்தது. பணம் பெற்றதும் கட்டிடம் கட்டும் நிறுவனத்தார் அவசரமாகப் பணிகள் புரிந்து அதை வசிப்பதற்கு உரிய இடமாக உருவாக்கித் தந்தார்கள். 1988 ஜனவரி கடைசி வாரத்தில்.

ஜனவரி 31ஆம் தேதி நாங்கள் பாரதி சாலை வீட்டைக் காலி செய்துவிட்டு, வள்ளலார் குடியிருப்பு பத்தாவது எண் வீட்டில் குடிபுகுந்தோம்.

லாயிட்ஸ் ரோடில் நெருக்கடியும் அசுத்தமும் மலிந்த பகுதியைக் கடந்து, புதுத்தெரு என்கிற நெருக்கடிப் பிரதேசத்தில் நடந்து, உள்ளே புகுந்துவிட்டால், வள்ளலார் குடியிருப்பு வளாகம் அமைதியும் அழகும் நிறைந்த பகுதியாகக் காட்சி தரும். அடுக்குக் கட்டிடம் என்று பெயர் பெற்றிருந்தாலும், இதர ஃபிளாட்டுகள், அப்பார்ட்மெண்டுகள் மாதிரி மூன்று நான்கு அடுக்குகள் கொண்டதல்ல இந்த இடம். தரைப் பகுதி வீடுகள், அதற்கு மேல் ஒரே ஒரு வரிசைக் கட்டிடங்கள் தான். மூன்று தரமான அறுபத்தெட்டுக் குடியிருப்புப் பகுதிகளை (ஏடைப், பி டைப், சி டைப்) கொண்ட வளாகம். பத்தாவது எண் வீடு மாடிப் பகுதியாகும்.

சென்னை நகரில் 1980களில் இருந்தே அடுக்குக் கட்டிடங்கள் கட்டுவது அதிகரித்துள்ளது. பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு, புதிது புதிதாக ஃபிளாட்டுகள் கட்டி வாடகைக்கு விடப்படுகின்றன. சின்னச் சின்ன வீதிகளில் கூட அடுக்குக் கட்டிடங்கள் எடுப்பாகத் தோன்றியுள்ளன. அவற்றின் விலை மதிப்பும் - வாடகை விகிதமும் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகிறது.

இந்த வள்ளலார் குடியிருப்புகள் விலைமதிப்பையே சான்றாகக் கூறலாம். நாங்கள் வாங்கிய போது ஒரு ஃபிளாட்டின் விலை இரண்டரை லட்சம் ரூபாய். அதற்கு முன்னதாக வாங்கியவர்கள் ஒன்றரை லட்சம் தான் கொடுத்துள்ளனர். 1990களில் ஒரு ஃபிளாட் விலை நான்கு லட்சம் ஆகிவிட்டது பின்னர், சிறிது காலம் குடியிருந்து விட்டு விற்பனை செய்கிறவர்கள் ஆறு லட்சம், ஏழு லட்சம் என்று விலைகூறி விற்றிருக்கிறார்கள்.

லாயிட்ஸ் ரோடிலும் சுற்றுவட்டாரத்திலும் அநேக அடுக்குக் கட்டிட வளாகங்கள் தோன்றியுள்ளன. 1980களிலேயே அவற்றின் விலைமதிப்பு அதிகமாகவே இருந்தது. இப்போது மேலும் உயர்ந்துள்ளது. மாநகர் நெடுகிலும் இதே நிலைமை தான்.

41

என் அண்ணா கோமதி நாயகம் அவருடைய வாழ்க்கையில் அமைதியையும் ஆனந்தத்தையும் அதிகம் கண்டார் என்று சொல்வதற்கில்லை. மற்றவர்கள் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதற்காகத் தன்னைத் தானே அதிகம் வருத்திக் கொள்கிறவர்கள் இனத்தைச் சேர்ந்தவர் அவர். பிறருக்காக ஏற்றுக்கொண்ட பணிகளைக் கடமை உணர்வோடும் சிரத்தையாகவும் நேர்மையோடும் செய்துமுடிப்பதிலேயே கருத்தாக இருப்பவர்.

அவருடைய வாழ்க்கையும் அப்படியே அமைந்திருந்தது. ஆரம்பநாளில் இருந்தே பிறருக்காக ரொம்பவும் கஷ்டப்பட்டு உழைத்தார். போதிய சன்மானம் பெற்றார் என்று சொல்ல முடியாது.

முதலில் திருநெல்வேலியில் மருந்துக்கடை ஒன்றில் வேலை பார்த்தார். காலை 8 மணி முதல் இரவு 9.30 வரை உழைக்க வேண்டியிருந்தது. சம்பளமும் குறைவு தான். பிறகு 'சினிமா உலகம்' பத்திரிகைக்காக அநேக வருடங்கள் தனது உழைப்பையும் காலத்தையும் ஈடுபடுத்தினார். ஏதோ செலவுக்குப் பணம் கிடைத்ததே தவிர, தாராளமாக செலவு பண்ணி சந்தோஷமாக நாளோட்ட வழி இருந்ததில்லை. 'சினிமா உலகம்' நின்று போனதும், அந்த இதழ் அச்சாகி வந்த அச்சகத்தில் வேலையில் சேர்ந்தார். கடுமையான உழைப்பு, குறைவான சம்பளம் என்ற நிலைமைதான்.

அப்புறம் தான் எபிஷியன்ட் பப்ளிசிட்டீஸ் என்கிற விளம்பர ஆலோசகர்கள் நிறுவனத்தில் சேர்ந்தார் அவர். வளர்ந்து கொண்டிருந்த அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அதிகம் பாடுபட்டார். அவர்கள் நியாயமான ஊதியம் அளித்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அங்கே நாற்பது வருடங்கள், தமது சொந்த முயற்சிக்கு - சொந்தமான அமைப்புக்கு உழைப்பது போல் பணியாற்றினார். அதிக வேலைகள்; கடும் உழைப்பு. ஓய்வு எடுக்கவே அவர் விரும்புவதில்லை. இரவில் வெகுநேரம் வரை தொழில் சம்பந்தப்பட்ட மொழிபெயர்ப்பு வேலைகளில் ஈடுபடுவது உண்டு, அதிகப்படியான வருமானத்துக்காக.

கவிஞர் திருலோக சீதாராம் அடிக்கடி சொல்வார், நம் போன்றவர்களுக்குச் சருகு அரிப்பதிலேயே நேரமெல்லாம் போய்விடுகிறது; குளிர்காய்வதற்குப் பொழுது கிடைப்பதேயில்லை என்று. அதே நிலைமைதான் அண்ணாவுக்கும். உழைப்பதிலேயே காலம் எல்லாம் கழிந்தது; ஓய்வு எடுப்பதற்கே நேரமில்லாது போயிற்று.

அண்ணா ஊருக்கு வந்து அடிக்கடி தன்னைப் பார்ப்பதில்லையே என்று அம்மாவுக்கு எப்போதும் வருத்தம் இருந்தது. தங்கள் வீட்டு

விசேஷங்களுக்கு அவர் வருவதே இல்லையே என்ற மனக்குறை உறவினர்களுக்கு நிரந்தரமாக இருந்தது. அண்ணாவுக்கோ வாழ்க்கைச் சுமை பெரும் பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. குடும்பப் பொறுப்புப் பெரிதாக இருந்தது. அந்தக் கவலையோடு அவர் மேலும் மேலும் உழைப்பதற்கான வாய்ப்புகளைத் தேடிக் கொண்டிருந்தார்.

தனது சந்தோஷத்துக்காக இலக்கிய நூல்களைப்படித்தார். உலக இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். ஆங்கிலத்தில் நன்றாக எழுதும் திறமையும் அவருக்கு இருந்தது. எனது சிறுகதைகள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சுரதா கவிதைகள் சிலவற்றையும், என். ஆர். தாசன் கதைகள் ஒன்றிரண்டையும் அவர் ஆங்கிலமாக்கினார்.

அண்ணா அசோகன், தமிழாக்கிய உலகத்துக் கதைகள் 1940கள் 50களில் சிறுசிறு புத்தகங்களாகப் பிரசுரம் பெற்றன. எம். சூரி என்பவர் வெளியிட்டார். மாக்சிம் கார்க்கியின் 'லோயர் டெப்த்ஸ்' நாடகம் தமிழாக்கப்பட்டு 'அதல பாதாளம்' என்ற நூலாக வெளிவந்தது. கிராம ஊழியன் இதழில் 'வியாபார உலகம்' என்ற தொடர்கதை எழுதினார். அவர் எழுதிய 'எம்டன் பிள்ளை' எனும் நாவல் பின்னர் 'கலையாத கனவுகள்' என்ற பெயரில் கலைஞன் பதிப்பகம் வெளியீடாக வந்தது. கடைசி வரை அவர் தமது ஆத்ம திருப்திக்காக நிறையப் படிப்பதிலும் சிறிதளவு எழுதிவதிலும் ஆர்வம் காட்டினார்.

கடும் உழைப்பும் ஓய்வின்மையும் அவர் உடல்நிலையை வெகுவாகப் பாதித்தன. இரத்த அழுத்தம் அடிக்கடி தொல்லை கொடுத்தது. சிறுசிறு நோய்கள் தோன்றின. உரிய மருந்துகள் சாப்பிட்டு, ஓரிரு நாள் விடுப்பில் இருந்து மீண்டும் உழைப்பதிலேயே இன்பம் கண்டார் அவர். எபிஷியன்ட் பப்ளிஸிட்டீஸ் பணியிலிருந்து ஓய்வுபெறும் போதே அண்ணாவுக்கு எழுபது வயதாகியிருந்தது. அதன்பிறகும் அவர் குடும்ப நலன் கருதி, பிரில்லியன்ட் டியுட்டோரியல்சில் சேர்ந்து உழைத்தார். உடல் பலவீனங்களைச் சகித்துக் கொண்டே வழக்கம்போல் சகல பணிகளையும் செய்து கொண்டிருந்தார். தாங்கும் மட்டும் தாங்கிவிட்டு திடீரென்று ஒரு நாள் இரவு அவருடைய இதயம் நின்றுவிட்டது.

அன்று தேதி 17 மார்ச் 1991. அவருக்கு வயது 73 நடந்து கொண்டிருந்தது.

குடும்பத்துக்குக் கூடியவரை நல்லன செய்த திருப்தி அண்ணாவுக்கு இருந்தது. பெண்கள் எல்லோரையும் கல்லூரியில் பட்டப்படிப்பு பயின்று தேர்ச்சி பெறச் செய்திருந்தார். அவர்கள் வேலை பார்க்கும் திறமையும் தகுதியும் பெற்றிருந்தார்கள். பையன்கள் இருவரும் மேல்நிலைப்படிப்பு படித்துக்கொண்டிருந்தார்கள்.பெண்களில் ஒருவருக்கேனும் திருமணம் செய்து

வைக்கவில்லையே என்ற வருத்தம் அவருக்கு இருந்ததில்லை. எங்களுக்குத் திருமணம் வேண்டாம் என்று உறுதியோடு பெண்கள் கூறினார்கள். சென்னையில் குடும்பத்தினர் வசிப்பதற்கு ஏற்ற இடம் ஒன்றைச் சொந்தமாக்க முடிந்ததே என்ற மனநிறைவு அவருக்கு இருந்தது.

அண்ணியும் நற்பண்புகள் கொண்ட நல்ல குடும்பத் தலைவியாகவே விளங்கினார். பலரைப்போல, அது வேண்டும், இது வேண்டும் என்று தேவைகளை அடுக்கித் தொல்லை தரவில்லை. அன்போடும் அமைதியோடும் குடும்பப் பொறுப்புகளைத் தாங்கினார். வீட்டுக்கு வருகிறவர்களைப் பரிவுடன் விசாரித்து அன்போடு உபசரிக்கும் நற்குணம் பெற்றவர் அவர். கணவரின் செயல்களுக்கு எப்போதும் ஆதரவாகவேயிருந்தார். தம்பி ஒருவன், சம்பாதிக்காமல், உருப்படியாக வேலை எதுவும் செய்யாமல், எப்போதும் புத்தகத்தைக் கட்டி மாரடித்துக்கொண்டு, பணவரவுக்கு வகை செய்யாத எழுத்து வேலைகளில் ஈடுபட்டு, குடும்பத்துக்குச் சுமையாக இருக்கிறானே என்று கருதாமலும், எதிர்ப்புத் தெரிவிக்காமலும், ஆரம்பம் முதலே பரிவு நிறைந்த உள்ளத்தோடு நடந்து கொண்டதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

42

எழுத்தாளன் வாழ்வில் எனக்கு எப்போதும் பணம் கிடைத்துக் கொண்டிருந்தது என்று சொல்வதற்கில்லை. சில சந்தர்ப்பங்களில் கிடைத்தது; பெரும்பாலும் பண வரவு இல்லாத நிலைதான்.

நான் சுதந்திர எழுத்தாளனாகவே வாழ்வது என்ற உறுதி பூண்ட நாளில் இருந்தே இதே நிலைமைதான். அதற்காக நான் கவலையோ வருத்தமோ கொண்டதில்லை.

1960கள் வரை எழுத்து மூலம் எனக்குப் போதுமான பணம் வந்து கொண்டிருந்தது என்று சொல்ல வேண்டும். தமிழ் நாட்டின் பல பத்திரிகைகளும் எனது கதைகளை வெளியிட்டுச் சன்மானமும் அளித்தன. இலங்கையில் வீரகேசரி, தினகரன் நாளிதழ்களும் என் எழுத்துக்களைப் பிரசுரித்துப் பணமும் தந்தன. சிங்கப்பூர் தமிழ் முரசுப் பத்திரிகை தொடர்ந்து என் கதைகள் கட்டுரைகளை வெளியிட்டு உதவியது.

1970களிலிருந்து மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கை, மலேசியப் பத்திரிகைகள் அந்த அந்த நாடுகளின் எழுத்தாளர்களின் எழுத்துக்களைத்தான் வெளியிட வேண்டும்; தமிழ் நாட்டில் பெயர் பெற்ற எழுத்தாளர்களின் எழுத்துக்களை வாங்கி வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்கிற மண்ணின் மைந்தர்கள் உரிமைக் குரலுக்குச் செவிசாய்க்க நேரிட்டது. அதனால் எனது எழுத்துக்களை அவை கேட்டுப்பெறுவதை நிறுத்திக் கொண்டன.

தமிழ் நாட்டுப் பத்திரிகைகளின் போக்கிலும் மாறுதல் புகுந்தது. வெகுஜனப் பத்திரிகைகள் என்றும் பல்சுவை இதழ்கள் என்றும் லட்சியங்களைவிட லட்சங்களிலேயே கருத்தைச் செலுத்தின. வாசகர்களின் எண்ணிக்கையைப் பல லட்சங்கள் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டு, அதற்கேற்றாற்போல் கொள்கைகள் வகுத்துக் கொண்டன.

வாசகர்களைச் சிரமப்படுத்தாத - ஆனால் அவர்களது ஆவலைத் தூண்டுகிற- கிளுகிளுப்புக் கதைகள், கிசுகிசு சமாச்சாரங்கள், ஆண் பெண் செக்ஸ் உறவு பற்றிய சுவாரசியமான கதைகள், பெண் அங்க வர்ணனைகள் முதலியன கொண்ட கதைகள், கொலை மர்மம் நிறைந்த தொடர்கதைகள் போன்றவற்றை வெளியிடுவதில் உற்சாகம் கொண்டன. கதைகள் மற்றும் படைப்புகளில் தனித்தன்மை, நடைச்சிறப்பு, குணச்சித்திரம் உளவியல், ஆழமும் கனமும் கொண்ட விவரிப்புகள் தேவையில்லை; நேரடியாக சம்பவங்கள் மேல் சம்பவங்களாகச் சொல்லிச் செல்வது, அடுத்து என்ன நடக்கும் என எதிர்பார்க்கச் செய்யும் தன்மை (சஸ்பென்ஸ்) போன்ற உத்திகளைக் கையாளும்படி உதவி ஆசிரியர்கள் பத்திரிகை எழுத்தாளர்களுக்கு வழிகாட்டினார்கள்.

வெற்றிகரமாகப் பத்திரிகை நடத்த வேண்டுமானால், ஒவ்வோர் இதழும் வாசகருக்கு எளிதில் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்க வேண்டும்; சென்னை ஹைக்கோர்ட் அருகில் பஸ் ஏறுகிற பயணி ஒரு பத்திரிகையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தால், அவர் மயிலாப்பூர் குளம் நிறுத்தத்தை அடைகிற போது அதை வாசித்து முடித்து, திருப்தியோடு பத்திரிகையை மூடி வைக்க வேண்டும். அந்த ரீதியில் லைட்டர் விஷயங்களை உடையதாகப் பத்திரிகை அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு பத்திரிகை ஆசிரியர் அனுபவ ஞான உரை வெளியிட்டிருந்தார்.

அவருடைய பத்திரிகை அப்படித்தான் உருவாகியது. விற்பனையைப் பெருக்கியது. அதைப் பின்பற்றி இதர வார இதழ்களும் சுலப சமாச்சாரக் கிளுகிளுப்பு வழியில் வழுக்கி ஓடலாயின. சினிமா நடிகை நடிகர்கள் முக்கியப்படுத்தப்பட்டார்கள். சினிமா விஷயங்களுக்கும் வம்பு வதந்திகளுக்கும் அவைதான் வாசகர்களுக்கு வெகுவாகப் பிடித்திருக்கின்றன என்று அதிக இடம் ஒதுக்கப்பட்டன. கவர்ச்சியும் வசீகரமுமான நிலைகளில் பெண்களின் படங்கள் அதிகம் அதிகமாக வெளியிடப்பட்டன.

விற்பனையை அதிகப்படுத்தி லாபம் காணவேண்டும் என்ற நோக்கோடு பண்பாட்டைச் சிதைத்து, கலாசாரச் சீரழிவுக்கு வகை செய்கிற உள்ளடக்கம் பத்திரிகைகளில் மிகுந்தன. தரமான தன்மையில் உயர்ந்த விஷயங்களைத் தந்து கொண்டிருந்த பத்திரிகைகள் கூட வியாபார உலகில் போட்டி போட்டு, தங்கள் இருப்பை நிலைநாட்டிக் கொள்வதற்காக, கால வேகத்தோடு இழுபட்டுத் தம் போக்கை மாற்றிக் கொண்டன.

எனவே, என்னைப் போன்றவர்களின் எழுத்துகளுக்குப் பத்திரிகை உலகில் தேவை இல்லாமல் போய்விட்டது. அவர்களது தேவைக்கு ஏற்ப என் போக்கை நான் மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை.

எனது வாழ்க்கைத் தேவைகள் மிகவும் குறைவு, சாப்பாடு விஷயத்தில் கூட நான் மிக எளிமையையே கைக்கொண்டிருந்தேன். நான் உயிரோடிருந்து , உடலில் உழைப்பதற்குப் போதுமான தெம்பு தரக்கூடிய சிறிதளவு உணவு எனக்குப் போதும் என்று சொல்லிவந்தேன்.

ஒரு காலகட்டத்தில் மூன்று வேளையும் ஒரு சில இட்டிலிகளையும் காப்பியையும் உண்டு வாழ்ந்தேன். பொருளாதாரம் மிகத் தாழ்ந்திருந்தபோது, ஒருவேளை உணவு மட்டுமே போதுமானது எனக்கொண்டிருந்தேன். சில நாட்களில் காப்பியே என்னை வாழவைக்கும் ஜீவசத்து ஆக இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் என் அண்ணா, நீ போதுமான அளவு உணவு உட்கொள்ள வேண்டும் என்று கூறி எனக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்ய முனைந்தார். அவருக்குக் கிடைக்கிற போனஸ் தொகை, உபரி வருமானம் எல்லாவற்றையும் எனக்கே தந்து உதவினார்.

நீங்கள் ஏதாவது ஒரு அலுவலகத்தில் சேர்ந்து பணிபுரிய வேண்டும். உங்களுக்கு உதவுவதற்கு உங்கள் அண்ணன் இருப்பதனால் இப்போது உங்களால் தாக்குப்பிடிக்க முடிகிறது. உங்கள் அண்ணனின் உதவி இல்லையென்றால், நீங்கள் ஏதேனும் ஒரு வேலையில் சேர்ந்துதான் இருப்பீர்கள், பண வருவாய்க்காக இப்படிச் சிலர் என்னிடம் கூறினார்கள். எனது நலனில் அக்கறை கொண்ட நண்பர்கள் அவர்கள்.

பொருளாதார எற்ற இறக்கங்கள் என்னைப் பாதிக்கமாட்டா. சென்னை நகரில் வாழ முடியாது போனாலும் எனக்குக் கவலை இல்லை. தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் பொதிகை மலையில் உயரே எங்கோ இருக்கிறார் என்று இன்னும் நம்பப்படுகிறது. உண்மையில் அவர் அங்கே இருக்கிறாரா என்று கண்டறியவும், அப்படி அவர் இருந்தால் அவரோடு சேர்ந்து கொள்ளவும் நான் மலைமேல் போகிறேன் என்று அறிவித்து விட்டு, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காடுகளுக்குள் போய் மறைந்து விடுவேன் என்று சொன்னேன்.

எழுபதாவது வயதில் எனக்கு நடந்த பாராட்டுக் கூட்டத்தின் போது நான்மேடையில் இதைக் கூறினேன். எனக்கு ஏமாற்றங்கள் இல்லை , நான் எதையும் எதிர்பார்ப்பதில்லை என்பதால் என்றும் தெரிவித்தேன்.

அந்தச் சந்தர்ப்பத்தில் சில பத்திரிகைகள் இதை வெளியிட்டிருந்தன. அதைப் படித்தவர்களில் சிலர் என் மன உறுதியை வியந்து பாராட்டினார்கள்.

பிறர் வியந்து பாராட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட அலங்கார வார்த்தைகள் அல்ல அவை. என் உள்ளத்தின் ஒலியேயாகும்.

தமிழக அரசு, அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு மாதம் தோறும் உதவித் தொகை வழங்குகிறது; அநேகர் அதைப் பெற்றுப் பலனடைகிறார்கள்; நீங்களும் அதற்கு மனுச்செய்து உதவிப் பணம் பெறலாமே என்று அடிக்கடி நண்பர்கள் என்னிடம் கூறுவது வழக்கம். நான் அதை விரும்பியதில்லை.

ஒருசமயம் நண்பர் நா. பார்த்தசாரதி அரசின் உதவித் தொகையைப் பெறுவது பற்றி என்னிடம் பேசினார். அப்போது கு. ராஜவேலு உதவிப்பணம் வழங்கும் பொறுப்பில் இருந்தார்.

நான் அவரிடம் சொல்லியிருக்கிறேன்; உரியமுறையில் நீங்கள் மனுச் செய்தால் எளிதில் அங்கீகரிக்கப்பட்டுவிடும் என்று நா.பா. கூறினார்.

எனக்கு உதவி தேவை என்று கோரிக்கை மனு அனுப்ப நான் விரும்பவில்லை என்றேன். மாதம் தோறும் நூற்றைம்பது ரூபாய் கிடைக்கும்; அது உங்களுக்கு ஏதாவது செலவுக்கு உதவுமல்லவா? என்று நண்பர் குறிப்பிட்டார்.

அக்காலத்தில் நூற்றைம்பது ரூபாய்தான் உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வந்தது. பின்னர்தான் அது நானூறு ஆக உயர்த்தப்பெற்றது.

நூற்றைம்பது ரூபாய் தானே! அது அவனுடைய காப்பிச் செலவுக்கே பற்றாது. அதற்கு மனுச் செய்ய வேண்டாம் என்று என் அண்ணா கூறிவிட்டார்.

அதன் பிறகு நா.பா. அது பற்றிப் பேசவில்லை.

அண்ணா இறந்துவிட்ட பிறகு நண்பர்கள் பலர் அரசின் உதவிப்பணம் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள், எனக்காகத் தான்.

நான் வயது முதிர்ந்த எழுத்தாளன், வறுமையால் கஷ்டப்படுகிறேன், உதவி தேவை என்ற மனு எழுதி, அதற்குத் தாசில்தார் சான்று பெற்று, அலைய வேண்டும். இதெல்லாம் வேண்டாத வேலைகள் என்று நான் சொல்லி வந்தேன்.

ஆயினும் நண்பர்கள் பின்வாங்கவில்லை. பேராசிரியர் மலையமான் பெரிதும் முயன்று, உரிய பாரத்தை எனக்காகப் பூர்த்தி செய்து, அவரே வட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு அலைந்து உரிய சான்றுக் கையெழுத்துப் பெற்று, முறைப்படி மனுவை உரிய அலுவலகத்தில் சேர்ப்பித்து உதவி புரிந்தார்.

அது சம்பந்தமாகப் பின்னர் நான் கல்லூரிச் சாலையில் உள்ள அலுவலகத்துக்கு மூன்று நான்கு தடவைகள் அலைய வேண்டியதாயிற்று. போதுமான தாமதங்களுக்குப் பிறகு எனக்கு மாதம் நானூறு ரூபாய் உதவிப் பணம் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டது.

மூன்று வருடங்களுக்குப் பிறகு மீண்டும் மனுச் செய்து புதுப்பிக்க வேண்டும் என்ற விதியும் அறிவிக்கப்பட்டது. ஒரு தடவை தாசில்தார் சான்று

பெற்றுக் கோரிக்கை விடுத்து அனுமதி பெற்றது போதாதா! ஒவ்வொரு மூன்று வருடகால நிறைவுக்குப் பின்னும் திரும்பவும் தாசில்தார் கையெழுத்துப் பெற்று, மனுச் செய்ய வேண்டும் என்பது வீண் தொல்லை- அநாவசியமான வேலை என்று எனக்குப்பட்டது.

மறுபடியும் நான் மனுச் செய்யவுமில்லை; அரசு உதவிப் பணம் பெற வேண்டும் என்று முயலவுமில்லை.

என் அண்ணா இறந்தபோது, குடும்பத்தின் பொருளாதாரம் மோசமான நிலையில் இல்லை. மேலும், மூன்று பெண்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் சம்பளம் அதிகம் இல்லை என்றாலும், திட்டமான மாத வருவாய் போதுமானதாக இருந்தது. இரண்டு பையன்கள் மேல்படிப்புப் படிக்க வேண்டிய நிலை.

பெரியவன் முதலில் காலேஜில் சேர்ந்தாக வேண்டும். அவன் அனைத்துப் பாடங்களிலும் உயர் மதிப்பெண்கள் பெற்றிருந்தான். அதனாலேயே கல்லூரிகளில் இடம் கிடைப்பது சிரமமாக இருந்தது.

உயர் சதவிகித மதிப்பெண்கள் பெற்றவர்கள் என்ஜினிரிங் படிப்புக்கு முயற்சி செய்வார்கள். அது கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகத்தில் பி.எஸ்..சி., பி.ஏ. போன்ற வகுப்பு எதிலாவது சேர்ந்து படிக்க முற்படுவார்கள். என்ஜினீரிங் கல்லூரியில் இடம் கிடைத்த உடனே இக்கல்லூரிப் படிப்பை விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இதனால் பல சிக்கல்களும் சிரமங்களும் ஏற்படுகின்றன என்று கல்லூரி நிர்வாகம் கருதுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக உயர்ந்தபட்ச மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களைத் தங்கள் கல்லூரியில் சேர்க்காமல் தட்டிக் கழிப்பதிலேயே கல்லூரி முதல்வர் கருத்தாக இருக்கிறார். பலத்த சிபாரிசு இருந்தால் எதுவும் எளிதில் காரியசித்தி ஆகிவிடும்.

அப்படி சிபாரிசுகள் எதுவும் இல்லாததனால் சுப்பிரமணியன் விவேகானந்தா கல்லூரி லயோலா கல்லூரி என்று கல்லூரி கல்லூரியாக ஏறி இறங்கி, காத்து நின்று, பல வாரங்கள் அலைந்து சிரமப்பட்டான். அநேக தடவைகள் நானும் அவனோடு போய்வர வேண்டியதாயிற்று. அச் சமயங்களில், கல்லூரிதோறும் காத்து நின்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் காணநேர்ந்தது. அது மனக்கஷ்டம் உண்டாக்கும் கசப்பான அனுபவமாகவே இருந்தது.

இறுதியில், ஒரு மாத கால அலைச்சலுக்கும் இடைவிடாத முயற்சிக்கும் பிறகு, சுப்பிரமணியனுக்கு விவேகானந்தா கல்லூரியில் பி.எஸ்.சி. வகுப்பில் இடம் கிடைத்தது.

சில வருடங்களுக்குப் பிறகு,. இரண்டாவது பையன் கணேசனும் கல்லூரியில் இடம் பெறுவதற்கு அதே சிரமங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

தமிழ்நாட்டில் கல்வி கற்க விரும்புகிற-மேல்படிப்புக்குத் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு உரிய கல்வி வாய்ப்புகள் கிடைப்பது கூட மிகச் சிரமமான காரியமாகவே இருக்கிறது.

43

குடும்பத்தேர் இயல்பான கதியில் எப்போதும் முன் நகர்ந்துகொண்டே இருக்கிறது. பொறுப்பாக இருந்து அதை நிர்வகிக்கும் மூத்தவர் மறைந்து போயினும், குடும்பத்தின் அலுவல்கள் சீராக இயங்கும்படி இருக்கிறவர்கள் பொறுப்புடன் செயலாற்றுவார்கள்.

அண்ணாவின் குடும்பத்தின் நிலைமையும் அதுவே. பிள்ளைகள் பொறுப்பு உணர்ந்தவர்களாக வளர்ந்திருந்தார்கள். அப்பாவின் நற்பண்புகளும் உழைக்கும் மனப்பண்பும் அவர்களிடமும் படிந்துள்ளன. தற்கால இளையவர்கள் பெரும்பாலோரைப் போலப் பொறுப்பற்றதனமும் உல்லாச மோகமும் ஆடம்பரநாட்டமும் வீண்பொழுதுபோக்கும் இயல்பும் அவர்களிடம் இல்லை. அவரவர் வேலைகளை அவர்கள் ஒழுங்காகச் செய்து ஒற்றுமையாக இருக்கிறார்கள். பேராசைப் படாமல், உள்ளதைக் கொண்டே உளமகிழ்ச்சியோடு வாழும் தன்மையை அவர்களும் பெற்றிருக்கிறார்கள். என்னிடம் மிகுந்த பற்றுதலும் பாசமும் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே குடும்ப வாழ்க்கை சீராகப் போகிறது. அண்ணியும் பொறுப்புடனும் பொறுமையோடும் உழைப்பாற்றலோடும் அனைத்து அலுவல்களையும் கவனித்து, பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து மனக்குறையின்றிக் குடும்பத்தை நிர்வகிக்கிறார்.

அண்ணா இறந்ததும், அவர் குடும்பத்தின் பொறுப்பு என்கிற பெரும் சுமை என்மீது படிந்துவிட்டதாக என் நண்பர்களும் மற்றவர்களும் கருதினார்கள். என்மீது அனுதாபம் கொண்டார்கள். பொருளாதார ரீதியில் எனக்கு உதவவேண்டும் என்று கருதினார்கள். ஆகவே எழுத்தாள நண்பர்கள் பெரிதும் முயன்று நிதிவசூல் செய்து ஒரு விழா ஏற்பாடு செய்து முப்பத்தையாயிரம் ரூபாயை அன்புடன் என்னிடம் தந்தார்கள். அவர்களது அன்பும் பண்பும் உதவிபுரியும் மனமும் என்னை உளம் நெகிழச் செய்தன.

அதன்பிறகு எனக்கு நிதி உதவி கிடைத்தவாறிருந்தது. நண்பர்கள் தமிழ்ப்புத்தகாலயம் அகிலன் கண்ணனும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முத்துக்குமாரசுவாமியும் முயன்று, 1992 ஜனவரியில் நடந்த சென்னைப் புத்தகக் கண்காட்சியில் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் என்னைப் பாராட்டி இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவினர்.

அவ்வப்போது என் புத்தகங்கள் பிரசுரம் பெற்றுக்கொண்டிருந்ததும் எனது மகிழ்ச்சியை அதிகப்படுத்தியது

டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் என் சிறுகதைகள் சிலவற்றை 'அருமையான துணை' என்ற தொகுப்பு ஆகவும், மூன்று குறுநாவல்களை 'மன்னிக்கத் தெரியாதவர்' எனும் நூலாகவும், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியீடுகளாகப் பிரசுரித்தார்.

'தீபம்' இதழில் தொடர்ந்து வெளிவந்த 'தமிழில் சிறு பத்திரிகைகள்' கட்டுரைகளைக் குழ. கதிரேசன் ஐந்திணைப் பதிப்பகம் வெளியீடாக நூலாக்கினார்.

பூங்கொடி பிரசுரம் சுப்பையா என் சிறுகதைகள் சிலவற்றைத் தொகுத்து 'மனிதர்கள்' என்ற பெயரில் புத்தகமாக்கினார். குறிஞ்சிப்பாடி மணியன் பதிப்பகம் நண்பர் சம்பந்தன் என் கதைகளை 'வல்லிக்கண்ணன் கதைகள்' என்ற பெயரில் வெளியிட்டார்.

ஏற்கனவே 1954இல் கயிலைப் பதிப்பகம் 'வல்லிக்கண்ணன் கதைகள்' என்றொரு சிறு நூல் வெளியிட்டுள்ளது. அதில் இல்லாத சிறுகதைகள்தான் மணியன் பதிப்பகம் வெளியீட்டில் இடம் பெற்றுள்ளன. வியாபார விளம்பரக் கவர்ச்சிக்காகப் பதிப்பக நண்பர் இந்தப் பெயரைத் தேர்ந்துகொண்டார்.

இவற்றுடன் நேஷனல் புக்ட்ரஸ்ட் 'ஆர்மேனியன் சிறுகதைகள்' தொகுப்பையும் 1991இல் தான் கொண்டுவந்தது. எட்டு வருடங்களுக்கு முன்பு நான் மொழிபெயர்த்துக் கொடுத்த கதைகள். ஆர்மேனிய எழுத்தாளர்கள் பலர் எழுதிய அருமையான சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல்.

இப்படி 1991 பலநூல்கள் வெளிவந்த காலகட்டமாக அமைந்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

நான் வழக்கம்போல் வெளியூர்களுக்குப் போய் வந்து கொண்டுதான் இருந்தேன். வருடம் தோறும் ராஜவல்லிபுரம் போய், அங்கிருந்த பெரிய வீட்டில் ஓரிரு மாதங்கள் தங்கி, அவ்வீட்டின் தனிமையையும் அமைதியையும், தாமிரவர்ணி ஆற்றுக் குளிப்பையும் அனுபவித்து மகிழ்வதை என் வாழ்க்கை முறைகளில் ஒன்றாகக் கொண்டிருந்தேன்.

அந்தப் பெரிய வீடு திருநெல்வேலி அல்லது பாளையங்கோட்டை நகரில் இருந்தால் பலநூறு ரூபாய் வாடகை பெற்றுத்தரும். விற்பதென்றால், அதன் மதிப்பு அநேக லட்சங்களாகவும் இருக்கும்.

ஆனால் ராஜவல்லிபுரம் கிராமத்தில் அது ஐம்பது ரூபாய் வாடகை கூடப் பெற்றுத் தர முடியாது. அச்சிற்றூர் வளர்ச்சி இல்லாத நிலையிலேயே, மாற்றங்களற்று, இருந்தது. பக்கத்தில் இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள

தாழையூத்து சிமென்ட் கம்பெனி, நூற்பாலைகள், பாலிடெக்னிக் முதலியன தோன்றிச் செழித்த காரணத்தால் காலவேகத்தோடு பிரமாத வளர்ச்சி பெற்றுவிட்டது. சங்கர்நகர் என்ற பெயரும் பெற்று, டவுன்ஷிப் அந்தஸ்து ஏற்று, பரபரப்பும் ஜனநெருக்கமும் கூடிய பகுதி ஆகியுள்ளது.

வாடகை அதிகம் வராது; வாடகைக்குக் குடியிருக்க வருகிறவர்கள் வீட்டை நன்கு பேணமாட்டார்கள் என்பதால் அந்த வீட்டை பெரிய அண்ணாச்சி காலத்திலேயே வாடகைக்கு விட்டதில்லை. நானும் வாடகைக்கு விடவேண்டாம் என்றே சொல்லி வந்தேன்.

வீட்டில் முத்தம்மாள் எனும் இசக்கி என்கிற முதியவள் இருந்துவந்தாள். வீட்டைப் பெருக்கி, அவ்வப்போது மெழுகிச் சுத்தமாக வைத்துக் கொண்டிருந்தாள். என் அம்மா காலத்திலிருந்தே அவ்வீட்டில் வேலைக்காரியாக இருந்தவள். அம்மாவும் அண்ணாச்சியும் சாகிற காலத்தில் இசக்கி எப்போதும்போல் இந்த வீட்டிலேயே இருக்கட்டும்; அவள் சாகிறவரை இருந்து விட்டுப்போகட்டும் என்று சொல்லியிருந்தார்கள்.

அவர்களது கடைசி கால விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அண்ணா கோமதிநாயகமும் நானும் அவளை அவ்வீட்டில் தங்கவைத்திருந்தோம். ஏதேனும் பணம் கொடுத்து அவளை அனுப்பிவிடும்படி உறவுக்காரர்கள் யோசனை கூறினார்கள். நாங்கள் இசையவில்லை. மாதம்தோறும் அவளுக்குப் பணம் அனுப்பி உதவினோம். நான் ஊரில் போய்த் தங்குகிற மாதங்களில் தாராளமாக அனைத்துப் பொருள்களும் வாங்கிக் கொடுப்பதுடன், பணமும் நிறையவே கொடுத்துவந்தேன்.

அவள் பண ஆசை பிடித்தவளாக இருந்தாள். பொய்க் காரணங்கள் கூறி இருபது முப்பது என்று பணம் கேட்டுவாங்குவதை வழக்கமாக்கினாள். நான் அங்கு போகாத காலங்களில் வீட்டுச் சாமான்களை எடுத்து விற்றுக் காசாக்கினாள். அவள் மகளுக்கும் பேத்திக்கும் நெல்லாகவும் பொருள்களாகவும் கொடுப்பதில் ஆர்வம் கொண்டாள். அத்துடன், வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டு, அந்தப் பணத்தையும் அவளே எடுத்துக்கொண்டாள்.

நான் அங்குப் போன சமயத்தில், பெரிய வீட்டில் ராத்திரி நேரங்களில் தனியாக இருப்பதற்குப் பயமாக இருந்தது; அதனாலே துணைக்காக அவர்களைக் குடியிருக்கச் சொன்னேன் என்று விளக்கம் கூறினாள்.

வாடகைக்கு வந்திருந்தவர்கள் எருமை மாடுகள், ஆடுகள், கோழிகள் வளர்த்தார்கள். வீட்டின் சூழ்நிலையையே கெடுத்து அசிங்கப் பரப்பாக்கினார்கள். காலி பண்ணச் சொன்னாலும், காலி பண்ணிப் போவதாக இல்லை.

அதனால் அங்குப் போய் நீண்ட நாட்கள் தங்குவது எனக்குப் பிடிக்காத விஷயம் ஆகிவிட்டது.

முத்தம்மாள் அந்த வீட்டிலேயே தங்குவதுமில்லை. அடிக்கடி மகள் வீட்டுக்குப் போய்விடுவாள். அல்லது அங்கே கல்யாணம், இங்கே கோயில் கொடை என்று சொல்லி எங்காவது ஊர்வழி போய் இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிடுவாள்.

அதனால் வீடு கவனிப்பற்றுக் கிடக்கலாயிற்று. ஒரு சமயம் இரண்டு வருடங்கள் நான் அங்கே போய்த் தங்கவில்லை. பிறகு போனபோது அதிர்ச்சியும் மனவேதனையும் தரும் நிகழ்ச்சி நடந்திருந்தது.

பெரிய அறையின் பெரிய சுவர் அலமாரியில் மதிப்பு மிக்க புத்தகங்கள், எழுத்துப் பிரதிகள் முதலியவற்றைப் பாதுகாப்பாக வைத்திருந்தேன். இன்னோர் அறையில், மூடிகள் இல்லாத இரும்பு அலமாரியில் பலவிதமான நூல்கள், சிற்றிதழ்கள், கையெழுத்துப் பத்திரிகைகள், நோட்டுகள் முதலியன அடுக்கியிருந்தேன்.

ஆள்நடமாட்டம் இல்லாத இருண்டவீடாக அதுமாறியிருந்ததால், பகலில் கூடத் தடித்தடி எலிகள் சுதந்திரமாக உலாவின. திறந்த அலமாரியில் காகிதக் கட்டுகளுக்கிடையே குடியிருந்தன. புத்தகங்கள் பத்திரிகைகள் எழுத்து நோட்டுகளைக் கண்டபடி கடித்துக் குதறி நாசப்படுத்தியிருந்தன. எலி மூத்திரமும் புழுக்கைகளும் சேர்ந்திருந்த நாற்றம் சகிக்க முடியாததாக இருந்தது.

பெரிய அறையின் சுவர் அலமாரியைத் திறந்து பார்க்கையில் மிகுந்த துயரவேதனை உண்டாயிற்று,. ஐம்பது வருட காலமாகச் சேகரித்து சேமித்திருந்த அரிய நூல்கள் எல்லாம் கறையானால் முற்றிலும் அழிக்கப்பட்டிருந்தன. தற்காலத்தில் கிடைக்க முடியாத இலக்கியச் செல்வங்கள் அவற்றுடன், நான் எழுதிய புத்தகங்களின் பிரதிகளும் அலமாரியில் இருந்தன. அவை அனைத்தும் கறையானுக்கு இரையாகிப் போயிருந்தன.

ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. துயரத்தால் நெஞ்சு கனத்தது. வருத்தப்பட்டு என்ன பயன்? போனவை போனவை தானே!

அந்த வீடும், வயல்கள் தோட்டம் முதலியனவும் பாகம் செய்யப்படாத பொதுச் சொத்தாகவே இருந்தன. பெரிய அண்ணாச்சி வாழ்ந்த காலத்திலேயே, வயல்களை ஒவ்வொன்றாக விற்க வேண்டிதாயிற்று. தோட்டமும் விலை போயிற்று. எஞ்சியிருந்த சிறிதளவு நிலத்தையும், அண்ணாச்சி இறந்த சில வருடங்களில் விற்பனை செய்து, வந்த பணத்தை மூன்று பங்குகளாகப் பிரித்துக் கொண்டோம். அண்ணா கோமதி நாயகம், நான், பெரிய அண்ணாச்சி மகள் சண்முக வடிவு ஆகிய மூவருக்கும் சமபங்கு.

அண்ணாச்சி மகள், கணவன் மற்றும் மகன்களோடு கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையில் வசித்துவந்தாள். வருடத்தில் இரண்டு மூன்று முறை திருநெல்வேலி மாவட்டம் வந்து உறவினர்கள் வீடுகளுக்குப் போய்விட்டு, ராஜவல்லிபுரம் போவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தாள். அப்போதெல்லாம் முத்தம்மாளுக்குத் தாராளமாகப் பணம் கொடுத்து உதவினாள்.

மகளுக்கு ராஜவல்லிபுரம் வீட்டையும் விற்றுவிட வேண்டும் என்ற எண்ணம் சில வருடங்களாகவே ஏற்பட்டிருந்தது. நான்தான் மறுத்து வந்தேன். நான் உயிரோடு இருக்கிறவரை இந்த வீடு நம்முடையதாகவே இருக்கட்டுமே என்று சொல்லி வந்தேன்.

காலப்போக்கில் அந்த வீடு எனக்கு இதம் தரும் இடம் எனும் தன்மையையே இழந்துவிட்டதால்-இழக்கும்படி மனிதர்கள் ஆக்கிவிட்டதால் ராஜவல்லிபுரம் வீட்டின் மீது எனக்கிருந்த பிடிப்பு விடுபட்டுப் போயிற்று. நான் திருநெல்வேலிக்குப் போனாலும், தி.க. சிவசங்கரன் வீட்டில் தங்கினேன். அங்கிருந்து ஒரு நாள் ராஜவல்லிபுரம் போய் வீட்டையும் ஆற்றையும் பார்த்துவிட்டு ஓர் இரவு மட்டும் அங்குத் தங்கிவிட்டு வரவே மனம் இடம் தந்தது.

எனவே, வீட்டை விற்றுவிடலாம், வேண்டிய எற்பாடுகளைச் செய்துகொள் என்று மகளிடம் சொல்லிவிட்டேன். அவள் முயன்று, பேசி முடித்து, வீட்டைத் தொண்ணூறாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தாள் 1998இல். பணம் மூன்று பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. முத்தம்மாளுக்கு அன்பளிப்பாக இரண்டாயிரம் ரூபாய் அளித்தோம்.

அந்த வீட்டின் சாவியை வீடு வாங்கியவரிடம் கொடுத்தபோதே எனக்கு அந்த வீட்டுடன் மட்டுமல்ல, அந்த ஊருடனேயே இருந்த தொடர்பும் பற்றுதலும் முடிந்துவிட்டன எனும் உணர்வே மனசில் எழுந்தது.

அதன் பிறகு நான் திருநெல்வேலி போக நேர்ந்த போதெல்லாம், ராஜவல்லிபுரம் போகவேண்டும் என்று சொல்லிக் கொண்டாலும், அங்கே போக உந்துதல் எழவேயில்லை. ராஜவல்லிபுரத்துக்கு நான் அந்நியமாகிப் போனேன். சுதந்திரமாய்ப் போய் உரிமையுடன் வீட்டைத் திறந்து, பையை வைத்துவிட்டு, சட்டையைக் கழற்றி ஆணியில் தொங்கப் போட்டுவிட்டு ஹாயாக ஆற்றுக்குப் போகிற ஒரு தன்மை எனக்கு இல்லாமல் போய்விட்டது என்றொரு உணர்வே என்னுள் நிலவுகிறது.

வீடு விற்பனை செய்வதற்கு முன்னர், வீட்டில் இருந்த பெரிய பித்தளை மற்றும் வெண்கலப் பாத்திரங்களை எல்லாம் பெரிய அண்ணாச்சி மகள் சண்முகவடிவும், அண்ணா அசோகனின் பெரிய மகள் சண்முகவடிவும் வண்டியில் ஏற்றி திருநெல்வேலிக்கு எடுத்துப் போய், பாத்திரக்கடையில்

விலைக்குக் கொடுத்துவந்தார்கள். கட்டில், ஊஞ்சல், பெஞ்சுகள், பெட்டிகள் முதலிய மரச்சாமான்களை விலைக்குக் கேட்ட உள்ளூர்க்காரர்கள் சிலரிடம் விற்றோம். அநேகம் பொருட்களை இனாமாகவே சிலருக்கு வழங்கினோம்.

சுவர்கள் முழுக்கத் தொங்கிய போட்டோக்களையும் இதர படங்களையும், எஞ்சிய புத்தகங்கள் எழுத்து நோட்டுக்களையும் என்ன செய்வது என்பதே எனக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. அதனாலேயே வீடு விற்கிற யோசனையை நான் ஏற்றுக் கொள்ளாமலே தட்டிக்கழித்துக் கொண்டிருந்தேன். இவற்றை எல்லாம் எங்கே கொண்டு பாதுகாப்பாக வைத்திருப்பது என்ற கவலை எனக்கு.

என் வாழ்நாளில் எனக்குச் சித்திக்காமல் போன ஒன்று, எனது புத்தகங்கள் அனைத்தையும், என் எழுத்துப்பிரதிகள் மற்றும் அச்சில் வந்தவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வைத்துக்கொள்ள வசதி செய்யும் ஒரு சிறு வீடு. அப்படி பாதுகாப்பான, வசதியான ஓர் இடத்தைத் தேடிக்கொள்ள முடியாமல் போனதனாலே என்னுடைய புத்தகங்கள் சென்னையிலும், ராஜவல்லிபுரம் வீட்டிலுமாகக் கிடக்க வேண்டிய நிலை. புத்தகங்களைத் தேவைப்படுகிறபோது விருப்பம்போல் எளிதில் எடுத்துக்கொள்ளக்கூடிய விதத்தில் அடுக்கி வைப்பதற்கான வசதிகள் இல்லாமல் போயிற்று. ஒரு புத்தகம் அல்லது எழுத்துப் பிரதி, அல்லது அச்சில் வந்த நறுக்கு அல்லது பத்திரிகை தேவைப்படுகிறபோது, தற்சமயம் அடுக்குகள் பலவற்றை எடுத்துக் குழப்பித் தேடி அவதிப்பட வேண்டியிருக்கிறது.

புத்தகங்களை வைத்துப் பாதுகாக்கப் போதிய வசதிகள் இல்லாததால் நான் படிக்கிற புத்தகங்களையும் இதழ்களையும் படித்து முடித்ததும் யாருக்காவது வழங்கிவிடுகிறேன்.

மதிப்பு மிக்க ஆங்கில நூல்களை விரும்பிப் படித்து ரசிக்கக் கூடியவர்கள் எவருமிலர். இனி வரும் காலத்தில் இந்நிலை மேலும் மோசமாகவே செய்யும்.

சேர்த்து வைத்த ஆங்கில இலக்கிய நூல்களை எந்தக் கல்லூரி நூலகத்துக்காவது கொடுத்துவிடலாம் என்றால், அவற்றை வைப்பதற்குப் பாதுகாப்பான அலமாரிகளையும் நாம் கொடுக்க வேண்டும் என்று கல்லூரிகள் எதிர்பார்க்கின்றன என்று ஓர் அன்பர் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

ராஜவல்லிபுரத்தில் கறையான் தின்றவை, எலிகள் குதறியவை போக எஞ்சியிருந்த நூல்களையும் எழுத்துப் பிரதிகளையும் தமது வீட்டில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முடியும் என்று கூறி இனிய நண்பர் கி. ஸ்ரீதர் உதவிபுரிய முன்வந்தார்.

திருநெல்வேலி ஸ்ரீதர் ஸ்டேட் பேங்கில் பணிபுரிகிறார். நல்ல இலக்கிய ரசிகர். படிப்பதில் மிகு ஆர்வம் கொண்டவர். சளைக்காமல் புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்கிப் படித்து, அவற்றைப் பாதுகாக்கும் இயல்பினர். அவர் வீடு நிறையப் புத்தகக் கட்டுகளே இருக்கின்றன. அவற்றோடு எனது புத்தகங்களையும் பத்திரமாக வைத்துக் கொள்வதாக அவர் உறுதி அளித்தார்.

வீட்டின் சாவியைப் புதிய சொந்தக்காரருக்கு நாங்கள் அளிக்கிற நாளில் நண்பர் ஸ்ரீதரும் ராஜவல்லிபுரம் வந்தார். புத்தகங்களைக் கட்டுகள் கட்டுகளாகக் கட்டி, கோணிப்பைகளில் அடைத்து மூட்டைகளாக்கி அவற்றை ஓர் ஆட்டோவில் வைத்துத் திருநெல்வேலியில் அவருடைய வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார். மற்றொரு முறை சென்று வீட்டில் சுவர்களிலிருந்து கழற்றி வைத்திருந்த படங்கள் அனைத்தையும் கொண்டு சேர்த்தார்.

1998 முடிய, நான் திருநெல்வேலி செல்கையில் தி.க.சி. வீட்டில் தங்கினேன். அன்புச் சகோதரர் தி.க.சிவசங்கரனும் அவர் மனைவியும், நான் எத்தனை நாட்கள் தங்கினாலும், மனம் கோணாமல் பரிவுடன் உபசரித்து மகிழ்ந்தார்கள். பின்னர், தி.க.சிக்கு நீடித்திருக்கும் நோய்கள் காரணமாகவும், அவர் மனைவிக்கு உள்ள நோய்களின் பாதிப்பால் ஏற்படும் பலவீனங்களினாலும், அதிகமாக வேலைகள் செய்ய முடியாத நிலை உண்டாயிற்று. அதனால் நண்பரே என்னை ஸ்ரீதர் வீட்டில் தங்கும்படி ஆவனசெய்தார்.

ஸ்ரீதரும் விரும்பி அழைத்து அன்புடன் உபசரித்தார். அவர் வீடு சகல வசதிகளையும் தன்னுள் கொண்டிருக்கிறது. எவ்விதமான தொந்தரவும் இல்லாது தனித்திருப்பதற்கு ஏற்ற அமைதியான இடம். படிப்பதற்கு -படித்தாக வேண்டிய - புதிய புதிய புத்தகங்களும் மிகுதியாக இருக்கின்றன. அவருடைய அம்மாவும் தங்கையும் படிப்பதில் பிரியம் உடையவர்கள். பரிவும் அன்பும் காட்டி இனிது உபசரிக்கும் பண்பினர். அவர்கள் வீட்டில் நான் அந்நியன் என்ற உணர்வு எனக்கு ஏற்படுவதில்லை.

1999லும் அதற்குப் பின்னரும் நான் திருநெல்வேலி போன போதெல்லாம் ஸ்ரீதர் வீட்டில்தான் தங்கினேன். ஏகப்பட்ட புத்தகங்கள் படித்து மகிழ்வதற்கான வாய்ப்பு அதிகம் கிட்டியது.

ஸ்ரீதர் பயணங்கள் போவதிலும் ஆர்வம் உடையவர். ஆண்டுதோறும் எங்காவது நீண்ட தூரம் பயணம் போய் வருவது அவருடைய இயல்புகளில் ஒன்றாகும். 2000இல் அவர் இமயம் சேர்ந்து கைலாசம் - மானசரோவர் யாத்திரை முடித்துத் திரும்பினார். அங்குத் தான்கண்ட அழகான காட்சிகள் அனைத்தையும் ஃபோட்டோ எடுத்து வந்திருந்தார். திறமையாக எடுக்கப்பட்ட பல நூறு படங்கள். மனோரம்மியமான மலைக்காட்சிகள் அவை.

44

என் வாழ்க்கையில் நான் பெற்றுள்ள நற்பேறுகள் பலவற்றுள்ளும் முதன்மையானது எண்ணற்ற இனிய நண்பர்களை அடைந்திருப்பதே ஆகும். அநேக நண்பர்களைப் பற்றி வரலாற்றில் அங்கங்கே குறிப்பிட்டிருக்கிறேன்.

அப்படிக் குறிப்பிடப்படாத சில நண்பர்கள் பற்றி நினைத்துப் பார்க்கிறேன்.

சிலர் அறிமுகமாகி மிக நெருக்கமாகப் பழகுகிறார்கள். அடிக்கடி கடிதங்கள் எழுதியும் அவ்வப்போது நேரில் வந்து பேசி மகிழ்ந்தும் நட்பை வளர்க்கிறார்கள். திடீரென்று ஏனோ தொடர்புகொள்ளாமலே போகிறார்கள். கடிதங்கள் எழுதினாலும் பதில் எழுதுவதுமில்லை. இதற்கு அவர்களுடைய குடும்பப் பிரச்சினைகள், பல்வேறு நெருக்கடிகள், மனக்குழப்பங்கள் முக்கிய காரணமாக இருக்கலாம்.

இத்தகைய நண்பர்களைப் பற்றி எண்ணுகிறபோது எனக்கு முதலில் நினைவில் எழுகிறவர் மு. நாகரத்தினம்தான். இவரைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து, நத்தம் லிங்கன். இவர் நல்ல கதைகள் எழுதக் கூடிய திறமையாளர். ஒரு காலத்தில் 'தாமரை'யில் சிறப்பான கதைகள் எழுதிக்கொண்டிருந்தார். பின்னர் அவை தொகுக்கப்பட்டு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடாக வந்தது. அதற்குப் பிறகு அவர் கதை எழுதுவதையே விட்டுவிட்டார். தாமரையில் லிங்கன் சிறுகதைகள் வந்து கொண்டிருந்தபோது, ஒரு மாதத்தில் இலக்கியச் சிந்தனைக்காக அவருடைய கதையை அந்த மாதத்தின் சிறந்த சிறுகதையாக நான் தேர்வு செய்திருந்தேன். அது முதல் அவர் என்னோடு கடிதத்தொடர்புகொண்டார். அன்புடன் அவருடைய ஊருக்கு வரும்படி அழைத்தார். நான் நத்தம் சென்று அவர் வீட்டில் சில நாட்கள் தங்கினேன்.

அவர் பெயர் மகாலிங்கம். கிராம நல அதிகாரியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் நாடகத்திலும் அவர் ஆர்வம் காட்டினார். திண்டுக்கல் அருகே உள்ள காந்தி கிராமத்தில் பேராசிரியர் ராமானுஜம் நடத்திய முதலாவது நாடகப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டவர்களில் லிங்கனும் ஒருவர். ஆனால், பயிற்சி பெற்றதற்குப் பின்னர் நாடகம் எழுதுவதிலோ நடிப்பதிலோ அவர் அக்கறை காட்டவில்லை. சிறுகதைகள் மட்டும் எழுதிக் கொண்டிருந்தார். ஆங்கிலத்தின் மூலம் உலக இலக்கியங்களைக் கற்றறிவதிலும் அவர் சிரத்தை கொண்டிருந்தார்.

அவருடைய பாசமும் பிரியமும் நிறைந்த அழைப்புகளை ஏற்று நான் மூன்று நான்கு முறைகள் அவர் விருந்தாளியாகச் சென்று அவர் வீட்டில் தங்கியிருக்கிறேன். திடீரென்று அவர் தொடர்புகளை அறுத்துக்கொண்டார். அப்புறம் கதைகள் எழுதுவதையும் விட்டுவிட்டார். நற்பண்புகள் கொண்ட நல்ல மனிதர் அவர்.

அதே மாதிரிதான் வேலூர் ந.க. துறைவன் என்ற நண்பரும் நடந்துகொண்டார். மின்வாரியத்தில் பணிபுரியும் அவர் கவிதைகள் எழுதுபவர். அன்புடன் அவராகத் தேடிவந்தார். பல தடவைகள் வந்திருக்கிறார். உற்சாகமாகக் கடிதங்கள் எழுதுவார். சில வருடங்கள் என் பிறந்தநாளின்போது வந்து அன்பளிப்புகள் வழங்கினார். தொடர்பு கொண்டது போலவே அவராகவே ஒரு நாள் நட்புறவை நிறுத்திக் கொண்டார். எழுதிய கடிதங்களுக்குப் பதிலும் எழுதுவதில்லை. எனினும், சிற்றிதழ்களில் அவ்வப்போது கவிதைகள் எழுதுவதை அவர் நிறுத்திவிடவில்லை.

தொடர்பு கொண்டு நீண்ட காலமாக நட்பை வளர்த்து வருகிறவர்களில் திண்டுக்கல் மா. கமலவேலன் முக்கியமானவர். பள்ளி ஆசிரியர். நல்ல முறையில் சிறுகதைகள், வாழ்க்கை வரலாறுகள், நாடகங்கள், குழந்தைகளுக்கான கதைகள் எழுதும் திறமையாளர். இவருடைய சிறுகதைகள் பலதொகுதிகளாக, மணிவாசகர் பதிப்பகம் வெளியீடுகளாகப் பிரசுரம் பெற்றிருக்கின்றன. ரேடியோ நாடகங்கள் பல எழுதி, அவை ஒலிபரப்பாகிப் பாராட்டுகள் பெற்றுள்ளன. குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணன் வாழ்க்கை வரலாறும் மற்றும் சில வரலாற்று நூல்களும் இவரால் எழுதப்பட்டிருக்கின்றன. சென்னைக்கு வரும்போதெல்லாம் இவர் இங்கு வீட்டுக்கு வந்து பிரியமுடன் பேசிச் செல்வது வழக்கம். நான் ராஜவல்லிபுரத்தில் இருந்த நாட்களிலும், திருநெல்வேலியில் தங்கும்போதும் என்னைக் கண்டு பேசி மகிழ்வதற்காகவே கமலவேலன் திண்டுக்கல்லில் இருந்து, வந்து செல்வது உண்டு. நானும் திண்டுக்கல் சென்று அவரது விருந்தாளியாகப் பல முறைகள் தங்கியிருக்கிறேன். எனது ஒவ்வொரு பிறந்தநாளின்போதும் தவறாது வாழ்த்துத் தந்தி அனுப்பிக் கொண்டிருக்கிற பண்பாளர் இவர்.

எழுத்தாளர் கமலாலயன் திறமையான சிறுகதைகள், குறுநாவல்கள் எழுதியிருப்பவர். முற்போக்குச் சிந்தனை உடைய செயல்வீரர். தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர். சங்க விசேஷ நிகழ்ச்சிகள் எந்த ஊரில் நடைபெற்றாலும், தவறாமல் போய் கலந்து கொள்ளும் ஆர்வலர். திண்டுக்கல்லைச் சேர்ந்த இவர் அநேக வருடங்கள் வேலூரில் தொழில் துறையில் ஈடுபட்டிருந்தார். பிறகு அறிவியக்கப் பணிகளில் முனைந்து அந்த இயக்கத்துக்காக உழைக்கலானார். தற்போது சென்னையில் பணிபுரிகிறார். நல்ல நண்பர்.

வந்தவாசி தன. இல. சிவகுமார் இலக்கிய தாகம் கொண்ட இளைஞர். சிரமங்களோடு சிகரம் தொட வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் பூங்குயில் என்ற சிற்றிதழை நடத்துகிறார். தரமான இலக்கிய இதழாக அது கால ஒழுங்கற்று வந்து கொண்டிருக்கிறது. என்னிடம் மிகுந்த பற்றுதல் கொண்ட இனிய நண்பர். கவிதைகள், கட்டுரைகள் எழுதுகிறார். ஒரு முறை அன்புடன் என்னை வந்தவாசிக்கு அழைத்து அவரும், பூங்குயில் துணை ஆசிரியர் அ. வெண்ணிலாவும் விசேஷமாக ஒரு பாராட்டு விழா நடத்தி, பணமுடிப்பும் அளித்தது என்றும் நினைவில் நிற்கும் நிகழ்ச்சி ஆகும்.

ம.ந. ராமசாமி நாற்பது வருடங்களுக்கும் மேலாகவே நட்புறவு கொண்டிருப்பவர். முதலில் சென்னையில் அரசு பொதுப் பணித்துறையில் வேலை பார்த்தார். அதை விட்டு விட்டு, திருச்சி தனியார் நிறுவனத்தில் மேலாளராகப் பதவி ஏற்றுப் பல வருடங்கள் உழைத்தார். கவிதை, புதுமையான சிறுகதைகள், சிந்தனை நிறைந்த குறுநாவல்கள், நல்ல நாவல்கள், குழந்தை இலக்கியம், நகைச்சுவைக் கதைகள் கட்டுரைகள் என்று பல வடிவங்களிலும் தரமான படைப்புகளை உருவாக்கியவர். இப்போதும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார். அவர் திருச்சியில் வசித்தபோது நான் அவர் வீட்டில் விருந்தாளியாகத் தங்கியிருக்கிறேன். தற்சமயம் அவர் கோயம்புத்தூரில் வசிக்கிறார். தொடர்ந்து கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார். சர்ச்சைகளைத் தூண்டும் விதத்தில் புதிய கருத்துக்களை வெளிப்படுத்தும் எழுத்துக்களை எழுதுவதில் உற்சாகமுடைய நண்பர்.

ஆ. பழநியப்பன் முன்னொரு காலத்தில் தாமரை இதழில் ஆசிரியர் குழுவில் பணியாற்றிவர். தி.க.சிவசங்கரன், எம்.கே. இராமசாமி, ஆ. பழநியப்பன் ஆகிய மூவரும் ஆசிரியர் குழுவாக இயங்கித் தயாரித்த பத்து ஆண்டு காலத்திய நூறு இதழ்கள் தாமரையின் வரலாற்றிலேயே மிகச் சிறப்பானவையாகும் என்று புகழப்பட்டுள்ளன. ஆ.ப. சிறுகதைகள், தொடர்கதைகள் அதிகம் எழுதியுள்ளார். அவை புத்தகங்களாக வெளிவரவில்லை. 'காவேரிக் கரையினிலே' என்ற நாவல் மட்டும் பிரசுரம் பெற்றது. இப்போது அவர் மோகனூரில் வசிக்கிறார். விடாது சுவாரசியமான கடிதங்கள் எழுதுகிறார்.

சுப்ரபாரதிமணியன் திருப்பூரைச் சேர்ந்தவர். சென்னையில் அவர் பயிற்சி பெற்ற காலத்தில் அவராக வந்து அறிமுகம் செய்து கொண்டார். தொலைபேசித் தொடர்புத் துறையில் பணிபுரிகிறார். அதனால் பல்வேறு இடங்களுக்குப் போக நேர்ந்தது. சேகந்தராபாத்தில் பல வருடங்கள் வசித்தார். 'கனவு' என்ற சிற்றிதழைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்துகிறார். கவிதை, கதை, நாவல், பயணக் கட்டுரை என்று அதிகம் எழுதியுள்ளார். திருப்பூர் பனியன் தொழிற்சாலைக் கழிவுகளால் சுற்றுப்புறச் சூழ்நிலையும் மனிதர் வாழ்க்கையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதை அடிப்படையாக்கி, 'சாயத்திரை' என்ற நாவலைப் படைத்திருக்கிறார். அது பரவலான கவனிப்பையும் பாராட்டுகளையும் பெற்றுத் தந்திருக்கிறது. இனிய நண்பர்.

திருப்பூர் கிருஷ்ணன் முக்கியமான நண்பர்களில் ஒருவர். 'தீபம்' பத்திரிகை காலத்தில் அறிமுகமானவர். அதன் பிறகு அவர் 'தினமணி'யில் சேர்ந்து பல வருடங்கள் பணிபுரிந்தார். பின்னர் அம்பலம் என்கிற மின் இணைய இதழில் ஆசிரியராகச் செயலாற்றினார். தற்சமயம் 'சென்னை ஆன் லைன்' என்ற இணைய இதழில் ஆசிரியராக இருக்கிறார். பன்முக ஆற்றல் பெற்றவர். நல்ல சிறுகதைகள், ரசமான கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள் எழுதக் கூடியவர். அருமையான பேச்சாளர். சிறந்த பண்பாளர். நண்பர்களிடம் அன்பும் பாசமும் காட்டும் நல்ல மனிதர்.

தீபம் இலக்கியக் குடும்பத்தைச் சேர்ந்த அ.நா. பாலகிருஷ்ணன் இலக்கியவாதிகளின் நண்பர். நா. பார்த்தசாரதியிடம் அன்பும் அபிமானமும், மதிப்பும் மரியாதையும் கொண்டவர். நா.பா.வின் மறைவுக்குப் பிறகு ஒவ்வோர் ஆண்டும் அவரது நினைவு நாளைத் தமது சொந்தப் பொறுப்பில் நடத்துகிற இலக்கிய அபிமானி. நா.பா.வின் நினைவை நிலை நிறுத்துவதற்காக, தீபம் இதழின் வரலாற்றை என்னைக் கொண்டு எழுதுவித்து, தீபம் யுகம் என்ற நூலாக வெளியிட்டவர். என்மீது மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டிருக்கிற இனிய நண்பர். எனது எண்பாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடத் தீவிரமாக முனைந்து, மயிலாப்பூர் வித்யாபவன் அரங்கில் சிறப்பாக 'முத்துவிழா' ஏற்பாடுசெய்து நடத்தினார். அச்சமயம் 'சிறியன சிந்தியாதான்-வல்லிக்கண்ணன்' என்ற தொகுப்பு நூலை உயர்ந்தமுறையில் தயாரித்து வெளியிட்டு என்னைப் பெருமைப்படுத்தினார்.

செ. யோகநாதன் ஈழத்தமிழ் எழுத்தாளர். அவர் தமிழ்நாட்டுக்கு வந்த புதிதில், பாளையங்கோட்டை பேராசிரியர் நா. வானமாமலை வீட்டில் எனக்கும் தி.க.சி.க்கும் அறிமுகமானார். அன்றிலிருந்து நட்பைப் பேணிவளர்க்கும் பண்பாளராக விளங்குகிறார். சிறுகதை, நாவல், குழந்தை இலக்கியம், சினிமா பற்றிய கட்டுரைகள், விமர்சனம் எனப் பல துறைகளிலும் அவர் தனது திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார். இலங்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எட்டுப் பாக நாவல் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டு அதன் முதல் பகுதியைப் பிரசுரித்துள்ளார். கடுமையான உழைப்பாளி. மூன்று வருடங்களுக்கு முன்பு இதயநோய் கண்டு, அறுவை சிகிச்சை பெற்றபின் மீண்டும் இலங்கை போயிருக்கிற இனிய நண்பர். அவ்வப்போது எனக்குக் கடிதம் எழுதுகிறார்.

தேவகாந்தன் மற்றொரு ஈழத்தமிழ் எழுத்தாளர். விசேஷமாகக் குறிப்பிடத் தகுந்தவர். கனமான குறுநாவல்கள் சிறுகதைகள் எழுதியிருப்பவர். இலங்கை வரலாற்றையும் விடுதலை இயக்கம் சார்ந்தவர்களையும் ஆதாரமாக வைத்து, கனவுச் சிறை எனும் ஐந்து பாக நாவலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அதன் மூன்று பகுதிகளை எழுதிப் பிரசுரித்திருக்கிறார். இலக்கு என்னும் சிறப்பான காலாண்டிதழை இரண்டு வருடங்கள் நடத்திய நல்ல நண்பர்.

தஞ்சை ப்ரகாஷ் திறமையான எழுத்தாளர். இலக்கியவாதிகளின் நண்பர். நல்ல கதைசொல்லி. பரந்த அனுபவஞானம் உடையவர். தரமான எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கும் ரசிகர். கள்ளம், கரமுண்டார்வூடு எனும் இரண்டு நாவல்களின் ஆசிரியர். அண்மைக் காலத்தில் மரணமடைந்தார்.

சோலை சுந்தரபெருமாள் தஞ்சாவூர், அம்மையப்பன் என்ற ஊரைச்சேர்ந்த இனிய நண்பர். பல நாவல்கள், சிறுகதைகள் படைத்தவர். வெண்மணி சம்பவத்தை வைத்து 'செந்நெல்' என்ற குறிப்பிடத் தகுந்த நாவலை எழுதியிருக்கிறார். தஞ்சை மாவட்ட எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்துத், தஞ்சைச் சிறுகதைகள் என்ற பெரிய தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்.

தஞ்சாவூரிலிருந்து சுந்தரசுகன் எனும் இலக்கிய மாத இதழை வெளியிடும் சுகன் - க.இ. சரவணன் மற்றொரு இனிய நண்பர். பல ஆண்டுகளாக, பெரும் இழப்பையும் கடுமையான உழைப்பையும் பொறுத்துபடுத்தாது அயராது, சோர்வுறாது, பத்திரிகையைத் தரமாகக் கொண்டுவருவதில் தீவிர ஆர்வம் காட்டும் இளைஞர். இவரது குடும்பம் முழுவதுமே ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் சுகன் இதழ் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பது போற்றுதலுக்கு உரியது. கவிதை, கதை, சூடான சிந்தனைக் குறிப்புகள் எழுதும் ஆற்றல் பெற்ற உற்சாகி இவர்.

பா. அமிழ்தன் தீபம் இதழில் கவிதைகள், கதைகள் எழுதிக் கவனிப்புப் பெற்றவர். திருநெல்வேலி மாவட்டம் கள்ளிகுளம் ஊரைச் சேர்ந்த இவர் பல ஆண்டுகள் குவெய்த்தில் தங்கிப் பணிபுரிந்தார். பம்பாயில் சில வருடங்கள் தொழில் செய்தார். பின்னர் சென்னைக்கு வந்து, இங்கேயே வேலை பார்க்கிறார். படிப்பதில் மிகுந்த ஆர்வம் உடைய இவர் ஆங்கில நூல்களை அலுப்பின்றிச் சுவைத்து மகிழ்கிறார். இவரது கவிதைகளும் சிறுகதைகளும் புத்தகங்களாகப் பிரசுரம் பெற்றிருக்கின்றன. தற்போது ஒரு நாவல் எழுதுவதில் முனைந்திருக்கிறார்.

இப்படி இன்னும் எத்தனையோ நண்பர்கள்.

45

தமிழ் நாட்டில் காலங்காலமாக நீடித்து வருகிற சூழ்நிலையும் மக்களின் இயல்புகளும் இலக்கியப் படைப்பாளிகளுக்கு உற்சாகம் தருவனவாக இல்லை என்றே சொல்ல வேண்டும். திறமையும் உழைப்பும் இங்கே போதிய கவனிப்பையும் உரிய மதிப்பையும் பெறுவதில்லை. சிலர் அபூர்வமாகக் கவனிப்புப் பெற்றாலும்கூடக் கால ஓட்டத்தில் சீக்கிரமே மறந்துவிடப்படுகிறார்கள்.

மகாகவி பாரதியார்கூட அவருடைய வாழ்நாளில் உரிய மதிப்பைப் பெறமுடிந்ததில்லை. அவருக்கு அடுத்த தலைமுறைகளில் வந்த கவிஞர்கள் பலரும் தங்களுடைய திறமையும் படைப்புகளும் கவனிப்பும் மதிப்பும் பெறாத-பெறமுடியாத நிலையில்தான் வாழ்ந்து மறைந்தார்கள்.

பாரதிக்கு அடுத்த தலைமுறையைச் சேர்ந்த கவிஞர் பாலபாரதி ச.து. சுப்ரமணிய யோகியார் நல்ல கவிஞர், விருத்தப்பாக்களில் அருமையான கவிதைகளையும் மரியா மகதலேனா என்ற சிறப்பான காவியத்தையும் படைத்தவர். அவருடைய படைப்புகளின் பெருமை எத்தனை பேரால் அறிந்து கொள்ளப்பட்டிருக்கிறது?

அதேபோல் கம்பதாசன் என்ற பெயரில் நல்ல கவிதைகள் புனைந்த சி.எஸ். ராஜப்பா தமிழன்பர்களால் மறக்கப்பட்டவரே. அவருடைய படைப்புகள் கவிதைவடிவில் மட்டுமல்லாமல் சிறுகதை, நாடகம், திரைப்படப் பாடல்கள் என்றெல்லாம் உருவாகி, ஒரு காலத்தில் கவனிப்புப் பெற்றிருந்தன. காலம் அவர் பெயரிலும் படைப்புகள்மீதும் மறதிப்புழுதியை அழுத்தமாகப் படியச்செய்திருந்தது.

பலப்பல வருடங்களுக்குப் பிறகு சிலோனின் விஜயேந்திரன் என்கிற நடிகர், திரைப்படங்களில் வாய்ப்புத்தேடி தமிழ்நாடு வந்து தங்கியவர், கம்பதாசனை நினைவுக்குக் கொண்டுவந்தார். அவரே கவிஞராகவும் சிறுகதை எழுத்தாளராகவும் கவிதை விமர்சகராகவும் இயங்கிக்கொண்டிருந்தார். அவர் கம்பதாசனின் பக்தராக-அவரது படைப்புகளின் தீவிர ரசிகராக இருந்ததனால் கவிஞரின் படைப்புகளைத் தேடிக்கண்டெடுத்து நல்ல பதிப்புகளாக அச்சிட்டு வெளியிடும் முயற்சியில் மும்முரமாக முனைந்தார். கம்பதாசனின் வரலாற்றை எழுதினார். கம்பதாசன் கவிதைகள், கம்பதாசன் திரைப்படப்பாடல்கள், கம்பதாசன் சிறுகதைகள் என்றெல்லாம், அரும்பாடுபட்டுப் புத்தகங்கள் கொண்டுவந்தார். அவற்றுக்கு வெளியீட்டு விழாக்களும் நடத்தினார்.

அதற்கு அடுத்த தலைமுறையில் வந்த தமிழ்ஒளி ஆற்றல் நிறைந்த நல்ல கவிஞர். அவர் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டார். ஒரு கட்டத்தில் தி.க.சிவசங்கரன் அவருக்குப் பெரிதும் உதவிபுரிந்துள்ளார். நெ.து. சுந்தரவடிவேலு எனும் தொழிலாளி கவிஞரின் நண்பராய், புரவலராய், அவருக்குப் பாதுகாப்பு அளித்துவந்தார். தமிழ்ஒளியின் கவிதைகள் சொல் அழகும் பொருள் நயமும் ஓட்டமும் உயிர்த்துடிப்பும் கொண்டவை. அவற்றின் சிறப்பு உணர்ந்த கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன் தமிழ்ஒளி கவிதைகளுக்குத் தமது பத்திரிகையில் முக்கிய இடம் தந்து தொடர்ந்து வெளியிட்டு வந்தார். தமிழ்ஒளி அகால மரணம் அடைந்தார்.

அவரது பெயரும் படைப்புகளும் மறக்கப்பட்டுவிட்டன. நீண்ட காலத்துக்குப் பிறகு, கவிஞரின் வாழ்நாளில் ஓர் சடையப்ப வள்ளலாய்

அவரைப் போற்றிக் காப்பாற்றிய சஞ்சீவி ஓர் அர்ப்பணிப்புடன் தமிழ்ஒளியின் கவிதைகளை நல்லநல்ல பதிப்புகளாக வெளியிட்டு, தமிழ் வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

வ.உ. சிதம்பரம் பிள்ளை அரசியல்வாதியாகவே பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகிறார். அவர் தீவிர அரசியலில் ஈடுபட்டுச் சிரமங்கள் பல அனுபவித்தவர்தான். பிரிட்டிஷ் ஆட்சியாளரை எதிர்த்து, பிரிட்டிஷாரின் வணிகத்துக்குப் போட்டியாகக் கப்பல்களை நெடுந்திரைக்கடலில் ஓட்டிக்காட்டிய பெருமை அவருக்கு உண்டு. அவற்றுடன் அவர் தமிழ்மொழியின் பக்தராகவும் இலக்கியவாதியாகவும் வாழ்ந்திருக்கிறார்.

அவர் செய்யுள் வடிவத்தில் நூல்கள் பல எழுதியிருக்கிறார். வ.உ.சி. அவரது சுயசரிதையையும் செய்யுளிலேயே எழுதியுள்ளார். உரைநடை நூல்கள் பலவற்றையும் எழுதியிருக்கிறார். தமிழ் மக்களின் உடல் அழகும் உள்ளத்தின் அழகும் மேம்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வ.உ.சி. ஆரோக்கியம் மற்றும் பண்பாட்டு உயர்வு பற்றி எல்லாம் சிறுசிறு நூல்கள் எழுதிவெளியிட்டார். சான்றோர் எனச் சிறப்புற்றிருந்த ஆங்கிலேய அறிஞர் ஜேம்ஸ் ஆலன் என்பாரின் அறநூல்களை வ.உ.சி. தமிழாக்கியிருக்கிறார். அவற்றுள், தன்னம்பிக்கை ஊட்டக் கூடிய 'மனம் போல வாழ்வு' என்பதும் ஒன்று ஆகும்.

மேலும், வ.உ.சி. தொல்காப்பியம் நூலையும் இளம்பூரணர் உரையையும் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார். அவருடைய தமிழ்ப்பணியும் நூல்களும் அறியப்படாமலேயே இருக்கின்றன.

பாளையங்கோட்டையைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் செ. திவான் போற்றுதலுக்கு உரிய பணிகள் பல செய்துகொண்டிருக்கிறார். மறைந்துபோன - மறக்கடிக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை ஆய்ந்து கண்டு, சான்றாதாரங்களோடு அவற்றைப் பதிப்பிக்கும் பணியில் அர்ப்பணிப்பு உணர்வோடு அவர் ஈடுபட்டிருக்கிறார். வ.உ.சி. நூல்களையும் தேடி எடுத்து, சிறுசிறு வெளியீடுகளாக அவற்றைப் பதிப்பித்து வருகிறார் திவான்.

இவ்வாறு அர்ப்பணிப்புடன் பாடுபடுகிறவர் எவராவது தோன்றி உழைத்தால் தான், உண்மையான திறமைக்கும் நல்ல படைப்புகளுக்கும் உரிய கவனிப்புக் கிடைக்க வழி பிறக்கும் தமிழ்நாட்டில் !

கவிஞர்கள் ஏதாவது ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து, கட்சிப்பணிகள் புரிந்து, கட்சித் தலைவரின் அன்பையும் அபிமானத்தையும் பெறமுடிந்தால் பெயரும் புகழும் அடைவது சாத்தியமாகலாம். திரைப்படங்களுக்குப் பாட்டுகள் எழுதிப் பணமும் பெற்று, அரசியல் கட்சியினரின் ஆதரவையும் அடைந்தால், அதிக வெற்றிகளைப் பெறமுடியும் என்ற நிலைமையும் இருக்கிறது.

இவற்றை அடையக்கூடிய திறமையும் சாமர்த்தியங்களும் இல்லாதவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருப்பர். பெயர்பெற்ற படைப்பாளிகளின் பெயர்களே திரும்பத் திரும்ப முழக்கமிடப் பெறுகின்றன. எழுதுகிறவர்களும் அவர்களைப் பற்றி மட்டுமே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பாரதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் என்று சில பெயர்களே பெருமளவில் எடுத்துக்காட்டப்படுகின்றன. இவர்களைத் தவிர இதர கவிஞர்கள் கவனிப்புக்கு உரியவர்களாகவே கருதப்படுவதில்லை. இது ஒரு குறையேயாகும்.

தனிவழியில் தமிழ்ப்பணி புரிந்துகொண்டிருக்கும் கவிஞர்களில் பெருங்கவிக்கோ எனும் சிறப்புப் பெயர் கொண்டுள்ள வா.மு.சேதுராமன் கவிதை நூல்கள் பலவற்றையும் படித்து, அவர் படைப்புகள் குறித்து நான் ஒரு புத்தகம் எழுத நேர்ந்தது. 'ஆற்றல் மிகுந்த அருங்கவிஞர்' என்ற அந்த நூல் 1995இல் பிரசுரம் பெற்றது.

சர்ச்சைக்கு உரிய - விவாதங்களைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிற சில புத்தகங்கள் கவனிப்புப் பெறாமலே போகிறநிலைமையும் நீடிக்கிறது. தமிழகத்தில் தொ. மு.சி. ரகுநாதன் 'இளங்கோ அடிகள் யார்?' என்றொரு ஆய்வுநூல் எழுதினார். பெரிய புத்தகம். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ அடிகள் சேரமன்னன் தம்பி என்றே கூறப்படுகிறது. அண்ணன் அரசாள வேண்டும் என்பதற்காக அவர் துறவு மேற்கொண்டார் என்றும் இருக்கிறது. இது தவறான கருத்து; சிலப்பதிகாரம் பாடியவர் சேரநாட்டைச் சேர்ந்தவரோ, ஓர் இளவரசனோ இல்லை; அவர் சோழநாட்டைச் சேர்ந்த வணிகச் செட்டியார்தான் என்று ரகுநாதன் மிகுந்த ஆதாரங்கள் காட்டி அந்த நூலை ஆக்கியிருக்கிறார். சிலப்பதிகாரக் காவியத்தின் சிறப்புகளைப் பேசியும் எழுதியும் வந்த அறிஞர்களது கருத்துக்களை மறுத்து, ரகுநாதன் தமது முடிவை ஆணித்தரமாக நிறுவியிருக்கிறார் அந்த ஆய்வு நூலில்.

அது எத்தகைய கவனிப்பைப் பெற்றிருக்கவேண்டுமோ - எவ்விதமான விவாதங்களையும் எதிர்ப்புகளையும் உண்டாக்கியிருக்க வேண்டுமோ அப்படி எதையும் அந்த நூல் எதிர்கொள்ளவேயில்லை. அறிஞர்களும் ஆய்வாளர்களும் அந்த நூலைக் கண்டு கொள்ளவேயில்லை. சில பத்திரிகைகளில் இரண்டு மூன்று விமர்சனங்கள் வந்தனவே தவிர, ரகுநாதனின் ஆய்வுகளை வெட்டியோ ஒட்டியோ எவரும் எழுத முன்வரவில்லை. திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டதுபோல அந்தப் பெரிய ஆராய்ச்சி ஒதுக்கப்பட்டதாகவே எண்ண வேண்டியிருந்தது.

அதேபோல, ரகுநாதன் அண்மைக் காலத்தில் எழுதி வெளியிட்ட ஆய்வு நூலான 'புதுமைப்பித்தன் சிறுகதைகள் - விமர்சனங்களும்

விஷமத்தனங்களும்' உரிய பரபரப்பை ஏற்படுத்தவில்லை. போதிய கவனிப்பைப் பெறவில்லை என்றே தோன்றுகிறது.

46

தமிழ்நாட்டில் தமிழ் மொழியின் நிலை மகிழ்ச்சி தருவதாயில்லை. தாய் மொழியாகிய தமிழ் கல்விப் பயிற்சிமொழியாக இல்லை. ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, ஆலயங்களில் வழிபாட்டு மொழியாகவும் தமிழ் இல்லை. அனைத்தினும் மேலாக நாட்டு மக்கள் அனைவரும் போற்றி, வழங்கும் நிலையிலும் அது இல்லை. இது மிகவும் வேதனை தரும் விஷயம் ஆகும்.

மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். கல்வி கற்கிறவர்கள் எல்லோருமே அறிவு வளர்ச்சிக்காவும் இலக்கிய வளங்களைத் தெரிந்து மகிழ்வதற்காகவும் படிக்கிறார்கள் என்பதில்லை. பெரும்பாலோர் நல்லவேலை கிடைத்து வருங்காலத்தை வளம் உள்ளதாக ஆக்கவேண்டும் என்பதற்காகவே கல்விச் சாலைகளில் சேர்ந்து படிக்கிறார்கள். பெரும்படிப்புப் படித்திருந்தால் பணமும் நகைகளும் இதர பல பொருள்களும் தரக்கூடிய நல்ல இடத்தில் கல்யாணம் செய்துகொள்ளமுடியும் என்ற எதிர்பார்ப்புடன் எத்தனையோபேர் உயர்படிப்புப் படிக்கிறார்கள்.

படிக்கிற காலத்திலேயே தமிழின் செல்வங்களான பழங்கால இலக்கியங்களையும் தமிழ்மொழிக்குப் புதிய வனப்பும் வலிமையும் சேர்க்கும் தற்கால இலக்கியங்களையும் படிப்பதில் ஆர்வம் காட்டுகிறவர்கள் மிகமிகக் குறைவு. மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிற ஆசிரியர்களில்கூடப் பெரும்பாலர் இன்றைய இலக்கியங்களிலும் புதுமைப் படைப்புகளிலும் நாட்டம் கொள்வதில்லை.

படித்து முடித்துப் பட்டம் பெற்றுவிட்ட பிறகு பெரும்பாலும் இளைஞர்கள் நல்ல உத்தியோகம் தேடுவதில் கருத்தாக இருக்கிறார்கள். வேலை கிடைத்ததும், உல்லாசமாக வாழ்வதில் உற்சாகம் கொள்கிறார்களே தவிர, தற்கால எழுத்துக்கள் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களில் ஈடுபடுவோர் வெகு சிலரேயாவர். இளைஞர்கள் கிரிக்கெட் போட்டிகளில் தங்கள் நேரத்தையும் ஆர்வத்தையும் செலுத்துவதில்தான் அக்கறை உடையவர்களாக இருக்கிறார்கள். புத்தகங்கள்- அதிலும் தமிழ்ப் புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்வதில்லை.

அப்படி அக்கறை காட்டுகிறவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகிறார்கள். அவர்களிலும் ஒருசிலர்தான் ஆழ்ந்த இலக்கியங்களில்- சிந்தனைக்கனமும் புதுமைப்பொலிவும் கொண்ட

படைப்புகளில் ஈடுபாடு கொள்கிறார்கள். மற்றவர்கள் படிப்பதற்குச் சிரமப்படுத்தாத 'லைட் ரீடிங்' சமாச்சாரங்களை- பல்சுவைப் பத்திரிகைகள் என்று சொல்லப்படுகிற ஜனரஞ்சகமான இதழ்களில் வெளிவருகின்ற கதைகள், பொழுதுபோக்குத் துணுக்குகள், வம்புகள் வதந்திகள், கிளுகிளுப்பு மற்றும் கிசுகிசுச் செய்திகள் முதலிவற்றைப் படிப்பதிலேயே திருப்தி காண்கிறார்கள்.

சினிமா தமிழ் மக்களை ஆட்டி வைக்கிற கவர்ச்சி சக்தியாக வளர்ந்துவிட்டதால், சினிமா உலகம் சம்பந்தமான செய்திகள் துணுக்குகள் வம்பளப்புகளைக் கவர்ச்சி நிறைந்த படங்களோடு அதிகம் வெளியிடுவதிலேயே வணிக நோக்குப் பத்திரிகைகள் கருத்தாக இருக்கின்றன. வாசகர்களும் அவ்விதமான பத்திரிகைகளைப் புரட்டுவதிலேயே ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

மக்களின் சுவையைப் புரிந்துகொண்டு, பத்திரிகைத் துறையில் லாபம் காண ஆசைப்படுகிறவர்கள் மர்மம்-திகில்-துப்பறிதல் சமாச்சாரங்கள் கொண்ட கதைகளையும் காதல், ஆண் பெண் உறவுச் சிக்கல்கள் முதலியன மிகுந்த தொடர்கதைகளையும் வெளியிட்டு வாசகர்களை ஈர்க்க முயல்கிறார்கள். செக்ஸ் ஆலோசனைகள், தன்னம்பிக்கை ஊட்டும் கட்டுரைகள், பக்தி விஷயம், கோயில் விவரிப்புகள் முதலியனவும் மசாலாக்களாகச் சேர்க்கப்படுகின்றன.

வெகுஜனப் பத்திரிகைகளில் கதைகள், தொடர்கதைகள் எழுதிக் கவனிப்புப் பெற்ற எழுத்தாளர்களின் எழுத்துக்களை உடனடியாகப் புத்தகங்களாக வெளியிடுவதில் ஆர்வம் உடைவர்களாக இருக்கிறார்கள் நூல் வெளியீட்டாளர்களும்.

வாசகர்களின் சுவைக்குத் தீனிபோடுகிறவிதத்தில் 'இன்வெஸ்டிகேட்டிங் ஜர்னல்ஸ்'-புலனாய்வுப் பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்கிற இதழ்கள் பலவும் விறுவிறுப்பும் பரபரப்பும் நிறைந்த அக்கப்போர் சமாச்சாரங்களை உண்மைச் செய்திகள் என்று அச்சிட்டு விற்பனை செய்கின்றன.

வாசகர்களில் வயது முதிர்ந்தவர்களும் பெண்களும் காலவேகத்தில் படிப்பதை விடத் தொலைக்காட்சிப் பெட்டிகளின்முன் அமர்ந்து படங்கள் பார்ப்பதே ரசனைக்கு இனிய, எளிய, பொழுதுபோக்கு என்று கண்டுகொண்டார்கள். இவர்கள் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம் கொள்வதில்லை.

இந்தவிதமான சூழலில்தான் சகல தரத்து எழுத்தாளர்களும் எழுதி வளர வேண்டியிருக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்குப் பத்திரிகைகளை நம்பவேண்டிய அவசியம் உள்ளது.

இந்நிலைமையிலும் அவர் நல்ல எழுத்தாளர் இல்லை;; நான் எழுதுவதுதான் இலக்கியம் என்றெல்லாம் பழிப்பதும் பரிகசிப்பதும் குறை கூறுவதும் மட்டம்தட்டுவதும் எழுத்தாளர்கள் பெரும்பாலோரின் இயல்பாக இருக்கிறது.

எழுத்தாளர்கள் குழுக்குழுவாக இயங்குகிறார்கள். தன்னம்பிக்கையைவிடத் தன்னகங்காரம் மிகக் கொண்டவர்கள் காணப்படுகிறார்கள். தம்மைத் தவிர, பிறர் எவரையும் பாராட்ட மனமில்லாத 'குருபீடங்களாக' இருக்கிறார்கள். சாதிக் கண்ணோட்டத்துடன் எழுத்துக்களையும் எழுத்தாளர்களையும் மதிப்பிட்டு, விமர்சனம் என்ற பெயரில் வசை பாடுவதில் இன்புறுவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

சாதிவேற்றுமை உணர்வைப் போக்கவும் ஒற்றுமை உணர்வையும் மனிதநேயத்தையும் வளர்க்கவும் துணைபுரியவேண்டிய நல்லிலக்கியங்களைப் படைக்க வேண்டிய கவிஞர்களும் படைப்பு இலக்கியவாதிகளுமே சாதிகளின் பெயரைச் சொல்லி வெறுப்பையும் விரோதத்தையும் வளர்த்துவருவதும் தமிழ்நாட்டின் குறைபாடுகளில் ஒன்றாக உள்ளது.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்று சொல்லிக்கொள்கிறவர்களுக்குச் சமூகத்தில் ஒரு செல்வாக்கோ (அந்தஸ்து), கவுரவமோ, அங்கீகாரமோ கிடைப்பதில்லை. சினிமாக்கலைஞர்கள், அரசியல்வாதிகள் பெறுகிற கவனிப்பையும் பெருமையையும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் பெறவதில்லை.

இருப்பினும் எழுத்துக்கு ஒரு தனி வசீகரம்-கவர்ச்சி இருக்கிறது. படித்த-படிக்காத இளைஞர் அநேகர் எழுத்தாளராக ஆசைப்படுகிறார்கள். எடுத்த எடுப்பிலேயே கவிஞர் ஆகிவிடுவதில் முனைப்பாக இருக்கிறார்கள். எளிதில் பெயர் பெற்றுவிட முடியும் என்று எண்ணி ஏமாறுகிறார்கள்.

ஒரு சமயம் நண்பர் நா. பார்த்தசாரதி பேச்சோடு பேச்சாக இதையும் சொன்னார்.- 'எனக்கு, அகிலனுக்கு, மற்றும் எங்களைப் போல் ஜனரஞ்சக வாரப் பத்திரிகைகளில் எழுதிப் பெயர் பெறுகிற ஒரு சிலருக்குக் கிடைத்திருக்கிற பெயரையும் புகழையும் கண்டு, சில இளைஞர்கள் நாமும் எழுதினால் இவர்களைப் போல் புகழும் பெரும் கவனிப்பும் பெற்றுவிடலாம் என்று நினைக்கிறார்கள். நல்ல மாத வருமானம் தரக்கூடிய உத்தியோகத்தில் இருக்கிற சிலபேர் இந்த நினைப்பினால், தாங்கள் பார்க்கிற வேலையை விட்டுவிட்டு எழுத்தாளனாகிறேன் என்று வந்துவிடுகிறார்கள். எதையாவது எழுதி எடுத்துக் கொண்டு பத்திரிகை அலுவலகங்களுக்கு அலைகிறார்கள். என்னையும் அகிலனையும் சந்தித்து நாங்கள் அவர்களது முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும் என்று கோருகிறார்கள்; எதிர்பார்க்கிறார்கள். எழுத்தாளனாக வளர்ந்து முன்னேறுவது எவ்வளவு சிரமமானது, அதற்கு நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறோம்; எங்களை நாங்களே எவ்வாறு தகுதிப்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை எல்லாம் அவர்கள் புரிந்துகொள்வதேயில்லை. கூட்டங்களில் எங்களுக்கு அளிக்கப்படுகிற வரவேற்பும் பூமாலைகளும்தான் அவர்கள் பார்வையில்படுகிறது. பரிதாபத்துக்கு உரியவர்கள்!'

வாழ்க்கையின் யதார்த்த நிலைமையைத்தான் நா.பா. கூறினார்.,

தற்காலத்தில், எழுத்தாளராகவேண்டும் என்று ஆசைப்படுகிற இளைஞர்களில் அநேகர் கவிதை என்று நாலைந்து வரிகள் எழுதுவதில் மட்டுமே திருப்தி அடைகிறார்கள். கவிதை என்றால், உரைநடை போல் அதிகமாக எழுதிக் கஷ்டப்பட வேண்டாம் என்ற எண்ணம் பலருக்கு. அதிலும் காலஓட்டத்தில் ஹைக்கூ என்று மூன்று வரிகள் மட்டும் எழுதினாலே போதும், கவிஞராகி விடலாம் என்ற நினைப்பு எண்ணற்ற இளைஞர்களுக்கு ஏற்பட்டிருப்பது தெரிய வருகிறது. அவர்கள் மூன்று வரி ஹைக்கூ தவிர வேறு எதுவும் எழுத ஆசைப்படுவதில்லை.

கவிதைகள் எழுதி, அவற்றில் சில ஏதாவது பத்திரிகையில் வந்தால் போதும்; அவர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் கவிஞர் என்று எழுதிக்கொள்கிறார்கள். அவர்களது அடுத்த குறிக்கோள் சினிமாவுக்குப் பாட்டு எழுதுவதுதான். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள்.

சில கதைகள் எழுதி எழுத்தாளர் ஆகிவிடுகிற இளைஞர்கள் சினிமாக் கதாசிரியர் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டு அலைகிறார்கள்.

சினிமா வாய்ப்புக் கிடைத்துவிட்டால் பெயர், புகழ் வெளிச்சம், மிகுபணம், சுகபோக வாழ்க்கை வசதிகள் எல்லாம் வந்து சேரும் என்ற நினைப்பு இளைஞர்கள் பலரது வாழ்வை வீணடித்துவிடுகிறது.

எந்தத் துறையிலும் எவரும் சிரமங்கள் அனுபவிக்காமல் முன்னேறிவிட இயலாது என்ற உண்மையை இளைஞர்கள் மனத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் முதலில்.

47

நான் எழுதிக்கொண்டே இருந்தேன். வாசகர் பரப்பு அதிகமாக உள்ள வாரப் பத்திரிகைகளில் என் எழுத்துக்கள் வராத போதிலும் சிற்றிதழ்களில் எனது கட்டுரைகள் வந்துகொண்டிருந்தன.

'தீபம்' மாத இதழில் கட்டுரைத் தொடர்களை - வரலாற்றுப் பதிவுகளை வரிசையாக எழுதி வந்ததால் நான் சிறுகதை எழுதக்கூடியவன் என்பதே மறக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றியது. எனது எழுத்தை விரும்பிக் கேட்கும் விசேஷ வெளியீடுகளும் கட்டுரை எழுதித் தரும்படியே கேட்டன.

ஆயினும், 'தினமலர்' ஆண்டுதோறும் தனது தீபாவளி மலருக்கு என்னிடம் சிறுகதையே கேட்டு வாங்கிப் பிரசுரித்தது.

1990களில் எனது சிறுகதைத் தொகுப்புகள் பல வெளிவந்தன. என்னுடைய எழுபதாவது ஆண்டு நிறைவை ஒட்டி, நண்பர் டாக்டர்

தயானந்தன் பிரான்சிஸ் இரண்டு நூல்கள் வெளியிட முன்வந்தார். 'அருமையான துணை' என்ற சிறுகதைத் தொகுப்பையும், 'மன்னிக்கத் தெரியாதவர்' எனும் குறுநாவல் தொகுதியையும் கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடுகளாக டாக்டர் தயா கொண்டு வந்தார்.

மு. பரமசிவம் எழுதிய எனது வாழ்க்கை வரலாற்றையும் 'எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன்' என்ற பெயரில் 1991இல் சி.எல்.எஸ். வெளியீடாக டாக்டர் தயா பிரசுரித்தார்.

நெய்வேலி இராமலிங்கம், மீனாட்சிப்பேட்டை குறிஞ்சி வேலன் ஆகியோரது முயற்சியால் குறிஞ்சிப்பாடி மணியன் பதிப்பகம் என் சிறுகதைகள் சிலவற்றை 'வல்லிக்கண்ணன் கதைகள்' என்ற பெயரில் பிரசுரித்தது.

இதே பெயரில் சென்னை கயிலைப் பதிப்பகம் 1954இல் ஒரு கதைத் தொகுப்பு வெளியிட்டுள்ளது. அதில் வஞ்சம் முதலிய பன்னிரண்டு கதைகள் இடம் பெற்றிருந்தன. மணியன் பதிப்பகம் தயாரித்த தொகுப்பில் வேறு இருபது சிறுகதைகள் உள்ளன.

இப்போது 2000இல் கலைஞன் பதிப்பகம் மாசிலாமணியும் அவர் மகன் நந்தனும் 'வல்லிக்கண்ணன் கதைகள்' என்ற பெயரில் 41 சிறுகதைகள் கொண்ட ஒரு பெரிய தொகுப்பை ராஜராஜன் பதிப்பகம் வெளியீடாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே பிரசுரம் பெற்றுள்ள எனது சிறுகதைகளின் தொகுப்புகள் எதிலும் இடம் பெற்றிராத கதைகளைக் கொண்ட தொகுதி இது.

என்னிடம் அன்பும் மதிப்பும் கொண்டிருக்கும் நண்பர் வே.சுப்பையா 'மனிதர்கள்' சிறுகதைத் தொகுப்பை 1991லும் 'சுதந்திரப் பறவைகள்' என்ற தொகுப்பை 1994லும் பூங்கொடிப் பிரசுர வெளியீடுகளாகப் பதிப்பித்தார். 2000 ஆண்டின் இறுதியில், 'தோழி நல்ல தோழிதான்' என்ற சிறுகதைத் தொகுதியை அவர் வெளியிட்டிருக்கிறார்.

இவை தவிர, ஏற்கெனவே நான் தமிழாக்கிக் கொடுத்திருந்த 'ஆர்மேனியன் சிறுகதைகள்' எனும் தொகுப்பைப் புதுடில்லி நேஷனல் புக் ட்ரஸ்ட் இக் காலகட்டத்தில் தான் வெளியிட்டது. பதின்மூன்று இந்திய மொழிச் சிறுகதைகள் கொண்ட 'சிறந்த பதின்மூன்று சிறுகதைகள்' புத்தகமும் இப்போது தான் வெளிவந்தது.

1999இல் 'தீபம் யுகம்' என்ற நூல் பிரசுரமாயிற்று. 'தீபம்' நா. பார்த்தசாரதியிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டுள்ள அ.நா.பாலகிருஷ்ணன், ஞானியார்அடிகள் மன்றம் வெளியீடாக, தீபம் வரலாற்று நூலான இதை உருவாக்கியுள்ளார்.

ஆகவே, மனநிறைவு தரக்கூடிய விதத்தில், நான் எழுதிய புத்தகங்கள் பிரசுரம் பெற்றவாறு உள்ளன.

மேலும், தொண்ணூறுகளில் பல்வேறு இலக்கிய அமைப்புகள் என்னைப் பாராட்டி விருதுகள் அளித்தும் பணமுடிப்பு வழங்கியும் பெருமைப்படுத்தியுள்ளன. சென்னை சிந்து பதிப்பகம் தமிழ்ப்பணி விருது, அக்னி அமைப்பின் அட்சர விருது, நடிகர் கமல்ஹாசனின் அன்னை ராஜலட்சுமி நினைவு விருது, ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவையின் ராணா இலக்கிய விருது, சேலம் அசோக்குமார் சிந்தனையாளர் மன்றம் தமிழ்ப்பணி விருது என்று பல அன்புடன் எனக்கு வெவ்வேறு வருடங்களில் தரப்பட்டுள்ளன.

2000 ஆண்டில் ஆழ்வார்கள் ஆய்வுமையம் கலைஞர் விருதும் பொற்கிழியும் வழங்கி என்னைக் கவுரவித்தது.

தமிழ்ச் சான்றோர் பேரவை ஆறாவது தமிழகப் பெரு விழாவை 2000 நவம்பர் 1, 2, தேதிகளில் திருநெல்வேலியில் வெகுசிறப்பாகக் கொண்டாடியது. அப்போது தமிழ்ச்சான்றோர் அறுவருக்கு விருதும் பத்தாயிரம் ரூபாய் பணமும் வழங்கி பெருமைப்படுத்தியது. அவ்ஆறு பேர்களில் நானும் ஒருவன். மற்றவர்கள் தி.க. சிவசங்கரன், தொ.மு.சி. ரகுநாதன், அறிஞர் சி.சு.மணி, மணவை முஸ்தபா, கவிஞர் மீரா ஆவர்.

தொழில் அதிபர்களும் செல்வர்களும் தமிழ்மொழிமீது பற்றுதல் கொண்டு இலக்கியத்தின்மீதும் எழுத்தாளர்கள் பேரிலும் கவனம் செலுத்தி அவர்களைக் கவுரவித்து வருவது இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள நல்ல மலர்ச்சி ஆகும். அவர்களுடைய நற்பணிகள் போற்றுதலுக்கு உரியவை.

இவ்வாறாகக் காலம் என் சந்தோஷங்களை அதிகப்படுத்தியே வந்திருக்கிறது; வருகிறது.

48

எழுத்தாளன் வாழ்க்கையில் எனக்கு எப்பவாவது விரக்தி ஏற்பட்டதுண்டா? திருமணம் செய்துகொள்ளாமலே வாழ்வதற்காக நான் என்றாவது வருத்தப்பட்டது உண்டா? சதா படித்துக்கொண்டே இருக்கிறேனே; படிப்பதில் எனக்குச் சலிப்பு உண்டாகவில்லையா? - இப்படிப் பலரும் அவ்வப்போது என்னைக் கேட்கிறார்கள். அரசாங்க வேலையைத் துறந்து விட்டதற்காக, பின்னர் நான் வருத்தப்பட்டது உண்டா? என்றும் கேட்டிருக்கிறார்கள்.

எழுத்தாளன் வாழ்க்கையில் ஒருபோதும் எனக்கு வெறுப்போ விரக்தியோ ஏற்பட்டதில்லை. ஏற்படவும் செய்யாது. எழுத்தாளனாகவே வாழ்வது என்பது நானாகவே தேர்ந்து கொண்ட வாழ்க்கை முறை. அது எனக்கு ஏன் விரக்தி உண்டாக்க வேண்டும்? எழுத்தாள வாழ்க்கை எனக்கு ஓர் ஆண்டை விட அடுத்த ஆண்டு அதிகமான சந்தோஷங்களையே பெற்றுத் தந்திருக்கிறது. எனக்குப் போதிய கவனிப்புக் கிடைக்கவில்லையே, என் எழுத்துக்கள் உரிய அங்கீகரிப்பைப் பெறவில்லையே என்று நான் வருத்தப்படுவதுமில்லை. வருத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை.

அதே போல, அரசுப் பணியை விட்டுவிட்டதற்காக அப்புறம் நான் வருத்தப்பட்டதுமில்லை. அரசு அலுவலில் ஒரு எழுத்தராகவே இருந்து, காலாகாலத்தில் உரிய சிறு பணிஉயர்வுகள் பெற்று, திட்டமான மாத வருமானமும். பின்னர் ஓய்வு பெற்று ஓய்வு ஊதியமும் ஏற்று வாழ்க்கை நடத்துவது நிம்மதியானதாகப் பலருக்குத் தோன்றலாம். எனக்கு அது பிடிக்கவில்லை; விட்டுவிட்டேன்.

எழுத்தராகவே நான் வாழ்ந்திருந்தால், எழுத்தாளனாக வளர்ந்து ஊர்சுற்றிப் பெற்ற அனுபவங்களையும், அடைந்துள்ள எண்ணற்ற நண்பர்களையும் நான் பெற்றிருந்திருக்க முடியாது. அது எனக்குப் பெரும் இழப்பாகவே அமைந்திருக்கும்.

அடடா, திருமணம் செய்து கொள்ளாமல் இருந்துவிட்டேனே என்று நான் எப்போதாவது எண்ணி வருத்தப்பட்டதுமில்லை. மாறாக, திருமணம் செய்து கொள்ளாமலும் பொறுப்புகளையும் சுமைகளையும் அதிகப்படுத்திக் கொள்ளாமலும் இருந்ததற்காக நான் சந்தோஷப்பட்டிருக்கிறேன்.

நான் திருமணம் செய்துகொள்ளாமல் இருந்ததற்கு எனக்குப் பெண்மீதுள்ள பயமே காரணமாகும், பெண்ணோடு சேர்ந்து வாழ்வதில் உள்ளூற எனக்கு ஒரு பயமிருப்பதும் காரணம் என்றும் சிலர் சொன்னது உண்டு.

பயம் என்பதைவிடப் பெண்மீதுள்ள வெறுப்பே காரணம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். பெண்ணோடு சேர்ந்து வாழ்வதில் எப்போதும் சந்தோஷமும் நிம்மதியுமிருக்கும் என்று மனித வாழ்க்கை நிரூபிக்கவில்லை. குறைகூறல், சண்டை சச்சரவு, அமைதியைக் குலைத்தல், ஆசைகளையும் தேவைகளையும் வளர்த்தல், பணம் பற்றாக்குறை, கடன் வாங்குதல் இப்படிப் பல தொல்லைகளையும் உண்டாக்குவதாகவே இருக்கிறது, பெரும்பாலரது குடும்ப வாழ்க்கை. சந்தோஷங்களும் அவ்வப்போது கிட்டும்.

அன்போடு அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று சொல்லப்படுகிறது. ஆயினும், அன்பு

அமைதி ஆனந்தம் எப்போதும் கிட்டுவதற்கு ஆண் பெண் சேர்ந்து வாழ்கிற குடும்ப வாழ்க்கை வழிசெய்வதாயில்லை. இதையும் மனித வாழ்க்கை எடுத்துக் காட்டியவாறு இருக்கிறது.

நான் என்றும் எப்போதும் அன்பு வளர்த்து அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ விரும்பினேன். ஆகவே தனியனானேன்.

பணவருவாய் சீராகவும் நிறைவானதாகவும் இருந்தால்தான் குடும்ப வாழ்வில் ஓரளவு அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். பொருளாதாரத் தேவைகளும் பற்றாக்குறைகளும் சதா முணுமுணுப்புகள், குறைகூறல்கள், சச்சரவுகள், பழித்தல்கள் முதலியவற்றுக்கே இடம் தரும். அப்போது ஆணும் பெண்ணும் பரஸ்பரம் வெறுப்பது-விரோதிப்பது-விலகுவது-பிரிந்து வாழ்வது எல்லாம் நிகழ்கின்றன.

திருப்தியற்ற சேர்ந்து வாழ்தலில் ஆண் பெண்ணைக் குறை கூறுவது பழிப்பது அடிப்பது முதலியன தலையெடுக்கின்றன. பெண் மரியாதை குறைந்து நீ-அவன் என்றெல்லாம் பேசிப் பழிப்பது குடும்ப வாழ்க்கையில் சகஜமாக நிகழ்கின்றன. பன்றி, நாய், என்றெல்லாம் வசைமாரி பொழிவதும், பின்னர் குழைந்து இணைவதும் இயல்பாக இருக்கிறது.

உன்னைக் கட்டிக் கொண்டு நான் உருப்படாமல் போனேன் எனக் கணவன் அலுத்துக் கொள்வதும், எங்க அப்பா அம்மா என்னைப் பாழுங்கிணற்றில் கொண்டாந்து தள்ளிட்டாங்க என்று மனைவி புலம்புவதும் குடும்ப வாழ்க்கையில் அடிக்கடி நிகழ்கிற நிகழ்ச்சிகளாக உள்ளன. அதுமட்டுமல்ல, கணவன் இறந்துவிட்ட பிறகு வாழ்க்கைத் துயரில் வாடும் பெண்கள், பாவிமட்டை இருந்தும் கெடுத்தான்-செத்தும் கெடுத்தான் என்று கசந்து கண்ணீர் வடிப்பதும் நடக்கிறது.

நான் வாழ்கிறபோது என்னை யாரும் மனக்கசப்புடன் குறைகூறி வசைபாட வேண்டாம்; நான் செத்ததற்குப் பிறகும் எவளும் என்னைத் தூற்றிப் புலம்பவும் வேண்டாம் என்று எண்ணினேன். அதனாலும் நான் பெண்ணின் துணையையும் குடும்ப வாழ்வையும் வேண்டாம் என ஒதுக்கினேன்.

புத்தகங்கள் படிப்பது எனக்குச் சலிப்பு ஏற்படுத்தவில்லை. புத்தகங்கள் வாழ்க்கையை-மனிதர்களை-உலகத்தை விசாலப்பார்வையால் விழுங்குவதற்குத் துணை செய்யும் சாதனங்களாக இருக்கின்றன.

ஒருவர் பலதரப்பட்ட-சகல விதமான அனுபவங்களையும் தாமே அனுபவித்து அறியமுடியாது. அனைத்து இடங்களையும், இயற்கையின் அற்புதங்கள் அதிசயங்கள் அழகுகளை எல்லாம் கண்டறிவதும் சாத்தியம் இல்லை. இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ள-ரசிக்க புத்தகங்கள் உதவுகின்றன. ஆகவே, பலவிதமான புத்தகங்களையும் படித்துத்

தெரிந்துகொள்வது மனோகரமான இனிய அனுபவங்கள் ஆகின்றன. அறியவேண்டும்-மேலும் மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவாவுகிற மனம் படிப்பதில் அலுப்போ சலிப்போ கொள்வது சாத்தியமில்லை.

நான் வாழ்க்கையில் அவசியம் செய்ய வேண்டும் என்று எண்ணியும் செய்ய முடியாமல் போன காரியங்கள் ஏதோனும் உண்டா? இதுவும் என்னிடம் கேட்கப்படுகிற கேள்விதான்.

உண்டு. நான் முக்கியமாக இரண்டு நாவல்கள் எழுத வேண்டும் என்று எண்ணம் வளர்த்தேன்.

ஒன்று தனிமனிதன் சம்பந்தப்பட்டது. மற்றது சமூகம்-நாடு-மனிதர்கள் பற்றியது.

ஒருவன் லட்சியவாதி. தனக்கெனத் தனிக்குறிக்கோளும் கொள்கைகளும் கொண்டு வாழ்கிறான். சிரமங்கள் அனுபவிக்கிறான். செல்வாக்கோ வாழ்க்கை வசதிகளோ பெறுவதில்லை. அவனோடு பழகிய ஒருவன் எப்படியும் வாழலாம் சுகபோகங்களை அனுபவித்து இன்புறுவதுதான் நிறைவான வாழ்க்கை; அதற்காக எவ்வழியிலும் செல்வம் சேர்க்கலாம்; பிறரை எவ்வகையிலும் தனது சுயநலத்துக்காகப் பயன்படுத்தலாம்; பிறகு அவர்களை ஒதுக்கித் தள்ளலாம் என்ற நோக்குடன் வாழ்கிறான். பிரபலமடைகிறான். பிறர் நோக்கில் அவனே வெற்றியாளன் எனக் கருதப்படுகிறான். இவன் லட்சியவாதியை மட்டமாக மதிக்கிறான். லட்சியவாதி இவனை அல்பமாகக் கருதுகிறான். உண்மையில் எவர் நோக்குச் சரியானதாகும்? இதை அலசி ஆராயும் ஒரு நாவல். இருவரது எண்ணங்கள், மனஓட்டங்கள், அனுபவங்களை விவரிப்பது.

இன்னொரு நாவல்-

காலம் மாறுதல்களை விதைத்தவாறு நகர்ந்து கொண்டேயிருக்கிறது. தனிமனிதர், சமூகம், நாடு, உலகம் எங்கும் எத்தனை எத்தனையோ மாற்றங்கள்.

சென்ற அறுபது எழுபது வருடங்களிலேயே தமிழ் நாட்டில் மட்டுமே எத்தகைய மாற்றங்கள்! உயர்வாக உச்சத்தில் இருந்த சில இனங்கள் காலவேகத்தில் சரிந்து தாழ்ந்து போயின. தாழ்ந்த நிலையில் இருந்த சில இனங்கள் உயர்நிலைக்கு வந்துள்ளன. சமூக மதிப்புகளிலும் பலவிதமான மாறுதல்கள். ஒரு காலத்தில், நாடகத்தில் நடிப்பவர்கள் கூத்தாடிகள் என்று கருதப்பட்டார்கள். ஒழுக்கக்கேடர்கள் என்று கருதப்பட்டு ஊர்களில் அவர்கள் தங்குவதற்கு வாடகைக்கு வீடுகள் கொடுக்க மறுத்தார்கள் மக்கள்.

ஆனால், கால ஒட்டத்தில், பெரும் மாறுதல்கள் விளைந்துள்ளன. நடிகர்களுக்குப் பெரும் மதிப்பு. நடிகர்கள் நாட்டின் ஆட்சியாளர்களாக வருவதும் அனுபவ சாத்தியமாகியுள்ளது.

இவ்விதம் காலம் நிகழ்த்தியுள்ள மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு பெரிய நாவல் எழுத வேண்டும் என்று விரும்பினேன். ஒன்றின் பெயர் அடிவானம். மற்றது காலவேகம்.

இரண்டில் ஒன்றைக் கூட இதுவரை நான் எழுதிவிடவில்லை. காலம் ஓடுகிறது. முதுமை என்னை ஆட்கொள்கிறது. இவ்வளவு காலமாக எழுதாததையா இனிமேல் எழுதிவிட முடியும் என்று மனம் சிரிக்கிறது.

இதுவரை ஏன் எழுதவில்லை? நான் எழுதி எழுதி வைத்த பலவும் அச்சில் வர வழியோ வசதியோ இல்லாத நிலையே நீடித்தது. அச்சில் வந்த அளவற்ற விஷயங்கள் நூல் வடிவம் பெறக்கூடிய வாய்ப்புகள் கிட்டவேயில்லை. இந்த நிலையில் மேலும் மேலும் எழுதி வைத்துத்தான் என்ன பிரயோசனம் என்ற எண்ணமே அவற்றை எழுதாமல் இருந்துவிட்டதற்குக் காரணம் ஆகும்.

1950கள் 60களில், என் எழுத்துக்களை நானே புத்தகங்களாகப் பிரசுரிக்கலாம் என்று எண்ணினேன். அப்போது சில ஆயிரங்கள் பணம் கிடைத்திருந்தால் அம் முயற்சியில் ஈடுபட்டு, வருமானத்தை ஈடுபடுத்தித் தொழிலை வளர்த்திருக்க முடியும். ஆனால் அன்று ஐயாயிரம் ரூபாய் கிடைக்க வழி இல்லாது போயிற்று.

1990களில் பல ஆயிரங்கள் கிடைத்தன. 2000த்தில் இருபத்தையாயிரம், பத்தாயிரம் என்று வள்ளல்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், எண்பது வயது முடிந்துவிட்ட முதுமைக்காலத்தில, புத்தகங்கள் உருவாக்கும் முயற்சியில் முனைவது சாத்தியமாக இல்லை எனக்கு.

இதுதான் வாழ்க்கையின் விபரீத முரண்-ஐரனி ஆஃப் லைஃப் என்று சிரிக்கிறது என் மனம்.

49

எனக்கு 80 வயது நிறைந்து விட்டது.

இன்றும் நான் எழுதவும் படிக்கவும், நெடுந்தூரம் நடக்கவும் சக்தி உள்ளவனாக இருக்கிறேன்.

எண்பது வயதுக்குட்பட்ட சில நண்பர்கள், எங்களால் நடக்க முடியவில்லை, அதிகம் படிக்க இயலவில்லை, பலவித நோய்களின் பாதிப்புகள் தொல்லை தருகின்றன, எழுதமுடியாதவாறு கையில்-விரல்களில் சதா வலி இருக்கிறது, மருந்துகள் சாப்பிடுகிறோம் என்று தெரிவிக்கிறார்கள்.

நான் ஆரோக்கியமாக, உழைக்கக்கூடிய வலுவுடன் இருப்பதற்காக 'லைஃப் ஃபோர்ஸ்' எனப்படுகிற ஜீவசக்திக்கு (உயிராற்றலுக்கு) நன்றி கூறவேண்டும்.

எண்பது வயதிலும், எவ்வித நோயுமின்றி, உற்சாகமாக உழைக்கக்கூடிய நிலையில் நீங்கள் இருப்பதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் விசேஷமான பயிற்சி எதுவும்-யோகா போன்றவை செய்கிறீர்களா? இப்படி அவ்வப்போது யாராவது பெரியவர்கள் என்னைக் கேட்கிறார்கள்.

நான் யோகா எதுவும் செய்வதில்லை. இளம் பிராயத்தில் சில வருடங்கள் தொடர்ந்து யோகாசனங்கள் பலவும் செய்துவந்தேன். பின்னர் பல ஆண்டுகள் உடற்பயிற்சிகள் சில செய்தேன். ஆனால் பிற்காலத்தில் அவற்றைத் தொடரவில்லை. ஆயினும் எப்போதும் நீண்டதூரம் நடக்க நான் தயங்கியதில்லை. நெடுந்தொலைவுகளுக்குக்கூட நடந்துபோய் நடந்தே திரும்புவது என் வழக்கம், இப்போதும் காலை மாலை நேரங்களில் உலா என்று சிறிது தூரம் ஒழுங்காக நடப்பதை நான் கடைப்பிடிக்காவிட்டாலும், அவசியம் நேருகிறபோது நடக்கத்தான் செய்கிறேன்.

சிறு பிராயத்திலிருந்தே ஒழுக்கமும் கட்டுப்பாடும் என் இயல்பாக வளர்ந்துள்ளன. அன்றாட அலுவல்களிலும் ஒரு ஒழுங்குமுறையைக் கையாள்கிறேன். அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து குளித்துவிடுவது-எப்போதும், குளிர்காலமானாலும் மழைக்காலம் ஆயினும் குளிர்ந்த நீரிலேயே குளிப்பது; பிறகு நேரம் தவறாமல் உணவு உண்பது; மீதூண் விரும்பாது, குறைந்த அளவு உணவுகளே உட்கொள்வது; பகலுறக்கம் கொள்ளாது, இரவில் ஒன்பது மணிக்குப் படுத்துவிடுவது; படுத்த உடனேயே ஆழ்ந்த உறக்கம் கொள்வது போன்றவை எனது நடைமுறைப் பழக்கங்களாக உள்ளன. புகையிலையை எந்தவிதத்திலும் உபயோகித்ததில்லை. அதாவது, சிகரெட் ஆகவோ, வெற்றிலையோடு சேர்த்தோ, பிற எவ்வகையிலோ பயன்படுத்தியதில்லை. காய்கறி வகை உணவு தான்.

அனைத்தினும் மேலாக, நான் கவலைகளை வளர்ப்பதில்லை. கவலைப்படுவதினாலோ, மனசைக் குழப்பிக் கொள்வதாலோ, பிரச்சினைகளை உருவாக்கிப் புலம்பிக் கொண்டிருப்பதனாலோ எதுவும் நிகழ்ந்துவிடப்போவதில்லை. நடப்பன நடந்தே தீரும். நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று எண்ணி, திருப்தி அடையும் உள்ளப்பண்பை நான் வளர்த்துக் கொண்டேன்.

எதையும் நான் எதிர்பார்ப்பதில்லை. அதனால் ஏமாற்றங்கள் இல்லை. அதற்காக உழைக்காமல் இருப்பதில்லை. எனவே இயல்பாகவே ஒரு மனநிறைவு உள்ளது. மனநிறைவு மகிழ்ச்சியைத் தருகிறது. மகிழ்ச்சியும் கவலையின்மையும் ஆரோக்கியத்தைப் பேணுகின்றன.

என்னால் நல்லன அதிகம் செய்யமுடியாது போனாலும், எவருக்கும் தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே

செயலாற்றுகிறேன். எல்லோரிடமும் அன்புடனும் மனித நேயத்துடனும் இன்முகத்தோடு பழகுவதையே விரும்புகிறேன்.

இலக்கியம், தொழில் என்பதெல்லாம் இரண்டாம் பட்சம்தான். வாழ்க்கைதான் முக்கியம். வாழ்க்கையை நேசிக்க வேண்டும். மனிதர்களை நேசிக்க வேண்டும். மனிதன் மனிதனாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு தத்துவஞானிபோல் வாழ்க்கை நடத்திய எழுத்தாளர். ந. பிச்சமூர்த்தி அடிக்கடி இவ்வாறு கூறுவது உண்டு. அவ்வார்த்தைகள் என் மனசில் ஆழப் பதிந்திருக்கின்றன.

புகழ்பெற்றவர்கள், சாமானியர்கள், புதிதாக எழுதமுற்பட்டவர்கள், பெரியவர்கள் இளைஞர்கள் எல்லோரிடமும் நான் மகிழ்ச்சியோடு இயல்பாகப் பேசிப் பழகுகிறேன். அதனால் என்னிடம் அன்பு காட்டி நேசிப்பவர்கள் தொகை அதிகம்.

நான் எல்லோரையும் பாராட்டி எழுதுகிறேன் என்று பலர் என்னைக் குறைகூறுவது வழக்கம். அநேகர் பரிகசிப்பதும் உண்டு. அதற்காக நான் மனவருத்தம் கொள்வதில்லை. நல்ல முறையில் பணியாற்ற ஆர்வத்தோடு முன்வருகிறவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டியது அவசியம்.

அப்படி உற்சாகப்படுத்தி ஊக்கம் அளிப்பதனால் திறமையுள்ளவர்கள் அதிக உற்சாகத்துடன் உழைத்து முன்னேறுவார்கள். அவ்விதம் வளர்ந்திருப்பவர்கள் பலராவர்.

அவ்வாறில்லாமல், ஆரம்பத்திலேயே குறைகூறியும் மட்டம் தட்டியும், நீ எல்லாம் எழுத ஆசைப்படுவதே தப்பு என்ற ரீதியில் விமர்சித்தால், வளரக்கூடியவர்களும் வளர்ச்சியடையாமல் போவதே இயல்பாகும்.

ஆயினும் ஒன்று. யார் என்னதான் பாராட்டி ஊக்குவித்தாலும், உண்மையான திறமையும், முன்னேற வேண்டும் எனும் உள்உந்துதலும், முன்னேறி வெற்றி பெறமுடியும் என்ற தன்னம்பிக்கையும், அயராத உழைப்பும் உடையவர்கள்தாம் வளர்வார்கள்.

அதற்காக ஆரம்பத்திலேயே, இதெல்லாம் எழுத்தே இல்லை; நீ உருப்படப் போவதில்லை என்ற தன்மையில், எழுதத் தொடங்குகிறவர்களின் உற்சாகத்தில் 'தண்ணீரை அள்ளிக் கொட்டுவது' - அல்லது மண்ணை வாரிப் போடுவது மனிதம் ஆகாது என்றே நான் கருதுகிறேன்.

நான் அறுபது வருடங்களுக்கும் மேலாக எழுதிக்கொண்டிருக்கிறேன். சிறுகதை, நெடுங்கதை, நாவல், கட்டுரைகள், கவிதை, வரலாறு முதலிய பலவடிவங்களிலும் எழுதினேன்.

எழுதியவை அனைத்தும் அச்சில் வரவேண்டும் என நான் ஆசைப்பட்டதில்லை. நான் எழுதியவற்றை யார் படிக்கிறார்கள், அவை

எவ்வாறு வரவேற்கப்படுகின்றன என்று தெரிந்துகொள்ளவும் நான் விரும்பியதில்லை.. நான் பாட்டுக்கு எழுதிக்கொண்டேயிருந்தேன். இப்பவும் எழுதுகிறேன்.

என் எழுத்துக்களை எவ்வளவோபேர் விரும்பிப் படித்து ரசித்திருக்கிறார்கள்; அவற்றால் பயன் பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள்; நான் எழுதிய கடிதங்களாலும் உற்சாகமொழிகளாலும் ஊக்கமடைந்து முன்னேறியவர்களும் இருக்கிறார்கள்; வருடக்கணக்கில் ஒரு சிறு கடிதத்தைப் பாதுகாத்து, அதைப் படித்து மகிழ்ச்சி அடையமுடிகிறது அவர்களால் என்பதை எல்லாம் அறியக் கூடிய சந்தர்ப்பங்கள் பிற்காலத்தில் எனக்குக் கிட்டின.

எனவே நான் உழைத்தது வீணாகவில்லை என்ற மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது. வெகுஜனப் பத்திரிகைகளில் எழுதிப் புகழும் பணமும் பெறமுடிந்துள்ள எழுத்தாளர்களைப் போல நான் புகழ் வெளிச்சமும் பணவரவும் பெற்றதில்லைதான். ஆனாலும் தமிழகம் நெடுகிலும், இலங்கையிலும் எண்ணற்ற நண்பர்களை என் எழுத்துக்கள் எனக்குப் பெற்றுத் தந்திருக்கின்றன. அதுவே பெரும் பேறு ஆகும்.

எழுத்துலக வாழ்க்கை எனக்கு மனநிறைவை-ஆத்ம திருப்தியைப் பெற்றுத் தந்திருக்கிறது. மனிதருக்கு மறுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கை நம் நாட்டில் காலம் காலமாக நிலைபெற்றிருக்கிறது. அப்படி ஒரு மறுவாழ்வு இருக்குமானால், அந்த வாழ்விலும் நான் எழுத்தாளன் ஆக வாழவே விரும்புவேன்.

நான் பார்த்துப் பழகியிராத பலப்பலர் என் எழுத்துக்களினால் ஈர்க்கப்பட்டு, என்னிடம் அன்பும் மதிப்பும் கொண்டிருப்பதை அறிய நேர்கிறபோது நான் உள நெகிழ்ச்சி அடைகிறேன்.

மனிதர்களை நேசிப்பதும், மனிதர்களால் நேசிக்கப்படுவதும்தான் இவ் வாழ்க்கையில் மனிதர்கள் அடையக்கூடிய நற்பேறுகளில் எல்லாம் மிக முக்கியமானது என நான் நம்புகிறேன்.

வல்லிக்கண்ணன் நூல்கள்

நூல்	பதிப்பகம்	ஆண்டு
1. கல்யாணி முதலிய கதைகள்	எஸ்.பி.கிருஷ்ணன்	1944
2. நாட்டியக்காரி (சிறுகதைகள்)	கவிக்குயில்	1946
3. உவமை நயம்	கமலா பிரசுரம்	1945
4. குஞ்சாலாடு (நையாண்டி பாரதி)	சாந்தி நிலையம்	1946
5. கோயில்களை மூடுங்கள்! (கோரநாதன்)	சாந்தி நிலையம்	1946
6. ஓடிப்போனவள் கதை (சொக்கலிங்கம்)	சாந்தி நிலையம்	1946
7. ஈட்டிமுனை (கோரநாதன்)	சாந்தி நிலையம்	1946
8. அடியுங்கள் சாவுமணி! (மிவாஸ்கி)	சாந்தி நிலையம்	1947
9. சினிமாவில் கடவுள்கள்	எரிமலைப் பதிப்பகம்	1947
10. மத்தாப்பு சுந்தரி	எம். சூரி	1947
11. நாசகாரக்கும்பல் (நாடகம்-நையாண்டிபாரதி)	சாந்தி நிலையம்	1948
12. ராதை சிரித்தாள் (சிறுகதை)	எம். சூரி	1948
13. கொடு கல்தா! (கோரநாதன்)	சாந்தி நிலையம்	1948
14. எப்படி உருப்படும்? (கோரநாதன்)	சாந்தி நிலையம்	1948
15. விடியுமா? (நாடகம்)	எம். சூரி	1948
16. ஓய்யாரி	சாந்தி நிலையம்	1949
17. அவள் ஒரு எக்ஸ்ட்ரா	எம். சூரி	1949
18. கேட்பாரில்லை (கோரநாதன்)	சாந்தி நிலையம்	1949

	நூல்	பதிப்பகம்	ஆண்டு
19.	அறிவின் கேள்வி (கோரநாதன்)	சாந்தி நிலையம்	1949
20.	விவாகரத்து தேவைதானா?	எம். சூரி	1950
21.	நல்ல மனைவியை அடைவது எப்படி?	எம். சூரி	1950
22.	கல்யாணத்துக்குப் பிறகு காதல் புரியலாமா?	எம். சூரி	1950
23.	கல்யாணம் இன்பம் கொடுப்பதா? இன்பத்தைக் கெடுப்பதா?	எம். சூரி	1950
24.	அத்தை மகள் (நெடுங்கதை)	சாந்தி நிலையம்	1950
25.	முத்தம் (நெடுங்கதை)	சாந்தி நிலையம்	1950
26.	செவ்வானம் (நாவல்)	எரிமலைப் பதிப்பகம்	1951
27.	குமாரி செல்வா (நெடுங்கதை)	சாந்தி நிலையம்	1951
28.	வல்லிக்கண்ணன் கதைகள்	கயிலைப் பதிப்பகம்	1954
29.	நம் நேரு		1954
30.	விஜயலக்ஷ்மி பண்டிட்		1954
31.	டால்ஸ்டாய் கதைகள் (மொழி பெயர்ப்பு)	அலைட் பப்ளிஷர்ஸ்	1956
32.	கடலில் நடந்தது (கார்க்கி கதைகள்(மொ. பெ.)	வெண்புறா வெளியீடு	1956
33.	சகுந்தலா (நாவல்)	நாதன்ஸ்	1957
34.	சின்னஞ் சிறுபெண் (கார்க்கி கதைகள்(மொ. பெ.)	நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்	1957
35.	கார்க்கி கட்டுரைகள் (மொ.பெ)	நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்	1957
36.	தாத்தாவும் பேரனும் (ராபர்ட்ரூ .ஆர்க் மொ.பெ)	முத்து பதிப்பகம்	1959
37.	விடிவெள்ளி (நாவல்)	இமயப் பதிப்பகம்	1962
38.	அன்னக்கிளி (நாவல்)	இமயப் பதிப்பகம்	1962
39.	ஆண்சிங்கம் (சிறுகதைகள்)	எழுத்துப் பிரசுரம்	1964
40.	முத்துக்குளிப்பு (கட்டுரைகள்)	கலைஞன் பதிப்பகம்	1965

41. வசந்தம் மலர்ந்தது (நாவல்)	கலைஞன் பதிப்பகம்	1965
42. வீடும் வெளியும் (நாவல்)	காவேரி பதிப்பகம்	1967
43. அமர வேதனை (கவிதை)	எழுத்துப் பிரசுரம்	1974
44. வாழ விரும்பியவன் (சிறுகதைகள்)	மக்கள் வெளியீடு	1975
45. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்	எழுத்துப் பிரசுரம்	1977
46. ஒரு வீட்டின் கதை (நாவல்)	கல்பனா	1979
47. காலத்தின் குரல் (60 கேள்விகளுக்குப் பதில்)	இலக்கியத் தேடல்	1980
48. சரஸ்வதி காலம்	இலக்கியத் தேடல்	1986
49. நினைவுச் சரம் (நாவல்)	பூம்புகார் பதிப்பகம்	1980
50. அலைமோதும் கடலோரத்தில் (நாவல்)	பூம்புகார் பதிப்பகம்	1980
51. பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை	மணிவாசகர் பதிப்பகம்	1981
52. இருட்டு ராஜா (நாவல்)	நர்மதா வெளியீடு	1985
53. எழுத்தாளர்கள் பத்திரிகைகள் -அன்றும் இன்றும்	சோலைத் தேனீ	1986
54. ராகுல் சாங்கிருத் யாயன் (மொ.பெ)	சாகித்திய அகாதமி	1986
55. புதுமைப்பித்தன் (இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை)	சாகித்திய அகாதமி	1987
56. வாசகர்கள் விமர்சகர்கள்	சோலைத் தேனீ	1987
57. மக்கள் கலாச்சாரத்தை மண்ணாக்கும் சக்திகள்	நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்	1987
58. வல்லிக் கண்ணனின் போராட்டங்கள்	இமயப்பதிப்பகம்	1988
59. அருமையான துணை (சிறுகதைகள்)	CLS	1991
60. மன்னிக்கத் தெரியாதவர் (குறுநாவல்)	CLS	1991
61. தமிழில் சிறு பத்திரிகைகள்	ஐந்திணைப் பதிப்பகம்	1991
62. வல்லிக்கண்ணன் கதைகள் (வேறு தொகுப்பு)	மணியன் பதிப்பகம்-	1991

நூல்	பதிப்பகம்	ஆண்டு
63. மனிதர்கள் (சிறுகதைகள்)	பூங்கொடி பதிப்பகம்	1991
64. ஆர்மேனியன் சிறுகதைகள் (மொ.பெ)	நேஷனல் புக் ட்ரஸ்ட்	1991
65. சுதந்திரப் பறவைகள் (சிறுகதை)	பூங்கொடி பிரசரம்	1994
66. ஆற்றல் மிகுந்த அருங்கவிஞர்	தமிழ்ப்பணி வெளியீடு	1995
67. சிறந்த பதின்மூன்று சிறுகதைகள் (மொ.பெ)	நேஷனல் புக் ட்ரஸ்ட்	1995
68. பெரிய மனுஷி (சிறுகதை - என்.பி.டி. பால புத்தக வரிசை- பலமொழிகளில்)		
69. வல்லிக்கண்ணன் கடிதங்கள்	வேர்கள் இலக்கிய இயக்கம்	1999
70. தீபம் யுகம் (கட்டுரை)	ஞானியாரடிகள் மன்றம்	1999
71. வல்லிக்கண்ணன் கதைகள் (வேறு 41 கதைகள்)	ராஜராஜன் பிரசுரம்	2000
72. தோழி நல்ல தோழிதான்	பூங்கொடி பதிப்பகம்	2000
73. வாழ்க்கைச் சுவடுகள் (தன்வரலாறு)	பூங்கொடி பதிப்பகம்	2001

மறுபதிப்புப் பெற்றவை

1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்	அகரம் வெளியீடு	3 பதிப்புகள்
2. பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை,	மணிவாசகர் பதிப்பகம்	2 பதிப்புகள்
3. பாரதிதாசன் உவமைநயம்		3 பதிப்புகள்

வல்லிக்கண்ணன் பற்றிய நூல்கள்

1. எழுத்துச்செல்வர் வல்லிக்கண்ணன் மு. பரமசிவம் எழுதியது	CLS	1991
2. சிறியன சிந்தியாதான் வல்லிக்கண்ணன் தொகுப்பு : அ.நா. பாலகிருஷ்ணன்	ஞானியார் அடிகள் மன்றம்	2000

பூங்கொடி பதிப்பகம்

- அறிஞர்கள், ஆய்வாளர்கள், படைப்பாளர்களின் படைப்புகளை வெளியிட்டு இலக்கியம், வரலாறு, சமயம் போன்ற பல்துறை சார்ந்த கருத்துகளையும் புதிய சிந்தனைகளையும் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழங்கவேண்டும் என்ற உயரிய நோக்குடன் தொடங்கப்பெற்று (1968) முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அரிய நூல்களை வெளியிட்டுவரும் நிறுவனம் பூங்கொடி பதிப்பகம்.

- உயர்ந்த இலக்கியப் பரிசுகளைத் தம் வெளியீடுகளுக்காகப் பெற்றுவரும் பதிப்பகம்.

- சிலம்புச்செல்வர் ம.பொ.சி., வல்லிக்கண்ணன், லட்சுமி, அறிஞர் பெ.சு.மணி, முனைவர் மா. இராசமாணிக்கனார், முனைவர் இ.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் மா.ரா. இளங்கோவன் ஆகியோர் படைப்புகளைத் தொடர்ந்து வெளியிடுவதைப் பெருமைக்குரிய ஒன்றாகக் கருதும் பூங்கொடி பதிப்பகம் எதிர்வரும் ஆண்டுகளிலும் இந்தப் பணியைத் தொடரும்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆய்வுவட்டம்

- நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் உழைத்துச் சாதனை படைத்த பெரியவர்களின் வரலாறுகளை முறையாகப் பதிவு செய்தல்.

- இன்றும் நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கும் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை அவர்களையே எழுதவைத்துத் தன்வரலாற்று நூல்களாக வெளியிடுதல் போன்றவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டுத் தொடங்கப்பெற்ற (2001) அமைப்புதான் டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆய்வுவட்டம்.

- இதன் முதல் முயற்சி வல்லிக்கண்ணனின் 'வாழ்க்கைச் சுவடுகள்'.

